கலைஞரின்
கடிதங்கள்



26

16.11.1994 - முதல்
02.06.1995 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 26

16.11.1994 - 02.06.1995



தலைவர் **கலைஞர்**



சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549/97907 06548

நூல் கிடைக்குமிடம் :

AVAILABLE @ :

கௌரா புத்தக மையம்
9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக
வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM
9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES
NO : 1 SAMY STREET,
SAI BABA TEMPLE BACK SIDE
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.300.00 CODE :2300

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஒய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

திமுக. அறக்கட்டளை
பேராசிரியர்
அன்பழகு நூல்
நிலையம்
சென்னை-18
தகவல் அறிவாலயம்



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

“கலைஞரின் கடிதங்கள்” அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், “கலைஞரின் கடிதங்கள்” தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் “அணி”யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க." என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
2200. அவர்களுக்கு என்ன பதில்? இதுதான் பதில்!	16-11-1994	23
2201. யோகம் வளர யாகம் வளர்க்கும் அரசுகள்!	17-11-1994	32
2202. அறப்போர் மறியல், ஆயத்தமாகிடுவோம்!	20-11-1994	36
2203. கேரள அரசின் செயல்; கேலிக்குரியது!	21-11-1994	40
2204. வாயடைக்கும் பதிலொன்று வழங்கலாமே!	23-11-1994	47
2205. ‘‘வராகவதார’’ வக்கிரம்!	28-11-1994	52
2206. அறிவுடன் செயல்படுமா? அல்லது ஆணவத்துடனா?	29-11-1994	57
2207. மதுரை முரசொலி!	30-11-1994	65
2208. அந்தச் சித்திரம் வரைந்தது யார்?	01-12-1994	68
2209. அண்ணல் அம்பேத்கரே வந்தால்தான் என்ன?	02-12-1994	71
2210. நம்பி நாராயணர்களை நம்பி, நமது நாடு!	03-12-1994	79

2211. சிங்கமே! சிரித்த முகம் காட்டி எழுந்திடு!	04-12-1994	84
2212. கண்ணாடி மாளிகையிலிருந்து கல்கத்தா வரை!	06-12-1994	89
2213. முன்னோடிப் போராட்டம்!	11-12-1994	94
2214. புறப்பட்டாய்! புறப்பட்டாய்! புறப் பாட்டாய்!	17-12-1994	97
2215. மீண்டும் தொடர வேண்டும் முழுப்புரட்சி!	18-12-1994	102
2216. முதல்வர் ஆளுநர் மோதலில் உச்சகட்டம்!	19-12-1994	106
2217. காதுக்கு முழக்கம்; கண்ணுக்குக் காட்சி!	22-12-1994	112
2218. தமிழகத்திற்கு ஏனிந்த இழிநிலை!	23-12-1994	115
2219. இயேசுவின் மீது விழுந்த சவுக்கடிகளை விட...!	26-12-1994	120
2220. பழைய நினைவுகளினால் பதறுகிறது மனம்!	27-12-1994	124
2221. தமிழனின் இரத்தம், கண்ணீர், வியர்வை!	30-12-1994	129
2222. பாதச்சுவடுகளே; வேதச் சுவடுகளாம்!	31-12-1994	134
2223. நிறைவேற்றுவாயா? கறை போக்குவாயா?	02-01-1995	138
2224. வென்றே தீருவோமென இன்றே எழுக!	03-01-1995	144

2225.போலித் தமிழ்வேடப் பொம்மலாட்டம்!	06-01-1995	148
2226. புதிய முழக்கத்தின் பொருள் தடுமாற்றம்!	07-01-1995	154
2227. நடுங்கா நாக்கழகும் - நரகல் நடையழகும்!	09-01-1995	160
2228. தேவர் திருமகன் கேள்விக்கு என்ன பதில்?	10-01-1995	165
2229. படவிழாவில் ஒரு பட்ஜெட் பிரசங்கம்!	20-01-1995	171
2230. உள்ளத்தில் ஒன்றும்; உதட்டில் ஒன்றும்!	21-01-1995	176
2231. தமிழும், தமிழரும் தலைதாழாதிருப்பதற்கு!	24-01-1995	179
2232. வெள்ளை இருட்டின் கறுப்பு விடியலே வருக!	25-01-1995	182
2233. பதவி விலகத்தான் வேண்டும்!	29-01-1995	188
2234. தாயின்மேல், தந்தைமேல், தமிழின்மேல் ஆணை!	05-02-1995	193
2235. இரு வழக்குகளும்; ஒரு விளக்கமும்!	06-02-1995	197
2236. சரித்திரப் பள்ளத்தாக்கில் சரியும் தர்பார்!	09-02-1995	201
2237. சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்!	12-02-1995	206
2238. திட்டவட்டமான தீர்க்கமான கணிப்பு!	13-02-1995	211

2239. திடீர்த் தேர்தல் வரக்கூடும்; அதனால்!	14-02-1995	215
2240. முழக்கமாக இல்லை; முனகலாக இருக்கிறது!	15-02-1995	219
2241. பெட்டிப் பேரத்தால் குட்டிச்சுவரான மாநிலம்!	16-02-1995	223
2242. நெரித்த புருவமும் - நெஞ்சில் உறுதியும்!	17-02-1995	228
2243. நரசிம்மர் நடத்தும் நாடகத்தில் ஒரு காட்சி!	19-02-1995	232
2244. தாய்ப்பறவை அழைக்கிறது; கூடு திரும்புவீர்!	24-02-1995	237
2245. உடன்பிறப்பே; நீ இருக்கவேண்டிய இடம் இதுவே!	25-02-1995	243
2246. ''சின்னத்திரை'' - பார்வதியைக் காணவில்லை!	28-02-1995	252
2247. ஏறுநடைச் சிங்கமென எழுக! எழுகவே!	04-03-1995	259
2248. நாட்டுக்கும் உனக்கும் நன்றாகவே புரியும்!	05-03-1995	266
2249. அந்த நச்சு நினைப்பு நமக்குத் தேவையில்லை!	09-03-1995	270
2250. 95ஆம் ஆண்டுக்கு 77ஆம் ஆண்டில் பதில்!	10-03-1995	281
2251. நாகையில் நடந்த கழக மாநில மாநாடு!	16-03-1995	287

2252. கண்துடைப்பு பட்ஜெட்டுகளால் கவலை தீராது!	17-03-1995	292
2253. காலமும் மன்னிக்காது; காவிரி நதிதீரத்து மக்களும் இவர்களை மன்னிக்கமாட்டார்கள்!	21-03-1995	297
2254. பொங்குமாங்கடலெனப் புறப்படுக!	02-04-1995	303
2255. வாங்கியது கழுதை; வந்தது வழக்கு!	06-04-1995	308
2256. ஆர்த்தெழுக! அடலேறு என எழுக!	11-04-1995	313
2257. பொதுமக்களே பொறுப்பேற்க வேண்டும்!	18-04-1995	318
2258. மாமியார் உடைத்தால் மட்டும் மண்சட்டியா?	26-04-1995	323
2259. நேரில் வாழ்த்திடக் காத்திருக்கிறேன் மே தினத்தில்!	28-04-1995	328
2260. அறைகூவலா? அறப்போருக்கு எதிராகவா?	01-05-1995	332
2261. பூனை விளையாட்டு பலிக்கவில்லை; பலிக்காது!	06-05-1995	336
2262. என்ன பொருத்தம்; எத்துணை பொருத்தம்!	08-05-1995	340
2263. தொடங்கட்டும்; தொடங்கியது தொடரட்டும்!	09-05-1995	345

2264. முடியுமா அவரால்? முடியாது என்பதே உண்மை!	10-05-1995	348
2265. பரிணாம வளர்ச்சி பட்டியல் நீளுகிறது!	12-05-1995	352
2266. நேற்று பாபர் மசூதி; இன்று பச்சை மசூதி!	13-05-1995	361
2267. தண்ணீராக ஓடுதே தமிழர்களின் வரிப்பணம்!	14-05-1995	365
2268. ஆம்; மலையின் ரகசியம் கோட்டையில்தான்!	16-05-1995	370
2269. எரிமலைக்கு அருவியெனப் பெயரிட்டு, என்ன பயன்?	18-05-1995	375
2270. மோதலைத் தொடங்கியவர்கள் யார்?	19-05-1995	379
2271. என் பிறந்தநாள் வேண்டுகோள்; ஏற்றிடுக!	24-05-1995	385
2272. செய்தியல்ல; இதயத்தைச் சுடும் செந்தீ!	30-05-1995	390
2273. சமூகநீதி - தொடர் போராட்டப் பிரகடனம்!	02-06-1995	394

2200. அவர்களுக்கு என்ன பதில்? இதுதான் பதில்!

உடன்பிறப்பே,

நவம்பர் 12ஆம் நாள் அவர்களுக்கு என்ன பதில் என்று தலைப்பிடப்பட்ட தினமணி தலையங்கத்தில் - கடனை விடச் சொத்துக்கள் அதிகம் இருந்த மாநிலமாக விளங்கிய தமிழ்நாடு, கடந்த ஐந்தாண்டுகளில் சொத்துக்களைவிட கடன் அதிகமாக இருக்கும் மாநிலமாக மாறியிருக்கின்றது என்றும், கடந்த ஐந்தாண்டுகளில் நிதி நிர்வாகம் சீர்குலைந்திருக்கிறது; ஊதாரித்தனம் அதிகரித்திருக்கிறது என்றும் 1989ஆம் ஆண்டிலும் சரி, இப்போதும் சரி, ஆட்சியை நடத்தியது, நடத்துவது திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் ஊதாரித்தனம் அதிகரித்துவிட்டது என்று பத்திரிகையாளர்கள் கூட்டிக் காட்டும்போது, வரிந்து கட்டிக் கொண்டு அவர்களைச் சாடுகிற அரசியல்வாதிகள் ஆடிட்டர் - ஜெனரலின் அறிக்கைக்கு என்ன பதில் கூறப் போகிறார்கள் என்று எழுதியிருக்கின்றது.

நடுநிலை ஏடுகள் என்று சொல்லிக் கொள்கிற இதுபோன்ற ஏடுகள் ஆட்சியின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி எழுதும்போது, தேவையில்லாமல் 1989, 1990 ஆகிய இரண்டு ஆண்டுகள் நடைபெற்ற தி.மு.கழக ஆட்சியையும் சேர்த்துக் கொண்டு மொத்தமாக குற்றம் சுமத்தி ஆத்ம திருப்தி ஏற்படுத்திக் கொள்வது வாடிக்கையாக உள்ளது.

ஒட்டுமொத்தமாக திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் ஊதாரித்தனம் அதிகரித்து விட்டது என்று எழுதியதற்குப் பதில் தி.மு.கழக ஆட்சியிலே என்ன ஊதாரித்தனம் என்றும், ஜெயலலிதா ஆட்சியிலே என்ன ஊதாரித்தனம் என்றும் எழுதியிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும்.

தி.மு.கழக ஆட்சியிலே ஊதாரித்தனம் நடைபெற்றதுண்டா? மாதத்திற்கு இரண்டு மாவட்டங்களுக்கு பிரம்மாண்ட பவனிகளை நடத்திக் கொண்டு - விழா ஆடம்பரங்கள், அதற்காக ஏடுகளில் பக்கம் பக்கமாக விளம்பரங்கள், தனி விமானப் பயணம், போலீஸ் பட்டாளம் குவிப்பு, காவல்துறை அதிகாரிகள் தவறாமல் உடன் வருகை, அடி முதல் நுனி வரை அத்தனை அமைச்சர்களும் எல்லா விழாக்களிலும் தலைமை வகிப்பதற்கென்றே பேரவைத் தலைவர் உட்பட ஆஜர், அனைவரும் ஒருவர் பின் ஒருவராக காலில் விழுந்து எழுதல், அந்தப் பகுதியிலே உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், ஆளுங்கட்சி முக்கிய நிர்வாகிகள் அனைவரும் பரிசுப் பொருள் என்ற பெயரால் வசூல், கட்-அவுட் அலங்காரங்கள், வியாபாரிகளிடம் கொள்ளை, பொது மக்களுக்குத் தொல்லை, திறக்கப்பட்ட கட்டிடங்களையே மீண்டும் திறந்து வைப்பதாக நிகழ்ச்சிகள், பல கோடி ரூபாய்க்குப் புதிய திட்டங்கள் என்று அறிவித்துவிட்டு, அப்படியே கிடப்பில் போடப்படும் திட்டங்கள், பக்கத்து மாவட்டத்திற்குச் செல்வதற்குக்கூட ஹெலிகாப்டர் பயணம் - இதுபோன்ற ஊதாரித்தனங்கள் தி.மு.கழக ஆட்சியில் நடைபெற்றதுண்டா?

பழைய கோப்புகளை எடுத்துப் பார்த்தால் விளம்பரச் செலவுகளைக் குறைக்க வேண்டுமென்றும், ஆடம்பர விழாக்கள் கூடாது என்றும், ஏன்; அழைப்பிதழ்கூட குறைந்த விலையிலே போடப்பட வேண்டுமென்றும் கோப்புகளிலே நான் முதல்வராக இருந்தபோது எழுதியிருப்பதைக் காணலாம்.

இதனையெல்லாம் அப்படியே மறைத்துவிட்டு, தினமணி ஏடு திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் ஊதாரித்தனம் என்று தி.மு.க. ஆட்சியையும் சேர்த்து குற்றஞ்சாட்டியிருப்பது முறைதானா?

திராவிடக் கட்சிகளின் ஆட்சியிலே சொத்துக்களைவிட கடன் அதிகமாக இருக்கும் மாநிலமாக தமிழகம் மாறிவிட்டதாக தினமணி கூறுகிறது. இதற்கு ஆதாரமாக இந்திய ஆடிட்டர் ஜெனரல் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் புள்ளி விவரங்கள் இருப்பதாகவும் எழுதியிருக்கின்றது. ஒரு ஆட்சியில்; கடன் வாங்கி திட்டங்களை நிறைவேற்றுவது என்பது குறையானது அல்ல எனினும் அந்தக் கடன், எல்லை கடந்து செல்லக்கூடாது என்பதில் இரு வேறு கருத்துக்கள் இருக்க முடியாது.

"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்"

மயிலிறகே ஆயினும் - அளவுக்குமீறி ஏற்றினால் வண்டியின் அச்சு முறிந்துவிடும்

எனும் குறளுக்குப் பொருள் உணர்ந்தவன் என்ற முறையில்தான் இதனைக் குறிப்பிடுகிறேன்.

எனவே, சொத்துக்களைவிட கடன்கள் தி.மு.கழக ஆட்சியிலே எந்த அளவிற்கு உயர்ந்தது என்பதையும், ஜெயலலிதா ஆட்சியில் எந்த அளவிற்கு பெருகியது என்பதையும் தினமணி சுட்டிக்காட்டும் அந்தத் தணிக்கை அறிக்கையிலே உள்ள புள்ளி விவரம் மூலமாகவே நான் தெளிவாக்கிட விரும்புகிறேன்.

சொத்துக்களைவிட கடன்கள் ஒவ்வொரு ஆண்டும் எந்த அளவிற்கு அதிகம் உயர்ந்திருக்கிறது தெரியுமா? ஏற்கனவே 1988-ல் நடைபெற்ற கவர்னர் ஆட்சியில் இருந்த கடன் பளுவைச் சுமந்து கொண்டு, தி.மு. கழகம் ஆட்சிக்கு வந்த 1989-90இல் சொத்துக்களின் மதிப்பு 6,012.66 கோடி ரூபாய். அதே காலத்தில் கடன்களின் மதிப்பு 6,166.91 கோடி ரூபாய். ஆக சொத்துக்களை விட கடன்களின் மதிப்பு 154.25 கோடி ரூபாய் தான் அதிகம்.

தி.மு.கழகம் ஆட்சி நடத்திய 1990-91 ஆம் ஆண்டை எடுத்துக் கொண்டால், அப்போது சொத்துக்களின் மதிப்பு 6,596.07 கோடி ரூபாய். கடன்களின் மதிப்பு 7,075.97 கோடி ரூபாய். இந்த ஆண்டு, சொத்துக்களைவிட கடன்களின் மதிப்பு உயர்வு 479.90 கோடி ரூபாய். அதாவது கடந்த ஆண்டின் கடன் மதிப்பைவிட சுமார் 325 கோடி ரூபாய் மட்டுமே அதிகம்.

அடுத்து 1991-ல் ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா ஆட்சியிலேதான் கடன்களின் அளவு அதிக அளவிற்கு உயர்ந்தது. 1990-91இல் சொத்துக்கள் மதிப்பு 6,596.07 கோடி ரூபாய் அளவிற்கு இருந்தது. 1991-92இல் அந்த மதிப்பு, 5.981.62 கோடி ரூபாயாகவும், 1992-93இல் 6,273.17 கோடி ரூபாயாகவும் குறைந்ததோடு மட்டுமல்லாமல் கடன்களின் அளவு எந்த அளவிற்கு உயர்ந்தது என்பதைப் பார்த்தால், 1990-91இல் கடன்களின் மதிப்பு 7,075.97 கோடி ரூபாயாக இருந்தது; 1991-92இல் 8,440.49 கோடி ரூபாயாகவும், 1992-93இல் 10,258.34 கோடி ரூபாயாகவும் உயர்ந்தது.

சொத்துக்களைவிட கடன்கள் 1990-91இல் வெறும் 479.90 கோடி ரூபாய் மட்டுமே அதிகமென்று இருந்தது. 91-92இல் 2,458.87 கோடி ரூபாய் என்ற அளவிற்கும், 92-93இல் 3,985.17 கோடி ரூபாய் என்ற அளவிற்கும் உயர்ந்துள்ளது. அதாவது 92-93இல் சொத்துக்களின் மதிப்பு 6,273.17 கோடி ரூபாய். கடன்களின் மதிப்பு 10,258.34 கோடி ரூபாய் ஆகும்.

1991-92இல் மட்டும் ஜெயலலிதா அரசு சுமாராக 1,400 கோடி ரூபாய் கடனாகவும், 1992-93இல் சுமார் 1,800 கோடி ரூபாய் கடனாகவும் பெற்றுள்ளது.

இதிலிருந்து அரசின் நிதி நிர்வாகம் தினமணி எழுதியிருப்பதுபோல, சீர்குலைந்ததற்கு ஒட்டுமொத்தமாக திராவிடக் கட்சிகளின் ஆட்சிகள்தான் காரணம் என்பது தவறு என்பதை நன்கு புரிந்து கொள்ளலாம். ஜெயலலிதாவின் அ.தி.மு.க. ஆட்சியில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டுமே சுமார் 3,200 கோடி ரூபாய் அளவிற்கு கடன்களின் மதிப்பு உயர்ந்துள்ளது.

மேலும், தினமணி ஐந்தாண்டுகளுக்கு முன்பு அரசின் வருவாய் 3,490 கோடி என்றும், இப்போது 7,016 கோடி என்றும் கூறியிருக்கிறது. இதனை எடுத்துக் கொண்டால்கூட - 1988-89இல் அரசின் வருவாய், 3,490 கோடியாக இருந்ததை 1990-91இல் 5,087.88 கோடி ரூபாயாக அதாவது சுமார் 1,600 கோடி ரூபாய் அதிக அளவு வருவாயாக தி.மு.கழக ஆட்சியில்தான் உயர்த்தப்பட்டது. 1989-90ஆம் ஆண்டு அரசின் வருவாய், அதற்கு முந்தைய ஆண்டைவிட, 21.83 சதவிகிதம் அதிகம். 1990-91ஆம் ஆண்டை எடுத்துக் கொண்டால், அரசின் வருவாய் அதற்கு முந்தைய ஆண்டைவிட 19.67 சதவிகிதம் அதிகம். ஆனால் ஜெயலலிதா ஆட்சியில் 92-93ஆம் ஆண்டு வருவாயை எடுத்துக் கொண்டால், அதற்கு முந்தைய ஆண்டைவிட வெறும் 3.55 சதவிகிதம்தான் அதிகம். இந்த விவரமும் தினமணி சுட்டிக்காட்டும் தணிக்கை அறிக்கையிலே காணப்படுகின்றது. இதனையெல்லாம் மறைத்து விட்டு, தினமணி ஒட்டுமொத்தமாக திராவிடக் கட்சிகளின் ஆட்சிகள் என்று குறை கூறுவது முறைதானா? நியாயந்தானா? என்பதை தலையங்கம் எழுதியவர்தான் தனக்குத்தானே கேட்டுக் கொள்ளவேண்டும்.

தினமணி, மேலும் தனது தலையங்கத்தில் வளர்ச்சித் திட்டங்களில் முதலீடு செய்யப்பட்ட பணத்தைவிட, அன்றாட

செலவுகளுக்கு, அதாவது திட்டமிடாத செலவுகளுக்கு நான்-பிளான் அதிகப் பணம் செலவிட்டதாகவும் எழுதியிருக்கின்றது.

1989-90இல் தி.மு.க. ஆட்சியில் மொத்த வருவாய் செலவுகள் 4,730.79 கோடி ரூபாய். இதில் திட்டப்பணிகளுக்கான செலவு 1,004.29 கோடி ரூபாய். திட்டமிடாத செலவு 3,726.50 கோடி ரூபாய்.

1992-93இல் ஜெயலலிதா ஆட்சியில் மொத்த வருவாய் செலவுகள் 8,542.53 கோடி ரூபாய். இதில் திட்டப்பணிகளுக்கு செலவு 1,454.08 கோடி ரூபாய். திட்டமிடாத செலவு 7,088.45 கோடி ரூபாய். அதாவது திட்டப்பணிகளுக்காக 1989-90இல் தி.மு.கழகம் ஆட்சியில் 1,004.29 கோடி ரூபாய் செலவு என்பது ஜெயலலிதா ஆட்சியில் 1992-93இல் 1,454.08 கோடி ரூபாய் என்று, சுமார் 450 கோடி ரூபாய் அளவிற்கே உயர்ந்திருக்க - திட்டமிடாத பணிகளுக்கான செலவு சுமார் 3,362 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளது.

மேலும் கூற வேண்டுமேயானால், 1988-89இல் திட்டப் பணிகளுக்கு செலவு 822.68 கோடி ரூபாய் என்பது, 1989-90இல் 1,004.29 கோடி ரூபாய் அளவிற்கு, ஒரே ஆண்டில் சுமார் 200 கோடி ரூபாய் தி.மு.கழக ஆட்சியிலே திட்டப் பணிகளுக்கு அதிகமாக செலவிடப்பட்டது. ஆனால் மூன்றாண்டுகளில் ஜெயலலிதா ஆட்சியில் திட்டப் பணிகளுக்கான செலவு 450 கோடி அளவுக்கே உயர்ந்துள்ளது.

எனவே ஜெயலலிதா ஆட்சியிலேதான் திட்டமிடாத செலவுகளுக்கு மிக அதிகமாகவும், திட்டச் செலவுகளுக்கு குறைந்த அளவிற்கும் செலவிடப்பட்டுள்ளது. எந்த விவரத்திலிருந்தும், தினமணி சாட்டியிருக்கின்ற குற்றச்சாட்டிற்கும், தி.மு.கழக ஆட்சிக்கும் சம்பந்தம் இல்லை என்பதை அறிந்து கொள்ள முடியும்.

வேண்டுமென்றே, தேவையில்லாமல் தி.மு.கழகத்தை குறை சொல்ல வேண்டுமென்ற உள் நோக்கத்தோடு தினமணி தனது தலையங்கத்திலே அவ்வாறு எழுதுகின்றது. ஆட்சியிலே உள்ள முதலமைச்சரையோ, அல்லது அவரது ஆட்சியையோ மட்டும் குறை கூறி எழுத மனமின்றி ஒட்டுமொத்தமாக திராவிடக் கட்சிகளின் ஆட்சிகள் என்று எழுதுகின்றார்கள்.

அதே தணிக்கை அறிக்கையிலே ஜெயலலிதா ஆட்சியிலே நடைபெற்ற எவ்வளவோ தவறுகள் அடுக்கடுக்காக சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அவைகளை எல்லாம் மறைத்துவிட்டு தினமணி எழுதியிருக்கின்றது.

தினமணி எழுதாததும், தணிக்கை அறிக்கையிலே கூறப்பட்டுள்ளதுமான முறைகேடுகள் என்னென்ன? இதோ ஓரிரு எடுத்துக்காட்டுகள் :-

1. உள்ளாட்சித் துறை நிறுவனங்களுக்கும், ஏனையவைகளுக்கும் நிதி உதவி என்ற தலைப்பிலே பார்த்தால் 1989 - 90 தி.மு.க. ஆட்சியில் 698.70 கோடி ரூபாய்; 1990 - 91 தி.மு.க. ஆட்சியில் 1,423.68 கோடி ரூபாய்; 1991-92ல் ஜெயலலிதா ஆட்சியில் 1,352.03 கோடி ரூபாய்; 1992-93ல் ஜெயலலிதா ஆட்சியில் வெறும் 619.72 கோடி ரூபாய்தான்.

2. சாலைகள், பாலங்கள் என்ற தலைப்பிலே 29.43 கோடி ரூபாய்; நகராட்சி நிர்வாகம் என்ற தலைப்பிலே 26.11 கோடி ரூபாய்; வேளாண்மை என்ற தலைப்பிலே 4.74 கோடி ரூபாய்; தொழில் வளர்ச்சி என்ற தலைப்பிலே 2.71 கோடி ரூபாய்; பொதுப்பணித்துறை, கட்டிடங்கள் என்ற தலைப்பிலே 7.60 கோடி ரூபாய்; மற்றும் ஒரு சில தலைப்புகளிலே பல கோடி ரூபாய் பல்வேறு காரணங்களைக் காட்டிச் செலவழிக்கப்படாமல் விடப்பட்டிருக்கின்றது.

3. சாலைகள், பாலங்கள் என்ற தலைப்பிலே 1992-93இல் உலக வங்கியுடன் கூடிய வகையிலே, 176 கிராமப்புற சாலைகள் அபிவிருத்திக்காக 2.13 கோடி ரூபாய் நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கப்பட்டது. ஜூன் 1991லேயே, திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட போதிலும், அடுத்த 1992ஆம் ஆண்டு மே மாதத்திலும், டிசம்பர் மாதத்திலும்தான் அதற்கான அலுவலர்களுக்கான ஒப்புதல் வழங்கப்பட்டது. மேலும் மேலும் இதிலே

காலதாமதங்கள் ஏற்பட்ட காரணத்தினால் இந்த 2.13 கோடி ரூபாய் செலவழிக்கப்படாமல் போய் விட்டது.

4. குறிப்பிட்ட ஒதுக்கீடு இல்லாமல் எந்தவொரு திட்டத்திற்கும் செலவு செய்யக் கூடாது. ஆனால் 4.23 கோடி ரூபாய் மதிப்புள்ள 36 நிகழ்வுகளில் எந்தவிதமான ஒதுக்கீடோ, ஒப்புதலோ இல்லாமல் செலவு செய்யப்பட்டுள்ளது.

5. 1992-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்கும் ஜூன் மாதத்திற்கும் இடையே அரசு சார்பாக 24.51 கோடி ரூபாய்க்கான மருந்துகளை வாங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அதுபற்றி தணிக்கை அறிக்கையிலே காணப்படும் விவரம் வருமாறு :-

மருந்துகளை வாங்குவது பற்றிய கோப்பினை தருமாறு அரசாங்கத்திடம் தணிக்கையாளர் அலுவலகம், ஆகஸ்ட் மாதம் 1993இல் கேட்டபோது தரப்படவில்லை. எந்த அடிப்படையிலே மருந்து விற்பனையாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பது பற்றியும், மருந்துகளை எந்த விலைக்கு வாங்கினார்கள் என்பது பற்றியோ பரிசோதிக்க இயலவில்லை. விதிமுறைப்படி பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதா என்பதும் தெரிந்து கொள்ள இயலவில்லை. சோதனைக்காக சிலவற்றை ஆராய்ந்தபோது, பல்வேறு விலைகளைக் குறிப்பிட்டு, ஒருவருக்கு மேற்பட்டவர்களிடம் மருந்துகளை வாங்கியிருப்பது தெரிகின்றது. ஒரே மாதக் காலத்திற்குள் குறைந்த விலையிலே தருவதற்கு சில நிறுவனங்கள் விருப்பம் தெரிவித்திருந்த போதிலும், குறைந்த விலைகள் ஏற்கப்படவில்லை. அதிக விலையில் வாங்குவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக எட்டு மருந்துகளை வாங்கிய வகையிலே மட்டும் தவறாக அதிக விலைக்கு வாங்கியதால் 13.02 லட்சம் ரூபாய் அதிகமாக செலவாகியிருக்கின்றது.

மருந்துகளின் தேவை எவ்வளவு என்பது நிர்ணயிக்கப்படவில்லை. 1992ஆம் ஆண்டு ஏப்ரல், மே, ஜூன் மாதங்களுக்கு தங்களுக்கு எவ்வளவு மருந்துகள் தேவை என்பது

பற்றி 24 மருத்துவமனைகள் மார்ச் 92லேயே அறிக்கைகள் கொடுத்திருந்தபோதிலும், மருத்துவத்துறை அதனை கவனத்திலே எடுத்துக்கொள்ளவில்லை. தேவை இல்லாத மருந்துகளை 21.52 இலட்சம் ரூபாய்க்கு வாங்குவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

அதிக அளவிற்கு தேவைக்கு மேல் மருந்துகளை வாங்கியதால், வேறு நிறுவனங்களுக்கு அவைகளைத் திருப்பியனுப்ப போக்குவரத்துச் செலவும் தேவையில்லாமல் செய்யப்பட்டுள்ளது. 11.85 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 29 மருந்துகள் இவ்வாறு வேறு நிறுவனங்களுக்கு அனுப்ப வேண்டியதாயிற்று. தேவையான கோப்புகள் இல்லாததால், இவைகளை அனுப்புவதற்கு போக்குவரத்துச் செலவு எவ்வளவு ஆயிற்று என்பதை நிர்ணயிக்க முடியவில்லை. இதற்கு அரசு கொடுத்த பதில் ஏற்கத்தக்கதாக இல்லை.

6. குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் 187.20 இலட்சம் செலவிலே ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் ஒன்று கட்டப்பட்டு 1991 டிசம்பரிலே தயாரான நிலையிலே இருந்தது. மொத்தம் 60 கடைகளிலே 24 கடைகளுக்கு ஒதுக்கீடு 10.10.91 அன்றும் 27.1.92 அன்றும் தரப்பட்டது. எனினும் ஒதுக்கப்பட்டவர்களுக்கு 1.4.92 அன்றும் 29.1.93 அன்றும்தான் கடைகள் ஒப்படைக்கப்பட்டன. தாமதத்திற்கு காரணம், துவக்க விழா நடத்துவதற்கு ஏற்பட்ட காலதாமதம்தான். அந்தத் துவக்க விழாவும் பிறகு நடைபெறவில்லை. கடைகளை இவ்வாறு ஒப்படைப்பதில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக 5.95 லட்சம் வாரியத்திற்கு நஷ்டம் ஏற்பட்டது. அரசாங்கம் அக்டோபர் 93இல் எழுதிய பதிலில் துவக்க விழா நடத்துவதில் ஏற்பட்ட கால தாமதம் காரணமாகத்தான் கடைகளை ஒப்படைப்பதில் கால தாமதம் ஏற்பட்டது என்பதை ஒத்துக்கொண்டிருக்கின்றது.

இதுபோல் இன்னும் அந்த அறிக்கையிலே ஏராளமான குறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

இதுபற்றியெல்லாம் தினமணி குறிப்பிட அக்கறை செலுத்தாமல், தேவையில்லாமல் தி.மு.கழகத்தை குற்றஞ்சாட்ட வேண்டுமென்று தலையங்கம் எழுதியதாலும், இதற்கு என்ன பதில்? என்று கேட்டிருப்பதாலும் இந்த விவரங்களை தினமணிக்கே எழுதலாம் என்று முதலில் நினைத்தேன். வெளியிடுவார்களோ; மாட்டார்களோ, என்ற ஐயப்பாட்டினால் உனக்கும் நாட்டுக்கும் விளக்கம் தரவேண்டியது என் கடமையென்ற நிலையில் இக்கடிதம் எழுதினேன்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

16-11-1994

2201. யோகம் வளர யாகம் வளர்க்கும் அரசுகள்!

உடன்பிறப்பே,

'பன்னீர்குளியலும் பழரச பானமும் கன்னியர் சூழ் கட்டிலறையும் இல்லாவிட்டால் உமக்குத் தூக்கமே பிடிக்காதாமே...!'

இது, மணிமகுடம் நாடகத்தில் ஆவேசத்தை அள்ளி வரும் வாளாக வரும் வசனத்தில் ஒரு பகுதியாகும்! அப்படித்தான் இப்போது, அரண்மனைவாசிகளுக்குக்கூட அல்ல; ஆசிரமவாசிகளுக்கே அந்த நிலை ஏற்பட்டு விட்டது!

என் செய்வது; முற்றும் துறந்து முனிவனாகச் சென்ற விசுவாமித்திரனே, மேனகையின் விசுவாசமித்திரனாக ஆனதால்தானே சகுந்தலை ஜனித்து, அவள் வயிற்றில் பரதன் தோன்றி இந்த தேசமே பரத கண்டமாயிற்று என இதிகாசமே எழுதிவைத்துள்ள நாட்டில் ஆசிரமவாசிகள் என்றால் அவர்களுக்கோர் தனி மகத்துவம் - தனி சுதந்திரம் எல்லாம் இருந்தே தீர வேண்டும் என்பது நியதியாகிவிட்டிருக்கிறதே!

கடவுளுடன் சம்பாஷிப்பவர்களாயிற்றே; அவர்கள் விரும்பிடும் கன்னியர்களுடன் எல்லாம் சந்தோஷிப்பதில் தவறென்ன!

சொர்க்கத்துக்கு வழி காட்டுபவர்களாயிற்றே; அவர்கள் பூலோக சுந்தரிகளுடன் புரண்டு தழுவிக் கிடப்பதில் குற்றமென்ன!

கோரும் வரமெல்லாம் கொடுக்கின்ற அவதார புருஷர்களாயிற்றே; அவர்கள் கோளாங்கிகளுடன் கூடிக்கிடப்பதில் பிழை என்ன!

இச்சைக்குகந்த பதவிகளைப் பெற்றிடும் வண்ணம் ஆசி வழங்கும் அருளாளர்களாயிற்றே; அவர்கள் பச்சைக்கிளிகளைத்

தம் படுக்கையில் கொஞ்சிக் கிடப்பதைக் கொச்சைப்படுத்துவது ஏன்?

நினைத்த காரியம் எல்லாம் நடப்பதற்கு நெற்றியிலே நீறு பூசிவிட்டு வெற்றிதான் போய்வா! என விடை கொடுத்தனுப்பும் மகான்களாயிற்றே; அவர்கள் அனைத்து மகிழ ஆயிரம் காரிகைகள் இருந்தால்தான் என்ன!

இப்படியொரு பதிலைத் தனக்குத்தானே கற்பித்துக் கொண்டு, சமுதாயத்தில் பாதிக்கு மேற்பட்டோர் பாமரத்தனத்தின் பிடியிலே இருக்கும் வரையில்; எத்தனை எத்தனை பெரியார்களின் பேச்சுக்களைக் கேட்டென்ன - அண்ணாக்களின் எழுத்துக்களைப் படித்தென்ன - பிரேமானந்தாக்கள் தோன்றிக் கொண்டுதானிருக்கிறார்கள்; அவர்களைப் பித்தர்கள் தொழுது கொண்டுதானிருக்கிறார்கள்.

உடை மட்டும் காவி - உள்ளமோ காமி என்கிற நிலையில் ஒருவரா இருவரா? எத்தனையோ துறவிகள்! சாமியார்கள்! சாது சந்நியாசிகள்!

இந்தப் போலிகளின் பொல்லாச் செயல்களை புதினங்களாக எழுதியோர் பலர் - நாடக மேடையில் காட்சியாக்கியோர் பலர் - திரைப்படங்களில் இவர்களின் தில்லுமுல்லுச் செய்கைகளை விளக்கிக் காட்டியோர் பலர் - இத்தனையும் போதாதென்று அன்றாடம் செய்திகளைத் தாங்கி வரும் நாளேடுகளிலும் இந்த வேடதாரிகளின் மோசடிகள், கொள்ளைகள், மோக லாகிரிச் சேட்டைகள் விரிவாக வெளியிடப்படுகின்றன.

ஆனால் இத்தனைக்குப் பிறகும்கூட; அந்த எத்தர்களின் இணையடி கழுவி அவர் மூலம் இறையருள் பெறவும், இன்ப வாழ்வு எய்திடவும் இன்னமும் எத்தனை பேர் அலைகிறார்கள் என்பதுதான் வெட்கக்கேடு! வேதனை!

இந்தியாவைப்போல சாமியார்களை தலைவணங்கி வழிபடும் நாடு எங்குமே கிடையாது என்று பிரதமர் நரசிம்மராவ் சொன்னாலும் சொன்னார்; அடடா! இது ஒன்றிலாவது இந்தியா முதலிடம் வகிக்கிறதே! என்று மதியிலார் மகிழ்ந்து கூத்தாடுகின்றார்!

பிரதமர், குடியரசுத் தலைவர், முதலமைச்சர் போன்றோர் - மற்றும் பெருந் தொழிலதிபர்கள் எனப்படுவோர்; தேர்வு

எழுதும் மாணவர்கள் சிலர் பரிட்சையில் தேறிட தமது இஷ்ட தெய்வங்களைப் பிரார்த்தனை செய்துகொள்வதுபோல, தேர்தலில் வெற்றிபெற - பெரும் பதவி வகித்திட - கிடைத்த பதவி நிலைத்திட இப்படித் தங்களின் சுயநலம் அத்தனைக்கும் பெரிய சாமிகள் முதல் குட்டிச் சாமிகள் வரையில் தேடிப் போகிறார்கள் என்றால்; அதைக் காணுகிற சாதாரண மக்களின் கதி என்ன? அவர்களும் தமது விதியைச் சொல்லி சாமியாரிடம் அழுது நற்கதியைப் பெறுவோம் என நம்பி கிடக்கிறார்கள் ஆஸ்ரமங்களையும் மடங்களையும் நோக்கி! நிதியைக் குவித்துக்கொள்ளும் சாமியார்களோ; சித்திரதேவிகளைத் தழுவினால்தான் தன்னிடம் நித்திராதேவியே வருவாள் என்று கூறி; பணக்காரச் சீமான்களையும், பதவியிலிருப்போரையும் பக்கத்துணையாக வைத்துக் கொண்டு பகவத் பூஜை எனும் பட்டுத்திரை மறைவில் துட்டுக்களையும் குவிக்கிறார் - பயந்து துள்ளும் மான்குட்டிகளையும் சுவைக்கிறார்.

கடந்த வாரம் இதைப்போல ஒரு சாமியார் நிகழ்ச்சி - போன மாதம் கூட இப்படியொரு சாமியாரைப் பற்றிய கதை - சென்ற ஆண்டும் அதற்குமுன் தொடர்ச்சியாக பல ஆண்டுகளாகவும் இப்படி பல செப்படி வித்தைச் சாது சந்நியாசிகள் - சூது புரிந்தனர் - சூதறியா மாதின் கற்பு பறித்தனர் - காமக்கலையும் அதன்பின் கொலையும் தமது ஆஸ்ரம இலக்கணமாகவே வகுத்தனர்!

இத்தனை மோசடிப் பேர்வழிகள்; தெய்வீக முக்காட்டுக்குள் இருப்பதைக் கண்டுபிடித்த பிறகும் - அடுத்து ஒரு திருடன் திருநீறுபூச்சுடனோ, திருநாமம் தரித்தோ, சடாமுடி தண்டு கமண்டலமுடனோ; குடிசையொன்று கட்டி; அதற்குக் குடில் என்று பெயர் கூறி; பின்னர் குடிலை, கூடகோபுர மாடமாளிகையாக்கி, ஆதரவற்ற இளம் பெண்களை ரட்சிக்கும் புனித பூமி அதுவெனப் புளுகி, இந்நாட்டு மூடர்களை மட்டுமின்றி வெளிநாட்டு விபரீத புத்திசாலிகளையும் ஆஸ்ரமவாசிகளாக்கி; ஆரணங்குகளை அணைத்துக் கிடப்பதும், ஆஸ்தி பாஸ்திகளைக் குன்றென வளர்ப்பதும் ஆண்டவன் கட்டளையென்று உபதேசம் செய்து கொண்டிருப்பானேயானால்; அவனையும் தரிசித்து, அரகரா என்று கன்னத்தில் போட்டுக் கொள்ளும் குருட்டு நம்பிக்கையின் கூடாரமாகவல்லவா இந்த நாடு இருக்கிறது!

இலங்கையிலிருந்து ஓடிவந்து, இங்கே திருச்சிக்கருகே ஒரு திருத்தலம் அமைத்துக்கொண்டு, அத்தலத்தின் புண்ணியம் பெற வந்த பெண்ணினத்தில் இதழ்த்தேன் பருகுவதே இறைவனுக்கு யாம் அளிக்கும் அவிர்ப்பாகம் என பிரேமானந்தா எனும் சாமியார், மக்களை மேலும் பித்தராக்க முனைந்து; யானொரு பாவமும் செய்தேனில்லை என்கிறார். ஆஸ்ரமத்துப் பெண்களுக்கு அடியேன் தந்தை என்கிறார். எப்போது? பல பெண்களின் வாழ்வைக் கந்தையாக்கிவிட்ட பிறகு!

இதுபோன்ற மோசடிகளைத் தடுக்க - கண்டு பிடித்துத் தண்டிக்க - அரசு ஆமை வேகத்தில் செல்கிறது!

காரணம்; மத்தியிலும் மாநிலத்திலும் இருக்கிற அரசுகள் மகான்களைக் கொண்டு, மந்திரவாதிகளைக்கொண்டு, சாது சந்நியாசிகளைக் கொண்டு தமது யோகம் வளர யாகம் வளர்க்கிற அரசுகளாயிற்றே - அதனால்தான்; திருச்சிக்கருகே மட்டுமல்ல; எங்கெங்கும் பிரேமானந்தாக்கள் திரும்பத் திரும்பத் தோன்றிக் கொண்டிருக்கிறார்கள்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

17-11-1994

2202. அறப்போர் மறியல், ஆயத்தமாகிடுவோம்!

உடன்பிறப்பே,

* இடஒதுக்கீட்டில் ஜெயலலிதா அரசு இரட்டை வேடமிட்டு பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்துள்ள துரோகம்.

* ஆதிக்க ஆணவத்தைக் காட்டி மத்திய அமைச்சர் அருணாசலத்துக்கும் சட்டப்பேரவை உறுப்பினர் பரிதி. இளம்வழுதிக்கும் இழைத்த அவமானம்.

* உலகத்தமிழ் மாநாடு என்ற பெயரால் ஊழலும் கொள்ளையும்.

* உள்ளாட்சி மன்றம் மற்றும் கூட்டுறவு சங்கத் தேர்தல்களைத் தள்ளிப் போடும் ஜனநாயக விரோதச் செயல்.

* ஈரோடு நகரில் எம்.ஜி.ஆர். சிலை வைப்பதற்கும் மதுரையில் எம்.ஜி.ஆர். அறக்கட்டளை விழாவுக்கும் தடை விதித்து எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. பொதுச்செயலாளர் திருநாவுக்கரசைக் கைது செய்த அதிகார துஷ்பிரயோகம்.

* குமரி மாவட்டத்தில் மதக் கலவரத்தைத் தடுக்க அமைக்கப்பட்ட அமைதிக் குழுவின் தலைவரும் கிள்ளியூர் ஜனதாதளத் தலைவருமான மனோ தங்கராஜ் மீது கொலை முயற்சி பொய் வழக்கு.

* சட்டம் ஒழுங்குச் சீர்குலைவிற்கு நூற்றுக்கணக்கான உதாரணங்கள் இருப்பினும் குறிப்பாக மதுரை ராசகோபாலன் கொலையின் தொடர்ச்சியாகத் திண்டுக்கல் காசிம் என்ற

இளைஞர் கொலை செய்யப்பட்டதில் காவல்துறையினர் காட்டும் அலட்சியம்.

* குடவாசலில் மார்க்சிஸ்ட் தோழர் தங்கய்யாவைக் கொலை செய்த நிகழ்வில் குற்றவாளியான ஆளுங் கட்சிக்காரர்; அமைச்சர் ஒருவரின் காரிலேயே பயணம் செய்கிற அளவுக்கு இட்லர் தர்பார்.

* காவல்நிலையங்களில் கற்பழிப்புகள், கொலைகள் அவற்றுக்குத் திரைபோடும் கமிஷன் அறிக்கைகள்.

* மக்களால், மக்களுக்காக அமைக்கப்பட்ட ஜனநாயக அமைப்பான சட்டப் பேரவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் யாராயினும் அவர்கள் எடுத்துவைக்கும் பிரச்சினைகளுக்கு இடமே அளிக்காமல் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு மட்டுமே அப்பேரவை இருப்பதுபோன்ற எதேச்சாதிகாரம்.

இவற்றைக் கண்டித்து வரும் டிசம்பர் திங்கள் 15ஆம் நாள் வியாழக்கிழமையன்று தமிழக முழுதும் வட்டத் தலைநகர்களில் மாநில அரசு அலுவலகங்களின் முன்னால் பல லட்சக்கணக்கானோர் மறியலில் ஈடுபட்டு சிறை புகுவதென்று 11.11.94 சென்னையில் நடைபெற்ற தோழமைக் கட்சிகளின் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. அந்தக் கூட்டத்தில் தி.மு.க., ஜனதாதளம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய தேசியலீக், எம்.ஜி.ஆர்.அ.தி.மு.க., அகில இந்திய பார்வார்டு பிளாக் ஆகிய ஏழு கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு கருத்துக்களை வழங்கியுள்ளனர். அன்று வடித்தெடுத்த தீர்மானத்தில் கண்டுள்ள காரணங்களுக்கு மட்டுமேயல்லாமல் - ஏழை எளிய நடுத்தர மக்களை, தொழிலாளத் தோழர்களைப் பாதித்துக் கொண்டிருக்கும் பல்வேறு பிரச்சினைகளையும் மக்கள் மன்றத்தில் எடுத்து வைத்து மக்கள் சக்தியைத் திரட்டுவதே இந்த மறியல் போராட்டத்தின் கடமையும் நோக்கமும் ஆகும்.

அரிசியில் கல் பொறுக்குவது என்பதைவிட; கல்லில் அரிசி பொறுக்குவது போல் என்றாகிவிட்டது இன்றுள்ள ஜெயலலிதா அரசின் அராஜகங்கள்! அடாவடித்தனங்கள்! அக்கிரம

ஆணவச்சேட்டைகள்! உலக மகா ஊழல்கள்! பாம்பு தீண்டும் - தேள் கொட்டும் - பூனை பிராண்டும் - வெறி நாய் கடிக்கும் - இவைகள் தனித்தனியாகச் செயல்பட்டால்; தீண்டுமென்றும், கொட்டுமென்றும், பிராண்டுமென்றும், கடிக்குமென்றும் சொல்கிறோம். ஆனால்; மாறாக, அனைத்துமே ஒன்றாக ஒரு மனிதனைத் தாக்கினால் அந்தத் தாக்குதலை எப்படித் தனித்தனியே பிரித்துச் சொல்ல முடியும்! அதனால் அதற்குப் பொதுப் பெயர் ஜெயலலிதா ஆட்சி என்பதே பொருந்தும்! அப்படியாகிவிட்டது, இன்றைய தமிழகத்தின் நிலை!

ஒன்றிரண்டு பத்து நூறு என்றால் அந்தக் குறைகளை, குற்றங்களைச் சுட்டிக் காட்டி மக்களிடமும் விளக்கி; நல்லரசாக இருப்பின் திருந்திக் கொள்ளவும் செய்யலாம். நான்கு பக்கமும் வீழ்ந்து கிடக்கும் குட்டிச் சுவராய், நச்சரவுகள் நெளியும் இடமாய், ஓர் ஆட்சியின் கொலுமண்டபம் சீர்குலைந்து, சிறப்பிழந்து, சீழும் ரத்தமும் வடியும் ரோகம் கொண்ட நோயாளிபோல் காட்சி தந்தால் என்னதான் செய்ய முடியும்? அதற்காக; ஏன் செய்ய வேண்டும்? என்று அக்கறையுடையோர் வாளாக இருந்திட இயலுமா? அறப்போர் வாளாக மாறித்தானே அலங்கோலங்களைப் புறந்தள்ளி; மீண்டும் தமிழகத்திற்குப் புதுவாழ்வு அளித்திடப் புறப்படத் தயாராக வேண்டும்!

பொறுத்தது போதும்! பொங்கி எழுவோம்! இதனைப் புவியாள்வோர்க்கு எச்சரிக்கைப் பாடமாக வழங்கிடத்தான் தோழமைக்கட்சிகள் கூடி அறப்போர் மறியல் அறிவிக்கப்பட்டுள்ளது.

உடன்பிறப்பே, நவம்பர் 11ஆம் நாள் எடுக்கப்பட்ட முடிவின்படி டிசம்பர் 15ஆம் நாள் நடத்தப்படும் மறியல் எல்லாவகையிலும் வெற்றிகரமாக நடைபெற்றிட வேண்டும். ஒவ்வொரு மாவட்டம், ஒன்றியம், நகரங்களில் உள்ள நமது கழக அமைப்புகள் இக்கடிதத்தில் நான் குறிப்பிட்டுக் காட்டியுள்ள தோழமைக்கட்சிகளின் பிரதிநிதிகளுடன் தொடர்புகொண்டு, அவர்களை அழைத்துப் பேசி அறப்போருக்கான ஆயத்தங்களை அன்பு வழியில் - அமைதி வழியில் வகுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதுகுறித்து கடந்த 11ஆம் தேதியன்றே மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் அனைவருக்கும் கடிதம்

எழுதியுள்ளேன். ஒன்றிரண்டு மாவட்டக் கழகச் செயலாளர்கள் தவிர்த்து பெரும்பாலான மாவட்டக் கழகச் செயலாளர்கள் பதில் கடிதங்களை மெத்த ஆர்வமுடன், அவர்கள் ஈடுபட்டுள்ள அறப்போராட்ட ஆயத்தப்பணிகளுக்கான ஏற்பாடுகளை விவரித்து எனக்கு அனுப்பியுள்ளனர்.

டிசம்பர் 15 மறியல் போராட்டத்துக்கான விளக்கக் கூட்டங்கள் நடைபெற இருக்கும் நாட்களையும் அவற்றில் கலந்து உரையாற்றிட இருக்கும் சொற்பொழிவாளர்களின் பெயர்களையும் கூடப் பட்டியலிட்டு எழுதியுள்ளனர். எல்லா மாவட்டங்களிலுமே நமது தோழமைக் கட்சிகளுடன் நிர்வாகிகளுடன், மாவட்ட அளவில், ஒன்றிய, நகர அளவில் ஆக்கப்பணிக்கான கலந்துரையாடல் கூட்டங்கள் நடைபெறத் தொடங்கிவிட்டன.

இடையில் இருபத்தி ஐந்து நாட்கள் இருக்கின்றன! அறப்போருக்கான பணிகள் பந்தயக் குதிரைகளின் வேகத்தில் மாவட்டத்துக்கு மாவட்டம் போட்டியுணர்வுடன் நடைபெறட்டும்! இதனூடே ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்றிய நகரங்களில் தலைமைக்கழகச் சார்பில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஆய்வுக் குழுவினரும் அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்களும், பொறுப்பாளர்களும் ஆற்றுகின்ற அருந்தொண்டினை அன்றாடம் அறிந்து அகம் பூரிக்கிறேன். ஆங்காங்கே ஆர்த்தெழும் உணர்ச்சிப் பேரருவி, குற்றாலத்துச் சாரலாய் என் இதயத்தைக் குளிர்வித்துக் கொண்டிருக்கிறது!

குற்றாலத்து மென்காற்றையும் - கோடையின் தகிப்பையும் ஒன்றுபோலக் கருதும் உடன்பிறப்புகளாய் நீயும் நானும் இருப்பதால்தானே, எல்லாவிதமான வேதனைகளையும் சோதனைகளையும் தாங்கிக்கொண்டு இக்கழகம் எஃகுக் கோட்டையாக நிமிர்ந்து நிற்கிறது!

அன்புள்ள,

மு. கருணாநிதி

20-11-1994

2203. கேரள அரசின் செயல்; கேலிக்குரியது!

உடன்பிறப்பே,

கேரள அரசு, தந்தை பெரியார் அவர்கள் எழுதிய இராமாயண ஆராய்ச்சி நூல் ஒன்று, மலையாள மொழியில் வெளிவந்ததைத் தடைசெய்து, விற்பனைக்கெனக் கடைகளில் இருந்தவற்றையும் பறிமுதல் செய்திருப்பதாகத் தகவல் வந்துள்ளது. யாரைத் திருப்திப்படுத்துவதற்காகக் கேரள அரசினர் இத்தகைய தடைவிதிப்பு - பறிமுதல் போன்ற காரியங்களில் ஈடுபட்டார்களோ என்று தெரியவில்லை.

பண்டித நேரு அவர்களைத் தனது மதிப்புக்கும் மரியாதைக்குமுரிய தலைவராக ஏற்றுக் கொண்டு அவர் கருத்துக்களைப் பொன்மொழிகளெனப் போற்றுகிற கேரள முதல்வர் கருணாகரன் அவர்கள்; இராமாயணம் என்பது ஆரிய திராவிடப் போராட்ட நிகழ்ச்சிகளை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட ஓர் இதிகாசக் கதையென்று; அதே நேரு பெருமான் கூறியுள்ளதை மட்டும் ஏன் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார் என்று புரியவில்லை.

இதுகுறித்துக் கண்டன அறிக்கை வெளியிட்டுள்ள பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் இராமதாஸ் அவர்கள் சுட்டிக் காட்டியிருப்பது போல, தந்தை பெரியாருக்குக் கேரள மாநிலத்து வைக்கத்திலே சிலை வைத்து விட்டு அந்தப் பெரியார் எழுதிய ஆராய்ச்சி நூலான இராமாயணத்தைத் தடைபோட்டுப் பறிமுதல் செய்வது எவ்வளவு வேடிக்கையான முரண்பாடு!

ஒரே இராமாயணந்தான் நாடு முழுதும் இருக்க வேண்டும் - அதற்கு வித்தியாசமாக வேறொரு இராமாயணம் இருக்கக்கூடாதென்றால்; கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே, அதாவது கி.மு. 3ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட வால்மீகி

இராமாயணத்தைக் கூடத் தடை செய்தாக வேண்டும். ஏனென்றால், வால்மீகிக்கு முன்பே கி.மு. 5ஆம் நூற்றாண்டில் பாலிமொழியில் பௌத்த இராமாயணம் இயற்றப்பட்டுள்ளது.

உடன்பிறப்பே, ஐந்தாறு மாதங்களுக்கு முன் ஏப்ரல் இறுதி வாரத்தில் நாமக்கல்லில் நடைபெற்ற இராவண காவியம் விழாவில் நான் ஆற்றிய உரையில், எத்தனை எத்தனை இராமாயணங்கள் எத்தனை எத்தனை முரண்பாடுகளுடன் எழுதப்பட்டுள்ளன என்பதை எடுத்து விளக்கியுள்ளதை நீ படித்திருப்பாய் என்று நம்புகிறேன். அந்த உரையைக் கூட சிறு நூலாக வெளியிட வேண்டுமென்று சிலர் என்னிடம் சொன்னார்கள்.

அந்த விழா நிகழ்ச்சியில் நான் எடுத்துரைத்த சிலவற்றை மட்டும் சுருக்கமாக உனக்கு மீண்டும் சுட்டிக்காட்டுகிறேன்.

வால்மீகி ராமாயணத்தில், கடவுள் வாழ்த்தாக வால்மீகி எந்த இறைவனையும் வணங்கவில்லை என்று அவர்களே சொல்கிறார்கள். வால்மீகி கடவுள் வாழ்த்தே பாடவில்லை. ஆனால் கம்பன் முதல் பாடலிலேயே பரம்பொருள் வணக்கம் சொல்லித்தான் ராமாயணத்தைத் தொடங்குகிறான். அதற்காக வால்மீகிக்கு மாறாக கம்பன் பாடினான் என்று எப்படிச் சொல்ல முடியாதோ - அதைப்போல ராவண காவியம் பாடிய குழந்தையைப் பார்த்து நீ கம்பனுக்கு மாறாக பாடினாய் என்று சொல்ல முடியாது.

வால்மீகி ராமாயணத்தில் ராமன் பிறப்பு எப்படி? கம்பராமாயணத்தில் ராமன் பிறப்பு எப்படி? அவர்கள் மாறுபடலாமா?

வால்மீகி ராமாயணத்தின்படி ராமனின் பிறப்பு ரிஷ்ய சிருங்கர் யோசனைப்படி அவருடைய உதவியுடன் பரிமக யாகம் என்ற ஒரு யாகம் செய்யப்பட்டு - அந்த யாகத்தின் முடிவில் பாயசம் வழங்கப்படுகிறது. தேவர்கள் கொண்டு வந்து அந்த பாயசத்தைத் தருகிறார்கள்.

அந்த பாயசத்தை தசரதனிடத்தில் கொடுக்கிறார்கள். அந்த பாயசத்தில் பாதியை கோசலையிடம் தருகிறான் தசரதன். பாதியில் பாதியை கைகேயிக்குத் தருகிறான். பாதியிலும் பாதி போக மீதியை சுமத்திரைக்குத் தருகிறான் தசரதன். இது வால்மீகி ராமாயணம்.

ஆனால் வால்மீகிக்கு முன் எழுதப்பட்ட பௌத்த ராமாயணம் என்ற ஒன்று இருக்கிறதே; அதற்கு இன்னொரு பெயர் தசரத ஜாதகம். அதில் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

தசரதனுக்கு 16 ஆயிரம் மனைவிகள். இதில் இன்னொரு வேடிக்கை - எதிர்பாராத வேடிக்கை - நானே அதிர்ச்சிக்கு ஆளாகும் வகையிலான வேடிக்கை - நான் தயாரித்த புத்தகமல்ல அது - ஆனால் நான் படித்த புத்தகம்; ஆம், ராமனிடத்தில் - கம்பனிடத்தில் பக்தி கொண்டவர்கள் தயாரித்துள்ள புத்தகம்.

அந்த ராமாயணத்தில் வருகின்ற குறிப்பின்படி தசரதனுக்கு 16 ஆயிரம் மனைவிகள். அவர்களில் மூத்தவளுக்கு யார் யார் பிறந்தார்கள் தெரியுமா? அதிர்ச்சி அடையாதீர்கள்.

மூத்தவளுக்கு பிறந்தவர்கள் ராமன், லட்சுமணன், சீதை ஆகியோர்.

ராமனுக்கும், சீதைக்கும் என்ன உறவு என்று நாம் எண்ணிக் கொண்டிருக்கிறோம். இதைவிடவா புலவர் குழந்தை தவறு செய்து விட்டார் இராவண காவியத்தில்.

இன்னொன்று விமலசூரியன் பௌம சரித ராமாயணத்தின்படி தசரதனுக்கு நான்கு மனைவிகள். கோசலை, கைகேயி, சுமத்திரை, சுபிரபை ஆகிய நான்குபேர் தசரதனின் மனைவிகள்.

யாகம் நடத்திய பாயசம் பங்கீடு செய்தார்கள் அல்லவா; அதிலேயே ராமாயணத்துக்கு ராமாயணம் வேறுபாடு. வால்மீகி ராமாயணத்தில் பாயசத்தில் பாதி கோசலைக்கு, பாதியில் பாதி கைகேயிக்கு, மீதி சுமத்திரைக்கு என்று சொல்லப்பட்டிருக்கிறது.

கம்பன் பாயசத்திற்கே போகவில்லை. அமுத பிண்டம் என்று அவர் சொல்லுகிறார். இங்கு பாயசம் தரப்படவில்லை. பாயசம் திரவப்பொருள் அமுதபிண்டம் திடப்பொருள். ஆக திரவம் திடமாக மாறி விடுகிறது - வால்மீகியிலிருந்து கம்பனுக்கு வரும்போது! அந்த அமுத பிண்டத்தில் கோசலைக்கு ஒரு பங்கு. கைகேயிக்கு ஒரு பங்கு - அப்படி பங்கு தரும்போது கீழே சிந்துகிறது அல்லவா - அதைப் பொறுக்கி சுமத்திரைக்குத் தருகிறார்கள். இது கம்ப ராமாயணத்தில்!

மனைவிகளை வரிசைப்படுத்துவதில் கூட வேறுபாடு. கம்பர் எப்படி வரிசைப் படுத்துகிறார் என்றால் கோசலை, கைகேயி,

சுமத்திரை! வால்மீகி எப்படி வரிசைப்படுத்துகிறார் என்றால் கோசலை முதல் மனைவி, சுமத்திரை இரண்டாவது மனைவி, கைகேயி மூன்றாவது மனைவி! இப்படியெல்லாம் நீங்கள் மனைவிகளை மாற்றலாம். மனைவியை சகோதரியாக்கலாம். சகோதரியை மனைவியாக்கலாம்! புலவர் குழந்தை அடிப்படை மாறாமல் உண்மையான வரலாற்றுக் காலத்தை தந்திருக்கிறார் என்றால்; அது தவறா?

இதே ராமாயணத்தில் அகலிகை பற்றி வால்மீகி என்ன சொல்லுகிறார்? கம்பர் என்ன சொல்கிறார். வால்மீகி, கம்பர் இருவரும் அகல்யாவின் கதையைச் சொல்லும்போது மாறுபடுகிறார்கள்.

கம்பர் சொல்லுகிறார். அகலிகையின் கணவன் கௌதம முனிவர் விடியற்காலையில் வீட்டை விட்டு வெளியேறுகிற வரையில் இந்திரன் அந்த முனிவரைப் போல வேடம் பூண்டு உள்ளே வருகிறான். கணவன்தான் என்று கருதி அகலிகை இந்திரனை கட்டித் தழுவுகிறாள். பிறகுதான் கணவன் அல்ல. இந்திரன் வந்து ஏமாற்றி விட்டான் என்பதைப் புரிந்து கொள்ளுகிறாள். இப்படித்தான் கம்பர் எழுதுகிறார்.

ஆனால் வால்மீகி – முதலில் வார்த்தவர் வால்மீகி. பிறகுதான் கம்பர் பார்த்தார். கம்பர் பார்த்தவர்கூட அல்ல; பார்த்ததைக் கேட்டவர். முதலில் பார்த்த வால்மீகி அகலிகை கதையில் என்ன சொல்லுகிறார்?

கௌதம முனிவர் வெளியே போகிறார். உடனே இந்திரன் முனிவர் வேடத்தில் உள்ளே வந்தான். அகலிகை, வந்திருப்பது இந்திரன்தான் என்பதைத் தெரிந்து கொண்டாள். ஆகா! தேவலோகத்தின் அரசனே வருகிறானே! என்று அவனை வரவேற்றாள். வரவேற்று அவனை வாரித் தழுவிக் கொண்டாள். இருவரும் இன்பமாக இருந்தபோது உள்ளே நுழைந்த முனிவர் உண்மையைக் கண்டுகொண்டார். சாபமிட்டார்; இது வால்மீகி ராமாயணம்.

இந்திரனுக்கு வால்மீகி என்ன சாபம் கொடுத்தார்? முனிவர் இந்திரனைப் பார்த்து 'அடப்பாவி! என் மனைவியைக் கெடுத்து விட்டாயே என்று ஆத்திரப்பட்டு உன் ஆண்மை அற்றுப் போகக்கடவது' என்று சாபமிடுகிறார். இது வால்மீகி ராமாயணத்தில் கொடுக்கப்பட்ட சாபம்.

ஆனால் கம்பர் என்ன சொல்கிறார்? கௌதம முனிவர் இந்திரனைப் பார்த்து 'என் மனைவியைக் கெடுத்த உன் உடல்முழுவதும் பெண்குறி ஆகக் கடவது' என்று சாபமிடுகிறார்.

இந்திரனுக்கு சாபம் கொடுத்தபின் அகலிகைக்கும் சாபம் தருகிறார்கள். 'நீ காற்றை மாத்திரம் உட்கொண்டு கிட' என்று வால்மீகி ராமாயணத்தில் அகலிகைக்கு சாபம் தரப்படுகிறது.

கம்பரோ - உணவில்லாமல் காற்றை மாத்திரம் சாப்பிட்டுக்கொண்டு எத்தனை நாள் கிடக்க முடியும்? எனவே கம்பன் அதை மாற்றி கல்லாகப் போகக் கடவாய் என்று அகலிகைக்கும் சாபம் தருகிறான். இப்படி சாபம் கொடுத்ததிலேயே வேறுபாடு - மாறுபாடு.

சீதையின் பிறப்பைப் பற்றி என்ன சொல்லப்படுகிறது. இதிலும் ஒரு வேடிக்கை காத்திருக்கிறது. மிதிலா நகரில் ஏர் உழுகிற நேரத்தில் ஒரு பெட்டி கிடைக்கிறது. பெட்டியை எடுத்துப் பார்த்தால் அதற்குள் ஒரு பெண் குழந்தை இருக்கிறது. அந்தக் குழந்தையை ஜனக மகராஜா வளர்த்தார். அந்தக் குழந்தைதான் சீதை என்று ஒரு கதை.

இன்னொரு கதை என்ன தெரியுமா? இலங்காதிபதி இராவணனின் மனைவி மண்டோதரிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைதான் சீதை! சீதை பிறந்தவுடன் அரண்மனை சோதிடனைக் கூப்பிட்டு ஆரூடம் பார்த்தார்கள். அந்த சோதிடன், 'இந்தக் குழந்தை இங்கிருந்தால் இலங்கை அழிந்துவிடும். அதனால் இதைக் கொண்டு போய் எங்காவது விட்டுவிடு' என்று சொல்கிறான். உடனே மாரீசனை கூப்பிட்டு அந்தக் குழந்தையை எங்கேயாவது விட்டு விடும்படி சொல்ல - மாரீசன் சீதையைத் தூக்கிக்கொண்டு போய் பெட்டியில் வைத்து மிதிலாபுரிக்கு பக்கத்தில் ஒரு வயலில் போட்டு விடுகிறான். அதை கண்டுபிடித்துத்தான் ஜனக மகராஜா வளர்க்கிறார். இப்படி ஒரு வேறுபாடு.

இன்னும் ஒரு முக்கியமான வேறுபாடு - சீதை எப்படி ராமனை திருமணம் செய்து கொண்டாள் என்றால் - வில்லை ஒடித்தான் ராமன். அதன் பிறகு திருமணம் நடந்தது என்பது கதை. கம்பன் என்ன சொல்லுகிறான்? வால்மீகி என்ன சொல்லுகிறான்?

வில்லை வளைப்பதற்கு முன்பே விசுவாமித்திர முனிவரோடு ராமனும் லட்சுமணனும் வந்து கொண்டிருந்தார்கள். மாளிகையின் உப்பரிகையில் நின்று சீதாதேவி ராமனைப் பார்க்கிறாள்.

அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள் கண்ணோடு கண் இணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனுமில என்பதைப் போல அந்தக்காட்சியை உருவாக்கி இருக்கிறான் கம்பன். ஆனால் வால்மீகி அப்படிச் சொல்லவில்லை.

துளசி ராமாயணத்திலோ - ராமனும் சீதையும் ஒரு தோட்டத்தில் சந்திக்கிறார்கள். சந்தித்து காதல் கொள்கிறார்கள். விசுவாமித்திரரும், லட்சுமணனும் அப்போதும் இராமனுடன் தான் இருக்கிறார்கள். அவர்கள் இருவரையும் ஓரமாக ஒதுக்கிவிட்டு ராமனும் சீதையும் காதல் கொள்கிறார்கள். இது என் சொந்தக்கதை அல்ல. துளசிதாஸ் ராமாயணத்தில் வரும் கதை.

அதற்குப் பிறகு வில் ஒடிக்கும் இடத்துக்கு வருகிறார்கள். ராமனும் சீதையும் ஏற்கனவே காதலித்திருப்பவர்கள். சீதையை திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்பதற்காக எல்லா மன்னர்களும் வந்து வில்லை ஒடித்துப் பார்க்கிறார்கள். முடியவில்லை.

உடனே ஜனக மகராஜா அந்த மண்டபத்தில் உள்ளவர்களைப் பார்த்து 'அய்யோ! என் மகளுக்குத் திருமணமே ஆகாதா? இந்த வில்லை ஒடிக்கக் கூடியவன் ஒருவன்கூட கிடையாதா?' என்று புலம்புகிறார். அப்போது விசுவாமித்திரர், ராமன், லட்சுமணன் மூன்று பேரும் இருக்கிறார்கள்.

உடனே லட்சுமணன் எழுந்து, நான் வில்லை ஒடிக்கிறேன் என்று கிளம்புகிறான். லட்சுமணன் அப்படி ஒடித்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? உடனே ராமன் பதறிப்போய், லட்சுமணனைத் தடுத்து நிறுத்திவிட்டு தானே சென்று வில்லை ஒடித்து சீதையை மணம் செய்துகொள்கிறான். இது துளசிதாஸ் ராமாயணம்.

ஆனால் வால்மீகி ராமாயணத்தில் காதல் சங்கதியே கிடையாது. நேராக சுயம்வர மண்டபத்துக்கு வருகிறார்கள். வில்லை ஒடிப்பவர்களுக்கு பெண்ணைத் தருகிறேன் என்று ஜனகன் அறிவிக்கிறான். ராமன் வில்லை எடுத்து ஒடித்துவிட்டு சீதையை திருமணம் செய்துகொள்கிறான்.

இப்படி வால்மீகியும், கம்பரும், துளசிதாசர் போன்ற மகான்களும் இராமாயண இதிகாசத்தை அவரவர்கள் கருத்துக்கேற்ப எழுதலாம். ஆனால்; இன்றையச் சமுதாயச் சூழலில் இராமனைப் போன்ற தெய்வீக மெருகு ஏற்றப்பட்ட இதிகாசக் கதாநாயகர்களைப் பயன்படுத்தி ஆதிக்க சக்திகள் வலுப்பெற்று, அரசியல் ஆதாயம் தேடிட முனைவதைக் கண்டிக்கவும் - எதிர்காலத் தலைமுறையினர் எழுஞாயிறுகளெனப் பகுத்தறிவு ஒளிவீசித் திகழ்ந்திடவும்; தனது ஆழ்ந்த முதிர்ந்த அறிவுக்கெட்டிய ஆராய்ச்சி இதுதான் என்று தந்தை பெரியார் எழுதினால் மட்டும் அந்நூல் தடை செய்யப்படுவதா?

இது கேரள அரசு நடத்தியுள்ள கேலிக்குரியதும் கண்டனத்திற்குரியதுமான செயலாகும்!

தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சியினர் புலவர் குழந்தை எழுதிய இராவண காவியம் நூலுக்கு தடை விதித்தனர். கழக ஆட்சியில் நான் முதல்வராகப் பொறுப்பேற்றிருந்த போது அந்தத் தடை நீக்கப்பட்டது.

அதுபோல கேரளத்தில் பெரியாரின் இராமாயண ஆராய்ச்சி நூல் தடை செய்யப்பட்டுள்ளதை; வேறொரு ஆட்சிதான் பொறுப்புக்கு வந்து அகற்ற வேண்டுமென்று காத்திராமல் இப்போதே ஆட்சியில் உள்ளவர்கள் அந்தத் தடையை நீக்கிட வேண்டும்.

இல்லையேல் பகுத்தறிவுப் பகலவன் - தந்தை பெரியாரின் சிலையை வைக்கத்தில் வைத்து விழா நடத்தியதற்கு அர்த்தமில்லாமல் போய்விடும். கேரள அரசின் செயல் கேலிக் குரியதாகிவிடும். கண்டனத்திற்கு உள்ளாவதை விட, கேலிக்கு உள்ளாவது பெருந் தண்டனையாகும்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

21-11-1994

2204. வாயடைக்கும் பதிலொன்று வழங்கலாமே!

உடன்பிறப்பே,

'மேற்கு வங்கப் பொருளாதாரக் கொள்கைகளையும் - நரசிம்மராவ் கொள்கைகளையும் சமப்படுத்தி உரக்கப்பேசி, மார்க்சிஸ்ட் கட்சி பாதை மாறிவிட்டது எனக் கதை கட்டி அவதூறு செய்ய முயற்சிப்பது வீண் வேலை'

இப்படி முரசொலி மீது கண்டனத்தை வீசியுள்ளார் மார்க்சிஸ்டு கட்சியின் மதிப்புக்குரிய நண்பர் ஒருவர்!

அந்த நண்பருக்கு மட்டுமல்ல; அவரைப் போலவே, மற்றும் சில கட்சித் தலைவர்களுக்கும், பத்ராதிபர்களுக்கும் தி.மு.க. மீது ஏதாவது ஒரு வகையிலே தாக்குதல் நடத்துவது என்றாலே ஒரு தனி இன்பம்!

காரணம் என்ன? காரணத்தை நமது தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் காஞ்சி இதழில் 1964ஆம் ஆண்டிலேயே குறிப்பிட்டிருக்கிறார். அது எப்போதும் பொருந்தும் என்பதுபோல் இப்போதும் பொருந்துகிறது.

தம்பி, எவர் எந்த நிலை பெற்றிடினும் அவர் அரசியலில் சந்தித்துத் தீர வேண்டிய சக்தி, சமாளித்தாக வேண்டிய பிரச்சினை, பதிலளித்துத் தீரவேண்டுமென்று கேட்டு நிற்கும் கேள்விக்குறி தி.மு.க.!

அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டியிருப்பது போலத்தான்; நாம், யாருடைய வம்புக்கும் போகாமல் இருந்தாலும் சிலர், வேண்டுமென்றே திட்டமிட்டு நம்மீது அம்புகளைப் பொழிந்து கொண்டேயிருக்கிறார்கள்.

அவற்றை நாம் கேடயம் கொண்டு தடுத்தாலோ - அல்லது கவசம் பூண்டு தாங்கினாலோ; அதற்கே அவர்களுக்கு மெத்தக்

கோபம் வருகிறது. எத்தனை கணைகளையும் ஈட்டிகளையும்தான் பொறுத்துக் கொள்வது; பதிலுக்கு ஓர் அம்பு நாமும் விடுத்தோமெனிலோ பதறுகிறார்கள்! பதற்றம் கொள்கிறார்கள்.

எடுத்துக்காட்டாக ஒன்றை மட்டும் பாரேன் - இராணிப்பேட்டையிலும் பழனியிலும் நடைபெற்ற சட்டமன்ற, நாடாளுமன்ற இடைத்தேர்தல்களில் தி.மு.க.வும் காங்கிரசும் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டு, பழனி நாடாளுமன்றத் தொகுதியில் தி.மு.க.வினர் வாக்குகளை காங்கிரசுக்கு அளிப்பதெனவும், இராணிப்பேட்டையில் காங்கிரஸ் வாக்குகளை தி.மு.க.வுக்கு அளிப்பதென்றும் முடிவாகிவிட்டதாக மார்க்சிஸ்டு கட்சியிலேயுள்ள யாரோ ஒரு தனி மனிதரல்ல; தமிழகச் செயலாளர் தோழர் நல்லசிவன் எம்.பி. அவர்களே அவதூறான செய்தியொன்றை வெளியிட்டார். அப்படியொரு தவறான பிரச்சாரம் நடைபெறுவதை மறுத்து கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள், செய்தியாளர்களை அழைத்து அறிக்கையே வெளியிட்டார். அச்செய்தி இட்டுக்கட்டிய அபாண்டம் என்று நான் கருத்து வெளியிட்டேன். மார்க்சிஸ்டுகள் கூறுவது அடிப்படையற்றது என்பதை விளக்கிட; பழனி நாடாளுமன்றத் தொகுதியில் கடந்த 1991 ஆம் ஆண்டு தேர்தலில் வாங்கிய வாக்குகள் ஒரு லட்சத்து எண்பத்தி ஐயாயிரம் என்பதைக் காட்டிலும் இந்த இடைத்தேர்தலில் கழகம் சுமார் ஐம்பதாயிரம் வாக்குகள் அதிகமாக பெற்று இரண்டு லட்சத்து முப்பத்தி நான்காயிரம் வாக்குகள் பெற்றிருப்பதையும், சென்ற தேர்தலில் பழனி நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்ற காங்கிரஸ் இந்த இடைத் தேர்தலில் மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டு, கழகம் இரண்டாவது இடத்திற்கு வந்துள்ளதையும் சுட்டிக்காட்டி, எனவே மார்க்சிஸ்டு கட்சி, தனது தவறான கணிப்பை மாற்றிக் கொள்ளவேண்டுமென்று கூறியிருந்தேன்.

ஆனால் அதற்குப்பிறகு; மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் மாநிலக்குழுவிலேயே; கழகத்தின் மீது திரும்பவும் அதே குற்றச்சாட்டைச் சுமத்தி, அந்தச் செய்தியை அறிக்கை வடிவில், எல்லா ஏடுகளுக்கும் வழங்கினார்கள்.

இப்படி கழகத்தின் மீது அவதூறு கூறிக் கொண்டே; மார்க்சிஸ்டு கட்சியுடன் சேர்ந்து கூட்டுப் போராட்டத்திற்கு வா என்று அழைத்தால் அதற்கு என்ன பொருள்?

அவர்கள் குற்றச்சாட்டே தி.மு.க.வுக்கும் காங்கிரசுக்கும் இரகசிய ஒப்பந்தம் என்பதாகும்!

அப்படி ஒரு குற்றத்தை கழகத்தின் மீது கூறிக் கொண்டே, அந்தக் காங்கிரஸ் ஆட்சியின் கொள்கைகளை எதிர்க்க எம்முடன் வா என்று நம்மீது வீண்பழி சுமத்தியவர்கள், சுமத்திக் கொண்டிருப்பவர்கள் அழைத்தால்; அது எத்துணை விபரீதமான வேடிக்கையானது!

மத்திய மாநில அரசுகளை எதிர்த்து நடத்தும் கூட்டுப் போராட்டத்திற்கு தி.மு.க.வையும் அழைக்க மார்க்சிஸ்டு கட்சித் தலைவர்கள் அண்மையில் என்னையும் பேராசிரியரையும் சந்தித்துப் பேசினார்கள்.

எங்களுக்கும் காங்கிரசுக்கும் இரகசிய ஒப்பந்தம் என்று நேற்று வரையில் கூறிக் கொண்டிருக்கிறீர்கள். இன்னமும் அந்தக் கருத்து மார்க்சிஸ்டு கட்சிக்கு அப்படியே இருப்பதாக சொல்லி வருகிறீர்கள்; இந்த நிலையில் நாங்கள் எப்படி உங்களுடன் கூட்டுப் போராட்டத்தில் அணி வகுக்க முடியும்? என்று கேட்டோம்; பதில் இல்லை! கூட்டுப் போராட்ட அணியில் ம.தி.மு.க. இருந்தால் அந்த அணியில் தி.மு.க. இடம் பெற இயலாத நிலையையும் விளக்கினோம். செயற்குழுவில் கலந்து பேசிவிட்டு மீண்டும் சந்திக்கிறோம் எனக் கூறிச் சென்றார்கள்.

பிறகு, அவர்கள் நிலையில் எந்த மாற்றமும் இல்லை என்பதைக் கோடிட்டுக் காட்டுவது போல அவர்களது கட்சியின் அறிக்கை வெளி வந்தது. கூட்டுப்போராட்டத்துக்கான அழைப்பும் கழகத்திற்கு வந்தது. அதற்குக் கழக சார்பில் பொதுச் செயலாளர் எழுதியுள்ள பதில் விபரங்களை நீ அறிந்தே இருக்கிறாய்! பங்காளிச் சண்டைக்காக பொதுப் பிரச்சினையில் கூட்டுப் போராட்டத்துக்கு வராமல் தட்டிக் கழிப்பதா என்று கேட்கிறார்கள்.

இந்திய கம்யூனிஸ்டு கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி என்று இரு கட்சிகள் பிரிந்தது வரலாறு! இப்போது மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சி என ஒரு கம்யூனிஸ்டு கட்சி இருக்கிறது! இந்திய ஐக்கிய கம்யூனிஸ்டு கட்சி என ஒரு கம்யூனிஸ்டு கட்சி இருக்கிறது; அதன் நாடாளுமன்ற உறுப்பினராக நண்பர் தா. பாண்டியன் இருக்கிறார்! மறைந்த தோழர் எஸ்.எ. டாங்கே தலைமையில்கூட ஒரு கம்யூனிஸ்ட் கட்சி இயங்கியது!

கேரளத்தில் மார்க்சிஸ்ட் கட்சியிலிருந்து அக்கட்சியின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரான கௌரியம்மாள் அக்கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டு; தனி இயக்கம் நடத்துகிறார்! இதற்கெல்லாம் மார்க்சிஸ்ட் பாஷையில் பங்காளிக் கட்சிகள் என்று பெயர்களோ என்னவோ எனக்குத் தெரியாது!

தி.மு.க. அணியில் முஸ்லிம் லீக் இருந்தாலோ - இப்போது இந்திய தேசிய லீக் இருந்தாலோ - இன்னும் சில இயக்கங்கள் இருந்தாலோ அந்த அணியின் பொதுப் பிரச்சினைகளுக்கான கூட்டங்களில் கலந்து கொள்ள மாட்டோம் என்று கூறுகிற உரிமை மார்க்சிஸ்டுகளுக்கு உண்டாம்!

ம.தி.மு.க. இருக்கும் அணியின் கூட்டுப் போராட்டத்தில் தி.மு.க. கலந்து கொள்ள இயலாது என்று கூறினால்; அதற்குக் கேலியும் கிண்டலுமாம்! அந்தக் கேலி கிண்டலோடுதான் நரசிம்மராவின் பொருளாதாரக் கொள்கைகளையும் - மேற்கு வங்க அரசின் பொருளாதாரக் கொள்கைகளையும் சமப்படுத்தி மார்க்சிஸ்ட் கட்சி பாதை மாறிவிட்டதாக முரசொலி கதை கட்டுகிறது என்கிறார்கள்!

நாம் கிடக்கிறோம்; சாதாரணமானவர்கள்!

இதோ; மத்திய அரசின் நிதி அமைச்சர் மன்மோகன் சிங் டெல்லியில் பேசியதாக ஆங்கில ஏடுகள் பெரிய அளவில் செய்தி வெளியிட்டுள்ளனவே; அதற்கு என்ன கண்டனம் தெரிவிக்கப் போகிறது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி?

Economic matters were no longer contentious issues. "The BJP may be making some small noises about consumer goods imports, but look at the West Bengal industrial policy announced recently. It is nothing but the agenda we put forward some three and half years ago.

உலகப் பொருளாதார அமைப்பின் இந்தியக் குழு கூட்டத்தில்தான் நிதி அமைச்சர் மன்மோகன் சிங் இவ்வாறு பேசியுள்ளார். அதாவது இதன் தமிழாக்கம் வருமாறு :-

> பொருளாதாரத்தைப் பற்றியவை நீண்ட காலப் பிரச்சினைகளாக இருக்கவில்லை. நுகர்வோர் பொருள் இறக்குமதி குறித்து பாரதீய ஜனதா கட்சி, ஏதோ முணு முணுத்துக் கொண்டுள்ளது. ஆனால் மேற்கு வங்கத்தைப் பாருங்கள். சமீபத்தில் அதன் பொருளாதாரக் கொள்கை

வெளியிடப்பட்டுள்ளது. மூன்றரை ஆண்டுகளுக்கு முன்பு நமது அரசு வெளியிட்டுள்ள அதே திட்டங்கள்தான் அவை!

உடன்பிறப்பே,

இப்படிச் சொல்லியிருப்பவர் மத்திய அரசின் நிதி அமைச்சர் பொறுப்பிலே இருப்பவர். பொறுப்பற்ற முறையில் ஒரு மாநில அரசைப்பற்றி; அதுவும் மார்க்சிஸ்டுகள் மணியெனப் போற்றும் பொருளாதாரக் கொள்கை பற்றி; அக்கொள்கையும் மத்திய காங்கிரஸ் ஆட்சியின் புதிய பொருளாதாரக் கொள்கையின் வார்ப்படம்தான் என்று சொல்லியுள்ளார்.

அவர் வாயடைக்கும் பதிலை மேற்கு வங்க அரசு வழங்க வேண்டும்! வழங்குமென எதிர்பார்க்கிறேன்!

அதை விடுத்து முரசொலியின் மீதோ, கழகத்தின் மீதோ முட்டி மோதுவதில் பலனில்லை!

அன்புள்ள,

மு. கருணாநிதி

23-11-1994

2205. "வராகவதார" வக்கிரம்!

உடன்பிறப்பே,

நல்ல கட்டிளங்காளை! நடந்து செல்வதோ கடை வீதி! எதிரில் வருவோர் வியக்கின்றனர்; அவன் கம்பீர நடை கண்டு! முறுக்கி விடப்பட்ட மீசை கண்டு! கடைகளில் வியாபாரம் பரபரப்பாக நடந்து கொண்டிருக்கிறது. திருவிழாநாள் போலும்; அதனால் பல வண்ணப் புத்தாடை பூண்டு ஆடவர் மகளிர் அழகு தமிழ் மழலையர் கூட்டம் கூட்டமாக, மிகுந்த குதூகலத்துடன்; கடைவீதிக்கே ஒரு தனிக்களையை வழங்கிக்கொண்டிருக்கின்றனர்.

திடீரென ஒரு கூச்சல்! 'அய்யோ, அப்பா, அம்மா, குழந்தை எங்கே? ஓடுங்க! ஓடுங்க...! யானை! யானை! அய்யோ மதம் பிடித்த யானை...!' அந்த ஒலியோடு கடைகள் மூடப்படும் ஒலி; கதவுகள் வீடுகளில் அடைக்கப்படும் ஒலி!

ஆனால் அந்த இளங்காளை மட்டும் அப்படியே அசையாமல் நின்றான் - மதம் பிடித்த யானை; மழலைகளில் ஒன்றைத் தன் துதிக்கையில் வாரிச் சுருட்டியதைக் கண்டு திடுக்கிட்டான். அக்குழந்தையின் தாய், 'அய்யோ, கடவுளே! என் குழந்தை! என் குழந்தை!' என்று கதறினாள். அதற்குள் இளங்காளை, மதயானையின் மீது பாய்ந்து விட்டான்! அதன் துதிக்கையைப் பலங்கொண்ட மட்டும் வளைத்துத் திருகி, அதேசமயம் குழந்தையையும் அந்த யானை தரையின்மீது மோதவிடாமல் பாதுகாத்து மீட்டுக் கொடுத்தான். தாயின் நன்றியை ஏற்றுக்கொள்ளக்கூட நேரமின்றி; அந்த இளங்காளை, இரும்புக் கடையொன்றின் வாயிற்புறத்தில் கிடந்த ஈட்டியொன்றைக் கையில் எடுத்துக் கொண்டான். வலிவு முழுவதையும் கரங்களில் வரவழைத்துக் கொண்டு அந்த ஈட்டியை மதயானையின் மீது பிரயோகித்தான். யானை அடங்கிற்று. அதற்குள் பின்னால்

ஓடிவந்து கொண்டிருந்த யானைப்பாகன், இளைஞனைக் கட்டித்தழுவி வாழ்த்துக்கூறி, அடங்கிய யானையை இழுத்துச் சென்றான்.

இளங்காளை, வீதியில் தனது நடையை தொடர்ந்தான். அப்போது ஒரு பன்றி உறுமிக் கொண்டு அவன்மீது உரசிட வந்தது. இளைஞன், சிறிது பின்வாங்கி; ஒதுங்கி ஓடி, வீதியின் ஓரமாகச் செல்லத் தொடங்கினான். உடனே பன்றி வாய்விட்டுச் சிரித்தது. பேசவும் செய்தது. 'அடே சின்னப்பையா! என்னைக் கேவலம் யானை என்று நினைத்தாயா? யானையை நீ அடக்கிவிடலாம்! யானையை விடப் பலம் வாய்ந்தவன் நான் என்றுதானே என்னைக் கண்டு பயந்தோடுகிறாய்; ஓடு! ஓடு!' எனக்கூறி, கடகடவென எகத்தாளமாக சிரித்தது. அவன் எண்ணிக்கொண்டான்; 'மலந்தின்னும் பன்றிக்கு அஞ்சி ஒதுங்கினேன் - அதனால் இந்த மடப்பிராணி; தன்னை மதயானையைவிடப் பலம் வாய்ந்தவன் என்று நினைத்துக்கொண்டு உளறுகிறது' என்பதாக!

உடன்பிறப்பே; பன்றியைக் கண்டால் அஞ்சி ஒதுங்கத்தான் வேண்டியிருக்கிறது. அதையும் மீறி அந்தப் பிராணி நம்மீது உரசி விடும்போது உதைத்துத் தள்ளாமலும் இருக்க முடிவதில்லை!

சரி; அதைவிடுத்து விஷயத்துக்கு வருகிறேன் இப்போது! எஸ்.டி. சோமசுந்தரம் என்று ஒரு அமைச்சர் இருக்கிறாரே; அவர் பாவம் - நல்ல மனிதர்தான்! அ.தி.மு.க.வில் ஜெயலலிதாவை எதிர்த்து வெளியேறி; எம்.ஜி.ஆர். மீது நூறு குற்றச்சாட்டுக்களை எழுதி, அந்த மனுவை ஊர்வலமாகச் சென்று கவர்னரிடம் கொடுத்தவர்!

அந்தக் குற்றச்சாட்டுகள் எப்படிப்பட்டவை என்றால்; சேஷன் எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றி எழுதியதை விட ஆயிரம் மடங்கு பயங்கரமானவை!

ஜெயலலிதா, சேலம் கண்ணனுக்கு எழுதிய கடிதத்தில் எம்.ஜி.ஆரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளதை விட நூறு மடங்கு மோசமானவை!

அவ்வளவு துணிச்சல்காரர் - புரட்சிக்காரர் - அவருடன் வாதிடுவது என்பது; அவரை எதிர்ப்பது என்பது; கடைவீதியில் இளைஞன் ஒருவன் மதங்கொண்ட களிறு ஒன்றை எதிர்த்தானே அதைப் போன்றது!

ஆனால் அந்த மதங்கொண்ட யானையின் பெயரால் இன்றைக்கு வருகின்ற அறிக்கைகள்; எல்லாம்; அவர் எழுதியதல்ல - மேலிடத்தில் யாரோ எழுதி, அவருக்கே தெரியாமல் வெளிவருகின்ற அறிக்கைகள் எல்லாம் - யானையைச் சந்தித்த இளங்காளை; அடுத்து ஒரு பிராணியைச் சந்திக்க நேர்ந்ததே; அதைப் போன்றே இருக்கின்றன!

உரச வருகிறதே பன்றியென ஒதுங்கினான் இளங்காளை! ஆனால் பன்றி உரசித்தான் தீருவேன் என வந்து மோதியபோது உதைத்துத் தள்ளினான் அந்த இளைஞன்!

எஸ்.டி.எஸ். எழுதாமல்; அவருக்கே தெரியாமல் அவர் பெயரால் எழுதி வெளியிடப்படும் அந்த அறிக்கைகளை பன்றி என இழிவாகக் குறிப்பிட மனமின்றி வராகவதாரம் எனக் கௌரவமாகவே குறிப்பிட விரும்புகிறேன்.

> “கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது சட்டநாதன் தலைமையில் அமைக்கப்பட்ட பிற்பட்டோர் நலக்குழு 33 சதவிகிதம் பிற்பட்டோருக்கு வழங்க வேண்டும் என்று பரிந்துரை செய்தது. ஆனால் அந்த பரிந்துரையை ஏற்க மறுத்து 31 சதவிகிதமாக குறைத்து நிர்ணயித்தது ஏன்? அப்போது நடைமுறையில் ஆதிதிராவிடர்களுக்கு இருந்த 18 சதவிகிதத்துடன் ஒட்டுமொத்த இடஒதுக்கீடு 50 சதவிகிதத்தை தாண்டிவிடக்கூடாது என்று பயந்துதானே? 33 சதவிகிதத்தை ஏற்க மறுத்தது அன்றைய அரசு.
>
> இப்படியொரு அறிக்கை; ஆம், வராகவதார அறிக்கை!”

உடன்பிறப்பே, தமிழ்நாட்டில் முதன்முதலாகப் பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு அமைத்தது நான்தான்! பிற்பட்டோருக்கு 33 சதவீதம் வழங்க வேண்டுமென அக்குழு பரிந்துரை செய்ததும் உண்மைதான்! ஆனால் இங்கேதான் வராகவதார அறிக்கையில் ஒரு வக்கிரம் குறுக்கிடுகிறது. அதனால்தான் இந்த அறிக்கையை எஸ்.டி.எஸ். எழுதியிருக்க மாட்டார் என்கிறேன். பிற்பட்டோர் நலக்குழு அமைத்தபோது பிற்பட்டோருக்கு 25 சதவிகிதமும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்க்கு 16 சதவிகிதமும்தான் இடஒதுக்கீடு இருந்தது என்பது நண்பர் எஸ்.டி.எஸ். அவர்களுக்கு தெரியும். அதனால் அப்போதே ஆதிதிராவிடர்க்கு 18 சதவீதம் இருந்ததாக அமைச்சர்

பெயரால் யாரோ ஒரு அரைவேக்காடு வெளியிட்ட வராகவதார அறிக்கை கூறுகிறது! ஆனால் நடந்தது என்ன அப்போது?

33 சதவீதம் பிற்பட்டோருக்கான குழு பரிந்துரை செய்தபோது - ஆதி திராவிடர்க்கு 16 சதவீதமாக இருப்பதை 18 ஆக உயர்த்த வேண்டுமென்ற எண்ணத்துடன்; பிற்பட்டோர்க்கு 31 என்றும், ஆதிதிராவிடர்க்கு 18 சதவீதம் என்றும் நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் அரைவேக்காடுகளின் வராகவதார அறிக்கையில்; ஆதிதிராவிடர்க்கு 16 என்று இருந்ததை 18 ஆக உயர்த்தப்பட்டது என்பதை மறைத்து விட்டிருக்கிறார்கள். அதனால்தான் சொல்லுகிறேன் இது எஸ்.டி.எஸ். எழுதிய அறிக்கை இல்லையென்று!

ஏற்கனவே பிற்படுத்தப்பட்டோர் 25 சதவீதம் ஆதி திராவிடர் 16 சதவீதம் என்றிருந்ததை, கழக ஆட்சியில் முறையே 31 சதவீதம் 18 சதவீதம் என அமைக்கப்பட்டது.

ஒருவேளை அ.தி.மு.க. ஆட்சியாளர்க்கு ஆதி திராவிடர்க்கு இரண்டு சதவீதம் அதிகமாக்கியது பிடிக்கவில்லை போலும்; அதனால்தான் திரும்பத் திரும்ப அதையே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து எம்.ஜி.ஆர். ஆட்சியில் இடஒதுக்கீட்டில் உச்சவரம்பு என்ற பொருளாதார அடிப்படை வந்தது. அந்த ஆணையை எதிர்த்து தி.மு.க. தி.க. உள்ளிட்ட மற்ற கட்சிகளில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் பிரிவுகள் அனைத்தும் பெருங்கிளர்ச்சி நடத்திய பிறகு எம்.ஜி.ஆர். தனது ஆணையைத் திரும்பப் பெற்றுக்கொண்டதுடன்; பிற்படுத்தப்பட்டோருக்கு 50 சதவீதமென்று உயர்த்தினார். ஏற்கனவே கழக ஆட்சியில் உயர்த்தி அமைக்கப்பட்ட 18 சதவீதம் ஆதிதிராவிடர்க்கு என்பது அப்படியே தொடர்ந்தது.

மீண்டும் கழக ஆட்சி 1989ல் வந்தவுடன்; பிற்படுத்தப் பட்டோருக்கு 30 சதவீதம், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 சதவீதம் ஆதிதிராவிடர்க்கு 18 சதவீதம், மலைவாழ் மக்களுக்கு 1 சதவீதம் என ஆணை பிறப்பித்து மொத்த இடஒதுக்கீடு 69 சதவீதமாக அமைக்கப்பட்டது.

இத்தனை உண்மைகளையும்; நீதிகட்சி காலத்தில் இடஒதுக்கீடு தொடங்கிய போதும், பின்னர் காங்கிரஸ் ஆட்சிக்

காலத்திலும், பின்னர் கழக ஆட்சிக்காலத்திலும், பின்னர் எம்.ஜி.ஆரின் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலும் படிப்படியாக வளர்ந்து 69 சதவீதமென அமைந்துள்ள இந்த சமூகநீதியின் வரலாற்றையும் மறந்துவிட்டு - ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஜெயலலிதா அரசு செய்துவிட்ட துரோகத்தை மறைப்பதற்காக; சல்லாத் துணிகட்டுவதுபோல, வராகவதார அறிக்கைகள் அமைச்சர்கள் பெயரால், அவர்களுக்கே தெரியாமல்; தம்மை அறிவு ஜீவிகள் என்று எண்ணித் திரியும் சிலரால் வெளிவரும் போது; உரச வரும் பிராணியை உதைத்துத் தள்ளும் நிர்பந்தம்; யானையை அடக்கிடும் வலிமைகொண்ட இளைஞனுக்கு ஏற்படுவதுபோல; நமது கழகத்திற்கும் ஏற்படுகிறதல்லவா - அதனால்தான் இந்தக் கடிதம்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

28-11-1994

2206. அறிவுடன் செயல்படுமா? அல்லது ஆணவத்துடனா?

உடன்பிறப்பே,

நவம்பர் 29ஆம் நாள் முதல் வணிகர்கள் நடத்த இருக்கும் மூன்று நாட்கள் கடையடைப்புப் போராட்டம் குறித்து தொடக்க காலத்திலிருந்தே தி.மு.கழகம் தனது ஆதரவை வெளிப்படுத்தி அறிவித்துள்ளது.

நவம்பர் 23ஆம் நாள் திருச்சியில் செய்தியாளர்கள் கூட்டத்திலும் வணிகர்களின் அறவழிப்போருக்கான ஆதரவைத் தி.மு.க. அளிக்கும் என்றே கூறியிருந்தேன்.

எதிர்க்கட்சிகள் சார்பில் எந்தவொரு போராட்டத்தை ஆதரித்துப் பேசினாலோ, எழுதினாலோ, அந்தப் போராட்டம் யாரால் எத்தகைய நியாயமான கோரிக்கைகளுக்காக நடத்தப்படுகிறது என்பதைப்பற்றி சிந்தித்துப் பார்க்காமலேயே; எந்தப் பிரிவு மக்கள் நடத்துகிற போராட்டமாயினும் அதன் நியாயத்தை உணர்ந்து எதிர்க்கட்சிகள் ஆதரிப்பதை உடனடியாக திசை திருப்பி; அரசியல் ஆதாயம் தேடுவதற்காக தூண்டி விடப்பட்ட போராட்டம் என்றும், ஆதரிக்கப்படுகிற போராட்டமென்றும் பன்னிப்பன்னிக் கூறிக் கொண்டு காலம் கடத்துவதே இன்றைய ஆட்சியாளரின் நிலையாக ஆகிவிட்டிருக்கிறது.

இவ்வாறு ஆட்சியாளர்கள் பொறுப்பற்றுப் பேசுகிறார்கள் நடக்கிறார்கள் என்பதற்காக; ஏழை எளிய நடுத்தர வர்க்கத்தினர், தொழிலாளர் வர்க்கத்தினர், விவசாயிகள், நெசவாளர்கள், வணிகர்கள் எனப்படும் பல்வேறு பிரிவு மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, அவர்களது வாழ்விலும் தாழ்விலும் அவர்களுடன் இணைந்தே இருக்கும் தி.மு.கழகம் நியாயங்களுக்காகப் போராடுகிறவர்களுக்கு எதிராக இந்த அரசு

எடுக்கும் அடக்குமுறை நடவடிக்கைகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது! வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது!

வணிகர்கள் சார்பில் சென்னையிலும், சேலம் போன்ற இடங்களிலும் என்னைப் பலர் வந்து சந்தித்து, ஆட்சியாளர்களுக்கும் அவர்களுக்குமிடையே நடக்கும் பேச்சுவார்த்தைகள் பற்றி விளக்கிய போதெல்லாம்; நான் அவர்களிடம் எப்படியாவது பிரச்சினைகளை சுமுகமாகப் பேசித் தீர்த்துக் கொள்ளுங்கள் என்றுதான் கூறியிருக்கிறேன்.

அவர்களும் பாவம்; அரசினருடன் பலமுறை பேசிப் பார்த்தனர். அரசு அவ்வப்போது அளித்த உறுதிமொழிகள் எதுவும் நடைமுறைக்கு வந்தபாடில்லை. எந்தவொரு கோரிக்கையை நிறைவேற்றவும், சலுகை அளிக்கவும், ஏற்றிய வரியைக் குறைக்கவும் - பெருந்தொகையைக் கப்பமாகக் கட்ட வேண்டுமெனக் கிட்டி கட்டும் பெருமக்கள்; அந்தக் கப்பத்தைக் கட்ட மறுத்திடும் வணிகப் பெருமக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க எப்படி ஆர்வம் கொள்வார்கள்.

மூன்று நாட்களோ அல்லது எத்தனை நாட்களோ கடைகளை அடைத்து வைத்துத் தாங்களும் பெரும் இழப்புக்கு ஆளாகி, பொது மக்களையும் சங்கடத்திற்கு ஆளாக்க வேண்டுமென்று எந்தவொரு வணிகப்பெருமகனும் எண்ணிடத் துணிய மாட்டார்! ஆனாலும் தூங்குபவனைத் தட்டி எழுப்பலாம்; தூங்குபவனைப் போல நடிப்பவனை அடித்துத்தான் எழுப்ப வேண்டும் என்பதுபோல; ஒரு முறைக்கு ஒன்பது முறை தட்டித்தட்டி எழுப்பிப் பார்த்துவிட்டு; வேறு வழியின்றி இறுதியாகத்தான் வணிகர்கள் இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

அவர்களுடைய கோரிக்கைகள் என்ன என்பதை விரிவாகப் பொதுமக்களுக்கும் அரசுக்கும் அறிவித்திருக்கிறார்கள். அவை வருமாறு :-

புதிய தொழில் வரியை ரத்து செய்ய வேண்டும். தமிழ்நாட்டில் டீக்கடைகள், பெட்டிக்கடைகள், ஓட்டல்கள், ஜவுளி நிறுவனங்கள் உள்ளன. அனைத்திற்குமே தொழில் வரியாக 6 மாதங்களுக்கு ரூ. 12,625, ரூ. 30,050, வரைதான் வசூலிக்கப்பட்டு வந்தன. ஆனால் தற்போது தமிழக அரசின் புதிய

தொழில் வரிப்படி வியாபாரத்தில் கைமாறும் மொத்தப் பணத்தின் அடிப்படையிலும் டெய்லரிங், சலூன்களில் வேலை செய்யும் ஆட்களுக்கு ஏற்பவும் ஒழுங்கின்றி வரி விதிக்கப்படுகிறது. இதனால் 10 மடங்கு வரை கூடுதல் வரி வசூலிக்கப்படுகிறது.

ஆனால் அரசு ஊழியர்கள் ரூ. 1,500 சம்பளம் பெறுபவர்களுக்கு தொழில் வரி விலக்கு அளிக்கப்பட்டு உள்ளது. தொழில் வரி மூலம் அரசுக்கு ரூ. 39 கோடி வருமானம் கிடைக்கும் என்று அரசு தெரிவித்தாலும் உண்மையில் தமிழ்நாடு முழுவதும் 12 லட்சம் கடைகளில் இருந்து தொழில் வரி மூலம் ரூ. 500 கோடி வரை கிடைக்கும். தொழில் வரி வசூலிப்பதில் மாநகராட்சி, பேரூராட்சி அதிகாரிகளுக்கு முழு சுதந்திரம் கொடுத்து இருப்பதால் வியாபார ஸ்தலங்களில் அதிகாரிகளின் கெடுபிடி அதிகமாகிறது. லஞ்சம் தலைவிரித்தாடுகிறது. தவிர அரசுக்குக் கிடைக்கும் வருமானத்தைவிட அதிகாரிகளுக்கே இதனால் அதிக லாபம். எனவே அரசு புதிய தொழில் வரியை மாற்றி அமைக்க வேண்டும்.

முன்னை விட கொஞ்சம் கூடுதலாய் வசூலித்தால் வணிகர் சங்கமே பொறுப்பேற்று தொழில் வரியை வசூலித்துக் கொடுக்கத் தயார்.

கடந்த 1.10.93ந் தேதி முதல் தமிழகத்தில் சொத்து வரி கடுமையாக உயர்த்தப்பட்டு உள்ளது, 3 மடங்கில் இருந்து 5 மடங்கு வரை அதாவது அந்தந்த நகராட்சி, பேரூராட்சிகளுக்கு ஏற்ப சொத்து வரி உயர்த்தப்பட்டு உள்ளது. இதனால் கடை வாடகை மற்றும் வீட்டு வாடகை கடுமையாக உயரும். எனவே சொத்து வரி உயர்வை ரத்து செய்யவேண்டும்.

ஒரு பொருளுக்கு உற்பத்தியாளர் ஒரு வரி கட்டுவார். அதை வாங்கி விற்பவரும் இன்னொரு முறை வரி கட்டுவார். ஒரே பொருளுக்கு உற்பத்தியாளரும், விற்பனையாளரும் செலுத்துவதே இருமுனை வரி. தமிழக அரசு மரக்கட்டைகள், மேசை, நாற்காலிகள், சமையல் எண்ணெய், ஏலக்காய், தட்டுகள்,

எஃகு அலமாரி உள்பட 17 பொருட்களை 6-வது அட்டவணையில் சேர்த்து இருமுனை வரி விதிப்பை அமல்படுத்தியது.

முதன் முதலில் சாராயம், மதுபானம், ஐஸ்கிரீம், ஷாம்பு ஆகியவற்றுக்கு இருமுறை வரிவிதிக்கப்பட்டபோது சாராயத்திற்காக போராடுவதா? என்று சும்மா இருந்துவிட்டோம். அதற்கு எதிர்ப்பு இல்லை என்றவுடன் மீண்டும் 17 பொருட்களுக்கு அரசு தைரியமாக இருமுனைவரி விதித்தது. வியாபாரிகள் எதிர்ப்பை தெரிவிக்கவே பிஸ்கட், சாக்லெட், பான்பராக் உள்பட 6 பொருட்களுக்கு மட்டும் வரி விலக்கு அளித்தது. மீதி 11 பொருட்களுக்கு தொடர்ந்து இருமுனை வரியே வசூலிக்கப்படுகிறது. வியாபாரிகளின் கோரிக்கை எல்லாம் 6-வது அட்டவணையே கூடாது என்பதுதான்.

அழுகும் பொருட்கள், குடிசைத் தொழில்கள் என்று கருதி தேங்காய் பட்டை, நார், துகள், அப்பளம், ஊறுகாய், துடைப்பம், தீப்பெட்டி, மாவு, மாட்டுத் தீவனம் உள்பட 300 பொருட்களுக்கு விற்பனை வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டு இருந்தது. ஆனால் இன்றைய அரசு மீண்டும் இப்பொருட்களுக்கு விற்பனை வரி விதித்து உள்ளது. இதனால் குடிசைத் தொழில்கள் பாதிக்கும். வேலையில்லாத் திண்டாட்டம் பெருகும் என்று வணிகர்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் 15 பொருட்களுக்கு மட்டும் வரியை நீக்கிவிட்டு மீதி 285 பொருட்களுக்கு மீண்டும் விதித்த வரியை அப்படியேவிட்டுவிட்டார்கள். எனவே ஏற்கனவே வரி விலக்கு பெற்று இருந்த பொருட்களுக்கு போடப்பட்ட விற்பனை வரியை ரத்து செய்யவேண்டும்.

1993-ம் ஆண்டு அடகு பிடிப்போர் சட்ட திருத்தத்தின்படி அடகு பிடிப்போரை போலீசார், முன் அறிவிப்பின்றி எந்த நேரம் வேண்டுமானாலும் வாரண்ட் இல்லாமல் கைது செய்யலாம். இது ஒரு வணிகரின் அடிப்படை உரிமையை பறிக்கிறது. இதனால் வேளை கெட்ட வேளையில் போலீசார் அடகு பிடிப்பவரை மிரட்டுகிறார்கள். மேலும் அடகு பிடிப்பவர் உரிமம் பெற கட்டணம்

ரூ. 200ல் இருந்து ரூ. 500 ஆக உயர்த்தப்பட்டு உள்ளது. காப்புத் தொகையும் ரூ. 500-ல் இருந்து ரூ. 1,000 ஆக உயர்த்தப்பட்டு உள்ளது. எனவே அடகு பிடிப்போரை குற்றவாளியாக்கும் விதிமுறைகள் நீக்கப்படவேண்டும்.

டீக்கடை, பெட்டிக் கடைகளுக்கு போலீஸ் உரிமம் பெறவேண்டும் என்று நாம் சுதந்திரம் அடைவதற்கு முன்பு அதாவது 1933-ஆம் ஆண்டு சட்டம் இயற்றப்பட்டது. இதற்கு காரணம் பெட்டிக்கடை, டீக்கடை, டீக்கடைகளில் ஆட்கள் கூடிப்பேசி சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள் என்று நினைத்து வெள்ளை அரசாங்கம் இந்த உத்தரவை போட்டது.

சுதந்திரம் பெற்று 47 ஆண்டுகள் ஆன பின்னரும் இதே சட்டம் நீடித்து இருக்கிறது. இதில் மிகுந்த வேடிக்கைக்கு உரியது என்னவென்றால் பெட்டிக் கடைக்காரர்கள் உரிமை பெற கட்டணம் ரூ. 42. ஆனால் அதற்கான விண்ணப்ப படிவத்தில் விலை ரூ. 50. இதை என்ன சொல்வது, எனவே பெட்டிக்கடை, டீக்கடைக்காரர்கள் போலீஸ் உரிமம் பெறவேண்டும் என்ற சட்டத்தை ரத்து செய்ய வேண்டும்.

தண்ணீர் வரியும் தாறுமாறாக உயர்த்தப்பட்டு உள்ளது. வீடுகளுக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 12-ம், கடைகளுக்கு ரூ. 60ம் வசூலிக்கப்பட்டு வந்தது. தற்போது வீடுகளுக்கு ரூ. 60 ஆகவும், கடைகளுக்கு ரூ. 180 ஆகவும் தண்ணீர் வரி 3 மடங்கு உயர்த்தப்பட்டு உள்ளது. இதை ரத்து செய்ய வேண்டும்.

மோட்டார் மெக்கானிக்குகள், இரும்பு வியாபாரிகள் போலீசாரிடம் அனுமதி பெற வேண்டும். இதனால் போலீசார் இரும்புக் கடைக்குள் அத்துமீறி நுழைந்து சரக்குகளை அள்ளுகிறார்கள். இப்படி சேலத்தில் 2 கடைகளை போலீசாரே சீல் வைத்துவிட்டனர். எனவே அரசு இந்த சட்டத்தை வாபஸ் பெறவேண்டும்.

தமிழ்நாட்டில் சில்லறை மற்றும் மொத்த அரிசி வியாபாரிகள் அந்தந்த வட்டார சிவில் சப்ளை அதிகாரிகளிடம் அனுமதி பெற்றே விற்பனை

செய்கின்றனர். அரிசி விற்க அனுமதி பெற சில்லறை வியாபாரிகளுக்கு காப்புத்தொகை ரூ. 500-ல் இருந்து ரூ. 1,500 ஆக உயர்த்தப்பட்டு உள்ளது. மொத்த வியாபாரிகளுக்கு காப்புத்தொகை ரூ. 1,500-ல் இருந்து ரூ. 6,000 ஆக உயர்த்தப்பட்டு உள்ளது. சிறிய வியாபாரி ரூ. 1,000த்தை முதலீடாக கொண்டுதான் தொழிலையே ஆரம்பிப்பார். இனி அவரால் எப்படி தொழில் தொடங்க முடியும். இதனால் சிறு வியாபாரிகள் கடுமையான பாதிப்பிற்கு உள்ளாவார்கள்.

மின் கட்டண உயர்வையும் ரத்து செய்ய வேண்டும். வீடுகளில் அலங்கார விளக்குகள் பொருத்தப்பட்டு இருந்தால் ஒரு யூனிட்டிற்கு ரூ. 1-ம் கடையாக இருந்தால் ரூ. 3-ம் மின் கட்டணமாக வசூலிக்கப்படுவதை தவிர்க்கவேண்டும்.

இரண்டு ஆண்டிற்கு ஒரு முறைதான் எடை அளவு முத்திரைகள் வைக்க வேண்டும்.

தொழிலாளர் நலச் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

கூடுதல் விற்பனை வரியை ரத்து செய்யவேண்டும்.

பதிவு பெறாத டிரேட் மார்க் சரக்குகளுக்கு வரிச்சலுகை அளிக்க வேண்டும்.

விற்பனை வரி விலக்கு வரம்பை ரூ. 5 லட்சமாக உயர்த்தவேண்டும்.

தமிழக அரசு குப்பை வரி ஒன்றை விதித்து இருக்கிறது. அதாவது ஓட்டலில் சாப்பிட்டு விட்டு தூக்கி எறியும் இலைகள் குப்பைகள் கணக்கில் வந்துவிடுகிறது. குப்பைகளை அகற்ற மாநகராட்சி சிரமப்படுகிறது. எனவே இந்த இலைகளின் கணக்கிற்கேற்ப அல்லது ஓட்டல்களில் சாப்பிடும் நபர்களுக்கேற்ப ஒரு இலைக்கு 5 பைசா குப்பை வரி விதிக்கப்படுகிறது. இதை நீக்க வேண்டும்.

கேபிள் டிவி மீதான கேளிக்கை வரியை ரத்து செய்யவேண்டும்.

மே 5-ந் தேதி வணிகர் தினத்தை பொது விடுமுறையாக அறிவிக்க வேண்டும்.

அயோடின் கலந்த உப்புதான் விற்க வேண்டும் என்ற ஆணையை திரும்பப் பெற வேண்டும்.

இவைகள்தான் வணிகப் பெருமக்களின் கோரிக்கைகளாகும்.

இந்த 27 கோரிக்கைகளில் எல்லாவற்றையும் நிறைவேற்ற இயலாவிடினும் பெரும்பான்மையான கோரிக்கைகள் நிறைவேற்றப்படக் கூடியவைகள்தான் என்பதை முதலமைச்சராக மட்டுமின்றி, நிதித்துறைப் பொறுப்பையும் ஏற்றிருந்தவன் என்ற முறையில் நான் நன்றாகவே அறிவேன்.

ஆனால் இந்தக் கோரிக்கைகளுக்காக; எத்தனை முறை ஜெயலலிதாவின் அரசுடன் பேசி, வணிகர்கள் ஏமாற்றத்துக்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்பதையும் அலட்சியப்படுத்தி விடுவதற்கில்லை.

இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி 1992-ம் ஆண்டு நவம்பர் மாதம் வணிகர்கள் மாநிலம் தழுவிய உண்ணாவிரதம் இருந்தனர். 17.11.92-ந் தேதி கடையடைப்பு செய்தனர். 19.2.93-ந் தேதி கடையடைப்பு மற்றும் சென்னையில் மாநாடு நடத்தப்பட்டது. கடந்த 5.5.94-ந் தேதி கடையடைப்பு மற்றும் பேரணி நடத்தப்பட்டது. அப்போது வணிகர்கள் சார்பில் மயிலாப்பூர் இடைத் தேர்தலை புறக்கணிப்பது, 3 நாட்கள் கடையடைப்பு நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

மயிலாப்பூர் தேர்தல் புறக்கணிப்பு குறித்து வணிகர்கள் துண்டு பிரசுரமும் வெளியிட்டனர். உடனடியாக அரசு அவர்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. அமைச்சர்கள் எஸ்.டி. சோமசுந்தரம், சத்தியமூர்த்தி, நடேசன் பால்ராஜ் ஆகியோர் வணிகப் பிரமுகர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். 'போராட்டத்தை கைவிடுங்கள். தேர்தல் முடிந்த பின்னர் முதல்வரிடம் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினையை சுமுகமாக தீர்க்கலாம்' என்று உறுதி கூறினர். அதன்படி வணிகர்கள் மயிலாப்பூர் தேர்தல் புறக்கணிப்பை கைவிட்டனர்.

தேர்தல் முடிந்த பிறகு அமைச்சர் சத்தியமூர்த்தி தலைமையில் 2-ம் கட்ட பேச்சுவார்த்தை நடந்தது. 300 வணிகர் சங்கத்தைச்

சேர்ந்த 14 பிரதிநிதிகள் 45 நிமிடம் கோட்டையில் பேச்சு வார்த்தை நடத்தினார்கள்.

அப்போது ஜெயலலிதா வணிகர்களிடம் அரசுக்கு ஒத்துழைப்பு தரும்படியும், அவர்களின் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படும் என்றும் தெரிவித்தார். ஆனால் ஏதோ ஒப்புக்கு சில கோரிக்கைகளை நிறைவேற்றிய அரசு தொழில்வரி, சொத்துவரி விற்பனை வரி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை விட்டுவிட்டது. எனவேதான் வணிகர்கள் மீண்டும் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இத்தனைக்கும் பிறகு கடைசி நிமிடத்திலே கூட வணிகர்களின் கோரிக்கையை நடைமுறைப்படுத்தும் ஆணையைப் பிறப்பித்துவிட்டு; 29-ந் தேதியன்று கடையடைப்புப் போராட்டத்தைத் தவிர்க்கக் கூடிய நல்ல முடிவு எடுப்பது, இந்த அரசின் கையிலேதான் இருக்கிறது.

அதைவிடுத்து, வணிகர்களை மிரட்டுவது - வீண்ஜம்ப தர்பார் நடத்தி அவர்களது போர்க்குரல் அடக்க முனைவது - தி.மு.கழகத்தினால் மட்டுமல்ல; மற்றுமுள்ள எந்த எதிர்க்கட்சிகளாலும் பொறுத்துக் கொள்ளக்கூடிய செயலாக இருக்காது என்பதை மட்டும் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு அறிவுடன் செயல்படுமா? அல்லது வழக்கம் போல் ஆணவத்துடனா? பொறுத்திருந்து பார்ப்போம்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

29-11-1994

2207. மதுரை முரசொலி!

உடன்பிறப்பே,

மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று யானை கட்டிப் போரடிக்கும் அழகான தென்மதுரை - காவியுகு நீரும் கையிற் தனிச் சிலம்பும் ஆவிபோன வடிவும் கொண்டு, நீதி கேட்டு நின்ற கற்பரசி கண்ணகியின் குரல் ஒலித்த மதுரை - நெற்றிக்கண்ணனைக் காட்டினும் குற்றம் குற்றமே யென்று நிமிர்ந்து முழக்கிய நக்கீரத் தமிழனின் வீரமொழியொலித்த மதுரை - சிவகெங்கைச் சீமையின் சிங்கக் குட்டிகள் மருதுபாண்டியர் பவனி வந்த மதுரை - தீரன் திருமலையும், ராணிமங்கம்மாளும் திறன்மிகு ஆட்சி நடாத்திய மதுரை - அந்த மதுரையிலிருந்து; நீலத்திரைக் கடலோரத்தில் நித்தம் தவம்புரியும் குமரி முனைக்கும் - வானம் பொழியுது பூமி விளையுது உனக்குக் காணிக்கை ஏதுக்கடா எனக்கேட்டு கயத்தாறு தூக்குக்கயிறில் தொங்கினாலும் தொங்குவேன் - உனக்கு நேரே என் தலையைத் தொங்க விடமாட்டேன் என வெள்ளைக்காரனை எதிர்த்து கர்ச்சித்த வீரபாண்டியக் கட்டபொம்மன் உலவிய நெல்லைப் பகுதிக்கும் - பூமியில் இங்ஙனம் ஓர் எதிர்ப்பையாம் கண்டதில்லையென வெள்ளையர் வியந்து நிற்குமளவுக்கு வீரப்போர்புரிந்த பூலித்தேவன் எனும் புலிப்போத்து வாழ்ந்த பகுதிக்கும் - திருமயம் கோட்டையெனும் திறல் மறவர்கோட்டை அமைந்த புதுக்கோட்டைப் பகுதிக்கும் - வரும் வியாழன் முதல் முரசொலி வருகிறது.

நான் பெற்று வளர்த்து, பாராட்டி சீராட்டி, போராட்டக் களங்களில் முதல் ஒலியாய் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக முழக்கமிட்டு விழுப்புண்கள் பல பட்டும் வீழாமல் படைப்பயணம் நடத்தும் முரசொலியை, சென்னையிலிருந்து வெளியிட்டால் மட்டும் போதாது; மதுரையிலிருந்தும் வெளியிட வேண்டுமென்று உன் போன்ற என் உயிரினும் மேலான உடன்பிறப்புகளும், தமிழ்மொழி ஆர்வலர்களும், தமிழ் இனப்பெருமக்கள்

பெரும்பாலோரும் இட்ட கட்டளையை நிறைவேற்றிடவே, மீண்டும் இந்த முயற்சி!

இந்த முயற்சியில் வெற்றியினை ஈட்டித்தரும் பொறுப்பை, ஒவ்வொரு உடன்பிறப்பும் ஏற்றுக் கொண்டால் - தமிழர் எனப்படுவோர் இதோ நமக்கென ஓர் ஏடு எனத் தன்மான உணர்வுடன் தாங்கி நின்றால்; தடைபடாக் குருதியோட்டத்துடன் முரசொலி; தொடர்ந்து ஒவ்வொரு மண்டலத்திலும் - அதைத் தொடர்ந்து மாவட்டங்களில் தலைநகர்களிலும் இருந்து வெளிவரக்கூடிய ஒளிமயமான எதிர்காலம் ஏற்பட்டே தீரும்!

இந்தக் கால கட்டத்தில் நாளேடுகள் நிரம்பத் தோன்றியுள்ளன - அவற்றில் சில நடுநிலை ஏடுகள் - சில ஏடுகள் தி.மு.க.வுக்கு எதிரான கெடு நிலை ஏடுகள் - ஏன்; தமிழ் இனத்துக்கு, மொழிக்குக்கூட கேடு பயக்கும் ஏடுகள்! நமதியக்கத்தின் தூய்மை உணர்ந்து வாய்மையுடன் நமது செய்திகளை வெளியிடும் ஏடுகளுக்கு வாழ்த்தும் பாராட்டும் எனினும்; தமிழ் மொழி உயர்வுக்கும் - தமிழ் இனப் பெருமைக்கும் - தமிழர் வரலாற்றுச் சிறப்புக்கும் - அரணாக நிற்கும் நமது கழகத்தைப் பற்றிய விமர்சனங்களுக்கும் முழுவிளக்கமும் அளித்திடப் பயன்படும் படைக்கலனாக, கவசமாக, கேடயமாக விளங்குவது காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு என்பது போல முரசொலி ஒன்றுதானே, உடன்பிறப்பே; இருக்கிறது!

1965 ஆம் அண்டு முரசொலி மலர் ஒன்றில் முரசொலி பற்றி அறிஞர் அண்ணா எழுதியது என்ன தெரியுமா?

ஒவ்வொரு நாளும் முரசொலி பரணிபாடுகிறது. அதிலே காணப்படும் திருப்பள்ளி எழுச்சி, தமிழக மாந்தர்களைத் தட்டி எழுப்புகிறது. முரசொலி கேட்டிடும் வினாக்களுக்கு விடை கூற இயலாது ஆதிக்கக்காரர்கள் திணறுகிறார்கள்.

இவ்வாறு அண்ணா அவர்கள் முரசொலியைப் பாராட்டி எழுதியுள்ளவைகள் ஏராளம் - அனைத்தையும் தொகுத்தால் அணையுடைத்தெழும் நீத்தம்போல் என் கண்களில் நீர் பெருகும்.

முரசொலியின் தேவையை முரசொலி இல்லாவிட்டால்தான் உணர முடியும் என்று ஒருமுறை பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கூறியதை ஆழ்ந்து சிந்தித்தால்; முரசொலியை மேலும் பரப்பிட வேண்டிய காரணம் உணர்ந்து செயல்பட முடியும்.

அவ்வாறு தமிழ் மக்களும், உடன்பிறப்புகளும் செயல்படுகிறார்கள் என்பதற்கு வைக்கப்படும் சோதனையாகத்தான்; வியாழன் முதல் மதுரையிலிருந்து முரசொலி வெளியிடப்படுகிறது.

குறி பார்க்கத் தெரியாதவன் கூடை கூடையாக கூரிய அம்புகளையும், விஷக் கணைகளையும் குவித்து வைத்துக் கொண்டு, அவைகட்குத் தங்கமுலாம் பூசி, வைரம் இழைத்து வைத்திருப்பது போன்று எதிரி முகாமின் படைக்கலன்!

நம்மிடமுள்ளதோ ஏழைகளின் படைக்கலன் - கோலார் தங்கம், கோகினூர் வைரம் கொண்டு உருவாக்கப்பட்டவை அல்ல - எனினும் எவ்வளவு தொலைவாயினும், வைத்த குறி தப்பாமல் வென்றெடுக்கக்கூடிய கழகத்தின் கரங்களில் இருப்பவை!

அந்தப் படைக்கலன்களில் ஒன்றே முரசொலி! அந்த முரசொலி; பெரியார் அண்ணா ஆகியோரின் கொள்கை, கோட்பாடு, குறிக்கோள் காத்துப் போற்றிட, களத்தில் எப்போதும் முழங்குகின்ற பேரிகையாக விளங்கும்! இதன் பணிக்கு என் போன்றோர் உழைப்பும் - உன்போன்றோர் ஒத்துழைப்பும்தான் அணிசேர்க்கும்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

30-11-1994

2208. அந்தச் சித்திரம் வரைந்தது யார்?

உடன்பிறப்பே,

கட்டுரை என்ற பெயராலோ, வாழ்க்கைச் சரித்திரம் என்ற பெயராலோ - எழுதும்போது, அவற்றில்; மறைந்த தலைவர்களைப் பற்றிய செய்திகளைக் குறிப்பிடும்போது எந்தவிதமான ஆதாரமும் இன்றி ஏனோதானோ என்ற போக்கில் எவர் செயல்படினும் அதனை ஏற்றுக்கொள்வதற்கில்லை. கருத்து மாறுபாடுகள், கொள்கை மாறுபாடுகள், எத்தனை இருப்பினும் அவைகளைச் சுட்டிக்காட்டும் அதே நேரத்தில், நிகழ்ச்சிகளைக் கோடிட்டுக் காட்டும் அதே நேரத்தில் அவற்றுக்கான ஆதாரங்களை உரிய முறையில் குறிப்பிடுவதே அனைவராலும் ஏற்கத்தக்கதாக இருக்க முடியும்.

அந்த நிலையெடுக்காமல்தான் தேர்தல் கமிஷன் தலைவர் சேஷன் அவர்கள் அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களைப் பற்றித் தனது வாழ்க்கை வரலாற்றில் ஒரு தவறான ஒரு தகவலைத் தந்து; தமிழகத்தின் ஒட்டுமொத்தமான எதிர்ப்புக்குப் பிறகு, அண்ணா பற்றிக் குறிப்பிட்ட அந்தப் பகுதியையே அந்த நூலில் இருந்து அகற்றிவிடுவதாக அறிவிக்க வேண்டியதாயிற்று.

அதே நூலில் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சியின்போது அவரிடம் பணியாற்றிய அதிகாரி சேஷன் அவர்களுக்கும் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் இடையே ஏற்பட்ட நிர்வாகத் தகராறு குறித்து அந்த நூலில் எழுதப்பட்டிருப்பதற்கும் ஜெயலலிதா தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றி முன்னாள் டி.ஜி.பி.யும், எம்.ஜி.ஆர். அவர்களிடம் நெருக்கமாக இருந்து பணியாற்றியவருமான திரு. மோகன்தாஸ் அவர்கள் ஒரு ஆங்கில நூலே எழுதி, அதன் மொழிபெயர்ப்பு தமிழேடுகள் பலவற்றிலும் வெளிவந்துள்ளதை ஜெயலலிதாவோ அ.தி.மு.க.வினரோ படிக்காமல் இருந்திருக்க முடியாது.

எம்.ஜி.ஆர். பற்றி மோகன்தாஸ் எழுதியது ஒரு புத்தகம் - அதில் மிக விரிவாக எம்.ஜி.ஆரின் நிறைகுறைகள் அனைத்தும் அலசப்பட்டிருக்கின்றன. ஆனால் சேஷன் எழுதியிருப்பது ஒரே ஒரு நிகழ்ச்சியைப் பற்றித்தான். அந்த நிகழ்ச்சியை அவர் குறிப்பிட்டிருப்பது சரியா தவறா என்பதை, சேஷன் அவர்கள் அதற்காகக் காட்டக்கூடிய ஆதாரங்களைப் பொறுத்துதான் தீர்மானிக்க முடியும். ஆதாரமே இருந்தால்கூட அந்த நிகழ்ச்சியைச் சேஷன், தனது வாழ்க்கை வரலாற்றில் இடம் பெறுமாறு செய்திருக்க வேண்டுமா என்பதும் நியாயமான கேள்வியேயாகும்.

ஆனால் எனக்கேற்படுகிற வியப்பெல்லாம், சேஷன் மீது கடுங்கோபம் காட்டி அறிக்கைமேல் அறிக்கைகள் விடும் ஜெயலலிதா; சேஷனுக்குக் கருப்புக்கொடி என்ற பெயரால் விமான நிலையத்துக்குள்ளேயே தனது தொண்டர்களை அனுப்பி முற்றுகையிடச் செய்த ஜெயலலிதா; அவர் விடும் அறிக்கைகளில் மூச்சுக்கு முன்னூறு தடவை மாபெரும் தலைவர் எம்.ஜி.ஆர். என்று குறிப்பிடுகிறாரே; அதைப் படிக்கும்போதுதான்!

பிறகென்ன; யாருக்குத்தான் வியப்பு ஏற்படாது! இன்று சேஷனை எதிர்ப்பதற்காக - சேஷன் எதிர்ப்பு என்ற பெயரால் - தனது ஆட்சியின் ஊழல்களை, வணிகர்கள் உள்ளிட்ட சகல தரப்பு மக்களின் அதிருப்தியை - எதிர்ப்பை - நிர்வாகக் கோளாறுகளை - இடஒதுக்கீட்டில் போட்ட இரட்டை வேடத்தை - திசைதிருப்பி மறக்க அடித்து விடலாம் என்ற நினைப்பில்தான் மாபெருந்தலைவர் எம்.ஜி.ஆர். என்று வரிக்கு வரி அறிக்கையில் எழுதுகிறார்.

ஆனால் இந்த அம்மையார் ஜெயலலிதா அவர்கள்; அந்த மாபெருந் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றி எத்தகைய கணக்கு போட்டு வைத்திருந்தார் என்பதை அவரது கையாலேயே எழுதிய கடிதம் - காலாகாலத்துக்கும், மக்களுக்கு நினைவூட்டிக் கொண்டிருக்குமே!

எம்.ஜி.ஆர். அவர்கள் உடல் நலிவுற்று உயிருடன் இருக்கும்பொழுதே, சேலம் கண்ணனுக்கு; ஜெயலலிதா ஆங்கிலத்தில் எழுதிய கடிதம் அப்போதே மக்கள் குரல் நாளேட்டில் பிளாக் செய்து வெளியிடப்பட்டதை அந்த மகேசன் குரல் இப்போது மறுக்க முடியாதே! அந்த நீண்ட கடிதத்தின் ஒரு பகுதி இதோ :-

> M.G.R. himself who does not want to give me due importance and does not want to induct me into the cabinet. No one here can really dare to oppose him for without him they are zeros.

"The root cause of everything that is happening here is that the C.M. is terribly jealous of my popularity. He cannot stomach the fact that I have become so popular. So he is doing everything possible to eliminate me from the political scene and from public life."

இந்த ஆங்கிலக் கடிதத்தின் தமிழாக்கம் வருமாறு :-

எனக்கு உரிய முக்கியத்துவம் தரவிரும்பாத எம்.ஜி.ஆர்., என்னை அமைச்சரவையில் சேர்க்கவும் விரும்பவில்லை. அவரை எதிர்க்க இங்கு யாருக்கும் தைரியமுமில்லை. ஏனென்றால் அவரில்லாவிட்டால் மற்றவர்கள் எல்லாம் பூஜ்யங்கள்! இங்கு நடைபெறும் அத்தனைக்கும் அடிப்படைக் காரணம் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். என்னுடைய செல்வாக்கு கண்டு வெகுவாகப் பொறாமைப்படுகிறார். நான் செல்வாக்குப் பெறுவதை அவரால் ஜீரணிக்க முடியவில்லை. அதனால் அரசியலில் இருந்தும், பொது வாழ்விலிருந்தும் என்னை தூக்கி எறிய தன்னால் முடிந்ததை எல்லாம் செய்து கொண்டிருக்கிறார்!

என் செல்வாக்கு கண்டு எம்.ஜி.ஆர். பொறாமைப்படுகிறார். நான் செல்வாக்குப் பெறுவதை அவரால் ஜீரணிக்க முடியவில்லை. அரசியல் மற்றும் பொது வாழ்விலிருந்து என்னைத் தூக்கி எறியப்பார்க்கிறார். இப்படியொரு பயங்கரமான சித்திரத்தை எம்.ஜி.ஆர். குறித்து வரைந்த ஜெயலலிதா அவர்கள்தான், இன்று அந்த மாபெரும் தலைவர் என்று கண்ணீர் வடிக்கிறார். சேஷன் மீது கண்டனக்கணை பொழிகிறார். கண்டனக் கணை பொழியும் தகுதி அ.தி.மு.க.வில் உள்ள; அல்லது அ.தி.மு.க.வை விட்டு நீங்கி ஒதுங்கியுள்ள அல்லது வேறு கட்சி கண்டுள்ள எம்.ஜி.ஆரின் விசுவாசத்திற்குரிய தொண்டர்களுக்கு உண்டு! ஆனால் இந்த அம்மையாருக்கு உண்டா என்பதை; மீண்டும் ஒருமுறை அவர் எழுதிய கடிதத்தை அவரே படித்துவிட்டு முடிவு செய்யட்டும்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

01-12-1994

2209. அண்ணல் அம்பேத்கரே வந்தால்தான் என்ன?

உடன்பிறப்பே,

ஈட்டி, எட்டிய மட்டுந்தான் பாயும், பணம், பாதாளம் வரையில் பாயும் - பணம், பத்தும் செய்யும் - பணமென்றால் பிணமும் கூட வாய் பிளக்கும் - பணத்தால் ஆவது; குணத்தால் ஆகாது - இப்படிப் பணத்தின் பெருமையைக் கூறும் பழமொழிகள் ஏராளமாக உண்டு.

ஒரு காலமிருந்தது; அன்புக்கு, அறிவுக்கு, ஆற்றலுக்கு, பண்புக்கு, பரிவுக்கு மதிப்பும் மரியாதையும் மாண்பும் இருந்த காலம்.

பொருளே இல்லாமல் உலகில் வாழ முடியாது என்பதுதான் பொய்யாமொழியே தவிர; பொருளை வைத்து எதையும் செய்யலாம், செய்ய முடியும், செய்ய வேண்டுமென்று எவரும் கூறிடார்.

ஆனால் இன்றோ? பணம் என்றதும் நீதி தேவதையே, தனது கண்ணை மறைத்துள்ள கறுப்புத் துணியை அவசரமாக அவிழ்த்துவிட்டு ஆவல் ததும்ப இருகரங்களையும் ஏந்துகிறாள்.

பணம் படைத்தவர் ஏப்பம் விட்டாலே; பக்கத்திலிருப்போர் அடா அடா, பைரவி ராகம் தோற்றது போங்கள் என்கின்றனர். பணத்தை வீசியெறிய அதைப் பிடித்துக் கொள்பவர்களோ; அந்தப் பணக்குன்றின் இருமலை இயேசுநாதரின் மலைப் பிரசங்கத்திற்கும் - தும்மலைப் பரந்தாமனின் பாஞ்ச சன்ய சங்கொலிக்கும் ஒப்பிட்டுப் புகழ்கின்றன. உருப்படுமா இந்த நாடு!

ஆனால் உருப்பட்டுக் கொண்டு மட்டுமல்ல; மிக உயரத்தில் - உச்சாணிக் கொப்பிலும் உட்கார்ந்து கொண்டு பணத்தை உருட்டி

விட்டுக்கொண்டிருப்போர் யாரையும் எதையும் சுலபத்தில் வாங்கி விடமுடிகிறது.

அதனால்தான் முன்பெல்லாம் வழங்கப்பட்ட தீர்ப்புகள், இப்போது வாங்கப்படும் தீர்ப்புகளாக ஆகிவிட்டன.

பணம்; இன்றைக்கு மோகனமான மூன்றெழுத்து! அது முட்டாள்களின் மஞ்சத்தில் கொஞ்சுகிறது - கோழையையும் வீரனாக்குகிறது, வீராங்கனையாக்குகிறது - சட்டங்களைக் காலில் போட்டு மிதிக்கிறது! விதிமுறைகளை, மிதியடிகளை விடக் கேவலமாகக் கருதுகிறது!

உடன்பிறப்பே, பணமலையைக் குவித்துக் கொண்டிருப்பவர்கள் எதையும் செய்யலாம் - ஏன் என்று கேட்பதற்கு எவரும் முன்வரமாட்டார்கள் - அப்படித் தப்பித்தவறி முன்வந்தால் அவர்களின் தலையிருக்காது எனத் தர்பார் நடத்திய மண்டலாதிபதிகள் எல்லாம்; அவர்கள் உயிரோடிருக்கும் காலத்திலேயே என்ன ஆனார்கள் என்பதை சரித்திரங்கள் சத்தம்போட்டுக் கூறிக்கொண்டு தானிருக்கின்றன.

ஆனால் சரித்திர ஏடுகளை வெறும் சருகுகளாக மதித்திடும் ஜெயலலிதா ஆட்சியில்; சட்டங்கள் என்ன - ஒழுங்குகள் என்ன - விதிமுறைகள்; வெங்காயம் எல்லாம் என்ன - எல்லாமே கூட்டுக்கோலுக்குள் அகப்பட்டுக் குப்பைத் தொட்டிக்குப் போக வேண்டியவைதானே!

பணம் இருப்பது, பாதாளம் வரையில் பாய மட்டுமல்ல; உச்சியையும் நோக்கி உயர்ந்து நேர்மையாளர்களின் நெஞ்சையும் நெளிய வைத்திட!

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள் - ஆனால் இங்கே இந்த ஊழல் பானை சோற்றுக்குப் பல சோறுகளைப் பதம் பார்த்துச் சொன்ன பிறகும்; மேலும் மேலும் பதம் பார்க்கும் பணியினைத்தானே மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

இதோ மற்றொரு சோறு - என்னதான் பதம் பார்த்து; இது பாழாகிக் கூழாகிப் போனது; பதர் நிரம்பக் கலந்த பானையில் வெந்தது; ருசியும் தராது - பசியும் ஆற்றாது - என விளக்கினாலும்; அதையும் பஞ்சாமிர்தம் என்று கூறி ஆமாம் ஆமாம் எனப் பம்பை அடித்துத் தலையாட்டப் பணத்தால் அடிமையாக்கப்பட்ட ஒரு

கூட்டம், தயாராகவே இருக்கிறதே; அந்தத் தலைநகரிலும், இந்தத் தலைநகரிலும்!

இருந்த போதிலும் நாம் ஊதவேண்டிய சங்கை ஊதி வைப்போம் - விடியவேண்டிய பொழுது விடியட்டும்!

இந்த ஆட்சியிலே பதவிக்காலம் முடியும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கும், ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்கும் தங்கு தடையின்றி பதவி நீட்டிப்பு வழங்கப்பட்டு வருகின்றது. இதற்கு முந்திய ஆட்சியிலே எப்போதாவது ஒருமுறை, மிகவும் அத்தியாவசியமான நிலையிலே ஓரிருவருக்கு ஆறுமாத காலமோ, ஒரு வருடமோ பதவிநீட்டிப்பு வழங்கியது உண்டு. ஆனால் இந்த ஆட்சியிலே பதவி நீடிப்பு யார் கேட்டாலும், அவர்கள், இந்த ஆட்சியாளர் சொல்கிறபடி விதிமுறைகளைப் பார்க்காமல் நடந்து கொள்பவராக இருந்தால் உடனே பதவி நீட்டிப்பு வழங்கப்பட்டு விடுகின்றது. அந்த வரிசையிலேதான் இதற்கு முன்பிருந்த தலைமைச் செயலாளருக்கு ஓராண்டுக்காலம் பதவி நீட்டிப்பு வழங்கினார்கள்.

இந்தப் பதவிநீட்டிப்பு இதுவரை யாருக்கும் ஒரே சமயத்தில் மூன்றாண்டு காலத்திற்கு ஒட்டுமொத்தமாக வழங்கப்பட்டதே கிடையாது. அந்த விதியையும் மீறி சட்டப்பேரவைத்துறைச் செயலாளருக்கு ஒரே சமயத்தில் மூன்றாண்டு காலத்திற்கு பதவி நீட்டிப்பு கொடுத்து அந்தப் பதவிக்கு வரக் காத்துக் கொண்டிருந்தவருக்கு, அந்த வாய்ப்பு கிடைக்காமல் செய்யப்பட்டுள்ளது.

அதுபோலவே தொழில் துறையிலே இணைச் செயலாளருக்கும் காவல் துறையிலே சில அதிகாரிகளுக்கும் பதவி நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. அந்த வரிசையிலேதான் இப்போது தலைமைச் செயலாளருக்கும் ஆறுமாத காலத்திற்கு பதவி நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இதற்கு முன்பு பதவி நீடிப்பு வழங்கப்பட்ட ஒவ்வொரு அதிகாரிக்கான கோப்பும் ஆளுநரின் ஒப்புதல் பெற்றுத்தான் ஆணை பிறப்பிக்கப்பட்டு வந்தது.

முன்னாள் தலைமைச் செயலாளருக்கு பதவிநீட்டிப்பு கோப்பில் ஆளுநர் கையெழுத்துப் போடுவாரோ

என்பதுகூட சந்தேகத்திற்கிடையே பேசப்பட்டுத்தான் இறுதியாக ஆளுநர் ஒப்புதல் பெற்று பதவி நீட்டிப்பு வழங்கப்பட்டது.

இப்போது அரிபாஸ்கர், ஐ.ஏ.எஸ். அவர்களுக்கு பதவி நீட்டிப்பு அகில இந்திய சர்வீஸ் விதி 16 - துணை விதி 1 எ கீழ் பொதுநலனை முன்னிட்டு பதவி நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது என்று ஆணையில் தெரிவித்திருக்கின்றார்கள்.

இந்தப் பதவி நீட்டிப்பு உத்தரவை தலைமைச் செயலாளர் அரிபாஸ்கரே வெளியிட்டுள்ளார்.

பதவி நீட்டிப்பு ஆணை நகல் நவம்பர் 29-ந் தேதியன்று பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும் அரசு ஆணையில் 25-ந் தேதியன்று ஆணை பிறப்பிக்கப்படுவதாக தேதி குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் இந்த ஆணை முன்தேதியிட்டு பிறப்பிக்கப்பட்டிருக்கக் கூடுமோ என்று ஒரு சந்தேகம் இப்போது அரசு அதிகாரிகள் மத்தியிலே எழுந்துள்ளது. அது உண்மைதானா? ஆம்; அந்த சந்தேகத்திலும் நியாயமிருக்கிறது.

அரிபாஸ்கரின் பதவிக்காலத்தை நீடிக்க, அனுமதி கோரி, ஒரு மாதத்திற்கு முன்பே முதலமைச்சர்; ஆளுநருக்கு கோப்பினை அனுப்பி வைத்துவிட்டார்.

தலைமைச் செயலாளரின் பதவி நீட்டிப்புக்கு, ஆளுநரின் ஒப்புதல் தேவை என்று ஒரு மாதத்திற்கு முன்பு நம்பிய, ஏற்றுக்கொண்ட முதலமைச்சர், இப்போது மட்டும் ஆளுநர் ஒப்புதல் இல்லாமலேயே பதவி நீடிப்பு செய்து ஆணை பிறப்பித்திருப்பது முறைப்படி சரிதானா?

தனது பதவி நீட்டிப்புக்கான ஆணையை, தானே அரிபாஸ்கரே தன் பெயரிலேயே வெளியிட்டுக் கொள்வதும் சரிதானா?

அரசு ஆணையில் 25.11.94 அன்று போடப்பட்டிருந்த போதிலும், அது செய்தியாளர்களுக்கு 29.11.94 அன்றுதான் தரப்பட்டுள்ளது. உண்மையிலேயே 25-ந் தேதியே ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தால், 29-ந் தேதி வரை அது செய்தியாளர்களுக்கு வெளியிடப் படாமல் இருந்திருக்க தேவையில்லையே.

ஆளுநர் கோப்பினைத் திருப்பி அனுப்பிய தேதி 26.11.94 ஆகும். எனவே கோப்பு முதல்வரிடம் இல்லாத நிலையிலே 25-ந் தேதி அன்று முதலமைச்சர் எப்படி கோப்பிலே கையெழுத்து போட்டிருக்க முடியும். 25-ந் தேதியன்று கோப்பு கவர்னரிடம்தான் இருந்திருக்கிறது. அந்த நிலையிலே எப்படி இந்த அரசு, கோப்பு இல்லாமல் ஆணை பிறப்பித்திருக்க முடியும்?

ஆளுநர் கோப்பிலே உத்தரவுக்கு ஒப்புதல் தருகிறாரா இல்லையா என்று தெரியாதா நிலையிலே - நவம்பர் 30-ந் தேதிக்கு இன்னும் ஐந்து நாட்கள் இருக்கின்ற போது, அவசரம் அவசரமாக 25-ந் தேதியே அரசு தலைமைச் செயலாளருக்கு பதவி நீட்டிப்பு செய்து ஆணை பிறப்பிக்க வேண்டிய நெருக்கடி என்ன?

25-ந் தேதியிட்டு வெளியிடப்பட்டுள்ள அரசு ஆணையில் கையெழுத்து போட்டுள்ள செக்ஷன் ஆபிசர், தன் கையெழுத்திற்கு கீழே தேதி போடவில்லை. பொதுவாக அரசு அதிகாரிகளோ, அமைச்சர்களோ, கோப்பிலே கையெழுத்து போடும்போது, கையெழுத்திற்கு கீழே தேதி போடாமல் இருப்பதே கிடையாது. அந்த வகையிலே, மனசாட்சி உள்ள அந்த அதிகாரி, அந்தக் கோப்பிலே முன் தேதியிட்டு கையெழுத்திட மனமின்றி தேதியே போடாமல் கையெழுத்தினை மட்டும் போட்டிருக்கின்றார் என்று தெரிகின்றது. இலாகா மாற்றம் குறித்து ஆணை கடந்த 16-ந் தேதி பிறப்பிக்கப்பட்டபோது, செக்ஷன் ஆபிசர் கையெழுத்து போட்டு, அதன் கீழே தேதியும் போட்டிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

கோப்பினை ஆளுநர் திருப்பியனுப்பும் போது, அதிலே பதவி நீட்டிப்புக்கு உரிய காரணம் கூறப்படவில்லை.

நிலக்கரி இறக்குமதி தொடர்பாக அரிபாஸ்கர் குறித்து பல சர்ச்சைகள் நிலவுகின்றன. இதனால் பதவி நீடிப்பு செய்வது பொருத்தமாக இருக்காது என்று எழுதியிருப்பதாக சில ஏடுகளில் செய்தி வந்துள்ளது. இந்தக் கோப்பினை, ஆளுநர் 26-ந் தேதியன்றுதான் அரசுக்கு அனுப்பியிருக்கிறார். இதைப் பார்த்த பிறகுதான், அரசு அவசர அவசரமாக 25-ந் தேதியே ஆணை பிறப்பித்ததைப் போல காட்டிக்கொண்டிருக்கின்றது. அதாவது ஆளுநரின் மறுப்பு வந்த பிறகு, அவர் தெரிவித்த கருத்துக்களுக்கு விளக்கம் கூறுவதற்கு வழியில்லாமல், முன் தேதியிட்டு, ஆளுநரின் கோப்பு வருவதற்கு முன்பே கையெழுத்து போட்டது போல் செய்திருக்கின்றார்கள்.

அரசின் பொறுப்பிலே இருப்போர், இவ்வாறு கோப்பிலே முன்தேதியிட்டு கையெழுத்துப் போடுவது மிகப் பெரிய முறைகேடாகும். என் செய்வது சட்டம், விதிமுறைகளுக்கு மாறாக; அரசாங்க நிலத்தை வாங்கியவராயிற்றே நமது முதலமைச்சர் ஜெயலலிதா!

அமைச்சர்களுக்கு இலாகா மாற்றம் குறித்து ஆளுநரின் ஒப்புதல் இல்லாமல் அரசு ஆணை பிறப்பித்து, அதனை சிலர் எதிர்த்தபோது அறிக்கை அமைச்சர் எஸ்.டி.எஸ். அவர்கள் உடனடியாக அதற்கு பதிலளித்து பல முன்னுதாரணங்களை குறிப்பிட்டு நீண்ட அறிக்கை வெளியிட்டிருந்தார். அந்த அமைச்சர் இப்போது, ஆளுநரின் ஒப்புதல் இல்லாமல் தலைமைச் செயலாளருக்கு பதவி நீட்டிப்பு கொடுத்ததற்கு முன்னுதாரணம் காட்டி அறிக்கை விட முன் வருவாரா?

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் ஒரு மூத்த அரசு அதிகாரி. அவரும், ஜெயலலிதாவை போலவே, ஆளுநரை பார்க்காமல் இருப்பதும், ஏன் அவர் பதவியேற்றபோது முறைப்படி மரியாதைக்காக ஆளுநரைச் சந்திக்க வேண்டுமென்ற மரபைக் கூடக் கடைப்பிடிக்காமலும் நடந்து கொண்டு வந்திருக்கின்றார். ஆளுநருக்கும் முதல் அமைச்சருக்கும் இடையிலே ஒரு பாலம் போல் இருந்து செயல்பட வேண்டியவர்தான் தலைமைச்

செயலாளர். அரசியல்வாதிகள் சிலர் இன்று பொறுப்பிற்கு வருவார்கள்; நாளை வேறு சிலர் வருவார்கள்; ஆனால் அரசு அதிகாரிகள் நிரந்தரமானவர்கள் அல்லவா? அனைவருக்கும் பொதுவானவர்கள் அல்லவா?

அரசு ஆணைகள் ஒவ்வொன்றின் கீழும் - கவர்னரின் ஆணைப்படி உத்தரவு பிறப்பிக்கப்படுவதாக போடப்பட்டிருக்கும். இப்போது தலைமைச் செயலாளரின் பதவி நீட்டிப்பு ஆணையிலும் அதுபோலவே போடப்பட்டுள்ளது. அந்த ஆணைக்கு ஆளுநர் ஒப்புதல் தராமல் மறுத்த நிலையிலே, அவ்வாறு ஆளுநர் ஆணைப்படி என்று அந்த ஆணையிலே போட்டிருப்பது என்ன நீதியோ? நேர்மையோ?

தலைமைச் செயலாளருக்கு பதவி நீட்டிப்பு அகில இந்திய சர்வீஸ் விதி 16 - துணை விதி 1 என் கீழ் பொது நலனை முன்னிட்டு பதவி நீட்டிப்பு வழங்குவதாக கூறுகின்றது. ஆனால் அந்த விதிப்படியே, எந்த பொது நலன் என்று தெளிவாக அந்த உத்தரவிலேயே குறிப்பிட்டிருக்க வேண்டும். எந்தப் பொது நலன் என்று ஆணையில் தனியாக குறிப்பிடாத காரணத்தால், அகில இந்திய சர்வீஸ் விதிகளுக்கு இது முரண்பட்டதாகும்.

அது மாத்திரமல்ல; அரசியல் சாசனத்திற்கும் இது முரண்பட்டதாகும். அரசியல் சாசனம் 310-வது பிரிவின்படி, மாநில ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் ஆளுநர் கட்டுப்பாட்டின்கீழ் வருபவர்கள். அரசியல் சாசனம் ஆளுநருக்கு வழங்கியுள்ள அதிகாரத்தை எந்த அகில இந்திய சர்வீஸ் விதியாலும் பறிக்க முடியாது என்று அரசமைப்பு சட்ட வல்லுனர் கே.பி. கிருஷ்ண ஷெட்டி அவர்களே கூறியிருக்கின்றார்.

எந்த சட்டமேதை கூறினால் என்ன; அரசியல் சட்டத்தின் கர்த்தா அண்ணல் அம்பேத்கரே மீண்டு வந்து எடுத்துச் சொன்னால்தான் என்ன; அய்யன்மீர்! உமது அறிவுரை தேவையில்லை எனக்கு - மீறிச் சொன்னால் இப்போதுதான் உமது சிலையை உடைத்து நொறுக்கி 57 நாட்கள் ஆகின்றன காரணை என்ற ஊரில்! மற்றும் மாநில முழுதுமுள்ள சிலைகளை எமது

காவல்துறை உதவியுடன் என் பக்த சிகாமணிகள் ஒரு கை பார்ப்பர்! என்னை யாரும் எதுவும் செய்ய முடியாது! இருதுருவங்களையும் இழுத்துப் போட்டுக் கொண்டு இரும்புராணியாக விளங்குகிறேன் நான் என்பதை அறிவீராக! ஒரு துருவம் முன்னாள் ஜனாதிபதி; இந்நாள் எனக்கு யோசனாதிபதி! சேனாதிபதி! ஏன்; சேவகபதியும் கூட! என்று கண் சிவக்கக் கர்ச்சிப்பார் இன்றைய முதலமைச்சர்! ஆம்; முதலமைச்சராக இருக்கும்வரையில்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

02-12-1994

2210. நம்பி நாராயணர்களை நம்பி, நமது நாடு!

உடன்பிறப்பே,

நேற்று கடிதத்தில்தான் பணம் படுத்தும் பாடு குறித்து எழுதியிருந்தேன். இன்றைய பத்திரிகைச் செய்தியைப் படிக்கும்போது; அந்தப் பணத்திற்கு ஆசைப்பட்டு தன்னை வளர்த்த இயக்கத்தைக் காட்டிக் கொடுக்கும் அரசியல்வாதிகள் சிலரைப்போலவே; சதிகாரர்களுக்கும், பகைநாட்டுக்காரர்களுக்கும் தேசத்தையே காட்டிக் கொடுக்கும் விஞ்ஞானிகள் சிலரும் இருந்திருக்கிறார்கள் இந்தியாவில் என்று தெரிகிறது.

எல்லாத் துறைகளிலும்; அது அரசியலாகட்டும் - விஞ்ஞானத்துறையாகட்டும் - கலைத்துறையாகட்டும் - மருத்துவத் துறையாகட்டும் - பத்திரிகையாளர் துறையாகட்டும்; அரசு நிர்வாகத்துறையாகட்டும்; ஒவ்வொரு துறையிலும் ஒரு சில கயவர்கள், கல் நெஞ்சினர், கடத்தல் மன்னர்கள், போலிகள், பொய் கூறிப் பிழைப்போர், ஊழல் பேர்வழிகள் என்று சிலர் இருக்கத்தான் செய்வார்கள்.

அந்த ஒரு சில அரசியல்வாதிகள் நடத்தும் அட்டூழியங்களுக்காக - அட்டகாசங்களுக்காக; அரசியல்வாதிகளே அப்படித்தான் என்றோ; அதுபோலவே ஒவ்வொரு துறையிலுமுள்ளோரில் சிலரின் சேட்டைகள் வெறுக்கத்தக்கதாக இருப்பின் அதற்காகத் திரையுலகத்தினரே அப்படித்தான் என்றோ; டாக்டர்கள் அப்படித்தான் என்றோ; பத்திரிகையாளர்களே அப்படித்தான் என்றோ; பங்குச்சந்தை ஊழலில் சில அதிகாரிகள் ஆதாயம் பெற்றதால் அதிகாரிகள் அனைவருமே அப்படித்தான் என்றோ; எப்படி சொல்லிவிட முடியாதோ; அப்படிச் சொன்னால் அது எவ்வளவு பைத்தியக்காரத்தனமோ - அதைப் போன்றதுதான் நமது நாட்டு ராக்கெட் ரகசியங்களை சதிக் கும்பலுக்கு நல்ல விலைக்கு விற்பதற்கும் - நாட்டையே காட்டிக் கொடுப்பதற்கும்

துணிந்துவிட்ட ஒருசில விஞ்ஞானிகள், காவல்துறை அதிகாரிகள் பற்றி வந்துள்ள செய்திகளை வைத்துக்கொண்டு, மொத்தக் காவல்துறையினரும் மோசமென்றோ; மொத்த விஞ்ஞானிகளும் மோசடிப் பேர் வழிகள் என்றோ கணித்துவிட முடியாது. கணித்து விடவும் கூடாது.

இந்தியாவின் பி.எஸ்.எல்.வி. ராக்கெட் ரகசியங்கள் பற்றிய அந்நிய நாடுகளுக்கு உளவு சொன்னதாகவும், ஒற்றர்களுக்கு உதவியதாகவும்; இந்தப் பயங்கரமான சதியில் உடந்தையாக இருந்ததாக இருபது விஞ்ஞானிகள் மீதும், இன்ஸ்பெக்டர் ஜெனரல் தகுதியில் உள்ள ஒரு போலீஸ் அதிகாரி உட்பட பல அதிகாரிகள் மீதும் குற்றம் காணப்பட்டு; கைதுப்படலமும் தொடர்கிறது கேரளத்தில்!

ராக்கெட் தொழில் நுட்பப் பிரிவின் துணை இயக்குநர் நம்பிநாராயணன் என்பவர் வலியமாலா எனுமிடத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

உடன்பிறப்பே, பெயரைப் பார்த்தாயா? நம்பி நாராயணன்! இந்த நாராயணன்களை நம்பி; நாடு இருக்கிறதே; என் செய்ய!

இந்தச் சதியில் கைது செய்யப்பட்டுள்ள இரண்டாவது விஞ்ஞானி இவர் என்று குறிப்பிடப்படுகிறது.

முதன்முதலாக பி.எஸ்.எல்.வி. ராக்கெட் ஏவுகிற முயற்சியில் பெருந்தோல்வி ஏற்பட்டு; பெருமூச்சு விட வேண்டியிருந்தது அல்லவா; அந்தத் தோல்விக்கே காரணம் இந்தத் துரோகிகளின் செயல்தான் என்றும் தெரியவந்துள்ளது.

நேற்று வரையில் நமது நாடு நடத்தியுள்ள ராக்கெட் சோதனைகளின் எண்ணிக்கை இருபத்தியொன்று! அந்தச் சோதனைகளில் கையாளப்பட்ட விஞ்ஞான நுணுக்கங்கள் - தொழில் நுட்பங்கள் - போன்ற எல்லா விபரங்களும் கடத்தப்பட்டுள்ளன. இந்தியாவில் 40 ஆண்டுகளாக உழைத்துக் கண்டுபிடித்த விண்வெளித் துறை ஆய்வுகள், நுணுக்கங்கள் அனைத்தும் சதிச்செயலில் தனி வெறி கொண்டலையும் பணப்பேய்களால் அந்நிய நாடொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளன என்பதையும்; அந்த விபரங்களை வைத்துக்கொண்டு, அந்நிய நாடொன்று மூன்றே மாதங்களில்; அந்த நாட்டில் ராக்கெட்டுகளையும், செயற்கைக் கோள்களையும், ஏவுகணைகளையும் வான்வெளியில் செலுத்த

முடியும் என்ற செய்தி கேட்கும்போது நமது நாடி நரம்புகளில் ரத்த நாளங்களில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போன்று குருதி ஓட்டமே கொதிப்புற்றுக் கொந்தளிக்கிறது!

இந்தச் சதியையும் துரோகச் செயலையும் சில ஆண்டுகளாகவே இந்தக் கும்பல் நடத்திக் கொண்டிருந்து; இப்போதுதான் முழுமையாக சிக்கியிருக்கிறது.

இதுபற்றிய சில விபரங்கள் வருமாறு :-

காலக்கெடு முடிந்த பிறகும் இந்தியாவில் தங்கியிருந்தமைக்காக மாலத்தீவைச் சேர்ந்த மரியம் ரஷீதா என்ற பெண்ணை போலீசார் அக்டோபர் 20-ந் தேதி கைது செய்து விசாரித்தனர். அவர் வைத்திருந்த ஆவணங்களும் பரிசோதிக்கப்பட்டன. பி.எஸ்.எல்.வி. திட்டதுணை இயக்குநர் டி. சசிகுமாரை பார்ப்பதற்காக தங்கியிருப்பதாக அவர் ஒப்புக்கொண்டார். மாலத்தீவு பாதுகாப்புப் படையில் இளநிலை அதிகாரியான தான், ஃபௌசியா உசேன் என்ற இன்னொரு பெண்ணுடன் வந்திருப்பதாகவும் ஒப்புக்கொண்டார்.

இந்தியாவைவிட்டு தப்பி ஓட முயற்சி செய்யும் போதே ஃபௌசியா பெங்களூரில் நவம்பர் 13-ல் கைதானார். ரஷீதாவை சசிகுமாருக்கு அறிமுகம் செய்துவைத்த சந்திரசேகரன் என்ற கேரளத்துக்காரர் ரஷியாவின் கிளாவ்கோஸ்மாஸ் என்ற விண்வெளி அமைப்பின் இந்தியப் பிரதிநிதி ஆவார். சசிகுமார் கிரையோஜெனிக் இன்ஜின்கள் தயாரிப்பிலும் முக்கிய பங்கு வகித்து வந்தார்.

இதன் பிறகு இந்திய விண்வெளி ஆய்வுத்துறை சசிகுமாரின் நடவடிக்கைகள் குறித்து விசாரிக்க உத்தரவிட்டது. சந்தேகத்துக்குரிய அவரது நடவடிக்கைகள் காரணமாக அவர் ஆமதாபாத்துக்கு உடனே மாற்றப்பட்டார். அங்கு அவரை போலீசார் தொடர்ந்து கண்காணித்து வந்தனர். இதனிடையில் ரஷீதா, ஃபௌசியா ஆகியோரின் ஜாமீன் மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. இருவரும் அரசு ரகசிய காப்புச் சட்டப்படி காவலில் வைக்கப்பட்டனர்.

கேரள போலீசார் சசிகுமாரை நவம்பர் 22-ம் தேதி ஆமதாபாத்தில் கைது செய்தனர். தேசிய பாதுகாப்புக்கும், பக்கத்து நாடுகளுடனான நல்லுறவுக்கும் தீங்கு ஏற்படும் வகையில்

அரசு ரகசியங்களை வெளியிட்டதாக அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அதற்கடுத்த நாள் சந்திரசேகரன் பெங்களூரில் கைது செய்யப்பட்டார்.

சசிகுமார், சந்திரசேகரன், ரஷீதா, ஃபௌசியா ஆகிய நால்வரையும் விசாரித்தபோது இந்த உளவு வேலை, கடந்த சில ஆண்டுகளாகவே நடப்பதும் இந்த கும்பலில் மேலும் பலர் இருப்பதும் இந்திய போலீஸ் உயர் அதிகாரிகள் பலர் உடந்தையாக இருப்பதும் தெரியவந்தது.

ரஷீதா பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. என்ற உளவு நிறுவனத்துக்கு தகவல்களைத் திரட்டி அனுப்பி வந்திருக்கக்கூடும் என்ற ஐயம் போலீசாருக்கு ஏற்பட்டிருக்கிறது.

சசிகுமாரைக் கைது செய்த உடனேயே நம்பி நாராயணன், பதவி விலக விரும்புவதாக கடிதம் கொடுத்தார். அந்தக் கடிதம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. நம்பி நாராயணனின் மீதிருந்த கண்காணிப்பைப் போலீசார் தீவிரப்படுத்தி அவரை கைது செய்துள்ளனர்.

உடன்பிறப்பே; சுமார் இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, சோவியத் ரஷ்யா; விண்வெளியில் ஒரு நாய்க் குட்டியை வைத்து சுற்றி வரச் செய்தபோதே; நாம் நமது ஆசைகளை விரிவாக்கிக் கொண்டு, விநாயகர் இன்னமும் மூஞ்சூறு வாகனத்தில் சென்று கொண்டிருக்கிற விழாவை நடத்துகிற நமது நாட்டில் அந்த விண்வெளி ஆய்வு எனும் விஞ்ஞான வித்தகம் எப்போது வெற்றிகரமாகச் செயல்படுமோ என்று ஏங்கினோம். அதற்குப் பிறகு அமெரிக்க விஞ்ஞானி பறக்கவிட்ட பூச்சி வண்டியிலேறி ஆம்ஸ்ட்ராங் சந்திர மண்டலத்தில் அடியெடுத்துவைத்து அங்கிருந்து கொண்டுவந்தானே கல்; அந்தக் கல்லைப் பார்த்துக் கொண்டே கண்கள் பனிக்க அந்தக் காலம் இங்கு எப்போது வருமோ என்று நெஞ்சுக்குள் புலம்பினோம்.

இதோ; இந்திய நாடும் ஏவுகணை தயாரிக்கிறது - ராக்கெட் விடுகிறது - விண்வெளிக் கலத்தின் பவனியை நடத்துகிறது - இன்னும், இன்னும், இன்னும் எத்தனையோ அற்புத சாதனைகளை விஞ்ஞான ரீதியாக நிகழ்த்தத்தான் போகிறது என்று நம்பி மகிழ்ந்திருக்கும் நமது ஆர்வத்திற்குக் குறுக்கே நம்பி நாராயணன்கள் நந்திபோல் வந்து விட்டனரே - அடப்

பாழும் துரோகமே! நீ, பணமென்றால் உள்நாட்டுக்குள்தான் மானங்குலைய நிற்பாய்; மாண்பினை இழந்து மாண்புமிகு எனும் காகித மகுடத்தை சூட்டிக் கொள்ளத் துடிப்பாய்; என்று கருதினோம்.

நீ, நாட்டையே காட்டிக் கொடுக்கும் நாசகார சக்தியாக - நத்திக் கிடப்பேன் சதிகாரர் திருவடிகளை காசுக்காக என நாசுக்காக துடிக்கும் வேசையாகவும் உருவெடுத்து விட்டாயே இப்போது!

கேரளமாநில எல்லைக் கடந்தும்; மற்றும் அந்நிய நாடுகளிலும் இச்சதிக்கான ஆணிவேர், சல்லி வேர்கள் பரவியிருப்பதால்; கேரள அரசே முன்வந்து, மத்திய புலனாய்வுத் துறை சி.பி.ஐ. இதனை விசாரிக்க வேண்டுமெனக் கோரியுள்ளது.

இங்கே பிரேமானந்த சாமியாரின் பிரச்சினையில் கூடத்தான் வெளிநாட்டு பக்தர்கள் தொடர்பு உண்டு என்பது புகைப்படங்கள், செய்திகள் வாயிலாக அனைவர்க்கும் தெளிவாக்கப்பட்டுள்ளது - போலீசாரும் அறிவித்துள்ளனர். ஆனால் இங்கே உள்ள அரசு; சி.பி.ஐ. விசாரணையைக் கோரிப் பெறவில்லை. அப்படிப் பெற்றிருந்தால்; இந்தச் சமுதாயத்தை மூட மௌடீகக் கொள்கைகளிலிருந்து காப்பாற்றி விழிப்புணர்வு கொள்ளுமாறு செய்திருக்க முடியும். நாச சக்திகளிடமிருந்து நாட்டைக் காப்பாற்றவாவது; கேரளத்து அரசு, சி.பி.ஐ. விசாரணையைக் கோரியுள்ளதே - அதற்காக ஓரளவு ஆறுதல் அடையலாம்.

துரோகத்தின் தோல் உரிக்கப்பட்டு; சதிகாரர்கள் விரிக்கும் வலையிலிருந்து நாடு பாதுகாக்கப்பட; நமது கழகத்தின் ஆதரவு என்றைக்கும் உண்டு!

அன்புள்ள,

மு. கருணாநிதி

03-12-1994

2211. சிங்கமே! சிரித்த முகம் காட்டி எழுந்திடு!

உடன்பிறப்பே,

* பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த ஆண்டும்; ஜெயலலிதா ஆட்சியில் துரோகம் இழைக்கப்பட்டு - 50 சதவீதத்திற்கு மீண்டும் ஒருமுறை உச்சநீதிமன்றத்தில் ஒப்புதல் தந்துவிட்டு; ஏதோ உச்சநீதிமன்றம் மட்டுமே அநீதி இழைத்துவிட்டது போன்ற ஒரு பம்மாத்து வேலை நடத்திக் கொண்டிருப்பதைக் கண்டித்தும்,

* மத்திய அமைச்சர் அருணாசலத்தையும் சட்டமன்ற உறுப்பினர் பரிதி இளம்வழுதியையும் மிக்க இழிவான முறையில் அநாகரிகப் போக்கில் நடத்தியும் - செங்கை காரணையில் அண்ணல் அம்பேத்கர் சிலையை புல்டோசர் போட்டு உடைக்கச் செய்து, ஆதிதிராவிட மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி இரு உயிர்களைப் பலி கொண்டும் தாழ்த்தப்பட்ட மக்களை வெந்த புண்ணில் வேலால் குத்துவதுபோல வருத்திவருவதைக் கண்டித்தும்,

* உலகத் தமிழ் மாநாடு என்ற பெயரால் ஊழல் கொள்ளையும் ஊதாரித்தனமாக செலவும்; மக்களின் வரிப்பணத்திற்குக் கேடாக நடைபெறுவதைக் கண்டித்தும்,

* உள்ளாட்சி மன்றத்தேர்தல், கூட்டுறவு சங்கத் தேர்தல் நடத்துவதற்காக தேதி குறிப்பிடப்பட வேண்டிய கோப்புகளைத் தூக்கிக் குப்பைக் கூடையிலே போட்டுவிட்டதைக் கண்டித்தும்,

* எம்.ஜி.ஆர். சிலை வைப்பதற்கும் - அறக்கட்டளை அமைக்கும் விழாவுக்கும் எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.வுக்குத் தடைவிதித்து அராஜகச் செயல்களில் ஓர் அரசே ஈடுபடும் இழிநிலைக்கு வந்துவிட்டதைக் கண்டித்தும்,

* மதக் கலவரத்தைத் தடுத்திட அமைதிக்குழு; குமரி மாவட்டத்தில்! குழுவின் தலைவராக ஜனதா தளத்தைச் சேர்ந்தவர் - அவர் மீதே வேண்டுமென்று பொய்யாக ஒரு கொலைமுயற்சி வழக்கு தொடர்ந்துள்ளதைக் கண்டித்தும்,

* மதுரை இந்து முன்னணித் தலைவர் கொலையில் தொடர்ச்சியாக திண்டுக்கல்லில் ஒரு முஸ்லிம் வாலிபர் கொல்லப்பட்டது குறித்துக் காவல்துறை உரிய நடவடிக்கை மேற்கொள்ளாததைக் கண்டித்தும்,

* குடவாசலில் மார்க்சிஸ்ட் தோழர் கொலை - காவல் நிலையங்கள் பல கற்பழிப்புக் கூடங்களாக மாறி விட்டநிலை - சட்டமன்றத்திலோ சர்வாதிகார அலை - என்றுள்ள நிலைமை மட்டுமின்றி;

இடிஅமீன் ஆட்சிபோல, இட்லர் ஆட்சி போல, முசோலினி ஆட்சிபோல, தனக்கு எதிராகக் கருத்து சொல்கிறவர்களை விட்டு வைக்கக் கூடாது என்றக் கொடுஞ்சிந்தையுடன் குண்டர் படைகளைத் தயாரித்து வைத்துக்கொண்டு -

தராசு அலுவலக ஊழியர்கள் கொலை தொடங்கி இன்று தாஜ் ஓட்டல் தாக்குதல் வரையில்; தலைகால் தெரியாமல் தர்பார் நடத்திக் கொண்டிருக்கிற இந்த ஆட்சியில்;

உயர்ந்துகொண்டு போகும் விலைவாசிகளைப் பற்றிக் கவலைப்படாமல், வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிக் கொண்டிருக்கிறதே என்று ஏக்கத்தால் உடம்பை அலட்டிக்கொள்ளாமல், பல்வேறு பிரிவு மக்கள்; குறிப்பாக அண்மையில் வணிகப் பெருமக்கள் படும் அவதிகள் அல்லல்களைப் பற்றிய வேதனையில் எள்முனையளவும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாமல் இமாலய விளம்பரங்களிலும் ஆடம்பர ஆர்ப்பாட்டங்களிலும் உல்லாசம் கண்டு கொண்டிருக்கின்ற உன்மத்தர் செயல்களைக் கண்டித்தும்,

டிசம்பர் 15 ஆம் நாளன்று தி.மு.கழகமும் தோழமைக்கட்சியினரும் தமிழக முழுதுமுள்ள மாவட்ட மற்றும் வட்டத்தலைநகர்களில் அணி அணியாக அறப்போர் மறியல் நடத்துவர் என்று நவம்பர் 11-ந் தேதி கூடிய; கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதையொட்டி - கழகத்தின் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், சிற்றூர் கிளை அமைப்புகளும் கழக அணிகளின் பல்வேறு கட்ட அமைப்புகளும்; அதைப்போலவே தோழமைக்கட்சிகளின் அமைப்புகளும் ஆயத்தப்பணிகளைத் தொடங்கி நடத்திக் கொண்டிருக்கிற செய்திகளைக் கேட்டும், பார்த்தும் பூரித்துப் போகிறேன்.

தமிழ்நாடு முழுதும் பரவலாக பல மாவட்ட, மற்றும் வட்டத்தலைநகர்களில்; சில மாவட்டங்களில் ஒன்றியங்களில்கூட மாநில அரசு அலுவலகங்களின் முன்னால் நடத்தப்பட இருக்கிற இந்த அறப்போர் மறியலில் லட்சக்கணக்கானோர் களங்கண்டிடவும் - காராக்கிரகத்தில் அடைபடவும் தயாராக இருக்கிறார்கள் என்று வரும் செய்திகள், செவிக்கு இன்பமும் சிந்தைக்கு உற்சாகமும் வழங்குகின்றன.

உடன்பிறப்பே; இன்று தமிழ்நாட்டில் ஒருவரை ஒருவர் பார்த்து ஒரு நிமிட நேரமே உரையாடினால்கூட; அந்த ஒரு நிமிடத்தில் அவர்கள் பேசிக்கொள்கிற விஷயம் - என்ன சார் - இந்த லஞ்ச ஊழலும், அராஜகமும் - அடாவடித்தனமும் எப்ப சார் முடிந்து தொலையும் என்பதுதான்!

ஒரு காலத்தில் சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தைக் கட்டியாண்ட இங்கிலாந்து தேசத்து மன்னர்களோ அல்லது ராணிகளோகூட இத்துணை மமதைகொண்டு நடந்ததில்லை. எதேச்சாதிகாரத்தில் - பழிவாங்குவதில் - பகை தீர்ப்பதில்; இட்லர் தன்னை மிஞ்சி முதலிடத்துக்கு வந்துவிடக் கூடாது என்பதிலும், இடிஅமீன் இரண்டாவது இடத்துக்குக் கூட வரலாகாது என்பதிலும், முசோலினி, மூன்றாவது இடத்தைக் கூட நெருங்கக் கூடாது என்பதிலும் கண்ணும் கருத்துமாக இருந்து அந்த மூவரின் கூட்டுக் கலவை வடிவமாக முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஆட்சி நடத்தும் போக்கு அமைந்து கிடக்கிறது!

தேர்தல் ஆணையத் தலைமை அதிகாரி தனது வாழ்க்கை வரலாற்று நூல் ஒன்றில் அறிஞர் அண்ணாவைப் பற்றி அவதூறான ஒரு தகவலை எழுதப்போய்; தமிழகம் கிளர்ந்தெழுந்து எதிர்ப்பு

காட்டியதும் - அந்த நூலில் அண்ணா பற்றி வந்துள்ள பகுதியை நீக்கிவிடுவதாக அறிவித்து விட்டார். அதற்குப் பிறகும் ஆளுங்கட்சியான அ.தி.மு.க. அவரை எதிர்த்துப் போராட்டம் - அதுவும் கறுப்புக் கொடிப் போராட்டம் - சேஷன் சென்னைக்கு விமானத்தில் வரும்போது கறுப்புக்கொடி காட்டுவதாக அறிவிப்பு!

கறுப்புக்கொடி காட்டுவது -

மறியல் செய்வது -

ஆர்ப்பாட்டம் நடத்துவது -

இவைகள் எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகளுக்காக - அல்லது எல்லாக் கட்சிகளுக்குமே அவற்றின் கண்டனத்தை உணர்த்துவதற்காக; ஜனநாயகம், அனுமதித்துள்ள முறைகளாகும்!

இடஒதுக்கீட்டில் இந்த ஆண்டும் ஜெயலலிதா அரசு இரட்டைவேடம் கட்டி தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டது என்பதைக் கண்டித்து ம.தி.மு.க.வினர் சென்னையில் மறியல் அறிவித்தனர். ஆனால் அவர்கள் மறியல் இடத்துக்குச் சென்று; யாரையும் மறித்துப் போராட்டம் நடத்துவதற்கு முன்பே - தடையை மீறியதாகக் கைது செய்யப்பட்டு எட்டு நாள் சிறைக்காவல் என உத்திரவிடப்பட்டு அடைக்கப்பட்டுள்ளார்கள்.

ஆனால்; சேஷனுக்குக் கறுப்புக்கொடி என்ற பெயரால், மீனம்பாக்கம் விமான நிலையத்துக்கெதிரே சாலைப் போக்குவரத்தே பல மணிநேரம் நடைபெற முடியாமல் - கறுப்புக் கொடிக்காரர்களான அ.தி.மு.க.வினர் விமான நிலையத்தையே ஏழு மணி நேரம் முற்றுகையிட்டு - பெரிய பொறுப்பில் இருக்கும் ஓர் அதிகாரி விமான நிலையத்துக்குள்ளேயே சிறை வைக்கப்படும் நிலையையும் உருவாக்கினார்கள் - எனினும் அவர்கள் நடத்த வேண்டிய காரியங்களையெல்லாம் ஏழு மணி நேரம் நடத்திட அனுமதித்துவிட்டு; அதற்குப் பிறகு அவர்களில் சிலரைக் கைது செய்து, அப்படிக் கைது செய்யப்பட்டவர்களையும் அன்று மாலையே விடுதலையும் செய்துவிட்டார்கள்.

அ.தி.மு.க. முற்றுகைப் போராட்டத்தில் அதிகாரி மறிக்கப்பட்டார் - அ.தி.மு.க.வினர்; விடுதலை செய்யப்பட்டார்கள்.

ம.தி.மு.க. மறியல் போராட்டத்தில் எந்த அதிகாரியும் மறிக்கப் படவில்லை - வழியிலேயே தடைவிதித்து, தடைமீறியதாகச் சொல்லி கைது செய்துவிட்டார்கள்.

உடன்பிறப்பே, நீயும் நமது கழக உடன்பிறப்புகளும்; ஆட்சியாளர் எடுத்துள்ள இந்த இரட்டைநிலை கண்டு மிரண்டுவிடுவீர்கள் என்று ஒரு நப்பாசை! நம்பிக்கை!

ஓராண்டுக்கால மிசாக்கொடுமைகளையே உறுதியிலிருந்து ஒரு ஊசி முனையளவும் பிறழாத நிலையில் எதிர்கொண்டவர்கள் நாம் என்பதை அடி, உதைகள், சித்ரவதைகள் என்று அடக்குமுறைகளைக்கூட சிறைக்கூடத்தில் சிரித்த முகத்துடன் ஏற்றுக் கொண்ட சிங்கக்குட்டிகள்தான் கழகக் கண்மணிகள் என்பதை; மீண்டும் இப்போது அதுபோல் ஒரு வரலாற்று வரிகளிலும் கம்பீரமான எழுத்துக்களாக நாம் நிமிர்ந்து நிற்போம் என்பதை நிரூபித்துக்காட்ட டிசம்பர் 15 அறப்போர் பயன்படட்டும்!

பூட்டிய இருப்புக்கூட்டின் கதவு திறந்தது - சிறுத்தையே வெளியில் வா; என்றழைத்தார் புரட்சிக் கவிஞர்! அந்தப் பாடலை முழுதும் படித்தால் இங்குள்ள நாட்டில் யார் ஆட்சி? நடக்கிறது என்பதையும் புரிந்து கொள்ளலாம்!

எனவே; புரட்சிக்கவிஞரின் பாடலை - நான் சற்று மாற்றியமைத்து உன்னை அழைக்கிறேன்; பூட்டிய சிறைக் கோட்டக் கதவு திறந்திடும் - சிறுத்தையே! அந்தச் சிறைபுக வந்திடு! செழித்திடும் புதுநாடு கண்டிட; சிங்கமே! சிரித்த முகங்காட்டி எழுந்திடு!

அன்புள்ள,

மு. கருணாநிதி

04-12-1994

2212. கண்ணாடி மாளிகையிலிருந்து கல்கத்தா வரை!

உடன்பிறப்பே,

இதோ இந்தப் படத்தைப் பார்த்தாயா? இரண்டு நாட்களுக்கு முன்பு சில ஏடுகளில் வெளிவந்த படம்தான்! பார்க்கும்போது; சேர சோழ பாண்டிய மன்னர்கள் கொலு மண்டபத்திற்குள் நுழைவதற்காக இப்படித்தான் அலங்கார வழி அமைத்திருந்தனர் போலும்; அதைத்தான் நமது தொல்பொருள் ஆய்வாளர்கள் அகழ்ந்தெடுத்து தூசி துடைத்துக் காட்சியாக்கிக் காட்டுகின்றனர் போலும் என எண்ணிடத் தோன்றுகிறதா? அல்லது நந்தவம்சத்து மன்னர்கள், மௌரிய சாம்ராஜ்யத்து மகாராஜாக்கள், மொகலாயப் பேரரசர்கள்; தங்களின் தர்பார் மண்டபங்களுக்கோ; உல்லாச உத்தியான நந்தவனங்களுக்கோ செல்வதற்காக உருவாக்கப்பட்ட பளிங்குக் குகை வழியா எனவும் நினைக்கத் தோன்றுமல்லவா?

அப்படி எந்தச் சந்தேகமும் வந்து விடக்கூடாது என்பதற்காக; இந்த ஆடம்பர வழி, அலங்கார வழி, பெரும் செலவில் அமைக்கப்பட்ட வழி; கலைவாணர் அரங்கில் கடந்த 3.12.94 ஆம் தேதி நடைபெற்ற ஒரு விழாவுக்காக என்று ஏடுகளில் செய்தி.

விழாவில் முக்கிய விருந்தினர் யார் என்றுதான் தெரியுமே உனக்கு! தமிழக அரசு நடத்திய அந்த விழாவில் முக்கிய விருந்தினர் முதலமைச்சர் ஜெயலலிதா - மத்திய அமைச்சர் பராக் கூறுகிற பாத்திரம் போல அந்த விழாவில் பங்கு பெற்றார்!

சக அமைச்சர் ஒருவரை விமானத்திலிருந்து தள்ளி விடாத குறையாக விரட்டி விடுகிறார்கள் - அதற்காக மத்தியில் இருப்போர் ஒரு யுத்தம் தொடுக்க வேண்டாம்; கொஞ்சம் மான ரோஷத்துடனாவது நடந்து கொள்ள வேண்டாமா?

எதிர்பார்க்க முடியாததுதான் - நண்பர் சிதம்பரம் அவர்கள் மத்திய அமைச்சராகத் தமிழகம் வந்தபோதே; திருச்சி விமான நிலையத்தில் அவரைப் படுத்தியபாடு சாதாரணமானதா?

உள்துறை அமைச்சர் சவான் தமிழகம் வந்தபோது அவருக்குத் தரப்பட்ட மரியாதை - மறந்தா போய்விட்டது!

நெய்வேலிக்கு வந்தாரே ஒரு மத்திய அமைச்சர்; பாஞ்சா எனும் பெயருடையார் - அவர் வந்த நிகழ்ச்சியை முதல்வர் அலட்சியப்படுத்த; ஆயினும் முதல்வருக்கென ஒரு பட்டுச் சேலையைப் பரிசாக எடுத்து வந்த பரிதாபத்தை செய்தியாகப் படித்து சிரிக்காதவர் யார்?

குட்டக் குட்டக் குனிவதற்குக் காரணமே; பெட்டி பெட்டியாக வரவு செலவு; பெரிய இடத்து மட்டத்தில் நடப்பதுதான் என்பது தமிழ்நாட்டார்க்குத் தெரிந்த திறந்த ரகசியம் என்றாகி விட்ட பிறகு, இந்த நாட்டில் இனி எதுவும் நடக்கும்! எனவே பொறுமையிழக்க வேண்டியவர்கள் மக்களே தவிர; பொறுப்பில் இருப்போர் என எதிர்பார்ப்பது மதியீனமேயாகும்!

சரி; அது போகட்டும்; கலைவாணர் அரங்கில் வைபோகத் திருவிழாவாக - விக்டோரியா மகாராணியை வரவேற்கக்கூட இத்துணை விலை உயர்ந்த வாசல் அமைத்திருக்கமாட்டார்கள் எனும் விதத்தில் நடைபெற்ற அந்த நிகழ்ச்சியின் மூல நோக்கமென்ன?

தமிழன் பிறந்த மண்ணுக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டியதைக்கொண்டாட; அறிஞர் அண்ணா முதல்வராக அரங்கிற்குள் நுழையும்போது இப்படி ஒரு பளிங்குமண்டபப் பாதையுண்டா? எவ்வளவு எளிமை! எவ்வளவு எளிமை! அருமை நண்பர் எம்.ஜி.ஆர். முதல்வராகப் பதவியேற்றபோதும்; நான் 1989-ல் மூன்றாம் முறையாக முதல்வராகப் பதவியேற்ற போதும் மக்கள் பெருந்திரளாகக் கூடினரேயன்றி; பதவியேற்கும் நிகழ்ச்சிக்கு பளிங்கு மண்டப நுழைவு வாயிலா மிகப் பெரும் செலவில் அமைக்கப்பட்டது? இல்லையே!

படத்தை மீண்டும் பார் உடன்பிறப்பே; ஒரு நாள் கூத்துக்கு - ஓரிரு நிமிடங்கள் முதல்வர் கடந்து செல்லும் வழிக்கு; எத்தனை வகைவகையான வண்ணங்கள்! எத்தனை மாயாஜாலமிக்க மயன் மாளிகை!

விழாவுக்கு முதல்வர் எப்படி வருகை தந்தார் என்பதை ஏடுகள் வர்ணிக்கின்றன பார்!

ஜெயலலிதா வீட்டிலிருந்து கலைவாணர் அரங்கம் செல்லும் வரையில் வழிநெடுக அவரது பிரமாண்டமான கட்அவுட்கள் வைக்கப்பட்டிருந்தன. கலைவாணர் அரங்கம் அருகில் அவரது நூறு அடி உயர கட்அவுட் வைக்கப்பட்டிருந்தது. கலைவாணர் அரங்கின் முன் இரண்டு பிரமாண்டமான விரிந்த கைகள் - அந்தக் கையில் உலக உருண்டை - அந்த உருண்டை நடுவில் ஜெயலலிதா படம் - முதல்வர் ஜெயலலிதா; நுழைவு வாயிலில் இருந்து மண்டபத்துக்குள் செல்லும்வரையில் கண்ணாடி மாளிகை போன்ற பளிங்கு மண்டப அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. அவர் நடந்து செல்ல ரோஜா மலர்கள் கொட்டிய பாதை - மூவாயிரம் பள்ளிக்குழந்தைகள் ஜெயலலிதாவை மலர்தூவி வரவேற்றார்கள்.

எல்லாம் சரி; விழா எதற்காக என்பதை நீயும், நானும், நாடும் மறந்து விடலாகாதல்லவா? விழா; ஊனமுற்றவர்களுக்கு நல்வாழ்வுத் திட்டங்கள் பற்றி விவாதிக்க!

அய்யோ; தமிழா! இந்த நாட்டில் ஜனநாயகமும், காட்சிக்கெளிய தோற்றமும், கடுஞ்சொல் இல்லாத இயல்பும் எந்த அளவுக்கு ஊனமுற்றுக் கிடக்கின்றன பார்த்தாயா; என்று அங்கலாய்க்கத்தான் வேண்டியிருக்கிறது!

மத்திய அமைச்சர் ஒருவரும் மாநில முதல்வரும் கலந்து கொள்ளும் நிகழ்ச்சி; ஊனமுற்றோர் நல்வாழ்வு திட்டங்களைப்பற்றி மக்களுக்கு அறிவிக்க; அவர்களின் ஆதரவைத் திரட்ட!

ஏதோ; புதிதாக இந்த அம்மையார்தான் ஊனமுற்றோர் பற்றி சிந்தித்து, அவர்களுக்கு உதவிட முன்வந்துள்ளதைப் போன்ற ஒரு நாடகம்!

ஏற்கனவே இருந்த அரசுகள் இந்தக் காரியத்தைக் கவனிக்காதது போல; ஒரு முதலைக் கண்ணீர் - முதலமைச்சரின் உருக்கமான பேச்சு; அடா! அடா! என்னே அனுதாபம்; ஏழைகள் மீது பரிவு காட்டும் விழாவுக்கு எத்தனை கட் அவுட்? எத்தனை லட்சம் செலவில் வரவேற்புக் கண்ணாடி மாளிகை வழி? எல்லாம் யாருக்காக? பரிதாபத்திற்குரிய ஊனமுற்றோருக்காக!

தி.மு.கழக ஆட்சியில் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் மறுவாழ்வு இல்லங்கள் அமைத்து

ஏறத்தாழ நாலாயிரம் தொழுநோய் இரவலர்கள், அந்த இல்லங்களில் மறுவாழ்வு பெற்றனர். அவர்களையெல்லாம் ஒவ்வொரு இல்லத்திலிருந்தும் விரட்டுவதற்கான அறிவிப்புகளை அரசு ஆணை மூலம் பிறப்பித்துக் கொண்டே; அந்தத் தொழுநோய் இரவலர்கள் கண்ணீரும் கம்பலையுமாகக் கதறித் துடிப்பதையும், கருணை மனு போடுவதையும் - கதியில்லையா எமக்கு எனப் புலம்பிடுவதையும் ஏறெடுத்தும் பார்க்காமல்; இங்குள்ள இமிடேஷன் எலிசபெத் மகாராணியார், ஊனமுற்றவர்களுக்கு திட்டம் தீட்டுகிறாராம்!

அற்புதமான இரட்டை வேடம் - ஒருபுறம் மறுவாழ்வு இல்லங்களில் உள்ள தொழுநோய் இரவலர்களைத் துரத்தும் நடவடிக்கை; இன்னொருபுறம்; கண்ணாடி மாளிகை வழியமைத்து, கனகமணித் தோரணங்கட்டி, கண்கலங்க முதல்வர் ஊனமுற்றோருக்காக உருக்கமுடன் பேசுகிறாராம் -

உடன்பிறப்பே; இந்த அரசின் திட்ட அறிவிப்புகள் திரிசங்கு நிலையில் இருக்கின்றன என்று, கடந்த ஆண்டே ஏடொன்றில் படித்ததாக எனக்கு நினைவு! ஆனால் இந்த அரசின் திட்டங்கள்; திரிசங்கு நிலையில் கூட இல்லை; திருட்டுக் கூட்டத்தின் கையில் அகப்பட்டுக் கொண்டு திகைக்கின்றன என்பதற்கு; இதோ இந்து ஏடு 5.12.94 மூன்றாம் பக்கத்து வலது மூலையில் படத்துடன் வந்துள்ள செய்தியே சரியான உதாரணமாகும்! ஆங்கிலத்தில் வந்துள்ள அச்செய்தியை அப்படியே தமிழில் தருகிறேன்.

இதோ இந்து தந்துள்ள செய்தி :-

ஆடைகளின் விலை உட்பட அனைத்துப் பொருள்களின் விலையும் நாளுக்குநாள் உயர்ந்து கொண்டே போகிறது. இந்நிலையில் - கொள்ளை மலிவு என்கிற விலையில் - ஆடைகள் கிடைத்தால் - ஆச்சரியப்படாமல் எப்படி இருக்க முடியும்?

சென்னையிலிருந்து கல்கத்தா சென்றிருந்த பத்திரிகையாளர் ஒருவருக்கு - தெற்கு கல்கத்தா மார்க்கெட்டில் இந்த அனுபவம் ஏற்பட்டது. அதுவும் தமிழ்நாடு அரசின் இலவச சீருடை வழங்கும் திட்டம் 1993-94 என்று பெயர் பொறிக்கப்பட்ட ஆடைகள் கொள்ளை மலிவு விலையில் - கல்கத்தாவில்

விற்கப்படுவதை பார்த்தபோது அவர் ஆச்சரியம் மட்டுமல்ல; அதிர்ச்சியும் அடைந்தார். இலவச சீருடை திட்டத்தின் கீழ் தயாரான துணிகள் ஏராளமாய் அந்தக் கடையில் இருந்தன. கல்கத்தாவில் இந்த உடைகளை வாங்கும் மக்களில் எத்தனை பேருக்கு - இது பற்றித் தெரிந்திருக்குமோ! ஆனால் - சென்னைக்கு அருகிலுள்ள மாவட்டங்களைச் சேர்ந்த பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மத்தியில் - இந்த வருடம் நமது பள்ளிக் குழந்தைகளுக்கு சீருடை வந்து சேரவில்லையே என்ற வருத்தம் நீடிக்குமானால் - அதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை.

இந்து ஏடு வெளியிட்டுள்ள இச் செய்தியிலிருந்து என்ன புரிகிறது உடன்பிறப்பே; அம்மையார் அறிவிக்கும் எந்தத் திட்டமாக இருந்தாலும் அதனால் பயனுண்டு; ஆனால் யாருக்கு? யாருக்காக அறிவிக்கிறாரோ - அவர்களுக்கல்ல! ஆளுங்கட்சியில் இருப்பவர்களுக்கு! ஆனால் மக்களுக்கு? கட் அவுட்டுகளும் மலர் பாதைகளும் கண்ணாடி மாளிகைகளும்தான் மிச்சம்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

06-12-1994

2213. முன்னோடிப் போராட்டம்!

உடன்பிறப்பே,

நாம், அறப்போர்க்களத்திற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் வேளையில்; நான்கு மாநிலத் தேர்தல் களத்துச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சியின் புதிய பொருளாதாரக் கொள்கையும், டங்கல், காட் போன்ற ஏழை எளிய நடுத்தர மக்களையும் தொழிலாளர் வர்க்கத்தையும் அச்சுறுத்துகின்ற திட்டங்களும் ஒப்பந்தங்களும் இந்தியாவை மீண்டும் ஒரு காலனி நாடாக மாற்றும் அபாயமென்பதை தேசிய முன்னணியினர் எடுத்துரைத்தபோது; அதற்குப் பதிலாக வெளியிடப்பட்ட ஏளனங்கள், ஏகடியங்களின் தலையில் சம்மட்டியால் ஓங்கி அடித்து; இப்போது வாக்காளர்களும் தங்கள் தீர்ப்பின் வாயிலாகச் சரியான பாடத்தைக் கற்பித்துள்ளார்கள் என்பதின் வெளிப்பாடே இந்தத் தேர்தலில் கிடைத்துள்ள முடிவாகும்.

போபர்ஸ் போன்ற பழைய ஊழல்கள், பங்குச் சந்தை, சர்க்கரை பேரம் போன்ற புதிய ஊழல்கள் நெருப்புக் கோழிகளைப்போலத் தலையை மட்டும் மறைத்துக் கொண்டு தப்பித்து விடலாமென்று கருதி; சிக்கிக் கொண்ட கதையாகத்தான் ஆகிவிட்டிருக்கிறது; இந்தத் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் பார்க்கும்போது!

ஆந்திராவிலும், கர்நாடகத்திலும் ஆட்சியில் இருந்தோர் இழைத்த குற்றங்கள் - நடத்திய தவறுகள் - புரிந்த ஊழல்கள்; இத்தகைய தண்டனையை அவர்கள் பெறுவதற்குக் காரணமாயிருந்தன என்பதைத் தோல்வியடைந்துள்ள நிலையில் அவர்கள் எண்ணிப் பார்க்கிறார்களோ இல்லையோ; வெற்றி மீது வெற்றி வந்து என்னைச் சேரும் என்று வீம்பு பேசிக் கொண்டு, மக்கள் விரோத ஆட்சிதான் நடத்துவேன்; இதனை மக்கள் நல

ஆட்சியென நீவிர் அங்கீகரித்தாக வேண்டும் - அதற்குரிய விலையும், பரிசும், பதவியும், சலுகையும் சகலமும் பெற்றிடுவீர்! எனக் கூறி, அவ்வாறே அள்ளித் தந்து அடாவடிப் புரவியிலமர்ந்து, அராஜகக் கொடியேந்தி நிற்கும் அல்லிதர்பார்கள் எண்ணிப் பார்த்தே தீர வேண்டும். ஆனால்; எண்ணிப் பார்த்திட இடம் தராது அவர்தம் நெஞ்சத்தில் நிரம்பியுள்ள எதேச்சாதிகார மனப்பான்மை!

தேசிய முன்னணித் தலைவர் என்.டி.ஆர். அவர்களின் தலைமையில் இயங்கும் தெலுங்கு தேசம் ஆந்திரமாநிலத்தில் பெற்றுள்ள வெற்றி; மகத்தானது! மகிழ்ச்சியால் நம்மைத் துள்ள வைப்பது!

அதேபோல்; கர்நாடகத்தில் ஜனதா தளம் பெற்றுள்ள வெற்றியும்; ஒரு பெரும் சரித்திரத் திருப்பத்தை உருவாக்கக் கூடியது!

இந்த இருமாநிலங்களிலும் நமது கழகம் பரவலான அளவுக்குப் பெரும் வலிவுடன் இல்லையெனினும்; சில தொகுதிகளில் நமக்குள்ள வலிவு முழுவதையும் இந்த வெற்றிக்குப் பயன்படுத்தியுள்ளோம் என்பதை நினைத்துப் பூரிப்பு கொள்கிறேன்.

இரு மாநிலங்களேயன்னியில்; கோவாவில் காங்கிரஸ் இழுபறியில் இருக்கிறது. சிக்கிம் தேர்தலில் மிகப் பெரும் வீழ்ச்சிக்கு உள்ளாகியிருக்கிறது. அங்கே ஒரு துரோகியைப் பிடித்து; அவர் மூலம் அரசியல் சதி நடத்தி; மக்கள் சக்திக்கு எதிராக நடத்திய செயலுக்குப் பெரிய அடி விழுந்துள்ளது என்றே கூறலாம். ஆந்திராவில் அன்று கிடைத்த பாஸ்கர ராவ் போல ஒருவரைப் பிடித்து துரோக நாடகமாடிக் கொண்டிருந்த காங்கிரசுக்கு, ஜனநாயகம் உணர்த்தியுள்ள நேர்த்தியான உண்மைதான் இந்தத் தேர்தலில் பெற்றுள்ள தீர்ப்பு!

இப்படித் தீர்ப்புகள் வந்துகொண்டிருக்கும் நேரத்திலேகூட; இங்கே அறப்போர்க் களத்தில் நிற்கும் கழகத்தினர் மீதும், தோழமைக் கட்சியினர் மீதும் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிடும் காரியத்தில் மிக வேகமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது இங்குள்ள ஜெயலலிதா அரசு!

டிசம்பர் 15 ஆம் நாள் மறியலில் கழகமும் தோழமைக் கட்சிகளும் ஈடுபடுவதை முன்னிட்டு; டிசம்பர் 9 ஆம் நாள் இரவு

முதலே நமது கழக நிர்வாகிகளையும், செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்களையும், அதேபோல தோழமைக் கட்சியினரையும் கைது செய்யும் படலம் ஆரம்பமாகிவிட்டது.

கேட்டால், சமூகவிரோதிகளை முன்கூட்டிக் கைது செய்கிறோம் என்பார்கள்!

கட்சிகளின் நிர்வாகிகள், பொறுப்புகளில் உள்ள உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவருமே சமூக விரோதிகளாம்! - உடன்பிறப்பே; நடப்பது என்னவென்றால் உண்மையிலேயே சமூகவிரோதிகளின் தோள்மீது காவல்துறையினர் கைபோட்டுக் கொண்டு நடந்தும், கார் சவாரி செய்தும், அவர்கள் அடையாளம் காட்டும் கட்சிகளின் தோழர்களை, தொண்டர்களை, முன்னணியினரைக் கைது செய்கிறார்கள்.

இந்த முறையைத் தடுத்திட வேண்டுமென்று கழகப் பொருளாளர் வீராசாமி, நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்கு முடிவடையாமல் இருக்கும்போதே; இப்படியொரு நடவடிக்கை, நாடாளுகின்றவர்களால்!

சட்டரீதியாக இந்தப் பிரச்சினையை நாம் சந்திக்கிற அதே நேரத்தில், டிசம்பர் 15 அறப்போர் மறியல் போராட்டத்தில் இலட்சக்கணக்கானோர் களம் புகுந்திடுவர் என்ற செய்தி மாநிலத்தின் பல திசைகளிலும் இருந்தும் வந்து கொண்டிருக்கிறது!

விரைவில்; இந்த ஊதாரித்தனமிகுந்த ஊழல் ஆட்சியை - அடக்குமுறை அராஜக ஆட்சியை - ஜனநாயகத் தேர்தல் களத்தில் சந்தித்து; ஆந்திராபோல்; கர்நாடகத்தைப்போல் வீட்டுக்கு அனுப்புவதற்கு - ஒரு முன்னோடிப் போராட்டம்தான் டிசம்பர் 15 என்பதை, உடன்பிறப்பே! மறவாதேயென்று இப்போதே சொல்லி வைக்கிறேன்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

11-12-1994

2214. புறப்பட்டாய்! புறப்பட்டாய்!
புறப் பாட்டாய்!

உடன்பிறப்பே,

உன் தோள் வலிமையை - தொகை தொகையாய்க் குவியும் படை வலிமையை - தோழமைக் கட்சிச் செயல்வீரர்களின் துணை வலிமையை; எதேச்சாதிகார ஆட்சியின் இதயம் துணுக்குற்று நின்று போகுமளவுக்குப் புலப்படுத்திக் காட்டிவிட்டாய்!

தி.மு.க. ஏது? எங்கே இருக்கிறது? அது தேய்ந்து தேய்ந்து தேவாங்குபோல ஆகி, ஓய்ந்து கிடக்கிறதே என்றும், அதன் தோழமைக் கட்சிகளோ எனில்; அவை இளைத்துப் போன பூனைக்குட்டிகளாய் எலும்பும் தோலுமாய்த் தள்ளாடுகின்றன என்றும் நினைத்தோர் - தமது இதயங்களை நஞ்சில் நனைத்தோர் - ஓ! நீங்களா இன்னும் இருக்கிறீர்களா? என அலட்சியமாகக் கனைத்தோர்; வியப்புற, வியப்புற; வில்விட்டுப் புறப்பட்ட கணைகளென, விஷப்பாம்பின் பல்பட்டு மயக்கமுற்று வீழ்ந்துள்ள தமிழகத்தை விடுவித்து விழிப்புணர்வு கொள்ளச் செய்திடப் புறப்பட்டாய்! புறப்பட்டாய்! ஆம்; புறப் பாட்டாய்! புறப் பாட்டாய்!

டிசம்பர் 15ஆம் நாள் காலை அண்ணா அறிவாலயத்து முகப்பில் நமது கழகத்தின் பொதுச் செயலாளர் பேராசிரியரையும் - துணைப்பொதுச் செயலாளர் நாஞ்சிலாரையும் தோழமைக் கட்சிகளின் தலைவர்களையும் அறப்போர் மறியலுக்கு அன்புடன் வழியனுப்பி வைத்துவிட்டு; கழகத்தின் அலுவலக அறைக்குள் சென்று அமருகிறேன்; அப்போது அடிக்கத் தொடங்கிய தொலைபேசிகளின் மணியோசை மாறி மாறி ஒலித்துக் கொண்டிருந்தனவே தவிர ஒரு விநாடியும் அவற்றுக்கு ஓய்வில்லை.

உண்மையைச் சொல்லுகிறேன் உடன்பிறப்பே; உளமாரச் சொல்லுகிறேன் - உன்னை நானும் என்னை நீயும் முழுமையாக

உணர்ந்தவர்கள் என்ற உரிமையுடனும் உவகையுடனும் சொல்லுகிறேன் - 1967, 1971, 1980, 1989 ஆகிய ஆண்டுகளில் இடைவிடாமல் தொலைபேசி மணியடித்து இந்தத் தொகுதியில் நமக்கு வெற்றி - அந்தத் தொகுதியிலும் நமக்கே வெற்றி - வாக்கு வித்தியாசம் பத்தாயிரம், பதினைந்தாயிரம் என்று செய்திகள் வந்தபோது ஏற்பட்ட மகிழ்ச்சியை விட; இத்தொலைபேசிகளில் இந்த மாவட்டத்தில் ஏழாயிரம் பேர் கைது; அந்த மாவட்டத்தில் பத்தாயிரம் பேர் கைது; என இலட்சம் பேர்களைத் தாண்டுகிற அளவுக்குக் கணக்கு சொல்லப்பட்டபோது ஏற்பட்ட மகிழ்ச்சியிருக்கிறதே; அடடா! புல்லரித்துப் போய்விட்டேன் போ!

இனி செல்லரித்துப் போகுமோ தமிழர் வாழ்வு என ஏங்கிடத் தேவையில்லையடா தம்பி என்று அறிவாலயத்தின் சுவரில் ஒளியுமிழ்ந்து கொண்டிருக்கும் அண்ணாவின் படம் என்னைப் பார்த்து இயல்பான குறுநகை காட்டிக் கூறுவது போலிருந்தது.

முன்கூட்டிக் கைதானோர் முப்பதாயிரம் பேர் அன்னியில்; அறப்போர் நாளில் மட்டும் கைதானோர் எண்ணிக்கை ஒரு இலட்சத்தைத் தாண்டியது எனும் செய்தி; எனக்குச் செந்தேன்! செம்மாதுளை முத்து! சிந்தை அணு ஒவ்வொன்றையும் சிலிர்த்திடச் செய்திடப் புரட்சிக் கவிஞர் பாடினாரே; கிளம்பிற்றுக்காண தமிழச் சிங்கக் கூட்டமென்று - அந்தப் பாட்டை அவரே முழங்கிடக் கேட்டு கிடைத்திடுவது போன்ற இன்பம்!

அப்படியொரு இன்பத்தைப் பெற்றேன்; தொலைபேசி வாயிலாக, ஆங்காங்கு சிறைப்பட்டோர் பற்றிய செய்திகள் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தபோது!

அதுமட்டுமா? சிறைச்சாலைகளில் இடமில்லையாம் - சிறைக் கோட்டங்கள் நிரம்பி வழிகின்றனவாம் - கைது செய்யப்பட்ட மகளிர், சென்னையிலிருந்து வேலூர் சிறைக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர் - விருதுநகரில் கைதானோர் ரிமாண்டு செய்யப்பட்டு, மதுரை சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டால் அங்கு ஏற்கனவே கைது செய்யப்பட்டு ரிமாண்டு வாங்கப்பட்ட பல்லாயிரம் பேர் சிறைக்குள் இடமின்றி சிறைச்சாலை வாசலிலேயே வாகனங்களில் அமர்த்தி வைக்கப்பட்டுள்ளனர் என்றோர் செய்தி! குமரி, நெல்லை, சிதம்பரனார் மாவட்டங்களில் கைதாகி ரிமாண்டு செய்யப்பட்டோர்க்கு பாளையங்கோட்டைச் சிறைச்சாலையில்

இடமின்றி; எந்தவூர் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்வதெனக் காவல்துறையினர் அலைந்து அலைந்து அயர்ந்து போயினராம்!

கோவை சிறைக் கோட்டம் நிரம்பி வழிந்து - அதற்கு மேலும் எழுபது பேருந்துகளில் ரிமாண்டு செய்யப்பட்ட அறப்போராட்ட வீரர்கள் சிறைச்சாலை வாசலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காட்சி, கண்கொள்ளாக் காட்சியாம்!

தஞ்சைத் தரணியில் இருமாவட்டங்களிலும் மட்டும்; கைதானோர் எண்ணிக்கை பத்தாயிரத்தைத் தாண்டிவிட்டதாம்! எந்த சிறைச்சாலைக்குக் கொண்டு செல்வது? திருச்சி சிறை அதிகாரிகள், கை விரித்துவிட்டனராம்! ஏற்கனவே எத்தனை ஆயிரம் பேர், சிறைவாசலில் நிற்கிறார்கள் தெரியுமா? என எதிர்க்கேள்விகள் போட்டன எல்லா சிறைச்சாலைகளும்! முன் எச்சரிக்கையாகக் கைது செய்யப்பட்டு ரிமாண்டு செய்து சிறை வைக்கப்பட்டோர், போராட்ட நாளன்று கைது செய்யப்பட்டு ரிமாண்டு செய்து சிறையில் அடைக்கப்பட்டோர் - சிறைச்சாலைகளுக்கு வயிறு புடைத்து வாயினால் மூச்சு விடவும் கஷ்டப்படும் நிலையை உருவாக்கிவிட்ட பிறகு; மேலும் மேலும் பல்லாயிரக்கணக்கில் அறப்போர் வீரர்களை அடைக்க முயன்றால்; புடைத்திட்ட சிறைக்கோட்டங்களின் வயிறுகள் வெடித்துவிடும் என அதிகார வர்க்கம் ஆளவந்தாருக்கு அச்சுறுத்துகிற அளவுக்கு நிலைமை முற்றிப் போய்விட்டது!

கைது செய்யப்பட்டோர்க்கு சிறையில் இடமில்லை! காலையில் சிறைப்பட்டோர்க்குப் பல ஊர்களில் உணவு தரப்படவில்லை! மன்னார்குடி போன்ற பகுதிகளில்; எங்களை முறைப்படி சிறைச்சாலைக்கு அழைத்துப் போகாவிடில் சாலை மறியல் செய்வோம் என எழுந்தனர் ஈராயிரத்துக்கும் மேற்பட்டோர் ஆடவர், பெண்டிர்!

அரசு திணறியது! அலட்சியப்படுத்தினோமே; ஆகாயமளாவ நமக்கு எதிர்ப்பு வளர்ந்து உயர்ந்து நிற்கிறதே! என்று அலறியது!

உடன்பிறப்பே, நீயும் தோழமைக் கட்சிச் செயல்வீரர்களும், இந்த ஆணவங்கொண்ட ஆட்சியை அலற வைத்து விட்டீர்கள்!

இத்தனைக்கும் பிறகுகூட கைது செய்யப்பட்டோர் எண்ணிக்கை பதினைந்தாயிரம் தான் என்று பம்மாத்து செய்கிறார்கள் பார்த்தாயா?

முன்கூட்டிக் கைதானவர் இருபதாயிரம் பேர் என்றும், மறியல் நாளன்று கைதானவர் முப்பதாயிரம் பேர் என்றும், தினமலர் கூட செய்தி வெளியிட்டிருக்கிறது. ஆமாம்; தினமலர்தான்!

ஆனால் காவல்துறை கதைக்கிறது பதினைந்தாயிரம் பேர்தான் என்று!

பதினைந்தாயிரம் பேர்தான் என்றால் சேலம், கோவை, சென்னை, திருச்சி, மதுரை, பாளையங்கோட்டை, கடலூர், வேலூர் ஆகிய சிறைச்சாலைகள் நிரம்பி வழிவானேன்? சிறைகளின் உள்ளே மட்டுமின்றி, சிறைகளின் வெளிப்புற வாசல்களிலும் நூற்றுக்கணக்கான பேருந்துகளில் ரிமாண்டு செய்யப்பட்ட அறப்போர் வீரர்களை நிறுத்தி வைப்பானேன்?

அதுமட்டுமல்லவே; கைது செய்யப்பட்டவர்கள் ஆயிரக்கணக்கானவர்களை ஆங்காங்கு திருமண மண்டபங்களிலே தங்க வைத்து - என்ன செய்வது; எங்கே அழைத்துச் செல்வது எனத் தெரியாமல்; காவல்துறையினர் கன்னத்தில் கைவைத்துக் கொண்டு இருப்பானேன்? ரிமாண்டு செய்யப்படுவதிலேகூட நாலு நாள் ரிமாண்டு, பத்து நாள் ரிமாண்டு, பதினைந்து நாள் ரிமாண்டு என நீதிமன்றங்களில் காவல்துறையினர் அரசின் சார்பாக ஓர் ஊருக்கு ஓர்விதமாக வலியுறுத்துவானேன்?

பிறகு திடீரென நள்ளிரவில் ஓர் ஆணை பிறப்பித்து, ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோரையும் விடுதலை செய்துவிட்டதாக அறிவிப்பானேன்?

டிசம்பர் 15 காலையில்நான் சென்னையில் அறப்போர்க்களம் சென்ற தலைவர்களை வழியனுப்பும்போது சொன்னேன்; இது கொடுமையான அரசு மட்டுமல்ல; கோமாளி அரசுமாகும்! என்று!

அதனை ஒரேநாளில், பல உத்திரவுகள்மூலம் இந்த அரசு மெய்ப்பித்துக் காட்டிவிட்டது!

தருக்கமிகு ஆட்சியிலிருந்து தமிழ் மக்களை விடுவித்திட, பல களங்களில் வெற்றிகளைப் பெற வேண்டியிருப்பினும் இந்த முதற்கட்ட வெற்றிக்கு முழுமுதற் காரணம் உன்போன்ற உடன்பிறப்புகளும் தோழமைக் கட்சிகளின் செயல்வீரர்களுமன்றோ!

திமுக அமைப்புச் செயலாளர்
பேராசிரியர் அன்பழகன்
இல்லம் தாயகம்
சென்னை-18
அறிவாலயம்

“உடன்பிறப்பே,
புறப்பட்டாய்! புறப்பட்டாய்!
புறப் பாட்டாய்!
புறப்பட்டாய்! புறப்பட்டாய்!
புறப் பாட்டாய்!

புலிப் போத்தே; உன்னை நான் வாழ்த்துகிறேன்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

17-12-1994

42233
B 894.8116
Comp. 26

2215. மீண்டும் தொடர வேண்டும் முழுப்புரட்சி!

உடன்பிறப்பே,

இந்த ஆண்டு ஜூன் திங்கள் 9ஆம் நாள் உனக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேனே; அந்த வாசகம் நினைவிருக்கிறதா?

போபர்ஸ் ஊழல், டிராக்டர் ஊழல், அர்ஷத் மேத்தா ஊழல், இப்படிப் பல ஊழல் கொழுப்பாடுகளைத் தொடர்ந்து ஓடிவரும் குட்டி ஆடாக இப்போது சர்க்கரை ஊழல் வந்து சேர்ந்திருக்கிறது. இந்த ஊழலின் காரணமாக சர்க்கரை விலை ஆறு ரூபாயிலிருந்து இப்போது பதினாறு ரூபாய் அளவுக்கு உயர்ந்து மக்கள் மனத்தைக் கசந்து போகச் செய்திருக்கிறது

- எனத் தொடங்கி அந்தக் கடிதத்தில் நான் மேலும் குறிப்பிட்டிருந்தவாறு; அந்தப் பிரச்சினையில் இந்திய உணவுக் கழகமும் - பிரதமரின் அலுவலகமும் - துறையின் அமைச்சகமும் - ஒன்றோடொன்று மோதிக்கொண்டு; அந்த நேரத்துக்குப் பிரச்சினையை சமாளிக்கக் கமிட்டியொன்று அமைக்கப்பட்டது. ஜூலை 17ஆம் நாள் அறிவிக்கப்பட்ட அந்தக் கமிட்டியின் பெயர் கியான் பிரகாஷ் கமிட்டி என்பதாகும். அதனைச் சில ஏடுகள் ஞானபிரகாஷ் கமிட்டி என்றும் அழைக்கின்றன. பொதுவாகக் கமிட்டி என்றாலே அது, பிரச்சினையைக் கிடப்பிலே போடுவதற்காகத்தான் என்ற புதிய கலாச்சாரத்தை உருவாக்கிய பெருமை காங்கிரஸ் ஆட்சியையே சேரும். அதனால்தான் பேராசிரியர் கல்கி அவர்கள்; ஒரு பிரச்சினையை சமாளிக்க வேண்டுமெனில் அதன் தலையில் ஒரு கல்லைப் போடு; இல்லையேல் ஒரு கமிட்டியைப் போடு என்றார் போலும்!

மத்திய காங்கிரஸ் ஆட்சியினர் அமைந்திடும் கமிட்டிகள் விஷயத்தில் ஒரு வித்தியாசமான மாற்றம்; அண்மைக் காலங்களில்

கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதாவது கமிட்டியினர் விசாரித்து அளிக்கும் அறிக்கையை வெளியிடாமலே வைத்து விடுகிறது - மீறிப் போனால் அந்தக் கமிட்டியின் கண்டுபிடிப்புகள் அரசுக்கு விரோதமாக இருக்குமாயின்; கமிட்டியின் அறிக்கைக்கு மறுப்பு அறிக்கை தயாரித்து வெளியிடுவது.

அர்ஷத்மேத்தாவைப் பிரதானக் கதாநாயகனாகக் கொண்ட பங்குச்சந்தை ஊழல் பற்றி விசாரணை நடத்த நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று மத்திய அரசின் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ராம்நிவாஸ் மிர்தா என்ற காங்கிரஸ்காரர் தலைமையில் அமைக்கப்பட்டது. அக்குழுவில் தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் சிலராகவும் காங்கிரசார் பலராகவும் இருந்தனர். அந்தக்குழு அளித்த அறிக்கையை என்ன காரணத்தினாலோ வெளியிடத் தயங்கி; அதற்குப் பதிலாக சில பேர் மீது நடவடிக்கை என்ற பெயரால் ஒரு கண்துடைப்பு நாடகமாடிட நடவடிக்கைக் குழு அறிக்கை எனும் ஒரு மாற்று அறிக்கையை விட்டு ஆழம் பார்த்தார்கள். ஆனால் நாடாளுமன்ற இரு அவைகளிலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மிகுந்த விழிப்புடன் இருந்து, அந்த ஏமாற்று அறிக்கையை அரசு திரும்பப் பெறவேண்டுமென்று வலியுறுத்தி, தொடர்ந்து பல நாட்கள் இரு அவைகளும் இயங்க முடியாத நிலையை ஏற்படுத்தினர்.

தொடக்கத்திலேயே நெறிமுறையுடனும் - நேர்மையுடனும் நடந்துகொள்ளத் தவறிவிட்ட நரசிம்மராவின் அரசு; வேறு வழியில்லாமல் அந்தக் கண்துடைப்பு நடவடிக்கை அறிக்கையைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, பிறிதோர் அறிக்கை வைக்க எதிர்க்கட்சிகளிடம் உறுதி வழங்கியுள்ளது. அதற்கிடையேதான் சர்க்கரை ஊழல் சம்பந்தமாக விசாரணை செய்த கியான்பிரகாஷ் கமிட்டி; 126 பக்கங்கள் கொண்ட தனது அறிக்கையை அக்டோபர் திங்களில் மத்திய அரசிடம் அளித்தது.

அந்த அறிக்கை அமைச்சரவையில் உள்ளவர்களை குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகிறது என்பதைக் கண்டவுடன் அலறித் துடித்து; அந்த அறிக்கையை அப்படியே பதுக்கிவிட முனைந்து; திசை திருப்பும் காரியமாக அமைச்சரவைக் கமிட்டியின் செயலாளர் சுரேந்திரசிங் தலைமையில் மீண்டும் ஒரு கமிட்டி அமைத்து; அக்கமிட்டி, கியான் பிரகாஷ் கமிட்டியின் அறிக்கையை

பரிசீலிக்குமெனத் தெரிவித்தது நரசிம்மராவின் அரசு! நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் விடுவதாக இல்லை!

டெல்லியில் புயல் வேகமாக வீசத் தொடங்கியவுடன்; அரசியலில் நாணயமிக்கவர் எனப் பாராட்டப்படும் அமைச்சர் அந்தோணி அவர்கள் தனது பதவியை உதறினார். இத்தனைக்கும் அவருக்கும் இந்தப் பிரச்சினையில் எள்முனையளவு தொடர்பும் இல்லை. ஆனால் ஊழலுக்கு முழுமையாகப் பொறுப்பேற்று பதவி துறந்திட வேண்டியவர்கள்; ஆம் - கியான் பிரகாஷ் கமிட்டி, சுட்டிக் காட்டியவர்கள் அட்டைபோல் ஒட்டிக் கொண்டு அசைய மறுத்தார்கள்.

கியான் பிரகாஷ் கமிட்டியின் அறிக்கையை வெளியிட்டால்தான் நாடாளுமன்ற இரு அவைகளும் நடைபெற முடியும் என்ற நிலை எதிர்க்கட்சிகளால் ஏற்பட்டவுடன்; இனியும் வாய் ஜாலம் பேசி ஏமாற்ற முடியாது என்று கருதி, அந்த அறிக்கையை நாடாளுமன்ற நூல் நிலையத்தில் உறுப்பினர்கள் படிப்பதற்கு வைப்பதற்கு அரசு இணங்கிப் பணிந்து வந்துள்ளது.

அந்த அறிக்கையை ஏன் மறைத்தார்கள் என்பதற்கான காரணத்தை; அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விபரங்களைச் சுருக்கமாகப் படித்தாலே புரிந்து கொள்ள முடியும்.

1 மத்திய உணவுத்துறை இணை அமைச்சர் கல்பநாத் ராய்தான் பலகோடி ரூபாய் சர்க்கரை இறக்குமதி ஊழலில் முழுமையாகத் தொடர்புடையவர்.

2 சர்க்கரை இறக்குமதி செய்திட கட்டுப்பாடில்லாத உரிமத்தின் கீழ் அனுமதிக்க அரசு தாமதித்தது கண்டிக்கத்தக்கது.

3 சர்க்கரை விலை மிக அதிகமாகப் பன்மடங்கு உயர்ந்திட மத்திய அரசின் நிறுவனமான எஸ்.டி.சி.யே. முக்கிய காரணமாக இருந்திருக்கிறது.

4 சர்க்கரை ஆலைகளின் லாபத்தைப் பெருக்கும் வண்ணம் அவர்களுக்கு ஆதரவாக செயல்பட்ட அமைச்சர்; சர்க்கரை விலை உயர்வுக்கு நியாயம் கற்பித்துப் பேசி வந்தது அவரது பொறுப்பில்லாத் தனத்தையே உணர்த்துகிறது.

இவையும் இன்னும் பல குற்றச்சாட்டுகளும் அவற்றுக்குப் பொறுப்பானவர்கள் பற்றிய விபரங்களும் கியான்பிரகாஷ் கமிட்டியினால் அறிக்கை வடிவில் தரப்பட்டதை; நேர்மை, நீதி, நியாயம், மனச்சாட்சி இவற்றில் அக்கறையுடையவர்களாக மத்திய அரசை நடத்துவோர் இருந்திருப்பின்; ஒருக்கணமும் தாமதமின்றி நாடாளுமன்றத்தில் வெளியிட்டு, நாட்டுக்கும் அறிவித்து, கல்பநாத்ராய் போன்ற அந்த ஊழல் தொடர்பாளர்களை வீட்டுக்கு அனுப்பியிருக்க வேண்டும்.

ஆனால் அதற்கு மாறாக; எலியைப் பிடிக்க மலையைக் கெல்லியதுபோல என்பார்களே; அதைப் போல எதிர்க்கட்சிகள் இடைவிடாமல் போராடியல்லவா; ஓர் ஊழல் எலியை ஊரார் மத்தியில் கொண்டு வந்து நிறுத்த வேண்டிய அளவுக்கு ஆகிவிட்டிருக்கிறது!

ஏழை, எளிய, நடுத்தர மக்கள், தொழிலாள வர்க்கத்தினர் வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி, நேரடியாகவும் மறைமுகமாகவும் செலுத்திக் கொண்டிருக்கிற வரிப்பணம்; இப்படிப் பல்வேறு ஊழல் தலைப்புகளில் தனிப்பட்டோர் சிலர்; தடித்து, தழைத்து, செழித்து, சிரித்து வாழ்வதற்குப் பயன்படுத்தப்படும் கொடுமையை எதிர்த்துக் குமரி முதல் இமயம் வரை எரிமலையாய் மக்கள் சக்தி, குமுறிக் கிளம்ப வேண்டும்! ஜெயப்பிரகாஷ் நாராயண் தொடங்கி நடத்திய அந்த முழுப்புரட்சி இடையிலே தொய்வடைந்து விட்டது! அதனை மீண்டும் தொடர்ந்தாக வேண்டும்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

18-12-1994

2216. முதல்வர் ஆளுநர் மோதலில் உச்சகட்டம்!

உடன்பிறப்பே,

தமிழக ஆளுநர் சென்னாரெட்டி அவர்கள் தமிழகத்தில் நடைபெறும் ஜெயலலிதா அரசு குறித்து அளித்துள்ள பேட்டியைப் பற்றி பிரச்சினைகளும் - வாதப்பிரதிவாதங்களும் எழுந்துள்ளன! ஓர் ஆளுநர் மாநில அரசின் நடவடிக்கைகள் குறித்து அந்த அரசுக்குச் சாதகமாகவோ பாதகமாகவோ மத்திய அரசிடம் அறிக்கை கொடுக்கலாம். ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்டு நடைபெறும் ஒரு ஆட்சியை; அந்த ஆட்சி நடைபெறும் மாநிலத்தில் உள்ள ஆளுநர் வெளிப்படையாகக் கடுமையாக விமர்சித்து; மத்திய அரசுக்குத் துணிவிருந்தால் இந்த மாநில ஆட்சியை டிஸ்மிஸ் செய்யவேண்டும். என்கிற அளவுக்கு டெல்லிச் செய்தியாளர்கள் கூட்டத்தில் கூறியிருப்பது சரியா; என்கிற கேள்வி எழாமல் இல்லை!

என்னதான் அவரது பொறுமை சோதிக்கப்பட்ட போதிலும்; டெல்லிச் செய்தியாளர் கூட்டத்தில் ஆளுநர் அவ்வாறு பேசியிருக்கத் தேவையில்லை என்று கருதுகிற காரணத்தினால்; ஆளுநர் சொல்லியுள்ள குற்றம் குறைகள், ஊழல்கள், முறைகேடுகள், சட்டம் ஒழுங்குச் சீர்கேடுகள் ஜெயலலிதா ஆட்சியில் இல்லை என்று எவராலும் சொல்லிவிட முடியாது.

அரசியல் சட்டத்தில் உள்ள 356வது பிரிவு என்பது; மத்தியில் எந்தக் கட்சியின் ஆட்சி நடக்கிறதோ - அந்தக் கட்சிக்கு எதிரான கட்சி ஆளுகிற மாநிலத்தில் அந்த ஆட்சியின் தலைக்கு மேலே தொங்குகிற கத்தியாகவே இருந்து வருகிறது.

மத்தியில் ஜனதா ஆட்சி மொரார்ஜிதேசாய் தலைமையில் நடைபெற்றபோதே மாநிலங்களவையில் முரசொலி மாறன்

அரசியல் சட்டத்தில் உள்ள 356வது பிரிவை அகற்றிட தனி நபர் மசோதா ஒன்று கொண்டு வந்து விளக்கமுரைத்திட்டபோது; அதனை ஏற்றுக் கொள்ளாத நிலையெடுத்தது மாநிலங்களவையில் இருந்த அ.தி.மு.க. உறுப்பினர்கள் என்பதை வரலாறு மறைத்துவிடாது.

மாநில ஆட்சியை மத்திய அரசு கலைப்பதற்கு 356வது பிரிவும்; கையொப்பமிட்டுச் சம்மதம் வழங்க குடியரசுத் தலைவரும்; மாநில அரசைக் கலைப்பதற்குரிய காரணங்கள் இவையெனப் பட்டியலிட்டு அறிக்கை தருவதற்கு மாநில ஆளுநரும்; என்ற நிலை இன்றளவும் இருக்கிற காரணத்தினால்தான் 356வது பிரிவு கூடாது என வாதிட்டுக் கொண்டிருக்கிற தி.மு.க. மற்றும் தேசிய முன்னணியினுடனான இடதுசாரிக் கட்சிகள் எல்லாம்கூட சரி என்று ஒப்புக்கொள்கிற அளவுக்கு உத்திரபிரதேச மாநிலத்தில் பாரதீய ஜனதாவின் கல்யாண்சிங் ஆட்சி கலைக்கப்பட்டது; பாபர் மசூதிப் புயலைத் தொடர்ந்து!

தமிழ்நாட்டில் பாபர் மசூதி எனும் பெயரில் புயலோ, பூகம்ப அதிர்ச்சியோ இல்லை எனினும்; வெவ்வேறு பெயர்களில் புயல் வீசுகிறது - சூறாவளி சுழன்றடிக்கிறது - பூகம்பக் குலுக்கலும் இருக்கிறது!

அதனால்தான் என்னை செய்தியாளர்கள் அடிக்கடி வலியுறுத்திக் கேட்கும் போதெல்லாம்; இந்த ஆட்சியைக் கலைக்கச் சொல்ல மாட்டோம் - கலைத்தால், அதற்காகக் கவலைப்படவும் மாட்டோம் என்றே பதில் அளித்து வந்திருக்கிறேன்.

டெல்லியில் ஆளுநர், செய்தியாளர்களிடத்தில் வெளிப்படையாகவே ஜெயலலிதா அரசு மீதான குற்றச்சாட்டுகளைக் கூறியிருக்கக்கூடாது என்ற அழுத்தமான கருத்துடையவன் நான்! ஆனால் அதே நேரத்தில் ஆளுநர் கூறிய அத்தனை குற்றச்சாட்டுக்களும் கடந்த மூன்றாண்டுக் காலமாக தமிழ்மக்கள் மத்தியில் மேடைகளில், ஏடுகளில் மட்டுமின்றி தெருத் திண்ணைகளில், வீதிகளில், நாலு பேர் கூடுமிடங்களில் பேசப்பட்டு வருபவைதான்!

* அவற்றைத் தொகுத்தளிப்பதற்கு அரசியல் கட்சிகளுக்கென்று ஒருமுறை இருக்கிறது!

* ஆளுநருக்கென்று ஒருமுறை இருக்கிறது!

இவற்றில் திரு. சென்னாரெட்டி அவர்கள்; இரண்டாவதாக நான் குறிப்பிட்டுள்ள முறையைப் பின்பற்றாமல் - முதலாவதாகக் குறிப்பிட்டிருக்கிற முறையை ஏன் பின்பற்றினார் என்று தெரியவில்லை!

இவ்வாறு ஆளுநருக்கும் முதலமைச்சருக்கும் இடையில் வளர்ந்த கசப்பு, வெறுப்பாகி - உச்சகட்டத்திற்குச் சென்றுவிட்டது என்கிற அளவில் ஆளுநரை திரும்பப் பெறுக! என்று ஜெயலலிதாவும் வெளிப்படையான கடுமையான அறிக்கையை ஏடுகளில் வெளியிட்டுள்ளார்.

கடந்த ஓராண்டுக்கு மேலாகவே கவர்னர் - முதலமைச்சர் கருத்து வேறுபாடுகள் பற்றி என்னிடம் நிருபர்கள் வினவியபோதெல்லாம்; இப்படி இருவரிடையே மோதல் வளர்வது மாநிலத்தில் ஆரோக்யமான நிர்வாகத்திற்கு ஏற்றதல்ல என்றே பதில் அளித்து வந்திருக்கிறேன்.

இப்போது அந்த மோதல் வெடித்துச் சிதறிய நிலையில் மாநிலத்தையே பெரும் பரபரப்புக்கு உள்ளாக்கியிருக்கிறது.

கவர்னரின் டெல்லி பேட்டி - ஜெயலலிதாவின் பதில் அறிக்கை; இரண்டையும் குறித்து என்னிடம் ஓரிரு செய்தியாளர்கள் தொலைபேசிமூலம் அபிப்பிராயம் கேட்டனர். அவர்களுக்கு நான் சொன்ன பதில் இதுதான் :-

> தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசைப் பற்றி, ஆளுநர் செய்தியாளர்கள் கூட்டத்தில் வெளிப்படையாகப் பேசியிருக்கக்கூடாது - அதேபோல இப்படி ஒரு உச்சகட்ட நிலைமை உருவாகும் அளவுக்கு ஓராண்டு காலத்திற்கு மேலாகவே முதலமைச்சரும், கவர்னரை அலட்சியப்படுத்தி உதாசீனமாக நடத்தியிருக்கக்கூடாது. கவர்னர் மீது கிரிமினல் வழக்கு தொடர விதிமுறைகள் இடம் தராத காரணத்தால் அவர் தப்பித்தார் என்று அறிக்கை விட்டுள்ள ஜெயலலிதாவின் நிலைமை என்ன? சட்டத்துக்கு விரோதமாக ஒரு முதலமைச்சர் அரசுக்கு சொந்தமான டான்சி நிலத்தை வாங்கியதற்கு - அவர்மீது முதலமைச்சர் என்பதால்தானே அவர்மீது

கிரிமினல் வழக்கு போட முடியவில்லை; கவர்னரிடம் அனுமதி கேட்க வேண்டியுள்ளது.

இந்தப் பதிலைத்தான் பத்திரிகை நிருபர்களுக்குச் சொன்னேன். இப்படி எத்தனை முறைகேடுகள் இந்த ஆட்சியில் நடைபெற்றுள்ளன - கணக்கிட முடியுமா? எண்ணில் அடங்குமா?

சென்னைப் பல்கலைக் கழக துணைவேந்தர் பதவிக்கு, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருந்தவரையே நியமிக்கத்தானே ஜெயலலிதா அரசு துடியாய்த் துடித்தது! யார் அவர்? எந்த அமைச்சருக்கு உறவினர்? எத்தனை வயது கடந்தவர்?

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவிக்கு யாரும் நியமிக்கப்படாததைப் பயன்படுத்திக் கொண்டு ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவர்; கல்வியாளர்கள் இருக்க வேண்டிய அபிலியேஷன் கமிட்டியின் அமைப்பாளராக இருந்து கொண்டு, கடந்த பத்து மாதங்களில் எத்தனை புதிய சுயநிதிக் கல்லூரிகளுக்கு முறைகேடாக அனுமதி அளித்தார் என்பதும், எத்தனை சுயநிதி புதிய பட்டப்படிப்புப் பிரிவுகளுக்கு முறைகேடாக அனுமதி வழங்கினார் என்பதும் - அவற்றில் நடைபெற்ற ஊழலும்; கடந்த செனட் கூட்டத்தில் எவ்வளவு கடுமையாக விமர்சிக்கப்பட்டுத் தடுத்து நிறுத்தப்பட்டன என்பதும்; கல்வித்துறையில் உள்ளோர் அறிந்த உண்மைகளேயாகும்!

வணிக வரி வருவாய் சரிபார்க்கும் அஸஸ்மெண்ட் அதிகாரிகள் துறையில்; அவர்தம் பதவிக்கேற்ப; பத்தாயிரம், இருபதாயிரம் ஒரு இலட்சம் என்று முன் கூட்டியே கட்டாய வசூலை வணிகர்களிடம் நடத்துமாறு எழுதப்படாத ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது கடைவீதிகள் அறிந்த கடைந்தெடுத்த உண்மையல்லவா?

தமிழ்நாடு அரசின் தவறான போக்கினால் ஏற்பட்ட பல கோடி ரூபாய் இழப்புகள் பற்றி அரசின் தணிக்கை அறிக்கையின் மூலமாக வெளியிடப்பட்டுள்ள ஊழல்கள் - ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் அனுமதியில் இந்த அரசின் முறைகேடுகளை உச்சநீதிமன்றமே தீர்ப்பாக வெளியிட்ட செய்தி - இவைகளையெல்லாம் மறைத்திட முடியுமா?

தராசு அலுவலக ஊழியர்கள் கொலை - நீதிமன்ற வளாகங்களுக்குள்ளேயும், வாயிற் புறங்களிலும் கொலை - காவல் நிலையங்களிலும் சர்வ சாதாரணமாகிவிட்ட நிலை - குடவாசலில் மார்க்சிஸ்ட் தோழர் தங்கையன் கொலை - கொலையாளியோ அமைச்சர் காரில் பயணம் - சொந்தக் கட்சி எம்.எல்.ஏ.க்களே சொன்னபடி கேட்காவிட்டால்; அடி, உதை, வெட்டு, குத்து! அமைச்சர்களின் சிலரின் வசம் ஏவுகணைக் குண்டர்படை; அப்படையினர் எதிர்க்கட்சியினர் ரத்தம் குடிக்க ஏவிவிடப்படும் கொடுமை! வக்கீல் விஜயன் மீது அந்தக் குண்டர்களின் பயங்கரத் தாக்குதல் - தேர்தல் தலைமை அதிகாரி சேஷன் வந்து தங்கக் கூடாது என்பதற்காக; தாஜ் கோரமண்டல் ஓட்டலில் திட்டமிட்டு தாக்குதல் - பெரும் சேதம் - அரசுக்குத் தனது கருத்தை நேர்மையாகத் தெரிவித்தது குற்றமென்று பெண் அதிகாரி சந்திரலேகா ஐ.ஏ.எஸ். முகத்தில் திராவக வீச்சு - தனக்கு சாதகமாக தீர்ப்பளிக்காத நீதிபதி மருமகன் மீது கஞ்சாப் பொய் வழக்கு - மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அதிகாரி இன்பசாகரன் வீட்டுச் சோதனையில் அந்நியச் செலாவணி ஆவணங்கள், பல லட்ச ரூபாய் ரொக்கம், தங்கக் கட்டிகள், போலி மருந்து கம்பெனிகள் பட்டியல் இத்தனை கிடைத்தும் - எந்த நடவடிக்கையும் இல்லாத நிலைமை - நிலக்கரி ஊழலில் தொடர்பு இருப்பதால் தலைமைச் செயலாளராக அரிபாஸ்கருக்கு பதவி நீட்டிப்பு தரக் கூடாது என ஆளுநர் மறுத்தும், ஆளுநர் மீறி - அரிபாஸ்கருக்கு பதவி நீட்டித்து ஆணையிட்ட முறைகேடு - இன்னும் எத்தனை எத்தனையோ!

மாவட்டங்களில் முதலமைச்சர் விழாக்கள் - பல நூறு கோடி ரூபாய்களுக்கு திட்டங்கள் அறிவிப்பு - அனைத்தும் காகித அறிவிப்புகளுடன் சரி; பிறகு அவை தானாகவே காலாவதி ஆகிவிடும் மூன்றாண்டு கால சரித்திரம்!

மாதம் ஒரு ரூபாய் ஊதியம் பெறும் முதலமைச்சருக்கு; லட்சம் லட்சமாய் சொந்தப் பணத்தை செலவு செய்திட எங்கிருந்து வந்தது பணம் என்ற வியப்பு!

எந்தக் கோரிக்கை ஆயினும்; அதை நிறைவேற்றிடக் கோடி கோடியாக லஞ்சம் பெறும் முடை நாற்றமெடுத்த ஊழல்!

இத்தனையும் முதலமைச்சர் ஜெயலலிதா; கவர்னரை எதிர்த்து வெளியிட்டுள்ள அறிக்கையில் பயன்படுத்தியுள்ள

வக்கிர உணர்வுக்காரர்
காட்டுமிராண்டித்தனம் வாய்ந்தவர்
நாகரீகமற்றவர்

என்ற வார்த்தைகளால் மறைத்துவிட முடியாது!

ஆளுநர் செய்தியாளர்களிடம் இதுபற்றியெல்லாம் வெளிப்படையாகப் பேட்டியளித்திருக்கக்கூடாது!

அதனால்; இந்த ஆட்சியில் செந்தீ எனச்சுடும் இந்தச் செய்திகள் எல்லாம் உண்மையல்ல என்றும் ஆகிவிடாது!

அன்புள்ள,

மு. கருணாநிதி

19-12-1994

2217. காதுக்கு முழுக்கம்; கண்ணுக்குக் காட்சி!

உடன்பிறப்பே,

மத்திய ஆட்சியில் நடைபெற்றுள்ள சர்க்கரை ஊழல் குறித்து விசாரித்த கியான்பிரகாஷ் கமிட்டியின் அறிக்கையும் - அதை மூடி மறைத்து ஆட்சி அதிகாரம் எனும் போர்வைக்குள் பதுங்கிக் கொள்ள முயற்சித்து, அதன் காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளிலும் எழுந்துள்ள அமளி அடங்கிடுவதற்கு முன்பே, பங்குச் சந்தை ஊழல் பற்றிய பாராளுமன்றக் குழுவின் அறிக்கைக்கு மாறாகத் திருத்தப்பட்டு வைக்கப்பட்டுள்ள நடவடிக்கை எடுப்பதற்கான அறிக்கையையும் A.T.R. எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஏற்றுக்கொள்ள முடியாதெனப் போர்க்குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றன.

ஐயாயிரம் கோடியிலிருந்து பத்தாயிரம் கோடி ரூபாய் வரையில் சம்பந்தப்பட்டுள்ள பங்குச்சந்தை ஊழலின் பிரதான வில்லன் பாத்திரத்தை அர்ஷத் மேத்தா ஏற்றிருந்தாலும், பின்னணியிலும் முன்னணியிலும் இருந்து அந்த ஊழல் தேரை ஊர்வலமாக விட்டவர்களில் அமைச்சர்களும் அதிகாரிகளும் முக்கிய இடம் பெற்றிருந்தனர் என்பதைப் பாராளுமன்ற விசாரணைக்குழு பட்டவர்த்தனமாகச் சுட்டிக் காட்டியிருக்கிறது.

நாடாளுமன்ற இரு அவையின் உறுப்பினர்களைக் கொண்டு, மத்திய அரசின் முன்னாள் அமைச்சர் ராம்நிவாஸ் மிர்தா எனும் காங்கிரஸ் எம்.பி.யின் தலைமையில் அமைக்கப்பட்ட குழு, தனது அறிக்கையில் சுட்டிக்காட்டும் குற்றச்சாட்டுகள் யாவை? அவற்றுக்கு யார் யார் பொறுப்பேற்க வேண்டுமென அக்குழு கூறியது?

பங்குச்சந்தை ஊழலில் மத்திய அமைச்சர்களான நிதியமைச்சர் மன்மோகன் சிங், பெட்ரோலியத் துறை அமைச்சர் சங்கரானந்த், நிதித்துறை இணை அமைச்சர் இராமேஸ்வர்

தாகூர் ஆகியவர்களுக்கும், வங்கி அதிகாரிகளுக்கும், அரசின் அதிகாரிகளுக்கும் தொடர்பு இருக்கிறது என்றும், அதுவும் ரகசியத் தொடர்பாக இருந்துள்ளது என்றும், அதுவே இத்தனை பெரிய ஊழலுக்குக் காரணம் என்றும் நாடாளுமன்றக் குழு, தனது அறிக்கையில் தெளிவாக்கியது.

இப்படி அமைச்சர்களையும் அதிகாரிகளையும் அடையாளம் காட்டிய அக்குழுவின் தலைவர் ஒரு காங்கிரஸ்காரர் என்பதை மறந்துவிடக்கூடாது!

ஆனால் மத்திய அரசு, அதை ஏற்றுக்கொள்ளாமல் மிர்தாகுழுவின் அறிக்கை தொடர்பாக மத்திய அரசே, ஓர் அறிக்கை வெளியிடப் போவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அப்படி வெளியிடப்பட்ட நடவடிக்கை அறிவிக்கை எனப்படும் ஏ.டி.ஆர். அறிக்கையை எதிர்க்கட்சிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. காரணம், நாடாளுமன்றக் குழு, எந்தெந்த மத்திய அமைச்சர்களுக்கும் தொடர்பு உண்டு எனக்குற்றம் சாட்டியதோ அந்த அமைச்சர்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் வைக்கப்பட்ட அறிக்கையாகும் அது!

நாடாளுமன்ற இரு அவைகளும் நடக்க முடியாத அளவுக்கு அமளி நாள்தோறும் தொடர்ந்தால்; ஏ.டி.ஆர். எனப்படும் நடவடிக்கை அறிக்கைக்குத் திருத்தம் செய்து வெளியிட இருக்கிறோம் என்று அரசுத் தரப்பில் கூறப்பட்டது.

அதன்படியும் உடனடியாக அந்த அறிக்கை வைக்கப்படாமல்; மீண்டும் அமளி உருவாகி, இறுதியாக; அந்த திருத்தப்பட்ட அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

அந்தத் திருத்த அறிக்கையை அவையில் தாக்கல் செய்தவர் யார்?

நாடாளுமன்றக்குழு, எந்த மன்மோகன் சிங்கின் மீது தங்களின் ஐயப்பாட்டை செயல்படுத்தியிருக்கிறதோ; அதே மன்மோகன் சிங்தான், திருத்தப்பட்ட ஏ.டி.ஆர். அறிக்கையை அவையில் வைத்துள்ளார்.

நாடாளுமன்றக்குழு சுட்டிக்காட்டியுள்ள இன்னொரு அமைச்சர் சங்கரானந்த் - அவர்தான் போபர்ஸ் ஊழல் விசாரணைக்குழுவின் தலைவராக இருந்து அதை எந்த

அளவுக்கு அமுக்க வேண்டுமோ அந்த அளவுக்கு அமுக்கிப்போட அனுசரணையாகச் செயல்பட்டவர்.

நாடாளுமன்ற விசாரணைக் குழுவினால் ஊழலுக்குத் தொடர்புடையவர்கள் என அறிவிக்கப்பட்ட - மன்மோகன்சிங், சங்கரானந்த், இராமேஸ்வர் தாகூர் ஆகிய மூவரும் நாடாளுமன்றத்தில் விளக்கம் அளித்து விட்ட காரணத்தினால் அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் இல்லை என்பதை இப்போது திருத்தி வெளியிடப்பட்டுள்ள அறிக்கை திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டது.

நெடுநாட்களாக போபர்ஸ் பூதம் ஒரு மூலையில் கிடந்து சமயம் வரும்போதெல்லாம் உறுமிக்கொண்டும், எஞ்சிய நேரங்களில் இருமிக் கொண்டுமிருப்பதைக் காணுகிறது நாடு!

சர்க்கரை வியாதி வந்த மனிதனுக்கு எத்துணை பலவீனமோ; அத்துணை பலவீனத்தை இந்த சர்க்கரை பேர ஊழலால் மத்திய ஆட்சியினர் இன்று உணர்ந்து குறுகிக் கூனி நிற்கின்றனர்!

அத்துடன் பங்குச் சந்தை ஊழலில் பங்கு போட்டுக் கொண்டவர்களுக்கெல்லாம் பாதுகாப்பு என்கிற வகையில் ஒரு பசப்பல் அறிக்கை எனில்; நாட்டு மக்கள், அந்த அறிக்கைகளை மட்டுமல்ல - நாடாள்வோரின் நாணத்தையும் நம்பத் தயாராக இல்லை.

மத்தியில் இவ்வளவு ஊழல் விவகாரங்களை வைத்துக் கொண்டிருப்பவர்களைப் பார்த்து, மாநிலத்தில் ஜெயலலிதா அரசு நடத்துகின்ற ஊழல்களுக்கு எவ்வளவுதான் ஆதாரங்களையும் ஆவணங்களையும் தந்தாலும் அவற்றைத் தடுத்து நிறுத்திட ஏன் தயங்குகிறீர்கள் என்று கேட்பது; விழலுக்கிறைத்த நீராகப் போவதில் வியப்பென்ன இருக்க முடியும்!

ஒற்றுமையும் ஒருமைப்பாடும் நாட்டுக்குத் தேவையென உறுதிபொங்கிட உரைத்திடுவோரின் முழக்கம் காதுகளில் கேட்டுக் கொண்டிருக்கிறது - அதேவேளையில் இந்த ஊழல் விஷயத்தில் மத்திய மாநில அரசுகள் கடைப்பிடிக்கும் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் கண்களுக்குக் காட்சியாகிக் கொண்டிருக்கிறது!

அன்புள்ள,

மு. கருணாநிதி

22-12-1994

2218. தமிழகத்திற்கு ஏனிந்த இழிநிலை!

உடன்பிறப்பே,

முதல்வர் - ஆளுநர் மோதல் உச்சகட்டத்திற்குப் போய்விட்ட நிலையில்; நான் ஓர் அறிக்கை வெளியிட வேண்டியது அவசியமாயிற்று. என் அறிக்கைக்குப் பதில் என்ற நிலையில் அமைச்சர் எஸ்.டி. சோமசுந்தரம் பெயரால் ஓர் அறிக்கை வெளிவந்துள்ளது. அவரது பெயரால் வெளிவந்த அறிக்கை என்றுதான் சொல்ல முடியும்; அவர் எழுதியோ அல்லது தயாரித்தோ தரப்பட்ட அறிக்கையல்ல அது! பாவம்; அவர் எத்தனையோ வேலைகளில் மனச்சங்கடமுடன் தஞ்சை மாநாட்டுக்காக உழன்று கொண்டிருக்கும்போது இந்த அறிக்கையை எப்படி வெளியிட்டிருக்க முடியும்!

அவர் தயாரித்த அறிக்கையல்ல என்று நீ எப்படி சொல்கிறாய்? என்று என்னைப் பார்த்துக் கேட்கத் தோன்றும் - ஆதாரமில்லாமல் நான் ஒன்றும் சொல்லவில்லை. சோமசுந்தரத்தையே திருப்பித் தாக்கக்கூடிய ஒரு விஷயத்தை சோமசுந்தரம் தனது அறிக்கையில்; தானே குறிப்பிட்டு சிக்கிக் கொள்வாரா? ஆனால் அப்படியொரு செய்தி அறிக்கையில் இருக்கிறது, அதனால்தான் அந்த அறிக்கை அவர் வெளியிட்டதில்லையென்று திடமாகக் கூறுகிறேன்.

> “எம்.ஜி.ஆர். மீது எத்தனையோ குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசினாலும் அதனை மக்கள் நம்பாதது போலவே; இன்றைக்கும் ஜெயலலிதா மீது கருணாநிதி வீசும் குற்றச்சாட்டுகளும் ஆகிவிடும்!
>
> இந்தக் கருத்து, அமைச்சர் சோமசுந்தரத்தின் அறிக்கையில் பளிச்சிடுவதாகும்.
>
> இந்த வாசகத்தைப் படிக்கும்போதே உனக்கும் ஊராருக்கும் எந்த நிகழ்ச்சி நினைவுக்கு வரும்?”

இதே எஸ்.டி. சோமசுந்தரம் எம்.ஜி.ஆர். மீது நூறு குற்றச்சாட்டுக்களைப் பட்டியலிட்டு; அந்தப் புகார் மனுவைக் கொண்டுபோய், அன்றைக்கிருந்த கவர்னரிடம் ஊர்வலமாகச் சென்று கொடுத்தாரே - அந்த நிகழ்ச்சிதானே நினைவுக்கு வரும்?

எனவேதான் சொல்லுகிறேன்; தன் மீதே திருப்பித் தாக்குகிற ஒரு விஷயத்தை; அறிக்கை தயாரித்தவர் சோமசுந்தரமாக இருந்திருக்கும் பட்சத்தில் எப்படி இணைத்திருக்க முடியும்!

ஆக; அறிக்கை போயர்ஸ் தோட்டத்து ஆணைப்படி ஆஸ்தான அறிக்கையாளரால் தயாரிக்கப்பட்டது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்ற உண்மையாகிறது! போகட்டும்; அந்த அறிக்கையில் வேறு என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது?

டிசம்பர் 22ஆம் நாள்; தேதியிட்டு வெளிவந்துள்ள ஆஸ்தான அறிக்கையாளரின் கருத்துக்களை ஊன்றிப் படிப்பவர்கள்; டிசம்பர் 19ஆம் நாள் நான் விடுத்துள்ள அறிக்கையை மீண்டும் ஒருமுறை படித்துப் பார்த்தாலே போதுமானது; இருந்தாலும் சிலவற்றை விளக்க வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது.

> "ஆட்டுக்குத் தாடி போல நாட்டுக்குக் கவர்னர் என்று ஒரு காலத்தில் கூறிய கருணாநிதி, இன்று அந்தக் கொள்கையைக் காற்றிலே பறக்க விட்டுவிட்டார். கவர்னருக்காக வரிந்து கட்டிக் கொண்டு, முதலமைச்சரைக் குறை கூறிப் பேசுகிறார்"

இதுவும் ஆஸ்தான அறிக்கையில் ஒரு பகுதிதான்! மாநில சுயாட்சிக் கொள்கைக்காக சட்டப்பேரவையிலேயே முதன் முதலாக 1974-ல் தீர்மானம் நிறைவேற்றிய தி.மு.கழகம், கவர்னர் பதவியை ஆதரிக்கும் இயக்கம் அல்ல!

கவர்னர் பதவியென ஒன்று தேவையில்லை என்பதை அறிஞர் அண்ணா அழுத்தம் திருத்தமாகப் பலமுறை எடுத்துரைத்துள்ளார். ஆனால் அந்தப் பதவியிருக்கும் வரையில் அந்தப் பொறுப்பில் இருப்பவரை அவர் மதிக்கத் தவறவில்லை. ஒரு நிகழ்ச்சியை மட்டும் அதற்கு உதாரணமாகச் சொல்லுகிறேன். 1967-ல் சட்டமன்றத் தேர்தலில் தி.மு.கழகம் பெரும் வெற்றி பெறுகிறது. அறிஞர் அண்ணா அவர்களை சட்டமன்ற உறுப்பினர்கள் முதல்வர் பொறுப்புக்கு ஏகமனதாகத் தேர்வு செய்கிறார்கள். முறைப்படி அவர் தேர்வு செய்யப்பட்டுள்ளதை ஆளுநரிடம் நேரில் சென்று

தெரிவிக்க அண்ணா ராஜ்பவனுக்குப் புறப்படுகிறார். காரில் வழக்கம் போல் அண்ணா முன்னிருக்கையில் அமர்ந்துள்ளார். நானும், நாவலரும், மதியழகனும் பின் இருக்கையில் அமர்ந்துள்ளோம். அடுத்து வரும் ஒரு காரில் அண்ணாவின் நண்பர் சி.வி. இராசகோபால் வந்து கொண்டிருக்கிறார்.

கார்கள், ராஜ்பவனை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றன. இன்றைய மறைமலையடிகள் பாலம் அன்றைய மர்மலாங் பிரிட்ஜ் அருகில் சென்றதும், அண்ணா அவர்கள் காரை நிறுத்தச் சொல்கிறார். ஏன்? என நாங்கள் வியப்புடன் பார்க்கிறோம்.

"கவர்னரை முதன்முதலாக சந்திக்கப் போகிறோம். மரியாதை நிமித்தம் அவர் கையில் எதுவும் தரவேண்டாமா?"

இது அண்ணாவின் கேள்வி! எங்களால் உடனடியாகப் பதில் சொல்ல முடியவில்லை. காரணம்; கவர்னரைச் சந்திப்பதற்காகக் குறித்த நேரத்துக்கு இடையே இன்னும் சில நிமிடங்களே இருந்தன! அண்ணா, சி.வி. இராசகோபாலிடம் சொன்னார்;

"இராசகோபால் - பக்கத்திலே ஏதாவது ஒரு கடையிலே போய் எலுமிச்சம் பழம் இருந்தால் வாங்கிவா!"

சி.வி. இராசகோபால் ஓடினார் - சற்றுத்தாமதமாகத் திரும்பி வந்தார், 'அண்ணா! ஒரு பெட்டிக் கடையில் இந்தக் காய்ந்த எலுமிச்சம் பழம்தான் இருந்தது' என்று சொல்லிக்கொண்டே சுருங்கிக் கறுத்து வதங்கிய ஒரு பழத்தைக் கொடுத்தார். அந்தப் பழத்தை வெளியில் காட்டக்கூடக் கூச்சப்பட்டுக்கொண்டு, கையில் மூடியபடியே வைத்துக் கொண்டு, அண்ணா அவர்கள் அதை ஆளுநர் உஜ்ஜல் சிங்கின் கையில் திணித்தார்.

உடன்பிறப்பே, இதையேன் நினைவூட்டினேன் என்றால் கவர்னர் பதவி என்பது தி.மு.க. கோரும் மாநில சுயாட்சிக் கோரிக்கையில் கிடையாது - ஆனால் அந்தப் பொறுப்பில் இருக்கும் மனிதரை நமது தலைவர் அறிஞர் அண்ணா மதிக்க மறந்ததும் கிடையாது என்பதை உணர்த்துவதற்காகவே! அண்ணாவை மறந்துவிட்டு, இந்த அம்மாவை அகிலாண்டேஸ்வரி - நாராயணி - தமிழ்த் தாயின் அவதாரம் - என்றெல்லாம் அரசு செலவில் விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கும் ஆஸ்தான அறிக்கையாளர்களுக்கு இந்த உண்மைகள் தெரியாமலில்லை -

இருப்பினும் ஊர்வாயை மூடப்பார்க்கிறார்கள்; ஊழித் தீ போலக் கிளம்பி விட்ட ஊழல் புகார்களை ஊதி அணைத்து விடலாமென்று நம்பிக் கொண்டு!

இந்த அறிக்கையில் டான்சிக்குச் சொந்தமான நிலத்தை முதலமைச்சர் ஜெயலலிதா வாங்கியது தவறில்லை என்று ஒரு ஓட்டை வாதம்! அசல் சொத்தை வாதம்! அரசுக்குச் சொந்தமான சொத்துக்களை அமைச்சர்கள் வாங்கக் கூடாது என்பது சட்டம் - விதிமுறை - என்று பட்டாங்கமாக இருக்கிறது! டான்சி நிறுவனம் அரசின் நிறுவனம்தான் என்பதற்கு சான்று தேடி அலையத் தேவையில்லை! அது அரசின் நிறுவனம்தான் - அதனால்தான் அரசின் அதிகாரிகள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் உள்ளிட்டோர் அங்கு பணியாற்றுகிறார்கள். சோமசுந்தரத்தின் பெயரில் வந்துள்ள அந்த அறிக்கை இன்னொரு அபாண்டமான பொய்யையும் கூறியுள்ளது.

அந்த நிலத்துக்கு முறைப்படியான விலை கொடுக்கப்பட்டுள்ளதாம். இல்லை - இல்லை - இல்லவே இல்லை; இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் அரசு நிறுவனமான அந்த டான்சி நிறுவனத்துக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. பத்திரப் பதிவில் கூட தவறு நடந்திருக்கிறது. உரிய பதிவுக் கட்டணமும் செலுத்தப்படவில்லை.

இத்தனை உண்மைகளையும் மீண்டும் ஒருமுறை மறைத்து மூடப்பார்க்கிறார்கள்; முடியாது - இது அம்பலமேறிவிட்ட சங்கதி! உடன்பிறப்பே, ஆளுநர் முதல்வர் மோதல் குறித்து நான் விடுத்துள்ள அறிக்கையில்; ஆளுநர் வெளிப்படையாக செய்தியாளர்களிடம் பேசியதை, எந்த ஒரு இடத்திலும் நான் ஏற்றுக் கொள்ளவில்லை. அதே நேரத்தில் தமிழ்நாட்டில் நடைபெறும் அலங்கோலங்கள் குறித்துச் சட்டச் சீர்குலைவு குறித்தும் ஆளுநர் கூறியுள்ளவை அனைத்தும் உண்மையே என்றும் பட்டியல் போட்டுக் காட்டியிருக்கிறேன்.

அந்தப் பட்டியலில் மேலும் ஒரு நிகழ்ச்சியை இப்போது ஆளுங்கட்சியினர் மாநிலத்தின் பல பகுதிகளில் இணைத்துள்ளனர். என்ன நிகழ்ச்சி அது?

சுப்பிரமணியம் சுவாமி நீதிமன்றத்துக்கு வந்த போது ஆளுங்கட்சி மகளிர் அணியினர் நடத்திக் காட்டிய கலாச்சார புரட்சியின் தொடர் நிகழ்ச்சியாக; இதோ, ஆளுநர் அவர்களின்

கொடும்பாவிகள் இழுத்து அந்த உருவங்களை செருப்பால் அடித்து, துடைப்பக் கட்டையால் தாக்கி; தமிழகத்தின் பண்பாட்டுப் பரிணாம வளர்ச்சியை இந்தப் பாரறியச் செய்துள்ளார்கள்.

கவர்னர் டெல்லியில் பேசியதைக் கண்டித்து எழுதிய சில பத்திரிகைகளின் பேனாக்கள்; அவருக்கு பதில் அளித்து அறிக்கைவிட்ட ஜெயலலிதா, கவர்னரை காட்டுமிராண்டி என்றும், வக்கிர மூளைக்காரர் என்றும், நாகரிகமற்றவர் என்றும் கடுமொழிகளால் அர்ச்சனை செய்தது குறித்தோ, அல்லது கொடும்பாவி இழுப்பு - செருப்படி - துடைப்பக்கட்டை தாக்குதல் குறித்தோ ஒருவரி எழுத முன்வரவில்லையே!

ஏன்? ஏன்? ஏன்? இதை யோசித்துப்பார் உடன்பிறப்பே!

எமை நத்துவாய் என எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன்

என்ற புரட்சிக்கவிஞரின் பாட்டு, சிலருக்கு ஏட்டளவில் போய்விட்டதினால்தானே; தமிழகத்திற்கு, இந்த இழி நிலை!

அன்புள்ள,

மு. கருணாநிதி

23-12-1994

2219. இயேசுவின் மீது விழுந்த சவுக்கடிகளை விட...!

உடன்பிறப்பே,

“துல்லிய பட்டுப் போன்ற
தூயவள் மரியாள் கையில்
மெல்லிய பாலகன் இயேசு
விளக்கெனப் புன்னகைத்தான்!”

எனும் கவியரசு கண்ணதாசனின் கவிதை வரிகளை உலகமெங்கணும் கிறித்துவப் பெருமக்கள் விழா கொண்டாடும் இந்நாளில் நினைவுகூர்ந்து பார்க்கிறேன். மரியாளின் பட்டுப்போன்ற கையில் மலர் மொட்டுப்போலக் காட்சி தந்த இயேசுவின் புன்னகை, விளக்கின் சுடராகக் கவிஞனின் உள்ளத்தைக் கவர்ந்துள்ளதை எண்ணிக் களிக்கிறேன்.

அந்த இயேசு பெருமானின் குழந்தைப் பருவத்தை மட்டும் படித்தறிந்தவர்களல்லவே நாம்; அவர் பட்டுப்போன்ற கையில் விளக்கெனப் புன்னகைத்ததை மட்டும் நினைத்து மகிழ்ந்திட!

அந்த விளக்கைச் சிலுவையில் பொருத்தி அணைத்திட்ட நிகழ்ச்சியையும் படித்தறிந்தவர்கள் நாம் என்பதால்தானே; எல்லாத் துன்பங்களையும் தாங்கிக்கொண்ட அந்தப் பெருமகனின் குழந்தைப் பருவம் பற்றிய வர்ணனையையும் - விளக்கொளிப் புன்னகையையும் தனித்ததோர் ஆர்வப் பெருக்குடன் படித்திட முனைகிறோம்.

இதோ; அந்த மெல்லிய பாலகன் இயேசு - எவ்வளவு கரடுமுரடான பாதையில் தனது இறுதிப் பயணத்தை நடத்த வேண்டியிருந்தது என்பதைக் கண்ணதாசனே கூறக் கேட்போமே!

“தொங்கிவிட்ட சதைகளிலே மேலாடை போர்த்தி
அதில் சிலுவை தூக்கிப்
பங்கமுறச் சவுக்கடியும் பலவாங்கி நெடுந்தூரம்
பயணம் செய்த
தங்கமகன் கல்வாரி மலைமீது கொணர்டுவந்து
தள்ளப்பட்டார்
அங்கியினை உரிக்கையிலே உறைரத்தம்
மறுபடியும் அழுத தம்மா!”

உடன்பிறப்பே, தன் மனஉறுதியை நிலை நாட்டுவதற்காக - மக்கள் பணியே வாழ்வின் திருப்பணியெனக் கொண்டு; உலவிக் கொண்டிருந்த அந்த உத்தமரைக் காட்டிக் கொடுத்த துரோகி யூதாஸ்கூட; அவருக்குக் கொடிய தண்டனை எனக் கேள்வியுற்று மனம் பதறினான். ஆனால் வேறு சிலரோ இயேசுவைப் பழிவாங்கித் தீர்த்துக்கட்டவே விரும்பினர். எனவே அதிபதி பிலாத்துவிடம் அதையே வற்புறுத்தி அவனையும் தமது கொடுஞ்செயலுக்கு வேறு வழியின்றி இணங்க வைத்தனர். அந்த மனிதர்களைப்பற்றிக் கண்ணதாசனின் கவிதைப் படப்பிடிப்பு என்ன?

“வஞ்சகர்கள் சிரிப்பதும் மதுக்குளத்தில் நீந்துவதும்
வாழ்க்கை எல்லாம்
பஞ்சணையில் தூங்குவதும் பால் பழங்கள் அருந்துவதும்
பண்பு மிக்கோர்
வெஞ்சிலுவை ஏறுவதும் வெங்கொடுமை தாங்குவதும்
வேதம் என்றால்
நஞ்சிருக்கும் பாத்திரமே நால்வரின் பாத்திரமோ
அறியோம் நாமே!

கவிதையின் கடைசி வரியை மீண்டும் படித்தால்; இன்று நமது நாட்டிலும் சமுதாயத்திலும் நஞ்சிருக்கும் பாத்திரங்கள் சில, நல்லவர் பாத்திரங்களில் நடித்துக் கொண்டிருப்பது நமது மனக்கண்ணின் முன்னால் மெல்ல நிழலாடுகிறது அல்லவா!

இயேசு பெருமானின் வரலாற்று நிகழ்ச்சிகளின் அற்புதச் செயல்பாடுகளில் கருத்து வேறுபாடு நமக்கிருப்பினும்; தங்கச் சுரங்கத்திலிருந்து எடுத்த பாறைத் துகள்களிலும் - மண்படிந்த கட்டிகளிலும் மறைந்து நிறைந்திருக்கும் மாசறு பொன்னைப்

பிரித்தெடுத்துப் பயன்படுத்துவது போலவே இயேசு பிரானின் அன்பு - பண்பு - தியாக உணர்வு ஆகியவற்றைத் தனியாகக்கண்டு, தணியாத பாசத்துடன் போற்றிப்புகழ்கிறோம்!

அந்தப் புகழுரைக்கும் போற்றுதலுக்குமுரிய புனிதரின் பிறந்தநாள் தொடர்பாக; அவரை அறைந்த சிலுவையை அணிந்து கொண்டுள்ள அருமைக் கிறித்துவ உடன்பிறப்புகளுக்கு இதய வாழ்த்துக்களைக் கூறும் இந்நாளில்; அந்தோ, இந்நாளைக்கூட அவரது புகழுக்கும் போற்றுதலுக்கும் முரிய நாளாக ஆக்கிவிடாமல்; முதலமைச்சர் ஜெயலலிதா, தனது விளம்பர நாட்களில் ஒன்றாகவே ஆக்கிவிட்ட கொடுமைதான் அங்கியினை உரிக்கையிலே உறை ரத்தம் மறுபடியும் அழுததம்மா! என்று என் ஆருயிர் நண்பன் கண்ணதாசன் எழுதியுள்ளது போன்ற கொடுமையினும் கொடுமையாகும்.

சாந்தோம் தேவாலயத்திற்கு முதலமைச்சர் வருகை தருகிறாராம் - கத்தோலிக்கக் கிறிஸ்துவ சங்கம் உட்பட பல பெயர்களில் பக்கம் பக்கமாகப் பத்திரிகைகளில் விளம்பரம். வழி நெடுக முதல்வரின் கட்அவுட்!

என் செய்வது; இதே வேலையாகப் போய்விட்டது - நவராத்திரி கொலுவிழா என்றால்; முதலமைச்சருக்கு மகிஷாசூரமர்த்தனியே! என்று வர்ணனை செய்து வரவேற்பு விளம்பரம் - தீபாவளி யென்றால் நாராயணியே! என நாளிதழ்களில் விளம்பர முழக்கம்; பக்கம் பக்கமாக பல லட்சம் செலவில்! பொங்கல் வந்தாலோ மகர சங்கராந்தி தேவியே இந்த அம்மையார்தான்! நல்லவேளையாக விநாயக சதுர்த்திக்கு இந்த அம்மையாரின் வாழ்த்துச் செய்தியோடு முடித்து விடுகிறார்கள் - இத்தனை முழுப்பக்க விளம்பரங்கள் கொடுக்க; அதுவும் பல நாளேடுகளில் கொடுக்க - அவ்வளவு பணம் அமைச்சர்களுக்கு எப்படி வந்தது? வருமான வரித்துறையினர் ஏன் கைகட்டிக்கிடக்கின்றனர்? மத்திய அரசின் சுங்கத் துறையினரே ஒரு அ.தி.மு.க. எம்.பி.யைக் கைது செய்ய முடியாமல் டெல்லிப் பிரதமர் அமைச்சகம் குறுக்கே நிற்கிறதாமே!

சரி; இந்து மதக் கடவுள்கள் - அகிலாண்டேஸ்வரிகள், ஆதிபராசக்திகள், மதுரை மீனாட்சிகள், காஞ்சி காமாட்சிகள் - அவர்கள் உண்மையாக வணங்கும் பக்தசிரோன்மணிகள் மனத்தைப் புண்படுத்துவதோடு நில்லாமல்; இப்போது ஜெயலலிதாவின் சாந்தோம் சர்ச் வருகையையொட்டி;

தெய்வத்திருமகள்! மெய்ஞானத்திருப்புகழ்! தென்னவர் வணங்கும் அன்னை தெரசா என்றெல்லாம் ஏடுகொள்ளாமல் வர்ணனைகள் வாரியிறைக்கப்பட்டுள்ளன. இயேசுவைக் கையில் ஏந்தி நிற்கும் அன்னை மரியாளே! என்றுகூடத் தொழுதேத்துவர்; வாரியிறைக்கப் பணமும், வழங்குவதற்குப் பதவிகளும் இருக்கும்போது வாய் பிளந்து கொண்டு வால் குழைப்பதற்கு இப்படிப்பட்ட ஆட்கள் இல்லாமலா போய்விடுவார்கள்; அதுவும் தேர்தலை எதிர்நோக்கும் நேரத்தில்!

உடன்பிறப்பே, வஞ்சகரின் பிடிவாதத்தினால் அதிபதி பிலாத்தின் ஆணைப்படி இயேசுவின் மீது விழுந்த சவுக்கடிகளின் வலியைவிட; அதிக வலியினை நல்ல கிறிஸ்தவர்களுக்குத் தரக்கூடிய சாட்டையடிகளாகவே இருக்கின்றன; சாந்தோம் தேவாலயத்து விஜயத்துக்காக முதலமைச்சருக்குத் தரப்படும் பட்டங்கள்!

இப்படியொரு இருளுக்கிடையே மின்னல் கீற்றுப் போலவாவது என் வாழ்த்தினை, கிறித்துவப் பெருமக்கள் ஏற்றுக் கொள்வார்களாக!

அன்புள்ள,

மு. கருணாநிதி

26-12-1994

2220. பழைய நினைவுகளினால் பதறுகிறது மனம்!

உடன்பிறப்பே,

இந்தியத் திருநாட்டின் குடியரசுத் தலைவராக இருந்த ஒருவரை இழந்துவிட்டோம் என்பதற்காக அரசு மரியாதையுடன் கியானி ஜெயில்சிங் அவர்களுக்காக இரங்கல் தெரிவிக்கப்படுகிறது என்பது மரபு ஒட்டிய ஒருமுறையேயாகும். ஆனால் நாடு இழந்திருப்பது ஒரு முன்னாள் குடியரசுத் தலைவரை மட்டுமல்ல; பஞ்சாபி உருது மொழிகளில் கருத்து வளமும் கற்பனைச் செழிப்பும் பூரித்துப் பொங்கிடக் கவிதைகள் யாத்திடும் ஒரு அரிய கவிஞுரையும் இழந்திருக்கிறது. பஞ்சாப் மாநிலத்தில் பரீத்கோட் எனும் சமஸ்தானத்தில் சந்த்வான் எனும் சிற்றூரில் 78 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சாதாரணக் கைவினைஞர் எனப்படும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் குடிசை ஒன்றில் குழந்தையாகப் பிறந்து தனது 22-வது வயதிலேயே வெள்ளைக்கார அரசின் செல்வாக்கைப் பெற்றிருந்த பரீத்கோட்டின் சமஸ்தான மன்னரை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தி, அதன் காரணமாக ஐந்தாண்டு காலக் காராக்கிரகத் தண்டனை பெற்று, அத்துடன் மாநிலத்தைவிட்டே வெளியேறும் நிலைக்கே ஆட்படுத்தப்பட்டு, 1946ஆம் ஆண்டு வாக்கில் பரீத்கோட்டுக்குத் திரும்பிய பிறகும் அந்தச் சமஸ்தான மன்னரை எதிர்த்துப் போட்டி அரசை உருவாக்கி மீண்டும் சிறைப்பறவையாகி; தனது வாழ்வையே போராட்டமாக்கிக் கொண்ட விடுதலை இயக்கத்து வரிப்புலியாகத் திகழ்ந்த அஞ்சாநெஞ்சினர் ஒருவரைத்தான் நாடு இழந்து கண்கலங்குகிறது.

சுதந்திரம் பெற்ற இந்தியாவில் 1956ஆம் ஆண்டு பஞ்சாப் மாநிலத்தில் கெய்ரோன் அமைச்சரவையில் கியானி அவர்கள் ஓர் அமைச்சர். 1972-ல் பஞ்சாப் மாநில முதல்வர் பொறுப்பையும் ஏற்றுத் திறம்பட ஆட்சி நடத்தி, வளமான மாநிலமாகப்

பஞ்சாபை மாற்றிக் காட்டினார். 1982ஆம் ஆண்டு குடியரசுத் தலைவரானார். கருத்துப் புதையலாகவும், மொழிப் புலவராகவும், தத்துவ விற்பகராகவும் அந்த விடுதலைப் போராட்டத் தளகர்த்தர் விளங்கிய காரணத்தால் கியானி எனும் ஞானிக்குரிய அடைமொழியுடன் அவர் அழைக்கப்பட்டார்.

அவர் குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்ற காலத்து நடைபெற்ற நிகழ்ச்சியை என்னால் நினைவுக்குக் கொண்டுவராமல் இருக்க முடியவில்லை. 1980ஆம் ஆண்டு தி.மு.க.வும் இந்திரா காங்கிரசும் தேர்தல் தொகுதி உடன்பாடு கண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் புதுவையுள்ளிட்ட 40 இடங்களில் 38 இடங்களில் வெற்றி பெற்றபோதிலும்; அடுத்து சில மாதங்களில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் கழகம் ஆட்சிக்கு வரமுடியாத சூழ்நிலை உருவாக்கப்பட்டுவிட்டது. 1980 நாடாளுமன்ற வெற்றியின் காரணமாக இந்திரா காந்தி மீண்டும் பிரதமரானார். அவர் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்ட நிகழ்ச்சி, டெல்லி நாடாளுமன்ற மத்திய மண்டபத்தில் நடைபெற்றபோது, என்னையும் சென்னாரெட்டி அவர்களையும் பஞ்சாப் குரு நாம்சிங் அவர்களையும் அந்த வெற்றிக்காகப் பாராட்டி நன்றி கூறியதுடன் - எங்களை அவர் அமர்ந்திருந்த மேடைக்கே அழைத்து அமரவைத்து மரியாதையும் செய்தார்.

தமிழகத்தில் கழக ஆட்சி அமையாத நிலையிலும் கூட, இங்கு எதிர்க்கட்சியாக இருந்த கழகத்திடமும் - இதன் தலைவனாகிய என்னிடமும் - இந்திராகாந்தி காட்டிய அன்பு; அவர் எமர்ஜென்சி காலத்தில் அவசரப்பட்டு எடுத்திட்ட நடவடிக்கைகளுக்கு பிராயச்சித்தம் போல அமைந்திருந்தது என்றே சொல்லவேண்டும். அதற்கோர் எடுத்துக்காட்டு இதோ :-

1982-ல் நீலம் சஞ்சீவி ரெட்டியார் அவர்களின் குடியரசுத் தலைவர் பதவிக்காலம் முடிவடைகிறது. அடுத்த குடியரசுத் தலைவர் யார்? - இந்தக் கேள்விக்கு விடை காண்பதற்காக பிரதமர் இந்திரா காந்தி அவர்களால் அழைக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன்.

பிரதமர் இந்திரா காந்தியின் அழைப்பு கிடைத்தவுடன் நான் டெல்லிக்குப் புறப்பட்டேன். என்னுடன் தம்பி முரசொலி மாறன், ஆர்க்காடு வீராசாமி, சி.டி. தண்டபாணி ஆகியோர் வந்தார்கள். அடுத்த குடியரசுத் தலைவர் யார்? ஆர்.வி. அவர்களா? நரசிம்மராவ்

அவர்களா? இருவரில் யார்? இதற்கு விடை காணவேண்டும் - பிரதமர் வீட்டில் மாலை சிற்றுண்டி - எங்களுக்கு பிரதமர் இந்திரா காந்தி அவர்களே சிற்றுண்டி பரிமாறி உபசரித்த அந்தக் காட்சி இன்னும் மனத்தில் பசுமையாக நிழலாடிக் கொண்டிருக்கிறது.

தேநீர் அருந்தி முடித்த பிறகு பிரதமர், குடியரசுத் தலைவர் குறித்து என் கருத்தைக் கேட்டார். நீண்ட விவாதத்திற்குப் பிறகு நான் சொன்னேன்; 'நரசிம்மராவ் அந்தப் பதவிக்குப் பொருத்தமானவர்தான் - ஆனாலும்கூட இப்போதுதானே ஆந்திர மாநிலத்தை சேர்ந்த நீலம் சஞ்சீவி ரெட்டியார் அந்தப் பதவியில் இருந்திருக்கிறார்' என்று! அப்படியானால் ஆர்.வி.யைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்? பிரதமர் கேட்டார்.

அதற்கு என்னுடைய பதில் :- 'தமிழ்நாட்டுக்காரர் என்பதில் எனக்கு மகிழ்ச்சிதான். இருப்பினும் ஒன்றை யோசித்துப் பாருங்கள், பிரதமரும் பிராமண சமூகத்தைச் சேர்ந்தவராகவும் ஜனாதிபதியும் அதே சமூகத்தைச் சேர்ந்தவராகவும் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதாக பேச்சு வருவது தங்களுக்கே நல்லதா? என்பதை யோசித்துப் பாருங்கள்!' என்பதுதான்.

அப்படியானால் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் யார் இருக்கிறார்கள்? இது பிரதமரின் கேள்வி. 'ஏனில்லை? கியானி ஜெயில்சிங் இருக்கிறாரே!' இது என்னுடைய பதில்! கியானி ஜயில்சிங், பிற்படுத்தப்பட்ட சமூகமா? ஆமாம் - கைவினைஞர் - பொற்கொல்லர் சமூகம் -

இதை நான் சொன்னதும் அம்மையாருக்கு ஆச்சரியம் - அவர்கள் என் பேச்சை முழுதும் ஏற்றுக் கொள்ளாமல்; உடனே மணியடித்து வாயிற்புற அலுவலகத்தில் இருந்த தி. தவானை அழைத்து, விசாரித்தார்கள். தவான் ஒரு நிமிடம் என்று சொல்லிவிட்டுச் சென்றவர், திரும்ப வந்து கியானி ஜெயில்சிங் பிற்படுத்தப்பட்ட சமுதாயம்தான்! என்பதை உறுதிப்படுத்தினார்.

பின்னர் நாங்கள் பிரதமரிடம் விடைபெற்றுக்கொண்டு கியானி ஜெயில்சிங் அவர்களைச் சந்தித்தோம் - அவருக்கு நல்வாழ்த்து கூறி விட்டு, சென்னை திரும்பினோம்.

அவர் குடியரசுத் தலைவர் பதவியிலிருக்கும் போது பலமுறை சந்திக்கும் வாய்ப்பு - அந்தப் பதவியிலிருந்து விடுபட்ட பிறகும் பலமுறை சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியதுண்டு.

உடன்பிறப்பே; அவர், உன் உடன்பிறப்பாகிய என்னைப் பற்றியும் கழகத்தைப் பற்றியும் என்ன கருத்துக் கொண்டிருந்தார் என்பதை நானே சொல்வதை விட, எழுதுவதை விட, 1991 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 27ஆம் நாள் கோவையில் சி.டி. தண்டபாணி இல்லத்தில் நடைபெற்ற திருமணத்தின் போதும், அதேநாளில் கோவை விசுவேசுவரா வித்யாலயா நிகழ்ச்சியின் போதும் என்ன பேசினார் என்பது அப்போதே ஏடுகளில் வெளிவந்திருக்கிறது; அதைப் படித்துப் பார்த்தாலே எவ்வளவு அன்பை நம்மீது பொழிந்த ஒருவரின் துணையை நாம் இழந்திருக்கிறோம் என்பது தெளிவாகும். இதோ அவரின் அந்தப் பேச்சின் சில பகுதிகள் :-

> கடவுளின் கிருபையால் கலைஞர் முதலமைச்சர் ஆகியிருக்கிறார். நான் கலைஞர் அவர்களை எதிர்க்கட்சித் தலைவராகவும் பார்த்திருக்கிறேன். முதலமைச்சராகவும் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு சமயமும் அவர் தமிழ்நாட்டின் நலன் பற்றி மாத்திரம் நினைக்காமல் இந்தியா முழுமையும் நன்றாக இருக்க வேண்டுமென்று தான் நினைக்கிறார். அவருடைய மாநில மக்களின் நலன் மாத்திரமின்றி திராவிடர்களின் நலனுக்காகவும் பாடுபட்டவர். இன்று தேசிய ஆட்சியாளராகி விட்டார். அவருக்குத் தீங்கு நினைக்கிறவர்கள் அவரை ஒரு பிராந்திய தலைவராக சொல்கிறார்கள். அப்படி சொல்வதால் அவர் பிராந்திய தலைவராகிவிடமாட்டார். அவர் ஒரு பெரிய தேசியவாதி ஆவார். கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டைப்பற்றி மட்டுமல்லாமல் மற்ற மாநிலங்களைப் பற்றியும் மிகுந்த அக்கறை கொண்டவர். அவர் எப்பொழுதும் இந்த நாட்டை முழுமையாக நேசிக்கக் கூடியவர்.
>
> கலைஞர் அவர்களுடன் என்னுடைய தொடர்பு அவர் முதலமைச்சரான பிறகல்ல; அவர் எதிர்க்கட்சியாக இருந்த அந்தக் காலத்திலே இருந்து அவருக்கு என்னுடன் அன்பும் தொடர்பும் உண்டு. எனக்கும் கலைஞர் அவர்களுக்கும் உள்ள நட்பின் காரணமாகத்தான் அவரை நான் பாராட்டுகிறேன் என்று யாரும் எண்ணிவிடக் கூடாது. அவருடைய ஆற்றல் அவருக்கு தமிழ்நாட்டின்

மீது இருக்கிற பற்று ஆகியவையின் காரணமாகத்தான் நான் அவரைப் பாராட்டுகிறேன்.

வடமாநிலங்களில் மக்கள் அமைதியாக வாழ முடியவில்லை. தமிழ்நாட்டில் மட்டும்தான் அமைதி நிலவுகிறது. ஏன் என்றால் கருணாநிதி அரசு ஏழை மக்களுக்கு அடித்தளத்து மக்களுக்கு ஏராளமான நல்வாழ்வுத் திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது.

மக்கள் வாழ்வுக்கும், அமைதிக்கும் கருணாநிதி நிறைய முயற்சிகளையும் அக்கறையுடன் எடுத்து வருகிறார்

- அவர் இவ்வாறு பேசிய பிறகு ஒருவார காலத்திற்குள் கழக ஆட்சியை ஜெயலலிதாவின் இடைவிடாத தூண்டுதலினால் மத்தியில் இருந்தோர் கலைத்துவிட்டனர்.

எனினும்; தமிழகத்தின்மீது தனி அக்கறை கொண்டிருந்த ஒரு தேசத் தலைவரை இழந்து விட்டோம் என்பதற்காக கியானி பற்றிய அந்தப் பழைய நினைவுகள் காரணமாக பதறுகிறது மனம்! வாழ்க கியானி ஜெயில்சிங்கின் புகழ்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

27-12-1994

2221. தமிழனின் இரத்தம், கண்ணீர், வியர்வை!

உடன்பிறப்பே,

அரசுக்குச் சொந்தமான தொழிற்சாலைகள் நலிவுற்றால் அவற்றை அழிந்தொழிந்திடாமல் பாதுகாத்திடவும், அவற்றை நம்பியிருக்கும் தொழிலாளர்களின் குடும்பங்களை நடுத்தெருவில் நிற்கவிடாமல் அவர்களுக்கு நல்வாழ்வு தொடரச் செய்திடவும் அரசின் சார்பில் மாற்று ஏற்பாடுகள் செய்யப்படுவதும் - அத்தகைய நலிவுற்ற தொழிற்சாலைகளை ஏற்று நடத்த முன்வரும் தனியார்களுக்கு அவற்றை முறைப்படியும், உரிய நியாயமான விலைக்கும், ஒப்பந்தப் புள்ளிகளை விரிவாக விளம்பரம் செய்து கோருவதின் மூலம் விற்று, அந்தத் தொழிற்சாலைகளின் பழைய தொழிலாளர்களின் வாழ்வுக்குப் பாதிப்பு ஏற்படாமலும் பார்த்துக் கொள்வது ஒரு நல்ல அரசாங்கத்தின் கடமையும் பொறுப்பும் ஆகும்.

ஆனால் ஜெயலலிதா அரசு; தாராளமயமாக்குதல், தனியார் துறையை ஊக்குவித்தல் எனும் நிலைமைகளை; தனக்கு சாதகமாகவும் - தான் ஊழல் செய்வதற்கு ஏற்ற வகையிலும் பயன்படுத்திக்கொண்டு கோடிக்கணக்கில் கொள்ளையடிக்கத் தொடர்ந்து வலிகோலிக் கொண்டிருக்கிறது.

தொழில் அதிபர்கள்; குறிப்பாக சென்னையைச் சேர்ந்தவர்களேகூட; லஞ்சம் லட்சக்கணக்கில் கோடிக்கணக்கில் கொடுத்தும்கூட தொழிற் சாலை தொடங்கிட முடியாத தடங்கல் தமிழ்நாட்டில் ஜெ. அரசில் இருப்பதைச் சுட்டிக்காட்டி வருந்துகிறார்கள் என்றும்; பெருந்தொழில்களைத் தொடங்கத் தேவையான அடிப்படை ஆதாரவளங்கள் நிரம்ப இருந்துங்கூட லஞ்ச லாவண்யம் தலைவிரித்தாடுவதால், பல தொழில்கள் வெளி மாநிலங்களுக்குச் சென்றுவிட்ட செய்தியைத் தொழில் அதிபர்கள்

விவரிக்கிறார்கள் என்றும்; கடந்த ஜூன் திங்கள் வெளியான Business India பிசினஸ் இந்தியா எனும் ஆங்கில ஏட்டில் வெளி வந்துள்ளதை நான் முன்பொருமுறை சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

தனியார் துறைக்கு ஊக்கமளிக்க வேண்டும் என்ற கொள்கையும் வகுத்துக் கொண்டு; அந்த வாய்ப்பில் அந்தத் தனியாரிடம் கோடி கோடியாகப் பெற்றுக் கொண்டு பெட்டியில் பூட்டி விட்டுத்தான் - அதைப்பற்றிய பூர்வாங்கப் பேச்சு வார்த்தையே நடத்துவது என்ற அளவுக்கு இந்த அரசில் ஊழல்பூதம் உச்சாணிக் கொப்பில் ஏறி உட்கார்ந்து கொண்டிருக்கிறது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்ற உண்மையாகும்.

இவை, புதிதாகத் தொழில் தொடங்க வருகின்றவர்களுக்கு வரையறுக்கப்பட்ட தட்சணையைப் பற்றிய விபரங்கள்!

இனி, லாபகரமாக இயங்கிக் கொண்டிருக்கிற அரசுத் தொழிற்சாலைகளையே, தனியாருக்கு விற்பனை செய்வதில் நடைபெறுகிற தீவட்டிக் கொள்ளையைச் சற்றுத் திரும்பிப் பார்க்க வேண்டுமென்று; உடன்பிறப்பே! உன் மூலமாகத் தமிழ் நாட்டு மக்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஏனெனில் ஊழல் பணமாக ஜெயலலிதா தோட்டத்து திருப்பதி உண்டியலில் விழுகின்ற கோடிக்கணக்கான ரூபாய்; இந்த மாநிலத்து ஏழைபாளைகள், நடுத்தர மக்கள், தொழிலாளர் வர்க்கத்தினர், விவசாயிகள், நெசவாளர்கள் எனும் பல்வேறு பிரிவினர் வரிப்பணமாக வழங்குகின்ற அவர்கள் இரத்தத் துளிகள் - கண்ணீர்த் துளிகள் - வியர்வைத் துளிகள் என்பதை அவர்கள் மறந்து விடக்கூடாது! அவர்கள் மறப்பினும் அவர்கட்கு நித்த நித்தம் நினைவூட்டிட நீ தவறிடக் கூடாது!

இதோ தமிழக அரசுக்குச் சொந்தமான

* அரியலூர் சிமெண்ட் ஆலை
* ஆலங்குளம் சிமெண்ட் ஆலை
* ஆலங்குளம் ஆஸ்பஸ்டாஸ் ஆலை
* மாயனூர் சிமெண்டு குழாய் ஆலை
* விருத்தாசலம் குழாய் தொழிற்சாலை

ஆகிய ஐந்து தொழிற்சாலைகளை விற்கபதற்கு ஜெயலலிதா; முயற்சிகளை முடுக்கிவிட்டுவிட்டார். இந்த ஆலைகள் நஷ்டத்தில் நடக்கின்ற நலிவுற்ற ஆலைகள் என்பதால் விற்க முன்வந்தார்களா?

இல்லை; இந்த ஆலைகள் லாபத்தில்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நமது பொருளாளர் ஆர்க்காடு வீராசாமி அவர்கள் தொடக்கத்திலே விடுத்த அறிக்கையில் சுட்டிக் காட்டியிருக்கிறார். ஊழல் நிறைந்த அந்த விற்பனைக்குத் தடைகோரி அவர் நீதிமன்றத்திலும் வழக்குத் தொடர்ந்துள்ளார். நமது செய்தித் தொடர்புச் செயலாளர் ஆலடி அருணா அவர்களும் ஜெயலலிதாவின் இச்செயலைக் கண்டித்து இன்று அறிக்கை வெளியிட்டுள்ளார்.

முதலில் வீராசாமி அவர்களின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விபரங்களை நினைவூட்டிக் கொள்வது நல்லது.

> "இந்தத் தொழிற்சாலைகள் டான்சம் நிறுவனத்திற்கு சொந்தம் என்றாலும் 89 சதவிகிதப் பங்கு தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்திற்கு TIIC சொந்தமாக இருந்தது. இந்த 89 சதவிகிதம் ஷேர் 100 கோடிக்கு விற்க முடிவு செய்து அதற்கான டெண்டர்கள் கோரப்பட்டுள்ளது. இந்த டெண்டர்கள் போட கடைசி நாள் இம் மாதம் 29-ந் தேதி. இந்த டெண்டர் பாரத்தில் யார் வேண்டுமானாலும் விண்ணப்பிக்கலாம். சிமெண்ட் தொழிலில் முன் அனுபவம் இருக்க வேண்டிய அவசியமில்லை. அதிகமாக பணத்திற்கு டெண்டர் கோரியிருந்தாலும் குறைந்த பணத்திற்கு கேட்டவர்களுக்கு இந்த தொழிற்சாலைகளை கொடுப்பது என்பது அரசின் முடிவே இறுதியானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
>
> ஜெயலலிதாவும், தோழி சசிகலாவும் இதுவரையில் தொழில் அதிபர்களுடன் பேசியதில் இந்தத் தொழிற்சாலைகளுக்காக யார் 100 கோடி ரூபாய் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு கொடுப்பதென்றும், இதில் பாதி பணத்தை அதாவது 50 கோடி ரூபாய் வெளிநாட்டில் கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டு பேரம் முடிந்து விட்டது."

கழகப் பொருளாளர் அறிக்கையைத் தொடர்ந்து இன்று வந்துள்ள தம்பி ஆலடி அருணாவின் அறிக்கையில்;

"சுமார் ஐநூறு கோடி மதிப்புள்ள இந்த தொழிற்சாலைகளை விற்பனை செய்வதில் அரசு சட்டப்படி நடந்து கொள்ளவில்லை.

விற்பனை தொடர்பாக தமிழகத்தில் உள்ள முக்கிய பத்திரிகையில் விளம்பரம் செய்யவில்லை.

தொழிற்சாலையை வாங்க விரும்புபவர்களிடம் டெண்டர்தாரர்கள் எவ்வித முன்வைப்பு பணமும் கேட்கப்படவில்லை.

இந்த தொழிற்சாலைகளுக்கான குறைந்தபட்ச விலையையும் அரசு தரப்பில் நிர்ணயிக்கவில்லை.

இதுபோன்ற முறைகேடுகளை சுட்டிக் காட்டி திராவிட முன்னேற்றக் கழகமும், தொழிற்சங்கமும் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளன.

இந்த வழக்குகள் குறித்து ஜெயலலிதா அரசு பொருட்படுத்தாது, வெளிமாநிலத்தைச் சார்ந்த குஜராத் அம்புஜா கம்பெனி, பாலாஜி டிஸ்டிலரி கம்பெனி ஆகியவைகளுக்கு விற்றிட திரைமறைவில் பேரம் நடப்பதாகத் தெரிகிறது. ரூ. 100 கோடி வரை கைமாறியதாகவும் தகவல் கிடைத்துள்ளது."

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உடன்பிறப்பே, இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால்; லாபத்தில் இயங்கும் அரசின் தொழிற்சாலைகளை, குறைந்த விலைக்கு விற்று, அவற்றின் உண்மையான விலையை; விற்பவரும் வாங்குபவரும் மறைத்து அந்தத் தொகையை இருவரும் பங்கு போட்டுக் கொள்கிற பயங்கரக் கொள்ளை பட்டப்பகலில் நடைபெறப் போகிறது.

டெண்டர் விதிகள், விதிவிலக்குகள், முன் பணம் கட்டாமல் டெண்டர் கேட்கலாம் என்ற தளர்த்தல், அரசு, தனக்கு விருப்பமானவருக்கே விற்பனை செய்யும் என்ற ஜால வித்தை இத்தனையையும் பார்க்கும்போது நியாயமான விலைக்கு

யார் கேட்டாலும்; இந்தத் தொழிற்சாலைகள் தரப்பட மாட்டா! பேரம் படிந்து கோடிகோடியாகத் தருகின்றவர்களுக்கே, தாரை வார்க்கப்பட இருக்கின்றன!

இந்தத் தாரை வார்க்கும் படலம் தொடருமேயானால்; ஒருநாள் தமிழகத்தையே தாரை வார்த்துவிட்டு இந்த அம்மாள் ஐதராபாத்துக்கோ, அமெரிக்காவுக்கோ பயணப்பட்டார் என்ற செய்தியைத்தான்; ஏமாந்த தமிழர்கள் கேட்க நேரிடும்! அதற்குள் எச்சரிக்கை தேவையில்லையா?

ஏனெனில்; கொள்ளை போகும் பணமெல்லாம், தமிழனின் இரத்தம், கண்ணீர், வியர்வை! அதை மறந்து விடக் கூடாது!

அன்புள்ள,

மு. கருணாநிதி

30-12-1994

2222. பாதச்சுவடுகளே; வேதச் சுவடுகளாம்!

உடன்பிறப்பே,

உலகத் தமிழ் மாநாட்டுக்கான இந்த இரண்டு விளம்பரங்களையும் பார்! இரண்டுமே தமிழக அரசின் துறைகள் மூலம் தரப்பட்டுள்ள ஒரு பக்க விளம்பரங்கள்தான்! ஒன்று தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறை தந்துள்ள விளம்பரம். மற்றொன்று தமிழ்நாடு அரசின் நிறுவனமான பாடநூல் கழகம் அளித்துள்ள விளம்பரம். ஒவ்வொன்றும் முழுப்பக்க விளம்பரமே! முழுப்பக்கம் ஒரு ஏட்டில் விளம்பரம் தர சுமார் ஒரு லட்சம் ரூபாய் கட்டணம். இத்தொகை; இதழுக்கு இதழ் சற்று ஏறத்தாழ இருக்கும். இப்படி ஒரு நாளைக்கு ஏழெட்டு தினசரிப் பத்திரிகைகளில் விளம்பரம் - அரசின் சார்பில் என்பதை மறந்து விடக்கூடாது!

எதற்காக? உலகத்தமிழ் மாநாட்டுக்காக! விளம்பரத்தில் முழுப்பக்கத்தில் முக்கால் பக்கத்தை அடைத்துக் கொண்டிருப்பது யார்?

தெரியவில்லையா உனக்கு? எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழணங்கே! என்று பாடினாரே மனோன்மணியம் சுந்தரனார்; அந்தத் தமிழ் அணங்குதான்!

இப்படி நான் சொன்னதற்கு; இந்நேரம் மனோன்மணியனார் உயிருடன் இருந்திருந்தால் - என்மீது மான நட்ட வழக்குத் தொடருவார்; அல்லது அவரது மறுப்பு கண்டு வெறுப்புற்ற குண்டர்படையினர் ஆட்டோக்களில் அவர் இல்லம் நோக்கி வருவதற்கு முன்பு; வலிய தனது ஆவியைப் போக்கிக் கொண்டிருப்பார்!

அரசின் செய்தித்துறையே வெளியிட்டுள்ள விளம்பரம்; அதில் ஜெயலலிதா நின்று கொண்டிருக்கும் தோற்றம்!

அந்தோ; கடல் கடந்தும் படை நடாத்திப் பகைப்புலம் பலவற்றை வென்றெடுத்த வீராதி வீரன் - தீராதி தீரன் - இராஜராஜ சோழன் எழுப்பிய வரலாற்றுச் சின்னமாம் இராஜ ராஜேச்சுவரம் எனப்படும் அந்தப் பெரிய கோயிலும், அந்தக் கோயிலுக்குள் இருக்கும் மலை போன்ற சிவலிங்கமும் - எதிரே ஒரே கல்லில் உருவாக்கப்பட்ட நந்தி வீற்றிருக்கும் எழில் மண்டபமும்; அம்மையாரின் காலடியில் இருக்கும் காட்சியினைக் கண்டாயா? உடன்பிறப்பே; உன்னை மட்டும் கேட்டுப் பயன் என்ன? உணர்ச்சியுள்ள தமிழன் ஒவ்வொருவனையும் கேட்கின்றேன்! உயிரோடு நடமாடும் தமிழன் ஒவ்வொருவனையும் கேட்கின்றேன்!

வாள்தூக்கிப் போரிட்டு; வணங்க மறுத்த எதிரிகளைத் தன் தாள் பணியச் செய்து, வானமளாவிய புகழ்பெற்று வாழ்ந்த புலிக் கொடிச் சோழன் இராஜராஜனின் சிலையும்கூட இந்த அம்மணியின் காலடியில்தான் சித்தரிக்கப்பட்டுள்ளதைக் கண்டனையா? சிந்தித்துப் பார்த்தனையா?

தஞ்சைப் பெரிய கோயிலும் - தமிழகத்தில் பேரரசு நடத்தியதோடு, இலங்கையையும் வென்று காட்டிய சோழ மன்னனும்; ஜெயலலிதாவின் காலடிக்குக் கீழேதான் என்று அரசின் செய்தித்துறை விளம்பரம் செய்திருப்பது தவறில்லை; முற்றிலும் சரியே என்பதுபோலத்தான் தமிழக அரசின் பாடநூல் கழகம், பூக்குவியலிலே அந்தப் புண்ணியவதியின் பேருருவை முழுப்பக்கமும் தீட்டி; இதயதெய்வமே இவர்தான் என்றும், சங்கத் தமிழே இவர்தான் என்றும், தமிழினத்தின் தனிக்குரலே இவர்தான் என்றும், தமிழினத்தின் தனிக்குரலே இவர்தான் என்றும், முத்தமிழின் முழுவடிவமே இவர்தான் என்றும், தமிழகத்தின் நிரந்தர முதல்வரே இவர்தான் என்றும்; வாசகங்கள் பொருத்திய விளம்பரமொன்றைச் செய்துள்ளது.

அதுமட்டுமா? அரசின் பாடநூல் கழகம் வேறொன்றையும் அந்த விளம்பரத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளது.

“புரட்சித் தலைவி அவர்களை, வருக, வாழ்க, வெல்க, என வரவேற்றுத் தங்கள் பாதச் சுவடுகளை, வேதச் சுவடுகளாய் வணங்கும் இயக்குநர், பாடநூல் கழகம்”

என விளம்பரத்தை நிறைவு செய்துள்ளது!

மானங்கெட்டுப் போய்த் தமிழர்கள் உயிரோடு வாழ வேண்டுமா? என்று சென்னையில் டிசம்பர் 27 ஆம் நாள் நடைபெற்ற தோழமைக் கட்சிகள் பொதுக் கூட்டத்தில் ஆவேசமாகக் கேட்டார்; நண்பர் தலித் எழில்மலை!

ஆவேசமாக மட்டுமல்ல; அவர் நிறைந்த அர்த்தத்துடனும்தான் அந்தக் கேள்வியைக் கேட்டுள்ளார்.

முதலமைச்சரின் பாதச்சுவடுகளை வேதச்சுவடுகளாய்க்கூட அல்ல; பரமசிவன், மகாவிஷ்ணு, பிர்மதேவன், முப்பத்து முக்கோடி தேவர்கள், பார்வதி, லட்சுமி, சரசுவதி, நாற்பத்தெண்ணாயிரம் ரிஷீஸ்வரர்கள், கந்தர்வர், கின்னரர், கிம்புருடர், அட்டதிக்குப்பாலகர், அத்தனை பேருடைய திருமுகங்களும் அந்தத் திருவடிகளில்கூடத் தெரியட்டும்; அதற்கு விளம்பரம், அரசின் சார்புடைய பாடநூல் கழகம் பணம் செலவிட்டுத் தருவது என்பது கடைந்தெடுத்த முறைகேடு அல்லவா?

எனவே தனிப்பட்டவன்; ஏதோ தனக்குப் பதவியோ, பவிசோ நிலைப்பதற்கும் - பணம் சேர்ப்பதற்கும் எதையோ சொல்லி அம்மையார் தலையில் ஐஸ் வைக்கட்டும்! கை கட்டிக் கால் தொட்டுக் காக்கா பிடிக்கட்டும்!

ஆனால், தமிழ்நாட்டு மக்கள் கொட்டிக் கொடுக்கும் வரிப்பணத்தில்; தமிழ்நாட்டுப் பெரிய கோயிலை, தமிழ்நாட்டு மாமன்னனை - ஜெயலலிதாவின் தாளடியில் கிடத்துவதற்கும் - அவரது பாதச்சுவடுகள் வேதச்சுவடுகள் என்று பல் இளித்து மெய்மறந்து நிற்பதற்கும் - அரசுத் துறைகளின் சார்பில் விளம்பரமா?

“இது தமிழுக்கு ஏற்றம் தரும் மாநாடா?
இறக்கம் தரும் மாநாடா?
தமிழைப் போற்றும் மாநாடா? தூற்றும் மாநாடா?
யார் யாரையோ சங்கத்தமிழ் எனக்கூறி,
தமிழுக்குப் பங்கம் விளைக்கும் மாநாடா?
ஜெயலலிதாவின் பாதச்சுவடுகளே, வேதச்சுவடுகள்
எனக்கூறி; அந்த வேதச் சுவடுகளை -
வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும்

தோள்கள்
படைத்த தமிழினம், தமிழர் மானம் இவற்றின்
மீது பதியவைத்து, தமிழர் வீரத்துக்கு அறைகூவல்
விடுக்கும் மாநாடா?
சிந்தித்துப் பார் சிறுத்தை நிகர்த்த தமிழ் இளைஞர்
கூட்டமே!
எப்போது அடங்கும் இந்தச் சிறுமதியாளர் கொட்டமே!

அன்புள்ள,

மு. கருணாநிதி

31-12-1994

2223. நிறைவேற்றுவாயா? கறை போக்குவாயா?

உடன்பிறப்பே,

உலகிற்குப் பொதுவான புத்தாண்டு இன்று பிறந்து விட்டது. கடந்த ஆண்டுகளின் நல்லவை கெட்டவைகளை எண்ணிப்பார்த்து; அந்த அனுபவங்களை அறிவுரைப் பாடமாகக் கொண்டு தனிப்பட்ட மாந்தரும் - சமுதாயக் குழுவினர்களும் - அரசியல் இயக்கங்கள் நடத்திடுவோரும் - ஏன்; அனைத்துத் துறையிலிருப்போருமே புத்தாண்டில் புதிய சிந்தனைகளையும் செயல்பாடுகளையும் மேற்கொள்வதற்கான வாய்ப்பு வழங்குவதற்கான தொடக்க நாள் என்றே ஜனவரி முதல்நாளை வரவேற்றிடுவர்.

நாட்கள், வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி, மாதங்கள் வருடங்கள் ஆவது என்பது எந்நாளும் ஏதாவது ஒரு பணியில் இருப்போர்க்கு அவர்களின் உழைப்பின் காரணமாக ஒரு கை நொடிப்பொழுது என்கிற அளவேயாகும்.

எத்தனையோ துறைகளில், எத்தனையோ அலுவல்களில் எத்தனையோ பேர் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்; அரசியல் துறையிலுங்கூட அயர்வின்றி உழைத்துக் கொண்டிருக்கிறார்கள் - நானும் நீயும்கூட உழைக்கிறோம். ஆனால் சிலரைப்போல ஒரு துறையிலே மட்டுமல்ல! பெரிய அளவில் சமுதாயத் துறையிலும் - அரசியல் துறையிலும் - இனம் மொழி காத்திடும் தமிழின மறுமலர்ச்சித் துறையிலும் இடைவிடாது உழைத்துக் கொண்டிருக்கிறோம்.

சொல்லப்போனால் இருபத்தி நான்கு மணிநேரம் போதவில்லை - இப்போது நான் உனக்கு முரசொலி அலுவலகத்திலமர்ந்து கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறேன்.

இதே நேரம் எனக்குப் புத்தாண்டு வாழ்த்து சொல்ல நேரிலே வந்து வீட்டிலும், அண்ணா அறிவாலயத்திலும் முரசொலி வளாகத்திலும் அன்புக்கினிய உடன்பிறப்புகள் பல நூற்றுக்கணக்கானோர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படியும் விடியற் காலை முதற்கொண்டு பத்து மணி வரையில் வீட்டுக்கு வாழ்த்துச் சொல்ல வந்து குவிந்த ஏராளமான உடன்பிறப்புகளைச் சந்தித்து வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்ட பிறகுதான் முரசொலி அலுவலகத்திற்கே வந்தேன். இன்று ஒருநாள் வீட்டிலேயே இருந்து புத்தாண்டு வாழ்த்துக் கூற வருகின்ற அனைவரையும் மகிழ்வித்திருக்கக் கூடாதா; என்று நீயும் கேட்பாய் - என் நெஞ்சமும் அப்படித்தான் நினைக்கிறது!

ஆனால் நாளைக்கு நீயே கோபித்துக் கொள்வாயே; புத்தாண்டு நாளும் அதுவுமாக - பொதுவாக ஒரு வாழ்த்துச் செய்தி கொடுத்தாயே தவிர, உன் உடன்பிறப்பாகிய எனக்கு ஒரு கடிதமாவது எழுதினாயா? என்று; அதற்கு நான் என்ன பதில் சொல்வது!

அதனால்தான் உடன்பிறப்புகள் பலர்; வீட்டிலும், அண்ணா அறிவாலயத்திலும், முரசொலி அலுவலக வளாகத்திலும் காத்திருக்கும் நிலையில் இக்கடிதம் உனக்கு எழுதுகிறேன்.

கடிதத் தொடக்கத்தில் அயராது உழைப்போர்க்கு ஆண்டுகள் உருள்வது ஒரு கை நொடிப் பொழுது என்று குறிப்பிட்டிருக்கிறேனே; அதில்கூட அரசியல் கட்சி முன்னணியினர்க்கும் அதன் செயல் வீரர்களுக்கும் கை நொடிப் பொழுது என்பது ஓராண்டுகூட அல்ல; ஐந்தாண்டுகளேகூட கை நொடிப் பொழுது போலக் கழிந்து விடும்.

இப்போது பாரேன்; இந்தியாவின் முன்னாள் பிரதமர் இராஜீவ்காந்தி கொலைக்கு ஆளான அனுதாபத்தைப் பயன்படுத்திக் கொண்டது மாத்திரமல்ல; நம்மீது வீண்பழி தூற்றி, அவதூறு சுமத்தி, ஜெயலலிதா ஆட்சிக்கு வந்து நாலு ஆண்டுகள் ஆகப்போகின்றது - நாலு ஆண்டு முழுமை பெற சில மாதங்களே மிச்சம்!

என்னதான் கூட்டிக் கழித்துப் பார்த்தாலும் ஜெயலலிதா, தானே முன்வந்து பதவி விலகாவிட்டாலும் - அல்லது பதவியிலிருந்து விலக்கப் படாவிட்டாலும் - மொத்தமுள்ள

ஐந்தாண்டுக்கால ஆட்சிக்கு சரியாக ஒன்றரை ஆண்டுக்காலமே பாக்கியிருக்கிறது.

அதாவது இந்த ஆண்டான 1995 இறுதியில் அல்லது 1996 தொடக்கத்தில் பொதுத் தேர்தல் களத்தில் கட்சிகள் கச்சை கட்டி நின்றிடும் காட்சியைக் காண முடியும்.

இடையிலேயே தேர்தல் வரக்கூடும் என்கிறார்களே; அதுபற்றி என்ன கூறுகிறாய் என்று என்னைக் கேட்பாய்! நான் ஆரூடக்காரனுமல்ல! அரசியலில் அவசரக்காரனுமல்ல!

தேர்தல் எப்போது? தேர்தல் கூட்டணியில் எந்தெந்தக் கட்சிகள்? இவற்றுக்கெல்லாம் விடை கிடைப்பது உடனடியாக அவ்வளவு எளிதல்ல! அணிகளில் உள்ள கட்சிகள் இடம் பெயருமா? புதிதாக எந்தக் கட்சியாவது எந்த அணிக்காவது அழைக்கப்படுமா? இந்த வினாக்களுக்கு உறுதியான விடை காண்பது ஏன் எளிதல்ல என்பதற்கு கடந்த காலத் தமிழக அரசியல் கட்சிகளின் முடிவுகளும் செயல்பாடுகளுமே காரணம்!

1977 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் எமர்ஜென்சியை எதிர்த்த கட்சிகளான தி.மு.க., மார்க்சிஸ்டு, ஜனதா கட்சி மூன்றும் அணி சேர்ந்து போட்டியிட்டன. அதில் அந்த அணி தோற்றவுடன்; எமர்ஜென்சியை தீவிரமாக ஆதரித்துக் கொண்டிருந்த எம்.ஜி.ஆர். அவர்களுடன் எமர்ஜென்சியை தீவிரமாக எதிர்த்துக் கொண்டிருந்த மார்க்சிஸ்டுகள் கூட்டு சேர்ந்தார்கள். ஜனதா கட்சியும் தனித்து நின்றது. ஆனால் சட்டமன்றத் தேர்தலில் இவ்வாறு அணி பிரிந்து போட்டியிட்ட தி.மு.க., மார்க்சிஸ்டு, ஜனதா ஆகிய மூன்று கட்சிகளின் வாக்குகளைக் கூட்டிப்பார்த்தால் 1977 சட்டமன்றத்தில் தி.மு.க. அணி 130க்கும் மேற்பட்ட இடங்களைப் பெற்றிருக்கக்கூடும் என்பது பிறகு தெளிவானது.

1977- நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வி என்றதும், தி.மு.க. அணியிலிருந்து மார்க்சிஸ்டுகளும், ஜனதாக் கட்சியினரும் பிரிந்துவிட்டனர் என்பது கடந்தகால வரலாறு -

மத்தியில் 1977ல் தொடங்கிய ஜனதா ஆட்சி ஒற்றுமையின்றி நிலைகுலைந்து கவிழ்ந்தபோது - எமர்ஜென்சி பிரகடனத்துக்காக இந்திராகாந்தி வருத்தம் தெரிவித்த நிலையில்; இந்தியாவில்

ஒரு நிலையான ஆட்சியிருக்கவேண்டும் என்ற அடிப்படையில்; எமர்ஜென்சியினால் பல கொடுமைகளை அனுபவித்த தி.மு.கழகம்; இந்திரா காங்கிரசுடன் தேர்தல் உடன்பாடு கொண்டு 1980-ல் நாடாளுமன்றத் தேர்தலில் எம்.ஜி.ஆர். அவர்களின் தலைமையிலான அ.தி.மு.க. கூட்டணிக்கு இரண்டே இரண்டு இடங்களில் மட்டுமே வெற்றியும் - எஞ்சிய 38 இடங்களில் தி.மு.க. - இ. காங்கிரஸ் அணி வெற்றியும் ஈட்டியது என்பதும் கடந்தகால அரசியல் வரலாறுதான்!

1969 ஜனாதிபதி தேர்தலில் தி.மு.க., மார்க்சிஸ்டு, அகாலிதளம் போன்ற கட்சிகள் இந்திரா காந்தியின் பக்கம் நின்று இந்திரா காந்தி விரும்பிய வேட்பாளர் வி.வி. கிரியை வெற்றிபெறச் செய்ததும், நாடாளுமன்றத்தில் இந்திரா காந்தியை ஆதரித்ததும்கூட; கடந்த கால அகில இந்திய அரசியல் வரலாறுதான்!

எனவே ஒவ்வொரு அணி உருவானதற்கும் - அந்த அணிகளில் பிரிவு கொண்டதற்கும் - அல்லது உடன்பாடு கொண்டதற்கும் - ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு காரணம் இருந்திருக்கிறது.

இப்போது நாம் எதிர்நோக்குகிற தேர்தலில் நமது அணி தேசிய முன்னணிதான்! இதை நான் தி.மு.க. சார்பில் பலமுறை திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறேன். சில நாட்களுக்கு முன்பு சில ஏடுகளுக்குத் தந்த சிறப்பு பேட்டியிலும் இதனையே உறுதிபடச் சொல்லியிருக்கிறேன். தேசிய முன்னணியை உருவாக்கிய கட்சிகளில் தி.மு.க.வும் ஒன்று என்பது மறைக்க முடியாத, மறுக்க முடியாத சரித்திரம் -

எனவே தேசிய முன்னணியில் சேருவேன் என்று ஜாடைகாட்டி, ஜெயலலிதாக்கள் வேண்டுமானால் பிரதமர் நரசிம்மராவை மிரட்டக்கூடும் - அப்படிப் பிரதமரை ஜெயலலிதா மிரட்டுகிற காரியத்திற்கு தேசிய முன்னணித் தலைவர்களில் யாராவது ஒருவர் இருவர் தங்களையறியாமல் - ஜெயலலிதாவையும் புரிந்து கொள்ளாமல் துணை போகக்கூடும். பின்னர் அந்த ஒருவர் இருவர் ஜெயலலிதாவின் சுயரூபத்தைப் புரிந்து கொள்ளக்கூடும்.

பாபர் மசூதி பிரச்சினையின்போது பாரதப் பிரதமரை மிரட்ட, பாரதீய ஜனதாவுடன் ஜெயலலிதா அணி சேர்ந்ததையும் அறிக்கைவிட்டதையும் மறந்திட இயலுமோ?

எனவே உடன்பிறப்பே; இன்றுள்ள அரசியல் சூழலில் - தமிழ்நாட்டில் நடைபெறுகிற மக்கள் விரோதமான - சட்ட விரோதமான - நீதி நியாயத்திற்கு விரோதமான - எங்கு நோக்கினும் ஊழல் கொப்புளங்கள் பொத்து வடிந்து முடைநாற்றம் வீசுகிற - ஆணவ, அகங்கார, மரபுகளை மீறும் மமதைமிக்க ஆட்சியை அகற்றுவதற்குப் பொதுவான போர்க்களங்களில் நிற்கின்ற;

தி.மு.க.

ஜனதா தளம்

இந்திய கம்யூனிஸ்டு கட்சி

பாட்டாளி மக்கள் கட்சி

இந்திய தேசிய லீக்

எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.

அகில இந்திய பார்வார்டு பிளாக்

ஆகிய ஏழு கட்சிகளின் எஃகு கோட்டையாக தோழமை அணியொன்று இயங்கிக் கொண்டிருக்கிறது.

இந்த அணி, தேர்தலுக்கான கூட்டணியல்ல என்று ஏற்கனவே இந்த அணியில் உள்ள கட்சிகளின் தலைவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது - தேர்தல் நேரத்தில் அதுபற்றி யோசிப்போம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எப்படியும் தேர்தல் வந்தால்; இந்தக் கட்சிகள் அணிசேர்ந்தோ - சேராமலோ - போட்டியிட்டுத் தீரவேண்டும் என்பதுதானே ஜனநாயகக் கடமை!

அந்த ஜனநாயகக் கடமையை நிறைவேற்றவும் - ஜனசக்தியைத் திரட்டி; இந்த ஜலக்கிரீடை ஆட்சிக்கு இந்த ஆட்சிக்கே பிரியமான சொல்லாகிய சமாப்தியை செய்து முடிக்கவும் அக்கறை கொண்டு, ஆற்றல்கொண்டு, அரும்பணியாற்றிட அண்ணா கண்ட கழகமாம் தி.மு.க. இன்று முதலே; இந்தப் புத்தாண்டு பிறந்த முறுக்கோடு செம்மாந்து சிங்க நடை போட்டுக் கிளம்ப வேண்டும்.

இன்றைக்கே; புத்தாண்டினையொட்டி எனைக் காணவந்த உடன்பிறப்புகள் ஐந்து, பத்து, ஐம்பது, நூறு என்று தேர்தல் நிதி கொடுக்கத் தொடங்கிவிட்டனர்.

இனி, தேர்தல் நிதி வழங்கும் பணியும் - தேய்ந்துவிட்ட தமிழகத்தின் இருள்விலக்கி வளர்பிறை தோன்றச் செய்திடும் பிரச்சாரப் பணியும் - கழகத்தின் எல்லா அமைப்புகளையும் மேலும் மேலும் வலிவுறச் செய்யும் பணியும் - தீவிரமாக்கப்பட வேண்டும்!

இதுவே; என் இனிய கண்மணியாம், அன்பு உடன்பிறப்பே உனக்கு நான் இந்தப் புத்தாண்டில் விடுக்கும் வேண்டுகோள்!

நிறைவேற்றுவாயா? தமிழ் நிலத்தில் படிந்த கறை போக்குவாயா?

அன்புள்ள,

மு. கருணாநிதி

02-01-1995

2224. வென்றே தீருவோமென இன்றே எழுக!

உடன்பிறப்பே,

நேற்றைய கடிதத்தில் நிறைவேற்றுவாயா? தமிழ் நிலத்தில் படிந்த கறை போக்குவாயா? எனக் கேள்வியெழுப்பி முடித்திருந்தேன். தேய்ந்து விட்ட தமிழகத்தின் இருள் விலக்கி வளர்பிறை தோன்றச் செய்திடும் பிரச்சாரப் பணியும், கழகத்தின் எல்லா அமைப்புகளையும் மேலும் மேலும் வலிவுறச் செய்யும் பணியும் - தீவிரமாக்கப்பட வேண்டும்! என்று நான் விடுத்திருந்த அந்த வேண்டுகோள் உனக்கு மட்டுமல்ல; தலைமைக் கழகத்தை நடத்திச் செல்கிற எங்களுக்கும் - பல்வேறு பிரிவுகளுக்கான தலைமைக் கழகச் செயலாளர்களுக்கும் - அணிகளின் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் - மாவட்டக் கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள், மாநில அமைப்பாளர்கள் அனைவருக்கும் சேர்த்தே விடப்பட்ட வேண்டுகோளாகும்.

பகுதிநேரப் பணிதான் கழகப்பணி என்றில்லாமல் முழுநேரப் பணியினை, கழகத்திற்கு ஆற்றினால்தான்; பயன் இருக்க முடியும். கழகம், தன் பயணத்தில் எதிர்படும் இடர்களை அகற்றி, வெற்றிகளைக் குவித்திட முடியும்.

வெற்றியென்பது தேர்தலில் நமது அணியினர் வென்று ஆட்சி அமைப்பது என்பது மட்டுமே அல்ல; அந்த வெற்றி, இன்றுள்ள மக்கள் விரோத அரசை மாற்றுவதற்கும், நமது அடிப்படைக் கொள்கைகளைப் படிப்படியாக நிறைவேற்றுவதற்கும் வாய்ப்பினை உருவாக்கலாம்; ஆனால், கழகம், என்றைக்குமே எவரது சூழ்ச்சித் திறனாலும், சூதுவாதுகளாலும் கடுகளவும் சேதாரமடைந்திடாமல் கம்பீரமாக நிமிர்ந்து நின்று களங்கண்டு போராடும் வலிவுடன் பெரியார் அண்ணா இருவரும் ஊட்டியுள்ள உணர்வுக்குத் தேடித்தரும் வெற்றியே நமக்கு நிலையான வெற்றி!

இதனை மனத்திற்கொண்டே; எத்தனை சோதனைகள், வேதனைகள் அடுக்கி வந்த நேரத்திலும் சோர்ந்திடாமல் 1949ஆம் ஆண்டில் கழகம் தோன்றிய நாள் தொட்டு அமைப்பு ரீதியாகச் செயல்படும் ஆர்வத்தையும், அக்கறையையும் பெற்று நாம் நிலைத்து நிற்கிறோம்.

ஒரு சிற்றூரின் கிளைக் கழகத்திலிருந்து தலைமைக் கழகம் வரையில் உள்ள தொடர்புகள் - இடையே எழும் பிரச்சினைகள் - அவற்றைத் தீர்த்துச் சரி செய்திட எடுக்கப்படும் நடவடிக்கைகள் எல்லாமே நமது கழகத்தில் ஜனநாயக அடிப்படையில் அமைந்தவைகளேயாகும்.

கடந்த இரண்டு மாதங்களாகத் தலைமைக் கழகத்திலிருந்து மாவட்ட வாரியாக ஆய்வுக் குழுக்கள், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று, அந்தந்த மாவட்டச் செயலாளர்களுடன் ஒவ்வொரு ஒன்றியம், நகரம், பேரூர், மாநகரப் பகுதிகள் என எல்லா அமைப்புகளைப் பற்றிய நிறைகுறைகளை அறிந்து வந்துள்ளன.

அந்த ஆய்வுக்குழுக்களின் அறிக்கைகள், தலைமைக் கழகத்திற்குப் பெரும்பகுதி வந்து சேர்ந்துவிட்டன. இன்னும் சில குழுவினர் மட்டுமே அறிக்கை தயாரித்து அனுப்பவில்லை.

அனைத்து ஆய்வறிக்கைகளும் வந்து சேர்ந்த பின்னர், தலைமைக்கழக சார்பில் அந்தந்த மாவட்டச் செயலாளர்களுடனும், அந்த மாவட்டங்களுக்குச் சென்று ஆய்வுக்குழு உறுப்பினர்களிடமும் ஜனவரித் திங்கள் பொங்கல் விழாவுக்குப் பிறகு, நானும் பொதுச் செயலாளரும் கலந்து பேசிட இருக்கிறோம்.

அதைத் தொடர்ந்து சில நாட்களில் தலைமை நிர்வாகக்குழுவும், அதைத் தொடர்ந்து பொதுக் குழுவும் எனத் தலைமைக்கழக அறிவிப்புகள் வரக்கூடும்.

எனவே, சில மாவட்டங்களில் ஆய்வுக்குச் சென்ற குழுவினர், உடனடியாக கழக அமைப்புகளின் நிலவரங்கள், ஆற்றிடும்பணிகள், ஆற்றிய பணிகள் பற்றிய அறிக்கையினைத் தலைமைக்கு அனுப்பி உதவிட வேண்டப்படுகிறார்கள். இது குறித்துத் தலைமைக்கழக சார்பில் பொதுச்செயலாளர் அவர்களும் அந்த ஆய்வுக் குழுவினர்க்குக் கடிதம் எழுதியுள்ளார்.

பொதுத் தேர்தல் பற்றியும் - நேற்றைய கடிதத்தில் எழுதியிருந்தேன். எப்போது தேர்தல்? எந்தக் கட்சிகளுடன்

கூட்டணி? இவை முக்கியமான கவனத்திற்குரிய பிரச்சினை எனினும்; தேர்தல் வரும்போது அதை சந்திக்க தேர்தல் விதிமுறைப்படி நியாயமான செலவினங்களுக்கு நிதி தேவை என்பதையும் - அதற்கான வேண்டுகோள்களை நான் விடுத்திடும்போதெல்லாம்; உன் போன்ற உடன்பிறப்புகள் வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டியாவது தேர்தல் நிதியினை வழங்குகிறீர்கள் என்பதையும் - நமது கழக வரலாற்றில் பல இடங்களில் இன்றைக்கும் பசுமையான நினைவுகளுடன் கண்டு மகிழ முடிகிறது.

திராவிட இயக்கத்தின் பெயரால் திராவிட இயக்கத்தின் கொள்கை, குறிக்கோள், இன உணர்வு, மொழியுரிமை, சமூகநீதி - ஏன்; மொத்தமாகப் பெரியார் அண்ணா இலட்சியங்களை வேரோடு புதைத்திட நாடாள்வோர் நயவஞ்சகத் திரை மறைவில் நடத்திடும் நாச நாடகத்தை நாட்டு மக்கள் உணருமாறு செய்திட; கபட வேடதாரிகளின் உண்மை வடிவத்தின் தோலுரித்துக் காட்டும் கொள்கைரீதியான பிரச்சாரங்கள் அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் தமிழ் நிலத்தில் நடைபெறக் கழக அமைப்புகள் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

கழகப் பொருளாளர், தலைமைக் கழகம் தி.மு.க. என்ற முகவரிக்கு, தேர்தல் நிதியை இன்று முதலே அனுப்பி வைத்திடும் ஆர்வம் கொள்ளவேண்டும்.

என்னைத் திருமண விழாக்களில் தலைமையேற்க அழைப்போர், ஏற்கனவே தலைமைக் கழகத்திற்கு கழக வளர்ச்சி நிதி என ஐயாயிர ரூபாய் அளித்துவிட்டே அழைக்கின்றனர்.

இனி, அத்துடன் தேர்தல் நிதியும் ஒரு கணிசமான தொகை சேர்த்து வழங்கலாம்.

மாவட்டந்தோறும் நடைபெறும் பொதுக் கூட்டங்களில் அமைப்புகள் சார்பிலும், அணிகள் மற்றும் தனிப்பட்ட ஆர்வலர்களும் தேர்தல் நிதி வழங்க முன்வர வேண்டும்.

அளித்திடும் நிதிக்கு அவ்வப்பொழுது விபரங்களும், அளித்தோர் பெயர்களும் முரசொலியில் வெளியிடப்படும் என்பதை உனக்கு நான் சொல்ல வேண்டியதில்லை; நீயே நன்கு அறிவாய்!

எனவே உடன்பிறப்பே; தேர்தலுக்காக நிதி திரட்டவும் - மக்களில் ஒரு பிரிவினரின் மதி மயக்கம் போக்கவும்;

இன்றே எழுக!

வென்றே தீருவோம்; என

நன்றே எழுக!

அனபுள ள,

மு. கருணாநிதி

03-01-1995

2225.போலித் தமிழ்வேடப் பொம்மலாட்டம்!

உடன்பிறப்பே,

உலகத்தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்ற போதும், பாரீஸ் நகரத்தில் நடைபெற்றபோதும் கோலாலம்பூரில் நடைபெற்றபோதும் அவற்றில் கலந்துகொள்ளும் வாய்ப்பினைப் பெற்றிருக்கிறேன். அந்த மாநாடுகளில் பன்னாட்டுத் தமிழ் அறிஞர்களைச் சந்தித்து அளவளாவியுமிருக்கிறேன்.

இதுவரையில் ஏழுமாநாடுகள் நடைபெற்றிருக்கின்றன. அந்த மாநாடுகளில் உலகத் தமிழ் ஆராய்ச்சிமன்றத்தின் விவாத மண்டபங்களில், கட்டுரை படிக்கவோ - கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவோ வெளிநாடுகளில் இருந்து வந்து கலந்து கொண்ட தமிழறிஞர்கள் எவரும் இன்றைக்குத் தஞ்சையில் பந்தாடப்படுவதைப்போல் என்றைக்கும் எந்தவொரு மாநாட்டிலும் அவமதிக்கப்பட்டதில்லை - அலைக்கழிக்கப்பட்டதில்லை!

தமிழ் அறிஞர்களை மாநாட்டுக்கு அழைப்பதில் விருப்பு வெறுப்பு காட்டப்பட்டுள்ளதாகக் கூறி, மாநாட்டுக்கே தடைவிதிக்க வேண்டுமென பெருங்கவிக்கோ சேதுராமன் அவர்களும் தமிழறிஞர் சச்சிதானந்தமும் நீதிமன்றத்தில் தனித்தனியாக வழக்காடியபோது; ஆராய்ச்சி மாநாட்டுக்கு அழைப்பு அனுப்புவது போன்ற காரியங்கள் அரசுக்குச் சம்பந்தப்பட்டதல்ல - அதை உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம்தான் கவனித்துக் கொள்கிறது என்று நீதிமன்றத்தில் எடுத்துரைத்து வாதாடியது ஜெயலலிதா அரசு என்பதை யாரும் மறந்திருக்க முடியாது.

ஆனால் உலக நாடுகள் அனைத்திலுமுள்ள; இலங்கை உள்ளிட்ட தமிழறிஞர்களுக்கு ஆராய்ச்சி மன்றத் தலைவர் அல்லது செயலாளர் சார்பாக அழைப்பு அனுப்பப்பெற்று, அந்தத் தமிழறிஞர்களும் கலந்து கொள்வதற்கான ஒப்புதல்களைத்

தந்து, அதனையொட்டிய கருத்தரங்குகளில் படிப்பதற்கான கட்டுரைகளையும் அவர்கள் அனுப்பி வைத்து; குறித்த நாளில் அவர்களும் தஞ்சை வந்து சேர்ந்து, அவர்களுக்கான தங்கும் விடுதிகளிலும் தங்கியான பிறகு - ஆராய்ச்சி மன்றத்தின் கவனத்திற்கே கொண்டுபோகாத நிலையில் அந்தத் தமிழறிஞர்களைப் போலீசாரை விட்டு ஜெயலலிதா அரசு வெளியேற்றியதுடன்; அவர்களை தஞ்சையிலிருந்து திருச்சிக்கும் திருச்சியிலிருந்து சென்னைக்கும் அங்கிருந்து பம்பாய்க்கும், பம்பாயிலிருந்து மீண்டும் சென்னைக்குமாக அலைமோதவிட்டிருக்கிறது.

இப்படி அவமானப்படுத்தப்பட்டவர்களில் இருவர் முறையே விடுத்துள்ள அறிக்கையும் - செய்தியாளர் பேட்டியும்; தமிழ்நாட்டில் தமிழின் பெயரால் நடத்தப்படும் ஒரு மாநாட்டில் தமிழ் அறிஞர்களுக்கு விளைவிக்கப்பட்ட கொடுமையானதும், மனிதாபிமானமற்றதுமான செயலுக்கு ஒவ்வொரு உண்மையான தமிழனையும் வெட்கித் தலைகுனியச் செய்யக் கூடியவைகளாகும்.

கார்த்திகேசு சிவத்தம்பி எனும் தமிழறிஞர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நுண்கலைப் புலத்தின் தலைவராக இருப்பவர். அவரை மாநாட்டுக் கருத்தரங்கில் கலந்துகொள்ள விடாமல் உடனடியாக இலங்கைக்கு விமானமேற்றி அனுப்பிவிட்டனர். அவரைச் செய்தியாளர்கள் சந்திப்பதற்கும் அனுமதிக்கப்படவில்லை. அவர் இலங்கை செல்வதற்கு முன்பு விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

> “நான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறேன். எட்டாவது உலகத்தமிழ் மாநாட்டில் பங்கேற்கும்படி அதன் ஆராய்ச்சிக் குழுத் தலைவர் பேராசிரியர் கரோஷிமா எனக்கு விசேஷ அழைப்பு விடுத்திருந்தார். அதன் அடிப்படையில் நான் சிறப்பு ஆய்வுக் கட்டுரை அளிக்க இசைவு தெரிவித்தேன்.
>
> பின்னர் முறைப்படியான அனுமதி பெற்று, தமிழ்நாட்டுக்கு வந்தேன். எனது மனைவியும் மகளும் என்னுடன் வந்திருந்தனர். தஞ்சாவூரில் மாநாடு முடியும்வரை தங்க அனைத்து வசதியும் செய்து தருவதாக எனக்குக் கூறப்பட்டது.

ஆனால், ஜனவரி 1-ம் தேதி இரவு, என்னை உடனடியாக இலங்கைக்குத் திரும்பும்படி அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர். காரணம் எதுவும் கூறப்படவில்லை. அதிகாரிகளே என்னை சென்னைக்கு அழைத்து வந்தனர். இங்கு சென்னைப் பல்கலைக்கழக விருந்தினர் மாளிகையில் தங்கினேன்.

நான் ஒரு தமிழ் ஆய்வாளன். வேறு எவ்வித நோக்கங்களும் எண்ணங்களும் எனக்குக் கிடையாது. முழுக்க முழுக்க தமிழ் ஆய்வு ஆர்வத்தில்தான் இங்கு வந்தேன். இந்த நிகழ்ச்சி எனக்கு மிகுந்த வருத்தத்தையும் அதிர்ச்சியையும் அளித்துள்ளது."

இன்னொரு தமிழறிஞர் ஸ்வீடன் நாட்டு உபசலா பல்கலைக்கழகப் பேராசிரியர் வேலுப்பிள்ளையாவார். சிவத்தம்பியைத் தஞ்சையிலிருந்து வெளியேற்றி இலங்கைக்கு விரட்டினர். வேலுப்பிள்ளையை திருச்சியிலேயே வழிமறித்து திருப்பி அனுப்பினர். அவர் பம்பாய் சென்று ஸ்வீடனுக்கு திரும்ப வேண்டும். முதலில் அவர் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டார். பிறகு பம்பாய்க்குப் போனார். அங்கிருந்து மீண்டும் சென்னைக்கு வர நேரிட்டது. சென்னையில் அவரைச் சந்திக்கச் சென்ற நிருபர்கள் தடுக்கப்பட்டனர். காவல்துறையை மீறிக் கொண்டு போய்த்தான் நிருபர்கள் வேலுப்பிள்ளையை சந்திக்க முடிந்திருக்கிறது.

அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்;

"சுமார் ஏழு மாதங்களுக்கு முன்பே, மாநாட்டில் பங்கேற்பதற்கான அழைப்புக் கடிதம் எனக்குக் கிடைத்தது. மாநாட்டில் பங்கேற்க உள்ள 20 சிறப்பு அழைப்பாளர்களில் நீங்களும் ஒருவராக இருக்கிறீர்கள். உங்கள் பெயரைச் சேர்க்குமாறு மாநாட்டின் தலைவர் கரோஷிமா கேட்டுக் கொண்டுள்ளார். இதை தமிழக அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இதற்கான அரசு ஆணையையும் தமிழக அரசு வெளியிட்டுள்ளது என்று மாநாட்டின் அமைப்புச் செயலாளர் டாக்டர் எஸ். ராஜாராம் எனக்குக் கடிதம் எழுதினார்.

அதன்பின் சென்ற நவம்பரில் கரோஷிமா எனக்கு ஒரு கடிதம் எழுதினார். மாநாட்டில் சிறப்பு உரை

ஆற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தார். அதற்கு ஒப்புதலளித்து கரோஷிமாவுக்கு நான் பதில் அனுப்பினேன்.

இவ்வளவு முன்கூட்டியே மாநாட்டுக்கு வரவேண்டும் என்று அழைத்தவர்கள் திடீரென்று இங்கு வந்தபின்பு மாநாட்டில் பங்கேற்க முடியாது என்று தெரிவித்தது வேதனை தருகிறது.

கடந்த 27-ம் தேதி நான் ஸ்வீடனில் இருந்து சென்னைக்கு வந்து சேர்ந்தேன். 29-ம் தேதி இரவு ஐ.ஜி. அலுவலகத்தில் இருந்து எனக்கு தொலைபேசித் தகவல் வந்தது. எனது பாதுகாப்புக்காக போலீஸ் காவல் தரப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

31-ம் தேதி சென்னையிலிருந்து திருச்சிக்கு விமானம் மூலம் சென்றேன். பல வெளிநாட்டு பிரதிநிதிகளும் என்னுடன் வந்தார்கள். திருச்சியில் இறங்கியவுடன் சில போலீஸ்காரர்கள் என்னைச் சந்தித்து தனியாக அழைத்துச் சென்றனர். பாதுகாப்பு கருதி என்னை அவ்வாறு அழைத்துச் செல்வதாக நான் கருதிக் கொண்டேன். என்னுடைய அரசியல் நிலைப்பாட்டைத் தெரிந்து கொள்வதற்காக, ஈ.பி.ஆர்.எல்.எப். மூலம் உங்களுக்கு ஆபத்து இருக்குமா என்று என்னிடம் அவர்கள் கேட்டனர்.

திருச்சியில் ஒரு ஹோட்டலில் என்னைத் தங்க வைத்தனர். தேவையான உணவை அறையிலேயே கேட்டு வாங்கிச் சாப்பிட வேண்டும் என்று கூறினர். 1-ம் தேதி காலை 10 மணிக்கு தஞ்சாவூருக்கு அழைத்துச் செல்வார்கள் என்று என்னிடம் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அன்று காலை, ஸ்வீடன் திரும்பும்படி என்னிடம் கூறப்பட்டது. இதேநிலைமைதான் சிவத்தம்பி, சண்முகதாஸ், பீட்டர் சோக், ஆகியோருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஏற்பட்டது என்று பின்னர் தெரிந்து கொண்டேன்.

அன்று பிற்பகல் போலீசார் என்னைச் சந்தித்தனர். சென்னை செல்ல தயாராகும்படி கூறினர். போலீஸ்

வேனில் ஏற்கனவே சிவத்தம்பி, பீட்டர் சோக் குடும்பத்தினர் இருந்தனர். நாங்கள் மாலையில் சென்னை வந்து சேர்ந்தோம். 3-ம் தேதி பம்பாய் சென்றேன். அங்கிருந்து இங்கிலாந்து வழியாக ஸ்டாக்ஹோம் செல்ல திட்டமிட்டிருந்தேன். ஆனால், இங்கிலாந்து வழியாகச் செல்ல விசா இல்லாததால் நான் மீண்டும் சென்னைக்குத் திரும்பநேர்ந்தது.

இந்தப் பயணத்துக்கான செலவை நானே ஏற்க நேர்ந்தது. சென்னைக்கு வந்தவுடன், ஏன் திரும்பினீர்கள் என்று சென்னை விமான நிலையத்தில் அதிகாரிகள் துருவித்துருவி விசாரித்தனர்.

இங்கிலாந்து வழியாக நான் செல்ல போலீசார் விசா ஏற்பாடு செய்து வருகின்றனர். எங்களைக் கண்டு ஏன் தமிழக அரசு பயப்படுகிறது என்று தெரியவில்லை. 62 வயதான, சரியாக நடக்கக்கூட முடியாத சிவத்தம்பி என்ன குற்றம் செய்து விடுவார் என்பதும் புரியவில்லை. எனக்கும் 58 வயதாகிறது. தொடர்ந்து என்னை ஏன் கண்காணிக்கிறார்கள் என்று புரியவில்லை. விடுதலைப்புலிகளின் ஊடுருவல் இருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது என்று போலீஸ் அதிகாரி ஒருவர் என்னிடம் கூறினார். அதற்காக, தமிழறிஞர்களைப் பழிவாங்கியிருப்பது வேதனையளிக்கிறது."

என்று மெத்தவும் உருக்கமாகக் கூறியிருக்கிறார்.

உடன்பிறப்பே, இதில் வேடிக்கை என்னவென்றால்; இப்படியொரு நிலையெடுக்குமாறு மத்திய அரசு ஆணை பிறப்பித்தது என்று கூறிய மத்திய அரசைக் கண்டிப்பவர்கள்; மாநில அரசு அதற்கு இணங்கியது வருந்தத்தக்கது என்று வழிந்திருக்கிறார்களே அதுதான்!

மத்திய அரசு இந்த வெளிநாட்டுத் தமிழறிஞர்களை வெளியேற்றச் சொன்னது என்றால்; அது வன்மையாகக் கண்டிக்கத்தக்கதுதான் - அதே நேரத்தில் மத்திய அரசின் இந்த முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்கவோ; அல்லது மறுக்கவோ மாநில அரசு முனையாமல் - போலித் தமிழ்வேடம் கட்டிக்கொண்டு பொம்மலாட்டம் ஆடுவதை மானமுள்ள தமிழன்

எவனும் பொறுத்துக் கொள்ளமாட்டான். அம்மணியிடம் தானம் வாங்கும் தமிழன் மட்டுமே; இந்தத் தமிழ் மாநாட்டில் நடந்துள்ள தகாச்செயலைத் தலைவணங்கி ஏற்றுக்கொள்வான்.

விடுதலைப்புலிகளின் பெயரை எதற்கெடுத்தாலும் இழுத்து, தாங்கள் ஒன்றும் தெரியாத அப்பாவிகளைப்போல, இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா என்று கேட்கச் செய்து, நம்பச் செய்து நடத்துகின்ற நாடகத்துக்கு வெளிநாட்டுத் தமிழறிஞர்கள்தான் பலிகடாக்களாக ஆக்கப்பட வேண்டுமா?

தன்னுடைய சுயவிளம்பரம் - சுயலாபம் - இவற்றுக்காக மட்டுமே தமிழ் என்ற பதாகையைத் தூக்கிப்பிடித்துக்கொண்டு தமிழர்களை மொத்தத்தில் ஜெயலலிதா ஏமாற்றி வருகிறார் என்பதற்கு, தஞ்சையில் அவர் நடத்தி முடிக்கும் இந்தக் கட்சி மாநாடும், தமிழறிஞர்களை வெளியேற்றி விரட்டியடித்த நிகழ்ச்சிகளும் போதுமான சான்றுகளாகும்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

06-01-1995

2226. புதிய முழக்கத்தின் பொருள் தடுமாற்றம்!

உடன்பிறப்பே,

உலகத்தமிழ்மாநாடு என்ற பெயரால் ஜெயலலிதாவையே தமிழன்னையாக சித்தரிக்கும் முயற்சியும் - ஆளுங்கட்சியினர் பல வகைகளில் ஆதாயக் கொள்ளை அடிக்கும் செயல்பாடுகளும் - தமிழறிஞர்களை விரட்டி விரட்டி வெளியேற்றுகிற அவமானகரமான நிகழ்ச்சிகளும் - தஞ்சையில் ஐந்து நாட்கள் நடைபெற்று, நிறைவு விழாவில் பிரதமர், முதலமைச்சர் உரை நிகழ்ச்சி ஒருவாறாக எல்லாமே முடிவுற்றது.

உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குகூட மிஞ்சாது எனும் பழமொழி புழக்கத்தில் இருக்கும் தஞ்சைத் தரணியில்; இந்தத் தமிழ் மாநாட்டின் வரவு செலவுகள், ஊட்டப்பட்ட உணர்வுகள், எடுக்கப்பட்ட முடிவுகள் என்று எல்லாவற்றையும் கூட்டிக் கழித்து கணக்குப் பார்த்தால் தஞ்சை மாநாட்டில் தமிழுக்காக மிஞ்சியது என்ன என்பதை ஜெயலலிதா, தனது பேச்சில் வெளியிட்ட புதிய முழக்கத்தின் வாயிலாகவே தெளிவாகப் புரிய வைத்துவிட்டார்.

மத்திய ஆட்சி மொழிகளில் இந்தியாவில் உள்ள தேசிய மொழிகள் அனைத்தும் சமத்துவமான இடம் பெற வேண்டுமென்பதும் அத்தகைய நிலையில் தமிழும் மத்திய ஆட்சி மொழியாக ஆக்கப்படும் வரையில் ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்பதும் கழகத்தின் மொழிக் கொள்கையாக இருந்த போதிலும்; மாநிலத்தில் எல்லா மட்டங்களிலும் எல்லாத் துறைகளிலும் - குறிப்பாக கல்விக் கூடங்களிலும்; ஏன் நீதிமன்றங்களில்கூட தமிழே ஆட்சி மொழியாகக் கொள்ளப்படவேண்டும் என்றும் அதற்கான பணிகள் விரைந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தப்படும் காலமாகும் இது!-

தமிழால் எல்லாத்துறைகளிலும் தாக்குப்பிடிக்க முடியுமா; என்ற கேள்வி எழுந்தபோதுகூட திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் தமிழால் முடியும் என்ற நூல் ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

1956ஆம் ஆண்டு காங்கிரசாட்சியில் தமிழ் ஆட்சி மொழிச்சட்டம் நிறைவேற்றப் பட்டது எனினும்; எதிர்பார்த்த அளவுக்கு வளர்ச்சி எல்லையை தமிழ் எட்டவே இல்லை.

1968ஆம் ஆண்டு சட்டப் பேரவையில் முதலமைச்சர் அண்ணா அவர்கள்; ஆட்சி மொழிச் சட்டம் நிறைவேற்றப்படுவது குறித்துக் குறிப்பிட்டு, ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டில் அனைத்து நிலைகளிலும் தமிழ் ஆட்சி மொழியாகவும் பயிற்று மொழியாகவும் ஆக்கப்படுமென உறுதியளித்தார்.

அண்ணா மறைவுக்குப் பிறகு அந்த உறுதிமொழியைக் கழக அரசின் சார்பில் நிறைவேற்ற முனைந்து தமிழ் பயிற்றுமொழி திட்டத்திற்கான கட்டாய ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்த ஆணையை எதிர்த்து ஒருசில முக்கிய அரசியல் கட்சிகளும், ஆசிரியர்களும் மாணவர்களும் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அதன் காரணமாகப் பல தமிழறிஞர்களின் அறிவுரையை ஏற்று; திரு. லட்சுமணசாமி முதலியார் தலைமையிலே குழு ஒன்றை அமைத்து, தமிழைப் பயிற்றுமொழியாக எடுத்துக்கொள்ளும் மாணவர்களுக்கு சில சலுகைகளும் உதவிகளும் அளிக்கப்பட வேண்டுமென்று பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கட்டாயமாகத் தமிழைப் பயிற்று மொழியக்குவதிலிருந்து கழக அரசு தன் நிலையைச் சற்றுத் தளர்த்திக் கொண்டபோதிலும்; எல்லாத்துறைகளிலும் தமிழை ஆட்சி மொழியாக்குகிற குறிக்கோளில் இருந்து மாறிடவில்லை.

தமிழால் முடியும் என்று எடுத்துச் சொன்ன நிலையைத் தொடர்ந்து எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற முழக்கம் நாட்டில் பரவலாக எழுந்தது.

இருந்தபோதிலும் மத்திய அரசில் இந்தியாவின் ஆட்சி மொழி இந்தி என்ற வாள் நமது தலைக்கு மேலே தொங்கிக் கொண்டிருப்பதால்; அந்த வாளின் தாக்குதலைத் தடுத்துத் தமிழ்ச் செல்வத்தைக் காத்திடும் கேடயமாக ஆங்கிலம் தொடர்பு மொழி எனும் நிலை நமக்குத் தேவைப்பட்டது. தேவைப்படுகிறது.

ஆனால் ஆங்கில தொடர்பு மொழி என்பது கேடயம் என்ற அளவிலே இருக்க வேண்டுமே தவிர; அதுவே பாதுகாக்கப்பட வேண்டிய நமது பரம்பரை மொழிச் செல்வமாக ஆகிவிடக் கூடாது. நாம் ஆக்கிவிடவும் கூடாது.

இந்த எண்ணத்தின் எதிரொலியாகத்தான்

எங்கும் தமிழ்

எதிலும் தமிழ்

என்ற முழக்கம் கிளம்பிற்று - இந்த முழக்கம் பலரது சிந்தையிலும் சொல்லிலும் வெளிப்பட்டுக் கொண்டிருந்தபோது; அன்றைய முதலமைச்சர் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் மதுரையில் நடத்திய உலகத்தமிழ் மாநாட்டில் இந்த முழக்கத்தை ஏற்று தமிழக அரசின் முழக்கமாக மாநாட்டில் அவர் ஆற்றிய உரையில் முழுவடிவம் கொடுத்து எடுத்தியம்பினார்.

ஆனால் அந்த முழக்கம் இன்னும் முற்றாக செயல் வடிவம் பெறவில்லை என்பதை 1956ல் தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் கொண்டு வந்த காங்கிரஸ் அரசும் - பின்னர் 1967ல் பொறுப்பேற்ற தி.மு.க. அரசும், 1971ல் பொறுப்பேற்ற தி.மு.க. அரசும், 1977 முதல் 1987 வரையில் பதவியிலிருந்த அ.தி.மு.க. அரசும், 1989ல் பொறுப்பேற்ற தி.மு.க. அரசும், 1991ல் பொறுப்பேற்ற ஜெயலலிதா அரசும் ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும்.

அப்படி முற்றாக நிறைவேறாததற்கு எத்தகைய இடையூறுகள், குறுக்கீடுகள், சங்கடங்கள் - இருந்தன என்பதையும் தமிழ் ஆட்சி மொழி ஆர்வலர்களாக உள்ள நம்மையுள்ளிட்ட அனைவருமே சிந்தித்தும் பார்க்க வேண்டும்.

ஆனால் இன்றைக்கு நமது அண்டை மாநிலங்களில் அந்தந்த மாநில மொழிகள் அந்த மாநிலங்களில் எந்த அளவுக்கு ஆட்சி மொழித் தகுதியை எல்லாத் துறைகளிலும் பெற்று ஏற்றம் பெற்று வருகின்றன என்பதை உணரும்போது; தஞ்சை உலகத்தமிழ் மாநாட்டின்போது உண்ணா நோன்பு மேற்கொள்ளச் சென்று தடியடிபட்டுச் சிறைக்கோட்டத்தில் அடைபட்ட தமிழறிஞர்கள் வைத்துள்ள கோரிக்கைகளில் அமைந்துள்ள அடிப்படை நியாயத்தை தமிழுணர்வுள்ளோர் யாரும் புறக்கணிக்க முடியாது.

நடைமுறையில் ஏற்படக்கூடிய சிக்கல்களுக்கு எப்படித் தீர்வு காண்பது என்பது சிந்தித்துத் தெளிவடைய வேண்டியது

முக்கியமே தவிர; தஞ்சை மாநாட்டின்போது போர்க்குரல் கொடுத்த தமிழறிஞர்களின் அடிப்படை உணர்வை அலட்சியப்படுத்தி விடக்கூடாது.

அவர்களது முறையீடு என்ன? முறையீடு என்பதைவிட உரிமைக்குரல் என்பதே பொருத்தமான வாசகம் ஆகும். அவை வருமாறு :-

1. ஐந்தாம் வகுப்புவரை தமிழ் மட்டுமே பயிற்று மொழி, பாடமொழியாகவும், ஆறாம் வகுப்பிற்கு மேல் ஆங்கிலத்தை பாடமாகவும் கற்றுக்கொள்ள வாய்ப்பளித்தல்.

2. தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தைத் தலைமைச் செயலகம் தொடங்கி அனைத்துத் துறைகளிலும், நிலைகளிலும் முழுமையாக நிறைவேற்றல்.

3. தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தில் காணப்படும் நெறிவிதிவிலக்குகள் அனைத்தையும் நீக்கம் செய்தல்.

4. தமிழ்வழிப் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளித்தல்.

5. பன்னிரெண்டாம் வகுப்புத் தமிழ் மதிப்பெண்ணையும், உயர் தொழில்நுட்பச் சேர்க்கைத் தகுதிக்கான மதிப்பெண்ணாகக் கணக்கிடல்.

6. மருத்துவம், பொறியியல், வேளாண்மை, சட்டம் போன்ற உயர்கல்வி நிலைகள் அனைத்தையும் தமிழ்வழித் தொடங்க விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

7. அரசுத் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகள் அனைத்தையும் தமிழிலேயே நடத்தல்.

இந்த ஏழு உரிமைகளையும் வேராகக் கொண்டு மேலும் தழைத்து செழிக்கக்கூடிய கிளைகள் - அந்தக் கிளைகளில் மலரும் பூக்கள் - பூக்கள் காயாகிக் கனியாகி - அவை குலைகளாகி தமிழர்க்குக் குதூகலமூட்டும் அந்த இனிய எதிர்காலம்தானே தமிழனாகப் பிறந்தவனின் தணியாத ஆவலாக இருக்க முடியும்.

ஆனால் அந்த ஆவலின் பொருளைப் புரிந்து கொள்ளாத உரையாக மாநாட்டில் பிரதமருக்கு முன்பாக முதல்வர் ஜெயலலிதா ஆற்றிய உரை அமைந்துள்ளது என்பது; மாநாட்டில் ஏற்பட்ட எத்தனையோ பெருங்குறைகளில் ஒரு குறையாகும்.

> "1981 ஆம் ஆண்டு ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின் இறுதியில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று முழங்கினார். சீரிய முறையில் நடைபெற்ற இந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் விளைவாக தமிழ் வளர்ச்சிக்கு, ஒரு புதிய பரிமாணத்தையும், உத்வேகத்தையும் ஏற்படுத்தி யுள்ளதை நிரந்தரமாக்கிடவும் அறிவியலிலும் தமிழ், அனைத்திலும் தமிழ் என்பதை உணர்த்திடவும் இன்றும் தமிழ், என்றும் தமிழ் என்ற புதிய முழக்கமாக அறிவிப்பதில், நான் பெருமிதமும், பேருவகையும் அடைகின்றேன்."

அதாவது; எங்கும் தமிழ் - எதிலும் தமிழ் என்ற முழக்கத்தை இன்றும் தமிழ் என்றும் தமிழ் என மாற்றி அறிவித்துள்ளாராம் ஜெயலலிதா!

முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். ஏற்று அறிவித்த முழக்கத்தைவிட; இந்நாள் முதல்வர் ஜெயலலிதா மாற்றி அறிவித்த முழக்கம் பொருள் பொதிந்தது என்றோ; நடைமுறையை விளக்குவது என்றோ; தமிழ் ஆய்ந்த நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் மனச்சாட்சிகூட நிச்சயம் ஒப்புக் கொள்ளாது. இன்றைய நிலையில் அவரது வாய்ச்சாட்சி என்ன சொல்லுமோ; அதுவும் அவர் மனச்சாட்சிக்கே தெரியும்.

இன்றும் தமிழ்
என்றும் தமிழ்

என்றால்; எப்போதும் தமிழ் இருக்கும் என்றுதான் பொருள்! எல்லா இடத்திலும் தமிழ் இருக்கும் என்ற பொருளை இந்த முழக்கம் நிச்சயம் தராது!

"பல்லுயிரும் பல உலகும்
படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்
முன்னிருந்தபடி இருப்பதுபோல்"

தமிழ் மொழி சீரிளமைத் திறமுடன் இருப்பதாக - மனோன்மணியனார் பாடினாரே; அது போலவும், என்றுமுள செந்தமிழ் என கம்பரும் குறிப்பிட்டாரே அதுபோலவும், தமிழ் என்றைக்கும் இருக்கும் எனப் பொருள் கொள்ள முடியுமே தவிர, எங்கும் - அதாவது எல்லாத் துறைகளிலும் தமிழே இருக்கும் என்று பொருள் கொள்ள முடியாது.

என்றும் தமிழ் எனில்; தமிழ் சிரஞ்சீவியாக இருக்கும் என்ற பொருளை மட்டுமே தரும் - அறிவியல் துறை ஈறாக அனைத்துத் துறையிலும் தமிழின் ஆட்சி விரிவடையும் என்ற பொருளைத் தரவே தராது! எதிலும் தமிழ் எங்கும் தமிழ் என்கிற போதுகூட; எதிலும் என்பதிலே எங்கும் என்பது அடங்குகிறது! எங்கும் என்பதிலே எதிலும் என்பது அடங்குகிறது! எனவே; எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்பதையும் - இன்றும் தமிழ் என்றும் தமிழ் என்பதையும் ஒன்றாக இணைத்து

என்றும் தமிழ் எங்கும் தமிழ் அல்லது

என்றும் தமிழ் எதிலும் தமிழ்

என முழங்குவதும்; அது வெறும் முழக்கமாக இன்றி; தமிழர்க்கு வெற்றியும், தமிழ்த்தாய்க்கு அரியாசனமும் பெற்றுத்தருகிற முழக்கமாக அமைய வேண்டுமென்பதே நமது அடங்காத தாகம்! அதனை, தஞ்சையில் நடந்த இந்தக் கட்சிப் பிரச்சார - சுயவிளம்பர மாநாடு சாதிக்க முடியாது! தன்மான உணர்வு பெற்றுள்ள தமிழர்களும் - இன்னும் அந்த உணர்வைப் பெறவேண்டிய தமிழர்களும்தான் சாதிக்க முடியும்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

07-01-1995

2227. நடுங்கா நாக்கழுகும் - நரகல் நடையழகும்!

உடன்பிறப்பே,

சென்னை இம்பீரியல் ஓட்டலில் ஒரு பாராட்டுக் கூட்டம் நடைபெற்றிருக்கிறது. தஞ்சை மாநாட்டில் கலந்துகொள்ள வெளிநாடுகளில் இருந்து வந்தவர்களுக்காக நடைபெற்ற பாராட்டுக் கூட்டமாகும் அது.

அந்தப் பாராட்டு விழாவில் தமிழக அரசின் நிதியமைச்சர் மாண்புமிகு நாவலர் அவர்கள் கலந்துகொண்டு வெளிநாட்டுத் தமிழ் ஆர்வலர்களுக்கு சந்தனமாலை அணிவித்தார், உரையும் நிகழ்த்தினார் என்று ஏடுகள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்த செய்தியில் நாவலர் அவர்களின் உரையைப் படித்து நாவலரா இப்படிப் பேசியிருப்பது என்று பலர் அதிர்ச்சியடையக் கூடும். நான் அதிர்ச்சியுமடையவில்லை, ஆச்சரியமும் கொள்ளவில்லை.

காரணம்; நாவலரின் உயர்ந்த முறையிலான சிறந்த இலக்கிய உரைகளையும் நான் கேட்டிருக்கிறேன். புள்ளி விபரங்களை அள்ளிப் பொழிந்து அவர் ஆற்றிடும் உரைகளையும் ரசித்து மகிழ்ந்திருக்கிறேன். அதே நாவலர், தரம் தாழ்ந்த வகையில் பிறர்மீது தாக்குதல் கணைகள் தொடுத்து உரை கேட்க வந்தவர்களின் ஆர்வத்தைக் குலைத்தது மட்டுமல்ல; முகஞ்சுளிக்க வைத்த நிகழ்ச்சிகள் பலவற்றையும் நேரடியாகக் கண்டு வருந்தியுமிருக்கிறேன்.

காங்கிரசாட்சி நடைபெற்ற காலத்தில் காமராஜர், பக்தவத்சலம், கக்கன், இராமையா, வெங்கட்ராமன், சுப்பிரமணியம் போன்ற அமைச்சர் பெருமக்களை விமர்சிப்பதாகக் கருதிக்கொண்டு, மேடைகளில் நாவலர் அவர்கள் அந்த அமைச்சர்களின் பெயர்களை; காமன், கக்கன், பக்தன், ராமன், வெங்கன், சுப்பன் என்றெல்லாம்

பேசுவதை; அண்ணா அவர்களே பலமுறை தடுத்துச் சொல்லியும் கூட நாவலர் அதைக் காதில் போட்டுக் கொண்டதில்லை. அந்தக் கச்சேரியை தொடர்ந்து நடத்திக் கொண்டுதானிருந்தார்.

1972க்குப் பிறகு எம்.ஜி.ஆர். அவர்கள் புதிய கட்சி தொடங்கி விட்ட காலகட்டத்தில் நாவலர் அவர்கள் எம்.ஜி.ஆரை மேடையிலேயே கொடியில் அண்ணா படம் போட்ட கிறுக்கன் என்று பேசியது மட்டுமல்ல; கூட்டத்துக்குக் கூட்டம், அவர்; எம்.ஜி.ஆருடன் படங்களில் நடித்த கதாநாயகிகளின் புகைப் படங்களை எடுத்து மக்கள் முன்னிலையில் காட்டிக்கொண்டே; அவர் செய்த ஆபாச வர்ணனைகள், அப்போது முதலமைச்சராக இருந்த நான் எத்தனையோ முறை; கல்வி அமைச்சரான நாவலரிடம் கண்டிப்பாகச் சொல்லத் தயங்கிக் கொண்டு, கனிவுடன் சொல்லி அத்தகைய இழிநிலைத் தாக்குதலை நிறுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டிருக்கிறேன். பலனில்லை.

அதனால்தான் அவர் வெளிநாட்டுத் தமிழ் ஆர்வலர்களுக்கு பாராட்டு நடத்தி சந்தன மாலை அணிவித்த இம்பீரியல் ஓட்டல் விழாவில் பேசியதை ஏடுகளில் படித்து நான் அதிர்ச்சி அடையவில்லை, ஆச்சரியப்படவில்லை என்று கூறுகிறேன்.

வெளிநாட்டுத் தமிழறிஞர்கள் சிலரை நாங்களா திருப்பி அனுப்பினோம்? அவர்கள்மீது சந்தேகப்பட்டதால், மத்திய அரசு அவர்களைத் திருப்பி அனுப்பியது

என ஒரு தகவலை நிதியமைச்சராக இருக்கும் நாவலர், அந்தப் பாராட்டு விழாவில் எடுத்துரைத்துள்ளார். நாவலரின் இந்தத் தகவல் உண்மையாகவே இருந்தாலும் - இலங்கை, ஸ்வீடன் தமிழறிஞர்களை திருப்பி அனுப்பப்பட்டதற்கு மத்திய அரசே காரணம் என்பது உண்மையாகவே இருந்தாலும்; தமிழக அரசு மத்திய அரசுக்கு விளக்கமாக எடுத்துரைத்திருக்கக் கூடாதா? மத்ய அரசின் நிலையை மறு ஆய்வு செய்திட வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்தியிருக்கக் கூடாதா?

சரி; மத்திய அரசின் தாக்கீதின்படிதான் அந்தத் தமிழறிஞர்கள் திருப்பியனுப்பப்பட்டார்கள் என்பதை வாதத்திற்காக ஏற்றுக்கொண்டாலும்; அவர்களைத் திருப்பி அனுப்பிட மாநில அரசு கையாண்ட அநாகரீகமான முறைகள் அறிவு நாணயம் படைத்தவர்கள் எவரும் ஏற்றுக்கொள்ளும் முறைகள்தானா?

மாநாட்டு விழாவுக்கு அழைப்பின்பேரில் வந்தவர்களை; திருப்பி அனுப்புகிற ஒரு தர்மசங்கடமான நிலைமை தமிழக அரசுக்கு ஏற்பட்டிருக்குமேயானால்; அவர்களை கௌரவமான முறையில் வழி அனுப்பி வைத்திருக்கக்கூடாதா?

ஏதோ; திருவிழாவில் திருடவந்து அகப்பட்டுக் கொண்டவனை நடத்துவதுபோல, அவ்வளவு கேவலமாக அல்லவா மாநில அரசு அதிகாரிகள் அந்தத் தமிழறிஞர்களை நடத்தியிருக்கிறார்கள்!

தமிழறிஞர் சிவத்தம்பி, கையில் பணத்திற்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுக் கண்கலங்கினார் என்ற செய்தி; தமிழ்நாட்டுக்குப் பெருமைதரக்கூடிய செய்தியா?

இன்னொரு தமிழறிஞர் வேலுப்பிள்ளை; திருச்சிக்கும் - சென்னைக்கும் - சென்னைக்கும் பம்பாய்க்கும் - பம்பாய்க்கும் சென்னைக்குமாகப் பந்தாடப்பட்டு; நிருபர்களைச் சந்திக்கக்கூட தடைபோட்டு - அவரை அங்குமிங்கும் அலைக்கழித்திருக்கிறது ஜெயலலிதா அரசு!

இந்த அநியாயங்களுக்கு மத்திய அரசின் ஆணைதான் காரணமா? அவர்களை வெளியேற்றுமாறு மத்திய அரசு உத்தரவிட்டிருந்தால்; அது உண்மையாக இருந்தால்; அது மத்திய அரசின் மமதையை மட்டுமல்ல; மந்த மதியையும் புலப்படுத்துகிறது! அதைக் கேட்டு, மாநில ஜெயலலிதா அரசு தமிழறிஞர்களை இத்துணை அவதிகளுக்கு ஆளாக்கியது; இங்குள்ள தமிழர்களின் தன்மானத்துக்கு விடப்பட்ட அறை கூவலாகவே அமைகிறது!

நிதியமைச்சர் மாண்புமிகு நாவலர் அவர்கள் தஞ்சை மாநாட்டின்போது; தமிழ்நாட்டில் உள்ள தமிழறிஞர் பெருமக்கள் பெருங்கவிக்கோ சேதுராமன் தலைமையிலும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமையிலும் - தமிழ் ஆட்சி மொழியாகவும் - தமிழரும் தமிழும் உரிமைகள் பெறவும் அமைதியான முறையில் அறப்போர் நடத்திட முனைந்தது குறித்தும் அவர்கள் கைது செய்து சிறையிலடைத்தது பற்றியும் இம்பீரியல் ஓட்டல் விழாவில் பேசியிருக்கிறார்.

அரசின் சட்டத்தை மீறினார்கள் - எனவே கைது செய்யப்பட்டார்கள் என்ற அளவில் பேசி; அந்தப் பிரச்சினைக்கு

நாவலர் முற்றுப்புள்ளி வைத்திருக்கலாம். ஆனால் அவரது இயல்பு அதற்கு இடம் தரவில்லை. தமிழறிஞர்கள் சுமார் இருநூறு பேர் கைது செய்யப்பட்டது பற்றி நாவலர் என்ன கூறியிருக்கிறார் தெரியுமா?

தமிழ் அறிஞர்களைக் கைது செய்யலாமா? என்று கேட்கிறார்கள், கலாட்டா செய்பவர்களை, அயோக்கியர்களை கைது செய்யாமல் வேறு என்ன செய்வது?

இப்படி வீரஉரை நிகழ்த்தியிருக்கிறார் நாவலர் பெருமான்!

திருமண வீட்டில் ஒப்பாரியை அனுமதிக்க முடியுமா?

என்றும் நாமணக்க, நாவில் தமிழ்த் தேன் மணக்க, நாவலர் இப்படியொரு கேள்வியும் கேட்டிருக்கிறார். ஏடுகளில் வந்துள்ள செய்தியைத்தான் எழுத்து மாறாமல் அப்படியே சுட்டிக்காட்டியிருக்கிறேன்.

தமிழறிஞர்களுக்கு, தமிழாய்ந்த பெருமான் நாவலர் தரும் சிறப்பு மொழிகளைக் கண்டனையா?

* கலாட்டாக்காரர்கள்
* அயோக்கியர்கள்

தமிழை உரிய இடத்தில் அமர்த்துக; ஆட்சி மொழியாக்கும் செயலை முழுமைப்படுத்துக - என்று அந்தத் தமிழறிஞர்கள் ஒலித்திட்ட முழக்கம்; நாவலர் செவிகளில் ஒப்பாரியாகக் கேட்டிருக்கிறது!

ஏன் பேசமாட்டார்கள் நாவலர்கள்; இன்னமும் வளைந்து, வணங்கி, கூனிக் குறுகிக் கும்பிட்டு, பதவிக்கோ - பணத்துக்கோ, பவிசுக்கோ - தமிழர் மானத்தையே விலைகூறக்கூடிய சிலர், தமிழறிஞர்களாக - தமிழ்ப் புலவர்களாக - தமிழ்க் கவிஞர்களாக - தமிழ் ஆர்வலர்களாக; அவர்களின் காலைச் சுற்றிக் கொண்டிருந்தால்

தமிழுக்காகக் கொடுக்கும் குரல்
ஒப்பாரியாகவும்
தமிழுக்காக அறப்போர்க்கொடி உயர்த்தும் தமிழறிஞர்கள்
கலாட்டாக்காரர்களாகவும்
அயோக்கியர்களாகவும்

தான்; எள்ளி நகையாடப்படுவார்கள்! தமிழர் விரோதக் கள்ளிச்செடியாம் இந்த ஆட்சி வேரோடு கெல்லி எறியப்படும் வரையில் தமிழனுக்கு மானமேது? மதிப்பேது? எதிர்காலத் தமிழ்ச் சமுதாய நல்வாழ்வுக்கு உத்திரவாதம்தான் ஏது?

நடுங்கா நாக்கழகர்
நரகல் நடையழகர்

என்று அண்ணா அவர்கள்; ஒரு காலத்தில் யாருக்கோ சொன்னது; நடமாடும் பல்கலைக்கழகமென அண்ணா அவர்களாலேயே புகழப்பட்ட நாவலருக்கே பொருந்துமென்று அண்ணா அவர்களே அப்போது எண்ணியிருக்கமாட்டார்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

09-01-1995

2228. தேவர் திருமகன் கேள்விக்கு என்ன பதில்?

உடன்பிறப்பே,

அந்நிய நாட்டுக்கு உளவு சொல்லுதல், அந்நிய நாட்டு வியாபாரத் தொடர்பில் ஊழல் செய்தல், கடத்தல் போன்ற தொழில்களைத் திட்டமிட்டுப் பெருமளவு செய்வதின் மூலம் நாட்டின் பொருளாதாரத்தில் முடக்கத்தை ஏற்படுத்தும் சதிக்கு உடந்தையாக இருத்தல், விண்வெளி விஞ்ஞான நுட்பங்களைப் பிறநாடுகளுக்கு விற்பனை செய்தல் போன்ற தேசத்துரோகங்களையும் மற்றும் தேசத்துக்குள்ளாகவே நடைபெறும்; சமுதாயத்தை ஏமாற்றும் மோசடிகளையும் கண்டுபிடித்துத் தண்டனை வழங்கவும் - நிரந்தரமாகத் தடுத்து நிறுத்தவும் ஒற்றர் துறைகள், உளவுத் துறைகள் எனவும், வருமானவரித்துறை எனவும், சுங்கத்துறை எனவும், காவல்துறை எனவும், நீதித்துறை எனவும் பல துறைகள் இருக்கின்றன.

இந்தத் துறைகளே; அரசியல் விருப்பு வெறுப்புகள் - வேண்டியவர் வேண்டாதவர் எனும் நிலைகளுக்கு அப்பாற்பட்டுத் தங்கள் கடமைகளைத் தூய்மையாக நிறைவேற்றினால்தான்; இந்த நாட்டின் அச்சு முறியாமல் இருக்க முடியும். அதற்கு மாறாக; அரசியல் ரீதியான தாட்சண்யங்களுக்கு; நான் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டு வகையறாவில்; அரசியல்வாதிகள் சிலரே நேரடியாகவோ முறைமுகமாகவோ ஈடுபட்டிருப்பதின் காரணமாக, அவர்களின் தலையீட்டுக்கும் இந்தத்துறைகள் ஒத்துப்போகும் நிலை ஏற்படுமானால்; பசும்பொன் தேவர் திருமகன் கேட்டதுபோல; மங்கை சூதகமானால் கங்கையில் மூழ்கலாம் - கங்கையே சூதகமானால் எங்கே மூழ்குவது? என்றுதான் நாடும், நாட்டு மக்களும் கேட்க வேண்டியிருக்கும்.

நீ மறந்திருக்கமாட்டாய் என்று நம்புகிறேன்; இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் ரகசியங்களை அந்நிய நாடுகளுக்குக் கடத்திய சதியில் இந்திய விஞ்ஞானிகளும், விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் அலுவலர் சிலரும் ஈடுபட்டதாகக் கைது செய்யப்பட்டது அண்மையில் வந்த செய்தியாகும்.

இஸ்ரோ எனப்படும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் விஞ்ஞானிகளான டி. சசிகுமார், நம்பி நாராயணன், கர்நாடகத்தைச் சேர்ந்த தொழில் அதிபர்கள் சர்மா, சந்திரசேகரன் - மாலத்தீவைச் சேர்ந்த பெண்கள் மரியம் ரஷிதா, ஃபௌசியா ஆகியோர் கைது செய்யப்பட்டோர் பட்டியலில் அடங்குவர்.

ஊழல் தடுப்புச் சட்டத்தின்படியும், அரசு ரகசியக் காப்புச் சட்டத்தின்படியும் எர்ணா குளம் தலைமைக் குற்றவியல் மாஜிஸ்டிரேட்டிடம் இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஆனால் இந்த செய்தி மிகுந்த பரபரப்புடன் வெளியானபோது; இந்தக் குற்றவாளிகள் விஷயத்தில் அரசு மிகுந்த கண்டிப்புடன் நடந்து கொண்டு - தேசத்துரோகம் செய்பவர்களுக்கு இனி அப்படியொரு எண்ணம் வராத அளவுக்குத் தண்டனை பெற்றுத் தரும் என்று நாம் எண்ணியதற்கு மாறாக காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த வழக்கு சம்பந்தமாக இதோ ஏடுகளில் வந்துள்ள செய்தி விபரத்தைப் படித்துப் பார்த்தாலே; கங்கையே சூதகமாகிவிட்டாள் என்ற முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கும். இதோ அந்தச் செய்தி :-

"இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் இஸ்ரோ ஆராய்ச்சி மற்றும் ராக்கெட் ரகசியங்களை அன்னிய நாடுகளுக்குக் கடத்தியதாகக் கைது செய்யப்பட்ட 6 எதிரிகளை ஜாமீனில் விடுவதற்கு மத்திய புலனாய்வுப் பிரிவு சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்ற நீதிபதி பி.எஸ். சிவானந்தம் இன்று மறுத்தார்.

இஸ்ரோவைச் சேர்ந்த இரு விஞ்ஞானிகள் உள்பட 6 எதிரிகளையும் ஜாமீனில் விடுவதை சி.பி.ஐ. கடுமையாக ஆட்சேபிக்காத நிலையிலும் ஜாமீன் மனுக்களை நீதிபதி நிராகரித்தார்.

இந்த வழக்கை விசாரித்து வரும் சி.பி.ஐ.யின் போக்கு குறித்து அதிருப்தி தெரிவித்த கேரள உயர்நீதிமன்றம் சி.பி.ஐ.யின் புலனாய்வு அறிக்கையைத் தீவிரமாகப் பரிசீலிக்கும்படி அதன் இயக்குநருக்கும், இந்த வழக்கு தொடர்பான அனைத்து ஆவணங்களையும் ஜன. 9ம் தேதிக்குள் தாக்கல் செய்யும்படி ஆய்வு, பகுப்பாய்வுப் பிரிவு ரா மற்றும் மத்திய துப்பறியும் பிரிவு சி.ஐ.பி. ஆகியவற்றுக்கும் உத்தரவிட்டுள்ளதைத் தொடர்ந்து ஜாமீன் மனுவை இந்தச் சிறப்பு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

நாட்டின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட இது போன்ற முக்கிய வழக்கில் அக்கறையில்லாமலும் அமைதியாகவும் அரசு தரப்பு இருப்பதைத் தம்மால் ஒத்துக்கொள்ள இயலவில்லை. இந்த நிலையில் எதிரிகள் அனைவரின் ஜாமீன் மனுக்களையும் நிராகரிப்பதே நியாயம், முறையானது எனத் தாம் கருதுவதாக நீதிபதி சிவானந்தம் குறிப்பிட்டார்.

இந்த வழக்கு தொடர்பாக விசாரணை நடத்துவதாக நீதிமன்றத்தில் சி.பி.ஐ. குறிப்பிட்டுள்ள நிலையில், சுயேச்சையான, குறுக்கீடு இல்லாத வகையில் முழுமையான விசாரணை நடந்து முடிந்த பின்னரே குற்றத்தின் தன்மையை மதிப்பிட முடியும். எனவே, இந்த நிலைமையில் எதிரிகளை ஜாமீனில் விடலாமா என்பதைத் தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது என்றும் நீதிபதி குறிப்பிட்டார்.

எதிரிகளில் நால்வர் இந்தியராதலால் அவர்களைச் ஜாமீனில் விடுவது விசாரணைக்கு உதவியாக இருக்கும் என்ற சி.பி.ஐ.யின் வாதத்தை நீதிபதி ஏற்றுக் கொள்ளவில்லை.”

இந்தச் செய்தியைப் படிக்கும் நமக்கு ஒருவகையான அதிர்ச்சியும் ஐயப்பாடும் தோன்றுவதில் ஆச்சரியமிருக்க முடியுமா?

குற்றம் சாட்டப்பட்டுக் கைதாகியிருப்பவர்களை ஜாமீனில் விடுமாறு, குற்றம் சாட்டப்பட்டவர்களின் சார்பில் வழக்கறிஞர்கள் வாதாடுவதும் - அவர்களை ஜாமீனில் விடக்கூடாது

என்பதற்கான காரணங்களை எடுத்துவைத்து போலீஸ்துறை, அல்லது உளவுத்துறை, அல்லது புலனாய்வுத்துறை சார்பில் வாதாடுவதும்தான் நாம் கண்டு வரும் நீண்ட நெடுங்காலக் காட்சியாக நீதிமன்றங்களில் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும்போது;

இந்தத் தேசப்பாதுகாப்புத் தொடர்புடைய வழக்கில்; குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களை ஜாமீனில் விடுவிப்பதால் உதவியே தவிர கெடுதி ஒன்றுமில்லையென சி.பி.ஐ. வாதிட்டிருப்பதை வேடிக்கை என்பதா? விபரீதம் என்பதா?

இந்த வேடிக்கை விபரீதத்திற்கிடையே ஒளிந்து கொண்டிருக்கும் மர்மம்தான் என்ன? அந்த மர்மத்திற்கு மத்திய அரசின் பங்களிப்பு யாது?

கேரளத்தில் இப்படியொரு தேசத்துரோக நடவடிக்கை - அதற்கு சல்லாத்துணி போட்டு மறைக்க; அந்த மாநில காங்கிரஸ் அரசும் - மத்திய காங்கிரஸ் அரசும் புலனாய்வுத்துறை போன்ற துறைகளைத் திசைதிருப்பித் தங்கள் விருப்பத்திகேற்றாற்போல் நடந்து கொள்ளுமாறு பணித்துள்ளன என்பதை இந்த ஜாமீன் விவகாரத்தில் நீதிமன்றம் கோடிட்டுக் காட்டியுள்ள வாசகங்கள் நமக்கு சுட்டிக்காட்டத் தவறவில்லை.

அதேபோலத்தான் தமிழ்நாட்டில் மாநில அரசும் - மத்திய அரசும்; அண்மையில் கம்ப்யூட்டர் பாகங்கள் கடத்தப்பட்ட சதியில் ஏதோ அடிப்பது போல் அடிக்கிறேன் அழுவது போல அழு எனும் கிராமீயப் பழமொழிக்கொப்ப, ஒரு அ.தி.மு.க. எம்.பி.யைக் கட்சியை விட்டு ஜெயலலிதா விலக்கினார் - ஆனால் இன்னும் இரண்டு மூன்று எம்.பி.க்களுக்கு அதில் தொடர்பு உண்டு எனச் செய்திகள் வருகின்றன.

எனினும், காபிபோசா - கள்ளக்கடத்தல் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளவர்கள் போக, இனியும் கைது செய்யப்பட வேண்டியவர்கள் சிலர் உள்ளனர் எனும் தகவல்கள் பரவலாக இருக்கின்றன.

இந்தக் கடத்தல் பற்றியும் ஏடுகளில் வந்துள்ள செய்திகளை நாடு கூர்ந்து கவனித்துக் கொண்டுதானிருக்கிறது. இதோ; அந்தச் செய்தி வருமாறு :-

காபிபோசா சட்டத்தின் கீழ் இதுவரை எந்த எம்.பி.யும் கைது செய்யப்படவில்லை. இந்த சட்டத்தின் கீழ் ஒரு எம்.பி.யை கைது செய்து முன் உதாரணத்தை ஏற்படுத்தவேண்டாம் என்று நிதி அமைச்சகம் கருதுவதாகத் தெரிகிறது. காபிபோசா சட்டத்தின் கீழ் ஸ்ரீதரன் எம்.பி.யை கைது செய்வதிலும் சில நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. மத்திய அரசு அதிகாரிகளிடையே இரு வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. ஒரு தரப்பினர் ஸ்ரீதரன் எம்.பி.யை கைது செய்தே தீரவேண்டும் என்று கூறுகின்றனர். மற்றொரு தரப்பினர் அவ்வாறு கைது செய்யப்படவேண்டியது இல்லை என்று கூறுகின்றனர்.

மத்திய பொருளாதார உளவுப் பிரிவில் இணைச் செயலாளராக கே.எல். வர்மா ஐ.ஆர்.எஸ். உள்ளார். அவர் இம்மாதம் 6-ந் தேதி வெள்ளிக்கிழமை அன்று 2 பக்க குறிப்பு ஒன்றை எழுதி அனுப்பினார். அவரது அலுவலகத்திற்கும் நிதி அமைச்சகத்திற்கும் இடையே 4 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. இந்த தூரத்தை கோப்பு கடப்பதற்கு 2 நாட்கள் ஆகியுள்ளன. அரசுப் பணி எவ்வளவு வேகமாக நடைபெறுகிறது என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த முக்கிய ஐ.பி.எஸ். அதிகாரி ஒருவருக்கும் கம்ப்யூட்டர் பாகங்கள் கடத்தல் விவகாரத்தில் தொடர்பு உண்டு என்று ரவிச்சந்திரன் கொடுத்த வாக்குமூலத்தில் இருந்து தெரிய வந்து உள்ளது. இதற்கிடையே இந்த பிரச்சினையை திசை திருப்பவேண்டும் என்பதற்காக பல நடவடிக்கைகளை மாநில அரசும் மத்திய அரசும் எடுக்க முயற்சிப்பதாக தெரிகிறது.

ஸ்ரீதரன் எம்.பி.யை மட்டும் பலிகடா ஆக்கி அவர் மீது மிகக்கடுமையான நடவடிக்கை எடுத்துவிட்டால் மற்றவர்கள் மீது கவனம் திரும்பாது என்ற வியூகத்தின் அடிப்படையில் அவருக்கு கடுமையான தண்டனை அளிக்கப்படும் என்று கூறப்படுகிறது. ஹமீதும், ரவிச்சந்திரனும் கொடுத்து உள்ள வாக்குமூலத்தால்

டெல்லியிலும் சென்னையிலும் அதிர்ச்சி அலைகள் ஏற்பட்டு உள்ளன. ஸ்ரீதரன் எம்.பி.யிடம் உயர்மட்ட விசாரணை நடத்தப்படும்போது மேலும் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தங்களது பெயரும் வெளியாகி விடுமோ என்ற பயத்தில் முக்கிய அரசியல் பிரமுகர்கள் பலர் எதிர் நடவடிக்கைகளில் இறங்கி உள்ளனர்.

உடன்பிறப்பே; இந்தச் செய்திகளையெல்லாம் படிக்கும்போதும் - படித்துவிட்டுச் சிந்திக்கும்போதும்;

மத்தியில் உள்ள அரசும்

மாநிலத்தில் உள்ள அரசுகள் சிலவும்

குறிப்பாக ஜெயலலிதா அரசும்

கேரளத்து காங்கிரஸ் அரசும்

தேசத்துரோகக் குற்றங்களுக்கே துணை போகிற அளவுக்கு - முக்கியமான துறைகளைக் கூட திசைதிருப்புகிற முயற்சியிலே ஈடுபடுவதை எண்ணிடும் போதும்;

மங்கை சூதகமானால் கங்கையில் மூழ்கலாம்; கங்கையே சூதகமானால் எங்கே மூழ்குவது? என்ற தேவர் திருமகனின் கேள்விக்கு எங்கு சென்று பதிலைத் தேடுவது?

அன்புள்ள,

மு. கருணாநிதி

10-01-1995

2229. படவிழாவில் ஒரு பட்ஜெட் பிரசங்கம்!

உடன்பிறப்பே,

புதிய திரைப்படத் தொடக்க விழா நிகழ்ச்சியொன்றில் முதலமைச்சர் ஜெயலலிதா கலந்து கொண்டார். அந்த விழாவில் பேசியவர்களில் ஒருவரான இயக்குநர் நண்பர் பாரதிராஜா அவர்களும், தயாரிப்பாளர் நண்பர் சரவணன் அவர்களும் மராட்டிய மாநிலத்தைப்போல திரைப்படத்துறைக்கு நிதியாதார உதவிகள் செய்ய வேண்டுமென்று முதலமைச்சரைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பதில் சொல்ல வந்த முதலமைச்சர் ஜெயலலிதா ஒரு பட்ஜெட் பிரசங்கமே செய்து முடித்துவிட்டார். அவரது முழுப்பேச்சு விபரம் தினத்தந்தியில் வெளிவந்துள்ளது

> எத்தனையோ பேரை நல்லவர்களாகக் கடைசி வரையில் காட்டி, இறுதியில் அவர்களால்தான் இத்தனை கொடுமையும் விளைந்தது என்று அவர்களின் சுயஉருவத்தைத் தோலுரித்துக் காட்டும் சகலகலா வல்லவர்களாக விளங்கும் கலைத்துறையினர் முன்னே; எது வேண்டுமானாலும் தப்புத் தவறுமாகப் பேசலாம் என்ற தைரியம், முதலமைச்சர் என்பதால் ஜெயலலிதா அவர்களுக்கு வந்துவிட்டது போலும். அதனால்தான் அவர் பட்ஜெட் குறித்து வாய்க்கு வந்தவாறு பேசியுள்ளார்.

ஆட்சிப் பொறுப்பில் இருந்தவன் என்ற முறையில் அதற்கு பதில் கூறாவிட்டால்; என் கடமையிலிருந்து தவறியவனாவேன். அந்த விழாவில் அவர் பேசியது என்ன? ஜெயலலிதா; தான் முதல்வராகப் பொறுப்பேற்ற போது, 1,200 கோடி ரூபாய் பற்றாக்குறையாக இருந்தது என்றும், அதை சரிக்கட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம் என்றும் கூறியிருக்கிறார்.

ஜெயலலிதா முதல்வராக பதவியேற்று சட்டப்பேரவையிலே 4.9.1991 அன்று வைத்த முதல் நிதி நிலை அறிக்கையில் என்ன கூறினார்கள்?

> "1991-92இல் மொத்தப் பற்றாக்குறை ரூபாய் 477.41 கோடியென மதிப்பிடப்பட்டுள்ளது. 1990-91 திருத்த மதிப்பீட்டின்படி, முடிவான பற்றாக்குறை ரூபாய் 207.94 கோடியுடன், 1991-92ல் மொத்தப் பற்றாக்குறை ரூபாய் 785.35 கோடியாக இருக்கும் நிதி நிலை அறிக்கை 1991-92 - பக்கம் 82."

1991இல் நிதி நிலை அறிக்கையைப் படித்த போது மொத்த பற்றாக்குறை 785.35 கோடி ரூபாய் மட்டுமே இருக்குமென்று அப்போது ஜெயலலிதா ஆட்சியின் நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல; 1990-91ன் திருத்த மதிப்பீட்டின்படி இறுதிப் பற்றாக்குறை 207.94 கோடிதான் என்றும் அந்த நிதி நிலை அறிக்கையே குறிப்பிடுகிறது. ஆனால் இப்போது ஒரு திரைப்பட விழாவிலே சென்று தாங்கள் பொறுப்பேற்ற போது 1991ல் 1,200 கோடி ரூபாய் பற்றாக்குறை இருந்ததாக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்திருக்கிறார். அதாவது தி.மு.க. ஆட்சி 1,200 கோடி ரூபாய் பற்றாக்குறை வைத்துவிட்டுப் போனதாக பொய் கூறியுள்ளார். 6.3.1992 அன்று நிதி அமைச்சர் நாவலர் பேரவையிலே வைத்த நிதி நிலை அறிக்கையிலே என்ன குறிப்பிடுகிறார்?

> "1991-92 திருத்த மதிப்பீடுகளின் படியான இறுதி நிலைப் பற்றாக்குறை ரூ. 401.47 கோடியுடன் சேர்த்து 1992-93ஆம் ஆண்டின் முடிவில் ஒட்டுமொத்த பற்றாக்குறை 619.09 கோடியாக இருக்கும். 92-93 நிதி நிலை அறிக்கை - பக்கம் 76"

அடுத்த ஆண்டு; 12.3.1993 அன்று நாவலர் பேரவையிலே வைத்த நிதிநிலை அறிக்கையிலே என்ன கூறுகிறார்?

> "1992-93 திருத்த மதிப்பீடுகளின்படி எதிர்பார்க்கப்படும் இறுதி நிலைப்பற்றாக்குறை ரூ. 275.94 கோடியுடன் சேர்த்து, 1993-94 ஆம் ஆண்டின் முடிவில் ஒட்டுமொத்தப் பற்றாக்குறை ரூ. 635.89 கோடியாக இருக்கும் 93-94 நிதிநிலை அறிக்கை - பக்கம் 82"

என்றுதான் நிதியமைச்சர் நாவலர் கூறியிருக்கிறார்.

ஆக இதிலிருந்தெல்லாம் - ஜெயலலிதா பொறுப்பேற்றபோது பற்றாக்குறை 1,200 கோடி ரூபாய் அளவிற்கு இருந்தது என்று கூறியிருப்பது தவறானது மட்டுமல்ல; சினிமாக் கலைஞர்கள் இதையெல்லாம் சிந்திக்க மாட்டார்கள்; அப்படியே சிந்தித்தாலும் வெளியே பேச மாட்டார்கள் என்ற ஒரு தவறான நம்பிக்கைதானே! திரைப்படத் துறையினர் முன்னே ஜெயலலிதா இதை மாத்திரம் கூறவில்லை. மேலும் அவர்,

இதுவரை தமிழகத்தை ஆண்டா ராஜாஜியாகட்டும், காமராஜராகட்டும், பக்தவத்சலமாகட்டும், அண்ணாவாகட்டும், கலைஞராகட்டும், எம்.ஜி.ஆராகட்டும், எல்லோருமே உபரி பட்ஜெட்டை வைத்தே ஆட்சி செய்தார்கள். நான்தான் பற்றாக்குறை பட்ஜெட்டை வைத்துக்கொண்டு ஆட்சி புரிந்து வருகிறேன் என்றும் கூறியிருக்கிறார். முதலமைச்சர் ஜெயலலிதாவின் இந்தத் தகவலாவது உண்மையா?

மீண்டும் தி.மு.கழகத்தின் அரசு அமைந்து 25.3.89 அன்று நான் நிதிநிலை அறிக்கை படித்தபோது அதிலே என்ன குறிப்பிட்டிருக்கிறேன் தெரியுமா?

1989 - 90 இறுதியில் மொத்தமாக ரூ. 325.07 கோடி அளவுக்குப் பற்றாக்குறை ஏற்படும் என்று மதிப்பிட்டிருக்கின்றது. அடுத்து 17.3.90 பேரவையில் நான் படித்த நிதிநிலை அறிக்கையிலேகூட - 1990 - 91 முடிவில் 510.10 கோடி மொத்த பற்றாக்குறையாக இருக்கும். அண்மையில் செய்த மதுவிலக்கு மாறுதல் ஏற்பாடுகளிலும், ஆயத் தீர்வையிலும் நாம் எடுத்துள்ள முடிவுகளின் காரணமாக கூடுதல் வருவாயாக ரூ. 180 கோடி கிட்டும் என்று எதிர்பார்ப்பதால், அந்த அளவுக்கு மொத்தப் பற்றாக்குறை ஈடு செய்யப்பட்டு, ரூ. 330.10 கோடி அளவுக்குக் கொண்டு வரப்படும். இந்த அளவுக்கு நிற்கும் பற்றாக்குறையை சமாளிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம் என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றேன். இதிலிருந்து நான் முதல்வராக இருந்தபோது உபரி பட்ஜெட் இல்லை என்பதை தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும்.

முதல்வர் ஜெயலலிதா குறிப்பிட்டிருப்பது போல எம்.ஜி.ஆர். ஆட்சியிலும் பற்றாக்குறை பட்ஜெட் என்பது இல்லாமல் இல்லை.

அதற்கு ஆதாரமாக 1987-88 நிதிநிலை அறிக்கையில் 23 ஆம் பக்கத்தில் 1987-88 ஆம் ஆண்டு ஆண்டு தொடக்கத்தில் 26.11 கோடி ரூபாய் பற்றாக்குறை இருக்கும்போது அந்த ஆண்டு இறுதியில் 206.69 கோடி ரூபாய் பற்றாக்குறை இருக்கும் என்றுதான் எம்.ஜி.ஆர். ஆட்சியில் பேரவையில் நிதிநிலை அறிக்கை வைக்கப்பட்டது. இதைப்போய் உபரி பட்ஜெட் என்று ஜெயலலிதா சொல்லி கலையுலகினர் காதுகளில் பூச்சுற்ற முயற்சி செய்யலாமா?

ராஜாஜி காலமோ, காமராஜர் காலமோ, அண்ணா காலமோ, பக்தவத்சலம் காலமோ, எம்.ஜி.ஆர். காலமோ; என் தலைமையில் ஆட்சி நடந்த காலமோ - அல்லது இப்போது ஜெயலலிதா அவர்களின் ஆட்சிக் காலமோ; பட்ஜெட்டில் பற்றாக்குறையா? உபரியா? என்பதைவிட ஊதாரித்தனமான - ஆடம்பரமான - தேவையற்ற - மக்கள் நல்வாழ்வுக்குத் தொடர்பில்லாத - நீண்டகால தொலைநோக்கு திட்டங்கள் பற்றிய கவலை இல்லாத செலவினங்களைத் தவிர்த்துவிட்டு மாநில வளர்ச்சியொன்றையே குறிக்கோளாகக் கொண்டு ஆட்சி நடைபெறுகிறதா; என்பதே ஜனநாயகத்தில் எழும் முக்கிய கேள்வியாகும். இந்தக் கேள்விக்கு முதலமைச்சர் ஜெயலலிதா தரும் முரண்பாடான பதில்களை யாரோ சிலர் கைகட்டி, வாய்புதைத்து கேட்டுக் கொண்டிருக்கலாம். ஆனால் மக்களில் பெரும்பாலோர் கையில்லாத ஊமையர்களாக நெடுங்காலத்திற்கு ஒடுங்கிக் கிடக்கமாட்டார்கள்.

1200 கோடி பற்றாக்குறை பட்ஜெட்டுடன் ஆட்சிக்கு வந்தேன் என்றும் ஜெயலலிதா கூறுகிறார்; காமராஜர், ராஜாஜி, பக்தவத்சலம், அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர். எல்லோருமே உபரி பட்ஜெட்டை வைத்தே ஆட்சி நடத்தினார்கள் என்றும் அதே மேடையில் முரண்பாடாகக் கூறுகிறார்.

நாங்கள் உபரி பட்ஜெட்டுடன் ஆட்சி நடத்தியிருந்தால் இவர் ஆட்சிக்கு வந்தபோது 1200 கோடி பற்றாக்குறை பட்ஜெட் எப்படி வந்திருக்க முடியும்?

1989 இல் தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தபோது நிதி நிலையில் ரொக்கத்தில் கேஷ் பேலன்ஸ் பற்றாக்குறை இருந்ததா? உபரித் தொகை இருந்ததா? பற்றாக்குறைதான் இருந்தது - சுமார் அறுபது முதல் எழுபது கோடி ரூபாய் வரையில் ரொக்கத்தில் பற்றாக்குறை இருந்தது. அந்த நிலையில்தான் கழகம் ஆட்சி

பொறுப்பேற்றுக் கொண்டது. அதனால்தான் கஜானா காலி என அப்போது நான் அறிவித்திட நேரிட்டது. 1991 இல் ஜனவரி இறுதியில் கழக ஆட்சி கலைக்கப்பட்டபோது ரொக்கம் கேஷ் பேலன்ஸ் பற்றாக்குறையாக இருந்ததா? உபரியாக இருந்ததா?

கஜானாவைக் காலியாக விட்டு விட்டு கழக ஆட்சி வெளியேறவில்லை. கேஷ் பேலன்ஸ் ரொக்கத் தொகை சுமார் ஏழு கோடி முதல் பத்து கோடி ரூபாய்க்குள்ளாகவே உபரியாகவே இருந்தது. அதனால்தான் அந்த நிதியாண்டின் இறுதி நாளான 31.3.91இல் கவர்னர் ஆட்சியில்; வரவு செலவு கணக்கு முடிக்கப்பட்டு ரொக்கத் தொகை கேஷ் பேலன்ஸ் இரண்டு கோடிக்கும் குறைவாகவே பற்றாக்குறையென அன்றைய பட்ஜெட்டில் காட்டப்பட்டது. பொதுவாக பட்ஜெட்களில் பற்றாக்குறையும் துண்டுவிழுவதும் ஓர் அளவோடு இருப்பதில் எந்தத் தவறுமில்லை. உபரி விழும் பட்ஜெட்தான் நல்ல பட்ஜெட் என்றோ; பற்றாக்குறை பட்ஜெட் மோசமானதென்றோ கூறிவிட முடியாது.

அந்த பட்ஜெட் மூலம் வளர்ச்சித் திட்டங்கள் எவ்வளவு உருவாகியுள்ளன என்பதைப் பொறுத்தே அதைக் கணக்கிடல் வேண்டும். இந்த நிதிநிலை இலக்கணத்திற்கெல்லாம் இடம் வைக்காமல்; முன்னுக்குப்பின் முரணாக முன்னாள் முதலமைச்சர்கள் காலத்தில் எல்லாம் உபரி பட்ஜெட்டே இருந்ததாக ஒரு தவறான தகவலை முதல்வர் ஜெயலலிதா வெளியிட்டுள்ளார்.

உடனே அதற்கு நேர்முரணாக கழக ஆட்சியில் 1200 கோடி பற்றாக்குறை பட்ஜெட் என்ற நிலையில் இவர் ஆட்சிக்கு வந்ததாக மிகப் பெரும் பிழையான மற்றொரு தகவலையும் தந்துள்ளார்.

ஆண்டுதோறும் வெளிவந்த பட்ஜெட் நிதி நிலை அறிக்கைகளில் இருந்து நான் எடுத்துக் காட்டியுள்ள ஆதாரங்களே; ஜெயலலிதாவின் கூற்றைப் பொய்யென நிரூபிக்கப் போதிய சான்றுகளாகும்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

20-01-1995

2230. உள்ளத்தில் ஒன்றும்; உதட்டில் ஒன்றும்!

உடன்பிறப்பே,

தி.மு.க. மற்றும் தோழமைக் கட்சிகளின் அணி என்பது; பொதுப் பிரச்சினைகளுக்கான போராட்டங்களிலும், தேர்தல் நேரங்களிலும் தோளொடு தோள் நின்று பல ஆண்டுக்காலமாக பணியாற்றி வருவதைத் தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் தேசிய முன்னணியை அகில இந்திய அளவில் அமைத்த நிலையில் தேசிய முன்னணியுடன் இடதுசாரிக் கட்சிகள் என்ற அளவில் முக்கியமாக இந்திய கம்யூனிஸ்டு கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் பல பிரச்சினைகளில் இணைந்தே பணியாற்றி வந்துள்ளன. இன்றைக்கும் அனைத்திந்திய அளவில் அதே நிலைதான் தொடர்கிறது.

ஆனால் எந்தவிதமான கருத்து மாறுபாடும் இல்லாத சூழலில்; பழனி, இராணிப்பேட்டை இடைத்தேர்தல்களின்போது தி.மு.க.வும் காங்கிரசும் ரகசிய உடன்பாடு செய்துகொண்டு, இராணிப்பேட்டையில் தி.மு.க. வெற்றிக்கும் பழனியில் காங்கிரஸ் வெற்றிக்கும் இருதரப்பாரும் பாடுபடுவதென முடிவெடுத்துப் பணியாற்றுவதாக, மார்க்சிஸ்டு கட்சியின் மாநிலக்குழுவே ஒரு அபாண்டமான குற்றச்சாட்டை தி.மு.க. மீது வீசியது.

அந்த அவதூறை தி.மு.க. தலைவன் என்ற முறையில் நானும், பொதுச் செயலாளர் பேராசிரியரும் உடனடியாக மறுத்து அறிக்கைகள் விடுத்ததுடன், நிருபர்களிடமும் விளக்கமளித்துள்ளோம். பழனியில் அ.தி.மு.க. வெற்றி பெற்றது. தி.மு.கழகம் இரண்டாவது இடத்தைப் பெற்றது. கடந்த தேர்தல்களைவிட அதிக வாக்குகள் பெற்றது. ஆனால் காங்கிரசோ பழனியில் மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டது.

இராணிப்பேட்டையில் வெற்றி பெற்ற அ.தி.மு.க. வேட்பாளர்; தனக்கு காங்கிரஸ் வேட்பாளர் விட்டுக் கொடுத்ததினால்தான் அவரது வாக்குகளைப் பெற்று; தான் வெற்றியடைய முடிந்தது என்று ஏடுகளில் அறிக்கையே வெளியிட்டார். இந்த அளவுக்கு உண்மைகள் உள்ளங்கை நெல்லிக்கனி போல தெளிவான பிறகும்; மார்க்சிஸ்டுகள், தாங்கள் சொன்ன குற்றச்சாட்டை; அதாவது தி.மு.க. மீது வாரியிறைத்த புழுதியைத் திரும்பப் பெறத் தயாராக இல்லை. இன்னமும்கூட அதையே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படிச் சொல்லிக்கொண்டே, தி.மு.க.வை, கூட்டுப் போராட்டத்தில் தங்களுடன் சேருமாறு அழைக்கிறார்கள்.

* முதலில் எங்கள் மீது போட்ட வீண்பழியைத் திரும்பப் பெறுங்கள்.
* ம.தி.மு.க.வுடன் இணைந்து கூட்டுப் போராட்டம் என்பதை நாங்கள் ஏற்க முடியாது.

இந்தக் கருத்துக்களைச் சொல்ல தி.மு.க.வுக்கு உரிமை இருக்கிறது. இக்கருத்துக்களை ஏற்றிடவோ அல்லது தள்ளிடவோ மார்க்சிஸ்டுக்கும் உரிமை இருக்கிறது. ஆனால்; தி.மு.க. கூட்டுப் போராட்டத்தில் சேரவில்லை என்பதையே இன்று பெருங்குற்றமாக மார்க்சிஸ்டுகள் பேசியும் எழுதியும் வருகிறார்கள். முஸ்லிம்லீக்கோ, அல்லது இந்திய தேசியலீக்கோ இருக்கும் அணியில் சேருவதற்கு எப்படி மார்க்சிஸ்டுகள் விரும்பவில்லையோ; அதைப்போலவே தி.மு.க.வுக்கு விருப்பமில்லாத கட்சிகளுடன் சேர்ந்து கூட்டுப் போராட்டம் நடத்த, தி.மு.க. விரும்பாதது அதன் உரிமை!

இரு கம்யூனிஸ்டுகளில் ஒன்றான இந்திய கம்யூனிஸ்டு கட்சியும் நீண்டகாலமாக தி.மு.க. அணியில் இருந்து வருகிறது. அந்த நிலை இப்போதும் தொடர்கிறது. ஜனதா தளம், தி.மு.க.வுடன் தேசிய முன்னணியில் உள்ள கட்சி - எனவே அந்த உறவுக்கும் ஊனமில்லை; அதுவும் தொடர்கிறது. அந்தக் கட்சிகளன்னியில் தமிழகத்தில் பாட்டாளி மக்கள் கட்சி, எம்.ஜி.ஆர். அ.தி.மு.க., அகில இந்திய பார்வார்டு பிளாக், இந்திய தேசிய லீக் ஆகிய முக்கியமான கட்சிகள் கூட்டுப் போராட்டங்களை தி.மு.க.வுடனும், ஜனதா தளத்துடனும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியுடனும் சேர்ந்து நடத்திக்கொண்டு வருகின்றன.

ஆனால் மார்க்சிஸ்டு கட்சி மட்டும்; ஏதோ, போகாத ஊருக்கு - இல்லாத வழி கேட்பதுபோல; தி.மு.க.வுக்கும் காங்கிரசுக்கும் ரகசிய உடன்பாடு என்ற பெரும்பழியை கழகத்தின்மீது சுமத்திக் கொண்டே; அதை மறுத்த பிறகும் திரும்பப் பெறும் மனப்பக்குவமின்றி; ஜெயலலிதா உதவியுடன் அந்தக் கட்சியின் தூண்டுதல் மற்றும் இதர ஆதரவுகளுடன் கழகத்திற்கு துரோகம் செய்யக் கிளம்பியவர்களுடன்; அதாவது ம.தி.மு.க.வினருக்கு கூட்டுப் போராட்டம் நடத்த வாரீர் என்பதும்; வரமறுத்தால் மேடைகளில் வசை பாடுவதும் - தி.மு.க.வுடன் உறவாக இருக்கும் கட்சிகளை வம்புக்கு இழுத்து எழுதுவதும் பேசுவதும்; எத்தகைய அரசியல் நாகரிகம் என்றுதான் தெரியவில்லை.

உடன்பிறப்பே; வாழ்க வசவாளர்கள்! என்பாரே அண்ணா; அதை நெஞ்சில் நிறுத்திக்கொண்டு - உதட்டில் ஒன்றும் உள்ளத்தில் ஒன்றும் என செயல்படாதவர்களுடன் சேர்ந்து நமது பணியினைத் தொடர்வோம்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

21-01-1995

2231. தமிழும், தமிழரும் தலைதாழாதிருப்பதற்கு!

உடன்பிறப்பே,

நாளை! நினைவிருக்கிறதா? வாளை உருவினான் தமிழ்க்காளை; வஞ்சக இந்தி ஆதிக்கத்தின் வால் நறுக்க என்று வரலாறு இன்னமும் சிம்மக்கர்ச்சனை செய்து கொண்டிருக்கிறதே; அந்த மொழிப்போரில் உயிரிழந்து, உடல் உறுப்புகள் இழந்து, அடக்கு முறைச் சித்ரவதைகளால் உருக்குலைந்து, இத்தனைக்கும் மேலாகத் தங்களின் தங்கம் நிகர் மேனிகளைத் தணலுக்கிட்டுப் பத்தரை மாற்றுப் பசும்பொன்னாகி பைந்தமிழ் தியாகமணி விளக்குகளாகத் திகழ்கின்ற தீராதி தீரர்களுக்கும், வீராதி வீரர்களுக்கும், செங்குட்டுவனின் தளபதியாகச் சுழன்று குயிலாலுவத்தில் கனகவிசயர் முடிநெரித்த வில்லவன் கோதைகளுக்கு; ஆம், உடன்பிறப்பே; ஆம் - தாளமுத்து நடராசன், முதலில் களப்பலியான 1938 ஆம் ஆண்டு முதல் இன்று வரையில் தனக்குத் தமிழுடன் கலந்து பாலூட்டிய மொழிகள் குல முதல்விக்கு ஓர் ஊனம் நேரிடினும் உயிர் தரவும் தயங்கிடோம் எனச் சூளுரைத்துச் சுடர் முகம் தூக்கித் தமிழரணைச் சுற்றி நின்று காவல் புரிந்த உண்மைத் தமிழர்கள் அனைவருக்கும் முறையே வீரவணக்கம் செலுத்தவும்; அவர்கள் உயிருடன் இருந்து நிகழ்த்திய களப்போரினை இன்று இருப்போர் தொடர்ந்து நடாத்திட ஊக்கம் அளிக்கவும் ஆண்டுதோறும் கழகம் நடத்திடும் வீரவணக்க நாள்; ஜனவரி 25ஆம் நாள்!

அந்த நாள்தான் வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும் என்று சூளுரை பகன்று; அன்று பெரியார் தலைமையில் - அடுத்து அண்ணா தலைமையில் என்போன்றோர்; உன் போன்றோர் ஐம்பத்தி ஆறு ஆண்டுகளுக்கு மேலாக இந்தி ஆதிக்க எதிர்ப்புச் சிப்பாய்களாக, எல்லை காத்துக் கொண்டு நிற்கிறோம்.

வீறு கொண்டெழுந்தது தமிழ்இனம் - வெற்றி நமக்கே என வெங்குருதி தனிற் கழழ்ந்து வீரஞ்செய்கின்ற மூச்சு எமது மூச்சு என முரசறைந்து கிளம்பியது மாணவத் தம்பிமார்களின் பட்டாளம் - புலவரேறுகளோ; புலிப்போத்துகளெனப் புறப்பட்டனர் - மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமைமாட்ட நினைக்கும் சிறைச்சாலை எனப் பாடியவாறு மங்கையர் சேனை; சிறைக் கோட்டம் புகுந்தது!

அன்று, ஓரணி நின்று ஓடிவந்த இந்திப் பெண்ணே! கேள்; நீ தேடி வந்த கோழையுள்ள நாடிதல்லவே! என்று வீரப்பண் முழக்கியோர்; கால மாறுதலினால் இன்று வேறு வேறு இடங்களில் இருப்பினும் - மொழிப்போரில் அவர் பட்ட தழும்புகளுக்கு இந்த உடன்பிறப்பின் முத்தம் என்றைக்கும் உண்டு!

காலப்புயல்; தியாகதீபக் கோபுரக் கலசங்களை உருட்டி; மாற்றிடத்தில் போட்டிருக்கலாம் - எனினும் கலசங்கள் கலசங்களே!

அந்தக் கலசங்களுக்கு என் வாழ்த்துக்களை வணக்கங்களைக் காணிக்கையாக்குகிறேன்.

மாத்தமிழும் மானமிகு தமிழர் உரிமையும் காத்திட மாண்டு மறைந்து மண் பொடியாகிப் போன அந்த மறவர் குல திலகங்களின்; படங்களின் பாதங்களுக்கு என் இதயத்திலிருந்து ஆயிரம் பாச மலர்கள் பறித்தெடுத்துத் தூவி வணங்குகிறேன் -

இந்த ஆண்டு அந்த வாய்ப்பு; ஜனவரி 25-ல் எனக்கு திருவொற்றியூரில்!

பேராசிரியர் காஞ்சியில் - பொருளாளர் வீராசாமி விழுப்புரத்தில் - துணைப் பொதுச் செயலாளர் நாஞ்சிலார் திருச்சியில் - மற்றும் கழக முன்னணியினர் தமிழ் நிலம் முழுதும் வீர வணக்க நாள் கூட்டங்களில் கலந்து கொள்கின்றனர்!

மாணவர் அணிச் செயலாளர் தம்பி சிவா அந்த பட்டியலை வெளியிட்டுள்ளார்.

இந்தி ஆதிக்க எதிர்ப்புக் கொடியை தொடர்ந்து ஐம்பத்தி ஆறு ஆண்டுகளாகத் தூக்கிப்பிடித்து; மொழிப் போர்க்களத்தில் நிற்கும் எனக்கு இப்போது வயது எழுபத்தி ஒன்று!

பேராசிரியர் என்னை விட மூத்தவர்! பொருளாளர், துணைப் பொதுச் செயலாளர் இருவரும்கூட ஏறத்தாழ எம் வயதை எட்டிப்பிடிக்கக்கூடியவர்களே!

ஆயினும்; அந்த இளமைப்பருவத்தில் புலி, வில், கயல் பொறித்த தமிழ்க் கொடியை ஓங்கி உயர்த்திப்பிடித்த அந்த உரம்; எம் கரத்துக்கும் உளத்திற்கும் இப்போதும் உண்டு!

அதனால்தான் இந்தி ஆதிக்கப் பெரு வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தும் - ஆட்பெரும் படை கொண்ட பாடி வீடாகத் திகழ்கிறது, திகழ்கிறது, திகழ்ந்து கொண்டே இருக்கிறது திராவிட முன்னேற்றக்கழகம்!

இக்கழகச் சார்பில் மொழிக் காவலர்கள் அனைவருக்கும் ஜனவரி 25-ல் நமது தலைதாழ்ந்த வீர வணக்கம் செலுத்துவோம்; தமிழும் தமிழரும் தலை தாழாதிருப்பதற்காக!

அன்புள்ள,

மு. கருணாநிதி

24-01-1995

2232. வெள்ளை இருட்டின் கறுப்பு விடியலே வருக!

உடன்பிறப்பே,

இந்திய நாட்டின் 45-வது குடியரசுநாள் விழா கண்டிட தென்னாப்பிரிக்க நாட்டின் முதல் அதிபர் நெல்சன் மண்டேலா வருகிறார்.

எந்த ஓர் இனமக்களின் உரிமைகளுக்காக இந்தப் பூமிப்பந்தில் போர்க்குரல் கிளர்ந்தெழுந்தாலும் அந்த இனமக்கள் வாழுமிடம் எதுவாயினும்; அந்த இடம் நோக்கித் தொழுது அக்குரல் வெற்றிக் குரலாக மாறிடவேண்டுமென்று வாழ்த்துகிற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்.

நம்மினமக்களாகிய ஈழத்தமிழர்களின் அமைதியான வாழ்வு, நிலையான உரிமைகளுக்காக மட்டுமல்ல; தி.மு.கழகம் எந்த இனமக்கள் எங்கே ஆதிக்க சக்திகளால் ஒடுக்கப்பட்டாலும் அவர்களுக்காகப் பரிந்து பேசி; அவர்கள் பக்கம் வெற்றிகிட்ட வேண்டுமெனவும் அந்த மக்கள் நிம்மதியானதும் சுயமரியாதை உணர்வுடன் ஆனதுமான வாழ்வு பெறவேண்டுமெனவும் அன்று தொட்டு இன்று வரையில் முழக்கமிட்டு வரும் கழகம்; அண்ணா அவர்கள் உருவாக்கிய நமது தி.மு.கழகம்.

அக்கழகத்தின் சார்பில் தென்னாப்பிரிக்க அதிபர் மண்டேலாவை வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

சிறுபான்மையினரான வெள்ளையர் ஆதிக்க இருட்டில் சிக்கித் தவித்த பெரும்பான்மையினரான கறுப்பு இனமக்களின் விடியலாகத் தோன்றி வெளிச்சம் தந்தவர் நெல்சன் மண்டேலா என்பதால் வெள்ளை இருட்டின் கறுப்பு விடியலே வருக வருக என வரவேற்கிறோம்.

அவர் சிறையில் 27 ஆண்டுகள் வாடியபோதும் கண்ணீர் கொட்டித் தீர்மானங்களை வடித்தெடுத்தோம் அவரை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி!

தேர்தலில் வெற்றிகண்டு தென்னாப்பிரிக்காவின் முதல் அதிபரான போதும் தேனினுமினிய செய்தி இது எனக்கொண்டாடி மகிழ்ந்தோம்.

உடன்பிறப்பே; உனக்கு நினைவிருக்குமென்று நம்புகிறேன்; 1990 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11 ஆம் நாள் திருச்சியில் நடைபெற்ற நமது கழகத்தின் மாநில மாநாட்டில், அடடா; அந்தக் காலை நேரத்தில் மகிழ்ச்சி பொங்கி, லட்சக்கணக்கான மக்களிடையே பின்வரும் அறிவிப்பைச் செய்தேன்.

தென்னாப்பிரிக்காவில் கறுப்பு இன மக்களின் விடுதலைக்காகப் போராடி 30 ஆண்டு கால சிறைத்தண்டனை பெற்று, 27 ஆண்டுகள் சிறையில் அடைபட்டுக் கிடந்து தனது 71-வது வயதில் இன்றைய தினம் விடுதலை செய்யப்படுகின்ற நெல்சன் மண்டேலாவை வாழ்த்துவதற்காகவும் இந்த விடுதலைக்காக உலகம் முழுவதுமுள்ள இந்தியா உள்ளிட்ட ஜனநாயக நாடுகள் எழுப்பிய குரலின் வெற்றிக்காகவும் இந்த மாநாடு மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறது. இந்த மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் வகையில் அனைவரும் இரண்டு நிமிடம் எழுந்து நின்று கையொலி செய்ய வேண்டுகிறேன்.

அதனையேற்று மாநாட்டுப் பந்தலில் மட்டுமல்ல; மேடையிலும் அனைவரும் எழுந்து நின்று கடல் அலையெனக் கையொலித்த காட்சி இன்னமும் என் மனக்கண் முன்னால் மறையாமல் இருக்கிறது.

போராட்டத்தையே தனது வாழ்க்கையாக அமைத்துக்கொண்ட மண்டேலாவின் வரலாறு மைல்கற்களை சிறிது மேலோட்டமாக பார்ப்போமா?

1918 - ஜூலை 18ல் மண்டேலா பிறந்தார். 1938 - பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்தபோது மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக வெளியேற்றப்பட்டார். 1941-ல் தபால் மூலமாக தன்னுடைய பட்டப்படிப்பை வெற்றிகரமாக முடித்துவிட்டு சட்டம் படித்தார்.

1944 - ஆப்பிரிக்க தேசிய காங்கிரசில் இளைஞர் பிரிவைத் தோற்றுவித்தார். 1948 - ஆப்பிரிக்க தேசிய காங்கிரசில் இளைஞர் பிரிவின் செயலாளராக பதவி வகித்தார். 1950 - இளைஞர் பிரிவின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1952 - ஆப்பிரிக்க தேசிய காங்கிரசில் தொண்டர் படைத் தலைவராக நியமிக்கப்பட்டார். 1952 - ஜூன் 26ல் ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் தொண்டர் படை பிரிவு தொடங்கப்பட்டது. மண்டேலா தலைமையில் ஊரடங்கு உத்திரவு மீறப்பட்டது.

1952 - டிசம்பரில், மண்டேலா ஜோகன்ஸ்பர்க் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் தொழிலை தொடங்கினார். இந்த தொழிலை தொடங்கிய முதல் கறுப்பர் இவர்தான். 1953 - செப்டம்பரில் மண்டேலாவுக்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனால் ஆப்பிரிக்க தேசிய காங்கிரசிலிருந்து ராஜினாமா செய்திட வற்புறுத்தியது அரசு.

1956 - டிசம்பர் 6ல், மண்டேலா தலைமையில் 156 பேர் கைது செய்யப்பட்டனர். 1960 - மார்ச் 21ல், போராட்டத்தில் ஈடுபட்ட 69 கறுப்பர்கள் போலீசாரால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் வன்முறையில் குதித்தது. 1961 - மார்ச் 29ல், மண்டேலா மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாமல் நீதிமன்றத்தில் தோல்வியடைந்தது. இதைத் தொடர்ந்து புதிதாக தோற்றுவிக்கப்பட்ட ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் ராணுவ பிரிவில் 17 மாதங்கள் தலைவராக பணியாற்றினார்.

1961 - மே மாதம், தேசிய அளவில் வீட்டிலேயே இருந்துகொண்டு நடத்தப்பட்ட உள்ளிருப்பு போராட்டத்திற்கு தலைமை தாங்கினார். 1962 - ஜனவரியில் 11ந் தேதி எத்தியோப்பியாவில் நடைபெற்ற விடுதலைப் போராட்ட மாநாட்டில் திடீரென தோன்றினார். அல்ஜீரியாவில் கொரில்லா போர் முறை பயிற்சி பெற்றார். லண்டன் மாநகரில் இடதுசாரிச் சிந்தனையாளர்களையும் சந்தித்தார்.

1962 - ஆகஸ்டு 5ல், தென்னாப்பிரிக்கா திரும்பியதும் சட்டவிரோதமாக வெளிநாடு சென்றதற்காக கைது செய்யப்பட்டார். 1962 - நவம்பரில், நீதிமன்றத்தில் 5 ஆண்டு காலம் தண்டனை விதிக்கப்பட்டு சிறை சென்றார். 1963 - ஜூலை 11ல், மண்டேலா சிறையில் இருந்தபோது ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின்

அலுவலகம் சோதனையிடப்பட்டு பல ஆவணங்களைப் போலீசார் கைப்பற்றினர்.

1963 - அக்டோபர் 20ல், மண்டேலா மற்றும் 8 பேர் மீது சதித்திட்ட வழக்கு தொடரப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது. 1964 - ஏப்ரல் 20ல் ஜனநாயக தத்துவத்தை காப்பாற்றிட உயிர் விடவும் தயார் என்ற ஒப்பற்ற அறிக்கையை மண்டேலா வெளியிட்டார். 1964 - ஜூன் 12ல், 9 குற்றவாளிகளில் மண்டேலா உள்பட 8 பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

1977 - மே மாதம் 16ல், மண்டேலாவின் மனைவி வின்னி மண்டேலா ஆப்பிரிக்க இனவெறி அரசை எதிர்த்து போராடினார். 1980 - ஜூன் 13ல், மண்டேலா விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற முழக்கம் உலக அளவில் எழுந்தது. 1982- ஏப்ரல், மண்டேலா ராப்பன் தீவு சிறையிலிருந்து போல்ஸ் மூர் சிறைக்கு மாற்றப்பட்டார்.

1984 - மே 12ல், மண்டேலாவை சந்தித்திட அவருடைய மனைவி வின்னி மண்டேலாவுக்கு அனுமதி வழங்கப்பட்டது. 1985 - ஜனவரி 31ல், மண்டேலாவை விடுதலை செய்திட நிபந்தனை விதிக்கப்பட்டது.

1988 - ஜூலை 18ல், மண்டேலாவின் 70வது பிறந்தநாளை கொண்டாட தடை விதிக்கப்பட்டது. 1988 - ஆகஸ்ட் 12ல் மண்டேலாவுக்கு காசநோய் காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

1988 - டிசம்பர் 6ல், வெர்ஸ்டர் சிறைக்கு மீண்டும் அனுப்பப்பட்டார். 1989 - மே 17ல் சட்ட மேற்படிப்புப் பட்டத்தை சிறையில் இருந்தபடியே பெற்றுக்கொண்டார். 27 ஆண்டு சிறைவாசத்துக்குப் பின் விடுதலையான அவர், நேரே கேப்டவுன் சிட்டி ஹால் எதிரே ஒரு பால்கனியில் இருந்துகொண்டு உரையாற்றினார்.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த உரையைக் கேட்க ஆயிரக்கணக்கானோர் கூடியிருந்தனர். இவர்கள் மண்டேலாவைக் காண பல மணி நேரம் அங்கே காத்துக் கிடந்தது குறிப்பிடத்தக்கது.

சமூக, பொருளாதார கட்டமைப்பில் அடிப்படையிலேயே பல மாற்றங்களைச் செய்யவேண்டும். புதிய தென்னாப்பிரிக்காவை

உருவாக்கும் பணியில் கறுப்பர்களுடன், வெள்ளையர்களும் சேர வேண்டும் என்று அந்த கூட்டத்தில் மண்டேலா சொன்னார்.

நாட்டின் சிறுபான்மையினராக உள்ள வெள்ளையர் மொத்த நிலத்தில் 87 சதத்தை தங்களது கையில் வைத்துள்ளனர் என்று மண்டேலா சுட்டிக்காட்டினார்.

தென்னாப்பிரிக்காவைச் சுற்றியுள்ள நாடுகளும் எமக்கு ஆதரவாக இருக்கின்றன. பிற நாடுகளும் இனவெறி ஆட்சியைக் கண்டித்து பல தடைகளை விதித்து வந்திருக்கின்றன. மேலும் எங்களது போராட்டத்துக்கு ஆதரவு அளித்தும் வந்துள்ளன. இதற்கு நாங்கள் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம் என்றார்.

சிறையில் சிங்கமாக உலவியபோதும் - வெளியே வந்து அந்தக் கிழச்சிங்கம் கர்ச்சனை செய்த போதும் - இந்தக் கோரிக்கையெல்லாம் நிறைவேறுமா? குறிக்கோள் வெற்றிக்குன்றம் ஏறுமா? என சந்தேகப்பட்டோர்க்கு; இதோ விடை கிடைத்துவிட்டது!

ஆதிக்கபுரியாக இருந்த சேற்றுக் குட்டையில்; அன்றலர்ந்த செந்தாமரையாக ஜனநாயகம் மணம் பரப்பி நிற்கிறது - நம் மனம் மகிழ்கிறது - தகுதியும் திறமையும் அதிகார பலமும் இருந்தால்; அவற்றைத் திரட்டி உருட்டி அங்குசமாக்கி, யானையை அடக்கி ஆளலாம் என்பது போல தென்னாப்பிரிக்காவின் பெரும்பான்மை கறுப்பு இனமக்களை ஆட்டிப் படைத்த அங்குசம் தூக்கி எறியப்பட்டுவிட்டது.

அந்த மாபெரும் வரலாற்று மாற்றத்தை நிகழ்த்திக்காட்டிய சாதனையாளர் நெல்சன் மண்டேலாதான் இன்று இந்தியாவுக்கு வருகை தருகிறார். குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்கிறார்.

47 ஆண்டு காலமாக சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் இந்தத் திருநாட்டில்; சுகாதாரமான காற்றைச் சுவாசிக்க முடியாமல் சுருண்டுகிடக்கும் புழுக்கள் போன்ற ஏழை எளிய எலும்புக் கூடுகளை மறைத்துவிட்டு; வெளிநாட்டு அதிபர்களையும் பிரதமர்களையும் குடியரசு விழா விருந்தினர்களாக அழைத்து; எத்தனை நாளைக்குப் புண்ணை மறைக்கும் புனுகுப்பூச்சு போன்ற குடியரசு தின விழாக்களை டெல்லித் தலைநகரில் கோலாகலமாகக் கொண்டாடிக் கொண்டாடிக் காட்டப் போகிறோம்?

ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம்; உள்ளே இருக்குமாம், ஈரும் பேனும் என்ற பழமொழி இந்தப் பாரததேசத்துக்காகவே நமது முன்னோர் தயாரித்த பழமொழியாகவன்றோ தோன்றுகிறது!

இந்தப் பழமொழிக்கு இந்திய நாடு எத்தனை காலத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்கப்போகிறது?

இந்த வினாக்கணைக்கு விடைகாண முயற்சிக்காமல்; எத்தனை விழாக்கள் எடுத்தென்ன பயன்? எத்தனை பிரதம விருந்தினர்களை அழைத்துத்தான் என்ன பயன்?

அன்புள்ள,

மு. கருணாநிதி

25-01-1995

2233. பதவி விலகத்தான் வேண்டும்!

உடன்பிறப்பே,

சென்னாரெட்டி அவர்கள் உடனடியாகப் பதவி விலகவேண்டும் என்று ஏடுகளில் கொட்டை எழுத்துக்களில் வந்துள்ள தலைப்புச் செய்திகளைப் பார்த்தேன். நீயும் பார்த்திருப்பாய். நிச்சயம் அவர் பதவி விலகித்தான் தீரவேண்டும். ஐதராபாத்வாசியான அவர் தமிழகத்தை ஆளும் பொறுப்பை; ராஜீவ் கொலை அனுதாபத்தையும் தி.மு.க. மீது சுமத்திய வீண் பழியையும் - சாதகமாக்கிக் கொண்டு ஏற்றுக் கொண்ட அவர்; அவரது மூன்றாண்டுக்கால தர்பாரில் செய்துள்ள காரியங்களுக்காக அவரே தானாக முன்வந்து பதவி விலகிக் கொள்வதுதான் அரசியல் நாகரீகம்! பண்பாடு! என்று திட்டவட்டமாகக் கூறுவேன் நான்!

அரசாங்க சொத்துக்களை அமைச்சர்களே வாங்கக்கூடாது என்று சட்டவிதிகள் இருக்கும்போது இந்தச் சென்னாரெட்டிகாரு; அரசுக்குச் சொந்தமான டான்சி நிலத்தை வாங்கியது மட்டுமல்ல; அதுவும் அடிமாட்டு விலைக்கு வாங்கியவராயிற்றே - அவர் பதவியில் நீடிக்கலாமா?

நேரு ஸ்டேடியம் கட்டுகிறேன் என்று ஒப்பந்தப் புள்ளிகள் எதுவும் கோராமலே தன் விருப்பத்துக்குத் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு அந்தப் பணியை ஒப்படைத்து அதில் பல கோடி ரூபாய் சுருட்டியவராயிற்றே இந்த சென்னாரெட்டியார்; இவர் இனி ஒரு நிமிடம் பதவியில் இருக்கத் தகுதி உண்டா?

ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் என்ற பெயரால் சென்னாரெட்டி; தனது ஆட்சியைப் பயன்படுத்தி அடித்துள்ள கொள்ளை உச்சநீதிமன்றத் தீர்ப்பின் மூலமே வெளிச்சமாகி விட்டிருக்கும்போது இன்னும் அவர் பதவியில் இருக்கலாமா?

ஸ்பிக் பங்குகளை கொழுத்த பேரம் பேசிக் கொண்டு; அரசுக்குப் பல கோடி ரூபாய் நஷ்டம் வருகிற அளவுக்கு

விற்றுவிட்ட தகவலைத் தணிக்கைக்குழு அறிக்கையே தண்டோரா போட்டு அறிவித்துவிட்ட பிறகும் சென்னாரெட்டியார், ஆட்சியில் இருக்க அருகதை படைத்தவரா? எனவே அவர் பதவி விலகித்தான் தீரவேண்டும்.

மத்திய அரசு ஊரக வளர்ச்சிகளுக்கான நிதியைத்தர மறுத்தாலும் பரவாயில்லை; உள்ளாட்சி மன்றத் தேர்தலை நடத்தமாட்டேன் என்று அற்புத ஜனநாயகம் பேசிக் கொண்டிருக்கிற சென்னாரெட்டி அவர்களுக்குப் பதவி ஆசனத்தில் அமர்ந்திருக்க எள் முனையளவு உரிமையும் கிடையாது!

யார் எந்தத் தொழில் தொடங்க முன் வந்தாலும்; முதலில் இத்தனை பெட்டிகளைக் கப்பமாகத் தனக்குக் கட்டியாக வேண்டுமென்று நிபந்தனை போட்டு - ஆயிரங்கோடிக்கு மேலே அப்படிச் சுருட்டி, அதில் அண்டை மாநிலத் தேர்தல்களுக்குக்கூட அள்ளிவிட்டுத் துள்ளி விளையாடும் இந்த ஆந்திரத்துச் செல்லப்பிள்ளை; இனித் தமிழகத்தில் இந்த உயர் பதவிப் பொறுப்பில் இருப்பது என்பது பெரும் அநியாயம்! எனவே சென்னாரெட்டி அவர்கள் பதவி விலகுவதே நியாயம்!

வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவுசெய்து கொள்ளப்பட்ட முன்னுரிமை அடிப்படையில் ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட வேண்டுமென்று கழக ஆட்சியில் ஆணை பிறப்பித்து கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறையை மாற்றி ஆசிரியர்களிடம் பெரும் பணம் லஞ்சமாகப் பெற்று அவர்களுக்கு மட்டுமே பணி நியமனமளித்து பகிரங்க ஊழல் புரிந்த சென்னாரெட்டியார் பதவியிலிருக்க வேண்டுமென்று யார்தான் பரிந்துரைக்க முடியும்?

சுயநிதிக் கல்லூரிகள் என்ற பெயரில் கொள்ளை லாபம் அடிக்கும் கூட்டத்தைக் கட்டுப்படுத்திய கழக ஆட்சியின் கண்டிப்பான விதிமுறைகளுக்கு மாறாக; மேலும் மேலும் சுயநிதிக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கிக் கோடி கோடியாகக் குவித்துக் கொண்ட சென்னாரெட்டி தமிழகப் பதவிச் சிம்மாசனத்தில் ஒரு விநாடிகூட இருக்கக்கூடாதுதான்!

ஏற்கனவே இல்லாத வரிகளை விதித்து இருக்கும் இலகுவான வரிகளைப் பலமடங்கு உயர்த்தி அதற்கெல்லாம் நிவாரணம் அளிக்க வேண்டுமெனில் வசூலித்துத் தரவேண்டுமென்று கிட்டி கட்டும் சென்னாரெட்டி பதவியிலிருந்து விலகிக் கொள்வதைத் தவிர; இந்த நாட்டுக்கு வேறு விமோசனம்தான் என்ன?

கிரானைட் கற்களை யார் ஏற்றுமதி செய்வதாக இருந்தாலும்; ஒரு கனமீட்டருக்கு மூவாயிரம் ரூபாய் கறுப்புப் பணமாகத் தரவேண்டும் என்பதற்கு வசதியாக ஓர் அரசாணை பிறப்பித்து வசூல் கொள்ளை நடத்தி தன் கஜானாவை நிரப்பிக் கொண்ட சென்னாரெட்டி பதவியில் நீடிக்க வேண்டும் என்று யார்தான் சொல்ல முடியும்?

89-ம் ஆண்டு நடைபெற்ற தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஆம்னி பஸ்களுக்கு ஒரு இருக்கைக்கான காலாண்டுத் தீர்வை ஐநூறு ரூபாயிலிருந்து இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. இந்த உயர்வை எதிர்த்து ஆம்னி பஸ் அதிபர்கள் உயர்நீதிமன்றம் சென்றார்கள்.

ஒரு இருக்கைக்கு ரூ. 1,500 வரி விதிக்கலாம் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இந்த உத்தவிரன்படி தமிழக அரசும் வரியை வசூலித்து வந்தது.

ஆனால் 1991-ல் இந்த வரியை 500 ரூபாயாகக் குறைத்துவிட்டார்கள். இதில் இன்னுமொரு விசித்திரம் - இந்த வரிக்குறைப்பை 90-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் முன் தேதியிட்டு நடைமுறைப்படுத்தியதுதான்.

இப்படி வரிக்குறைப்புச் செய்து ஆம்னி பஸ் அதிபர்களிடம் ஆறு கோடி ரூபாய் லஞ்சம் பெற்றாரே சென்னாரெட்டி; இவர் பதவியிலிருந்து விலகத்தானே வேண்டும்?

அரசுக்கு எதிராக வாதாடும் வக்கீலுக்கு அடியாள் பூஜை நடத்தி - ஆகாது இது எனக் குறிப்பு எழுதிய ஐ.ஏ.எஸ். பெண் அதிகாரிக்கு திராவக தீபாராதனை காட்டி - சேஷனைத் தங்க வைத்த தாஜ் ஓட்டலைத் தரைமட்டமாக்கும் நோக்கத்துடன் ஆட்டோக்களில் ஆள் அம்புசேனைகளை அனுப்பி - குடவாசலில் ஒரு கொலையில் ஈடுபட்ட ஆளுங்கட்சிக்காரரை அமைச்சரின் காரில் பாதுகாப்புடன் சவாரி செய்யச் செய்து எத்தனை அரசியல் கொலைகள் - அவற்றுக்கு அமைச்சர் பரிவாரங்களின் தூண்டுதல்கள் - எத்தனை பெண்கள் கற்பழிப்பு - எத்தனை பிரேமானந்த உற்சவங்கள் - கம்ப்யூட்டர் கடத்தல்கள் இத்தனைக்கும் பின்னணியாக வீற்றிருப்பவரான சென்னாரெட்டியைப் பதவியிலிருந்து பிடரியைத் பிடித்துத் தள்ளத்தானே வேண்டும்.

அரசு எந்தப் பொருளை வாங்குவதாக இருந்தாலும் அது பொது ஒப்பந்தப் புள்ளியின் மூலமாகத்தான் வாங்க வேண்டும் என்று நடைமுறையை மீறியும் - மோட்டார் வாகனப் பராமரிப்புக் குழுவின் பரிந்துரை - வாகனத்தின் திறன் பற்றிய அரசு டிராக்டர் ஜீப்புகளை வாங்கியிருக்கிறது.

இந்த முறைகேட்டை தெரிந்தே செய்த சென்னாரெட்டியை இனியும் பதவியில் விட்டுவைக்கலாமா?

குழந்தைகளுக்குத் தரப்படும் மதிய உணவில் பருப்புக்குப் பதிலாக சோயா விதை மாவு வழங்கப்படுகிறது. இதற்காக டெண்டர் எதுவும் கோரப்படாமலே தனியாரிடமிருந்து ஒரு கிலோ மாவு பத்து ரூபாய் வீதம் வாங்கப்படுகிறது. இதில் ஒரு பெருந்தொகையை லஞ்சமாகப் பெற்ற சென்னாரெட்டி - பதவியில் நீடிப்பது நியாயமில்லைதான்.

நிலக்கரி ஊழல், மின்சார இலாக்கா ஊழல், மருத்துவத்துறை போலி மருந்துக் கம்பெனி இன்பசாகர ஊழல் - இத்யாதி! இத்யாதி! எத்தனையோ ஊழல்கள் போதாதென்று இதோ; தமிழ்த்தாயின் பேரால் தாராளமாக ஊழல் - ஒப்பந்தப்புள்ளிகள் ஒழுங்காக இல்லாமல் தங்கள் கட்சிக்காரர்களுக்கே தஞ்சாவூரில் பணிகளைக் கொடுத்து சுமார் முப்பது கோடிக்கு மேல் ஊழல்!

மாவட்ட அதிகாரிகளுக்கு ஆணையிட்டு; செய்யப்படாத வேலைகளுக்கு - அதே வேலைகள் கிராமங்களில் செய்யப்பட்டதாக பொய்க் கணக்கு எழுதி; பணப்பட்டுவாடாவைத் தன் கட்சியினருக்குச் செய்துவரும் பரவலான ஊழல் -

உடன்பிறப்பே; இத்தனை ஊழல்களின் உறைவிடமாகத் திகழும் சென்னாரெட்டியைப் பதவி விலகச் சொல்வது என்பது எப்படித் தவறாகும்?

அடேடே; நான்தான் பத்திரிகைச் செய்திகளின் தலைப்பைத் தவறாகப் புரிந்து கொண்டு; உனக்கு இந்தக் கடிதத்தை எழுதி விட்டேன். சென்னாரெட்டி பதவி விலக வேண்டுமென்றதும்; அவர் கவர்னராக அல்லவா இருக்கிறார் என்பதை மறந்து விட்டு - தமிழக முதலமைச்சராக இருக்கிறார் போலும் என்று ஞாபகமறதியாக இவ்வளவும் எழுதி விட்டேன்.

நான் எழுதும்போது எழுதியதை அடித்து எழுதும் பழக்கமில்லை. அதனால் தயவுசெய்து; இந்தக் கடிதத்தில் சென்னாரெட்டி என்று இருக்கும் இடங்களில்; அந்தப் பெயருக்குப் பதிலாக ஜெயலலிதா என்று திருத்திப் படித்துக் கொள்ள வேண்டுகிறேன்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

29-01-1995

அந்த ஓய்வுக்காக, நம் அண்ணன் ஓய்வு கொண்டுள்ள இடத்துக்குப் போகாமல் இருந்திடும் எண்ணம்; நான் கடைசியாக ஓய்வு கொள்ளும் வரையில் வருமா எனக்கு? மன்னிக்கவும்; நமக்கு?

இந்த நிலையில் காலை ஏழரை மணியளவில் சுள் என்று முகத்தில் சுடும் வெயிலில் நலிவுற்ற உடலுடன் நடக்கத் தொடங்கினேன் நமது சேனையுடன்!

பாதி தொலைவு நடந்து பாரகன் திரையரங்கம் பக்கம் வந்தவுடன்; மாவட்டக் கழகத்தினர் ஜீப்பைக் கொண்டு வந்து நிறுத்திவிட்டனர். அதில் ஏறி வருமாறு வற்புறுத்தினர். நமது பேராசிரியரும் அதே கருத்தைச் சொன்னார். என் மறுப்புக்கு மதிப்பில்லாமல் செய்துவிட்டனர் சூழ்ந்து வந்த உடன்பிறப்புகள்!

நான் மட்டும் தனியாக எப்படி ஜீப்பில் ஏறிவருவது? என்றேன்! பேராசிரியரையும் என்னுடன் துணைக்கு வருமாறு அழைத்தேன் - என்றும் எனக்கும் கழகத்திற்கும் தமிழ் மக்களுக்கும் துணையாக இருப்பவர்தானே; அதனால் அவரும் நானும் ஜீப்பில் ஏறிக்கொண்டோம்.

ஜீப்பில் நின்று பார்த்தபோதுதான் தெரிந்தது பேரணி எவ்வளவு தொலைவு நீண்டு பரந்து அமைதியாக, அலை கொந்தளிக்காத ஆழ்கடலாகக் காட்சி தந்தது என்பது!

நினைவிடத்தில் மலரஞ்சலி நிறைவேறிய பின்னர்; வீட்டில் காலை உணவு அருந்தியதும் அருந்தாததுமாக அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்திற்கு நானும் பேராசிரியரும், வீராசாமியும், நாஞ்சிலாரும் புறப்பட்டோம் -

காரணம்; காலை 10 மணிக்கு மாநில முழுதுமுள்ள மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்களின் கூட்டம். சுமார் ஒன்றரை மணி நேரம் நடந்த அந்தக் கூட்டத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் இளைஞர் அணித் தம்பிமார்கள் ஆற்றிய பணி குறித்து விரிவாகப் பேசினோம். இளைஞர்களை ஈட்டி முனைகள் என்று அழைப்பாரே அண்ணா; அந்தச் சிறப்புக்குச் சிறப்பு சேர்த்தனர் மாவட்ட இளைஞர் அணிகளின் பெரும்பாலான அமைப்பாளர்கள்!

பிறகு 11.30 மணிக்குத் தலைமை நிர்வாகக் குழுக் கூட்டம். அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும்,

கூட்டம் முடிந்து நான் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி விபரங்களையும் நீ அறிவாய்!

ஓரிரு மாதங்களுக்கு முன்பு தலைமைக் கழகம் அனுப்பிய தலைமைக் கழகச் செயலாளர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்டச் செயலாளர்களுடனும் ஒன்றியக் கழகச் செயலாளர்களுடனும் சுற்றுப் பயணம் செய்து திரட்டிவந்த ஆய்வுக் குறிப்புகள் பற்றி நிர்வாகக்குழு விவாதித்தது.

கட்டுக்கோப்பு குலையாமல் - ஒற்றுமை உணர்வுடன் - மேலும் விறுவிறுப்புடன் கிளைக் கழகங்கள், ஒன்றியக் கழங்கள், மாவட்டக் கழகங்கள், பல்வேறு பிரிவுகளுக்கான அணிகளின் அமைப்புகள், ஏன்; தலைமைக் கழகச் செயலாளர்கள் உள்ளிட்ட அனைவரும் இன்னும் கூடுதலாக ஓய்வின்றி உழைத்து; அண்ணன் நம் கையில் தந்துள்ள இனமானக் கொடியை உயர்த்திப் பிடிப்போம் என்று நிர்வாகக்குழுவில் சூளுரை மேற்கொள்ளப்பட்டது.

அண்ணன் நினைவு நாளில் - அவர் உருவாக்கி நம் கையில் ஒப்படைத்துள்ள கழகத்தைக் கட்டிக்காப்பதும்; அவர் கையிலேந்தி நம் கரங்களில் தந்துள்ள இருவண்ணக் கொடியினையும், எழுஞாயிறாம் உதயசூரியன் சின்னத்தையும் நம் உயிராக, உரிமைக்குரலாக எண்ணி வெற்றி முகட்டில் ஏற்றுவதும்தான்; அவருக்கு நாம் செலுத்தும் காணிக்கையாகும்.

அவர் நினைவை உள்ளத்தில் பதியவைத்து; ஏ, தாழ்ந்த தமிழகமே! என அவர் கசிந்துருகினாரே; அந்த உருக்கத்தை எண்ணிப்பார்த்து; தமிழ் நிலம் தருக்காட்சியிலிருந்து; ஆம், அராஜக ஆட்சியிலிருந்து; ஊழல் பெருச்சாளிகளின் ஆட்சியிலிருந்து விடுபட தாயின்மேல், தந்தைமேல், தூய நம் தமிழின்மேல் ஆணையிட்டுப் புறப்படுவோம்!

கண்ணின் மணியே; கழக உடன்பிறப்பே; என் களைப்பும் ஓரிரு நாட்களில் நீங்கிடும் - உன்னுடன் என்றும்போல் கைகோத்து உழைத்திட இதோ நானும் ஓடி வருகிறேன்; அண்ணா வாழ்க! என ஒலி முழக்கம் எழுப்பியவாறு!

அன்புள்ள,

மு. கருணாநிதி

05-02-1995

2235. இரு வழக்குகளும்; ஒரு விளக்கமும்!

உடன்பிறப்பே,

தமிழக முதல்வர் மீது வழக்குத் தொடர கவர்னர், தங்களுக்கு அனுமதி தரவேண்டும் என்று சுப்பிரமணிய சுவாமியும் கோரியுள்ளார்; தி.மு.கழகமும் கோரியுள்ளது. தி.மு.கழகத்திற்கு அந்த அனுமதியைத் தருவது என்று கவர்னர் முடிவு செய்துவிட்டாராம் என்று ஒரு தினசரி பத்திரிகை தினமணி செய்தி வெளியிட்டுள்ளது.

இஃதன்னியில் ஏற்கனவே சில ஏடுகளில்; கவர்னர் அவர்களே கருணாநிதியை விட்டு சுப்ரீம் கோர்ட்டில் இப்படியொரு கோரிக்கையை வைக்கச் சொல்லியுள்ளார் என்றும் செய்திகள் பல்வேறு வடிவங்களில் வெளிவந்துள்ளன.

திரு. சுப்பிரமணிய சுவாமி அவர்கள் உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்கும் தி.மு.க. உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்கும்; ஆக இரண்டுமே கவர்னர் மேதகு சென்னாரெட்டி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு தொடரப்பட்டவை அல்ல! இவற்றில் ஒன்றுதான் மேதகு சென்னாரெட்டி அவர்கள் கவர்னராகப் பொறுப்பேற்ற பிறகு தொடரப்பட்ட வழக்கு ஆகும் - அதாவது சுப்பிரமணிய சுவாமி அவர்களால் தொடரப்பட்டுள்ள வழக்காகும்! இன்னொரு வழக்கு - தி.மு.கழகத்தினால் தொடரப்பட்ட வழக்கு, மேதகு கவர்னராக பீஷ்மநாராயண் சிங் பொறுப்பில் இருந்தபோதே 1993 ஆம் ஆண்டு தொடரப்பட்ட வழக்காகும்.

16.9.1992 அன்று சென்னையில் தி.மு.கழகம், லட்சக்கணக்கானவர்கள் கலந்து கொண்ட ஒரு மகத்தான பேரணி நடத்தி, ஜெயலலிதா அரசின் மீது 18 ஊழல் குற்றச்சாட்டுகளை கவர்னர் பீஷ்மநாராயண்சிங் அவர்களிடம் அளித்தது.

அந்தக் குற்றச்சாட்டுகள்தான் இன்றளவும் பல எதிர்க்கட்சிகளால் சுட்டிக்காட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன;

அரசாங்கத்துக்குச் சொந்தமான சொத்துக்களை அமைச்சர்கள் வாங்கக்கூடாது என்ற சட்டத்திற்கு விரோதமாக முதலமைச்சரே டான்சி நிலத்தை வாங்கியது,

டாமின் கருங்கற்கள் ஏற்றுமதியில் பல கோடி ரூபாய்களை முதலமைச்சரும் அதிகாரிகளும் கூடிக்கொண்டு ஊழல் புரிவது,

சாராய மன்னர்களிடம்; அவர்களுக்குச் சாதகமான ஆதாய வாயில்களைத் திறந்துவிட்டு, அதன் மூலம் கோடிக்கணக்கில் சுருட்டுவது,

எம்.பி.டிஸ்டிலரி மற்றும் சாஃபில் நிறுவனத்தை; தனியாருக்குத் தம்மிஷ்டம் போல் மாற்றிக் கொடுத்து கொள்ளையடித்தது,

கழக அரசு எடுத்து நடத்திய ராமச்சந்திரா மருத்துவக்கல்லூரியை மீண்டும் தனியாருக்கே தாரை வார்த்து அதற்காக பல கோடி ரூபாய்களை லஞ்சமாகப் பெற்றுக் கொண்டது,

ஸ்பிக் பங்குகளில் அரசின் டிட்கோவுக்குச் சொந்தமான பங்குகளை வேண்டுமென்றே அடிமாட்டு விலைக்குக் கொடுத்து, அதனால் அரசுக்குப் பலகோடி இழப்பு; அந்த இழப்புக்கு ஈடான தொகை முதலமைச்சருக்கு லஞ்சமாக வழங்கப்பட்டது,

ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு முறைகேடாக அங்கீகாரம் வழங்கி, அதன் மூலம் பல கோடி சுருட்டிக் கொண்டது,

ஒப்பந்தப் புள்ளி கோராமலே நேரு விளையாட்டு அரங்கம் கட்டியதில் பெரும் ஊழல் செய்தது,

முதலிய 18 குற்றச்சாட்டுகளை கவர்னர் மேதகு பீஷ்மநாராயணரிடம் கொடுத்து, இந்தக் குற்றங்களுக்காக முதலமைச்சர் மீது கிரிமினல் வழக்கு தொடர கவர்னரிடம் அனுமதி பெற வேண்டியுள்ளதால்; அந்த அனுமதியை வழங்குமாறு அவரிடம் கேட்டிருந்தோம்.

நீண்ட நாள் மௌனத்திற்குப் பிறகு மேதகு பீஷ்மநாராயண்சிங் அவர்கள்; தி.மு.கழகம் கொடுத்த குற்றச்சாட்டுகள் எதிலும் பூர்வாங்க ஆதாரங்களே இல்லை என்று கூறி விட்டார்.

உடனடியாக தி.மு.க. சார்பில் கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் கவர்னரின் அந்தக் கூற்று சரியானதல்ல என்று எடுத்துரைத்து, ஆதாரங்களுடன்தான் குற்றச்சாட்டுகளைக் கூறியுள்ளோம் - எனவே கவர்னர், முதல்வர் மீது வழக்கு தொடர அனுமதித்திருக்க வேண்டும் என்ற அடிப்படையில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார்.

உயர்நீதிமன்ற நீதிபதி அந்த வழக்கு இரு நீதிபதிகள் கொண்ட டிவிஷன் பெஞ்ச் விசாரணைக்கு அனுப்பி வைத்தார். டிவிஷன் பெஞ்சு விசாரணை முடிந்து 13.9.1993-ல் தீர்ப்பு வழங்கப்பட்டது. அது தி.மு.கழகம் தொடர்ந்த அந்த வழக்கிற்குச் சாதகமான தீர்ப்பாக அமையவில்லை.

எனவே 1994 ஆம் ஆண்டு, உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு அப்பீல் வழக்கு தொடரப்பட்டுள்ளது. அதாவது; தி.மு.க. சார்பில் 1993-ல் பொதுச் செயலாளர் பேராசிரியர் உயர்நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கிற்கான மேல்முறையீடு வழக்குத்தான் இப்போது உச்சநீதிமன்றத்தில் இருக்கிற வழக்காகும்.

இது எப்படி மேதகு சென்னாரெட்டி அவர்கள், கருணாநிதியிடம் கூறி உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்காக இருக்க முடியும் என்பதை; பல்வேறு கோணங்களில் செய்திகளை வெளியிடும் அன்புக்குரிய பத்திரிகைத் துறை நண்பர்கள்தான் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

திரு. சுப்பிரமணிய சுவாமி, கவர்னர் மேதகு சென்னாரெட்டியிடம் முறையீடு தந்து, முதலமைச்சர் மீது வழக்கு தொடர அனுமதி கேட்டுள்ளார். அனுமதி இன்னமும் கிடைக்காத காரணத்தால் அனுமதி தரச் சொல்வதற்கு உச்சநீதிமன்றத்தை நாடியுள்ளார்.

தி.மு.கழகம், கவர்னர் மேதகு பீஷ்மநாராயணரிடம் முறையீடு தந்து, முதலமைச்சர் மீது வழக்குகளில் ஆதாரமில்லை என்று தடாலடியாகச் சொல்லி விட்டார். அப்படி அவர் ஆதாரமில்லை என்று கூறியது தவறு; ஏராளமான ஆதாரங்களும் ஆவணங்களும் சான்றுகளாக இருக்கின்றன என்று குறிப்பிட்டு, முதல்வர் மீது வழக்கு தொடர அனுமதி அளிக்க கவர்னருக்கு உரைத்திட

வேண்டுமென்ற கருத்தில் தி.மு.கழகம் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளது.

இதுதான் உண்மையான நிலவரம் - இதுபற்றி பல்வேறு ஏடுகளில் பல்வேறு மாதிரியான செய்திகள் வருவதால் இந்த விளக்கத்தை வழங்கிட நேரிட்டது.

அன்புள்ள,

மு. கருணாநிதி

06-02-1995

2236. சரித்திரப் பள்ளத்தாக்கில் சரியும் தர்பார்!

உடன்பிறப்பே,

மந்திர தந்திரக் கதைகளில் வரும் காட்சிகளைப் போல நமது மாநிலத்தில் நடைபெறும் ஆட்சியில் எத்தனையோ மின்னல் வெட்டுச் சம்பவங்கள்; அவற்றை சிந்தித்துப் பார்த்து வரிசைப்படுத்திச் சொல்வதற்குள் அடுக்கடுக்காக அடுத்தடுத்து பல்வேறு நிகழ்ச்சிகள் துள்ளிக் குதித்து வந்து பட்டியலிடுவோரையே குழப்பிவிடுகின்றன. மந்திர தந்திரக் கதைகளிலாவது ஒரு காட்சிக்கு மற்றொரு காட்சியென்று ஏதோ ஒரு வகையான தொடர்பு இருக்கும். ஆனால்; இந்த ஆட்சியிலும் எல்லா சம்பவங்களுக்கும் ஒரு தொடர்பும் தூண்டுதலும் குறிப்பிட்ட மட்டத்தில் இருந்தாலும்கூட; அது கண்ணுக்குத் தெரியாத அளவுக்கு அதிகாரம், அந்தஸ்து, பணம் என்ற திரைகளால் மறைக்கப்படுவதைவிட அதிகமாக, மக்களின் ஏமாளித்தனத்தைப் பயன்படுத்தி ஒரேயடியாக மறைக்கப்பட்டுக் கொண்டே வருகிறது. இன்னும் எத்தனை நாளைக்கு இந்தத் திரைமறைவு நாடகம்? என்ற ஆவேசமான கேள்வி தமிழகத்தில் உள்ள அனைத்துப் பிரிவு மக்களிடமும் இன்று எழத் தொடங்கியுள்ளது.

மக்கள் கிளர்ந்தெழுந்து எத்தனையோ மகுடங்கள் மண்ணிலே உருட்டப்பட்டிருக்கின்றன - பழைய நாள் பிரான்சு நாட்டு லூயி மன்னன் காலத்திற்கும், ருஷ்ய நாட்டின் ஜார் மன்னன் காலத்திற்கும் சென்று சரித்திரப் பள்ளத்தாக்குகளில் அவர்கள் சரிந்துபோன வரலாறுகளைத் தேடவேண்டிய அவசியம்கூட இல்லாத அளவுக்கு அண்மைக் காலத்தில் எகிப்து நாட்டு பரூக் மன்னனும், பிலிப்பைன்ஸ் நாட்டின் அதிபர் மார்க்கோசும் - மக்களின் சுவாசப் பைகள் உலைக்களத்துத் துருத்திகளாக மாறி

விடுத்த அக்கினி காற்றினால் அகற்றப்பட்டதை நாம் அறிந்தே இருக்கிறோம்.

கோடானு கோடி ரூபாய்களை ஊழல் செய்து, கொள்ளையடித்துக் கும்மாளம் போடுகிற கூட்டம்; ஆம்; தமிழ்நாட்டில் கோலோச்சும் கூட்டம்; கோயில் பூனைகளைப்போல இன்னமும் சில கோமாளி மனிதர்களால் பாதுகாக்கப்படும் பைத்தியக்காரத்தனம் இங்கின்றி வேறு எங்கே நடைபெற முடியும்?

காட்டைக் கண்டால் விடாதே; கையகப்படுத்து! மேட்டைக் கண்டால் விடாதே; நம் பேரில் எழுதிக்கொள்! அரசாங்கத்துச் சொத்தா? அதைப்பற்றிக் கவலைப்படாதே; ஆணையிடுகிறேன் - ஆக்கிவிடு நமக்கென்று! யார் நிலம்? எவர் நிலம்? இலட்சமா; கோடியா? சிந்திக்க நேரமில்லை; சேர்த்துவிடு நமது சொத்துக் கணக்கில்!

பரூக் மன்னன் அரண்மனையில் பளபளத்த வைரமணிகள், தங்கத்தால் ஆன பாதரட்சைகள் - பிலிப்பைன்சில் கொட்டிக் கிடந்த கோலாகல அணிமணிகள், ஆடைகள்; அவைகள் எல்லாம் எம் கால் தூசுக்குச் சமம் என்று எக்காள முழக்கமிட இன்னும் பல கோடி திரட்டித்தான் தீர வேண்டும் - தடுப்பார் எவருமிலர் - தாயே! தெய்வமே! என்று என் காலடியில் படுப்பார்தான் எங்கணும் நிறைந்துள்ளனர் - எனும் ஆணவத்தில் ஆட்டம் போட்டுக் கொண்டிருக்கிறது ஓர் ஆட்சி இங்கு!

அணையப் போகும் தீபத்தில் ஜோதி மழை! என்பார்களே; அதுபோல திரிகள் தேய்ந்து, எண்ணெய் வற்றி, விளக்கின் முனையில் மட்டும் ஒரு திடீர்ப் பிரகாசம்! ஆம்; ஏமாற்றப்பட்ட மக்கள்; அல்ல; அல்ல;- ஏமாந்து போன மக்கள் வைத்த நம்பிக்கை முடிந்து போன திரியாகவும், அளித்த ஆதரவு எண்ணெய் வற்றிய நிலையாகவும் இன்றைக்கு ஆகியுள்ளதை; வீழ்ச்சி வந்து கதவைத் தட்டும்போது; நிரந்தர வாய்ப்பு வந்து வாழ்த்து கீதம் பாடுவதாக எண்ணிக்கொண்டு ஆடிக் களிப்போர் அறிந்து கொள்ள முடியாதுதான்!

பயன்பெற்றோர், பதவி பெற்றோர், பத்துப் பேர் நின்று பல் இளிப்பதையே பத்தாயிரம் யானை பலம் என்று நம்பிக்கொண்டு, படுகுழியில் விழுவதற்குத் தயாராகிக் கொண்டிருப்போர், இந்த மூன்றாண்டுகளில் தமிழ்நாட்டை ஒரு கை பார்த்துவிட்டனர்.

மிச்சம் சொச்சம் இன்னும் பார்த்து விடுவதெனத் தீர்மானித்து அதற்கென விரைந்து செயல்படுகின்றனர்.

ஆனால் விளைவு வேறுவிதமாகத்தானிருக்கப் போகிறது - வேறு நாடுகளில் அரசியல் மாற்றங்கள் ஆயுதங்களைக் கொண்டு - அமளி துமளியில் அரைக்கணத்தில் நடந்து முடிந்தது உண்டு!

அதுபோல அல்ல; நமது நாடு! இங்கே அரசியல் மாற்றம் ஜனநாயக வழியில்தான் நடைபெறும்; அப்படித்தான் நடைபெற வேண்டும்! அந்த ஜனநாயக வழி; சம்மட்டி அடி போல சர்வாதிகார தர்பாரின் தலையில் விழ வேண்டும்! விழத்தான் போகிறது!

எங்கே உண்டு; ஒரு பிரச்சினையில் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவர், அவருடைய நியாயமான கருத்தைச் சொல்லி; அரசு அநியாய வழி போவதைத் தடுத்தமைக்காக - அக்கினித் திராவக வீச்சுக்கு ஆளான கொடுமை?

எங்கே உண்டு; அரசைக் குறைகூறி எழுதியதற்காக அமைச்சரின் அடியாட்கள் ஆட்டோக்களில் படையெடுத்து, அந்தப் பத்திரிகை அலுவலகத்தைச் சூறையாடி இரண்டு ஊழியர்களின் உயிரையும் குடித்த கொடுமை?

எங்கே உண்டு; அரசுக்கு எதிராக வழக்கு தொடர்ந்து வக்கீல்; உச்ச நீதிமன்றத்துக்குப் புறப்பட சென்னை விமான நிலையம் செல்வதற்கு முன்பே வீட்டுவாசலில், அமைச்சரின் படையினரால் நையப் புடைக்கப்பட்ட கொடுமை?

எங்கே உண்டு; இந்த ஆண்டு இடஒதுக்கீடு 50 சதவீதம் அளவுக்குத்தான் இருக்கும் என்று அரசின் நிலையை அறிவித்ததற்காக ஒரு பல்கலைக்கழக துணைவேந்தரின் உயிருக்கே குறி வைத்து ஆட்டோ படையினர் அனுப்பப்பட்ட கொடுமை?

எங்கே உண்டு; தமக்குப் பிடிக்காதவர் தங்கிடும் ஓட்டலைக்கூடத் தரைமட்டமாக்கத் திட்டமிட்டு ஆட்டோ சேனையை அங்கும் அனுப்பி அராஜகம் விளைவித்த கொடுமை?

எந்த அரசாவது; தானே கட்டிக்காக்க வேண்டிய சட்டம் ஒழுங்கை, தானே குட்டிச் சுவராக்கும் கொடுமையை நடத்தியதுண்டா?

எதிரிகள், எதிர்க்கட்சிகள் மட்டுமல்லவே; ஆளுங்கட்சியினர், தம் சொந்தக் கட்சி எம்.எல்.ஏ.க்களையே கருத்து வேறுபாடு, காழ்ப்பு காரணமாக அடித்தும் - உதைத்தும் - வெட்டியும் - வீழ்த்தியும் - ஊனமாக்கியும் - ஏன்; ஊமையாகவே ஆக்கியும் உம், என்றால் சிறைவாசம்! ஏன் என்றால் வனவாசம்! என மிரட்டிடும் அநியாயத்தை, அக்கிரமத்தை ஜார் ஆட்சிக்குப் பிறகு இங்கு நடக்கும் ஜெ ஆட்சியில்தான் கண்கூடாகக் காண முடிகிறது.

ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. மதுராந்தகம் சொக்கலிங்கம்; ஏதோ முரண்டு செய்தார் என்றதும்; முரடர்கள் ஏவுகணைகளாக ஆக்கப்பட்டனர். சட்டமன்ற விடுதியில் தூங்கிய அவரைத் தூக்கிச் சென்று, முடிந்தது வாழ்வு என எண்ணி, முடமாக்கி விட்டுத் திரும்பினர் - அந்த வழக்கு முளையிலேயே கருகிவிட்டது!

உப்பிலியாபுரம் ரவிச்சந்திரன் எம்.எல்.ஏ. - இவரும் ஆளுங்கட்சிக்காரர்தான்! இவரை இரவு நேரம் சென்னை மன்றோ சிலைக்கருகே ஆட்டோ பட்டாளம் மறித்து மண்டையைப் பிளந்தது - அந்தப் பிரச்சினைக்கான வழக்கும் பிசுபிசுத்துப்போனது; காரணம் பின்னணியே ஆளுங்கட்சிதானே! அமைச்சர்களின் ஆணை கேட்டுச்சென்ற சேனைதானே!

தூத்துக்குடி ரமேஷ்; ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. தான்! அவருக்கும் இதே பாணியில்தான் அடி, உதை, பூஜை! அமைச்சர்களின் அடியாட்கள் கைங்கர்யம்!

இதோ; இன்றைய செய்தி இராணிப்பேட்டை ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. மோகனன், சென்னையில் ஆட்டோ சேனையினால் தாக்கப்பட்டு மருத்துவமனையில் கிடக்கிறார்! இதுவும் பழைய பாணி! பழைய கதையேதான்!

உடன்பிறப்பே, இப்படி ஒரு ராஜ்யம் நடக்கிறது இங்கே! கேட்பாரில்லை என்ற அசட்டுத் துணிச்சல்! அதனால்தானே குடவாசல் கொலையில் சம்பந்தப்பட்டவராகக் கூறப்படுபவரை அமைச்சரே தனது காரில் ஏற்றிக்கொண்டு அபயம் கொடுத்த சம்பவம் இங்கே நடைபெற முடிகிறது! அதுபற்றிய ரகசியத்தையும் பேரவையில் வெளியிட்டுவிட்டு பின்னர் அமைச்சரின் பேச்சை அவைக் குறிப்பிலிருந்தும் எடுக்க முடிகிறது!

இக்கடிதத்தில் நான் குறிப்பிட்டிருப்பவை இந்த ஆட்சியிலே நடத்தப்பட்ட கொலை நிகழ்ச்சிகளில் சிலவற்றை மட்டுமே! விரிக்கிற் பெருகும்; விரிவஞ்சி விடுத்துளேன்!

வஞ்சம் தீர்க்கும் நெஞ்சழுத்தமுடன்; வாழ்நாள் முழுதும் அதிகாரக் கொடுங்கோலைச் சுழற்றலாம் என்று ஜனநாயக அமைப்பில் எவரும் மனப்பால் குடித்திட இயலாது! அதற்கு ஜனநாயக அமைப்பில் இடமும் கிடையாது!

இந்த உண்மையை நிரூபித்துக் காட்டும் காலம் வெகு தொலைவில் இல்லை - அந்த நாள் வரும்! உள்ளாட்சித் தேர்தலைப்போல; பொதுத்தேர்தலை ஊறுகாய் போட்டுவைத்துத் தப்பித்துக்கொள்ள முடியாது! எனவே இந்தத் தான்தோன்றித் தர்பாருக்கு முற்றுப்புள்ளி வைத்து; தமிழகம் காத்திட; உடன்பிறப்பே தடந்தோள் தட்டிக் கிளம்பிடத் தயாராகுக!

அன்புள்ள,

மு. கருணாநிதி

09-02-1995

2237. சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்!

உடன்பிறப்பே,

கதையொன்றுடன் இன்றைய கடிதத்தைத் தொடங்குகிறேன்.

பிச்சைக்காரன் ஒருவன், வீடுவீடாக அம்மா தாயே என்று திருவோடு ஏந்தி வந்து எவரும் எதுவும் தராத காரணத்தினால் ஏக்கப் பெருமூச்சு விட்டுக்கொண்டே, அப்போதுதான் புதிதாகக் கட்டப்பட்டு வண்ணப் பளபளப்புடன் விளங்கிய ஒரு வீட்டு வாசலில்போய் நின்று சற்று உரத்த குரலில் 'அம்மா தாயே! பலநாள் பட்டினி! தயவு பண்ணு தாயே!' என்று பரிதாபக் குரலில் அழைத்தான். திரும்பத் திரும்ப அவன் போட்ட கூச்சலில் எரிச்சலடைந்த அந்த வீட்டு மருமகள், ஆத்திரத்துடன் வாயிற்படியருகே வந்து,' 'யோவ்! உனக்கு வேலை இல்லை! ஒண்ணும் கிடையாது, போய்த் தொலை' என்று சொல்லிவிட்டு விறுவிறு என்று வீட்டுக்குள்ளே போய்விட்டாள். பிச்சைக்காரன் மிகுந்த விரக்தியுடன் 'அடி, பாவி! இல்லையென்று சொல்வதையாவது இதமாகச் சொல்லக்கூடாதா?' என்று கூறிக்கொண்டே அந்த வீட்டு வாசலை விட்டு நகரும்போது; வாசலில் ஒரு ஆட்டோ வந்து நின்றது. ஆட்டோவிலிருந்து ஒரு மூதாட்டி இறங்கிக்கொண்டே; அந்தப் பிச்சைக்காரனைப் பார்த்து, 'என்னய்யா, முணுமுணுத்துக்கொண்டு போகிறாய்?' என்று கேட்டாள்.

'பிச்சைதான் தாயே கேட்டேன். பேய் மாதிரி ஒரு பெண்மணி, இல்லை! போய்த்தொலைன்னு சீறிவிழுது!' என்றான் அவன்!

மூதாட்டிக்கு கோபம் வந்துவிட்டது. 'அப்படியா சொன்னாள் அவள்! அந்த மூதேவிக்கிட்டே போய் நீயேன் கேட்டாய்? இரு! இரு! இதோ வர்றேன்!' என்று சொல்லிவிட்டு மூதாட்டி வீட்டுக்குள்ளே வேகமாகப் போனாள்.

மகராசி, ஏதாவது பசியடக்க உணவு கொண்டு வருவாள் என்று பரதேசி, ஆவலுடன் படிக்கட்டில் நின்றுகொண்டிருந்தான். அந்த மூதாட்டி மகராசி, உள்ளே போனவேகத்தில் வெளியே வந்தாள். பரவசம் நிறைந்த முகத்துடன் பரதேசி அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

'இந்தாய்யா! இந்த வீட்டிலே நான் ஒருத்தி மாமியார்க்காரி இருக்கும்போது, மருமகளுக்கு என்ன அதிகாரம் கிழிக்குது? பிச்சை இல்லைன்னு உனக்கு அவள் என்ன சொல்றது? இதோ எனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி இப்ப நான் சொல்றேன். பிச்சை போட ஒண்ணும் கிடையாது! கிடையாது! கிடையாது! போய்த்தொலை!'

என்று கூறிவிட்டு, கதவைத் தாளிட்டுக் கொண்டு போய்விட்டாள். இப்படியொரு மாமியார் மருமகள் கதை; நீயும் நானும் பலமுறை கேட்டுச் சிரித்த கதைதான்!

உடன்பிறப்பே; இல்லை என்று சொல்கிற அதிகாரம், மாமியாருக்கா? மருமகளுக்கா? என்ற கேள்வி ஒரு வீட்டில் எழுந்தது என்பதை இந்தக் கதை விளக்குவதுபோல, உண்டு என்று சொல்கிற அதிகாரம் யாருக்கு; என்ற ஒரு பிரச்சினை இப்போது தமிழக அரசியலில் - குறிப்பாக அ.தி.மு.க.வில் எழுந்துள்ளதை சமீபத்திய நிகழ்ச்சியொன்று மிகுந்த நகைச்சுவைக் காட்சியாக விளக்கிக் கொண்டிருக்கிறது.

நாகைக்கருகில் உள்ள பனங்குடியில் மத்திய இணையமைச்சர் சதீஷ் சர்மாவும் - தமிழக அமைச்சர் சின்னசாமியும் ஒரு விழாவில் கலந்து கொண்டார்கள். காங்கிரஸ் கட்சிக்கும் அ.தி.மு.க.வுக்கும் கூட்டணி ஏற்படுமென்று இரு அமைச்சர்களும் அந்த விழாவில் பேசினார்கள். அது என்ன; அரசு நிகழ்ச்சியான ஒரு தொழிற்சாலை தொடக்க விழாவில் அரசியல் கட்சிகளின் கூட்டணிபற்றிப் பேசியிருக்கிறார்கள்? என்று கேட்கத் தோன்றும் உனக்கு!

அ.தி.மு.க. தலைவிக்கே; அரசு விழா என்றும் அரசியல் விழா என்றும் பாகுபாடே கிடையாதே! எத்தனை அரசு விழாக்களில் முதலமைச்சர் ஜெயலலிதா; தி.மு.கழகத்தையும் மற்றுமுள்ள எதிர்க்கட்சிகளையும் வசை பாடியிருக்கிறார் என்பதற்குக் கணக்கே கிடையாதே! சில நாட்களுக்கு முன்பு சினிமா தொடக்க விழா ஒன்றுக்குச் சென்று அந்த மேடையில் சினிமாக் கலைஞர்களையெல்லாம் சர்வ சாதாரணமாக எண்ணிக்கொண்டு

- பட்ஜெட்டைப் பற்றியெல்லாம் பேசி, தி.மு.க. ஆட்சியில் வைத்து விட்டுப்போன பற்றாக்குறையினால் இன்னமும் இந்த ஆட்சியில் சங்கடப்பட்டுக் கொண்டிருப்பதாகப் பொய் கூறி, எல்லா முதலமைச்சர்களும் தன்னைத் தவிர உபரி பட்ஜெட்டில் ஆட்சி நடத்தியவர்கள் என்று முன்னுக்குப்பின் முரணாகவும் உளறிவிட்டு வந்து; அதற்கு நான் அளித்த மறுப்புக்குப் பிறகு பேசாமடந்தை ஆகிவிட்டாரல்லவா இந்த முதலமைச்சர் ஜெயலலிதா!

அதனால் அ.தி.மு.க.வினர் என்றால்; எங்கும் எதுவும் பேசலாம்; நாம்தான் நமது வீட்டுத் திருமணங்களில்கூட; அதாவது நமது கழகத்தினர் செலவில் நடக்கும் திருமணத்தில் கூட அரசியல் பேசக்கூடாது என்பது அம்மையாரின் சட்டம்! இவர்கள் என்றாலோ; எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த மக்களின் வரிப்பணத்தில் நடக்கும் அரசாங்க விழாக்களிலேயே அரசியல் பேசுவார்கள் - எதிர்க்கட்சித் தலைவர்களை ஏசுவார்கள் - அது மட்டும் அவர்களுக்குள்ள பண்பாட்டு உரிமையாம்! திருமண விழாக்களில் கருணாநிதி அரசியல் பேசலாமா? என்று கடுமையாகக் கேட்டுவிட்டு; அவர் மட்டும் திருமண விழாவில் என்னைத் தாக்கிப் பேசுவாராம் - அவர் கட்சி எம்.பி.யை விட்டு மத்திய அமைச்சர் அருணாசலத்தின் மீது வசைபாடச் செய்வாராம்! எனவே இதைத் தொடர்ந்து மீண்டும் பிச்சைக்காரன் - மாமியார் - மருமகள் கதைக்கே வருவோம்!

இல்லை என்று பிச்சைக்காரனுக்குச் சொல்ல மாமியாருக்குத்தான் உரிமை; மருமகளுக்கு கிடையாது என்று சீறிக் கிளம்பிய மூதாட்டியைப்போல; அதே பாணியில் காங்கிரசுடன் கூட்டணி உண்டு! என்று சொல்லவும் தனக்கு மட்டுமே உரிமையென்று கூறி; பாவம் சின்னச்சாமி என்ற அமைச்சர் மீது சினங்கொப்பளிக்க சீறியிருக்கிறார் முதலமைச்சர் ஜெயலலிதா! சின்னச்சாமி பேசியது தனக்கோ, கட்சிக்கோ உடன்பாடல்ல என்று ஒரு வரியில் சொல்லிவிட்டுப் போயிருக்கலாம்! அதற்கு மாறாக ஒரு தடாலடி அறிக்கை; பாவம், தலையைப் பிய்த்துக் கொண்டு நிற்கிறாராம் கரூர் சின்னச்சாமி!

இல்லை என்று முடிவானதை உண்டு என்று எப்படி சின்னச்சாமி கூறலாம் என்று ஜெயலலிதா ஆத்திரப்படவில்லை! உண்டு என்பதைக்கூட நான்தானே சொல்லவேண்டும் - இவர் யார் கூறுவதற்கு? என்றுதான் கேட்டிருக்கிறார்.

மதுரையில் நடைபெற்ற அ.தி.மு.க. மாநாட்டில் தனது வெற்றிக்கு ராஜீவ்காந்தியின் கொலை நிகழ்ச்சி காரணமல்ல என்று பேசத் தொடங்கி - பின்னர் சட்டப்பேரவையில் காங்கிரஸ் கட்சியை சவாலுக்கு அழைத்து - தனித்து நிற்கும் தைரியம் காங்கிரசுக்கு உண்டா என்று அறைகூவல் விடுத்து - திருச்சி விமான நிலையத்தில் மத்திய அமைச்சர் சிதம்பரத்தை ஒருகை பார்த்து - மற்றொரு மத்திய அமைச்சரான அருணாசலத்தை மதுரை விமான நிலையத்திலே அவமானப்படுத்த முற்பட்டு - அ.தி.மு.க.வின் எதிர்காலம், பாரதீய ஜனதாவின் பக்கமா? அல்லது தேசிய முன்னணியில் அடைக்கலமா? அல்லது தெலுங்கு தேச அரவணைப்பா? என்ற கேள்விகளை விரிவடைய விட்டுவிட்டு; நிச்சயம் காங்கிரசுடன் கூட்டணி கிடையாது என ஒரு முறையல்ல; ஒரு நூறு முறை கூறிவிட்டு - இப்போது உண்டு எனில் அதைச் சொல்லும் அதிகாரம் தனக்கேயுரியது என்கிறார் ஜெயலலிதா!

அவர் எவ்வளவு பலவீனப்பட்டிருக்கிறார் என்பதற்கு; அவரது அறிக்கையை மட்டுமல்ல - இதோ ஒரு செய்திக் குறிப்பையும் படித்துப்பார்!

"தற்போது கூட்டணி குறித்துப் பேசியதற்காக சின்னச்சாமியைக் கடிந்து கொண்ட அளவில் பத்து சதவிகிதம் கூட காங்கிரஸ் கட்சியை விமர்சிக்க ஜெயலலிதா அக்கறைப்படவில்லை என்றும் கருத்து நிலவுகிறது.

பொதுச் செயலாளர் என்ற முறையில் கூட்டணி குறித்து முடிவெடுக்கத் தனக்குத்தான் அதிகாரமும் உரிமையும் உள்ளது என்பதை ஜெயலலிதா அறிக்கையில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். பொதுக்குழுவில் இதற்கான அதிகாரம் வழங்கியுள்ளது என்றும் கூறுகிறார். புதிய சூழலில் கூட்டணி குறித்துப் பொதுக்குழு மீண்டும் கூடித்தான் முடிவெடுக்க முடியும் என்று கூற ஜெயலலிதா முன்வரவில்லை. இதன்மூலம் கட்சியில் தன்னுடைய முடிவுதான் இறுதியானது என்பதை ஜெயலலிதா தெளிவுபடுத்தியுள்ளார் என்றும் பேசப்படுகிறது.

உடன்பிறப்பே; இவ்வாறு ஒரு நாளேடு தினமணி செய்திக் கட்டுரையொன்று வெளியிட்டிருக்கிறது. இந்தச் செய்திக் குறிப்பில் காணப்படும் கருத்து பற்றி நாம் ஒன்றும் ஆச்சரியப்படவில்லை!

எந்தக் கட்சிகளுடன் சேர்ந்து கூட்டுப் போராட்டம் நடத்தலாம் - எந்தக் கட்சிகளுடன் தேர்தல் உடன்பாடு கூட்டணி அமைக்கலாம் - என்பன பற்றியெல்லாம் நமது கழகத்தில் நிர்வாகக் குழுவோ - இன்னும் முக்கியமான கட்டங்களில் செயற்குழு பொதுக் குழுக்களோதான் கூடி முடிவு செய்யும்! ஆனால்; அங்கே எல்லாம் நானே! எனும் ஜனநாயக ? தத்துவப் பேரலை வீசிக் கொண்டிருக்கிறது.

இல்லை என முடிவு கட்டப்பட்ட ஒரு கூட்டணியை மீண்டும் உண்டு எனப் புதிதாக உருவாக்கக் கட்சியின் பொதுக் குழுதான் கூடி விவாதித்து முடிவெடுக்கும் என்று ஜெயலலிதா சொல்லவில்லையே என்று வியப்புறும் ஏடுகள்; என்னமோ இப்போதுதான் இத்தகைய அதிகாரம் அங்கே கொடிகட்டிப் பறக்கிறது என எண்ணிக் கொண்டிருக்கின்றன போலும்! என்செய்வது; இப்படி ஒரு கட்சி; அதன் கையிலே ஓர் ஆட்சி! பதவிக்கும் பணத்துக்கும் பல் இளித்துக் கொண்டு பக்கம் நின்று பஜனை பாடுவோருக்கு இதனைச் சிந்திக்கக்கூட நேரமிருக்காது - பதவியில் இந்தக் கட்சியை அமர்த்திய பாமரர், படித்தோர், பாட்டாளிகள் எனப்படும் வாக்காளப் பெருமக்கள் சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள் என்பது மட்டும் உண்மை! உண்மை! முக்காலும் உண்மை!

அன்புள்ள,

மு. கருணாநிதி

12-02-1995

2238. திட்டவட்டமான தீர்க்கமான கணிப்பு!

உடன்பிறப்பே,

குஜராத் மாநிலத்தில், தேர்தல் களத்தில் தன் கட்சி வேட்பாளர்களை ஆதரித்துப் பிரச்சாரம் செய்யக் கிளம்பியுள்ள பிரதமர் நரசிம்மராவ் அவர்கள் ஜனதா தளத்தின் மீதும் பாரதீய ஜனதாக் கட்சியின் மீதும் கடுமையான தாக்குதல் கணைகளைத் தொடுத்துள்ளார். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் குஜராத் மாநிலத் தேர்தலில் நேரடியாகத் தொடர்பு கொண்ட இயக்கம் அல்ல எனினும்; பிரதமர் நரசிம்மராவ் அவர்கள் அந்த இரு கட்சிகளையும் தாக்குவதற்குக் கையில் எடுத்துக் கொண்டுள்ள இரண்டு பிரச்சினைகளைப் பற்றியும் கருத்துக் கூறுகிற கடமையும் உரிமையும் நமது கழகத்திற்கு உண்டு.

"மண்டல் பரிந்துரை என்ற பெயரில் தேசம் தீப்பற்றி எரிந்ததற்கு வி.பி. சிங் அவர்களே பொறுப்பு"

என்று முதற்கணையை அவர் விடுத்துள்ளார். 1978 ஆம் ஆண்டு ஜனதா ஆட்சியில் மொரார்ஜி தேசாய் அமைத்த மண்டல்குழு, தனது பரிந்துரை அறிக்கையை இரண்டு ஆண்டுகளில் வழங்கியது எனினும்; அந்த அறிக்கை வழங்கப்பட்டபோது இந்திரா காங்கிரஸ்; ஆட்சி அதிகாரத்தில் இருந்ததால்; அந்த அறிக்கை சுமார் பத்து ஆண்டுக்காலத்திற்கு மேலாகக் கிடப்பிலே போடப்பட்டு விட்டது. தேசிய முன்னணி அரசு வி.பி. சிங் அவர்கள் தலைமையில் அமைந்த பிறகே; மரணப் படுக்கையில் கிடந்த மண்டல் பரிந்துரைகளுக்கு புத்துயிர் அளிக்கப்பட்டு; நாட்டின் பெரும்பாலான ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்கு மத்திய அரசுப் பணிகளிலும் இடஒதுக்கீடு மூலம் வேலை வாய்ப்பு உத்திரவாதம்

தரப்படவேண்டும் என்ற மண்டல் பரிந்துரையின் மையக் கருத்து ஏற்கப்பட்டு; முதல் கட்டமாக அதனை நடைமுறைப்படுத்திட பிரதமர் வி.பி. சிங் அவர்கள் ஆணை பிறப்பித்து அறிவித்தார்.

அதனால் தேசம் தீப்பற்றி எரிந்தது என்று நரசிம்மராவ் இன்றைக்குத் தேர்தல் பிரச்சாரத்தில் வீணான பழியை வி.பி. சிங் அவர்கள் மீது போடுகிறார்.

மண்டல் பரிந்துரையை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டுமென வலியுறுத்தி, தி.மு.கழகம், திராவிடர் கழகம், மற்றுமுள்ள அரசியல், சமுதாய அமைப்புகளின் தலைவர்கள் தொடர்ந்து எழுப்பி வரும் முழக்கத்திற்கும் - தேசிய முன்னணியை மத்தியிலும், தி.மு.கழகத்தை மாநிலத்திலும் அமர்த்திய வாக்காளப் பெருமக்களின் கோரிக்கைக்கும், சமூகநீதியை வற்புறுத்தும் இயக்கங்களின் குரலுக்கும் கிடைத்த வெற்றிக் கனியாக; வி.பி.சிங் அவர்களால் வழங்கப்பட்டதே மண்டல் கமிஷன் பரிந்துரை நடைமுறைக்கு வருமென்ற ஆணையாகும்!

ஆனால் பிரதமர் நரசிம்மராவ் சொல்கிறாரே; தேசம் தீப்பற்றி எரிந்தது என்று; அந்தத் தீயசெயலைத் தூண்டி விட்டவர்களும், அந்தத் தீயில் குளிர்காய்ந்தவர்களும் - ஆதிக்கக்காரர்கள் மட்டுமல்ல; உயர் சாதி வர்க்கத்தினர் மட்டுமல்ல; அந்தத் தீயை பயன்படுத்திக்கொண்டு, தேசிய முன்னணி ஆட்சியைக் கவிழ்த்திட ஆட்டம் போட்ட காங்கிரஸ் தலைவர்களுக்கும் அந்தக் கிளர்ச்சியில் பெரும் பங்கு உண்டு என்பதை பிற்படுத்தப்பட்ட மக்கள் உணர்ந்தேதான் இருக்கிறார்கள்.

சாதி ஆதிக்க பூர்ஷுவாக்கள் கிளப்பி விட்ட அந்தத் தீ; எத்தனை நாள் எரிந்தது? தேசிய முன்னணி ஆட்சி கவிழ்க்கப்படும் வரையில் எரிந்தது! வி.பி. சிங் அவர்களை ஆட்சியிலிருந்து அகற்றும் வரை எரிந்தது! அப்படி அகற்றப்பட்ட வி.பி.சிங் அவர்களுக்கு தமிழகத்தில் தி.மு.க. அரசு, சிவப்புக் கம்பள வரவேற்பு கொடுத்து - என்னைக்கும் மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தத் தோளொடு தோள் நிற்போம் எனச் சூளுரை கூறியதற்காகக் கழக ஆட்சியும் இங்கே கலைக்கப்படும் வரையில் அந்தத் தீ எரிந்தது.

இன்றைய நிலை என்ன? பாவம், நரசிம்மராவே நாங்கள் மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நிறைவேற்றி வருகிறோம்

என்று உண்மையோ அல்லது பொய்யோ ஏதோ ஒன்று சொல்லித் தீர வேண்டிய அளவுக்கு, பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் புரட்சிக் கனல் வீசிக்கொண்டிருக்கிறது; குமரி முதல் இமயம் வரையில்! அந்தக் கனலை எத்தனை நரசிம்மராவ்கள் வந்தாலும்; அவர்கள் தங்களுக்குத் துணையாக எத்தனை பா.ஜ.க. கட்சிகளைத் தங்களுடன் வைத்துக் கொண்டாலும் அணைத்திட முடியாத அளவுக்கு மண்டல் என்பது வலிமை பெற்றுவிட்டது!

இந்தப் பேருண்மையை மறந்துவிட்டு, வி.பி.சிங் மீதும், தேசிய முன்னணியில் உள்ள ஜனதா தளத்தின் மீதும்; ஒரு தேர்தலுக்காக அபாண்டமான குற்றச்சாட்டைச் சுமத்துவது நரசிம்மராவ் போன்ற பெரும் பொறுப்பில் உள்ளவர்களுக்கு அழகல்ல!

அதேபோல குஜராத் தேர்தல் களத்தில் நிற்கும் பா.ஜ.க. மீதும் பாபர் மசூதி பிரச்சினை தொடர்பாக இரண்டாவது கணை தொடுத்துள்ளார் பிரதமர்.

இதில் வேதனை என்னவென்றால்; பாபர் மசூதியை இடித்துத் தகர்த்திட இரதமேறிப் புறப்பட்ட பா.ஜ.க. என்னும் பார்த்திபனுக்கு, மறைமுகச்சாரதியாக இருந்ததும், பாபர் மசூதி எனும் பெரும் வரலாறு தகர்க்கப்பட்டபோது, எட்டு கிலோ மீட்டர் தொலைவிலே இராணுவத்தை நிறுத்தி வேடிக்கை பார்க்கச் சொன்னதும் பாரதப் பிரதமராம் இந்தப் பரந்தாமன்தான்!

பா.ஜ.க.வின் பரிவையும் உ.பி. மாநில பா.ஜ.க. அரசின் பாதுகாப்பையும் பெற்ற சாது சந்நியாசிகளின் கரசேவை எனப்படும் கண்ணிவெடியின் அபாயக்குறியை அனைத்துக் கட்சிகளும் அ.தி.மு.க. தவிர எடுத்துரைத்து எச்சரித்தும் கூட பிரதமர் நரசிம்மராவின் வழவழா கொள்கையென்றுகூடக் கூறமாட்டேன்; பா.ஜ.க.வுக்கும் ஏனைய மதவெறியர்களுக்கும் வளைந்து கொடுக்கும் உணர்வின் காரணமாக; பாபர் மசூதி தகர்க்கப்பட்டதைத் தடுத்திட முயற்சி எடுக்காமல் நாட்டில் அமளி துமளி ஏற்படக் காரணமாக இருந்ததே நரசிம்மராவ்தான் என்பதில் இருவேறு கருத்துக்கே இடமில்லை என்பேன்.

தேர்தல் நேரம் என்பதற்காக, பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், இஸ்லாமியர் வாக்குகளைப் பெறுவதற்காக; இப்போதுகூட நரசிம்மராவ் அவர்களுக்கு இவ்விரு பிரச்சினைகளில் நாட்டம் இருப்பதாக நடித்துக் காட்டப்படுகிறதே தவிர;

இன்றுள்ள மத்திய காங்கிரஸ் அரசு, மண்டலிலும் ஆர்வமுடையது அல்ல - மதச்சார்பற்ற கொள்கையிலும் உறுதி உடையது அல்ல என்பதே நமது திட்டவட்டமான தீர்க்கமான கணிப்பாகும்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

13-02-1995

2239. திடீர்த் தேர்தல் வரக்கூடும்; அதனால்!

உடன்பிறப்பே,

மத்தியிலோ, மாநிலத்திலோ ஆட்சி அமைந்து அவை ஐந்தாண்டுக்காலம் நீடித்து தொடர்ந்து பொதுத் தேர்தலை மக்கள் சந்திப்பதுதான் ஜனநாயக நெறிமுறை - அரசியல் சட்ட விதிமுறை எனினும்; அந்த இலக்கணமும் விதிமுறையும்தான் பின்பற்றப் படவேண்டுமென்பது நமது கழகத்தின் கருத்தாக இருந்திடினும்; ஏதோ தவிர்க்க முடியாத காரணங்களால் - மத்தியில் உள்ள நாடாளுமன்றத்திற்கோ அல்லது மாநிலங்களில் உள்ள சட்டப் பேரவைகளுக்கோ திடீர்த் தேர்தல்கள் வந்துவிடுவதைக் கடந்தகால வரலாறுகள் கூறிக்கொண்டிருக்கின்றன.

நடந்து முடிந்து முடிவுகள் வெளியான ஆந்திரா, கர்நாடகா ஆகிய பெரிய மாநிலங்கள் இரண்டில் காங்கிரஸ் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில்; இப்போது மராட்டியம், குஜராத், பீகார், ஒரிசா, அருணாசலப் பிரதேசம், மணிப்பூர் ஆகிய மாநிலங்களின் தேர்தல்களில் காங்கிரஸ் வெற்றி பெறுமா? இழுபறி நிலையில் இருக்குமா? முற்றாகத் தோல்வியடையுமா? என்ற கேள்விகளுக்கு நூற்றுக்கு நூறு சரியான பதில் கிடைக்காத சூழலில் - விரைவில் ஒரு தேர்தலை மத்திய அளவில்; ஏன், நமது மாநில அளவிலுங்கூட எதிர்பார்க்கக் கூடியது இயல்பான ஒன்றேயாகும்.

இப்போது அப்படித் தேர்தல் வராது; எல்லாம் 1996 ஆம் ஆண்டில்தான் என்று சொன்னால்; அதற்குக்கூட ஒன்றும் தொலைவு அதிகமில்லை.

எதற்கும் நம்மைப் பொறுத்தவரையில் தேர்தல் உரிய நேரத்தில்தான் வருமென்றாலும் - உடனடியாக வரக்கூடும் என்றாலும்; இந்த இரு நிலைகளுக்குமே தயாராகத்தான் இருக்க வேண்டும்.

இன்று மாநிலங்களவையில் மட்டுமே கழகத்தின் குரல்; பல்வேறு பிரச்சினைகளை யொட்டிக் கேட்டுக்

கொண்டிருக்கிறது. நாட்டு மக்களின் பிரச்சினைகளையும், தமிழகப் பிரச்சினைகளையும் எடுத்துக் கூறி உரிமைக்குரல் கொடுக்க; நாடாளுமன்றத்தில் நமது கழகத்தின் சார்பில் யாருமே இல்லை. தமிழகத்தின் சார்பில் நாடாளுமன்றத்திற்குச் சென்றுள்ள ஒரு சில கட்சிகளின் உறுப்பினர்கள் எத்தகைய ஊழல்களில் எல்லாம் ஈடுபட்டு இந்தியாவின் பெயரையே அனைத்து நாடுகள் அரங்கில் சிதைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது ஏடறிந்த செய்தி! நாடறிந்த கதை!

நமது கழக உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் வீற்றிருந்தபோதுதான் நமது மாநிலத்தின் திட்டங்கள் பலவற்றுக்காகக் குரல் கொடுக்கவும் அவற்றைப் பெற்றிடவும் முடிந்தது.

மாநிலச் சட்டப்பேரவையிலோ; நமக்கு ஒரே ஒரு உறுப்பினர் - அவர் குரலையும் ஒலிக்க முடியாமல் பல நேரங்களில் செய்து விடுகிறார்கள்.

இந்தக் குறைகளையெல்லாம் போக்கி; இன்றைக்கு மக்களை மக்களாகக் கருதிக் கொண்டு ஆட்சி புரியும் மமதையாளர்களின் மகுடத்தை நீக்கி; மக்களுக்கு அவர்தம் நலிவுற்ற வாழ்வில் - மங்கிய வாழ்வில் - மறுமலர்ச்சியை உருவாக்கிட தி.மு.கழக அணியினால்தான் முடியுமென்பதை, பட்டிதொட்டிகளில், சிற்றூர், பேரூர்களில், நகர்கள், மாநகர்களில் வாழும் வாக்காளப் பெருமக்கள், உறுதியான மனத்துடன் நம்புகிறார்கள் என்பதை நான் நேரிலும் காண முடிகிறது; நமது கழக முன்னணியினர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில், அந்த மக்கள் காட்டும் ஆர்வப் பெருக்கினை நமது முன்னணியினர் சொல்லக் கேட்டும் உணர முடிகிறது.

கழகத்தில் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஒரு சரிவை; இருபாதியாகப் பிளந்துவிட்ட நிகழ்வு; என்று தப்புக் கணக்குப் போட்டவர்கள்கூட தங்கள் கணக்குப்பிழையை உணரத் தலைப்பட்டு விட்டார்கள். முதலில் உணராமல் பிரிந்து சென்ற சிலரும்கூட, மீண்டும் கழகத்தில் தங்களை இணைத்துக்கொள்கிற செய்திகளை அன்றாடம் காண முடிகிறது.

எனவே ஐம்பத்தி ஆறு ஆண்டுக்காலப் பொதுவாழ்வில் தந்தை பெரியார் அவர்களுக்குத் தொண்டனாக, மாணவனாக இருந்து - பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிரியமுள்ள

தம்பியாக இருந்து - இன்றைக்குப் பேராசிரியர் அவர்களின் உற்ற துணையுடனும் - எண்ணற்ற செயல்வீரர்களாம் உன்போன்ற உடன்பிறப்புகள், உங்கள் உள்ளத்தில் இடம்பெற்றுள்ள உத்தமத் தளகர்த்தர்களின் தோழமை சேர் ஒத்துழைப்புடனும் இந்தக் கழகத்தைப் பொல்லாத துரோகப் புயல் காற்றுக்கிடையிலேயும் - சோதனைச் சூறாவளிகளை எதிர்த்தும் - வேதனை வெள்ளப் பெருக்கினைக் கடந்தும் - கட்டிக்காத்து வரும் என்னால்; நமைப் பிரிந்து சென்றோர் திரும்ப வரும்போது மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியவில்லை - அதேபோலத் திட்டமிட்டுத் தீமை விளைத்தோரைப் புரிந்துகொள்ளாமல்; சில உண்மைச் செயல்வீரர்கள் அவர்கள் பின்னால் சென்றபோதும் இதயக்குமுறலை அடக்கிக் கொள்ள முடியவில்லை! இன்னும் அந்தச் சிலரும் ஆங்காங்கு நம்மிடம் வந்து நமது பாசறையை மேலும் வலுப்படுத்துகிறார்கள் என்கிறபோது; அவர்களை இருகரம் நீட்டி அரவணைத்துத் தழுவிக்கொள்கிறேன்.

உடன்பிறப்பே, கடிதத்தை எதற்கோ ஆரம்பித்து; இடையில் என் இதயச்சுமையை இறக்கி வைக்கும் வேலையை என்னையறியாமல் இறங்கி உன்னையும் இழுத்து ஏதோ ஓர் உணர்ச்சிக் கொந்தளிப்புக்கு நானும் ஆளாகி, உன்னையும் ஆளாக்கிவிட்டேன்; மன்னிக்கவும்.

தேர்தலைப் பற்றி எழுதத் தொடங்கிடுகிறேன் என்றால்; கழகத்தை மேலும் வலுப்படுத்தி - கட்டுப்பாடு கண்ணியம் போற்றி கடமைகளைத் தவறாது ஆற்றிட மக்களை நாள்தோறும் நீயும் ஏனைய உடன்பிறப்புகளும் சந்தித்துக் கொண்டே இருக்க வேண்டும்; நமக்குக் கிடைத்திடும் சாதனங்கள் எளியவைதான் எனினும் ஏற்றமிகு பணி முடிக்கக் கூடியவை அவை என்பதை எவரும் மறுத்திட முனைந்திடார்!

திண்ணைப் பேச்சு - தெருமுனைப் பிரச்சாரம் - பொதுக் கூட்டம் - கலைநிகழ்ச்சி - இசை நிகழ்ச்சி - நாடகம் - இப்படி நமக்கு எத்தனையோ பிரச்சார சாதனங்கள்!

தேர்தல் பணிக்கு இவை உயிர்நாடிகள் எனினும்; தேர்தல் செலவுக்கென்று அனுமதிக்கப்பட்டுள்ள தொகையைக் கூட அந்தந்தத் தொகுதிகளில் செலவிடுவதற்கேற்ற அளவு நமது கழகத்தில் பணமில்லை என்பதை நான் சொல்லித்தான் நீ தெரிந்துகொள்ள வேண்டுமென்றில்லை!

எந்தக் காரியத்துக்கென கழகத்தில் நிதி திரட்டப்படினும் அதற்குரிய கணக்குகள் முறைப்படி வைக்கப்பட்டு, பொதுக்குழு உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தணிக்கைக் குழுவினரால் தணிக்கை செய்யப்பட்டுப் பொதுக்குழுவில் கணக்கு காட்டுகிற இயக்கம் நமது கழகம் என்பதை நீ அறிவாய்!

ஓர் உடன்பிறப்பு ஒரு ரூபாய் நிதியாகத் தந்தாலும்; அதன் விபரம் முரசொலியில் வெளியிடப்படுவதும் - அதற்கான கணக்கு முறையாக வைக்கப்படுவதும், அண்ணா அவர்கள் இக்கழகம் தொடங்கிய நாள் முதல் இன்று வரை கடைப்பிடிக்கப்பட்டு வரும் நடைமுறையாகும்!

இப்போதும் சில நாட்களுக்கு முன்பு நான் விடுத்த வேண்டுகோளுக்கேற்ப; உடன்பிறப்புகள் உளம் நிறைந்த உணர்வுடனும், ஆர்வத்துடனும் என்னிடம், ஆங்காங்கு கூட்டங்களில் கலந்து கொள்ளும் முன்னணியினரிடமும், பொருளாளர் முகவரிக்கு தலைமைக் கழகத்திடமும் அளித்துள்ள தொகை 65000 ரூபாய் அளவைத் தாண்டி நிற்கிறது.

ஒரு பெரும் பொதுத் தேர்தலை; இப்போது உடனடியாகவோ - அல்லது ஓராண்டுக்குப் பிறகோ சந்திப்பதற்கு; அனுமதிக்கப்பட்டுள்ள தேர்தல் செலவு தொகை அளவுக்காவது நிதி சேர்த்திட வேண்டுமானால் - நிதி வழங்குவதில் இந்த வேகம் போதாது! மாவட்டக் கழகச் செயலாளர்கள் தங்கள் தங்கள் அமைப்புகளின் வாயிலாக இந்தப் பணியில் ஈடுபடவேண்டும்.

தனிப்பட்ட முறையில் கழக உடன்பிறப்புகளும் தேர்தல் நிதி வழங்குவதில் இன்னும் மெத்த ஆர்வம் காட்டிட வேண்டும்!

கழகத்திற்காக நான் நிதி கேட்டு, நீ இல்லையென்று இதுவரையில் கைவிரித்ததில்லை - மாலைகள், துண்டுகள், சால்வைகள் என்றெல்லாம் செலவழிக்கும் பணத்தை; தேர்தல் நிதிக்கென்று ஒரு சிறிய உறையில் போட்டு, அதில் உன் முகவரியையும் எழுதிக் கொடுத்தால் - நிதி, கழகக் கருவூலத்தில் சேரும்! பெற்றுக் கொண்டதற்கான சான்றாக நிதியளித்த உன் பெயர் முரசொலியிலும் வரும்!

உடன், இந்தக் கடமையாற்றிட முனைந்திடுவாய் என நம்புகிறேன்; எங்கே பார்க்கலாம் உன் ஆர்வத்தை!

அன்புள்ள,

மு. கருணாநிதி

14-02-1995

2240. முழுக்கமாக இல்லை; முனகலாக இருக்கிறது!

உடன்பிறப்பே,

குடியரசுத் தலைவர் சங்கர்தயாள் சர்மா அவர்கள் மூன்றாம் முறையாக நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்தியுள்ளார். முதல் முறை ஆற்றிய உரையிலிருந்து பெரிதாக முன்னேற்றம் எதுவுமில்லையென்றுதான் சொல்ல வேண்டும். குடியரசுத் தலைவர், துணைத் தலைவர், பிரதமர் ஆகியோர் உலக நாடுகள் பலவற்றுக்குச் சுற்றுப்பயணம் செய்து வந்ததால் அந்த நாடுகளிடையே; இந்தியா, நல்லுறவை வளர்த்துக் கொள்ள முடிந்தது என்று பெருமைப்பட்டுக் கொள்கிற அதே நேரத்தில், பக்கத்து நாடான பாகிஸ்தானுக்கும் நமது நாட்டுக்கும் நல்லுறவு இல்லாத சூழல் இருப்பதையும் பம்பாயிலிருந்த பாகிஸ்தான் தூதரகமும் - கராச்சியிலிருந்த இந்திய தூதரகமும் மூடப்பட்டுள்ளதையும் குடியரசுத் தலைவர் உரை சுட்டிக்காட்டத் தவறவில்லை.

காஷ்மீரில் தேர்தல் நடத்துவதற்கான ஆயத்தப்பணிகள் நடைபெறுவதால் மட்டும் அங்கு எழுந்துள்ள பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்பட்டுவிடக்கூடும் என்று எதிர்பார்க்க இயலாது! நோய்நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல் எனும் குறள் கூறும் கருத்தை அலட்சியப்படுத்திவிட்டுக் காஷ்மீரில் இயல்பு நிலையைக் கண்டுவிடலாம் என்பது கனவாகி விடக்கூடுமோ என்ற அச்சமும் ஐயப்பாடும் எழுவது வியப்புக்குரிய ஒன்றல்ல!

இன்று தேர்தலுக்கான ஆயத்தங்களைச் செய்து காஷ்மீரில் ஜனநாயக மணங்கமழச் செய்ய வேண்டுமெனக் குடியரசுத் தலைவர் உரையில் வாயிலாக ஆர்வங்காட்டுகிற மத்திய காங்கிரஸ் ஆட்சியாளர்கள்தான்; அன்றைக்கு பரூக் அப்துல்லா தலைமையில் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைக் கவிழ்த்திட

பரூக்கின் உறவினர் ஷா என்பவரையே பயன்படுத்திக் கொண்டு கட்சி மாறிகளை, பதவிக்கும் பணத்துக்கும் விலைபேசி எப்படியும் அங்கே காங்கிரஸ் ஆட்சியைக் காணத் துடித்தவர்கள் என்பதை வரலாறு மறைத்துவிடாது.

மக்களின் உரிமைகளுக்கு அன்று வெட்டப்பட்ட குழிதான்; இன்று வன்முறைத் தீவிரவாதத்தினால் விழும் பலரது பிணங்களுக்குச் சவக்குழியாகி விட்டிருக்கிறது என்பதை யாரே மறுக்க முடியும்?

தேசியக் கொடியை ஏற்றுவதற்கே திண்டாடுகிற ஒரு நிலை; இன்றைக்கும் காஷ்மீர் பகுதியில் என்கிறபோது - இந்த ஆண்டுகூட குடியரசு நாளில் விழா நடைபெற்ற மேடைக்கருகே பயங்கர குண்டு வெடிக்கப்பட்டு, பலர் உயிர் இழந்தனர் என்கிறதுபோது - அங்கே அமைதியை நிலைநாட்டுவது என்பது அவ்வளவு எளிதில் முடிகிற பணியாகத் தெரியவில்லை.

எனவே காஷ்மீரைப் பற்றி ஆண்டுக்கொரு முறை குடியரசுத் தலைவர் உரையில் தொட்டுக் காட்டிவிடுவதாலோ எப்போதாவது அறிக்கைகள் வெளியிடுவதாலோ பிரச்சினை முற்றாகத் தீர்ந்து விடப்போவதில்லை.

பிரச்சினை வளர்ந்து கொண்டே போவதால் மக்களுக்கு ஏற்படும் வேதனையையும், காஷ்மீர் பிரச்சினை தொடர்பான பெரும்பொருள் செலவினங்களையும் வளர்த்துக்கொண்டே போக வேண்டியுள்ளது. இதனை எண்ணிப்பார்த்து ஆவன செய்திட, ஆக்கப்பூர்வமான முயற்சிகளில் ஈடுபட மத்திய அரசினர் முன்வரவேண்டும்.

அடுத்து, ஏழை எளிய பாட்டாளி மக்கள் விவசாயிகள் மற்றும் வறுமைக்கோட்டுக்குக் கீழேயுள்ளோரைப் பற்றிய அக்கறையில்லாமல்; மிகக் குறைந்த சதவிகிதத்தினர் மட்டுமே ஆதாயமடையக் கூடிய புதிய பொருளாதாரத் திட்டத்தின் சிலாக்கியங்களைக் குடியரசுத் தலைவரின் உரையில் புள்ளி விவரப்பட்டியல் வாயிலாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. அது வெறும் ஏட்டுச் சர்க்கரையே தவிர, ஏழை எளியோர்க்கு எள் முனையளவு பயனும் தரத்தக்கதல்ல என்று நாம் தொடக்க கால முதலே எடுத்துக்காட்டி வருகின்ற நிலையே இன்னமும் தொடர்கிறது.

நமது கருத்தும், எதிர்ப்பும் உண்மையாக இருப்பதினால்தான் குடியரசுத் தலைவர் உரையில் விலைவாசி உயர்வைப் பற்றிய ஓலம் எழும்பியிருப்பதைக் கேட்க முடிகிறது.

"அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் உயர்ந்து வருவதால் அரசு கவலை கொள்கிறது. விலைவாசி உயர்வை அரசு உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது"

இந்தப் பல்லவி, அரசினரால் தொடர்ந்து பாடப்படுவதுதான்!

விலைவாசி உயர்வு கண்டு ஏழை எளியோர் கதறுகின்றனரே என்றால் அரசும் கூடக் கவலை கொள்கிறது என்று ஆள்வோரும் ஏழை பாளைகளைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுகின்றனர். அந்த நடிப்பை வேண்டுமானால் பாராட்டலாம்! ஆனால் நடப்பு வேறு விதமாக இருக்கிறதே!

1991 பொதுத் தேர்தல் நேரத்தில் காங்கிரசாரும் அ.தி.மு.க.வினரும் மக்களுக்கு அளித்த வாக்குறுதி என்ன?

மத்தியில் காங்கிரசும் - மாநிலத்தில் அ.தி.மு.க.வும் ஆட்சிக்கு வந்துவிட்டால்; உடனடியாக நூறு நாட்களுக்குள்ளாக விலைவாசியைக் கட்டுப்படுத்துவோம் என்று விண்ணதிர முழக்கியது உண்டா இல்லையா?

ஆனால் இன்று?

கவலைகொள்கிறோம் - கவனித்துக் கொண்டிருக்கிறோம் - கண்காணிக்கிறோம்-

இவை முழக்கமாக இல்லையே; முனகலாகவன்றோ இருக்கிறது!

பிற்படுத்தப்பட்டோர் தாழ்த்தப்பட்டோர் இடஒதுக்கீடு பிரச்சினையில் இத்தனை போராட்டங்களுக்குப்பிறகு; மத்திய அரசுப்பணிகளில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 1873 பணிப் பொறுப்புகள்தான் கிடைத்துள்ளன என்பது மகிழத்தக்கதாக இல்லை! அந்தப் பணிப் பொறுப்புகள் பிற்படுத்தப்பட்டோருக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் பல்லாயிரக்கணக்கில் பெருகிட ஆவன செய்திட அரசு முன்வர வேண்டும். இல்லையேல்; குடியரசுத் தலைவர் உரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள இடஒதுக்கீட்டுக்கான குறிப்பு, வெறும் கண்துடைப்பாகவே ஆகிவிடும்.

மொத்தத்தில் குடியரசுத் தலைவர் உரை, முழுமையான நம்பிக்கை வெளிச்சத்தை இருண்டு கிடக்கும் இந்த தேசத்தில் ஏற்படுத்துவதாக அமையவில்லை என்பது வருந்தத்தக்கது!

அன்புள்ள,

மு. கருணாநிதி

15-02-1995

2241. பெட்டிப் பேரத்தால் குட்டிச்சுவரான மாநிலம்!

உடன்பிறப்பே,

சென்னை மாநகரத்தில் முதலமைச்சர் ஜெயலலிதா வீட்டிலிருந்து தொடங்கி, வடசென்னை அனல் மின் நிலையம் தொடக்க விழா நடைபெறும் இடம் வரையில் பல கிலோ மீட்டர்கள் தொலைவு; கட் அவுட் காடுகள் எனத்தகும் அளவுக்கும் - ஆதிபராசக்தியே! கருமாரியம்மனே! காஞ்சி காமாட்சியே! காலமகளுக்கும் புகழ் குவிக்கும் பெருமை பெற்றவரே! எனும் பல வண்ணப் பதாகைகள் பத்தடிக்கு ஒன்று அமைக்கப்பட்டு; வேதங்களுக்கு நிகரானது என வர்ணிக்கப்பட்ட ஜெயலலிதாவின் பாதங்களைத் தொழுகிறோம் என்றும் - சுவரொட்டிகளால் மாநகரையும், விழா நடைபெறும் பகுதிக்குச் செல்லும் பாதைகளையும் மறைக்கிற அளவுக்கு ஒரே படோடோபம்! பளபளப்பு! அமர்க்களம்! எல்லாம் எதற்கு? வடசென்னை அனல் மின்நிலையத்தை முதலமைச்சர் திறந்து வைக்கும் நிகழ்ச்சிக்கு! பல லட்ச ரூபாய் ஆடம்பரச் செலவு!

இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டியது கழக ஆட்சியில் 1.7.89இல் என்பதை மறந்திருக்கமாட்டாய்! அந்த விழாவுக்கு நான் சென்னையிலிருந்து காரில்தான் போனேன் - அடிக்கல் நாட்டுவதற்கு வருகை தந்த குடியரசுத் தலைவர் ஆர்.வி. அவர்களும், சிறப்பு விருந்தினராக ஆளுநர் அலெக்சாண்டர் அவர்களும் மட்டுந்தான் ஹெலிகாப்டரில் வந்தார்கள்.

ஆனால் இன்று; அந்த மின் நிலையம் திறப்பு விழாவுக்கு ஆளுநர்கூட அழைக்கப்படவில்லை. எனினும் முதலமைச்சர் ஜெயலலிதா ஹெலிகாப்டரில்தான் செல்கிறார். இதற்குத் தனியான சிறப்புச் செலவு எத்தனை லட்சமோ; அதைப்பற்றி

அம்மையாருக்கு என்ன கவலை? ஏழை எளியோர் வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி வழங்கும் வரிப்பணம் தானே, இப்படிக் கரியாகிறது. இந்த அனல்மின் நிலையம் எவ்வளவு இடையூறுகளைக் கடந்து - எதிர் நீச்சல் போட்டு - 1989ல் மீண்டும் பொறுப்பேற்ற தி.மு.க. ஆட்சியில் வடிவமைக்கப்பட்டு அடிக்கல் நாட்டப்பட்டது என்பதும், பணி தொடங்கப்பட்டு நடந்து வந்தது என்பதும் அனைவரும் அறிந்த ஒன்றேயாகும்.

எனினும் இருட்டடிப்புக்குள்ளே ஒளிக்கீற்று போல; அனல் மின் நிலையத்துக்கு 1989 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்ட நிகழ்ச்சியில் நான் ஆற்றிய உரையை உனக்கும் மற்றவர்களுக்கும் நினைவூட்டுகிறேன். அப்போதுதான் எத்தனை முட்டுக்கட்டைகளை முறியடித்து, முகிலைக் கிழித்து வெளிக்கிளம்பும் முழுமதியாக இந்த அனல் மின் நிலையம் தொடங்கப்பட்டது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

அன்று நான் ஆற்றிய உரை வருமாறு :-

தலைமைச் செயலாளர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல இன்று ஒரு பொன்னாள். மின்துறை சார்பிலே நடைபெறுகின்ற விழா என்ற காரணத்தால் பொன்னாள் என்பதை மின்னாள் என்று கூட அழைக்கலாம்.

இந்த அருமையான நாளில் மிகப் பெரியதொரு திட்டத்தைத் தொடங்கி வைக்க - அதற்கென அடிக்கல் நாட்ட வருகை தந்துள்ள அன்பிற்குரிய குடியரசுத் தலைவர் அவர்களை நான் இதயமார வரவேற்கிறேன்.

அதேபோல இங்கே உருவாகவிருக்கின்ற வீடுகளுக்கான அடிக்கல் நாட்ட வருகை தந்துள்ள தமிழகத்தின் ஆளுநர் அவர்களை நெஞ்சார வரவேற்கிறேன்.

மரகதம் அம்மையார் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல 1986ஆம் ஆண்டிலேயே இந்தத் திட்டம் தொடங்கப்பட்டு அதனுடைய பயனை நாமெல்லாம், மாநிலம் முழுதும் உள்ளோர் அனுபவிக்கக் கூடிய வாய்ப்பு கிடைத்திருக்க வேண்டும்.

ஆனால் அத்தகைய வாய்ப்பு கிடைக்காமல் 548 கோடி ரூபாயிலே திட்ட மதிப்பீடாக இருந்த தொகை இரண்டு

ஆண்டுக்கால தாமதத்தின் காரணமாக மதிப்பீடு 721 கோடி ரூபாயாக உயர்ந்து அதனைச் சமாளிக்க வேண்டிய அந்தப் பெரும் சுமை அரசின் தலையிலே விழுந்திருக்கிறது.

இருந்தாலுங்கூட இரண்டாண்டுக் காலத்திற்குப் பிறகு - இந்த அரசு அமைந்த பிறகு நிலச் சொந்தக்காரர்களை அழைத்து, அவர்கள் உச்சநீதிமன்றத்திற்குச் சென்று பெற்றிருந்த இடைக்காலத் தடையைத் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு - இதனுடைய அவசியத்தை எடுத்துரைத்த போது - நில உடைமையாளர்களான அருமை நண்பர் பன்னீர்தாஸ் அவர்களின் சகோதரர்கள் சந்தோஷ் அவர்களும் செல்வராஜ் அவர்களும் இந்தப் பகுதியிலே ஒரு அதிசய உலகத்தை உருவாக்க வேண்டுமென்பது எங்கள் அண்ணன் கண்ட கனவு என்று - அவர்களுடைய அண்ணன் பன்னீர்தாஸைக் குறிப்பிட்டார்கள். நான் அப்போது சொன்னேன், உங்கள் அண்ணன் கண்ட கனவு வொண்டர்லாண்ட் அதிசய உலகம். ஆனால் எங்கள் அண்ணன் கண்ட கனவு இந்தத் தமிழகத்தை தொழில்மயமாக்க வேண்டும் என்பதாகும். அதற்காக உங்கள் அண்ணன் கண்ட கனவை விட்டுக்கொடுங்கள் என்று கேட்டு, அவர்களும் உச்சநீதிமன்றத்திலிருந்த அந்த வழக்கைத் திரும்பப் பெற்று இந்த இடத்திலே இந்த பிரம்மாண்டமான திட்டத்தை நம்முடைய இந்தியத் திருநாட்டின் குடியரசுத் தலைவர் அவர்கள் இன்று தொடங்கி வைக்கின்ற நிகழ்ச்சிக்கு வாய்ப்பு அளித்தமைக்காக இரண்டாண்டுக்கால தாமதத்தையும் நான் மறந்துவிட்டு - 200 கோடி ரூபாய்க்கு மேல் அதிக செலவு ஏற்பட்டுவிட்டதே என்பதையும் மறந்து விட்டு - அவர்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இங்கே இந்தத் திட்டம் உருவாகின்ற காரணத்தால் இந்தப் பகுதியிலே உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்குமா என்று வரவேற்புரையிலே மின்வாரியத் தலைவர் குறிப்பிட்டபோது, எழுந்த

கையொலியைக் கண்ட நேரத்தில் அந்த வேலை வாய்ப்புக்காக இந்தப் பகுதியிலே உள்ள மக்கள் எவ்வளவு ஆவலாக இருக்கின்றார்கள் என்பதைப் புரிந்து கொண்டேன். எனவே உங்களுக்கெல்லாம் நான் உறுதி அளிக்கின்றேன். அனைவருக்கும் இந்த வட்டாரத்திலே உள்ளவர்களுக்கும் நிச்சயம் வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படும்.

மேலும் இதுபோன்ற திட்டங்கள் தமிழகத்திலே உருவாகிக் கொண்டிருக்குமேயானால் வேலை வாய்ப்பு பெருகும். தமிழகத்தினுடைய வளமும் பெருகும். இந்த விழாவில் அடிக்கல் நாட்ட குடியரசுத் தலைவர் அவர்கள் வந்திருப்பது மிகப் பொருத்தமான ஒன்றாகும்.

வருகின்ற நான்கைந்து ஆண்டுகளில் மாநிலத் தொகுப்பிலேயிருந்தும், மத்திய தொகுப்பிலேயிருந்தும் 2,082 மெகாவாட் அளவிற்கு புதிய மின் நிலையங்கள் பயனுக்கு வரஇருக்கின்றன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இவைகளிலிருந்து தமிழகத்திற்கு நாள் ஒன்றுக்கு கூடுதலாக 28 மில்லியன் யூனிட் மின்சாரம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே இந்தத் திட்டம் விரைவிலே நிறைவேறிட அதனுடைய பயனை தமிழக மக்கள் பெற்றிட இந்தத் திட்டம் உருவாவதின் காரணமாக பல தொழில்கள் தொடர்ந்து தமிழகத்திலே அமைந்திட நாமனைவரும் நம்முடைய ஒத்துழைப்பை எல்லா வகையிலும் நல்கிட வேண்டுமென்று உங்களையெல்லாம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று பிற்பகல் குடியரசுத் தலைவர் அவர்களை நான் சந்தித்தபோதுகூட ஆணவத்தோடு அல்ல - ஆனால் ஆசையோடு சொன்னேன், பெருமிதத்தோடு சொன்னேன், மகிழ்ச்சியோடு சொன்னேன்; வருகின்ற ஆண்டுகளில் இரண்டு மாதத்திற்கொரு முறை ஒரு தொழில் தமிழகத்திலே தொடங்குகின்ற அளவிற்கு

இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றது என்று சொன்னேன். அது கேட்டு அவர்களும் மிகுந்த பூரிப்பை தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

அவர்களைப் போன்றவர்களுடைய அன்பான வாழ்த்துக்களோடும், உங்களுடைய ஒத்துழைப்போடும் தமிழகம் தொழில்வளம் மிக்க பூமியாக மாற வேண்டுமென்று நான் விரும்பி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அனல் மின்நிலையம் அடிக்கல் நாட்டப்படாமல்; உச்சநீதிமன்றத் தடை ஆணையினால் தடங்கலுக்கு உள்ளாகியிருந்த நேரத்தில், கழக ஆட்சிக்கு பதில் ஜெயலலிதா ஆட்சி 1989இல் வந்திருந்தால் அந்த தடைகளையெல்லாம் விலக்கி, அனல்மின் நிலைய அடிக்கல் விழா நடைபெற்றிருக்குமா?

அதற்கு எத்தனையோ பெட்டிகள் பேரம் பேசப்பட்டு; அனல் மின்நிலைய திட்டம் அடியோடு புதை குழிக்கல்லவா போயிருக்கும் - இன்றைய நடப்புகளைப் பார்க்கும்போதும்; தமிழ்நாட்டுத் தொழில் வளர்ச்சி மிகக்கீழான நிலைக்கு வீழ்ந்து விட்டதென்று பொருளாதார நிபுணர் - பொருளாதார ஆய்வு தேசியக் கவுன்சில் இயக்குநர் எஸ்.எல்.ராவ் குறிப்பிட்டிருப்பதை நோக்கும் போதும் - சில மாதங்களுக்கு முன்பு, பிசினஸ் இந்தியா என்ற ஏடு; தமிழ்நாட்டில் தொழில்வளர முடியாமல் லஞ்சலாவண்ய ஊழல்கள் தடுக்கின்றன என்பதை சில தொழிலதிபர்கள் வாயிலாகவே விளக்கியுள்ளதைக் காணும்போதும்; நான் குறிப்பிடும் பெட்டிப் பேரத்தால் குட்டிச் சுவராகிவிட்டது தமிழகம் என்பதை நடுநிலையாளர்கள் ஒப்புக்கொண்டுதானே தீரவேண்டும்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

16-02-1995

2242. நொரித்த புருவமும் - நெஞ்சில் உறுதியும்!

உடன்பிறப்பே,

“நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற போது எங்களுக்கு முன்னால் ஆட்சி செய்தவர்கள் விட்டுச் சென்ற கடன் சுமைகளும், நிதிப் பற்றாக்குறையும், நிர்வாகச் சீர்கேடுகளும், சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளும் எங்களுக்கு ஒரு சவாலாக இருந்தாலும் அவற்றை மக்கள் சக்தியின் துணையுடன் எதிர்கொண்டு வெற்றிபெற்றதோடு தமிழகத்தின் வளர்ச்சிக்கும் வித்திட்டுள்ளோம்.”

வடசென்னை அனல் மின் நிலைய விழாவில் முதலமைச்சர் ஜெயலலிதா உதிர்த்த முத்துக்கள் இவை! முத்துக்கள் முகஞ்சுளித்தால் அதற்கு நான் பொறுப்பல்ல ஜெயலலிதாவின் பேச்சைப் படித்துவிட்டு - தமிழ்நாட்டிலேயுள்ள அரசியல் கட்சி சார்பற்ற நடுநிலையாளர்கள்கூட அடடா! கடன் எனும் கடலில் மூழ்கியிருந்த தமிழக அரசை, ஜெயலலிதா அல்லவோ கூர்மாவதாரம் எடுத்து மீட்டுக் கொண்டு வந்து கரை சேர்த்திருக்கிறார் என்றும்; நிர்வாகச் சீர்கேடுகளால் குடந்தை மகாமகக்குளம் போல் குழம்பிப் போய்க் கிடந்த தமிழக அரசை, ஜெயலலிதா அல்லவோ தனது உயிர்த்தோழியுடன் திறந்த வெளி பாத்ரூம் குளியல் நடத்தித் தெளிய வைத்திருக்கிறார் என்றும்; சட்டம் ஒழுங்கிற்குச் சமாதி கட்டப்பட்டிருந்த தமிழக அரசில் ஆட்டோ சேனைகளின் அதிரடிச் செயல்களால் ஜெயலலிதாவன்றோ அமைதிப் பூங்காவை நிர்மாணித்திருக்கிறார் என்றும்; சான்று வழங்குபவர் என பாவம் ஜெயலலிதா அம்மையார் இன்னமும் நம்பிக் கொண்டு இத்தகைய ரீல்களை விட்டுக் கொண்டிருக்கிறார்போலும்!

இவருக்கு முன்னால் நடைபெற்ற தி.மு.க. ஆட்சி 1200 கோடி ரூபாய் பற்றாக்குறை வைத்துவிட்டுப் போய்விட்டது என்றும், அதைச் சரிக்கட்ட வேண்டிய பொறுப்பில், தான் இருப்பதாகவும் சினிமா ஆரம்ப விழா ஒன்றில் சந்திரஹரிப் பொய் ஒன்றைச் சொல்லி; அதற்கு நான் உடனே மறுப்பளித்து, விளக்கமளித்த பிறகு இந்த அம்மையார் பேசாமடந்தையாக மூலையில் முடங்கிக் கிடந்துவிட்டு, மீண்டும் இப்போது அதே மாதிரி ஒரு பொய்யை அரசாங்கம் நடத்திய விழாவில் அவிழ்த்துவிட்டுள்ளார். அதுதான் நிதிப்பற்றாக்குறை - கடன்கள் பற்றிய பொத்தாம் பொதுவான குற்றச்சாட்டு! புள்ளி விபரம் இல்லை! ஆதாரம் எதுவுமில்லை! எனவேதான் இதனை சந்திரஹரிப் பொய் என்கிறேன்.

சந்திரஹரிப் பொய் என்றால் இளைய தலைமுறையினர்க்கு ஒருவேளை விளங்காமல் இருக்கக்கூடும். இதோ விளக்கம் :- அரிச்சந்திரன் பொன்னுக்காக, பொருளுக்காக, ஆளும்மண்ணுக்காக, மனைவியின் சுகத்துக்காக, மகனின் உயிருக்காகக் கூடப் பொய் சொல்ல மறுத்தவன் என்பது புராணக்கதை! அந்தக் கதையைத் தலைகீழாக மாற்றி; அரி-சந்திரன் என்ற பெரையும் சந்திர-ஹரி என்று ஆக்கி; எவ்வளவுதான் சிக்கலிலே மாட்டினாலும் உண்மையே சொல்லமாட்டேன் என உறுதியுடன் இருந்த ஒருவனைப் பற்றிய திரைப்படமொன்றை கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் தயாரித்து, நடித்து வெளியிட்டார். பொய் சொல்வதையே கலையாக்கிக் கொண்ட சந்திரஹரிக்கு ஈடாக இன்றைக்குத் தமிழக சரித்திரத்தில் உலவிடும் புகழுக்குரிய? புள்ளி ஜெயலலிதாவைத்தவிர வேறு யாராக இருக்க முடியும்?

சினிமா விழாவில் பேசியபோதே; முன்னுக்குப் பின் முரணாக உளறியவர்தான் இந்த முதலமைச்சர்!

1200 கோடி பற்றாக்குறை பட்ஜெட்டுடன் கழக ஆட்சி இவரை சிக்கலில் மாட்டிவிட்டதாக அந்த சினிமா விழாவில் முதலில் பேசிய ஜெயலலிதா; அடுத்த சில நிமிடங்களில் அதே சினிமா விழாவில் கலைஞர் உபரி பட்ஜெட்டை வைத்தே ஆட்சி நடத்தினார் - அண்ணா, எம்.ஜி.ஆர்., காமராஜ், ராஜாஜி, பக்தவச்சலம் எல்லோருமே உபரி பட்ஜெட்டில்தான் ஆட்சி நடத்தினார்கள் என்று முதலில் பேசியதற்கு முற்றிலும் மாறாகப் பேசினார்.

கொழுக்கட்டை! கொழுக்கட்டை! என்று உச்சரித்துக்கொண்டே ஓடிய பட்டிக்காட்டு முட்டாள் ஒருவன் ஒரு சிறிய வாய்க்காலைத் தாண்டியபோது அத்தரிபாச்சா என்று உச்சரித்து விட்டு; அந்த வேகத்தில் கொழுக்கட்டை என்ற பெயரை மறந்துவிட்டு; அத்தரிபாச்சா என்றே உச்சரித்துக் கொண்டே போய், வீட்டுக்குச் சென்றதும் அம்மா! எனக்கு அத்தரிபாச்சா சுட்டுக் கொடு என்றானாம் - அந்தக் கதையாகத்தான் பற்றாக்குறை என்பதையும் உபரி என்பதையும் - கொழுக்கட்டை என்றும் அத்தரிபாச்சா என்றும் உச்சரித்ததைப்போல அம்மையார் ஜெயலலிதா குழப்பிக் கொண்டு - முன்பிருந்த ஆட்சியின் மீது குப்பை வாரிக்கொட்டுகிறார்!

காரணம்; கோபம்தான்! ஆம்; இந்த ஆட்சி குப்பை ஆட்சியாக லஞ்ச லாவண்ய ஊழல் பணம் குவிக்கும் ஆட்சியாக இது உயர்ந்து ? நிற்கிறது என்பதை ஊரார் உணர்ந்து கொண்டுவிட்டனர்; அதனால் அம்மையாருக்கு ஆத்திரம் தொண்டையை அடைக்கிறது!

தி.மு.க. ஆட்சியில நிர்வாகச் சீர்கேடாம்! ஜெயலலிதா செப்புகிறார்! நிர்வாகம் என ஒன்று இப்போது இருக்கிறதா; அல்லது அது நிர்மூலமாகி விட்டதா என்று அறிவாளர் பலரும் கேட்பது அம்மையார் காதில் விழவில்லைபோலும்!

நிர்வாகமாவது - நீதியாவது - சட்டமாவது - ஒழுங்காவது - ஏன்; சட்டமன்றமாவது - எல்லாமே தன் வேதங்களையொத்த பாதங்களுக்குக் கீழேதான் என்று கூறி மக்களைப் பயமுறுத்திக் கொண்டு ராஜ்யபரிபாலனம் புரியும் ஜெயலலிதாவுக்கு; இந்த விண்ணுயரக் கட்அவுட்களும் - பதாகைகளும் - பக்கம் பக்கமாகத் தரப்படும் பத்திரிகை விளம்பரங்களும் இன்னும் எத்தனை நாட்களுக்கு கைகொடுக்கப் போகின்றன?

அவரும், அவரது பாதந்தாங்கிகளும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்; எல்லாமே நிரந்தரம்தான் - அதனால் நாம் வகுத்ததே நீதி - கிழித்த கோடுகளே சட்டம் - என்பதாக!

ஆனால்; நீதியும், சட்டமும், நிர்வாகமும் நெறி பிறழ்ந்து செயல்படும் நிலையை மக்கள் சக்தி நீண்டநாள் அனுமதிக்காது! நெரித்த புருவமுடன் நெஞ்சில் குலையாத உறுதியுடன் நேர்மையற்ற செயல்களை நேர்நின்று எதிர்த்துத் தகர்க்கவும்,

புரையோடிவிட்ட புண்ணாக உள்ள தமிழகச் சீரழிவை; பொய்யுரை எனும் சல்லாத்துணியால் மூடும் முயற்சியை முறியடித்திடவும், மக்கள் சக்தி பேருருக் கொள்ளும்! பெருவெள்ளமாய் - புயலாய் - பூகம்பமாய் - மாறியே தீரும்! மமதையாளர்க்கு என்றும் மறக்கமுடியாத பாடத்தை வழங்கியே தீரும்!

இது, ஆரூடமல்ல! அதில் எனக்கு நம்பிக்கையுமில்லை! கடந்த கால பல நாட்டு வரலாறுகள்; வஞ்சகம் சில நாள் வாழ்ந்த கதைக்கும் பின்னர் அது நிரந்தரமாக வீழ்ந்த கதைக்கும் சான்றுகளாகத் திகழ்கின்றன என்பதால் சொல்கிறேன்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

17-02-1995

2243. நரசிம்மர் நடத்தும் நாடகத்தில் ஒரு காட்சி!

உடன்பிறப்பே,

உள்ளாட்சித் தேர்தல் அட்டவணையைத் தமிழக அரசு வெளியிடாததால் ஊரக வளர்ச்சி நிதி நிறுத்தப்படும் என்று வெளியான செய்திகள் தவறு என்று தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அரிபாஸ்கர் அவர்களிடம் மத்திய ஊரக வளர்ச்சித் துறைச் செயலாளர் தெரிவித்ததாக, தமிழக செய்தித்துறை அதிகாரிகள் அறிவித்துள்ள தகவல் ஏடுகளில் வந்துள்ளதைக் கண்டிருப்பாய்!

இப்போது ஏற்பட்டுள்ள சந்தேகமே; வெளியான செய்தி தவறு என்று மத்திய ஊரக வளர்ச்சித் துறை செயலாளர் கூறுகிறாரா? அல்லது உள்ளாட்சித் தேர்தலை அ.தி.மு.க. அரசு நடத்த முன்வராததால் தமிழகத்துக்கு ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்கான 490 கோடி ரூபாய் நிதியை மத்திய அரசு நிறுத்திவிட்டதாக முதலில் அறிவித்ததை வாபஸ் பெற்றுக்கொண்டுள்ளதாகக் கூறுகிறாரா?

பத்திரிகைத் தகவல் அலுவலகம் - இந்திய அரசாங்கம் என்று தலைப்பிட்டு வந்த அறிக்கையொன்று பிப்ரவரி 17-ந் தேதி மாலையில் வெளியிடப்பட்டதில் உள்ள விபரமென்ன என்பதை முதலில் பார்க்க வேண்டும். அதில் உள்ள விபரத்தையும் கண்டிப்பான முடிவையும் இந்திய அரசின் பத்திரிகைத் தகவல் அலுவலகமே தட்டச்சு செய்து அனுப்பியுள்ளதை அப்படியே எழுத்து மாறாமல் இதோ தருகிறேன்.

> “தமிழ்நாட்டிற்கான ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்கான அனைத்து நிதி உதவிகளையும் மத்திய அரசு நிறுத்தியுள்ளது. பஞ்சாயத்து அமைப்புகளுக்கான தேர்தல் அட்டவணையை தமிழ்நாடு மாநில அரசே அறிவிக்கத் தவறியதால் நிதியுதவி நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் நடப்பு ஆண்டில் மாநிலத்திற்கு ரூ. 114 கோடி இழப்பு நேரிடும். அடுத்த நிதியாண்டில் ரூ. 376 கோடி இழப்பு நேரிடும். ஆண்டுதோறும் பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்காக ரூ. 350 கோடி மதிப்பிற்கு மத்திய அரசு மாநில அரசிற்கு நிதியுதவி அளிக்கிறது. ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம், வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஊரக குடிநீர் வழங்கல் திட்டம் மற்றும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான மேம்பாட்டுத் திட்டம் போன்ற பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்கு மத்திய அரசு நிதியுதவி அளித்து வருகிறது.

பஞ்சாயத்து அமைப்புகளுக்கான தேர்தல் அட்டவணையை அறிவிக்காத ஒரே மாநிலமாக தமிழகம் உள்ளது. பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்கு தமிழ்நாட்டில் கடைசியாக 1986-ஆம் ஆண்டில்தான் தேர்தல்கள் நடைபெற்றன.

திட்ட நிதியின் கீழ் மத்திய உதவியையும் கூட தமிழக அரசிற்கு நிறுத்திவைக்கும்படி திட்டக் குழுவை மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

அரசியல் அமைப்பு சட்டத்தின் புதிய விதிகளின்படி கட்டாயமாக ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை பஞ்சாயத்துராஜ் அமைப்புகளுக்கானத் தேர்தல்களை நடத்த வேண்டும். 1992-ஆம் ஆண்டு நிறைவேறிய அரசியலமைப்புச் சட்டத்தின் 73-வது திருத்தத்தை ஒட்டி 1994-ஆம் ஆண்டில் தமிழக அரசும் ஒரு சட்டத்தை நிறைவேற்றியது. இதற்கேற்ப பஞ்சாயத்துத் தேர்தல்கள் உடனடியாகவோ அல்லது அதிகபட்சமாக இந்த சட்டம் நிறைவேறிய ஓர் ஆண்டுக்குள்ளாகவோ நடத்தப்பட்டிருக்க வேண்டும்."

இப்படியொரு இறுதியானதும் உறுதியானதுமான ஒரு அறிக்கையை 17ந் தேதி மாலையில் ஏடுகளுக்குத் தந்துவிட்டு; சில மணி நேரங்களுக்குப் பிறகு அதே இந்திய அரசின் பத்திரிகைத்துறை அலுவலகம் அந்த அறிக்கை வாபஸ் என்ற தலைப்பிட்டு மற்றொரு அவசரத் தகவலை செய்தி

நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளது என்பதுதான் உண்மையே தவிர; நிதி நிறுத்தப்பட்டது என முதலில் வந்த செய்தி தவறானது எனத் தமிழக அரசு செய்தித் துறை பிரகடனப்படுத்துவது நம்பத்தகுந்ததுமல்ல நாணயமான செயலுமல்ல!

நிதி நிறுத்தம் என்ற அறிவிப்பை சில மணி நேரத்துக்குள் திரும்பப்பெற்ற அறிக்கை வருமாறு :-

"தமிழ் நாட்டிற்கு கிராமப்புற வளர்ச்சி நிதியை மத்திய அரசு நிறுத்திவிட்டது என்ற தலைப்பில் பத்திரிகை தகவல் அமைப்பு பி.ஐ.பி. வெளியிட்ட செய்திக்குறிப்பு வாபஸ் பெறப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ளாட்சித் தேர்தல்களை விரைவில் நடத்துவது தொடர்பாக விரைவாக முடிவு ஒன்றை எடுக்கச் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் மத்திய கிராமப்புற வளர்ச்சித்துறை அமைச்சகம் தமிழ்நாடு அரசுடன் தொடர்பு கொண்டு வருகிறது.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்துவதற்கு திட்டவட்டமான கால அட்டவணை ஒன்றை அறிவிக்கத் தவறும் மாநிலங்களுக்கு நிதி உதவி நிறுத்தப்படும் என்று சிறிது காலத்திற்கு முன்பு அறிவிப்பை மத்திய அரசு வெளியிட்ட பின்பு, எந்த குறிப்பிட்ட மாநிலத்தின் மீதும் அதை அமல்படுத்துவதற்கான எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. பிரதமரின் அறிவுரைப்படி கிராமப்புற வளர்ச்சித்துறை அமைச்சகமும், தனது உத்தேசத்திட்டத்தை செயல்படுத்த, திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் மாநிலங்களுக்கான மத்திய நிதி உதவியை நிறுத்தி வைக்கும்படி திட்டக்கமிஷனை அணுகவில்லை."

மேற்கண்ட காரணங்களை கருத்தில் கொண்டு, இன்று 17.2.95 வெளியிடப்பட்ட பத்திரிகைக்குறிப்பு திரும்பப் பெறப்படுகிறது.

ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்குப் பல்வேறு தலைப்புகளில் மத்திய அரசு, தமிழக அரசுக்கு நடப்பு ஆண்டுக்கு 114 கோடி ரூபாயும் - அடுத்து நிதியாண்டுக்கு 376 கோடி ரூபாயும் தரவேண்டியதை ஆகமொத்தம் 490 கோடி ரூபாயை நிறுத்தி

விடுவதென்பது, அதை நமது மாநில அரசு இழந்துவிடுவதென்பதும் சாதாரணமான விஷயமல்ல!

உடன்பிறப்பே; நீ சற்று எரிச்சலுடன் என்னைப் பார்த்துக்கேட்பது எனக்குப் புரியாமல் இல்லை - ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்குப் பல தலைப்புகளில் மத்திய அரசு அளிக்கும் இதுபோன்ற கோடிக்கணக்கான ரூபாய்க்காக அறிவிக்கப்படும் திட்டங்கள் எல்லாம் வெறும் காகிதத் திட்டங்களாகத்தானே இருக்கின்றன - அ.தி.மு.க.காரர்களும் அதிகார வர்க்கத்தினரும் அமைச்சர்களின் பக்கத் துணையுடன் பங்குபோட்டுக் கொள்ளும் திட்டங்களாகத்தானே இருக்கின்றன - நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கும் பொசியாமல்; புல்லுக்கே அனைத்து நீரும் பாய்ந்து விடுகிறதே! என்று நீ கேட்பாய்! ஆம்; உண்மைதான்! அப்படித்தான் நடக்கிறது!

இருந்தபோதிலும் ஏதோ மலையளவுத் தொகை மாண்புகளுக்குப் போய்ச் சேர்ந்தாலும் - கடுகளவாவது மக்களுக்குப் போய்ச் சேருகிறதே; மத்திய அரசு எடுக்கும் இந்த நிதிநிறுத்தம் என்ற முடிவால் அந்தக் கடுகளவும் கிடைக்காமல் கண்ணீரில் மிதப்பரே மக்கள் என்ற கவலை நமக்கு உண்டல்லவா; அதனால்தான் மத்திய அரசு, தான் அறிவித்த முடிவை உடனடியாகத் திரும்பப் பெற்றதில் நமக்கு ஓரளவு மகிழ்ச்சிதான்!

ஆனால் ஒன்று; அப்படி உடனடியாகத் திரும்பப் பெற்றதற்கு என்ன காரணம்? ஏன், இந்த துக்ளக் தர்பார்? எதற்காக இந்தப் பச்சோந்தித்தனம்?

நிதியையே நிறுத்தி விடுவோம் - நிறுத்தியே விட்டோம் என்று முறையே எச்சரித்ததற்கும்; எச்சரிக்கைக்கேற்ப எடுத்த நடவடிக்கைக்கும் உள்ளாட்சித் தேர்தல்கள் உடனடியாக நடத்தப்பட வேண்டுமென மத்திய அரசு கொண்டுள்ள ஆர்வம்தான் காரணமென எண்ணியிருந்த நமக்கு; இந்த அவசர திடீர் வாபஸ் அறிவிக்கும் உண்மை என்ன?

அரசியல் ஆதாயத்திற்காக; அதுகூட அல்ல; தனது சொந்த நலனுக்காக - நரசிம்மராவ் அவர்கள் இப்படியொரு நாடகமாடியுள்ளார் என்றே கருத வேண்டியுள்ளது.

நிறுத்தி விட்டதாகச் சொல்லி அறிவித்தது; நாடகத்தில் - சத்தியவானை எமன் பாசக்கயிறு போட்டு உயிரைப் பறித்த கட்டம்!

அடுத்த கட்டம் சத்தியவானின் உயிரைத் திரும்ப வழங்கும் கட்டம்!

நாடாளுமன்றத்தில் உள்ள அ.தி.மு.க. எம்.பிக்களின் தயவு தனக்குத் தேவைப்படும் என்ற நிலையில் நரசிம்மராவ்; உயிரை எடுப்பது போல் எடுத்து சத்தியவானுக்கு எமன் மீண்டும் கொடுத்துவிட்டது போலவே இப்போது உதவி நிறுத்த முடிவு திரும்பப் பெறப்பட்டுள்ளது.

ஆனால் உரிய நேரத்தில் எடுக்கப்பட வேண்டிய உயிரை, எடுக்கத் தவறிய குற்றம் எமனைச் சார்ந்து விடுகிறது!

புராணக் கதையில் உயிர் பறிக்கும் பிரச்சினை - ஆனால் இன்று நாட்டு நடப்பில் ஜனநாயகத்திற்கு உயிர் அளிக்கும் பிரச்சினை - பல ஆண்டுகளாகக் கிராமப்புறங்களில், நகர்ப்புறங்களில் மூச்சற்றுக்கிடக்கும் ஜனநாயகத்திற்கு உயிரூட்டும் பிரச்சினை - உள்ளாட்சி மன்றங்கள் மக்கள் பிரதிநிதிகளால் நடத்தப்பட வேண்டுமென்ற பிரச்சினை - ஆனால் இந்தப் பிரச்சினைக்கு உயிரூட்டுவது போல் நடித்துக்கொண்டே - பிரதமர் நரசிம்மராவ்; உள்ளாட்சித் தேர்தல்களை நடத்த முன்வர மறுக்கும் ஜெயலலிதாவின் கருத்தையேற்று; உள்ளாட்சி மன்ற ஜனநாயகத்தின் கழுத்தை நெரித்து உயிரைப் போக்கத் துணிந்துவிட்டார்!

இந்த அழகில் காந்தி கண்ட இராமராஜ்யக் கனவை மேடைகளில் ஒரு சில காங்கிரஸ்காரர்கள் இன்னமும் முழக்கிக் கொண்டிருப்பதுதான் ஆச்சரியம்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

19-02-1995

2244. தாய்ப்பறவை அழைக்கிறது; கூடு திரும்புவீர்!

உடன்பிறப்பே,

1961 ஆம் ஆண்டு தி.மு.கழகத்தைப் பிளந்திடவும் - வீழ்த்திடவும் சிலர் கிளம்பியபோது; திராவிட நாடு இதழில் அண்ணா அவர்கள் தம்பிக்கு எழுதிய கடிதத்தில் மரங்கொத்தியும் குருவியும் என்பதாக ஒரு கதை தீட்டியுள்ளார். அந்தக் கதையை அப்படியே தந்து; உன் சிந்தனைக்கும் மற்றும் இதனைப் படிப்போர் சிந்தனைக்கும் வேலைதர விரும்புகிறேன். முதலில் அண்ணா எழுதியுள்ள கதையைப் படித்திடுக! இறுதியில் என் கருத்தைக் கூறுகிறேன்.

தம்பி!

அதற்கு என்னமோ கோபம் - பாவம்!

காரணம் என்ன கோபத்துக்கு என்றா கேட்கிறாய்? எளிதாகத் தெரிந்துவிடக் கூடியதா, கோபத்துக்கான காரணம்! கொண்டவர்களுக்கே சிலவேளைகளில் தெரிவதில்லை - கண்டவர்களுக்கா தெரிந்து விடும். மேலும் கோபம், அறிவை மாய்க்கும், ஆத்திரத்தைக் கிளப்பும் - அந்த நிலையில், கோபம் கொண்டதற்கான என்ன காரணம் என்று கேட்டால் சொல்லத்தான் முடியுமா, சொல்லத்தான் செய்வார்களா? இயலாதே!

மெத்தப் படித்தவர்கள் என்று தம்மைப் பிறர் நம்பும்படி செய்பவர்களாலேயே, கோபத்தை அடக்கிக்கொள்ள முடிவதில்லை. இது, பாவம் படித்தவர் பட்டியலில் சேராதது! கோபம் கொண்டதற்கான காரணம் என்னவென்று கேட்டால், சொல்லவா போகிறது. மேலும் சிறிதளவு கோபம் வளரும், கீச்சுக் கீச்சென்று கத்தும்!

கொத்தும்! ஓ! சொல்லவில்லையா, உனக்கு - இது ஒரு குருவியின் கதை!!

மரப்பொந்தில், தாய்! பக்கத்துக் கிளையில் இது. கோபமாகத் தாயை அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்தால், தன் பிகுவு கெட்டு விடும் என்ற நினைப்பு - வேறு பக்கமே பார்த்தபடி, உட்கார்ந்திருக்கிறது. தாய், 'எத்தனை பிகுவு என் கண்ணுக்கு' என்று எண்ணியபடி பரிவுடன், பார்க்கிறது.

குருவி, மரங்கொத்தி அல்ல! பழமாகக் கிடைத்தால் கொத்தித் தின்னும் - துண்டு துணுக்கு என்றால், விருப்பம் கொள்ளும் - சிரமமின்றித் தின்னலாம் அல்லவா - அதனால்.

மரங்கொத்தியின் மூக்கு, ஒரு துளைக்கருவி அல்லவா - அந்தப் பெருமை அதற்கு. பறந்து செல்லும், துளைக்கும் - வேறு இடம் பறக்கும். இந்தக் குருவிக்கு அதைக் கண்டதால், ஒரே வியப்பு!! எத்தனை பெரிய மரம் - துளைத்துவிட்டதே! மரம், அசைந்தது ஆடிற்று; இலைகள்தான் உதிர்ந்தனவேயன்றி, மரங்கொத்தி துளைப்பதைத் தடுத்திட முடியவில்லையே, அதனால். செ! இவ்வளவுதானா, இந்த மரம்! இதற்கு இத்தனை பெரிதாக ஓங்கி வளருவானேன்! ஒரு சிறு பறவையின் மூக்குக்குத் தப்ப முடியவில்லை - துளைத்தே விட்டது! உருவம்தான் மிகப்பெரிது; உள்ள வலிவு மிகக்குறைவு!! - என்று நினைத்தது குருவி.

முதலிலே, இந்த நினைப்பு ஒருவிதமான மகிழ்ச்சிகூடக் கொடுத்தது, குருவிக்கு. மரத்தைத் துளைத்தது ஒரு பறவை - நம் இனம்!! - என்பதால் ஒரு மகிழ்ச்சி.

அதனால், குருவி, மரங்களை அலட்சியமாகக்கூடப் பார்க்கலாயிற்று. மரம் என்றால் என்ன, நான் பயப்பட வேண்டுமா!! என் இனத்தில், துளைக்கப்படுகிறது - இந்த மரம்!! இதற்கு, நான் ஏன் பெருமை தர வேண்டும். என்னைக் கண்டல்லவா, மரம் பயப்பட வேண்டும், நடுங்க வேண்டும்! ஓ! ஓ! மரம் ஆடுவது, நடுக்கத்தால்தான் போலும். ஆமாம், பயத்தால் நடுக்கம் ஏற்படுகிறது, மரத்துக்கு. இதை நாம் இதுநாள் வரையில் தெரிந்து

கொள்ளாமலிருந்து விட்டோமே!! - என்றெல்லாம் எண்ணிக்கொண்டது. குருவிதானே! பாவம்!!

இந்த நினைப்பு எழுந்தது முதலில் தாய்க் குருவிக்குப் புரியவில்லை - தெரியவில்லை. குருவி, இரையைத் தின்னும்போது வேகமாகக் கொத்தக் கண்டபோதுகூட, தாய்க் குருவிக்குச் சந்தேகம் வரவில்லை - சரியான முறையிலே, தீனியைக் கொத்தித் தின்னக் கூடத் தெரியவில்லையே, இத்தனை நாளாகியும் - இது எப்படித்தான் பிழைக்கப் போகிறதோ என்று எண்ணித் தாய்க்குருவி கவலைப்பட்டது.

குருவிக்கு மரங்கொத்திக்கு இருப்பது போன்ற துளைக்கருவி தனக்கு இல்லை என்ற நினைப்புக்கூட எழவில்லை. நாமும் பறவைதான் என்ற எண்ணம் மட்டுமே மேலோங்கி இருந்தது. பறவை, மரத்தைத் துளைக்கும் - நாமும் பறவை! - இவ்வளவு தான் அதன் எண்ணம். பாவம், குருவிதானே! வண்டி வண்டியாக ஏடுகளை வைத்திருக்கும் மேதைகளே, இந்த விஷயத்தில் தவறாக எண்ணி நடந்து கொள்ளும்போது குருவிக்குக் குறை அறிவு இருந்ததில் என்ன ஆச்சரியம்.

மரங்கொத்தி வேறோர் மரத்திலே துளை போட்டுக் கொண்டிருந்தது. அதற்குக் கர்வம்! பார்! என் திறமையை! இத்தனை பெரிய மரத்தை நான் துளைத்து விடுகிறேன். தடியன் போல ஓங்கி வளர்ந்திருக்கிறதே தவிர, மரத்தினால் ஏதாகிலும் செய்ய முடிகிறதா, பார்! - என்று கேட்பதுபோல, மரங்கொத்தி துளைப்பதும், சுற்றுமுற்றும் பார்த்து, கழுத்தைப் புடைப்பதும், வெற்றியைத் தெரிவிக்கும் போக்கில், கிறீச்சிடுவதும், மீண்டும், துளைப்பதுமாக இருந்தது. குருவிக்குக் கொள்ளை சந்தோஷம், உற்றுப் பார்த்தது பலமுறை! நாமும் பறவை! நமக்கும் மூக்கு இருக்கத்தான் செய்கிறது!! - என்ற நினைப்பு - உடனே குருவியும் மரத்தைக் கொத்தத் தொடங்கிற்று; துளைக்க முடியவில்லை. குருவிக்கு வெட்கம்! அங்கே பார்த்தால் மரங்கொத்தி துளைக்கிறது! ரோஷம் குருவிக்கு! பலமாகக் கொத்திற்று - மூக்குக் கூடச் சிறிது வலித்தது - மரத்தின் பட்டை கூடப் பெயர்ந்திடவில்லை, பழக்கம்

இல்லாததால். இப்படி இன்னும் ஒரு நாலு கொத்துப் பலமாகக் கொத்தினால், மரத்தைத் துளைத்து விட முடியும் - ஏன் முடியாது? அதோ, நம் இனம் அங்கு துளைக்கிறதே! நாமும் பறவைதானே - என்று எண்ணிற்று - வேகமாகப் பலமாகக் கொத்தலாயிற்று. துளைக்க முடியவில்லை. அதுமட்டுமல்ல, கொத்தியதால், மூக்கு வலித்தது. மேற்கொண்டு, கொத்த முடியவுமில்லை. அங்கோ, மரங்கொத்தி வேறொர் கிளை சென்று! துளைக்கிறது. குருவிக்குக் கோபம்!!

கோபம் கொண்ட குருவியைக் கேலி செய்வதுபோல மரங்கொத்தி சுற்றிச் சுற்றி வட்டமிடுகிறது. மரத்தைத் துளைத்துவிட்டேன்! துளைத்துவிட்டேன்! நானும் பறவை! நீயும் அதே இனம்! என்னால் முடிந்தது! உன்னால் முடியவில்லை!! - என்று கூவுவதுபோலத் தோன்றிற்று குருவிக்கு.

இந்த அவமானத்தைத் தாங்கிக்கொண்டு, நான் பறவை இனம் என்று சொல்லிக் கொள்ள வேண்டுமா! கூடவே கூடாது! பறவை இனத்திலேயே, நானோர் பாவியோ! பரிதாபத்துக்குரிய பாவியாகவா இருப்பது, கூடாது!! - என்று எண்ணிற்று. கோபம் தலைக்கேறிவிட்டது. துளைத்தேவிடுவது என்று, ஆத்திரத்துடன், வேலையை வேகமாக, கோபத்துடன் தொடங்கிற்று. ஏற்கனவே, அலுப்பு - வலி - எனவே, மூக்கு உடைந்தது - வலி தாளமாட்டாமல், குருவி, பொந்துக்குள் சென்றது. தாய்க்குருவி, உனக்கேன் வீண் வேலை! மரங்கொத்தியைப் பார்த்து, உன் மனதிலே வீணான எண்ணத்தை வளர்த்துக் கொண்டது, தவறு அல்லவோ! அதற்கு உள்ள மூக்கு அப்படி - துளைக்கும் கருவியாக இருக்கிறது. உனக்கு ஏது, அந்தக் கருவி! உனக்கு எதற்கு அந்த வேலை? - என்று கேட்பதுபோலப் பார்த்து, சேர்த்து வைத்திருந்த பழத்துண்டைக் குருவியின் வாயில் கொடுத்துத் தின்னச்செய்தது. குருவிக்குக் கோபம் நீங்கிற்று - விவரமும் புரிந்தது.

எதற்காக அண்ணா! குருவி பற்றிய கதை என்று கேட்கிறாயா, தம்பி! வயதாகிறதல்லவா, அதனால் கதை

சொல்லும் போக்கு இருக்கிறது எனக்கு. நானென்ன, கனடா நாட்டு அரசியலைப்பற்றி எழுதப்பட்ட 22 - ரூபாய் விலையுள்ள புத்தகத்தில், 777-ம் பக்கத்தில், ஒன்பதிலிருந்து இருபத்து ஏழாவது வரியில் கோடிட்டு, அதைப் படித்துக்காட்டி, புத்தி புகட்டும் ஆசிரியன் போன்றவனாகத் தலைவன் இருக்கவேண்டும்; மக்களோ மாணாக்கர்களாக இருக்கவேண்டும், பிரம்படிக்கும் தயாராக! - என்று கூறுபவனா! இல்லையே! உன் அண்ணன்! அவ்வளவுதான்!

ஆனால், தம்பி! கதையைப் படிக்கப் படிக்கக் கருத்துகள் ஊற்றெடுத்தபடி இருக்கும்.

ஒவ்வொரு முறை படிக்கும்போதும், புதுப் புதுக் கருத்துக் கிடைக்கும், பல பிரச்சினைகளை விளங்க வைக்கும்.

இந்தக் கதையிலே வருகிறதே குருவி - இதன் போக்கு, ஒரு மரங்கொத்தி செய்வதைத் தானும் செய்யவேண்டும். அப்போதுதான் தனக்குப் பெருமை என்று எண்ணிக் கொண்டது. பாவம் குருவிதானே!

ஆனால் குருவிகளை மட்டுமல்ல, கொல்லும் புலிகளைக்கூடக் கூண்டிலே அடைத்திடவல்ல வீரமும், குவலயத்துக்கே புத்திபுகட்டும் பேரறிவும் கொண்டிருப்பதாக எண்ணம் கொள்ளும் மனிதர்கள்கூட அல்லவா, குருவி வீணான வேலையில், காரணமின்றி ஈடுபட்டதுபோல் ஈடுபடுகிறார்கள்.

வீணான வேலையில் ஈடுபடுவது கூடாது! துளைக்கும் வேலை செய்யவென்றே, மரங்கொத்தி இருக்கிறது. அதைப் பார்த்துவிட்டு, நாமும் அதுபோல் துளைக்க வேண்டும் என்று எண்ணி மூக்கைக் கெடுத்துக் கொண்ட குருவிபோல, மனிதர்களிலும் சிலர் உளர். நாம் அதுபோல் ஆகக்கூடாது என்பதற்காகத்தான், இந்தக் கதை!!

***

உடன்பிறப்பே, நமது அண்ணா அன்றைக்கு எந்தச் சூழ்நிலையில் அவர் எழுதிய கடிதத்தில் இந்தக் கதையைக் குறிப்பிட்டு, மரங்கொத்திகளுடன் குருவிகளும் சேர்ந்து தங்களைக்

கெடுத்துக் கொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்தினாரோ; அதே சூழ்நிலை இன்றும் உருவாக்கப்பட்டுள்ள காலகட்டத்தில் அண்ணா எழுதிய அதே கதை, எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது பார்த்தாயா?

மரங்கொத்தி, மரத்தையே வீழ்த்திவிட முடியும் என்று எண்ணிக்கொண்டு துளைத்துப் பார்க்கிறது. எண்ணற்ற விழுதுகளுடன் கூடிய தி.மு.கழகமெனும் வலிவுமிக்க இந்தமரம், அன்றும் வீழ்ந்திடவில்லை - இன்றும் வீழ்ந்திடவில்லை - வீழப்போவதுமில்லை! மரத்தையே துளைக்கிறதே அந்த மரங்கொத்தி; நாமும் சேர்ந்து துளைத்தால் என்ன என்றோ - அல்லது அந்த மரங்கொத்திபோல நாமும் ஆனால் என்ன என்றோ; நினைத்து மரங்கொத்தியாக மாறிட முனைந்து அதன் விளைவை அனுபவித்த குருவியைத் தாய்ப்பறவை பரிவுகாட்டி அரவணைத்துக் கொள்வதுபோலத்தான் - அன்றைக்கு அண்ணா அவர்கள்; மரங்கொத்திகளை அவற்றின் மனம் போன போக்கில் விட்டுவிட்டு; குருவிகளுக்கு அறிவுரையும் அன்புரையும் கூறி அழைத்துக் கொண்டார்.

துளைக்கும் வேலை செய்வதற்கென்றே மரங்கொத்தி இருக்கிறது; அதைபோலக் குருவியும் ஆகக்கூடாதல்லவா? என்ற கேள்வியின் வாயிலாக அண்ணா எடுத்துரைக்கும் அர்த்தம் பொதிந்த எச்சரிக்கை புரிகிறதல்லவா!

அண்ணாவின் இந்தக் கதையை ஒட்டி நான் விடுக்கும் வேண்டுகோள் இதுதான்:-

மரங்கொத்திகள், மரத்தைத் துளைத்துக் களைத்துப் போகட்டும்! ஆனால் அவற்றைப் போல் ஆகவேண்டுமென்று தடம்மாறிச் சென்ற குருவிகளே! தாய்ப்பறவை அழைக்கிறது; எஞ்சியிருப்போர் உங்கள் கூட்டுக்குத் திரும்பி வாருங்கள்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

24-02-1995

2245. உடன்பிறப்பே; நீ இருக்கவேண்டிய இடம் இதுவே!

உடன்பிறப்பே,

அண்ணாவின் கடிதம் ஒன்றை நேற்று என் கடிதக் குறிப்புடன் இணைத்திருந்தேன். அந்தக் கடிதத்தை அண்ணா எழுதிய அதே காலகட்டம் - அதாவது நண்பர்கள் சம்பத், கவிஞர் கண்ணதாசன் போன்ற சிலர் அண்ணா அவர்களுடன் பகைத்துக்கொண்டு, கழகத்தைவிட்டுப் பிரிந்து புதிய கட்சி தொடங்கும் முயற்சியினூடே, கழகத்தின் முன்னணியினரையும், கழகத்தினர் தங்களின் கண்ணின் மணியாகக் கருதிக்கொண்ட அறிஞர் அண்ணா அவர்களையும் பழிதூற்றித் திருப்பரங்குன்றத்திலே கழக மாநில மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டின் வெற்றி குறித்தும், 1956 இல் திருச்சியில் நடைபெற்ற கழக மாநில மாநாட்டுக்கும் - திருப்பரங்குன்றத்தில் ஐந்தாண்டுக் காலம் கழித்து நடைபெற்ற மாநில மாநாட்டுக்கும் இடையே ஏற்பட்ட துரோகச் செயல்களால் ஏற்பட்ட சோதனைகளில் இருந்து கழகம் மீண்டும் எப்படி இலட்சியப் பேருருவாக நிமிர்ந்து நிற்கிறது என்பது குறித்தும் குன்றின் மேலிட்ட விளக்கு என்ற தலைப்பில் தம்பிக்கு ஒரு நீண்ட கடிதம் அண்ணா எழுதினார். அதன் முகப்புரையை மீண்டும் ஒருமுறை படித்துப் பார்! இதோ; நமது அருமை அண்ணனின் கடிதம் :-

தம்பி!

உரிமையுடன் பெருமிதம் கொள்கிறாய் - உன் புன்னகையிலேயே ஓர் புது எழில் காண்கிறேன் - பனித்துளியுடன் காணப்படும் புதுமலர் உன் கண்கள் - ஆமாம்! வெற்றிக் களிப்புடன் இருக்கிறாய் - வேழத்தின் தந்தத்தை முறித்து, உடலில் பாய்ந்திருந்த வேலினைப் பறித்தெடுத்து மாற்றான் மீது வீசி வெற்றி கண்ட வீரமரபின் வழி வந்தவனன்றோ - இன்று விடுதலைக்

கிளர்ச்சியிலே ஈடுபட்டு, வீறுகொண்டெழுந்து வெற்றிப் பாதையிலே நடை போடுகிறாய் - உன் கைவண்ணமாக, கருத்தோவியமாக, எழுச்சி வடிவமாகத் தோற்றமளித்த, திருப்பரங்குன்றம் மாநாடு, உன்னையும் என்னையும், மரபின் மாண்பையும், தாயகப் பெருமையையும் மறவாத அனைவரையும், களிப்புக் கடலில் நீந்திடச் செய்தது. எப்படி, அண்ணா! என் பணி? - என்று கேட்கிறாய். என் சொல்வேன், தம்பி! உன்னிடம் இத்தகைய அரும் ஆற்றல் நிரம்ப இருப்பது அறிந்துதானே, நாடு மீட்டிடும் நற்பணியில் ஈடுபட, நான் துணிந்தது.

தம்பி! திருப்பரங்குன்றம் மாநாடு, நமது இயக்க வரலாற்றிலே நிச்சயமாக ஒரு திருப்புமுனை என்பதை, நிகழ்ச்சிகளையும் நிலைமைகளையும் ஆராய்வோர் அனைவரும் உணருவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் பெரியதோர் விபத்து ஏற்பட்டுவிட்டது, என்று மாற்றார் இகழ்ந்துரைக்கும் நேரம்!

தி.மு.க. சுடுகாடு நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்று, அரசாளும் இடம் தகுதி என்று கூற மனம் இடம் தரவில்லை பெற்றதனால், ஆணவமாக அமைச்சர்கள் பேசும் காலம்!

உட்குழப்பம் மூட்டிவிட்டோம், இனி ஒருவரைஒருவர் அடித்துக்கொண்டு சாக வேண்டியதுதான், என்று சாபம் கொடுக்கும் போக்கிலே, மாற்றார்கள் தூற்றி நிற்கும் நாட்கள்.

இத்தகைய நேரத்திலல்லவா, நாம் கூடினோம் - திருப்பரங்குன்றத்தில்.

தம்பி! திருச்சியிலே நடைபெற்ற மாநில மாநாட்டுக்காக, நாம் எடுத்துக்கொண்ட முன்னேற்பாடுகள், செய்த விளம்பரங்கள், திரட்டிய ஆதரவுகள்போல, இம்முறை எதுவும் செய்ய முடியாத நிலை - அறிவாய்.

இயக்கத்திலே ஒரு வெடிப்பு உண்டாக்கி, வீழ்த்தும் சதி திட்டமிடப்பட்டதோ, அல்லது கேடான நிலைமை அப்படி ஒரு விளைவுக்கு வழிகோலியதோ நான் அறியேன்;

எனினும் ஏற்பட்ட நெருக்கடி, என் நெஞ்சுக்குப் பெரிய அதிர்ச்சியாகவும், நமது தோழர்களுக்குப் பெருத்த வேதனையாகவும் இருந்தது என்பதை எவரும் மறுக்க முடியாது.

அச்சு முறிந்துவிட்டது என்று அச்சமூட்டியோரும், பயிர் அழிகிறது என்று பச்சாதாபம் காட்டினோரும், கழகம் கலைகிறது என்று கலக்கமூட்டியோரும் பலர்.

இரண்டு திங்கள், இதழ்கள் எல்லாம், இந்தச் சேதிகளையே தாங்கிக் கொண்டு வந்தன.

விடிந்ததும், இன்று என்ன தூற்றலோ? இன்று எவர் அறிக்கையோ? எவருடைய அறைகூவலோ? என்று நினைத்தவண்ணமே, இதழ்களைப் பிரிக்க முடியும் என்ற நிலைமை.

இப்படி ஒரு தாக்குதல் இதுவரையில், எந்த இயக்கத்தின் மீதாவது தொடுக்கப்பட்டதுண்டா என்று நானும் எண்ணி எண்ணிப் பார்க்கிறேன், ஒன்றுகூட எனக்குத் தெரியவில்லை.

மனமுறிவுகள் ஏற்பட்டதுண்டு - பிளவுகள் காணப்பட்டதுண்டு - முகாம்கள் அமைக்கப்பட்டதுண்டு - புகார்கள் வெளியிடப்பட்டதுண்டு - ஆனால், அப்பப்பா! பகை, இந்த அளவுக்குக் கக்கப்பட்டதுண்டா? எப்போதாகிலும்? எந்தக் கட்சியிலாகிலும்?

காந்தியாருக்கும், சுபாஷ்சந்திரபோசுக்கும் மூண்ட பெரும் தகராறுகூட, ஊரூருக்கும் முகாம்கள் அமையவும், தலைவர்கள் அறிக்கைகள் விடவுமான நிலைமையைத் தான் ஏற்படுத்திற்றே தவிர, பழிச்சொல், இழிமொழி, பதற பதறத் தூற்றுவது, பகையைக் கக்குவது போன்ற சிறுமைச் செயல்கள் தலைதூக்கவில்லை. நம்மை நோக்கியோ, நச்சரவினும் கொடிய பழிச்சொற்கள், நாராசத்திலே தோய்த்தெடுக்கப்பட்ட இழிமொழிகள், நாளைக்கு ஒரு புகார், வேளைக்கு ஒரு குற்றச்சாட்டு - வீசப்பட்டன.

நேசம் முறிந்ததே, பாசம் அற்றுப்போய் விட்டதே, தொடர்பும், தோழமையும் அறுபட்டுப் போகின்றனவே கூடிப் பணியாற்றிய இனிய நாட்கள் முடிவுற்றுப் போகின்றனவே, கண்டதும் களிப்பு, பேசும்போது மகிழ்ச்சி என்று இருந்த சுவைமிகு நிலைமை நாசமாக்கப்படுகிறதே என்பதை எண்ணியே, என் மனம் படாதபாடு பட்டுக்கொண்டிருக்கும்போது, இருபது முப்பது ஆண்டுகள் எல்லாத் துறைகளிலும் பகை மூண்டு மூண்டு, பார்த்த உடனே, முகம் எள்ளும் கொள்ளும் வெடிக்கும் அளவுக்குக் கடுகடுப்பாகத்தக்க கசப்புணர்ச்சி கப்பிக்கொண்டால், எப்படி எப்படி இழித்தும் பழித்தும் பேசிக்கொள்வார்களோ, எதிர்ப்பு மூட்டிக் கொள்வார்களோ, எதிரிகளுடன் கூடிக்கொண்டாகிலும் அழித்து விட முனைவார்களோ, அப்படி அப்படி அல்லவா, விலகிய விநாடியே வேகம், விறுவிறுப்பு, பகை கக்குவதிலே காட்டத் தொடங்கினார்கள்.

அதை எண்ணும்போதுதானே, தம்பி! இவர்கள் நெடுங்காலமாகவே, இவ்வளவு பகை உணர்ச்சியை மனத்திலே குவித்து வைத்துக்கொண்டிருந்தார்கள், சமயம் வரட்டும் வரட்டும் என்று பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்பது புரிகிறது. நானோர் ஏமாளி - துளியும் இப்படி இருக்கக் கூடும் என்ற ஐயப்பாடு எனக்கு எழவே இல்லை! கடைசி விநாடி வரையில், கழகத்தின் கட்டுக்கோப்புக்காக வாதாடுகிறார்கள் - விதிமுறைகளில் மாற்றம் காண விழைகிறார்கள் - என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தேன் - சிறிதளவுகூட என்னைப் பற்றியோ, அவர்கள் ஏற்றுக்கொண்டிருந்த ஏற்புடைய கொள்கை பற்றியோ, இத்தனை பகை, அவர்கள் உண்ணத்தில் புற்றரவுபோல இருக்கிறது என்று நினைக்கவே இல்லை.

தேக்கி வைக்கப்பட்ட வெள்ளம், கரையிலே சிறு விரிசல் ஏற்பட்ட உடனே, அந்த வழியாகப் புகுந்து விரிசலை உடைப்பு ஆக்கி, கரையைப் பெயர்த்துக் கொண்டு வெளியே பாய்ந்து, சுற்றுப்புறம் முழுவதையும் வெள்ளக்காடாக்கி, மாடுமனை அழித்து, மக்கள் கூட்டத்தைப் பாழ்படுத்தி, வயல்களை

நாசமாக்கி, வாழ்வைக் குலைப்பது போலல்லவா வெறுப்புணர்ச்சி இருந்திருக்கிறது, இந்த அளவு; இன்று வெள்ளமாக வெளியே பாய்கிறது! இதை நான் துளிகூட எதிர்பார்க்கவே இல்லை. அதனால், என் வேதனை மற்றவர்க்குள்ளதை விடப் பன்மடங்கு அதிகம். அந்த நிலையிலே மாநாடு என்ற அறிவிப்பு, எனக்கு மகிழ்ச்சியையும் அளிக்கவில்லை, அதற்கான முன்னேற்பாடுகளிலே ஈடுபடும் ஆர்வத்தையும் நான் போதுமான அளவு பெறவில்லை.

ஜூலை 13-ந் தேதி மாநாடு - தம்பி! நான் ஜூலை 9-ந் தேதிவரையில், வடாற்க்காட்டிலே கூட்டங்களில் கலந்துகொண்டிருக்கிறேன். பொருளாளர் கருணாநிதி மாநாட்டு அமைப்பாளர் அலுவலையும் சேர்த்துப் பார்க்க வேண்டி நேரிட்டது. கலைக்காட்சிப் பொறுப்போ நண்பர்கள் பார்த்தசாரதி, இராஜாராம், பொன்னுவேல், செழியன் ஆகியோரிடம்; நண்பர் மதி, நடராசன், நாவலர் ஆகியோர் மாநாட்டுக்கான அறிவிப்புகளை, அலுவல்களைக் கவனித்துக்கொண்டிருந்தனர். மதுரைத் தோழர் முத்துவுடன், மாவட்டத் தோழர்களும், அன்பிலும் மன்னையும்! நானோ, ஊரூருக்கும், தர்மலிங்கம் எம்.பி. அவர்களால் இழுத்துச் செல்லப்பட்ட நிலையில்!

நடைபெறுவதோ, நெருக்கடி ஏற்பட்ட நிலையில் பொது மாநாடு! எண்ணி நாலு நாட்கள்கூட, நான் அந்த மாநாடு குறித்து ஏதும் செய்வதற்கு இல்லாமலே போய்விட்டது - எனினும், மாநாடு, எழிலும் ஏற்றமும், பயனும் சுவையும் மிக்க முறையிலே, நடந்தேறித் திராவிடத்துக்குப் புதியதோர் எழுச்சியை உண்டாக்கிற்று.

எங்கெங்குக் கால் நடுவது என்பதிலே இருந்து எந்த இடத்திலே எந்தப் படம் இருக்க வேண்டும் என்பது வரையிலே, திருச்சி மாநில மாநாட்டிலே, நான் கவனித்துக் கொண்டேன். மதுரையிலோ உள்ளே நுழைகிறவரையில், கொட்டகையின் அளவோ, வகையோ, அதன் வண்ணமோ எனக்குத் தெரியாது. மாநாட்டு வேலைகளுக்கும் எனக்கும் அவ்வளவு தொடர்பற்ற நிலைமை! இருந்தால் என்ன? மாநாடு

காண்போர் களித்திடும் சீருடன் நடைபெற்றது. காருலாவிற்று - சீர்கெடக்கூடிய மழையாகிவிடவில்லை - வெப்பத்தைத் தணித்திடும் குளிர் காற்றளிக்கும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டாள், இயற்கை அன்னை! இந்த நிலையினின்றும், நானோர் பாடம் பெற்றேன்.

நாம் கவனிக்காவிட்டால், கருத்துடன் காரியமாற்றாவிட்டால், செம்மை ஏற்படாது என்ற எண்ணம், அகந்தையளவு எனக்கு எப்போதும் எழுவதில்லை என்றாலும், அச்சம் தரத்தக்க அளவுக்கு எழுவதுண்டு. இதைச் செய்ய வேண்டுமே, அதை இப்படி அமைக்க வேண்டுமே எதை எதை எப்படி எப்படிக் கெடுத்துவிடுவார்களோ என்றெல்லாம், ஒரு பதைப்பு, பரபரப்புணர்ச்சி ஏற்படும். அதனால், எல்லாக் காரியத்திலும் ஏதேனும் ஓர்விதமான தொடர்பு இருக்கவேண்டும் என்று துடிப்பதுண்டு! அப்படித் தொடர்பு இருப்பதனால்தான், காரியம் செம்மையாக நடக்கிறது என்ற நினைப்பும் உண்டு - மறைப்பானேன்!!

ஆனால், தம்பி! இம்முறை நடைபெற்ற மாநாடு, எனக்கிருந்துவந்த அந்த எண்ணம் எவ்வளவு தவறானது என்பதை நான் உணரச் செய்தது.

தென்னங்கீற்றிலே அணில் அமர்ந்திருக்கும்!
காற்றடிக்கும்! கீற்று ஊஞ்சலாடும்!

பார்த்திருக்கிறாயல்லவா? அப்போது, அந்த அணில், கீற்றினை ஆடவைப்பது தான்தான், என்று எண்ணிக்கொள்ளுமோ என்னவோ - நடைபெறுகிற காரியத்தில் ஒரு தொடர்பு இருந்தால், அந்தக் காரியத்தை நான் செய்வதாக, எனக்கு ஒரு நினைப்பு உண்டு. அது தேவையற்றது என்பதைத் தெளிவாக்கும் வகையிலே, நான் தொடர்பு கொள்ள முடியாதிருந்தும், மாநாடு சம்பந்தமான எல்லா நிகழ்ச்சிகளும் மிகச் செம்மையாக நடைபெற்றிருக்கின்றன.

தம்பி! இதன் உட்பொருள் என்ன, தெரிகிறதல்லவா? நடுநாயகர்களின் திறமையால் மட்டுமே, நமது இயக்கம் வாழ முடியும், வளர முடியும், என்பது தவறான தத்துவம்;

பல இலட்சக்கணக்கானவர்களின் அறிவாற்றலால், உழைப்பினால், வடிவமெடுத்துள்ள இயக்கம், தன்னைத்தானே இயக்கிக் கொள்ளவும், மற்றவர்களை இயங்க வைக்கவுமான ஓர் நிலையை, வலிவை, தன்மையைப் பெற்றுவிட்டது.

இந்தப் பாடம் எனக்குக் கிடைத்ததைப் போலக் கிடைத்திருந்தால், ஒருவேளை, விலகி வீறாப்புப் பேசுவோர் தன்னடக்கம் கொண்டிருக்க முடியுமோ, என்னவோ!!

மாநாட்டு வெற்றி, நிச்சயமாக, ஏற்கனவே இருந்து வந்த தவறான எண்ணத்தைப் போக்கியதுடன், இயக்கத்திடம் எனக்கு முன்பு இருந்ததைவிட அதிகமாக மதிப்பும் நம்பிக்கையும் கொள்ளச் செய்தது.

வீரனுடைய, ஆற்றலின் காரணமாகத்தான், அம்பு பாய்கிறது! ஆனால், விடுபட்ட அம்புக்கு, செலுத்துபவனிடம் உள்ளதைக்காட்டிலும், வேகமும் துளைக்கும் சக்தியும் ஏற்பட்டு விடுகிறது அல்லவா? அம்பினை எய்துவிட்டு, எய்தவனே முயன்றாலும் அதன் வேகத்தைத் தடுக்க, கெடுக்க, மடக்க முடியாது அல்லவா?

தம்பி! நான் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் ஒவ்வோர் அளவு, இயக்கம் வளர, வகையும் வடிவமும் பெறத் துணை நின்றோம். நமது கூட்டு முயற்சியின் விளைவுதான், தி.மு.க. ஆனால், அந்த அமைப்பு செம்மைப்பட்டதும், நாமே கண்டு வியக்கும் நிலை ஏற்பட்டுவிடுகிறது. அதிலே, நமது பங்கு இது, அதன் தரம் இத்தகையது என்று, பிரித்தெடுத்துக் காட்ட இயலாது - உரிமை கொண்டாடுவதும் பொருளற்றதாகும்.

வண்ணக் கலயங்களில் உள்ள சிவப்பும் பச்சையும், நீலமும், மஞ்சளும், கருப்பும் பிறவுமான வண்ணங்கள் தூரிகை கொண்டு ஓவியம் வரைவோனின் திறமையினால், வானமாகி, வாவியாகி, மலராகி, மாதாகி, கனியாகி, கிள்ளையாகி, அருவியாகி அல்லியாகி விடுகிறது. கலயத்தில் இருந்தபோது,

வெறும் வண்ணக்குழம்பு! ஓவியமான பிறகோ, புத்தம் புதிய வடிவங்கள்! வண்ணக் குழம்பின்றி ஓவியம் இல்லை! உண்மை! எனினும், ஓவியமான பிறகு, வண்ணக்குழம்பு என்னால்தான் இவையாவும் என்று உரிமை கொண்டாடவா முடியும்?

நம் உழைப்பு, தம்பி, அந்த வண்ணக் குழம்புக்கு ஒப்பிடலாம்! ஓவியன் நிலையில் உளது காலக்கரம்!!

காலக்கரத்தின் வேலை திறத்தால், வடிவம் பெற்றுள்ள திராவிட முன்னேற்றக் கழகம், தேர்தலில் ஈடுபட்டு, பதவி பிடிக்கும் அரசியல் சூதாட்டத்துக்காக அமைக்கப்பட்ட அரசியல் கட்சியாக இருந்தால், அப்போது, மேட்டுக் குடியினர், மேடை அதிரப் பேசுவோர், கூடுவிட்டுக் கூடு பாய்வோர், குலவிக் கெடுக்கவல்லோர், சிண்டு முடிந்துவிடுவோர், சீமான்களை வலைபோட்டு இழுக்கத் தெரிந்தோர், இருபொருள் தரும் இலட்சியம் கூறுவோர் எனும் தரத்தினர் தேவைப்படுவர்.

எவரிடம் இரும்புப் பெட்டி அல்லது மற்றவர்களின் இரும்புப் பெட்டியைத் தனதாக்கிக் கொள்ளும் தந்திரம் இருக்கிறதோ அவர், கட்சிக்குக் கர்த்தாவாகிட வேண்டிவரும். அவருடைய ஆதரவு இருந்தால் மட்டுமே கட்சி வளரும், வெற்றி கிட்டும். அவர் விலகினாலோ, அல்லது அவர் செல்வம் கரைந்து போய்விட்டாலோ, கட்சி கருகும்.

அரசியலில் உள்ள, விளைந்த காட்டுக் குருவிகள், அப்படிப்பட்ட கட்சியில் பசையும் உருசியும் உள்ள வரையில், இடம்பெற்று இருக்கும்; பசையும் உருசியும் உலர்ந்தால், பறந்தோடும் வேறோர் பசை தேடி.

எவருக்கு என்ன விலை? யாரைக் கொண்டு யாரை வீழ்த்தலாம்? எவரெவருக்குள்ளே பகை உளது? - என்று மோப்பம் பிடிக்கத் தெரிந்தவர்கள் அப்படிப்பட்ட கட்சிக்கு நடுநாயகர்களாகக்கூடும்.

***

உடன்பிறப்பே, மதுரை திருப்பரங்குன்றத்தில் நடந்தேறிய எழுச்சியும் உணர்ச்சியுமிகுந்த மாநில மாநாடு அண்ணா

அவர்களின் மகிழ்ச்சிக்குத் தூண்டுகோலாயிற்று என்பது மட்டுமல்ல; இந்த இயக்கத்திற்கு வந்த சோதனைகளுக்கும் இனி வர இருக்கும் சோதனைகளுக்கும் ஒரு தீர்க்க தரிசனமான கடிதத்தை நெஞ்சு நெக்குருக அவர் தீட்டியதற்கும் தூண்டுகோலாக அமைந்தது!

உடன்பிறப்பே, அண்ணா அவர்களின் ஆதங்கத்தையும் அதே நேரத்தில் அவர் கொண்ட அசைக்க முடியாத உறுதியையும் நம்பிக்கையையும் இக்கடிதம் மூலம் அறிந்து; ஆகா! நாம் இருக்க வேண்டிய இடத்தில்தான் இருக்கிறோம் என்ற இன்ப உணர்வை நீ பெறுவாய்! பெறுகிறாய்! உண்மையிது!

இருக்கவேண்டிய இடத்தில் இல்லாமல் - ஒரு நிலை நில்லாமல் உள்ள உடன்பிறப்புகள் சிலர் சிந்தித்து முடிவெடுக்கவும் அண்ணாவின் இந்தக் கடிதம் பயன்படுமல்லவா? பயன்படவேண்டுமென்று விரும்புகிறேன்!

பகுத்தறிவு - சுயமரியாதை - திராவிட இயக்கங்கள் ஆகியவற்றின் பரிணாம வளர்ச்சி என்று கூறிக்கொண்டு, பெரியாரை - அண்ணாவை - அவர்தம் கொள்கை கோட்பாடுகளைக் குழிதோண்டிப் புதைத்துக்கொண்டு - தமிழ் நிலத்தையும் ஊழல் குப்பை மேடாக ஆக்கிக்கொண்டிருக்கும் ஊதாரித்தனமும் - ஆணவமும் மிகுந்த ஒரு தர்பாரைத் தட்டிக் கேட்க; உடன்பிறப்பே; நீ இருக்கவேண்டிய இடம் இதுதான் என்றுரைக்க உன் சகோதரனுக்கு உரிமையில்லையா என்ன?

அன்புள்ள,

மு. கருணாநிதி

25-02-1995

2246. "சின்னத்திரை" - பார்வதியைக் காணவில்லை!

உடன்பிறப்பே,

சின்னத் திரைக்கான படங்கள் இப்பொழுது ஏராளமாகத் தயாரிக்கப்படுகின்றன அல்லவா; அந்த வரிசையில் இதோ ஒரு படம்; எந்த சின்னத்திரையிலும் வெளியிடுவதற்காகத் தயாரிக்கப்பட்டதல்ல - முழுப்படமுமல்ல; உன் போன்றோர் எண்ணத் திரையில் நிழலாடட்டும் என்பதற்காக மட்டுமே ஓரிரு காட்சிகள்; இதோ! கண்டு களிப்பீர்களோ; அல்லது முகஞ்சுளிப்பீர்களோ; நானறியேன்! படம் ஓடுகிறது, பார்த்திடுக!

முதற்காட்சியாக திருவெட்டாறு கோயில் கோபுரம் - கேமரா, கோபுர வாசலில் நுழைகிறது. கோயில் மணி புயல் காற்றில் அசைந்தாடுவது போல பயங்கரமாக ஆடுகிறது. ஆனால் மணியில் ஒலி எழவில்லை. மணியை விடுத்து கேமரா, கர்ப்பக்கிரகத்திற்குள் வியாப்பிக்கிறது. அனந்தசயனம் கொண்டிருந்த ஆதிகேசவப் பெருமாள் அலறியடித்துக் கொண்டு எழுந்து உட்காருகிறார்.

அய்யோ! போன வருஷம் இரண்டு கோடி; இந்த வருஷம் ஒன்றரைக் கோடியா? கொள்ளை! கொள்ளை! பெருமாள் அலறுகிறார். அவருக்குப் படுக்கையாக இருந்த ஆதிசேஷன் எனும் பாம்பு, அனந்த சயனப் பெருமாளுக்கு எதிரே வந்து வணங்கி நின்று அய்யனே! தாங்கள் ஆழ்ந்த நித்திரை கொண்டதால் வந்த விளைவு இது! எனப் பவ்யமாகக் கூறுகிறது. ஆதிசேஷனே! நான்தான் தூங்கினேன்; நீ எனக்குப் படுக்கையாகவும் பாதுகாப்புக் குடையாகவும் இருந்து விழித்துக் கொண்டே கிடந்தாயே! அந்த வீணர்கள் நுழையும்போது எப்படிப் பொறுத்துக் கொண்டிருந்தாய்! ஆயிரம் நாக்குகளாயிற்றே உனக்கு! ஒரு நாக்கினால் திருடன் திருடன் என்று கூச்சலிட்டிருக்கக் கூடாதா? என்று கோபமாகக்

கேட்கிறார் ஆதிகேசவப் பெருமாள்! அய்யனே! என் குரல் கேட்டு நீங்கள் விழித்துக் கொண்டால் என்ன செய்வது என்று பயந்தேன்? ஆனது ஆகிவிட்டது பிரபூ; அடுத்து நடக்க வேண்டியதைக் கவனிப்போம்! என அடக்கமாகப் பதில் கூறுகிறது ஆதிசேஷன்.

ஆதிகேசவன் :-

அடுத்து என்ன நடக்க வேண்டும்?

ஆதிசேஷன் :-

போலீசுக்குப் புகார் கொடுக்கலாம்; அதுவும் உடனடியாக!

ஆதிகேசவர் :-

போனமுறை 1992ல் இரண்டு கோடி ரூபாய் கொள்ளை போனபோது போலீசில் கொடுத்த புகார் என்ன ஆனது? மூணு வருடம் ஆகிறது; இன்னும் குற்றப் பத்திரிகையே தயாரிக்கவில்லையே - இப்போது புகார் கொடுத்தாலும் அந்தக் கதைதான் நடக்கும். அதனால் நாம் உடனே சென்று சிவபெருமானிடம் முறையிடலாமென்று கருதுகிறேன். என் கருடவாகனம் எங்கே?

ஆதிகேசவர் வாய் மூடுவதற்குள் ஙொய் என்ற ஒரு பின்னணி இசையுடன் கருடன் பறந்து வந்து ஆதிகேசவப் பெருமாளுக்கு முன்னால் நிற்கிறது. கருடனைப் பார்த்து ஆதிசேஷன் சற்று நடுங்கினாலும்; பெருமாளுக்குப் பக்கத்திலே இருக்கிறோம் என்ற தைரியத்தில் என்ன கருடா சுகமா? என்று ஆணவமாகக் கேட்கிறது. கருடன் சிரித்துக் கொண்டே இருக்குமிடத்தில் இருந்தால் எல்லோரும் சுகம்தான் என்கிறது. கருடாழ்வாரே! என்று ஆதிகேசவப் பெருமாள் சற்று அதட்டலான குரலில் கூப்பிடவே; கருடாழ்வார் அடியேன்! உத்திரவுக்குக் காத்திருக்கிறேன் என்கிறார். பெருமாள், கருடனின் மீது ஏறி உட்காருகிறார். கருடன் சிறகடித்துப் பறக்கத் தொடங்குகிற காட்சியிலிருந்து வான்பரப்பில் ஹெலிகாப்டர் ஒன்று பறந்து செல்வது காட்சியாகிறது. அந்த ஹெலிகாப்டர் கைலாசத்தில் இறங்கியதும் பழையபடி கருட வாகனமாகிறது. அதிலிருந்து ஆதிகேசவப் பெருமாள் பரபரப்புடன் இறங்குகிறார். கைலாசத்தின் முகப்புவாயிலில் ஆதிகேசவப் பெருமாள் நுழைந்ததும்; நமஸ்தே! என்று வணங்கி வரவேற்கிறார் நந்திதேவர்!

ஆதிகேசவர் :-

நந்திதேவா! பரமசிவனாரை, நான் உடனடியாகப் பார்க்கவேண்டும்! பரபரப்பான தகவலொன்று. பலகோடி ரூபாய்க்கு என் கோயிலில் கொள்ளை நடந்துவிட்டது. சிவனார் எங்கே இருக்கிறார்?

நந்திதேவர் :-

அய்யனே! சிவபெருமான் சில நாட்களாகக் கைலையம்பதியிலேயே இல்லை.

ஆதிகேசவன் :-

அப்படியா? எங்கே போய்விட்டார்?

நந்திதேவர் :-

வாகனமாக நான்கூட வேண்டாமென்று சொல்லிவிட்டு பாதயாத்திரையாகவே பார்வதி தேவியாரைத் தேடிக் கொண்டு போய்விட்டார்!

ஆதிகேசவர் :-

என்ன? பார்வதி தேவியைக் காணவில்லையா? சிவபெருமானிடம் தேவியாருக்கு ஏதாவது கோபமா?

நந்திதேவர் :-

ஆமாம் பிரபு; அசாத்திய கோபம்!

ஆதிகேசவர் :-

ஏன்? எதற்காக?

நந்திதேவர் :-

பார்வதிதேவி பரமசிவனாருடன் கைலாசத்தில் இருக்கும்போதே; பூலோகத்தில் போய் ஒரு பெண் முதலமைச்சராக அவதரித்துவிட்டார் என்று தமிழ்நாடு முழுதும் கட்-அவுட்டும் வைத்து, போஸ்டர்களும் ஒட்டி விட்டார்களாம்...

நந்திதேவரும் ஆதிகேசவரும் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும்போதே, அவர்கள் மனக்கண்களில்

தெரியும் காட்சியாக பூவுலகில் தமிழ் நாட்டில் பார்வதிதேவி உருவத்தில் முதலமைச்சரின் கட்-அவுட்களும் போஸ்டர்களும் காட்சியாகின்றன. கடற்கரையில் கட்டப்பட்டுள்ள அந்தப் பார்வதி தேவி படத்தின் அருகே சில கார்கள் வந்து நிற்கின்றன. அவற்றிலிருந்து பத்துப்பதினைந்து அமைச்சர்கள் வந்து இறங்குகிறார்கள். இறங்கியவர்கள் அந்தப் படத்துக்கு நேரே தரையில் விழுந்து வணங்குகிறார்கள். அங்கிருந்து கேமரா பல திசைகளுக்கு நகருகிறது. சில அமைச்சர்கள் மண்சோறு சாப்பிடுகிறார்கள். சிலர் ஆலயங்களில் அங்கப்பிரதட்சணம் செய்கிறார்கள். சில அமைச்சர்கள் தீ மிதிக்கிறார்கள். மீண்டும் கைலாசத்தில் நந்திதேவர் பேசுகிறார்.

நந்திதேவர் :-

இப்படிப் பிறந்த நாள் என்ற பெயரால் பார்வதிதேவியின் அவதாரம் என்று சொல்லிக் கொண்டு ஒரு பெண், பாமர மக்களை ஏமாற்றுகிறார். இதைப் பரமசிவன் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கிறார் என்ற பதற்றத்தில்தான் தேவியார் சிவனாருடன் சண்டை போட்டுக்கொண்டு வெளியேறிவிட்டார்.

ஆதிகேசவன் :-

அதற்கு சிவன் என்ன செய்ய முடியும்? உண்மையான பக்த சிரோன்மணிகள் அல்லவா அதைக் கண்டித்திருக்க வேண்டும்.

நந்திதேவர் :-

போலீசார், உங்கள் கோயில் திருட்டைக் கண்டுபிடிக்கவில்லையென்றுதானே சிவனிடம் முறையிட வந்துள்ளீர்கள்; அதுபோலத்தான் பார்வதிதேவியார் சிவனாரிடம் முறையிட்டுக் கோபித்துக் கொண்டு கிளம்பிவிட்டார்!

ஆதிகேசவர் :-

அந்தப் பெண் முதலமைச்சர்தான்; ஓர் அறிக்கையே விட்டு இனிமேல் தன்னைத் தெய்வத்தைப் போலப் படம் போட்டு வர்ணனைகள் செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொண்டிருக்கிறாராமே!

நந்திதேவர் :-

கன்னி மேரித்தாய் மாதிரி பெண் முதலமைச்சரைப் படம் போட்டு ஒட்டிட்டாங்க! கிறிஸ்தவர்கள் சீறி எழுந்தார்கள்! நாலாத்திக்கிலும் எதிர்ப்பு! வேற வழியில்லாம அந்த அம்மா அறிக்கை விட்டிருக்காங்க! கடந்த மூணு வருஷமா அந்த முதலமைச்சரை மூகாம்பிகை மாதிரியும், முருகனுடன் இருக்கும் வள்ளி மாதிரியும், கருமாரியம்மன் மாதிரியும் - காளிகாதேவி மாதிரியும் - பார்வதி தேவி மாதிரியும் படம் போட்டு ஒட்டிகிட்டுத்தான் இருக்காங்க - பத்திரிகைகளிலேகூட முழுப்பக்க விளம்பரம் கொடுத்துக்கிட்டுத்தான் இருந்தாங்க - முதலமைச்சரான அந்த அம்மாவின் பாதங்கள் வேதங்களுக்கு நிகரானவை என்று பத்திரிகைகளிலே அவுங்க கட்சி அமைச்சர்களும், பிரமுகர்களும் விளம்பரம் செஞ்சிகிட்டுத்தான் இருந்தாங்க; அப்போதெல்லாம் வாய் திறக்காம, அதை ஊக்கப்படுத்திக்கிட்டு இருந்த அந்த முதலமைச்சர் - இந்துக்கள்தானே அவர்கள் சாதாரண ஜந்துக்கள் என்று அலட்சியப்படுத்திய அந்த முதலமைச்சர் - இப்போது கிறிஸ்தவ சமுதாயம் கிளர்ந்து எழுந்தவுடனே; இந்தப் பூனையும் இந்தப் பாலை குடிக்குமா? என்கிற மாதிரி, தனக்கு எதுவுமே தெரியாதுன்னு வேஷம் போடுறார் -

ஆதிகேசவர் :-

நந்திதேவரே, நான்; என் கோயிலிலே காணாமற் போன பல கோடி ரூபாய் நகைகளைப் பற்றிச் சொல்ல இங்கே வந்தால்; இங்கே பார்வதி தேவியையே காணவில்லை என்கிறீர்!

இருவரும் பேசிக் கொண்டிருக்கும்போது கைலாசத்தின் சங்குகள் ஈரேழு பதினாலு உலகமும் அதிர்வதுபோல முழங்குகின்றன. நந்தி தேவர், குதித்தோடிச் சென்று மத்தளத்தை எடுத்துக் கொட்டுகின்றனர். சங்குகளையும் மத்தளத்தையும் படம்பிடித்த கேமரா கைலையங்கிரியின் பனிபடர்ந்த படிக்கட்டுகளில் இரண்டு முரட்டு பாதங்கள் நடந்து வருவதைக் காட்சியாக்குகின்றன. சுடலைப் பொடி, ஒரே புகைமூட்டமாகத் தோன்றுகிறது. நடந்து

வரும் கால்களில் இருந்த கேமரா, மேலே உயர்கிறது. சிவபெருமான் சோக முகத்துடன் வருகிறார். ஆதிகேசவப் பெருமாளைக் கண்டதும் சிவனின் சோகம் வெடித்துக் கிளம்புகிறது. மைத்துனரே! என்று இருவரும் ஒரே குரலில் அழைத்தவாறு சோகம் பீறிடத் தழுவிக் கொள்கிறார்கள். பார்வதி எங்கே? என்ன ஆனாள்? நீங்கள் தேடிப் போனதாக நந்திதேவர் சொன்னாரே? ஆதிகேசவப் பெருமாளின் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் எம்பெருமான் எச்சிலை விழுங்குகிறார். அவர் கண்கள் அருவிகளாகின்றன.

ஆதிகேசவர் :-

ஆலகால விஷத்தை நீங்கள் விழுங்கிய போது அதைத் தடுத்துக் காத்த என் தங்கை பார்வதி இன்னேரம் இங்கிருந்தால்; நீங்கள் எச்சில் விழுங்குவது கண்டு பதைத்துப் போயிருப்பாளே! மைத்துனரே! என்ன ஆனாள் அவள்?

ஆதிகேசவன், சிவபெருமானைத் தழுவிக் கொண்டு இருவரும் சேர்ந்து அழுதிட; அந்தக் கண்ணீர் வெள்ளம் கடலாக மாறுகிறது - திருப்பாற் கடலைத் தேவர்களும் அசுரர்களும் கடைகிற காட்சி - அமிர்தமும் விஷமும் வெளிப்படுகிற தந்திரக் காட்சி - அமிர்தத்தை தேவர்களுக்கு அளித்துவிட்டு, சிவன் விஷத்தை அருந்துகிற காட்சி - பார்வதி ஓடிச்சென்று அவர் தொண்டையை அமுக்கி விஷம் உள்ளே செல்லாமல் தடுக்கிற காட்சி...

இவற்றைத் தொடர்ந்து சிவன் பேசுகிறார் -

ஆதிகேசவா! ஒரு பெண் முதலமைச்சர் தன்னைப் பார்வதி அவதாரம், மூகாம்பிகையின் மறுபிறப்பு, வேதங்களுக்கு நிகரான பாதம் படைத்தவள் என்றெல்லாம் மூன்றாண்டுகளாகச் செய்துவரும் விளம்பரங்களைக் கண்டு நமது பக்த சிரோன்மணிகளும் பதறவில்லை - என் பர்த்தாவாகிய நீங்களும் பதறவில்லை - ஆனால்; ஒரே ஒருநாள் கன்னி மேரியைப்போல் முதலமைச்சர் படத்தைப் போட்டதற்கு அந்த சமுதாயமே கொந்தளிக்கும் சமுத்திர அலைகளாக

எழுந்து எதிர்ப்பு காட்டி அந்த முதலமைச்சரையும் பணிய வைத்துவிட்டது - இந்த நிலையில் எனக்கென்ன பாதுகாப்பு? என்று என்னிடம் பார்வதி சீறினாள்! சினந்தாள்! வெகுண்டாள்! என் சமாதானத்தை ஏற்காமல் வெளியேறினாள்! அவளை நான் தேடினேன் - தேடினேன் - தேடிக்கொண்டே அலைந்தேன்! பயனில்லை; என்ன ஆனாளோ என் பார்வதி தெரியவில்லை? தன்னை யார் யாருடனோ ஒப்பிடுகிறார்களோ இந்த பக்தர்களுக்கு வெட்கமில்லாவிட்டாலும் எனக்கு வெட்கமில்லையா மானமில்லையா என்று குமுறி, குளத்தில் விழுந்தாளோ? கிணற்றில் குதித்தாளோ? தூக்குக் கயிறில் தொங்கினாளோ? தெரியவில்லை - அதனால்தான், கடைசியாக அவள் படத்தையாவது பார்த்துக் கொண்டிருக்கலாம் என்று அந்தப் பெண் முதலமைச்சர் வீட்டு வாசலிலேயே ஒட்டியிருந்த நூற்றுக்கணக்கான சுவரொட்டிகளில் இது ஒன்றை மட்டும் கிழித்துக்கொண்டு வந்தேன்.

என்று கூறியவாறு, சிவனார் தனது புலித்தோலுக்குள் மறைத்து வைத்திருந்த போஸ்டர் ஒன்றை எடுத்துக்காட்டித் தேம்பி தேம்பி அழுகிறார்.

சிவனாரும், ஆதிகேசவரும் அப்படியே ஸ்டில் படமாகக் காட்சி தருகிறார்கள். அதன்மீது பார்வதியைக் காணவில்லை என்று படத்தின் டைட்டில் காட்டப்பட்டு படம் முடிவடைகிறது. உடன்பிறப்பே, இந்த சின்னத்திரை, மக்களின் எண்ணத்திரையில் நிழலாடுமென்ற நினைப்பில் இக்கடிதம்!

அனபுள்ள,

மு. கருணாநிதி

28-02-1995

2247. ஏறுநடைச் சிங்கமென எழுக! எழுகவே!

உடன்பிறப்பே,

* மாஜித் தலைவர்

* அறிவாலயத்தில் உட்கார்ந்துகொண்டு பதவி நாற்காலிக்காகத் தவம் இருப்பவர் -

* நல்ல உள்ளம் இல்லாதவர் -

இப்படியும், இன்னும் அந்தக் கட்சியில் உள்ள சில பேச்சாளர்களும் எழுத்தில் எழுத முடியாத அளவுக்கு இழிவாகவும் என்னை அர்ச்சிக்கிறார்களே என்று நேரிலும் நீ வேதனைப்படுகிறாய்! வேகப்படுகிறாய்! கடித மூலமும் எழுதுகிறாய்! அந்த அர்ச்சனைகள் சிலவற்றை நானும்கூட சில ஏடுகளில் காண்பதுண்டு! ஐம்பத்தி ஆறு ஆண்டு காலப் பொது வாழ்க்கையில் இதுபோன்ற; ஏன் இதனினும் கடுமையாக எனக்கு நடைபெற்றுள்ள அர்ச்சனைகள், தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிற அர்ச்சனைகள்; இவற்றுக்கு மனம் சோர்ந்து விட்டால்; பிறகு பெரியாருக்குத் தொண்டன் என்று பெருமைப்பட்டுக்கொள்வதிலும் - அண்ணாவுக்குத் தம்பி என்று நெஞ்சு நிமிர்த்திக்கொள்வதிலும் அர்த்தமே இல்லாமல் போய்விடுமே!

இதுபோன்ற சுடு சொற்கள், இழிமொழிகள் என் மீது யாரால் வீசப்படினும்; அப்போது நான் அந்த நண்பர்கள் சில காலத்திற்கு முன்பு நான் மேடையில் இருக்கும்போது சரி; நானில்லாமல் அவர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளிலும் சரி; இமைப்பொழுதும் இதயத்தை விட்டு அகலாத தலைவர் அண்ணன் கலைஞர் அவர்களே! என்று விளித்து, மொத்தப் பேச்சில் முக்கால் பகுதி பேச்சை என்னைப் புகழ்வதற்கும் போற்றுவதற்கும் மட்டுமே செலவிட்டார்களே; அதைத்தான் நினைத்துக் கொள்வேன்.

இது அண்ணாவின் பொது வாழ்க்கைப் பாதையிலே நான் அவரிடம் கற்ற பாடங்களில் ஒன்று!

அண்ணாவின் அருகிலேயே இருந்து வளர்ந்து எம்.பி. பதவியும் பெற்று, அந்த எம்.பி. பதவியுடனே அண்ணாவை விட்டுப் பிரிந்து, அவரைப்பற்றி மேடைகளிலே கிண்டலும் கேலியும் பேசிய நண்பர் சம்பத் அவர்களைப் பற்றியும், அவரது பேச்சு பற்றியும் - பல பகுதிகளிலுமிருந்து தம்பிமார்கள் அண்ணாவுக்குக் கடிதங்கள் எழுதியதையும் - ஏடுகளில் வெளிவந்த சம்பத்தின் பேச்சுக்களையும் படித்துத் தெரிந்துகொண்ட அண்ணா அவர்கள் திராவிட நாடு இதழில் தம்பிக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

> "கடலிற் கலந்த காவிரி கோபித்துக் கொண்டு, கடலில் தான் கலந்திட்ட அளவு நீரைத் திரும்ப பெற்றுக்கொண்டு, வேறிடம் செல்வதுண்டோ? முடியாதே! அதேதான், ஒரு இயக்கத்திற்கு தமது பங்கினைச் செலுத்தியவர்கள், விலகிச் செல்லும்போது, அது தம்முடனேயே எடுத்துச் சென்றுவிடத்தக்கது என்று எண்ணுவதும் - அந்த இயக்கத்தின் எழிலுக்கும் ஏற்றத்துக்கும், வலிவுக்கும் தாம் தந்தது மட்டுமல்ல காரணம், கணக்குப் பார்க்காத, பலர் அளித்துள்ளனர். கூட்டு முயற்சியின் வடிவம் அது, என்பது அறியாமல், எந்த இயக்கத்துக்கு நான் ஏற்றம் அளித்தேனோ, அதனை நானே அழித்து விட்டு மறுவேலை பார்க்கிறேன் என்று முழக்கமிடுவதும் பேதைமை - கோபத்தால் விளைவது.
>
> அந்தக் கோபம் குடிகொண்டிருக்கும் போது, தம்பி! வேறு எந்த எண்ணமும், கிட்டே நெருங்கப் பயப்படும். பாசம் என்பது பொருளற்றதாகத் தோன்றும்! நேசம் என்பது சிலந்திக் கூடுக்குச் சமம் என்று பேசச் சொல்லும்! ஒட்டு என்ன? உறவு என்ன? என்று கேட்கத்தோன்றும்! தழுதழுத்த குரல் இராது; தீ மிதித்த நிலையினர் போலாவர். முன்பு அறிவு இருந்ததாகக் கருதிய இடம், மூடர்களின் முகாமாகத் தோன்றும். இதிலே ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? ஆத்திரப்படுவது, அறிவுள்ளோர் செயலாகுமா தம்பி!
>
> பெண்ணா இவள்! எலும்புக்கூடு! - என்றானாம் ஒருவன் தன் நண்பனிடம், ஒருவளைப் பார்த்து. முதுகில்

ஒரு அறை கொடுத்து, அந்த நண்பன், முட்டாளே! எலும்புக்கூடு என்று சொல்லாதே; பூங்கொடி என்று சொல்! அவள் அப்பனுக்கு போன மாதம், அத்தையின் சொத்து ஐந்து இலட்சம் கிடைத்திருக்கிறது என்றானாம்.

அதுபோலத் தம்பி! நிலைமைக்கு ஏற்றபடி பேசுகிறார்கள் என்பது புரியவில்லையா, உனக்கு. புரியும்போது, கோபம் ஏன் பிறக்க வேண்டும்? உன் அலட்சியப் புன்னகையின்றி, அதற்குத் தக்க பதில் வேறு எதுவும் இல்லையே!! ஏன், சிலருக்கு, இன்னமும் இது தெரியவில்லை என்றுதான் நான் ஏக்கப்படுகிறேன். அந்த ஏக்கத்தின் காரணமாக, நான் செய்து வரும் இயக்கத்தொண்டுகூடக் குந்தகப்படுகிறது என்பதையும் கூறித்தான் ஆக வேண்டும். இதை மறவாதே, தம்பி, என்னைச் சிலர் ஏசுவதால், எனக்கும் சரி, இயக்கத்துக்கும் சரி, ஒரு துளியும் கெடுதல் ஏற்படாது. அவர்கள் பாடிச்சென்ற போற்றித் திருஅகவல் அவ்வளவு இருக்கிறது, கைவசம். அப்படிப் பாடினவர்கள், இப்போது இப்படி!! - சரி! அதனால் என்ன? மனித சுபாவம் எத்துணை விசித்திரமானது என்பதை அறிந்து கொள்ளும் அரிய வாய்ப்பு இவைகளெல்லாம்! வேறென்ன!!

தம்பி! உனக்கு என்னிடம் உள்ளன்பு இருக்கிறது, உணருகிறேன்; என் உயிருக்கு அஃதன்றி வேறு ஊதியம் இல்லை; என் வாழ்க்கைக்கு அதனினும் வலிவான ஊன்றுகோல் இல்லை. உனக்கு உள்ளன்பு நிரம்ப இருக்கிறதே தவிர, இன்று என்னைச் சிலர் சுடுசொல் கூறுகிறார்களே, அவர்களைப்போல, புகழ்ந்திடத் தெரியுமா!! உன் உள்ளன்பு, என்னைக் கண்டதும், உன் அகத்தையும் முகத்தையும் மலரச் செய்திடும். நான் காணும் காட்சிகளிலேயே என்னைக் களிப்பில் ஆழ்த்தும் காட்சி அது; அண்ணா! என்கிறாய் தழுதழுத்த குரலில் - அதனைவிட இனிய இசை வேறு எனக்கு இல்லை; வேண்டேன். அது சரி; ஆனால், புகழுரை பேச, உன்னால் முடியுமா? இன்று ஏசும் அவர்கள் முன்பு பேசியதுபோல ஒருக்காலும் பேசமுடியாது. வார்த்தைகளைப் பொறுக்கி எடுத்து, வர்ண ஜாலங்களிட்டுக் கோர்த்து, கைவண்ணம் தெரியத் தயாரிக்க வேண்டுமே, அப்படிப்பட்ட

புகழாரங்களை! உள்ளன்பு கொண்ட உன்னால் முடியாதே, அதுபோல; அது சொல்லன்பு கொண்டவர்களால் மட்டுமே முடியும் என்பது, அவர்களின் இப்போதைய போக்கினால் விளக்கமாகத் தெரிகிறது. உனக்கு இதயம் வேலை செய்யும் அளவு நேர்த்தியாக உதடு வேலை செய்வதில்லை; அதற்கு தனித்திறமை வேண்டுமே; நீ என் தம்பிதானே - எங்கிருந்து உனக்கு அந்தத் திறமை வந்துவிடும்!

சாதாரணமாகவே, காஞ்சிபுரத்தில் நடைபெறுகின்ற பொதுக்கூட்டங்கள் என்றாலே எங்களுக்கெல்லாம், எப்படி வைதிகர்களுக்கு வெள்ளிக்கிழமை கோயிலுக்குப் போகும்பொழுது ஒரு புனிதமான காரியத்தைச் செய்கிறோம் என்ற எண்ணமிருக்குமோ அதேபோல, காஞ்சிபுரத்துக் கூட்டத்திலே பேசுவது என்றால், ஏதோ எங்களுடைய வாழ்நாளில் நாங்கள் செய்கின்ற புனிதமான கடமை என்று கருதுவது வாடிக்கை. அது தவிர, இன்றைய தினம், நம்முடைய அண்ணா அவர்களை ஆதரித்து நடைபெறுகின்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திலே கலந்து கொள்கிறோம் என்றால் வைதிகர்களுக்கு எப்படி 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாமாங்கத் தீர்த்தத்தில் குளிப்பதில் ஒரு வெறி இருக்கிறதோ, அதைப் போல் எங்களுடைய வாழ்நாளில் இது ஒரு தடவை கிடைக்குமோ அல்லது இரண்டு தடவை கிடைக்குமோ என்று எண்ணக்கூடிய வகையில், இதைப் பெரிய காரியமாகக் கருதிக் கொண்டிருக்கிறோம்.

எப்படித் தம்பி! புகழாரம்! எத்துணை பளபளப்பு, பார்த்தனையா!! காஞ்சிபுரமே ஒரு திருத்தலம்!! அங்கு வந்து, பேசுவதே ஒரு புனித காரியம்!!

உன்னாலே முடியுமா இப்படிப் பேச!

உனக்கு என்ன தெரிகிறது - அண்ணா வாழ்க! அண்ணா வாழ்க! என்று சொல்லத் தெரிகிறது. இப்போது படித்தனையே, அதுபோன்ற சொல்லடுக்கு முடியுமா, உன்னால்!! திருத்தலம் - புனித காரியம்... மாமாங்கம் - ஏ! அப்பா! ஒரு நாலு வரிகளிலே, எத்துணை புகழ் உரைகள்!!

அண்ணா, இதுதான் பூஜா மனோபாவம் - கூடாது - கெடுதல் - என்று கூறுகிறார்கள் என்கிறாய்.

ஆமாம்! தம்பி! எனக்கும் புரிகிறது. இப்படிப்பட்ட பூஜா மனோபாவம், எத்துணை போலி என்பதும் - இத்துணை பூஜா மனோபாவம் காட்டுவோர் எவ்வளவு வேகமாக மாறிவிடுவார்கள் என்பதும் - புகழ்பாடிய வாயே, வேறோர்வேளை பகைபொழியும் என்பதும் புரிகிறது. நான் அன்று இல்லை, அதைக் கேட்க. இதுவரை உனக்கும் சொன்னதில்லை. இன்று சொல்ல நேரிட்டது.

தம்பி! காஞ்சிபுரத்தைத் திருத்தலமாகவும், அங்கு வந்து பேசுவதைப் புனித காரியமென்றும்; சொன்னது யார் தெரியுமோ? இந்த அண்ணாதுரைக்கு அரசியலே தெரியாது - என்று இன்று பேசும், தோழர் சம்பத் அவர்களேதான். நான் இல்லாத அன்று, காஞ்சிபுரம் வந்து, எனக்காகத் தேர்தல் பிரச்சாரம் செய்து, இந்த திருத்தாண்டகம் பாடிச் சென்றார் - 17.2.57ல்.

அவர் இன்று என்னைப்பற்றி நாலு கடுமையான வார்த்தைகளைச் சொன்னால், கோபம் கொள்ளலாமா? - அவர் அன்று சொன்னவற்றை எண்ணி மகிழக்கூடாதா!

கொடுத்த கைதான்! இன்று இல்லை, கொடுக்கவில்லை - என்று எண்ணிக் கொள்வதுபோல, அண்ணாவை அகமகிழ்ச்சியுடன் பாராட்டியவர்தான் - அன்பு இருந்தபோது - இன்று அன்பு இல்லை, ஆகவே புகழவில்லை. அதனால் என்ன, என்றுதானே எண்ணிக்கொள்ள வேண்டும்.

ஒளிதரும் விளக்குக்கூட - எண்ணெய் இல்லாதபோது, இருளுக்குத் துணை நிற்கிறது.

மேலும், தம்பி! என்னைப் புகழ்ந்துரைப்பதை நிறுத்திக் கொண்டு, இகழ்வாகப் பேசுவதால், மொத்தத்தில் நஷ்டம் இல்லை என்பது புரியவேண்டுமே உனக்கு. என்னைப் புகழ்ந்து பேசிக்கொண்டிருந்ததால், அவர், பாவம் புகழவேண்டிய எத்தனையோ, தலைவர்களைப் புகழ இயலாது போயிற்று. யான் பெற்ற இன்பம் அவர்களுக்கும் இப்போது. அவர்களுக்கும் கிடைக்கட்டுமே அந்த மகிழ்ச்சி.

காலமெல்லாம் எனக்கேதானா!! மற்றவர்களுக்கும் கிட்டட்டும்!!

என்னை அவர்கள் பாராட்டுவதைப் பெற்றுக்கொண்டே இருந்தால், நான் பெரிய கடனாளி அல்லவா ஆகிவிடுகிறேன். இப்போது எனக்கு ஒருவகை ஆறுதல். அவர்கள் தூற்றுவதைப் பொறுத்துக் கொள்வதை, நான் பட்ட கடனைத் திருப்பிக் கொடுத்திடும் வாய்ப்பாகவே கருதி மன அமைதி பெறுகிறேன்.

***

உடன்பிறப்பே; அண்ணா அன்று இதனை எழுதியபோது; தி.மு.கழகத்திற்கும் ஊறு விளைவித்திட எத்தகையோர் கிளம்பினரோ - அதேநிலை இன்றுமிருப்பதை எண்ணிப் பார்க்கிறேன். எதையோ ஒன்றை வீழ்த்தப்போவதாகக் கூறிக்கொண்டு; அந்தச் சந்தடிசாக்கில் ஆயிரங்காலத்துப் பயிராம் அண்ணா உருவாக்கிய இந்தக் கழகத்தை மிதித்துத் துவைத்துவிடலாம் என நம்புவோர் ஏமாந்துபோவர் என்பது மட்டும் உறுதி!

அன்று சம்பத் கோஷ்டியினரின் ஏச்சுக்களையும் பேச்சுக்களையும் அவர்கள் எடுத்து வைத்த விதண்டாவாதங்களையும்; அண்ணா எந்த முறையில் எதிர்கொண்டாரோ, அதே முறையில் தான் இன்றைக்கும் கழகத்தையும் என்னையும் வசைபாடுவோரை நானும் எதிர்கொள்கிறேன்.

நீயும் அண்ணாவின் வழியைப் பின்பற்றி அவர்கள் அலட்சியப்படுத்திவிட்டு, கழகம் மேலும் வலிவும் பொலிவும் பெற்று விளங்கிட ஆற்ற வேண்டிய ஆக்கப் பணிகளைச் சிந்தித்துச் செயல்படவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பணிகள் பல குவிந்தவண்ணமிருக்கின்றன. திடீர்த் தேர்தலும் வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிற காலகட்டம். அரசியல் எனும் தடாகத்தில் தொடர்ந்து பலவகையான கற்கள் விழுந்து தெளிவற்ற நிலை ஏற்பட்டுள்ளதற்கு மாறாக; குழம்பியுள்ள தடாகத்தில் ஒரு தெளிவு ஏற்பட்டே தீரும்! அதுவரையில் நாம் காத்துக்கொண்டிருக்கத் தேவையில்லை! இடைக்காலத்தில்

எண்ணற்ற வேலைகள் உள்ளன! நமது நிலை தெளிவானது - திட்டவட்டமானது - உறுதியானது -

அதனால்தான் தேர்தலுக்கான ஆயத்தங்களில் ஈடுபடுதல், தேர்தல் நிதி திரட்டுதல் போன்ற ஆக்கபூர்வமான செயல்களை விரைவுபடுத்த வேண்டுகிறேன்! திடீர் என ஒரு வேளை தேர்தல் வராவிடினும் - இன்னும் ஓராண்டு அல்லது ஒன்றரையாண்டில் வந்தே தீரும்!

காட்டில் வேங்கையிருக்கிறதோ; இல்லையோ எதற்கும் பாதுகாப்பாக துப்பாக்கியை எடுத்துச் செல்வது பாதுகாப்புக்கு முக்கியமானது!

அதுபோல இப்போது வராவிடினும், எப்போது தேர்தல் வரினும் அப்போது பயன்படத்தான் நிதி திரட்டல் பணியும், தேர்தல் தொடக்கப் பணியும் - இடைவிடாது நடைபெற வேண்டுமென விரும்புகிறேன்!

காமராஜர் மாவட்டச் செயலாளர் தம்பி தங்கபாண்டியன், தேர்தல்நிதி திரட்டுவதற்கும் திரட்டிய நிதியை என் வாயிலாகத் தலைமைக் கழகத்திற்குத் தருவதற்கும் நன்கொடைச் சீட்டுகள் அச்சடித்து தலைமைக்கழக முத்திரை போட்டு எடுத்துச்செல்ல இருக்கிறார்.

அதேபோல தெ.ஆ. ராமசாமிப் படையாட்சியார் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் தம்பி சம்பத்தும், அவைத்தலைவர் முத்துவேலும் அந்த மாவட்டத்தின் சார்பில் நிதி திரட்டி வழங்கிட, நன்கொடைச் சீட்டுகள் அச்சியற்ற முனைந்துள்ளனர்.

போட்டி போட்டுக்கொண்டு ஒவ்வொரு மாவட்டமும் ஆக்கப் பணியில் இறங்கினால்தான் - பொதுத்தேர்தல் போட்டியில் நாம் வென்றிட முடியும்! பொல்லாத ஆட்சிக்கு விடைகொடுத்து அனுப்பிட முடியும்! எனவே எழுக! எழுக! ஏறுநடைச் சிங்கமென எழுக! என அழைக்கிறேன்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

04-03-1995

2248. நாட்டுக்கும் உனக்கும் நன்றாகவே புரியும்!

உடன்பிறப்பே,

* நொண்டிக்குதிரை
* தள்ளாத வயது
* கோட்டைப்பக்கம் எட்டிக்கூடப் பார்க்க முடியாது.

எங்கே அத்தகைய கிழக்குதிரை இருக்கிறது? அதுவும் பாவம் நொண்டிக்குதிரையா? கோட்டைப்பக்கம் எட்டிப் பார்க்க அதற்கு ஆசையா? இப்படியெல்லாம் உனக்குக் கேட்கத் தோன்றும்! நொண்டிக்குதிரை மட்டுமல்ல; தள்ளாத வயது படைத்த கிழக்குதிரை; அதனால் கோட்டைப்பக்கம் எட்டிப்பார்க்க முடியாது என்றெல்லாம் நான் குறித்துள்ள வாசகங்கள் அ.தி.மு.க. அமைச்சர் ஒருவர் வாயிலிருந்து சிந்திய முத்துக்கள். யாரைப் பற்றி உதிர்க்கப்பட்ட வாசகங்கள் என்றும் அறிய விரும்புவாய்! வேறு யாரைப்பற்றி? என்னைப் பற்றித்தான் அமைச்சர் இப்படி ஒரு அருட்பா பாடியிருக்கிறார்!

ஆட்சி எனும் யானையின் பக்கத்தில் நிற்கும் பெருமிதத்தில் அமைச்சரால் என்னைப் போன்றவர்களைக் குதிரையுடன் ஒப்பிட்டுப் பேச முடிகிறது! அதுவும் நொண்டிக்குதிரை யென்று! தள்ளாத வயதுடைய குதிரை என்று! அமைச்சர் ஒருவர் பேசியிருக்கக் கூடாத அசிங்கமான பேச்சுத்தான்; அந்தப் பேச்சைப் படித்தவுடன் நமக்கு எழும் ஐயப்பாடே அவர் யானையின் பக்கம் நின்று பேசினாரா அல்லது..... பக்கம் நின்று பேசினாரா? இடைவெளியை நிரப்புவதற்குக் கைகூசுகிறது! எத்தகை நேரத்தில் அமைச்சர் இப்படி வக்கணை பேசிக் கொண்டிருக்கிறார் என்று பார்த்தாயா?

மருத்துவக்கல்லூரி மாணவர்களின் போராட்டம் 16 நாட்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது! ஜெயலலிதாவை,

கன்னிமேரியுடன் ஒப்பிட்டு பிறந்த நாள் சுவரொட்டிகளை நாடு முழுதும் ஒட்டியதற்காக கிறிஸ்தவ மக்கள் நடத்தும் கிளர்ச்சி பரவிக் கொண்டிருக்கிறது! குமரி மாவட்டத்தில் திருவெட்டாறு கோயில் கொள்ளையைத் தொடர்ந்து, மீண்டும் இதோ, ஆலம்பாறை கோயிலில் விலை உயர்ந்த சிலைகள் கடத்தப்பட்டுள்ள செய்தி ஏடுகளில்! நெல்லை சேரன்மாதேவி துணைக் கருவூலத்தில் லட்சக்கணக்கான ரூபாய் மோசடி! தடாக்கைதிகளாக இருந்த விடுதலைப்புலிகள் ஆறாவது தடவையாகச் சென்னை சிறையிலிருந்து தப்பிய நிகழ்ச்சி! தும்பைவிட்டு வாலைப் பிடிப்பதுபோல; ஒரு சில தடாக் கைதிகளைத் தப்புவிக்க விட்டுவிட்டு, எஞ்சியுள்ள தடாக் கைதிகளைச் சிறையில் தாறுமாறாகத் தாக்கியுள்ள கொடுமை! பேருந்தில் காணாமற் போனதாகச் சொல்லப்படும் பணம் லட்சக்கணக்கானதல்ல; அது கோடிக்கணக்கானது என்பது மட்டுமல்ல, அமைச்சர் ஒருவருக்குச் சொந்தமான பணமுங்கூட; எனும் பரபரப்புச் செய்திகள் பத்திரிகைகளில் வந்து கொண்டிருக்கும் சமயம்!

இப்போதுதான் அந்தப் பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் அலட்டிக் கொள்ளாத அமைச்சர்களில் ஒருவராக விளங்கும், என்றைக்கும் மார்க்கண்டேயராக இருக்கப்போகிறவரும் - இருப்பதற்கான வரம் பெற்று வாழ்ந்து கொண்டிருப்பவருமான - இளமை, இனிமை, புதுமை மாறாத சிரஞ்சீவியார் ஒருவர் எனக்குப் பட்டம் கொடுத்துக் கொண்டிருக்கிறார் நொண்டிக்குதிரையென்று! தள்ளாத வயது பற்றி யாரோ படவேண்டிய கவலையை இவர் பட்டுக்கொண்டிருக்கிறார்!

உடன்பிறப்பே, இப்போது அரசியலில் ஒரு மேனியா - வயதான அரசியல்வாதிகள் சீக்கிரம் வாழ்க்கையை முடித்துக் கொள்வார்கள் - இளைஞர்கள்தான் எமனை விரட்டி அடிக்கும் ஆற்றலாளர்கள் - என்பது போன்ற ஒரு ஏகடியப்பேச்சு; மேடைகளில், ஏடுகளில்! கடந்த ஆண்டு பழைய பத்திரிகைகளை எடுத்துப் பார்த்தால் இப்படியொரு ஆரோக்கியமற்ற எதிர்பார்ப்பும் - ஆருடக்கணிப்பும் அநாகரிக அரசியல்வாதமும் எப்போது தொடங்கின என்பது விளங்கும்! பாவம்; இயற்கையின் வலிமையை அறியாதவர்கள் அவர்கள்! இளம்பருவம் - ஏறுபோல் நடை -

உருண்டு திரண்டஉடல் அமைப்பு - அந்த இளைஞனையும் சாவு திடீரெனக் கொத்திக் கொண்டுபோய் விடுகிறது - முதிர்ந்த வயது படைத்தோரையும் மரணம் முத்தமிடத்தான் செய்கிறது!

இளம் வயது - நடுத்தர வயது - முதிர்ந்த வயது - என்றெல்லாம் பாகுபாடு பார்த்து; அவர்களைத் தரம் பிரித்து சாவு தழுவிக் கொள்வதில்லை! மகாகவி பாரதி முப்பது வயதில் மறைய நேரிட்டது! அறிஞர் அண்ணா மணிவிழா கொண்டாட நம்மிடமில்லை; அறுபதை எட்டுவதற்கு முன்பே இயற்கை அணைத்துக் கொண்டது அவரை! தந்தை பெரியாரும் மூதறிஞர் ராஜாஜியும் முறையே 95 என்றும் 94 என்றும் வயதைக் கடந்து நம்மிடையே வாழ்ந்தனர்! இதோ விடுதலைப் போராட்ட வீரர் மொரார்ஜிதேசாய் நூறாவது வயதுடன் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறார்!

இவர்களில் இறுதி மூச்சுவரையில் மக்களுக்காக எழுதிக் கொண்டிருந்தவர் ராஜாஜி! இறுதிப் பேருரையை சென்னை தியாகராயநகரில் ஆற்றிவிட்டுத்தான் வேலூர் மருத்துவமனையில் உயிர் விட்டது; பகுத்தறிவு வேழம்! பழமையைச் சாடும் சுயமரியாதைப் பகலவன்! ஆம்; தந்தை பெரியார்!

சாகும்வரை அவர் உழைத்துக் கொண்டே இருந்ததால்தான் அவர் மறைந்தபோது பெரியார் தனது சுற்றுப் பயணத்தை நிறுத்திக் கொண்டார் என இரங்கற் செய்தியில் குறிப்பிட்டேன்.

வாலிபர்கள், ஒருகாலத்தில் வயதானவர்கள் ஆவார்கள் என அறியாமலே; சர்க்கரை போட்ட காபி பற்றிப் பேசிய சில வாலிபர்கள்; அவர்களே சர்க்கரையில்லாதக் காபிதான் சாப்பிடுவார்கள் என்று உண்மையை மறைத்துக் கொண்டார்கள் என்பது எனக்கல்லவா தெரியும்!

இளைஞர்களை, மூத்தோர் தட்டிக் கொடுத்து ஈட்டிமுனைகளாக ஆக்கிட வேண்டும்! இளைஞர்களும் தீட்டிய மரத்தில் கூர் பார்க்காமல் மூத்தோரை மதித்து நடக்க வேண்டும்!

மூத்தோரை நொண்டிக் குதிரையென்றும் - தள்ளாத வயது - என்றும்; இன்றுள்ள வாலிபத்தெம்பில் வசை பாடிவிட்டால்; நாளை வரும் இளைய தலைமுறையினர், அந்த வசைபாடிகளைப் பார்த்து சண்டிக்குதிரை என்றும் - இன்னும் சாகாத ஜடம் என்றும் தூற்றிட வெகு காலமாகாது!

கைநொடிப் பொழுதில் ஆண்டுகள் உருண்டு கொண்டிருக்கும் காலவேகத்தில்; அமைச்சர்கள் அனுமாரைப் போல என்றைக்கும் சிரஞ்சீவிகளாக இருக்கலாமென்று மனப்பால் குடித்தாலோ; அல்லது அவரனையோர் என்றும் 16 வயது மார்க்கண்டேயர் நாம் என்று கனவு கண்டாலோ; அதனை ஏற்றுக் கொள்ளாது இயற்கை!

நொண்டிக் குதிரைகள் பூட்டிய வண்டிகளில் ஏறிச் சவாரி செய்துதான்; இப்போது அமைச்சர்கள் கண்டசா கார்களில் சவாரி போகிறார்கள் என்ற உண்மையை; சுமார் அறுபது ஆண்டு கால அளவுக்காவாவது உள்ள இயக்க சரித்திரத்தைப் படித்தால்; கண்ணற்றோர் கருத்தற்றுப் பேசுவது உடன்பிறப்பே, உனக்கும் நாட்டுக்கும் நன்றாகவே புரியும்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

05-03-1995

2249. அந்த நச்சு நினைப்பு நமக்குத் தேவையில்லை!

உடன்பிறப்பே,

"காங்கிரசுடன் இனி எக்காரணம் கொண்டும் எப்போதும் உறவு இல்லை என்று அறிவிக்க தி.மு.க. தயங்குகிறது. காங்கிரஸ் அ.தி.மு.க. உறவு முறிந்து போனால் காங்கிரசுடன் உறவு கொள்ளலாமா? என்று ஊசலாட்டத்தை முற்றிலும் விட்டுவிட்டு காங்கிரசையும் அதன் பொருளாதாரக் கொள்கைகளையும் முழுமையாக எதிர்க்க தி.மு.க. முன்வந்தால் நாங்களும் கூட்டுப் போராட்டத்துக்கு தயார்"

என்று மார்க்சிஸ்ட் கட்சியின் புதிய மாநிலச் செயலாளர் கூறியுள்ளதாக அவர்களது கட்சி ஏடு தீக்கதிர் வெளியிட்டுள்ளது.

1977ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் இந்திராவின் எமர்ஜன்சியை எதிர்த்து ஆட்சியை இழந்த தி.மு.க.வும் - மற்றும் மார்க்சிஸ்ட் கட்சியும், ஜனதா கட்சியும் அணி சேர்ந்து போட்டியிட்டன. அதில் வெற்றிபெறவில்லையென்றதும் எமர்ஜன்சியை ஆதரித்துப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்த அ.தி.மு.க.வுடன் மார்க்சிஸ்ட் கட்சி தேர்தல் கூட்டணி சேர்ந்து கொண்டது. நாடாளுமன்றத் தேர்தலுக்கும் சட்டமன்றத் தேர்தலுக்கும் இடையே மூன்று நான்கு மாத இடைவெளிக்குள்ளாகவே மார்க்சிஸ்ட் கட்சி இப்படியொரு மாற்று நிலை எடுத்தது. இதையெல்லாம் தமிழ்நாட்டு அரசியலைத் தொடர்ந்து கவனித்து வருபவர்கள் மறந்துவிடுவார்கள் என்று கருதக்கூடாது என்பதே என் அன்பான வேண்டுகோள்!

இடங்கள் கிடைக்க வேண்டுமென்பதற்காக இலட்சியக் கூட்டணியை விட்டு அன்றைக்கு அகன்று விட்டவர்கள் யார் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமல்லவா?

எமர்ஜன்சியை ஆதரித்தது மட்டுமல்ல; அதை எதிர்த்த தி.மு.க., ஜனதா, மார்க்சிஸ்ட் போன்ற கட்சிகளை வசைபாடித் தீர்த்த அ.தி.மு.க.வுடன் அவ்வளவு சீக்கிரத்தில் மாதக் கணக்கு இடைவெளியில் மார்க்சிஸ்ட் கட்சியினால் அணி சேர முடிந்தது.

அவர்கள் எமர்ஜன்சி ஆதரவாளருடன் மூன்று மாதத்தில் கூட்டு சேர்ந்தார்கள். தி.மு.கழகமோ; எமர்ஜன்சி கொண்டு வந்த இந்திரா காங்கிரசுடன் மூன்று நான்கு ஆண்டுகள் கழித்து தேர்தல் கூட்டணி கண்டது.

மார்க்சிஸ்டுகளும் சரி; நாமும் சரி; எமர்ஜன்சி ஆதரவாளரான எம்.ஜி.ஆர். அவர்களுடனும், எமர்ஜன்சி பிரகடனப்படுத்திய இந்திராகாந்தி அவர்களுடனும் சேர்ந்து அணி அமைத்ததற்கு அவரவர்களுக்குப் பொருத்தமென்றுபடுகிற காரணங்களைச் சொல்லாமல் இல்லை!

ஆனால்; அதனால் ஏற்பட்ட விளைவுகள் மார்க்சிஸ்டு கட்சிக்கும் சரி; நமக்கும் சரி - மொத்தத்தில் ஏமாற்றம்தான்!

எனவே; இரு கட்சிகள் எடுத்த தனித் தனியான முடிவுகளும் நாட்டுக்கு நலன் பயக்கவில்லை. மக்கள் விரோத, தொழிலாளர் விரோத, பல்வேறு பிரிவு மக்கள் அதிருப்திக்கு ஆளான காரியங்கள் மத்திய ஆட்சியிலும் மாநில ஆட்சியிலும் நடைபெறத் தொடங்கியது கண்டு ஏமாற்றத்துக்கு உள்ளான இரு கட்சிகளும் மீண்டும் கூட்டு இயக்கங்கள் நடத்தவும், தேர்தல் கூட்டணிகள் அமைக்கவும் முன் வந்தன. அந்த இயக்கமும் அணியும் இதுவரை தொடரவே செய்தது.

இதற்கிடையே திரு. வி.பி. சிங் அவர்களின் தலைமையிலும் வழிகாட்டுதலிலும் தேசிய முன்னணி உருவாக்கப்பட்டது. ஜனதா கட்சியொன்று காங்கிரசுக்கு எதிர்க் கட்சியாகவும் மாற்றுக் கட்சியாகவும் உருவாக தி.மு.கழகம், தனது பங்களிப்பை எந்த அளவுக்கு வழங்கியதோ - அதைவிட அதிகமாகக்கூட தேசிய முன்னணி உதயத்திற்கு தி.மு.கழகம் தனது பங்கினை முழுமையாக வழங்கியது. தேசிய முன்னணியில் உள்ள கட்சிகள் தவிர, அதனுடன் சேர்ந்து பணியாற்ற இடதுசாரிக் கட்சிகளான மார்க்சிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு, பார்வார்டுபிளாக் போன்ற கட்சிகளும் முன்வந்தன. இந்த இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்கள் சென்னையில் தி.மு.க. நடத்திய தேசிய முன்னணித்

தொடக்க விழாவிலும் கலந்து கொண்டு உரையாற்றினர் என்பதை உலகமே அறியும்.

அந்த நாள் முதல் கடந்த ஆண்டு வரையில் தி.மு.க.வும் மார்க்சிஸ்டும் தேர்தல் கூட்டணிகள் அமைத்துப் பணியாற்றுவதிலும், கூட்டுப் போராட்ட இயக்கங்கள் நடத்துவதிலும் மனத்தில் எந்த பிசிரும் இல்லாமலே தான் இயங்கி வந்துள்ளன.

இப்போது ஒரு சூழ்நிலை; மார்க்சிஸ்ட் கட்சி, பழனி நாடாளுமன்றத் தேர்தலின் போது; வெறும் அறிக்கையாகவோ பேட்டியாகவோகூட இல்லாமல் - அந்தக் கட்சியின் மாநிலக் குழுவிலே தீர்மானம் போட்டு; பழனி, ராணிப்பேட்டை இடைத்தேர்தல்களில் காங்கிரசுக்கும் தி.மு.க.வுக்கும் ரகசிய உடன்பாடு என்று ஒரு விஷமப் பிரச்சாரம் முடுக்கிவிடப்பட்டது.

ராணிப்பேட்டையில் வெற்றிபெற்ற அ.தி.மு.க. எம்.எல்.ஏ., தனது வெற்றிக்குக் காரணம் காங்கிரஸ் விட்டுக்கொடுத்ததால் வந்த வன்னிய மக்கள் வாக்குகள்தான் என்று அறிக்கையே விட்டார்.

பழனி நாடாளுமன்றத் தேர்தல் விவகாரம் என்ன என்று பார்த்தால்; 1991ல் அங்கே தி.மு.க. இரண்டரை லட்சம் வாக்கு வித்தியாசத்தில் காங்கிரஸ் அ.தி.மு.க. கூட்டணியிடம் தோற்றது. இப்போது 1993 செப்டம்பரில் நடந்த தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்றது. தி.மு.க.; நாற்பதாயிரம் வாக்கு வித்தியாசத்தில்தான் தோற்று இரண்டாவது இடத்துக்கு வந்தது. காங்கிரஸ் வேட்பாளர் அங்கே மூன்றாவது இடத்துக்குத்தான் வர முடிந்தது.

இப்படியொரு தேர்தல் முடிவைக் கண்ட பிறகாவது; மார்க்சிஸ்ட் கட்சி, தி.மு.க. மீது கூறிய தனது தவறான குற்றச்சாட்டை திரும்பப் பெற்றுக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக, ஒட்டகக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்பதுபோல மீண்டும் அதே ரகசிய உடன்பாடு என்ற குற்றச்சாட்டை தி.மு.க. மீது சுமத்தினர். இன்னமும் சுமத்திக்கொண்டே இருக்கின்றனர். பழனி தேர்தலில் கட்சிக்குள்ளேயே இருந்த இப்போது வெளியேறிவிட்ட துரோக சிந்தனையினர் சிலர், கழக வேட்பாளர் சுப்புலட்சுமி ஜெகதீசனுக்கு எதிராக மறைமுகமாக வேலை செய்தது என்பது என்னவோ உண்மையே தவிர; அதையும் மீறி அந்த வேட்பாளர் அவ்வளவு

வாக்குகளைப் பெற்றிருப்பது காங்கிரசுக்கும் அ.தி.மு.க.வுக்கும் எதிரான வாக்குகள் என்பதை அரசியல் தெரிந்தவர்கள் எப்படி மறுத்து விட முடியும்!

இதில் ரகசிய உடன்பாடு எங்கிருந்து வந்தது? கழக வேட்பாளரை நிறுத்தி வைத்துவிட்டு; அவரைத் தோற்கடிக்க காங்கிரசுக்கோ, அல்லது பிறருக்கோ மறைமுகமாக ஆதரவளிப்பது, அரசியல் விபச்சாரம் என்பதைத் திட்டவட்டமாக உணர்ந்துள்ள இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

காங்கிரசுடன் இனி எக்காரணம் கொண்டும் உறவு இல்லை என தி.மு.க. அறிவிக்கத் தயங்குகிறது.

என்கிறார் மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலப் புதிய செயலாளர் என் பழைய நண்பர் சங்கரய்யா!

அப்படியொரு நிபந்தனை விதிக்கவோ அல்லது விமர்சிக்கவோ சங்கரய்யா அவர்களுக்கு என்ன உரிமையென்று நான் ஆணவமாகக் கேட்க மாட்டேன்; ஆனால் அதற்கு மாறாக நான் கேட்பதெல்லாம் - காங்கிரசுடன் உறவு இல்லை என்று கூற தி.மு.க. எப்போது தயங்கியது? நான்தான் எப்போது தயங்கினேன்? மயங்கினேன்?

மத்திய காங்கிரஸ் ஆட்சிபற்றியும் பிரதமர் நரசிம்மராவ் பற்றியும்; குறிப்பாக பாபர் மசூதி பிரச்சினையில் தி.மு.க. தெரிவித்துள்ள கண்டனங்களை மார்க்சிஸ்ட் தலைவர்கள் ஏடுகளில் படித்திராவிடினும் அந்தக் கட்சியின் தொண்டர்கள் படித்திருக்கக்கூடுமென நம்புகிறேன்.

1993 அக்டோபர் 25ஆம் நாள் கோவை சிதம்பரம் பூங்காவில் நடைபெற்ற கூட்டத்தில் நான் ஆற்றிய உரையின் ஒரு பகுதி இதோ :-

“பாரதத்தில் துரியோதனன் சபையில் பாஞ்சாலி துகில் உரியப்பட்டபோது ஏதும் செய்ய இயலாமல் வேடிக்கை பார்த்த பாண்டவர்களைப் போலத்தான் பாபர் மசூதி இடிக்கப்பட்ட நேரத்தில் ஒன்றும் செய்ய இயலாத நிலையில் நானிருந்தேன் என்று நரசிம்மராவ் சொல்லியிருக்கிறார்.

பாண்டவர்கள் பாஞ்சாலியை வைத்து சூதாடி அதிலே தோற்றார்கள். தோற்ற பிறகுதான் பாஞ்சாலி துகில்

உரியப்பட்டாள். நான் நரசிம்மராவைக் கேட்கிறேன். நீங்கள் பாபர் மசூதியை பந்தயத்தில் வைத்து யாருடன் சூதாடினீர்கள்? பாரதீய ஜனதா கட்சியிடமா?

இது நரசிம்மராவுக்கு நான் பாடிய நாமாவளியென்று நண்பர் சங்கரய்யாவும் அவரது சகதோழர்களும் கருதினால் நான் என்ன செய்ய?

28.10.1993 மதுரையில் செய்தியாளர்கள் பேட்டியில் என்ன கூறியிருக்கிறேன்?

நிருபர் :- காங்கிரசுடன் தி.மு.க. கூட்டுச் சேரும் வாய்ப்பு உண்டா?

எனது பதில் :- அப்படி ஒரு எண்ணமே எங்களுக்குக் கிடையாது. மத்திய காங்கிரஸ் அரசின் தவறுகளை நாங்கள் தொடர்ந்து விமர்சனம் செய்து கொண்டுதான் இருக்கிறோம்.

இது காங்கிரசுடன் கழகம் கூட்டு சேருவதற்கான ஊசலாட்டம் என்று மார்க்சிஸ்ட் நண்பர்கள் யாரிடத்திலே புதிய ஞானக்கண் பெற்றுப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்; யானறியேன் பராபரமே, என்றுதான் கூறவேண்டியுள்ளது.

1994 ஜனவரி 24ஆம் நாள் கூடிய தலைமை நிர்வாகக் குழுவில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தை சாம்பிள் என்ற முறையில் குறிப்பிடுகிறேன்.

> பதவிக்கு வந்த நூறு நாட்களில் விலைவாசியைக் குறைத்துக் காட்டுவோம் என தேர்தல் நேரத்தில் பொய்யான வாக்குறுதி கொடுத்து ஆட்சிக்கு வந்த இ. காங்கிரசின் நரசிம்மராவ் தலைமையில் உள்ள மத்திய அரசு, மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களின் விலைகள் விஷம்போல் ஏறியிருப்பதைத் தடுக்காமலும், அரசு ஊழியர்களும் நடுத்தர மக்களும், சாதாரணமானவர்களும் பாதிக்கும் விதத்தில் அன்றாடம் அவர்கள் பயன்படுத்தும் சமையல் கேஸ் விலையை உயர்த்தியிருப்பதையும், அதேசமயம் சமையல் வாயு இறக்குமதி செய்யும் தனியாருக்கு இறக்குமதி தீர்வை 85 சதவீதமாக இருந்ததை 25 சதவீதமாகக் குறைத்து

சலுகை வழங்கியிருப்பதையும், இனி தனியார் தங்கள் விருப்பம்போல சமையல் வாயுவிற்கு விலை நிர்ணயித்து விற்க வழிவகுத்துக் கொடுத்திருப்பதையும் இந்த நிர்வாகக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

அத்துடன் அடுத்த மாதம் மத்திய அரசு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்ய உள்ள நிலையில் இந்த விலை உயர்வை அறிவித்திருப்பது நாடாளுமன்ற ஜனநாயகத்தை அவமதிக்கும் செயல் என்பதை சுட்டிக் காட்டுவதோடு இந்த விலை உயர்வை உடனடியாக மத்திய அரசு ரத்து செய்ய வேண்டுமென இந்த நிர்வாகக்குழு வலியுறுத்துகிறது.

இது மத்திய காங்கிரஸ் அரசுக்கு லாலி பாடும் தீர்மானமா?

காங்கிரஸ் அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையை முழுமையாக தி.மு.க. எதிர்க்க முன்வர வேண்டுமாம்; தோழர் சங்கரய்யா கூறுகிறார்!

மேற்கு வங்கத்தில் அந்நிய தொழில் அதிபர்களுக்கும் பன்னாட்டு நிறுவனத்திற்கும் கொல்லைப்புற வழியைத் திறந்துவிட்டுள்ள சூழ்நிலையில் - புதிய பொருளாதாரக் கொள்கையை தி.மு.க. முழுமையாக எதிர்க்கவில்லை என்பது வேடிக்கையா? வேதனையான விமர்சனமா?

தி.மு.கழகத்தின் இதயம் போன்ற பொதுக்குழு தஞ்சையில் 29.12.93 அன்று கூடியபோது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் இரண்டை மட்டும் சங்கரய்யாவுக்கும் அவரது சகதோழர்களுக்கும் அப்படியே நினைவூட்டுகிறேன்.

டங்கல் திட்டத்தைக் கண்டித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் வற்புறுத்தப்பட்ட திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி, சோசலிச சமுதாய அமைப்பு, சுயதேவைப் பூர்த்தி - ஆகிய குறிக்கோள்களை வீழ்த்திடும் வகையில் டங்கல் திட்டம் அமைந்துள்ளது.

அரசியல், பொருளாதாரம், சமூக அமைப்பு போன்ற அனைத்துத் துறைகளிலும் டங்கல் திட்டம் பயங்கரமான பாதிப்புகளை ஏற்படுத்தி அந்நிய ஆதிக்கத்திற்கு வழி கோலும் என்ற காரணத்தினால் தான் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் டங்கல் திட்டம் இந்தியாவின் சுவாசப்

பைகளை க்ஷயரோகக் கிருமிகளைக் கொண்டு அடைக்க நடக்கும் முயற்சி என எச்சரித்துள்ளார்.

எனவே, இந்தியாவின் அரசியல் இறையாண்மை, மாநிலங்கள் உரிமை, நுகர்வோர் உரிமை, விவசாயிகள் உரிமை ஆகிய அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் டங்கல் திட்டத்தினை இந்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளதை இந்தப் பொதுக்குழு வன்மையாக எதிர்க்கிறது. இந்தத் திட்டத்தினால் ஏற்படக்கூடிய பயங்கர விளைவுகளை நாட்டு மக்களுக்கு எடுத்துக்கூறித் தெளிவுபடுத்த தி.மு.க. கழகம் கருத்தரங்குகளை நடத்துவதென இப்பொதுக் குழு முடிவு செய்கிறது

பங்குச் சந்தை ஊழலைக் கண்டிக்கும் தீர்மானம்

போஃபர்ஸ் பீரங்கி ஊழலையடுத்து, இந்தியா தலைகுனியும் விதத்தில் ஏற்பட்ட பங்குச்சந்தை ஊழல் தொடர்பான, உயர்திரு. ராம்நிவாஸ் மிர்தா தலைமையில் அமைக்கப்பட்ட நாடாளுமன்றக் கூட்டுக்குழுவின் விசாரணை அறிக்கை குறித்து இந்த தி.மு.கழகப் பொதுக்குழு மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் ஆய்வு செய்தது.

பொது மக்களிடமிருந்தும், அரசிடமிருந்தும், அரசு நிறுவனங்களிலிருந்தும் பெற்ற கோடிக்கணக்கான ரூபாய் பங்குத் தொகையில் மத்திய அமைச்சர்கள் சிலர், ரிசர்வ் வங்கியின் ஆளுநர், முக்கிய அதிகாரிகள், தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் தலைவர், இயக்குநர்கள், மேலாளர்கள், பங்குச் சந்தைத்தரகர்கள் ஆகியோரின் கூட்டுச்சதியின் காரணமாக ரூ. 8383.32 கோடி பங்குத் தொகை ஊழலுக்கு இரையாகியுள்ளது. இந்த ஊழலின் பெரும்பகுதி 1991 ஜூலை முதல் 1992 ஏப்ரல் வரையில் நிகழ்ந்திருக்கிறது. இந்த ஊழல் தொடர்பாக மத்திய புலனாய்வுத்துறை, வருமான வரி இலாகா எடுத்த நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு ஒத்துழைப்பு கொடுக்காமலும், பதிவு செய்த 27 வழக்குகளை முறையாக விசாரிக்காமலும் காலம் கடத்தப்பட்டு வந்திருப்பதை அறிந்து இப்பொதுக்குழு அதிர்ச்சியடைகிறது.

இந்த ஊழல் மூலம் கோடிக்கணக்கில் பணம் சம்பாதித்தவர்களின் விவரங்களை விசாரணைக் குழுவினால் கண்டுபிடிக்க முடியவில்லை என்று கூறியிருப்பது வேதனைக்குரியது. இந்திய வரலாற்றிலேயே என்றும் நிகழ்ந்திராத இந்த ஊழலைக் கண்டுபிடிக்க அரசு இந்த விசாரணைக்குழு மூலம் முயற்சித்தது என்ற விளம்பரத்துடன் திருப்தியடையாமல்;

ஊழலுக்குக் காரணமான அமைச்சர்கள், அதிகாரிகள், பங்குச்சந்தைத் தரகர்கள், தொழில் முதலாளிகள் ஆகியோர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று இந்தப் பொதுக்குழு வற்புறுத்துகிறது.

நிறைவேற்றப்பட்ட இத்தீர்மானங்கள் நீர்மேல் எழுத்து என்கிறார்களா மார்க்சிஸ்டுகள்? அல்லது இந்தத் தீர்மானங்களைத் தி.மு.க. பொதுக்குழு, திரும்பப் பெற்றுக் கொண்டதா?

அடுத்து நடைபெற்ற சர்க்கரை பேர ஊழலைப்பற்றி, 18.12.94 முரசொலியில் நான் எழுதிய கடிதத்தில் இதோ சில முக்கியமான பகுதிகளை மட்டும்; முழுமையாக மத்திய ஆட்சியைக் கழகம் கண்டிக்கவில்லை எனப் பேசும் கண்ணியவான்களுக்கு முன்வைக்கிறேன்,

"கியான் பிரகாஷ் கமிட்டியின் அறிக்கையை வெளியிட்டால்தான் நாடாளுமன்ற இரு அவைகளும் நடைபெற முடியும் என்ற நிலை எதிர்க்கட்சிகளால் ஏற்பட்டவுடன்; இனியும் வாய் ஜாலம் பேசி ஏமாற்ற முடியாது என்று கருதி, அந்த அறிக்கையை நாடாளுமன்ற நூல் நிலையத்தில் உறுப்பினர்கள் படிப்பதற்கு வைப்பதற்கு அரசு இணங்கிப் பணிந்து வந்துள்ளது.

அந்த அறிக்கையை ஏன் மறைத்தார்கள் என்பதற்கான காரணத்தை; அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விபரங்களைச் சுருக்கமாகப் படித்தாலே புரிந்துக் கொள்ள முடியும்.

1. மத்திய உணவுத் துறை இணை அமைச்சர் கல்பநாத்ராய்தான் பலகோடி ரூபாய் சர்க்கரை இறக்குமதி ஊழலில் முழுமையாகத் தொடர்புடையவர்.

2. சர்க்கரை இறக்குமதி செய்திட கட்டுப்பாடில்லாத உரிமத்தின் கீழ் அனுமதிக்க அரசு தாமதித்தது கண்டிக்கத்தக்கது.

3. சர்க்கரை விலை மிக அதிகமாகப் பன்மடங்கு உயர்ந்திட மத்திய அரசின் நிறுவனமான எஸ்.டி.சியே முக்கிய காரணமாக இருந்திருக்கிறது.

4. சர்க்கரை ஆலைகளின் லாபத்தைப் பெருக்கும் வண்ணம் அவர்களுக்கு ஆதரவாக செயல்பட்ட அமைச்சர்; சர்க்கரை விலை உயர்வுக்கு நியாயம் கற்பித்துப் பேசி வந்தது அவரது பொறுப்பில்லாத் தனத்தையே உணர்த்துகிறது.

இவையும் இன்னும் பல குற்றச்சாட்டுகளும் அவற்றுக்குப் பொறுப்பானவர்கள் பற்றிய விவரங்களும் கியான்பிரகாஷ் கமிட்டியினால் அறிக்கை வடிவில் தரப்பட்டதை; நேர்மை, நீதி, நியாயம், மனச்சாட்சி இவற்றில் அக்கறையுடையவர்களாக மத்திய அரசை நடத்துவோர் இருந்திருப்பின்; ஒருக்கணமும் தாமதமின்றி நாடாளுமன்றத்தில் வெளியிட்டு, நாட்டுக்கும் அறிவித்து, கல்பநாத்ராய் போன்ற அந்த ஊழல் தொடர்பாளர்களை வீட்டுக்கு அனுப்பியிருக்க வேண்டும்.

ஆனால் அதற்கு மாறாக; எலியைப் பிடிக்க மலையைக் கெல்லியது என்பார்களே; அதைப்போல எதிர்க்கட்சிகள் இடைவிடாமல் போராடியல்லவா; ஓர் ஊழல் எலியை ஊரார் மத்தியில் கொண்டு வந்து நிறுத்த வேண்டிய அளவுக்கு ஆகிவிட்டிருக்கிறது!

ஏழை, எளிய, நடுத்தர மக்கள் தொழிலாள வர்க்கத்தினர் வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி, நேரடியாகவும் மறைமுகமாகவும் செலுத்திக் கொண்டிருக்கிற வரிப்பணம்; இப்படிப் பல்வேறு ஊழல் தலைப்புகளில் தனிப்பட்டோர் சிலர்; தடித்து, தழைத்து, செழித்து, சிரித்து வாழ்வதற்குப் பயன்படுத்தப்படும் கொடுமையை எதிர்த்துக் குமரி முதல் இமயம் வரை எரிமலையாய் மக்கள் சக்தி குமுறிக் கிளம்ப வேண்டும்!

இந்தக் கண்டனங்கள் எல்லாம் தி.மு.கழகம் மத்திய அரசைப் பார்த்துப் பாடும் தேவார, திருவாசகங்களா? திருப்பாவையா? அருட்பாவா?

இத்தனையும் மறைத்து விட்டு; அல்லது மக்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் தொண்டர்களும் மறந்திருப்பார்கள் என நினைத்துக் கொண்டு காங்கிரசுடன் என்றைக்குமே உறவு இல்லை எனச் சொல்லவேண்டும்; அப்போதுதான் தி.மு.க.வுடன் கூட்டுப் போராட்டத்திற்குத் தயாராக முடியும் என்ற கருத்துப்பட ஒரு மாநிலக் கட்சியின் செயலாளர் கூறியிருப்பது விந்தையினும் விந்தையாகவன்றோ இருக்கிறது!

* அய்யா! நாம் இணைந்து கூட்டுப் போராட்டம் நடத்துவது பிறகு ஆகட்டும்; இப்போது முதலில் எங்களுடன் போராட்டம் நடத்துவதை நிறுத்திக் கொள்ள முயற்சி செய்யுங்கள்!

* எங்களை நீங்கள்தான் கூட்டுப் போராட்டத்திற்கு அழைத்தீர்கள். மத்திய மாநில அரசுகளின் மக்கள் விரோதப் போக்கை எதிர்த்துக் கூட்டுப் போராட்டம் நடத்திட நாங்கள் தயார்! ஆனால் அதற்கு முன் நாங்கள் காங்கிரசுடன் ரகசிய பேரம் நடத்தினோம்; இப்போதும் நடத்துகிறோம் என்று தொடர்ந்து நீங்கள் கூறிவரும் அபாண்டமான பழியை நீங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டாமா? திரும்பப் பெறுவது என்பது இழிவு எனக் கருதினால் கூட; அப்படி நீங்கள் நினைத்தது தவறு என உணர்ந்து அறிவிக்க வேண்டாமா? தி.மு.க. தலைவரான என்னையும், பொதுச் செயலாளர் பேராசிரியரையும், பொருளாளர் சாதிக்கையும் ஒரு போலிப் பொதுக்குழுவின் மூலம் பொறுப்பிலிருந்து விலக்கி, அண்ணா அறிவாலயத்தையே முற்றுகையிட்டு கைப்பற்றுவோம் என முழங்கி, கழகத்தின் தேர்தல் சின்னம் உதயசூரியனையே யாருக்குமின்றி முடக்கி வைக்க தேர்தல் கமிஷன் முன்னால் வழக்காடியவர்களுடன் இணைந்து கூட்டுப் போராட்டமா? இப்படியொரு குழுவினர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் கிளம்பி, இதுபோன்ற காரியங்களில் ஈடுபட்டால் அந்தக் குழுவினரை இணைத்துக் கொள்ள உங்கள் மனம் இடம் தருமா?

* கூட்டுப் போராட்டத்தில் தி.மு.க.வும் கலந்து கொள்வதை ம.தி.மு.க. வரவேற்கிறது என்று கூறி ம.தி.மு.க. இடம்பெறும் அணியில் தி.மு.க. சேர்வதில் தவறு ஒன்றும் இல்லை என்று இன்று வாதிடுகிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி; கேரளத்தில் - கௌரி அம்மாள் தனியாகப் பிரிந்து புதுக்கட்சி கண்டபோது எடுத்த நிலை என்ன? கௌரி அம்மாளுக்கு ஆதரவு தரும் கட்சிகளைக்கூட அது புறக்கணித்து விமர்சனம் செய்ததை யாராவது மறக்க முடியுமா?

* இந்த ஆண்டு 4.2.1995 பிப்ரவரி 4 ஆம் நாள் கூட; அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற நிர்வாகக் குழுவுக்குப் பிறகு செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு காங்கிரசுடன் கூட்டணி என்ற பேச்சுக்கே இடமில்லை என நான் கூறியிருப்பது எல்லா ஏடுகளிலும் வெளி வந்ததே; அதைக்கூடப் படிக்க மார்க்சிஸ்ட் தலைவர்களே; உங்களுக்கு நேரமில்லையா?

உடன்பிறப்பே, இப்படியெல்லாம் நான் கேட்பதும், இந்தக் கேள்விகளை உள்ளடக்கி ஒரு நீண்ட கடிதம் எழுதியுள்ளதும் உன்னைப் போன்ற உழைக்கும் செயல் வீரர்களின் உணர்வுகளை, மானம் மரியாதையை, யாரிடமும் அடகு வைத்து கூட்டுச் சேர்ந்து எப்படியாவது ஆட்சியில் அமர்ந்து விட வேண்டுமென்பதற்காக அல்ல!

நம்மீது வேண்டுமென்றே, திட்டமிட்டு களங்கம் சுமத்தி, அதையே தினமும் தாரக மந்திரம் போல் ஜபித்துக் கொண்டிருக்கிற மார்க்சிஸ்ட் தலைவர்கள் சிலர்; தங்கள் மனத்தை வேறு எங்கேயோ செல்ல விட்டுவிட்டு - நம்மீது பழி போட்டு தங்களை நல்லவர்களாக காட்டிக் கொள்ள முயற்சி செய்கிறார்களே; அதன் உள்நோக்கத்தை நீயும் புரிந்துகொண்டு, புரிய வேண்டியவர்களுக்கும் புரிய வைக்க வேண்டும் என்பதற்காகத்தான்!

அதற்காக; மார்க்சிஸ்ட் கட்சியுடன் மேடைகளில் சொற்போருக்கு நீ தயாராக வேண்டிய தேவையில்லை!

காரணம்; அவர்களும் மத்திய மாநில அரசுகளின் போக்குகளை எதிர்ப்பவர்களாகவே இருக்கிறார்கள்!

அவர்கள்தான் நம்மீது அவதூறு வீசி நம்மை பலவீனப்படுத்த நினைக்கிறார்கள் என்றால்; அந்த நச்சு நினைப்பு நமக்குத் தேவையில்லை! கூடாது!

அன்புள்ள,

மு. கருணாநிதி

09-03-1995

2250. 95ஆம் ஆண்டுக்கு 77ஆம் ஆண்டில் பதில்!

உடன்பிறப்பே,

"பெரும்பாலான பேச்சாளர்கள், கலைஞரை ஒரு பிடிபிடித்தார்கள். ஜெ. இரண்டாம் பட்சமாகிவிட்டார்."

இப்படி வர்ணனை செய்கிறது கல்கி ஏடு! அதாவது தஞ்சையில் மார்ச் முதல் நாளன்று முன்னாள் அமைச்சர்கள் மூன்றுபேர் ம.தி.மு.க.வுடன் தங்களை இணைத்துக் கொண்ட பொதுக்கூட்ட நிகழ்ச்சி பற்றிய கல்கியின் வர்ணனையில்தான் நான் கோடிட்டுக் காட்டியுள்ள இந்த வரிகள் ஜொலிக்கின்றன.

கல்கியின் அந்த வர்ணனையில் இன்னொரு குறிப்பும் உண்டு. கூட்டத்தைக்கண்ட ஆர்வத்தில் வெளுத்துக் கட்டிய பேச்சாளர்கள் இருவர் பெயர்களைக் கல்கி குறிப்பிடுகிறது. அவர்கள் பேச்சில் கொஞ்சம் ஆபாசமும் உண்டு எனக் கல்கியே எழுதிக்காட்டும் அந்த இருவரில் ஒருவர் கவிஞர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவர் கவிஞர் மட்டுமல்ல; நுகர்வோர் நீதிமன்ற நீதிபதிகளில் ஒருவராகவும் தி.மு.கழக ஆட்சியில் நியமிக்கப்பட்டு; இன்றளவும் அப்பதவியில் நீடிப்பவரும் ஆயிற்றே! இப்படி அன்று பெற்ற பதவிகளில் இன்னமும் நீடிப்பவர்கள் எல்லாம் என்னையும் கழகத்தையும் தூக்கியெறிந்து பேசுவார்களே தவிர; தவறியும் சே! அன்று பெற்ற பதவி இன்று எதற்காக? என்று தூக்கி எறிந்திட முன்வராத மானஸ்தர்களாயிற்றே! அதனால்தான் பேசத்தான் செய்வார்கள்!

கருணாநிதி வீட்டுப் பெண்கள் எல்லாம் வெள்ளைச் சேலை கட்டிக்கொள்ள நேரிடும் என்று கடந்த ஆண்டு வேலூர் கூட்டத்தில் எச்சரித்தவர்கள்; இப்போது தஞ்சையில் தங்களின் நிகழ்ச்சியில் ஜெ. பற்றிப் பேசுவதை இரண்டாவது இடத்துக்குத் தள்ளிவிட்டு, என்னைப் பற்றிப் பேசவே பெரும்பகுதி நேரம் எடுத்துக்கொண்டார்கள் என்று கலைஞரை ஒரு பிடிபிடித்தார்கள்

என்றும் கல்கியே வர்ணித்திடும் அளவுக்கு; அத்துடன் ஆபாசமும் கலந்து அர்ச்சித்தார்கள் என்றும் எழுதப்பட்டுள்ளதைப் படித்து நான் ஒன்றும் நொந்து போய்விடவுமில்லை என் நெஞ்சமும் வெந்துபோய்விடவுமில்லை!

காரணம்; இந்த இயக்கத்தில் அண்ணா அவர்களும் அவருக்கு ஒப்பாக நானும் ஆபாசமான முறையில் அர்ச்சிக்கப்பட்டதைப்போல எந்தவொரு இயக்கத்திலும் யாரும் நாள்தோறும் மாற்றாரால் அர்ச்சிக்கப்பட்டிருக்க மாட்டார்கள்.

அதிலும் வளர்த்த கடாக்கள் மார்பில் பாய்ந்திடும் போது, வழிவழியாக எதிர்ப்பிலே வளர்ந்த மாற்றுக் கட்சிக்காரர்களைக் காட்டிலும் வேகமாகத்தான் பாய்ந்திடும்; விரசமொழி பேசிக் கொண்டுதான் பாய்ந்திடும்; விஷம் தடவிய கொம்புகளுடன்தான் பாய்ந்திடும்; எனினும் அந்தப் பாய்ச்சலைத் தாங்கிக் கொள்ளும் பலத்தையும் பக்குவத்தையும் பெற்றிருந்தது அண்ணாவின் நெஞ்சம்! ஆம்; அது எதையும் தாங்கும் இதயம்! அதனால்தானே அந்த இதயத்தை இரவலாகத் தந்திடு அண்ணா என நான் இறைஞ்சினேன்; வானொலியில் அன்று நான் பாடிய கவிதாஞ்சலியில்!

1961 ஆம் ஆண்டில் வளர்த்த கடாக்கள் சிலவற்றின் தாக்குதல் உச்சகட்டத்திற்குச் சென்றது அண்ணாவின் மீது! அப்போதும் அந்த துரோகக்குழுவில் எப்படியோ சிக்கிக்கொண்ட ஒரு கவிஞர், அறிஞர் அண்ணா அவர்களைப் பற்றி மேடைக்கு மேடை அவதூறு பொழிவதற்குத் தூண்டிவிடப்பட்டார்.

அதுபற்றி அண்ணா அவர்கள்; 1962 ஆம் ஆண்டு தம்பிக்கு எழுதிய கடிதத்தில் அத்தகைய ஆபாசப் பேச்சு குறித்துப் பின்வருமாறு எழுதுகிறார்.

> “தம்பி, வண்டியொன்று வாடகைக்கு வைத்திருந்தால் அதிலே அவ்வப்போது கிடைக்கும் சரக்குகளை ஏற்றிக்கொண்டு போவது போல - ஒரு சமயம் அந்த வண்டியிலே கற்பூரம்! பிறிதோர் சமயம் கருவாடு! நா வாணிபம் நடத்துவோர் இதே போக்கினரே!”

இப்படி நா வாணிபர் குறித்து நயம்பட உரைக்கும் அண்ணா அவர்கள்; தன்மீது கணைபொழியக் கிளம்பிய கவிஞர் ஒருவர் குறித்தும் அதே கடிதத்தில் எழுகிறார்.

உடன்பிறப்பே; நீ கேட்பாய் - என்ன நீ; அண்ணாவின் பழைய கடிதங்களையே எடுத்தெடுத்துக்காட்டி இன்றைய நிலைக்கு விளக்கமளிக்கிறாய் என்று கேட்பாய்! விளக்கமளிக்காமல் வேகப்படவா முடியும்! அண்ணாவின் கருத்துக்களை, பெரியாரின் எண்ணங்களை - அவர்களின் கொள்கை கோட்பாட்டு வழிமுறைகளை எடுத்துக்காட்டாமல்; அவர்களையே என் கடைசி மூச்சு வரையில் தலைவர்களாக ஏற்றுக்கொண்ட எனக்கு; வேறு யார் கூறிய அல்லது எழுதிய கருத்துக்களை எடுத்துக்காட்ட என் மனம் ஒப்பிடும்?

இதோ; அண்ணா எழுதுகிறார் படித்துப்பார்; தணலையும் கனலையும் தரக்குறைவான சொற்களையும் தன்மீது வீசிய ஒரு பழைய கவிஞர் தம்பியைப் பற்றி, தம்பிக்குக் கடிதத்தில்!

> தம்பி, கழகத்தையும் அதிலே ஈடுபாடு கொண்டவன் என்பதால் என்னையும் வரைமுறையற்ற போக்கிலே காங்கிரசார் கடிந்துரைத்தபோது, வரிந்து கட்டிக்கொண்டு, என்பக்கம் வந்துநின்று, வருபவனெல்லாம் வரட்டும் ஒரு கைபார்த்து விடுகிறேன் என்று முழக்கமிட்டவர்களிலே சிலர்தானே இன்று, என்னை ஏசுகிறார்கள்; அதனால் என்ன நட்டம்?
>
> அன்று ஏசியவர்களுக்கு, இன்று ஏசுபவர்கள் தந்த பதில் இருக்கிறதே, அதை ஒரு முறை படித்துப்பார்! உன் கோபம் பஞ்சு பஞ்சாகப் பறந்து போகும்! அவர்களிடம் இரக்கம் எழும்! அன்று அப்படிப் பேசினார்கள்; இன்று இப்படிப் பேசுகிறார்கள்! இது என்ன நாக்கு? இது என்ன போக்கு? என்று கேட்கத் தோன்றும்.
>
> என்னை எவரோ ஏசிவிட்டார்கள் என்று, இன்று என்னை ஏசும் ஒருவருக்குக் கொதிப்பும் கோபமும் அன்று பீறிட்டுக்கொண்டு வந்தது. எடுத்தார் பேனா! தொடுத்தார் பாடல்! கேட்கிறாயா அந்தப் பாடலை!
>
> *“எட்டுத்திசையிலும் நாம் வளர்ந்தோம் - நமை*
> *எத்திப் பிழைப்பவர் சீறுகின்றார் - அண்ணன்*
> *சுட்டுவிரற்கடை தூக்கிவிட்டால் - அவர்*
> *தூளுக்கும் தூள் எனக் கூவிடடா!*
> *பட்டவடுக்களைக் காட்டிடடா - அதில்*

பாடும் துணிவினைக் கூறிடடா - இனித்
துட்டர்கள் பின்புறம் தாக்கவந்தால் - அவர்
தோளெங்கள் தாளுக்கென் றோதிடடா!

எப்படித் தம்பி, பாடல் சுவைமிக்கதாக இல்லையா? ஆம் என்பாய்! நம்மால் இதுபோலப் பாட வரவில்லையே என்றுகூட ஆயாசப்படுவாய்! ஆனால், தம்பி! உனக்கு இதுபோலப் பாடத் தெரியாவிட்டாலும் பரவாயில்லை; ஏனெனில் இப்படியும் பாடிவிட்டுப் பிறிதோர் நாள் என்னை இழித்துப் பாடவும், தூய தமிழையும் கவிதைத் திறனையும் நீ பயன்படுத்தாதிருந்தால் போதும்! எனக்காகச் சொல்லவில்லை - தமிழுக்காக - கவிதைத் திறனுக்காக - மரபின் மாண்புக்காக!

கர்ண கடூரச் சொற்கொண்டு, ஆபாச அர்ச்சனை புரிந்த அந்நாள் கவிஞர் ஒருவரின் மேடைத் தாக்குதலுக்கு அண்ணா எழுதிய பதிலின் ஒரு பகுதி இது! ஆம், 1960ல் புகையத் தொடங்கி, 1961, 62ஆம் ஆண்டுகளில் துரோகத்தின் முழுவடிவம் தோற்றமளித்தபோது அண்ணா தீட்டிய கடிதங்கள் இந்த இயக்கத்தின் சோதனை கால வரலாற்று இலக்கியங்கள்! அந்த இலக்கியம்தான் இப்போதும் நமக்குப் பயன்படுகிறது!

கல்கி, எழுதுகிறதே தஞ்சையைப் பற்றியும் - அந்தத் தஞ்சை நிகழ்ச்சியில் கவிஞர் ஒருவர் என் மீது ஆபாசத்தாக்குதல் நடத்தி ஒரு பிடிபிடித்தார் என்பது பற்றியும்! அதைப் படிக்கும்போது அண்ணாவின் இதயத்தில் அன்றெழுந்த நினைவு அலைகள்தான் என் இதயத்திலும் எழுகின்றன! இன்று தஞ்சையில் என்னைத் தாக்கியவர்; அன்று 1977ஆம் ஆண்டு நாவலரும் அவருடன் சிலரும் கழகத்திலிருந்து விலகிச் சென்று அப்போது ஒரு ம.தி.மு.க. கண்டனரே; நினைவிருக்கிறதா? மக்கள் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரில்! அது கண்டு கொதித்துப் போய் ஒரு கவிஞர் பாடினார் - இதோ அந்தக் கவிதை

"பரிசுத்தம் ஆகிறது கழகம்! இங்கே
பாவத்தை வித்தவர்கள் - லஞ்சம் வாங்கி
தறிகெட்டுப் போனவர்கள் எல்லாம்; ஓடி
தப்பிக்க முயலுகின்றனர்! தப்பிக் கட்டும்!
நரி எங்கே போனாலும் பரவா யில்லை

நன்றியுள்ள மனிதரெல்லாம் இருப்போம் இங்கே
எரிகின்ற விண்மீன்கள் எரிந்த பின்னே
எஞ்சிநிற்கும் விண்மீன்கள் இரவை மீட்கும்

கடல்வற்றிக் கருவாடு உண்ப தற்குக்
குடல்வற்றிக் கொண்டிருந்த கொக்கே! நீங்கள்
அடலேறு வாயிருந்தால் கொள்கை என்னும்
அனலுக்குள் தங்கமாக விழுக்கூடாதா?
முடத்தெங்கு போல்மாற்றார் வீட்டை நோக்கி
முட்டையிட ஓடிவிட்டீர் இளநீர் காயை
நடவுநட்டோர் களைகளையா நடுவர்! உங்கள்
நஷ்டத்தில் எங்களுக்கு இலாபம் உண்டு

பதவியினால் உயர்ந்தீர்கள் உங்களுக்கு
பாடுபட்டு கிழிந்துபோன கோணித் துண்டு
மதிலோரம் கிடக்கிறது! கழகத் தொண்டன்
விழிகளிலே தள்ளாடும் வெளிச்சத் துண்டு
மெது மெதுவாய் அணைகிறது! அவன்கு டும்பம்
மெருகெல்லாம் உருகிப்போய் எதிர்காலத்தின்
புதுச்சேவல் கூவினாலும் எழுந் திருக்க
முனைகிறது முடியவில்லை! ஆனால் நீங்கள்

வேலியோரம் சோரமன்றோ போகின் றீர்கள்
வீதிகளில் விழாஎடுக்க கழகத் தொண்டன்
தாலியினை அடகுவைத்தான்! சுலபமாகத்
தாண்டுகின்றீர் தாவுகின்றீர் அடுத்த கட்சி!
கோலியோடும் புத்தியெல்லாம் உங்களுக்குக்
கிழவயதில் வருமென்று நினைக்கவில்லை
கூலிக்கு மாரடித்து வாழ்வதற்கா
குழைந்தீர்கள் நெளிந்தீர்கள்! நீங்கள் எல்லாம்

வளமாக வாழ்வதற்கு பலபேர் இங்கே
வசந்தத்தை கிழமாக்கிச் செத்துப் போனான்
களங்கண்டான் சிறைச்சாலைப் பிணமாய் ஆனான்
கல்லறைக்குப் போனானே அவனின் பிள்ளை

இளநீர் போல் இருக்கின்றான் அவனுக் காக
நீங்கள் ஏன் தொண்டாற்ற வரக்கூடாது?
குளத்துக்குள் மீனிருந்தால் இருப்பீர் பின்பு
குளம் வற்றிப் போய்விட்டால் ஓடுவீரோ!

அதே கவிஞர்தான் இப்போது தஞ்சையில் என்னையும் கழகத்தையும் வசைபாடியதாகக் கல்கி குறிப்பிடும் கவிஞர்! 1995 கவிஞருக்கு 1977 கவிஞரின் பாடலே பதிலாக இருக்கும்போது உடன்பிறப்பே; எனக்கும் உனக்கும் ஏன் வீண் கவலை?

அன்புள்ள,

மு. கருணாநிதி

10-03-1995

2251. நாகையில் நடந்த கழக மாநில மாநாடு!

உடன்பிறப்பே,

நாகையில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேச வேண்டுமென்றுதான் அழைத்தார்; கீழத்தஞ்சை மாவட்டப் பொறுப்பாளர் நண்பர் அம்பலவாணன்! அம்பலவாணன் என்றாலே; அம்பலத்தில் ஆடுபவர் என்றுதானே ஆத்திகர் பொருள் உரைப்பர்! இவரோ ஆட்டம்போட்டு ஆரவாரம் செய்தறியாத அமைதியின் உருவம் - இவரா இத்தனை பெரிய எழுச்சிக் கோலத்தை நாக்குத் தமிழ்மணக்கும் நன் நாகையில் ஒரு மாநில மாநாட்டு அளவுக்கு நடத்திக் காட்டினார் என்று நான் ஆச்சரியத்தில் மூழ்கிப் போனேன்! அவருக்குத் துணையாகத் தம்பி கோ.சி. மணியும்; கீழத் தஞ்சை மேலத்தஞ்சை மாவட்டக் கழகங்களின் பல்வேறு ஒன்றிய, நகர, கிளை அமைப்புக்களும் இணைந்திருந்து இந்த மகத்தான வெற்றி மாநாட்டை நடத்தி, நாகையை மட்டுமின்றி நாகையைச் சுற்றிப் பல கல் தொலைவுக்குக் குலுங்க வைத்துவிட்டனர் என்றே கூறவேண்டும்.

திருவாரூரில் இருந்து பதினான்கு கல் தொலைவு நாகை நகரம்! மாலை நாலரை மணியளவில் நானும் கழகப் பொருளாளர் வீராசாமியும், தம்பி கோ.சி. மணியும், தம்பி டி.ஆர். பாலுவும், நண்பன் தென்னனும் - எங்களைத் தொடர்ந்து எண்ணற்ற கார்களில் கழக முன்னணியினர் பலரும் காட்டூரில் உள்ள அன்னை அஞ்சுகம் நினைவிடத்துக்குச் சென்று வணங்கிவிட்டு; தம்பி ஜான் இல்லத்திருமணத்திற்குச் செல்லவே; மக்கள் கடலைக் கிழித்துக் கொண்டுதான் மேடையை அடைய முடிந்தது.

அங்கிருந்து 14 கல் தொலைவும் நாகை வரையில், சாலையின் இருபுறமும் என்றில்லை; சாலை முழுவதுமே மக்கள் வெள்ளம்தான்!

பழுத்த மட்டைக் கிழங்கள் என்மீது குவிந்து பாசம் பொழிந்தன! பச்சை மட்டை வாலிபர்களோ; இயக்கமிடும் கட்டளைக்கு எதற்கும் தயார் என்ற நிலையில் கச்சை கட்டி வானதிர வாழ்த்து ஒலித்தனர்! தெங்கின் இளங்குருத்துக்களோ பொங்கி எழும் அலைக்கொந்தளிப்பாய் அணிவகுத்தனர்! உடன்பிறவாச் சகோதரிகள், சகோதரர்கள், நஞ்சை குலுங்கும் அந்தத் தஞ்சைத் தரணியில் என் நெஞ்சையள்ளும் விதத்தில் வாஞ்சை காட்டி, வழிநெடுக வரவேற்பு வழங்கியபடி இருந்தனர்.

'மணீ; நாகை பொதுக்கூட்ட மேடைக்குப் போய்ச் சேருமுன் நாகை நகர் எல்லையில் எங்காவது ஒரு விடுதியில் சில விநாடிகள் இறங்கி, முகம் கழுவிச் செல்ல வாய்ப்பு வசதி உண்டா?' என்று கேட்டேன். 'நாகையில் தனியார் பங்களா ஒன்றும், அரசின் விடுதியொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் அந்த இரு இடங்களுக்கும் செல்ல வழிகிடையாது - காரணம்; அந்த அளவுக்கு வாகனங்களும், மக்கள் நெருக்கமும் வீதிகளை அடைத்துக் கொண்டிருக்கின்றன' என்றார் தம்பி கோ.சி. மணி!

பிறகுதான் நினைவு வந்தது; நாகைக்கு அருகில் சிக்கல் எனும் சிங்காரவடிவேலர் கோயில் இருப்பதும், அந்தக் கோயிலுக்கு ஒரு தேவஸ்தானத் தங்கும் விடுதி இருப்பதும்!

காரை விட்டிறங்கி அந்த விடுதிக்குள் நுழைவதே பெரும்பாடாகி விட்டது. அவசரத்தில் அத்தனை பெரும் கூட்டத்தில் அந்த விடுதியைத் திடீரென ஏற்பாடு செய்து எங்களை அழைத்துச் சென்றவர்கள் திருவாரூர் ஒன்றியத்து ஆர்.பி.எஸ். ஸும், திருவாரூர் நகரத்துக் கண்ணையனுமாவார்கள்.

எட்டுமணியளவில்தான் மேடைக்குப் போய்ச் சேர்ந்தோம். எப்படி சென்னையில் உள்ள அண்ணா அறிவாலயம் இங்கு வந்தது? என என் விழிகள் மட்டுமல்ல; என்னுடன் வந்த எல்லோருடைய விழிகளும் விரிந்தன!

அப்படியொரு அற்புதமான மேடையமைப்பு - அவுரித் திடலின் பரப்பளவு போதாமல்; எப்படியெப்படியோ அந்தத் திடலை விரிவுபடுத்தியும்கூட; இடம் கொள்ளவில்லை.

"எங்கெங்குக் காணினும் சக்தியடா
ஏழுகடல் அவர் வண்ணமடா"

என்று புரட்சிக் கவிஞர், கவிதைப் புறாவாக சிறகடித்துக் கிளம்பிய போது முதன் முதலாகப் பாரதியாரின் முன்னால் பாடினாரே; அந்தப் பாடலை மாற்றி -

"எங்கெங்குக் காணினும் மக்களடா;
எழில் நாகை நகர் குலுங்குதடா!"

என்று பாட வேண்டும்போல் தோன்றிற்று! ஆண் பெண் சமத்துவம் வேண்டுவோர் ஆண்பாதி பெண்பாதி என்பார்களே; அப்படியொரு தாய்மார்கள் கூட்டம் -

யார் யாரை மிஞ்சினார்கள் என்ற கேள்விக்கே பதில் கிடைப்பது மெத்தவும் சிரமம்! ஆம்; விவசாயப் பாட்டாளிகள் திரண்டு வந்தனர்! தொழிலாளர் வர்க்கம் தொகை தொகையாக! நடுத்தர வர்க்கத்தினர் நாலாதிக்கிலும் பரவிக் கிடந்தனர்! இளைஞர்கள் எங்கேயோ போய்விட்டனர் என்று வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ? என்ற பேச்சுக்கு, சம்மட்டியடிப் பதிலாக அந்தச் சமுத்திரத்தில் பெரும் பகுதி இளைஞர்களின் அலையாகவே இருந்தது.

அதுவும் நாகை இளைஞர்கள் சாமான்யப்பட்டவர்களா?

உடன்பிறப்பே, இக்கடிதத்தின் தொடக்கத்தில் நாக்குத் தமிழ் மணக்கும் நன் நாகை என்ற சொற்றொடர் ஒன்றைப் பயன்படுத்தியிருக்கிறேனே; கவனித்தாயா?

அதற்கோர் கதையுண்டு! காளமேகப் புலவர் கேள்விப்பட்டிருப்பாய்! சிலேடையாகப் பாடல் புனைவதில் சிறந்த மேதை! அவர் ஒருசமயம் யாத்திரை புறப்பட்டுப் பல ஊர்களையும் கடந்து வந்தபோது நாகைக்கு வந்தாராம்! புலவருக்கு நல்ல பசி! எங்கேயாவது ஒரு உணவுக் கடையில் சோறு வாங்கிச் சாப்பிடலாம் என்ற நினைவில்; அங்கே கோயிலருகே கோலி விளையாடிக் கொண்டிருந்த இளைஞர்களைப் பார்த்து, 'தம்பி, சோறு எங்கே விற்கும்?' என்று கேட்டிருக்கிறார். உடனே ஒரு குறும்புக்கார இளைஞன், 'சோறு, தொண்டையிலே விக்கும்' என்று கூறிச் சிரித்திருக்கிறான். சினம் கொண்ட காளமேகப் புலவர், அந்த இளைஞர்களை சபிப்பதற்காக; ஒரு கரித்துண்டை எடுத்து சுவரில் எழுதினார்.

'பாக்கடிக்கும் பாலகர்க்கு நாக்கு...' என எழுதி, முடிப்பதற்குள் கோயில் மணி அடிக்கவே காளமேகம் கோயிலுக்குச் செல்லும்

பரபரப்பில் எழுதியதை சுவரில் அப்படியே விட்டு விட்டுப் போய்விட்டார். கோயிலில் உணவு வாங்கிச் சாப்பிட்டு விட்டு, வெளியில் வந்து, அந்த இளைஞர்களுக்கு; தான் இடப்போகும் சாபத்தைப் பூர்த்தி செய்ய; மீண்டும் கரித்துண்டை எடுத்து சுவர் அருகே சென்றார். ஆனால் அவருக்கு முன்பே அந்த இளைஞர்கள் அந்த வாசகத்தைப் பூர்த்தி செய்திருந்தார்கள்;

"பாக்கடிக்கும் பாலகர்க்கு,
நாக்குத் தமிழ் மணக்கும் நன் நாகை"

என்பதாக!

அந்த இளைஞர்களைத் தண்டிக்க நினைத்த காளமேகமே அவர்களின் தமிழ்ப் புலமை கண்டு பூரித்துப் போனார் என்றால்; அந்த நன்நாகையில் நாக்குத் தமிழ் மணக்கும் நல் இளைஞர்கள், பல பகுதிகளிலுமிருந்து அண்ணா சுடர்களை ஏந்தி மேடைக்கு வந்தபோதும், கழகத்தின் பால் கொண்ட பற்று பாசத்தைக் கண்ணொளியால் உணர்த்தி உற்சாக மேலீட்டால் ஒலி முழக்கமிட்ட போதும்; என்னை நான் மறந்தேன் என்பது வியப்பில்லை அல்லவா?

நான் காண்பது கனவல்ல; கனவில் வரும் கூட்டமல்ல; ஆனால் ஓர் அதிசயம் அங்கே நடைபெற்றிருக்கிறது! உலோகத்தைப் போல் உருக்கியோ; மண்ணைப் போல் உருட்டியோ; நீரைக் கொண்டு உருவங்களை அமைக்க முடியாது! எனினும் அன்று நாகையில் அலை பாய்ந்த கடல் நீர் அவ்வளவும்; தாமே தம்மை மனித உருக்களாக்கிக் கொண்டு அந்த மாநாட்டுக் கூட்டத்தில் அமர்ந்திருந்தது என்று சொன்னால்; இதனை வெறும் வர்ணனை என ஒதுக்கி விட முடியாது!

இந்த வர்ணனையில்தான் வஞ்சகத்தைத் பொடிப்பொடியாக்கும் வாளின் சுழற்சி பிணைந்திருக்கிறது - இந்த வர்ணனையில்தான் இழப்புக்கள் ஆயிரம் வரினும் - இடையூறுகள் அடுக்கடுக்காய் படை எடுப்பினும் இடறியெறிந்து எதிர்நீச்சல் போடும் ஆற்றலும்; அந்த ஆற்றலுக்குக் கிடைக்க இருக்கும் வெற்றியும் இணைந்திருக்கிறது.

மமதையாளர் தலையில் இருக்கும் மகுடத்தை அகற்றிடும் மக்கள் சக்தி; திராவிட முன்னேற்றக் கழக அணியின் பக்கமே

இருக்கிறது; இன்னமும் வந்து சேர்ந்து கொண்டேயிருக்கிறது என்பதற்கான ஏற்றமிகு எடுத்துக்காட்டே;

நாகையில் நடத்தப்பட்ட கழகத்தின் மாநில மாநாடு போன்ற பொதுக்கூட்டமாகும்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

16-03-1995

2252. கண்துடைப்பு பட்ஜெட்டுகளால் கவலை தீராது!

உடன்பிறப்பே,

* ஆதரவற்ற முதியோருக்கு ஆதரவாக அரசு வழங்கி வந்த உதவித்தொகை ரூபாய் 35 லிருந்து ரூபாய் 50 ஆக 1.5.1989 முதல் உயர்த்தப்பட்டது மட்டுமின்றி; உதவி பெறும் முதியோர் எண்ணிக்கைக்கு விதிக்கப்பட்டிருந்த வரம்பு முற்றிலும் நீக்கப்பட்டு விட்டது. அதனால் தகுதியுடைய அனைவரும் இந்த உதவி பெற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

* முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் அய்ந்து லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் மாதம் 50 ரூபாய் பெற்று வருகிறார்கள். அவர்களுக்கு இலவச வேட்டி சேலைகளும் வழங்கப்பட்டன.

* குடும்பத்தலைவர்கள் இழந்த ஏழைக் குடும்பங்களுக்கு 1989 -ல் கொண்டு வந்த உதவித் திட்டமான ரூபாய் இரண்டாயிரம் நிதியளிக்கும் திட்டத்தை 1.4.1990 முதல் ரூபாய் மூவாயிரமாக அரசு உயர்த்தியுள்ளது.

* கருவுற்ற ஏழைத் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து உணவுக்காக நாலு மாதங்களுக்கு; பிரசவத்திற்கு முன்னும் பின்னும் ரூபாய் 50 வீதம் ரூபாய் 200 வழங்கப்படும் புதிய திட்டப்படி சுமார் 3 லட்சத்து 70 ஆயிரம் பெண்கள் பயனடைந்துள்ளார்கள்.

உடன்பிறப்பே, நான் குறிப்பிட்டுள்ள இந்த நான்கு மனிதநேயத் திட்டங்களும், கழக ஆட்சியில் அறிவித்து நிறைவேற்றப்பட்ட பல்வேறு மனித நேயத் திட்டங்களில்

அடங்கியவைகளாகும். இந்த நான்கு திட்டங்களைத் தவிர இன்னும் ஏராளமான - ஏழை எளியோர்க்கென வகுத்து நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் உண்டு.

இக்கடிதத்தில் இந்த நான்கையும் மட்டும் குறிப்பிட்டுள்ளதற்குக் காரணம் : இதுபோன்ற திட்டங்களால் தேசம் முன்னேறாது - தேசத்தின் பொருளாதாரம் வலிவோடு வளராது என்றெல்லாம் பல்லவி இசைத்துக் கொண்டிருந்த மத்திய காங்கிரஸ் அரசினர் இப்போது நமது கழக ஆட்சியின் நான்கு திட்டங்களையும் இந்த ஆண்டு மன்மோகன் சிங் அறிவித்துள்ள மத்திய அரசின் நிதி நிலை அறிக்கையில் பிரதானமாகப் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

மாநில அளவில் நாம் நமது ஆட்சியில் நிறைவேற்றிய இத்தகைய திட்டங்களை அகில இந்திய அளவில் 90 கோடி மக்கள் தொகையினூடே மத்திய ஆட்சியாளர்கள் எப்படி நிறைவேற்றப் போகிறார்கள் என்பது ஒருபுறமிருக்க; பட்டதற்குப் பிறகாவது புத்தி வந்ததே என்பது போல் ஆந்திர, கர்நாடக, மராட்டிய, குஜராத் தேர்தல் தோல்விகளுக்குப் பிறகாவது இந்த சிந்தனை வந்ததே என்று ஓரளவு ஆறுதல் பெறலாம்.

கடப்பாரையை விழுங்கிவிட்டுச் சுக்கு கஷாயம் சாப்பிடுவது என்ற பழமொழிக்கேற்ப, இந்தியா சுதந்திரம் பெற்ற ஏறத்தாழ 50 ஆண்டுகள் நெருங்கி விட்டன என்ற நிலையில் இப்போதுதான் மத்திய ஆட்சியாளர்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழேயுள்ள மக்களைப் பற்றி எண்ணத் தொடங்கியிருக்கிறார்கள்.

பல்வேறு எதிர்க்கட்சித் தலைவர்கள் சுட்டிக்காட்டியிருப்பது போல விரைவில் வரக் கூடிய தேர்தலை நினைவில் வைத்துக்கொண்டு, சில சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. ரயில்வே பட்ஜெட்டும் மத்திய அரசின் பட்ஜெட்டும் புண்ணுக்குப் புனுகு தடவும் வேலையைச் செய்திருக்கின்றனவே தவிர; புண்ணே தோன்றாமல் இருப்பதற்கு இதுவரையில் என்ன தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற கேள்விக்கு மௌனம் சாதிக்கவே விரும்புகின்றன! காரணம் சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வருவதற்கு?

தொழிலை வளர்க்கிறோம், தொழிலாளரை வாழ வைக்கிறோம் என்ற பெயரில்; கொழுத்த முதலாளி வர்க்கத்துக்கும்

கோமான்களுக்கும் சீமான்களுக்கும் கொத்தடிமைகளாகவே இருந்துவிட்டனர் இத்தனை ஆண்டுக் காலம்!

ஏதோ, மின்னல் கீற்று வெளிச்சம் போல ஒன்றிரண்டு காரியங்களை ஏழை எளிய மக்களுக்கெனப் பட்டியலிட்டு அறிவிப்புப் பலகை தொங்கவிட்டனரேயல்லாமல்; அறிவித்தவைகளையாவது முழுமையாக நாடு முழுதும் செயல்படுத்தி முடித்தனரா என்றால் அதற்குக் கிடைக்கும் பதில்; இல்லை! இல்லவே இல்லை! என்பதுதான்!

ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாகக் காங்ரீட் வீடு கட்டித் தரும் திட்டம் கழக ஆட்சியில்தான் தொடங்கப்பட்டது இந்தியாவிலேயே, முதன்முறையாக! அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, பாபு ஜெகஜீவன்ராம் போன்றவர்கள் பாராட்டினர், வாழ்த்தினர்! அப்போது தமிழகம் வந்திருந்த மத்திய அமைச்சர் பகாடிய என்பவர்; ஆதிதிராவிடர்க்குக் கழக அரசு இலவச வீடு கட்டும் திட்டத்தைக் கேலி புரிந்து பேசியதோடு; அந்த வீடுகளை கருணாநிதி, அக்ரகாரத்தில் கட்டித் தருவாரா என்றும் கேட்டார்.

ஆனால் இன்றைக்கு நிலை என்ன? அன்று கழக அரசு முதன்முதலாக இந்தியாவில் தொடங்கி நடத்திய அந்தத் திட்டத்தை ஆதரிக்கவும் அதற்கு மானியம் வழங்கவும்கூட இன்றைய மத்திய அரசு முன்வந்துள்ளதென்றால்; கடந்த காலத்தை எதிர்க் கட்சிகளின் மீது காழ்ப்புணர்வு காட்டுவதிலேயே காங்கிரசார் கழித்துவிட்டனர் என்பதும் - ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் எனும் அந்த எண்ணம் அவர்கட்கு எள்முனையளவும் இல்லாமற் போய்விட்டது என்பதும்தானே காரணம்!

ரயில்வே பட்ஜெட்டில் பயணிகள் கட்டண உயர்வு சாதாரண மக்களுக்கு இல்லையெனினும்; சரக்குக் கட்டணத்தினால் பாதிக்கப்படப்போவது அந்த சாதாரண மக்கள்தான் என்பதை மறந்துவிட முடியுமா?

கர்நாடக மாநிலம் மட்டுமே இந்தியா என்று கருதிக் கொண்டிருக்கிற ஒருவர் ரயில்வே அமைச்சராக இருந்து கொண்டு, தமிழ்நாட்டை முற்றாகப் புறக்கணித்து வருகிறாரே; அதை எதிர்த்துத் தமிழகக் கட்சிகள் எழுப்பும் குரலுக்கான ஆறுதலாவது,

இந்த ஆண்டு ரயில்வே பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ளதா என்றால் இல்லை! கிடையாது!

இவ்விரு பட்ஜெட்டுகளைப் பற்றியும் நாட்டில் உள்ள சகல எதிர்க்கட்சிகளும் விமர்சனம் செய்துள்ளன. சாதாரண காலங்களிலேயே இவர்களின் பட்ஜெட் அறிவிப்புகளுக்கும் செயல்பாடுகளுக்கும் தொடர்பு இருப்பதில்லை. அதிலும் தேர்தலை மனத்தில் வைத்துக் கொண்டு தீட்டப்பட்டுள்ள இந்த பட்ஜெட்டுகளினால் ஏழைப் பாமர மக்களைச் சென்றடையப் போவது என்ன? பத்து பேர் கையில் பனிக்கட்டி மாறி மாறி, இறுதியாக ஒரு துளி மிஞ்சிய கதையாகத்தான் முடியும்!

கட்டணச் சலுகை, வருமான வரிச் சலுகை, தீர்வைச் சலுகை போன்றவைகள் சாதாரண நிர்வாக நடைமுறையில் பயன்தரக்கூடும்; பணம் படைத்த பயனாளிகளுக்கு!

ஆனால் மன்மோகன்சிங் அறிவித்துள்ள ஏழை எளியோர்க்கான உதவித் திட்டங்களை நிறைவேற்றிட; அத்திட்டங்கள் நேர்மையாளர்களின் நேரடிப் பார்வையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமே!

நேர்மையாளர்களின் சதவிகிதம் குறைந்துவரும் காலகட்டமாகவன்றோ இது இருக்கிறது!

அதிலும்; மத்திய பட்ஜெட்டில் 90 கோடி மக்களில் 75 ரூபாய் ஓய்வூதியத்தினால் சுமார் ஒன்றரைக் கோடி மக்கள் பயன்பெறுவார்கள் என்று குறிப்பிடப்படுகிறது.

1990ல் எடுத்த புள்ளி விபரப்படி இந்தியாவில் 80 கோடி மக்களில் இரண்டரைக் கோடி மக்கள் பட்டினி கிடக்கிறார்கள் என்றும், இது கி.பி. 2000 ஆம் ஆண்டில் 6 கோடி மக்கள் பட்டினி என்ற அளவுக்கு உயரும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

பாரதத்தில் பட்டினி கிடக்கும் பஞ்சைப் பராரிகளின் கணக்கு மட்டுமே இது! வறுமைக் கோட்டிற்குக் கீழே வீழ்ந்து கிடக்கும் மக்கள் ஏறத்தாழ நாற்பது சதவீதத்திற்கு மேலிருக்குமேயன்றி குறையாது!

இந்தச் சோகமான கொடுமை, இன்றுள்ள அரசியல் தட்பவெப்பத்தில் மேலும் வளரக்கூடியதே தவிர வலிவிழக்கக் கூடியதல்ல!

இக்கொடுமை, இனியாவது ஒரு கட்டத்தில் தடுத்து நிறுத்தப்பட திட்டவட்டமான நடவடிக்கை தேவை!

அதற்கான திட்டங்களை உள்ளடக்கியதாக இல்லாமல்; அதிகாரங்கள் அனைத்தையும் தனது காலடியில் வைத்துக் கொண்டு; ஆண்டுக்கொருமுறை பட்ஜெட்டுகளை மட்டும் படித்துவிட்டுப் போவதால்; பிரதமர், நிதியமைச்சர் என்ற பதவிகளில் நம் வீட்டுக்காரர் இருந்தார் என்ற அவர்களின் வீடு, கௌரவம் பெறுமே தவிர; நாடு கௌரவமும் பெறாது! நலிவும் நீங்காது! எனவே கண்துடைப்புப் பட்ஜெட்டுகளால் கவலை தீரப் போவதில்லை!

அன்புள்ள,

மு. கருணாநிதி

17-03-1995

2253. காலமும் மன்னிக்காது; காவிரி நதிதீரத்து மக்களும் இவர்களை மன்னிக்கமாட்டார்கள்!

உடன்பிறப்பே,

எதிர்க்கட்சியினர் எடுத்துச் சொல்லும் கருத்துக்களுக்கு மதிப்பு அளிக்கவோ, உரிய பதிலை அளிக்கவோ தேவையில்லையென்ற நினைப்புடனும்; பதில் அளித்தே தீரவேண்டுமென யாராவது பிடிவாதமாகக் கேட்டால், வெளியேற்றிவிடும் அதிகாரத்தை எந்தநேரத்திலும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையுடனும்; ஆளுங்கட்சியைச் சிக்கவைக்கும் கேள்விகளுக்கோ - எடுத்து வைக்கும் வாதங்களுக்கோ பதில் ஏதும் பகராமல் உண்மைக்கு மாறான தகவல்களை அவையில் சொல்லி; அவற்றைப் பத்திரிகைகளிலும் வெளிவருமாறு செய்துவிடலாம் என்ற அதிகாரத் தோரணையுடனும் இன்றைய ஆட்சியாளர்கள் கடந்த மூன்று நான்கு ஆண்டுக்காலமாகவே செயல்பட்டு வருகின்றனர்.

பேரவையில் கழக உறுப்பினர் தம்பி பரிதி இளம்வழுதி பேசும்போது முதலமைச்சர் ஜெயலலிதாவும், ஏனைய அமைச்சர் பரிவாரத்தினரும் குறுக்கிட்டுக் குறுக்கிட்டு, தி.மு.கழக ஆட்சியையும் என்னையும் பற்றிய உண்மைக்கு மாறான தகவல்களை அவையில் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாகக் காவிரி பிரச்சினை பற்றி ஒரு அமைச்சர் பரிதி இளம்வழுதியின் பேச்சில் குறுக்கிட்டு, காவிரிப் பிரச்சினை பற்றிப்பேச, தி.மு.க.வுக்கு, தகுதியும் உரிமையும் கிடையாது. ஏனெனில் இந்திராகாந்தி காலத்தில் காவிரி நீர் வழக்கை வாபஸ் பெற்றது தி.மு.க. ஆட்சி என்று குற்றம் சாட்டியிருக்கிறார்.

அன்றைய பிரதமர் இந்திரா, காவிரி நீர்ப்பிரச்சினை பேச்சுவார்த்தையில் மீண்டும் மத்திய அரசு முன்னின்று தீர்வு காண்பதற்கு; இப்போது தொடரப்பட்டுள்ள வழக்கு இடையூறாக இருக்கிறது என்றும் அதனைத் திரும்பப் பெற்றுக்கொண்டு பேச்சுவார்த்தை நடத்துவது நலமென்றும் எடுத்துக்கூறி கேட்டுக்கொண்டதின் பேரில் அந்த வழக்கை மீண்டும் எப்போது வேண்டுமானாலும் தொடரலாம் என்ற நிபந்தனையுடன் திரும்பப் பெறப்பட்டது என்ற கருத்தை அமைச்சருக்கு விடையாக இளம்வழுதி அளித்துள்ளார்.

அப்படித் திரும்பப்பெற்று பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்தி ஒரு நல்ல முடிவு ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவானபோதுதான் கழக ஆட்சி 1976-ல் கலைக்கப்பட்டது.

1977-ல் ஆட்சிக்கு வந்த அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள்; அவர் ஆட்சி நடத்திய ஏறத்தாழ பத்தாண்டு காலத்தில் அந்த வழக்கை மீண்டும் தொடரக்கூடிய வாய்ப்பு இருந்தும்; ஏன் அந்த வழக்கைத் தொடரவில்லை என்பதை இன்றுள்ள அமைச்சர்களோ, முதலமைச்சரோ விளக்க முடியுமா?

கழக ஆட்சியின்போது காவிரிப் பிரச்சினை குறித்து வழக்கு தொடரப்பட்டபோதும்; இந்திரா காந்தியின் வேண்டுகோளின்படி வழக்கு திரும்பப் பெறப்பட்டபோதும்; சட்டசபையில் இடம் பெற்றிருந்த அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டங்களைக் கூட்டித்தான் அவற்றுக்கான ஒப்புதல் பெறப்பட்டிருக்கிறது.

முதலமைச்சர் கருணாநிதி, காவிரிப்பிரச்சினையில் தானாகவே முடிவெடுத்தார்; யாரையும் கலந்து ஆலோசிக்கவில்லையென்று எனது அமைச்சரவையில் ஒருவராக இருந்து நாவலரும், இளம்வழுதியின் பேச்சில் குறுக்கிட்டு ஜெயலலிதாவுக்கு சார்பாக, ஓர் உண்மைக்கு மாறான செய்தியைக் கூறியிருக்கிறார்.

காவிரிப்பிரச்சினைக்காக தி.மு.க. ஆட்சியில் நடத்தப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டங்களில் நாவலரும் கலந்து கொண்டதுண்டு - கோட்டையில் அதிகாரபூர்வமாக நடைபெறும் அமைச்சரவைக் கூட்டங்களேயன்னியில் நாள்தோறும் கடற்கரையில் மாலை நேரத்தில் நாவலர் போன்ற முக்கியமான அமைச்சர்கள் கலந்து பேசி, அந்த முடிவுகள் அமைச்சரவையிலும் சட்டப்பேரவையிலும் நடைமுறைப்படுத்துவதற்காக

நிறைவேறியதுண்டு. இன்றைக்கு நாவலர் போன்றவர்களுக்கு உள்ள நிலைமை போல், முதலமைச்சரின் தரிசனத்திற்காக முழங்கால் வலியெடுக்கத் தவங்கிடக்க வேண்டிய நிலைமை; அன்றைக்கு இல்லை என்பதை நாவலரின் மனச்சாட்சியே கூறும். அன்றிருந்த அமைச்சர்கள் எந்த நேரத்திலும் முதலமைச்சருடன் எந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்கவும் உரிமையும், வாய்ப்பும், இவற்றுக்கெல்லாம் மேலாக அந்த அமைச்சர்களை மதிக்கும் மனப்பாங்கும் அன்று முதலமைச்சராக இருந்த என்னிடமிருந்தது என்பதை நாவலர் மறுப்பாரேயானால்; அவர், கேவலம் பதவிக்காகத் தனது மனச்சாட்சியையும் விற்று விட்டார் என்றுதான் கருதவேண்டும்.

உடன்பிறப்பே, காவிரிப் பிரச்சினை பற்றி 1968 முதல் 1989 வரையில் வீரேந்திர பட்டீலுடன், தேவராஜ் அர்சுடன், அச்சுதமேனனுடன், மத்திய அமைச்சர்களான கே.எல்.ராவுடன், பாபுஜெகஜீவன்ராமுடன் என்று எத்தனையோ முதலமைச்சர்கள் மத்திய அமைச்சர்கள் கலந்து கொண்ட கூட்டங்களில் டெல்லியில், சென்னையில் என்று நான் மட்டுமல்ல; என்னுடன் சட்ட அமைச்சர் மாதவன், பொதுப்பணி அமைச்சர்கள் பொறுப்பிலிருந்து ப.உ.ச., சாதிக்பாட்சா ஆகியோருடன் சென்றுதான் கலந்துகொண்டு தமிழக அரசின் கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறோம்.

ஒவ்வொரு முறையும் காவிரி பற்றிப் பேச டெல்லிக்குச் செல்லும்போதெல்லாம் முன்னாள் முதலமைச்சர்களான பெருந்தலைவர் காமராஜர் அவர்களையும் பெரியவர் பக்தவத்சலம் அவர்களையும் சந்தித்து அவர்களது கருத்துக்களைக் கேட்டறிந்தே சென்றிருக்கிறேன்.

> "காவிரிப் பிரச்சினையில் தி.மு.க. அரசு எடுத்துள்ள நிலைதான், அ.தி.மு.க. அரசின் நிலையுமாகும்."

என்று திட்டவட்டமாக முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் பேரவையிலேயே அறிவித்திருக்கிறார் என்பதை நினைவுபடுத்திக் கொண்டால் நிதானமிழந்து பேசுகிற பரிதாபகரமான நிலை யாருக்கும் ஏற்படாது.

காவிரிப் பிரச்சினையில் கருணாநிதி செய்தது அறியாமை அல்ல! அநியாயம்! துரோகம்! என்றெல்லாம் முதலமைச்சருடன் சேர்ந்துகொண்டு எஸ்.டி.எஸ். என்ற அமைச்சர் பெருமகனாரும்

திருவாய் மலர்ந்தருளியுள்ளார். யார் தெரியுமா இவர்? 1924 ஆம் ஆண்டு போடப்பட்ட காவிரி ஒப்பந்தம் 1974 ஆம் ஆண்டுடன் காலாவதியாகி விட்டது என்று கூட்டங்களில் பேசி, கர்நாடக அரசின் வாதத்திற்கு வலிமை சேர்த்துக் கொடுத்தவர்! அப்பொழுது அதற்கு நான் மறுப்பு தெரிவித்திருக்கிறேன்.

1974 ஆம் ஆண்டு காவிரியின் உபரித் தண்ணீரை எப்படி பங்கிடுவது என்பது மட்டுமே ஆய்வு செய்யப்படுமென்று 1924ஆம் ஆண்டு ஒப்பந்த ஷரத்தைப் படித்துப் பார்க்காமலே; 1974ஆம் ஆண்டுடன் 1924 ஒப்பந்தமே காலாவதியாகி விட்டது என்று ஒரு தமிழ் நாட்டுக்காரர் சொல்வதுதான் துரோகத்திலேயே துரோகம் - எட்டப்பன் மார்க் துரோகம்! விபீஷணன் அன்கோவின் துரோகம்! அந்த துரோகத்தை செய்தவர் எஸ்.டி.எஸ். மட்டுமல்ல;

பிரதமராக வி.பி. சிங் இருந்தபோது, தி.மு.க.வுடன் சேர்ந்து வரமாட்டோம் என்று கடைசி நிமிஷத்தில் கூறிவிட்டு, அ.தி.மு.க.வினர் வி.பி.சிங் அவர்களுக்கு ஒரு மனு எழுதிக்கொண்டு போனார்களே; அந்த மனுவிலும்கூட காவிரியின் 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் 1974 ஆம் ஆண்டுடன் முடிவடைந்தது என்றே பச்சைத் துரோகமான வாசகத்தை அமைத்திருந்தார்கள்.

அதுபற்றிப் பேரவையிலே நண்பர் அப்துல் லத்தீப் போன்றவர்கள் பிரச்சினை எழுப்பி அதற்குப் பொதுப்பணி அமைச்சர் தம்பி துரைமுருகன் விளக்கம் கூறி, அ.தி.மு.க.வுடன் சேர்ந்து வி.பி. சிங் அவர்களிடம் சென்ற காங்கிரஸ் நண்பர்கள்கூட, அப்படி அந்த மனுவில் எழுதப்பட்டது தவறுதான் என்பதை ஒத்துக் கொண்டார்கள். இதுபற்றி அன்று அவையில் பேசிய இலக்கியச் செல்வம் நண்பர் குமரி அனந்தன் அவர்களைக் கேட்டாலே இப்போதும் அந்த உண்மை தெரியும்.

இப்படி காவிரி ஒப்பந்தமே காலாவதி ஆகிவிட்டது என்று எழுதியும், பேசியும், அதிகாரபூர்வமாக மனுகொடுத்தும் தமிழ்நாட்டுக்குத் துரோகம் செய்த கூட்டம்; நம்மைப் பார்த்து துரோகம் செய்துவிட்டதாகக் கூறுவது வென்றவன் சொன்னதெல்லாம் வேதம் அம்மா! - என்று கவிஞர் கண்ணதாசன் பாடினாரே - அந்தப் பட்டியலில் வரக்கூடிய வேடிக்கை அல்லவா?

கழக ஆட்சியில் நானும், அ.தி.மு.க. ஆட்சியில் எம்.ஜி.ஆரும் - மொத்தத்தில் கர்நாடக அரசுடன், மத்திய அமைச்சர்கள்

முன்னிலையில் 27 தடவைகள் பேசியும் பிரச்சினை தீராத நிலையில்தான்; ஏற்கனவே தஞ்சை விவசாயிகள் சார்பில் உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கில் 1989 ஆம் ஆண்டு வாக்கில் கழக அரசும் தன்னை இணைத்துக் கொண்டு வாதாடியது.

நடுவர்மன்றம் அமைக்க வேண்டும் என்ற தீர்ப்பு உச்சநீதிமன்றத்தில் கிடைத்தது.

நடுவர் மன்றம் அமைக்கக் கூடாது என்று, கர்நாடக மாநில சார்பில் ஜனதா தளத் தலைவர் பொம்மையும் - ஜனதா தளத் தலைவர்கள் ஹெக்டே போன்றவர்களும் - பிரதமர் வி.பி. சிங்கிடம் படையெடுத்தனர். ஆனாலும் ஜனதா தளத்தின் தேசிய முன்னணி பிரதமரான வி.பி. சிங் அவர்கள் நமது கோரிக்கையை நிறைவேற்றிடுமளவுக்கு நடுவர் மன்றத்தை அறிவித்தார்.

இனிப் பேச்சுவார்த்தையால் பயனில்லை என்ற கருத்தமைந்த ஒரு தீர்மானத்தை அவசர அவசரமாக சட்டப்பேரவையில் உள்ள கட்சித்தலைவர்களைக் கலந்து பேசி கொண்டுவந்து நிறைவேற்றி; அந்தத் தீர்மான நகலை டெல்லிக்கு பேக்ஸ் மூலம் உடனடியாக அனுப்பிவைத்து; அதன் தொடர்பாக உச்சநீதிமன்றம் நடுவர்மன்றம் அமைத்திடுமாறு தீர்ப்பு வழங்கியதையும் யாரும் மறந்துவிடவில்லை.

இடைக்கால நிவாரணமாக காவிரியில் தண்ணீர் வேண்டும் என்று நடுவர் மன்றத்தைக் கழக அரசு அணுகியபோது அந்த நிவாரணம் வழங்க ஆணையிடும் அதிகாரம் தமக்கில்லை என்று நடுவர் மன்றத்தினர் கூறினர். உடனடியாகக் கழக அரசு, உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு அப்பீல் செய்து; அதன் காரணமாக உச்சநீதிமன்றத்தில் கிடைத்த தீர்ப்புதான் இடைக்கால நிவாரணத் தீர்ப்பு வழங்க நடுவர் மன்றத்துக்கு அதிகாரம் உண்டு என்பதாகும்!

நடுவர் மன்றம் தீர்ப்பு வழங்கினால்கூட அதை நிறைவேற்றவேண்டுமென்ற கட்டாயம்; பங்காரப்பாவுக்குக் கிடையாது என்று கூறிய ஜெயலலிதாதான் என்னைப் பார்த்து துரோகி என்கிறார்! என் செய்வது; வி.என். ஜானகியம்மையார் எம்.ஜி.ஆர். அவர்களின் மனைவியே அல்ல என்று பேட்டியும் அறிக்கையும் கொடுத்த இந்தப் பெண்மணி; இப்போது

தமிழ்க் கலாச்சாரத்தைப் பற்றி அக்கறையுடன் பேசுகிற அற்புதத்தையல்லவா நாடு காண்கிறது!

காவிரிப் பிரச்சினையில் நாம் நமது அரசின் சார்பில் பெற்றுத்தந்த அந்த இடைக்கால நிவாரணத்தை நிறைவேற்றிக் கொள்ள வக்கின்றி, வழியின்றி, தெம்பின்றி, திறனின்றி உண்ணாவிரத நாடகம் நடத்தி - அதுவும் மிக எளிமையாக பத்தாயிரம் போலீசார் புடைசூழ, டி.ஜி.பி., ஐ.ஜி.க்கள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் காவல் புரிய, பட்டு மெத்தையில் - பத்து தலையணைகள் போட்டுக்கொண்டு - பதுக்கி வைத்த பழரசம், பசி மாத்திரைகளைப் பாங்கி ரகசியமாகக் கொடுத்திட; அதை அருந்தி எந்தவித வாக்குறுதியும் பெறாமல், காலவரையற்ற உண்ணாவிரதத்தைக் காலாவதியாக்கிவர்கள்தான்; கழக அரசும் நானும் காவிரிப் பிரச்சினையில் தமிழகத்துக்கு துரோகம் செய்துவிட்டோம் என்று வாய் கூசாது; மெய் கூசாது; வசைபாடுகிறார்கள்!

காலமும் இவர்களை மன்னிக்காது;
காவிரிநதி தீரத்து மக்களும்
இவர்களை மன்னிக்கமாட்டார்கள்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

21-03-1995

2254. பொங்குமாங்கடலெனப் புறப்படுக!

உடன்பிறப்பே,

மக்களின் அதிருப்தி; சகல பகுதிகளிலுமிருந்தும் ஜெயலலிதாவின் அராஜக, அதிகார துஷ்பிரயோக, அநீதி நிறைந்த ஊழல் ஆட்சியைச் சூழ்ந்து பெருகி வருவதைக் கண்டும் உணர்ந்தும்; அதற்காகத் தம்மைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்று நினைக்காமல், மேலும் மேலும் ஆணவச் சேட்டைகளிலும் அடாவடித்தனங்களிலும் ஈடுபடுகிற வக்கிரமான முறையிலேயே ஆட்சியாளர்கள் தர்பாரை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அமைச்சர்கள் சட்டப்பேரவையிலும், பொது மேடைகளிலும் எதிர்க்கட்சிகளைப் பற்றிப் பேசுகிற நாராச நடைப்பேச்சுக்கள், நாளுக்கு நாள் எல்லை மீறிக் கொண்டே போய்க் கொண்டிருக்கின்றன. உண்மைக்கு மாறான செய்திகளை பொதுமேடைகளில் அமைச்சர்களும், முதலமைச்சரும் கூறி, ஏமாற்ற முனைவது போலவே பேரவையிலும்கூட அவ்வாறே நடந்து கொள்கின்றனர்.

முதலமைச்சரோ அல்லது அமைச்சர்களோ கூறுகிற கருத்துக்கோ செய்திக்கோ மறுப்பு அளித்திடவோ, விளக்கம் கூறவோ எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும் நிலையே இல்லை என்கிறபோது ஜனநாயகம் எப்படிச் செயல்பட முடியும்?

அது மட்டுமல்ல; நாவலர் நெடுஞ்செழியன் அவர்களைப் போன்ற அனுபவம் வாய்ந்தவர்கள்; ஏதோ பதவிக்காக ஆளுங்கட்சியுடன் ஒட்டிக்கொண்டு தீர வேண்டிய அவசியம் இருந்தாலும்கூட; சில விஷயங்களில் 100க்கு 100 என்று இல்லாவிடினும் 5 சதவீதம் 10 சதவீதம் எனும் அளவுக்காவது நியாயத்திற்காகவும் நேர்மைக்காகவும் குரல் கொடுப்பார்கள்

என்று எதிர்பார்த்ததும் ஏமாற்றத்தில்தான் முடிந்துவிட்டது. பாவம்; அவர்கள் பதவியில் பசைபோட்டு ஒட்டிக்கொண்டிருப்பதற்காக உனக்கு நான் இளைத்தவனா? என்று ஒருவருக்கொருவர் அமைச்சர்களுக்குள்ளேயே போட்டி போட்டுக்கொண்டு ஜெயலலிதாவுக்குப் பாயிரம் பலகோடி பாடுவதிலும், எதிர்க்கட்சிகளை ஏசுவதிலும் ஈடுபட்டு அதில் யார் முன்னணியில் முந்துவது என்று தோள்தட்டி தொடைதட்டிக் கொண்டு பாய்ச்சல் காட்டிய வண்ணமிருக்கிறார்கள்.

இத்தனைக்கும் இவர்களில் முக்கியமான சிலர், இன்றைய முதலமைச்சர் ஜெயலலிதாவை நாக்குப் புளிக்கப் புளிக்க நாலாந்தர நடையில் தாக்கிப் பேசியும் அறிக்கை விடுத்தும் பேட்டி கொடுத்தும்; அதற்குப் பதிலாக அதே நாலாந்தரக் கடைகெட்ட பாணியில் ஜெயலலிதாவின் தாக்குதல் அறிக்கைகளுக்கும் பேட்டிகளுக்கும் ஆளாகியும்; இன்று ஆமைகளாய் ஊமைகளாய் அடங்கிக் கிடப்பவர்கள்.

ஒரு அமைச்சர் கேட்கிறார்; எம்.ஜி.ஆர். அறக்கட்டளையைத் தொடங்கி வைக்க கருணாநிதிக்கு என்ன தகுதி இருக்கிறதென்று! எத்துணை அரைவேக்காடுகள் அமைச்சரவைக் கொலுப் பொம்மைகளாக இருக்கின்றன பார்த்தாயா!

இப்படித்தான் ஒரு காலத்தில் வேலூர் நகராட்சி சார்பில் அமைக்கப்பட்ட காந்தியடிகள் சிலையைத் திறந்துவைக்க அண்ணா அவர்கள் அழைக்கப்பட்டபோது சில காங்கிரஸ்காரர்கள் காந்தி சிலையைத் திறக்க அண்ணாவுக்கு என்ன தகுதி? என்று கேட்டனர்.

காந்தியாரின் கொள்கைகளை, கருத்துக்களை கடைசி வரையில் எதிர்த்து வந்த தந்தை பெரியார் அவர்கள், காந்தியார் சுட்டுக்கொல்லப்பட்டவுடன் இந்த நாட்டுக்கே காந்தி நாடு என்று பெயர் வைக்கவேண்டுமென்றார்.

ஓராயிரம் கருத்து மாறுபாடுகள் இருப்பினும் ஒரு தலைவரின் மறைவுக்குப்பிறகு; அவரைத் தலைவராக ஏற்றுக்கொண்டிருப்பவர்கள்தான் அவருக்கு மரியாதை செலுத்த வேண்டுமென்றில்லை - அவரைத் தலைவராக ஏற்றுக்கொள்ளாதவர்களும் அவருக்கு மரியாதை செலுத்தலாம் என்பது அரசியல் நாகரிகம் - பண்பாடு!

அந்தப் பண்பாடெல்லாம் இதுகளுக்கு எங்கே தெரியப் போகிறது? இதுகளுக்குத்தான் அம்மையாரைப் பற்றிப் பண்பாடுவதற்கே நேரம் போதவில்லையே!

கழக ஆட்சியில் முதலமைச்சர் கருணாநிதி காவிரிப் பிரச்சினை குறித்து அமைச்சர்களிடம் கலந்து பேசவே இல்லை என்ற ஒரு அண்டப்புளுகை, சட்டப் பேரவையிலேயே; நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் கூறுகிறார் என்றால்; அது அங்கிருக்கும் இன்றைய முதலமைச்சருக்குப் பயந்து கொண்டுதானே!

முதலமைச்சர் ஜெயலலிதா ஒரு சினிமா விழாவிலும் ஏன்; இப்போது சட்டப்பேரவையிலும் 1991-ல் தனது ஆட்சி ஆரம்பமானபோது தி.மு.க. ஆட்சி விட்டுச் சென்ற பற்றாக்குறை 1200 கோடி ரூபாய் என்று ஒரு தவறான தகவலைச் சொன்னார்.

இந்தத் தவறான தகவலை அப்பாவித்தனமாக முதலமைச்சர் சினிமா விழாவில் கூறியிருக்கிறார் என்பதை நான் ஆதாரத்துடன் எடுத்துக்காட்டி; குறிப்பாக ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த ஆண்டான 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் 4 ஆம் நாள் நிதியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன், அவையில் படித்த பட்ஜெட்டில் கலந்த காலப்பற்றாக்குறை சுமார் 208 கோடி ரூபாய் என்றுதான் சுட்டிக்காட்டியுள்ளார் என்று விளக்கமளித்திருந்தேன்.

அதற்குப்பிறகாவது முதலமைச்சர், தனது தவறைத் திருத்திக் கொண்டிருக்க வேண்டும் - நிதியமைச்சர் நாவலராவது, தனக்கு தரிசன வாய்ப்பு கிட்டியபோது முதலமைச்சருக்கு விளக்கியிருக்க வேண்டும். எதுவுமே நடைபெறவில்லை. மீண்டும் முதலமைச்சர், சினிமா விழாவில் எடுத்த அதே வாந்தியை, சட்டப்பேரவையிலும் எடுத்திருக்கிறார்.

இதைப்பற்றி பட்ஜெட் விவாதத்தில் பேசிய தம்பி பரிதி இளம்வழுதி; தி.மு.க. ஆட்சி விட்டுச்சென்ற பற்றாக்குறை 1200 கோடி என்ற தவறான தகவலைத் திரும்பத் திரும்பக் கூறுவது ஏன்? என்று கேட்டிருக்கிறார். அதற்கு நாவலரிடமிருந்து எந்த பதிலும் இல்லை!

ஏன், பதில் இல்லை? நாவலர் பாஷையில் கேட்க வேண்டுமேயானால்; பதில் சொல்ல வகையில்லையா? வக்கில்லையா? தெம்பில்லையா? திறனில்லையா?

அரிசி விலையைக் குறைத்திருப்பது அ.தி.மு.க. ஆட்சிக்கு ஏற்றம்! தி.மு.க. தலைவருக்கு ஏமாற்றம்!

என்று நாவலர் பட்ஜெட் விவாதத்தில் சொல்லாடல் நடத்தி மகிழ்ந்துள்ளார்.

தி.மு.க. ஆட்சியில் சன்னரக அரிசி கிலோ ரூபாய் 2.50 என்றிருந்ததை; அ.தி.மு.க. ஆட்சியில் ஜெயலலிதா ரூபாய் 4.75 என்று ஆக்கிவிட்டு, இப்போது அந்த விலையை 3.75 என்று அறிவித்துவிட்டால்; அது உண்மையிலேயே குறைத்தது ஆகுமா?

2.50 என்ற விலைக்கும் 3.75 என்ற விலைக்கும் இடையே உள்ளது மக்களுக்கு ஏமாற்றம்! நாவலருக்கு ஏற்றம்!

நாவலராகட்டும், முதல்வராகட்டும், மற்ற மாண்புகளாகட்டும் - தேர்தலைக்கண்டு நாங்கள் அஞ்சவில்லை என்று மார்தட்டுகிறார்களே; அந்த வீரம் உள்ளபடியே இருந்தால்; அது உதட்டளவு வீரம்தான் என்று இல்லாவிட்டால்; உடனடியாக உள்ளாட்சிமன்றத் தேர்தல்களை நடத்துவதற்கு முன்வருவதுதானே? அதில் ஏன் தயக்கம்? ஏன் வருகிறது மயக்கம்?

இதைப்பற்றி நிதியமைச்சரின் பட்ஜெட் விவாதப் பதிலில் குறிப்பிட்டிருக்க வேண்டாமா? இன்ன தேதியில் மாநகராட்சி, நகராட்சி, மற்றுமுள்ள உள்ளாட்சிமன்றத் தேர்தல் என்று அறிவிப்பு ஏன் வரவில்லை?

உடன்பிறப்பே; இந்தக் கேள்வியை உரத்த குரலில் எழுப்பத்தான் ஏப்ரல் 4 ஆம் நாள் நாமும் நமது தோழமைக் கட்சிகளும் மாநில முழுதும் நடத்துகிற ஆர்ப்பாட்ட அறப்போர்!

இந்த ஆர்ப்பாட்ட அறப்போரினை; ஏதோ ஒரு சம்பிரதாய முறையிலான கவன ஈர்ப்பு என்று எடுத்துக் கொள்ளாமல்; ஆங்காங்கு அலைகடலென அணிதிரள்க! மக்கள் விரோத ஆட்சிக்கு அறிவு புகட்டும் வண்ணம் ஆர்ப்பரித்திடுக! அமைதி வழி அறவழியில் கட்டுப்பாடு காத்திடுக!

“போர்க்குரல் எழுப்பிடப்
பொங்குமாங் கடலெனப் புறப்படுக!”

அமைச்சர்களின் ஆணவப் பேச்சுகளுக்கு; அலட்சியப் பேச்சுகளுக்கு; எடுத்தேன் கவிழ்த்தேன் எனச் செயல்படும்

முதலமைச்சரின் ஜனநாயக விரோதச் செயல்களுக்கு - சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களை அவைக் காவலர்களைக்கொண்டு தாக்கச் செய்து, தாக்கப்பட்டவர்கள் மீதே வழக்குப் போடும் சர்வாதிகாரப் போக்கிற்கு -

ஜனநாயக வழியில்

பதில் அளிக்கும் நாள்தான்

ஏப்ரல் 4 ஆம் நாள்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

02-04-1995

2255. வாங்கியது கழுதை; வந்தது வழக்கு!

உடன்பிறப்பே,

விறுவிறுப்பும், வேகமும், சோகமும் நிறைந்த திரைப்படங்கள் அல்லது நாடகங்களுக்கு இடையே; அந்த நிகழ்ச்சிகளுடன் ஒட்டிய நகைச்சுவைக் காட்சிகள் வருவதுண்டல்லவா; அதுபோல இப்போது தமிழ்நாட்டு மக்கள் பரபரப்புடன் பார்த்துக் கொண்டிருக்கிற அரசியல் காட்சிகளுக்கிடையே சிரித்து மகிழ்வதற்கென்று ஒரே ஒரு காட்சி! ஆம்; ஒரு கழுதை வாங்கிய கதை! சிரிக்க மட்டுமல்ல; சிந்திக்க வைக்கவும் பயன்படுமென்பதற்காக இந்தக் கதையை உனக்கு சொல்லுகிறேன். கழுதையென்றால் சாதாரணக் கழுதையல்ல; கோவேறு கழுதை!

போயும் போயும் கோவேறு கழுதை கதைதானா கிடைத்தது என்று அலட்சியமாக என்னைப் பார்க்காதே! - மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன்; அது ஒன்றும் சாதாரணக் கழுதையல்ல; சட்டப் பிரச்சினையை உருவாக்கிய கழுதை! பிரச்சினையை உருவாக்கியது மட்டுமல்ல; பல பிரபலங்களின் வாயை அடைப்பதற்கும் பயன்பட்ட கழுதை! கோவேறு கழுதை என்பதற்கு உனக்குக் கூச்சமாக இருந்தால்; வரிக்குதிரை என்று சொல்லிக் கொள்; பரவாயில்லை!

என்ன; கோவேறு கழுதை என்கிறாய்! வரிக்குதிரை என்கிறாய்! சட்டப் பிரச்சினை என்கிறாய்! பிறகு அந்தக் கழுதையே சட்டப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பயன்படுகிறது என்கிறாய்! எப்போதுதான் நீ எழுத வந்த விஷயத்துக்கு வரப்போகிறாய்? என்று உடன்பிறப்பே; நீ அவசரப்படுவது எனக்குப் புரிகிறது.

1871 ஆம் ஆண்டு கல்கத்தா உயர்நீதிமன்றத்தில் தலைமை நீதிபதிப் பொறுப்பிலிருந்த எப்.பி. கெம்ப் என்பவரும், டபிள்யூ. அயின்ஸ்லே என்பவருமான இரு நீதிபதிகள் கொண்ட பெஞ்ச்சின்

முன்னால் வந்த ஒரு வழக்குதான், கழுதை வாங்கியதின் தொடர்பான வழக்கு! மன்னிக்கவும், கோவேறு கழுதை வாங்கியதின் தொடர்பான வழக்கு!

ராஜ் கிறிஸ்டோ பிஸ்வாஸ் என்பவர் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் அவர் டூம்ஜூரா என்ற ஊரின் காவல் நிலையத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார். காவல் நிலையத்திற்கு உட்பட்ட பட்டி ஒன்று இருந்தது. பட்டி என்றால் உனக்குத் தெரியுமென்று நம்புகிறேன். கட்டுப்பாடின்றி ஊரில் மேய்ந்து திரிந்து தொல்லை கொடுக்கும் ஆடு, மாடு, கழுதை போன்ற விலங்கினங்களைப் பிடித்து அடைத்து வைக்கும் இடத்துக்குத்தான் பட்டி என்று பெயர்.

ராஜ் கிறிஸ்டோ பிஸ்வாஸ், சப்-இன்ஸ்பெக்டராக வேலை பார்க்கும் டூம்ஜூரா என்ற ஊரில் காவல் துறைக்குச் சொந்தமான ஒரு பட்டியில்; ஒரு கோவேறு கழுதை கொண்டு வந்து அடைக்கப்பட்டிருந்தது. அந்தக் கோவேறு கழுதைக்கு யாரும் உரிமை கொண்டாடாத நிலையில்; சப்-இன்ஸ்பெக்டர் பிஸ்வாசுக்கே அந்தக் கழுதையின்மீது ஒரு கண் விழுந்துவிட்டது. அதை எப்படியாவது குறைந்த விலைக்கு வாங்கிவிட வேண்டுமென்று முடிவு செய்தார். அந்த முடிவை எப்படி நிறைவேற்றுவது என்று யோசித்தார்.

காவல்துறையின் பட்டியில் அடைக்கப்பட்டிருந்தால் அந்தக் கோவேறு கழுதை, அரசாங்கத்தின் சொத்தாகிவிடுகிறது. அரசாங்கத்தின் சொத்தை அரசு ஊழியர் ஒருவர் அதிலும் அதற்குப் பொறுப்பாக உள்ள ஒருவர் வாங்குவது கூடாது என்பது சட்டம்!

அரசு அலுவலரும், சட்டப்படி அரசு அலுவலராகப் பணி செய்யக் கடமைப்பட்டிருப்பவரும், தன் பெயரிலோ; அல்லது மற்றவருடன் பங்கு சேர்ந்தோ அரசாங்க சொத்துக்களை வாங்கவோ ஏலத்தில் எடுக்கவோ கூடாது. அப்படி வாங்கினால் இந்திய தண்டனைச் சட்டம் 169ஆம் பிரிவின்படி இரண்டு ஆண்டு வரையில் வெறுங்காவல் தண்டனையும் அபராதமும் விதிக்கலாம்

என்பதை ஒரு சப்-இன்ஸ்பெக்டர் உத்தியோகத்தில் இருப்பவர் அறியாமல் இருப்பாரா?

அதனால் அவர் அந்தக் கோவேறு கழுதையைத் தானே நேரடியாக வாங்காமல்; அதற்கு ஒரு பினாமியைத் தயார் செய்தார். அந்தப் பினாமியின் பெயர் கோபிநாத் சர்தார் என்பதாகும். அந்தக்

கோபிநாத் சர்தார் வாங்கியது போலவும் - அந்தக் கழுதைக்கான விலை நான்கு ரூபாய் கொடுக்கப்பட்டதாகவும் பதிவேட்டில் பதிவு செய்து கொள்ளச்செய்து; பின்னர் அந்தக் கோபிநாத் சர்தாரிடமிருந்து ஆறு ரூபாய் விலைக்கு சப்-இன்ஸ்பெக்டர் அந்தக் கழுதையை வாங்கிக் கொண்டார்.

விஷயம் நீண்ட காலம் இருட்டில் கிடக்காமல் விரைவாகவே வெளிச்சத்துக்கு வந்துவிட்டது. எனவே அந்த சப்-இன்ஸ்பெக்டர் மீது வழக்கு தொடரப்பட்டது.

மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் நடைபெற்ற அந்த வழக்கு விசாரணையில் இந்திய தண்டனைச் சட்டம் 406வது பிரிவின் கீழ் அந்த சப்-இன்ஸ்பெக்டருக்கு 10 நாள் சிறைத் தண்டனையும், இருபத்தி ஐந்து ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.

அந்தத் தீர்ப்பின்மீது சப்-இன்ஸ்பெக்டர் பிஸ்வாஸ் கல்கத்தா உயர்நீதிமன்றத்தில் அப்பீல் செய்தார்.

அந்த அப்பீல் வழக்கில்; பிஸ்வாஸ் விடுதலை செய்யப்பட்டார்.

உயர்நீதிமன்ற நீதிபதிகள் இருவரும் என்ன காரணம் கூறி அந்த சப்-இன்ஸ்பெக்டரை விடுவித்தார்கள் தெரியுமா?

> முதலில் வழக்கினை எடுத்து விசாரித்துத் தீர்ப்பு வழங்கிய மாஜிஸ்டிரேட்; அந்த வழக்கை இந்திய தண்டனைச் சட்டம் 169வது பிரிவின் அடிப்படையில் விசாரித்திருக்க வேண்டும் என்றும்; கையாடல் குற்றப்பிரிவான 406வது பிரிவில் விசாரித்தது பொருந்தாது என்றும்; அரசின் சொத்தினை ஓர் அரசாங்க ஊழியரோ அல்லது அரசு அலுவல் புரியக் கடமைப்பட்டவரோ தனியாகவோ பங்கு சேர்ந்தோ வாங்குவது இந்திய தண்டனைச் சட்டம் 169வது பிரிவின்படிக் குற்றமாகும் என்பதால் அந்தப் பிரிவின் அடிப்படையில் மாஜிஸ்டிரேட் விசாரிக்காதது வருந்தத்தக்கது என்றும் கல்கத்தா உயர்நீதிமன்றம் கருத்து தெரிவித்து தீர்ப்பு வழங்கியது.

உடன்பிறப்பே; ஒரு சப்-இன்ஸ்பெக்டர், அரசுக்கு உரிமையாகிவிட்ட ஒரு கழுதையை; தான் நேரடியாக வாங்காமல் ஒரு பினாமி தயாரித்து மறைமுகமாக வாங்கியதற்கே 169வது பிரிவு இந்திய தண்டனைச் சட்டப்படி வழக்கு நடத்தியிருக்க

வேண்டுமென்றால்; தானும் பங்குதாரராக இருக்கும் நிறுவனம் டான்சி நிலத்தை வாங்கியது என்று பல்லாயிரவர் கூடியிருந்த மாநாட்டில் தமிழக முதலமைச்சர் கூறி; அந்தப் பேச்சு தட்டச்சு செய்து அவராலேயே மாநாட்டில் படிக்கப்பட்டு அப்போது பத்திரிகைகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறதே-

நாலு ரூபாய் கதை என்றாலும்; அது அரசாங்க உடைமை என்கிறபோது அதை அரசு அலுவலர் வாங்குவது இ.பி.கோ. 169 பிரிவின்படி குற்றமெனில்; நாலு கோடி ரூபாய் நிலத்தை வாங்கியதாக ஒப்புக்கொண்ட பிறகு; ஒரு குற்றவாளி, தனக்குத்தானே தண்டனை வழங்கிக் கொள்ள வேண்டாமா?

இந்தக் கேள்விதானே இன்று தமிழகத்தில் அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் எழுந்துள்ளது.

இதை மறைப்பதற்காக இன்றைய ஆளுங்கட்சியினர் ஆடாத ஆட்டமெல்லாம் ஆடுகிறார்களே ஏன்?

மூன்று நாட்களுக்கு முன்பு நாவலர் தலைமையில் கூடி இதைப்பற்றி எத்தகைய அற்புதமான தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள்; படித்துப் பார்த்தாயா?

பகுத்தறிவுச்சுடர் - சுயமரியாதைச் சூறாவளி - தன்மான ஏந்தல் - பெரியாரின் சீடர் - அண்ணாவின் தம்பி - அடடா; அந்த நாவலர் தலைமையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம், எதிர்க்கட்சித் தலைவர்களையெல்லாம் சண்டமாருதமெனச் சாடுகிறது! அத்துடன் நிற்காமல், நாவலர் தலைமையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர்மானத்தின் கடைசிப்பகுதிதான் மிகமிக முக்கியம்!

எங்களைப் பொறுத்தவரையில் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். ஆகியோர் காட்டிய லட்சியப் பாதையில் எங்களை வழி நடத்திச் செல்கின்ற பேராற்றல் படைத்த புனிதத் தலைவி புரட்சித்தலைவியின் பாதச் சுவடுகளைப் பின்பற்றி தொண்டர்களாக அணிவகுத்து மக்கள் பணி ஆற்றுவதையே எங்கள் வாழ்க்கையின் பெரும் பேறாகக் கருதுகிறோம்.

எப்படி உடன்பிறப்பே; தீர்மான வாசகம்! பகுத்தறிவுச் சிங்கம் - ஆம்; நாம் அன்று கண்ட தன்மானத்தமிழன் இளந்தாடி நெடுஞ்செழியன் - தம்பி வா, தலைமை ஏற்க வா; உன் தலைமைக்குக் கட்டுப்படுகிறோம் வா, என அண்ணாவினால் அழைக்கப்பட்ட நடமாடும் பல்கலைக்கழகம் - இன்று கூனிக்குறுகி, கும்பிட்டுத்தொழுது, பாதச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கிறோம். அதுவே எங்கள் வாழ்க்கையின் பெரும்பேறு எனத் தீர்மானம் நிறைவேற்றி ஜெயலலிதாவின் கரங்களில் கொடுக்கிறார் என்றால்; ஏ, தாழ்ந்த தமிழகமே! என்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அன்று அண்ணா உருக்கமுடன் பேசியது; இப்படியொரு காலம் தமிழ்நாட்டுக்கு வந்திடும் என எதிர்பார்த்துத்தானே என எண்ணி ஏங்கிடத்தானே வேண்டியுள்ளது.

அன்புள்ள,

மு. கருணாநிதி

06-04-1995

2256. ஆர்த்தெழுக! அடலேறு என எழுக!

உடன்பிறப்பே,

இத்திங்கள் ஆறாம் நாள் தி.மு.க. தோழமைக் கட்சிகள் கூட்டத்தில் தமிழகத்தில் நடைபெறுகிற மக்கள் விரோத, அராஜக, அநியாய, ஊழல் ஆட்சியின் தலைவியாக இருக்கிற ஜெயலலிதாவை பதவி விலகச் சொல்லி மாநிலத்தில் பல்வேறு நகரங்களில் தோழமைக் கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் பேரணிகளும் பொதுக்கூட்டங்களும் நடத்துவதென முடிவு செய்து அறிவிக்கப்பட்டுள்ளது. அடுத்து இத்திங்கள் எட்டாம் நாள் நடைபெற்ற தி.மு.க. தலைமை நிர்வாகக் குழு கூட்டத்தில்; அந்தப் பேரணிகளையும் பொதுக் கூட்டங்களையும் மக்களின் எழுச்சி பொங்கிடும் நிகழ்ச்சிகளாக நடத்திடுவதென்றும் முதலில் இத்திங்கள் 21ஆம் நாள் மதுரை மாநகரிலும் அடுத்தடுத்து முறையே சேலம், தஞ்சை, திருவண்ணாமலை ஆகிய நகரங்களிலும் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று நகரங்களில் பேரணியும் பொதுக் கூட்டமும் நடத்துவதற்கான நாட்களையும், மேலும் மற்ற நகரங்களில் நடத்துவதற்கான நாட்களையும் அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்களுடன் கலந்து பேசி விரைவில் அறிவிக்கப்பட இருக்கிறது.

எல்லை கடந்து தமிழ் மக்களின் பொறுமை சோதனைக்கு உள்ளாகிவிட்ட நிலையில்; எரிமலையெனக் குமுறிக் கொண்டிருக்கும் அவர்தம் நெஞ்சும்; இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் நயவஞ்சக - நாசகார ஆட்சிக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தே தீரவேண்டுமென முடிவெடுத்துள்ளதில் எள்முனையளவு வியப்பும் இல்லை!

தமிழகத்தில் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் - அங்கு வளைத்துப் போட்டு இரும்பு வேலி கட்டிக்கொண்டிருக்கும்

பூமி; நாட்டை ஆளுகின்ற கொள்ளைக் கூட்டத்திற்கே சொந்தம் என்கிறார்கள். தோட்டமா, துரவா, கோட்டமா, குளமா - எல்லாமே அந்தக் கூட்டத்தின் வேட்டைக்கு உட்பட்டதே எனப் பல கோடிகளுக்கு மக்களே கணக்குத் தருகிறார்கள்; கண்கலங்கியவாறு! வயிறு எரிந்தவாறு!

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற பழமொழிக்கொப்ப; மந்திரி சம்பளமாக மாதம் ஒரு ரூபாய்தான் பெறுவேன் என்று முரசறைந்து முடிபுனைந்து கொண்ட ஜெயலலிதா; இன்றைக்கு நாடாளுமன்ற மாநிலங்களவையில் வைக்கப்பட்டுள்ள அவரது சொத்து மதிப்பின்படி இந்த இரண்டு மூன்றாண்டுகளில் மட்டும் சுமார் இருபது கோடி ரூபாய் சொத்துக்கு அதிபதியாகத் திகழ்கிறாரே; அது எப்படி? இந்த அபரிமிதமான சொத்துக்கு ஊற்றுக்கண் எது? ஊழல்தானே! இவருக்காக வக்காலத்து வாங்கிக் கொண்டு வக்கரிப்பு அறிக்கைகள் விடுவோர்க்கு இந்த உண்மைகள் தெரியாதா என்ன? தெரியும்! தெரிந்தும் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்காகப் பரிந்து பேசுகிறார்கள்; அவர் முதலமைச்சராக இருப்பதால்!

ஊழல் சாம்ராஜ்யத்தின் ஒப்பற்ற ராணிமாதாவாக உலவுவது மட்டுமா; அந்த ராணியின் காலடியில் சட்டப்பேரவையில்; சபாநாயகரே விழுந்து வணங்கும் அளவுக்கு அநாகரிக அதிகாரம் கொடிகட்டிப் பறக்கிறதே - தொடைதட்டி நம்மை எதிர்ப்போர் சிலருக்கு அது சம்மதமான காரியமா? இதுவரையில் தமிழக வரலாற்றில் சபாநாயகரைக் கீழே தள்ளிவிட்டு, அவரது ஆசனத்தில் முதலமைச்சர் ஒருவர் ஏறி உட்கார்ந்து கொண்டு தர்பார் நடத்தியதாகச் செய்தி உண்டா? ஆனால் இவர் அந்த அரிய காரியத்தைச் செய்தது மட்டுமல்ல; தன் அன்புத் தோழியையும் அவைக்குள்ளே அனுமதித்து - துணைச் சபாநாயகரின் இருக்கையிலேயே உட்கார வைத்த அவலமும் நடைபெற்றதே; அரசியலில் ஆரோக்கியமான செயலா அது? சட்டமன்ற மரபுகளுக்கு உகந்த நிகழ்வா? இல்லை! இல்லவே இல்லை! இருந்தாலும் நடைபெற்றதே! ஏன் நடைபெறாது; தமிழனின் தன்மானத்தைப் பற்றி தரைக்கும் வானுக்குமாக உயர்ந்து நின்ற செம்மாந்து சொன்மாரி பொழியக்கூடிய நாவலர் நெடுஞ்செழியன் அவர்களே; புனிதவதி ஜெயலலிதாவின் பாதச் சுவடுகளைப் பின்பற்றி நடப்பதுதான் வாழ்க்கையில் நாம் பெற்ற பேறு என்று

தீர்மானம் வடித்தெடுத்து ஏடுகளுக்குப் படைத்திருக்கிறாரே; சுயமரியாதை; விழி பிதுங்கி, ஈளைகட்டி, இருமல் மிகுந்து, இறுதியில் சுடுகாட்டுக்கே சென்றுவிட்டதே இந்த மனிதர்கள் மாண்புமிகுக்கள் ஆனதினால்!

பட்டி தொட்டிகளின் பரிபாலனம் அடங்கிய ஊராட்சிகள் முதற்கொண்டு மாநகராட்சிகள் வரையில்; பல்வேறு பணிகள் நடைபெற்றதாக மட்டும் கணக்கு எழுதிக் கொண்டும் அமைச்சர்களும், அதிகாரிகளும், ஆளுங்கட்சி ஒப்பந்தக்காரர்களும் வாயில் போட்டுக்கொள்ளும் தொகை எத்தனையோ கோடிகோடியென அந்தந்தப் பகுதிகளில் உள்ளோர் பற்றியெரியும் இதய வேதனையுடன் இயம்புகின்றார்! பலகோடி ரூபாய்ப் பணிகள் விளம்பரம் செய்து டெண்டர் கோராமலே; வேண்டியவர்களுக்கு - அதாவது பெட்டி தந்தவர்களுக்கு தன்னிச்சையாகத் தரப்படுகின்றன.

இது ஆகாது - சட்டப்படி விதிப்படி முறைப்படி குற்றம் - தவறு என அதிகாரிகள் கூறினால்; அவர்களுக்குத் தண்டனை; தண்ணீர் இல்லாக்காட்டுக்கு மாறுதல் - அதிகபட்ச தண்டனையாக ஆசிட் வீசுதல்! என்னை எதிர்ப்பதா? ஆகா! விடக்கூடாது அவர்களை! ஆயத்தமாகட்டும் ஆட்டோக்கள்! அவைகளில் ஆரோகணித்து ஆளுங்கட்சிக் குண்டர்கள் செல்லட்டும்! செல்லுங்கள்! இடிக்க வேண்டியதை இடித்து - கெடுக்க வேண்டியதைக் கெடுத்து எனக்கு நல்ல சேதி சொல்லுங்கள்- நான் கொடுக்க வேண்டியதைக் கொடுக்கிறேன்! என்று ஆணை கிளம்புவதும்; அந்த ஆணையை நிறைவேற்றும் ஆட்கள்; அன்று தராசு அலுவலகத்தில் இரண்டு ஊழியர்களைக் கொலை செய்தது முதல் - ஏழுமலை கொலை - கொடவாசல் தங்கையன் கொலை - எனத் தமது திருவிளையாடல்களைத் தொடர்ந்து நடத்தி, அரசை எதிர்த்து வழக்குப் போட்ட விஜயனைப் பந்தாடி, தேர்தல் ஆணையாளர் தங்கியதற்காக தாஜ் ஓட்டலை தகர்த்திடத்துணிந்து, இன்று ஊழல் குற்றம் சாட்டியதற்காக சுப்பிரமணிய சாமியை விட்டேனா பார் என்று அவரது கூட்டத்தில் பெரும் கலகம் விளைவித்து; காரைக்குடி தண்ணீர் பிரச்சினைக்காக ஊர்வலம் சென்ற அனைத்துக் கட்சித் தோழர்களை அடித்து நொறுக்கி; இப்படி எல்லா அராஜகங்களையும் மூடிமறைத்திடக் காவல் துறையும் உடன்பட்டுக்கிடப்பதும்; காணுகிற வேளையில், நாம் நாட்டில்தான்

வாழுகிறோமா? அல்லது கொடும் விலங்குக் கூட்டம் திரிகின்ற காட்டில் வாழுகிறோமா என்றுதானே நினைக்கத்தோன்றுகிறது!

கவர்னர், இவர் மீது வழக்குத் தொடர அனுமதி கொடுத்துவிட்டார் என்பதற்காக ஆதங்கப்படுபவர்கள் - ஆத்திரப்படுபவர்கள் - அரைக்கணம் தமது மனச்சாட்சிக்கு மதிப்பளித்திருக்கிறார்களா? இல்லையே! அரசு அலுவலர் ஒருவர் பத்து ரூபாய் அல்லது நூறு ரூபாய் லஞ்சம் வாங்கிவிட்டால் - சட்டத்தை மீறி ஒரு காரியம் செய்துவிட்டால் - அவர் மீது வழக்குத் தொடரும் வாய்ப்பு இருக்கும்போது - அதே குற்றத்தை பொது வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள அமைச்சரோ முதலமைச்சரோ செய்துவிட்டால் மட்டும்; அவர்கள் மீது நாட்டின் ஒரு சாதாரணப் பிரஜைக்கு வழக்குப்போட உரிமையாயிருக்க வேண்டாமா?

தற்காலம் அந்த உரிமை இல்லாத காரணத்தினால்தான்; இருக்கின்ற ஒரே மார்க்கம் - கவர்னர் அனுமதியைப் பெற்று வழக்குப் போடுதல் - என்ற அந்த மார்க்கத்தைப் பின்பற்றி வழக்கு தொடர கவர்னரிடம் இல்லையென ஏதாவது சட்டப்பிரிவு இருந்து; அந்த சட்டப்பிரிவை கவர்னர் சென்னாரெட்டி அவர்கள் மீறிச் செயல்பட்டிருக்கிறாரா? - இல்லையே! இன்னும் சொல்லப்போனால்; ஜெயலலிதா முதலமைச்சராக இருந்து கொண்டு நடத்தியிருக்கிற ஊழலுக்கு நீதிமன்ற விசாரணையில்லாமலே தண்டனை உண்டு!

அரசுக்குச் சொந்தமான சொத்துக்களை, அரசு அலுவலர்களாக இருப்போரோ - அரசு அலுவலராகக் கடமையாற்றுபவரோ வாங்கக்கூடாது, வாங்கினால் இ.பி.கோ. 169-வது பிரிவின்படி கிரிமினல் குற்றம் - தண்டனை 2 ஆண்டு சிறை வாசம் - அபராதம் வாங்கிய சொத்துக்களும் பறிக்கப்படலாம் - என்ற வகையில் தண்டனை குறிக்கப்பட்டுள்ளது. ஜெயலலிதா பங்குதாரராக இருக்கும் ஜெயா பப்ளிகேஷன்ஸ், அரசுக்குச் சொந்தமான டான்சி நிலத்தை வாங்கியது என்பதை; சாட்சிகள் யாரும் தேவையில்லாமலே முதலமைச்சர் ஜெயலலிதாவே ஒப்புக்கொண்டு அறிவித்திருக்கிறார். அதுவும் பல்லாயிரவர் கூடிய அ.தி.மு.க.வின் மதுரை மாநாட்டில்! அவரது பேச்சு தட்டச்சு செய்து படிக்கப்பட்ட பேச்சாகும்! அவரே அந்த மாநாட்டில் படித்த பேச்சாகும்! எல்லா ஏடுகளிலும் அப்போதே வெளிவந்த பேச்சாகும்! உடன்பிறப்பே; இப்படியொரு உண்மையை ஒப்புக்கொண்டபிறகு;

குற்றவாளி தண்டனையை வலியவந்து ஏற்றுக்கொள்வதுதானே நியாயம்!

நீதிமன்ற விசாரணை என்றால்; சிறைத் தண்டனை - அபராதம் போன்றவை! இப்போதே குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ள ஜெயலலிதா; அவரே முன்வந்து பதவியிலிருந்து விலகிவிட்டால் - குற்றத்திற்குரிய தண்டனையை அவரே அவருக்கு விதித்துக்கொண்டார் என்ற நிலை ஏற்படுமே!

ஆனால் அவர் அதற்குத் தயாராக இல்லை! ஆதரவாளர்களைத் தேடி அலைகிறார் - அவர்களைக் கசக்கிப் பிழிந்து அறிக்கைகள் பெறுகிறார் - அந்த அறிக்கைகளைப் பார்த்து மக்கள் சிரிக்கிறார்கள்! கவர்னர் ஒப்புதல் தருவதா? இப்படிச் சிலர்! ஒரு குற்றமும் இல்லையே! இப்படியும் சிலர்! இவர்களின் கூற்றில் உள்ள குட்டுகள் உடைபட்டுக் கொண்டிருக்கின்றன.

ஊழலுக்காக மட்டுமின்றி; மூன்றாண்டுகளாக மக்கள் விரோத - அராஜக - அநியாய - ஊழல் ஆட்சி நடத்துகின்ற ஜெயலலிதா பதவி விலகுவதே நியாயம் என்பதை எடுத்துரைத்து எக்காளமுழக்கமிடத்தான் தோழமைக் கட்சிகளின் பேரணிகளும், பொதுக்கூட்டங்களும் நடத்தப்படுகின்றன!

எந்த நகரில் பேரணியும் பொதுக்கூட்டமும் நடைபெறுகிறதோ; அந்த நகரைச் சூழ்ந்துள்ள - அருகில் உள்ள மாவட்டங்கள்; பேரணி பொதுக்கூட்ட வெற்றிக்குத் தங்களின் பங்களிப்பை வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

பேரணிகளும் பொதுக்கூட்டங்களும் மக்களின் எழுச்சி மிக்க சங்கமங்களாக விளங்கட்டும்! விளங்கும்! நிச்சயம் விளங்கும்! மக்கள் கையில் பூட்டப்பட்டுள்ள விலங்கும் நொறுங்கும். எனவே ஆர்த்தெழுக! அடலேறு என எழுக!

அன்புள்ள,

மு. கருணாநிதி

11-04-1995

2257. பொதுமக்களே பொறுப்பேற்க வேண்டும்!

உடன்பிறப்பே,

ஒரு காலத்தில் நான் எழுதிய உதயசூரியன் நாடகம் தமிழக ஆட்சியாளரால் தடை செய்யப்பட்டது. நாடகம் மட்டுமல்ல; புத்தகம் கூட! அதாவது பெரியவர் பக்தவத்சலம் அவர்களின் ஆட்சிக்காலத்தில்! அதற்கு அரசுத் தரப்பில் சொல்லப்பட்ட காரணங்களில் முக்கியமான ஒரு காரணம்; அந்த நாடகத்தில் போலீஸ் துறையினரின் ஊதியம் மிகவும் குறைவாக இருக்கிறது என்பதை சுட்டிக்காட்டியும் - அந்தக் குடும்பங்களின் வாழ்க்கைத்தரம் வறுமைக் கோட்டுக்குக் கீழே போகக்கூடிய அளவுக்கு இருக்கிறது என்பதை விளக்கியும் - காட்சிகள் அமைக்கப்பட்டிருந்ததுதான்!

அரசுக்கு எதிராகப் போலீசாரைத் தூண்டிவிடுவது போல அக்காட்சிகள் இருப்பதாக அன்றைய அரசு கருதியது.

போலீசு வேலைக்கென்று போகின்ற ஒப்பனுக்கு புத்திரனாய் வந்துதித்த தரித்திரே கண்வளராய்

என்று போலீஸ்காரர் வீட்டில் ஒரு தாய் தன் குழந்தைக்குத் தாலாட்டுப் பாடுவாள்.

போலீஸ் கணவன் வீட்டுக்குக் களைத்துத் திரும்புவான். பசி தாங்காமல் சாப்பாடு கேட்பான். பழைய சோறு ஒரு கலயத்தில் போட்டுக்கொடுப்பாள் மனைவி. கணவன் சலித்துக்கொண்டே அட; கண்றாவியே! பழைய சோறுதானா? சரி; தொட்டுக்கவாவது ஏதாவது இருக்குதா? என்பான் உடனே மனைவி; நான்தான் இருக்கேன். என்னைத்தான் தொட்டுக்கணும் என்பாள்.

இந்தக் காட்சிகள் அன்றைய காங்கிரஸ் அரசின் கண்களை உறுத்தின. எனவே உதயசூரியன் நாடகமும், புத்தகமும் தடைக்கு உள்ளாயின.

இந்தக் கடந்த கால நிகழ்ச்சியை ஏன் நினைவூட்டுகிறேன் தெரியுமா? எழுத்தின் மூலம் நாடகத்தின் மூலமும் அன்றைக்கு எந்தப் போலீசாருக்கு வக்காலத்து வாங்கினேனோ; இன்றைக்கு அந்தப் போலீஸ்துறையின் போக்கு கண்டு வருந்தும் நிலைக்கு ஆளாகியிருக்கிறேன் என்பதை ஒப்பிட்டுக் காட்டத்தான்.

உதயசூரியன் நாடகத்தின் மூலம் போலீசாரின் கஷ்டங்களை எடுத்துரைத்ததோடு விட்டுவிடவில்லை; உதயசூரியன், தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்றதைத் தொடர்ந்து முதன்முதலாக போலீஸ் கமிஷன் ஒன்றை அமைத்து அந்தக் கமிஷனின் சிபாரிசுகளை ஏற்று அவர்களின் ஊதியத்தையும் ஏனைய வசதிகளையும் 1967க்கு முன்பு இருந்ததைவிட நான்கு மடங்குக்கு மேலாக உயர்த்தி அந்தத் துறையினரை மகிழ்வித்த வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது.

காவல்துறையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏதோ சில சம்பவங்கள் - அந்த சம்பவங்களுக்கு மூலகர்த்தாக்களாக சில காவல்துறையினர் எல்லாக் காலத்திலும் இருந்ததுண்டு. கழனிகளில் கண்ணுக்கு இனிமையாக வளர்ந்து நிற்கும் செழிப்பான பயிர்களுக்கிடையே களைகள் சில இருப்பது போல அத்தகையவர்கள் சிலர் இருந்த காலம் அது!

ஆனால்; நான் எந்தத் துறையினர்க்காக அன்று வாதாடினேனோ - அந்தத் துறையில் இன்று, கழனியில் களைகளே நிரம்பி, பயிர்கள் குறைந்து வருகின்றனவோ எனக் கவலையுறும் அளவுக்குப் பெரும் தேய்மானம் ஏற்பட்டிருக்கிறது.

எவர் ஆட்சியாயினும், எந்தக் கட்சியின் ஆட்சியாயினும், நிர்வாகப் பொறுப்பில் - காவல் துறையில் - நீதிமன்றத்தில்; நேர்மை, தலைநிமிர்ந்து நிற்குமேயானால், ஜனநாயகம் குடை சாயாமல் இருக்கும். சட்டம், ஒழுங்கு, அமைதி சீர்குலையாமல் இருக்கும்.

ஆனால் இன்று; இவையனைத்தும் கனவாய் - கானல் நீராய்ப் போய்க் கொண்டிருக்கிற அவலநிலைதான் தமிழ்நாட்டில் என்கிறபோது; இந்த மாநிலத்தின் எதிர்காலத்தைப் பற்றி மனக்கவலை கொள்ளாமல் எப்படியிருக்க முடியும்?

போலீஸ் வேன் ஒன்றில் மன்னார்குடிக்கு நான்கைந்து கோடி ரூபாய் பத்திரமாகக் கொண்டு போய்ச் சேர்க்கப்பட்டது என்று ஒரு

தகவல்! தகவல்தான்! நடக்கின்ற தவறுகளைப் பார்க்கும்போது! இதனை வெறும் தகவல் என்று விட்டுவிட முடியவில்லையே; நடந்திருந்தால் இதைவிட வேதனையான வெட்கக்கேடு இந்தத் துறைக்கு வேறென்ன இருக்கமுடியும்.

அது இருக்கட்டும்; கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழகத்தில் ஆளுங்கட்சியினர் தூண்டுதலால் நடைபெற்ற கொலைகள், அல்லது ஆளுங்கட்சிக்கு மறைமுகமாக வேண்டப்பட்டவர்கள் நடத்தியுள்ள கொலைகள், அமைச்சர்களின் அடியாட்கள் நடத்தியுள்ள வன்முறைகள், ஆட்டோ ரிக்ஷா படையெடுப்புகள், இப்படி எத்தனை விதமான கொடுமைகள் நடைபெற்றுள்ளன.

ஒரு பத்திரிகை அலுவலக ஊழியர்கள் ஆளுங்கட்சியின் குண்டர்களால் கொலையுண்டது, பெண் அய்.ஏ.எஸ். அதிகாரியின் முகத்தில் திராவகம் ஊற்றியது முதல் - மதுரையில் இந்து முன்னணி ராசகோபாலன் கொலையும்; அதன் காரணமாக திண்டுக்கல்லில் ஓர் இஸ்லாமிய இளைஞன் கொலையும்; இப்போது சென்னையில் இந்து முன்னணி அலுவலகம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதும் என்பது வரையில் சுதந்திரமான புலன் விசாரணையைப் போலீஸ் துறை நடத்தியதுண்டா?

கொடவாசல் தங்கையா கொலையில் குற்றவாளி எனப் புகார் கூறப்பட்ட ஆளுங்கட்சிக்காரர் அமைச்சர் ஒருவரின் காரிலேயே பவனி வந்த செய்தி, சட்டப்பேரவை வரையில் வந்து சந்தி சிரிக்கவில்லையா?

காவல் துறையினரின் கைகள் கட்டப்பட்டுள்ளன இந்த ஆட்சியில்! அதற்காகக் காவல்துறை, தனது கடமையிலிருந்து தவறுவதா? நியாயமாகச் செயல்படாதே; மனச்சாட்சிப்படி நடக்காதேயென்று மேலேயிருப்போர் கட்டளையிட்டால்; அதற்குக் குனிந்து கொடுத்தால்; பொட்டுப் பூச்சிகளைவிடவும் புன்மைத் தேரைகளை விடவுமன்றோ; போலீஸ்துறை, தனது மதிப்பை இழந்து விட நேரிடும்.

உலகின் திறமை வாய்ந்த போலீஸ் படைகளுடன் ஒப்பிட்டுக் கூறுமளவுக்குப் புகழ் வாய்ந்திருந்த இந்த நிர்வாகம்; இன்று ஏன் சீர்குலைந்தது?

என் செய்வது; கன்னிமேரியாக முதலமைச்சர் ஜெயலலிதாவை சித்தரித்து விளம்பரம் செய்தமைக்குக் கிறிஸ்தவ சமுதாயம் கிளர்ந்தெழுந்து எதிர்ப்பு காட்டினால்; அதற்கு எதிராக இந்து முன்னணியினர் வெளியிட்ட அறிக்கைகள் தமிழக அரசின் தலைமைச் செயலாகத்தில் இருந்தல்லவா வெளியிடப்படுகின்றன!

எல்லாவகையிலும் கெட்டுக்குட்டிச்சுவராகிவிட்ட ஜெயலலிதாவின் அரசின் நிர்வாகம், போலீஸ் துறையை மட்டும் விட்டுவைக்குமா என்ன?

அதற்கு அடையாளம்தானே; எம்.ஜி.ஆர். நினைவகத்தில் பணியாற்றிய முத்துவின் மீது கஞ்சா வைத்துப் பிடித்த வழக்கு!

நீதிபதி மீது ஆத்திரம் கொண்டு அவர் மருமகன் மீது; கஞ்சா வைத்திருந்ததாகப் பொய் வழக்கு!

இதற்கெல்லாம் உடந்தையாக இருக்கிற போலீஸ்; இன்னும் எதற்கெல்லாம் உடந்தையாக இருக்கமாட்டார்கள்?

காவல்துறையின் கவனம் திசைமாறிப் போய்விட்ட காரணத்தினால்தானே; கொலை, கொள்ளை, வழிப்பறியென்பன அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டிருக்கின்றன!

இதோ, இரண்டொரு நாட்களாக மதக் கலவரத்துக்கு வித்திடும் காரியங்கள் தொடர்கின்றன என்றால்; அதற்குப் போலீசாரின் அக்கறையற்ற செயல்தானே காரணம்!

சென்னை இந்து முன்னணி அலுவலகக் குண்டு வெடிப்பையொட்டி, மேலும் நாலுபேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இந்தப் பின்னணியில் வன்முறை தொடர்ந்தால்; அது எங்கே போய் முடியும் என்ற வேதனை, அமைதி நாடுவோர் அனைவரின் இதயத்திலும் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது.

ஓர் இயக்கம் அல்லது மதத்தைச் சார்ந்தோரில்; சமூக விரோதிகள் சிலர் மூட்டிவிடும் தீயினால், மொத்தமாக நாடே நலிவுறும் கேடு விளையாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அரசின் பொறுப்பு - இந்த இரண்டு நிலையிலும் இப்போது பொறுப்புகள் தட்டிக் கழிக்கப்படுகிற காரணத்தால் - எல்லாப் பிரிவுகளிலுமுள்ள பொதுமக்கள்தான், தமிழகத்தில் அமளி பரவிடாமல் - அமைதி காத்திட முழு ஒத்துழைப்பைத் தந்தாக

வேண்டும். உடன்பிறப்பே, அதற்காவன செய்திட உன்போன்றோர் அணுகுமுறை; பயன்படட்டும்.

மனிதநேயம் காப்பதற்கும் - மதவெறிக் கூச்சல்கள் எங்கிருந்து வரினும் அவற்றைப் புறக்கணிப்பதற்கும் - அணிவகுத்து நிற்போம்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

18-04-1995

2258. மாமியார் உடைத்தால் மட்டும் மண்சட்டியா?

உடன்பிறப்பே,

ஒரு கற்பனைக் கதையை முதலில் சொல்லி இந்தக் கடிதம் உனக்கு எழுதுகிறேன். என்ன கதையென்று அறிந்துகொள்ள ஆவல் ஏற்படுகிறதல்லவா? புராணமும் நவீனமும் கலந்து ஒரு கதம்பக் கதை! எமலோகத்தில் எமதர்மராஜன் கொலு வீற்றிருக்கிறான். எமனுக்கு; தர்மராஜன் என்று ஏன் பெயர் வந்தது? மனிதர்களைக் கொன்று உயிரைப் பறித்துச் செல்பவனுக்குத் தர்மராஜன் என்ற பெயரா? இப்படியெல்லாம் கேட்கத் தோன்றும்! ஆயுட்காலம் முடிந்தவுடன் அவர்களின் உயிரைக் கொண்டு செல்ல வேண்டிய தெய்வீகக் கடமையின் காரணமாகவே எமன் செயல்படுகிறானேயல்லாமல் துளியளவும் அவன் தர்மம் தவறுபவன் அல்லன் என்பதால் தர்மராஜன் என்று அழைக்கப்படுகிறான் என்று புராணீகர் கூறுவர்.

பதினாறு வயதில் மார்க்கண்டேயன் சாக வேண்டுமென்றிருந்தது. எனவே அவன் உயிரைப் பறிக்க எமன் எருமையிலேறி பாசக் கயிறுடன் வந்தான். மார்க்கண்டேயனோ மரணத்துக்குப் பயந்து ஓடி, திருக்கடையூரில் உள்ள கோயிலுக்குள் நுழைந்து சிவலிங்கத்தைக் கட்டிப்பிடித்துக்கொண்டான். சிவலிங்கம் வெடித்து அதிலிருந்து சிவனார் புறப்பட்டு எமனை எதிர்த்தார். எமன்; தனது கடமையை நிறைவேற்ற வந்திருப்பதாகச் சொன்னான். சிவபெருமான் கட்டளைப்படியே மார்க்கண்டேயன் உயிரைப் பறிப்பது தனது பணி என்று வாதிட்டான். ஆனால் சிவபெருமான் தனது ஆணைக்கே விதிவிலக்கு அளித்து - மார்க்கண்டேயன் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தி என்றைக்கும் பதினாறாக வாழச் செய்தான். இதுவும் புராணமே! இந்தப் புராணப்படியும் எமன், தன்னை தர்மராஜனாகவே காட்டிக் கொண்டு, சிவனை வணங்கித் திரும்பி விடுகிறான்.

அத்தகைய தர்மராஜன் எனப்படும் எமன் தர்பாரில் சித்ரபுத்திரன் இரண்டு வழக்குகளை முன் வைக்கிறான். அவற்றில் முதல் வழக்கு குறித்து எமதர்மனிடம் சித்ரபுத்திரன் விளக்கும் விதம் காண்க!

'மகாபிரபூ! இதோ இந்த மனிதர், பூலோகத்தில் தொண்ணூறு வயதுக்கு மேல் வாழ்ந்து விட்டவர். பெரிய பதவிகளில் மக்களின் ஆதரவு பெற்று முதல்வராக அமர்ந்து அரசோச்சியவர். பூவுலகில் இவர் ஒரு கட்சியில் முக்கிய பொறுப்பும் வகித்தவர். ஆனால் இரண்டு மூன்று தடவை அக்கட்சியின் கட்டுப்பாட்டை மீறி, பேசியும் செயல்பட்டும் வந்த காரணத்தினால் அந்தக் கட்சியின் தலைமை இவரை எச்சரித்ததும் உண்டு. அதற்காக இவர் வருத்தம் தெரிவித்துக் கொண்டதும் உண்டு.

ஆனால் அப்படி வருத்தம் தெரிவித்த பிறகும்; மீண்டும் மீண்டும் கட்சித் தலைமை மீது வீண் புகார்களைக் கூறத் தலைப்பட்டார். அதைப்பற்றியெல்லாம் இவரைக் கேட்டபோது; தலைமையையே அறைகூவலுக்கு அழைத்து அறிக்கைகள் விடுத்தார். இப்போது இவர்; தன்னைச் சொர்க்கத்திற்குத்தான் அனுப்ப வேண்டுமென்கிறார். மகாபிரபுவின் தீர்ப்புக்காக இந்த மன்றமே காத்திருக்கிறது!'

சித்ரபுத்திரனின் கூற்றைக் கேட்டதும் எமதர்மராஜன் சொல்வது என்னவென்றால்;

'ஓகோ, இவர் பெரும் பதவிகளில் இருந்தவராக இருக்கலாம். எனினும்.... எனினும்... இவர் கட்சிக் கட்டுப்பாட்டை மீறியிருக்கிறார். கட்சித்தலைமையையே விமர்சித்திருக்கிறார். அது மட்டுமல்ல; முதலில் சில தவறுகளுக்கு வருத்தம் தெரிவித்துவிட்டு, திரும்பவும் அதே தவற்றைச் செய்திருக்கிறார். இப்படிக் கட்டுப்பாடு மீறுகிற இவரை சொர்க்கம் சென்றிட அனுமதித்தால் - சொர்க்கமும் கட்டுப்பாட்டை மீறி, சுத்தமாகக் கெட்டுவிடும். ஆகையினால் இவரை, நரகத்திற்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிடுகிறேன். பெரும் பதவியில் இருந்தவர் - கட்சிக்காக உழைத்தவர் என்பதற்காக இவரது கட்சிக் கட்டுப்பாடு மீறிய செயலை ஏற்க முடியாது. அதனால் இவர் சொர்க்கத்தைக் கனவிலும் காண முடியாதபடிக்கு; நரகத்தில் தள்ளிவிடுமாறு கண்டிப்பான கட்டளையிடுகிறேன்.'

எமதர்மராஜன் தீர்ப்பையொட்டி; அந்த மனிதரை, சித்ரபுத்திரன் நரகலோகத்திற்குச் சில கிங்கரர்களுடன் அனுப்பி வைக்கிறான்.

அடுத்த வழக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. இப்போதும் சித்ரபுத்திரன்தான் பேசுகிறான்.

'அய்யனே! மகாபிரபூ; அடுத்து வந்துள்ள இந்த வழக்கும் ஏறத்தாழ முதல் வழக்கைப் போன்றதுதான். இன்னும் சொல்லப்போனால்; இவர் - முதல் வழக்கில் சம்பந்தப்பட்டு தங்களின் தீர்ப்புக்கு ஆளானவரைவிட அதிகப்படியான அளவுக்கு; இவர் சார்ந்திருந்த கட்சியின் கட்டுப்பாடுகளை பேச்சால், செயலால் மீறியிருக்கிறார். முதல் வழக்கில் குறிப்பிடப்பட்டவராவது கட்சித் தலைமையைக் குறைகூறி, தலைவரை விமர்சனம் செய்தவர். ஆனால் இவரோ; கட்சியே தன்னுடையது - கொடியே தனக்குரியது - கட்சித் தலைவரையே நான் விலக்கிவிட்டேன் என்று தீர்மானம் போட்டு கட்சியின் சின்னத்தையே முடக்குவதற்கு வழக்குத் தொடர்ந்து அதிலே தோற்றுபோய்ப் புதுக்கட்சி தொடங்கியவர். எனவே மகாபிரபுவாகிய தாங்கள்; முதல் வழக்கில் அளித்த தீர்ப்பையே இதற்கும் வழங்குவீர்கள் என எதிர்பார்த்து அமைகிறேன்.'

சித்ரபுத்திரன், வழக்கின் விபரத்தைச் சுருக்கமாக எடுத்துச் சொன்னதும்; எமதர்மராஜன்;

'சித்ரபுத்திரரே! நீர் எடுத்துரைத்த வழக்குகள் இரண்டும் ஏறத்தாழ ஒன்றுபோல இருந்தாலும் என் தீர்ப்பு ஒரேமாதிரி இருக்கப் போவதில்லை. இந்த மனிதர் சொர்க்கத்தில் இருக்கலாம் என்று நான் அனுமதிக்கிறேன்.'

- என்று கூறிவிட்டு; மளமளவென்று சிம்மாசனப் படிகளில் இறங்கிவந்து - இரண்டாவது வழக்கில் நிறுத்தப்பட்டவரைக் கட்டித் தழுவிக் கொண்டான்.

அதிர்ந்து போன சித்ரபுத்திரன் 'மகாபிரபு! இது என்ன விந்தையாக இருக்கிறது! ஒரே மாதிரி குற்றம் புரிந்தவர்கள் - அதிலும் முதலில் தீர்ப்பளிக்கப்பட்ட நபரைவிட; இரண்டாமவர் மேலும் தீவிரமாகக் கட்சித் தலைமைக்குக் கட்டுப்படாமல் நடந்து கொண்டவர் - ஆனால்; முதலாமவருக்கு நரகம் என்றும்

இரண்டாமவருக்கு சொர்க்கம் என்றும் ஆணை பிறப்பித்து விட்டீர்களே; தர்மராஜனாகிய தாங்களே தடம் புரளலாமா?' என்று மிகுந்த உருக்கமுடன் எமதர்மராஜனைப் பார்த்துக் கேட்டான்.

'அடேய்! சித்ரபுத்திரா! என் தீர்ப்புக்கா களங்கம் கற்பிக்கிறாய்? என்னால் இதைப் பொறுத்துக்கொள்ள முடியாது. எனவே நாம் இருவரும் இதுவரையில் ஒன்றுபட்டுச் செயல்பட்டதுபோல இனியும் செயல்பட முடியாது.' என்று கர்ச்சித்தான் எமதர்மன்!

'மகாபிரபூ! கொஞ்சம் சிந்தியுங்கள்! ஒரேவிதமான குற்றத்துக்கு இருவேறு விதமான தீர்ப்புகளா?' - என மீண்டும் கேள்விக்கணை விடுத்தான் சித்ரபுத்திரன்!

'உனக்கும் எனக்கும் இனி ஒட்டுமில்லை; உறவுமில்லை போ!' என்று கூறிக்கொண்டே தர்மராஜன், சொர்க்கம் செல்பவனின் தோளில் கைபோட்டுக் கொண்டே கொலு மண்டபத்தை விட்டு வெளியேறினான்.

உடன்பிறப்பே, நவீன புராணக்கதையை நான் முடித்துவிட்டேன். நீ மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட்பீரோ அறிவிப்பை ஒருமுறை படித்துவிடு!

கடந்த வருடம் நிருபன் சக்ரவர்த்தி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோது, கல்கத்தாவிலிருந்து வெளியாகும் வங்காள மொழிப் பத்திரிகை ஒன்றுக்கு கட்சியைப்பற்றி அவதூறாக பேட்டி அளித்திருக்கிறார்.

இதுபற்றி கட்சியின் மத்திய கமிட்டி, தீவிர நடவடிக்கை எடுக்குமாறு கட்சியின் பொதுச் செயலாளரை கேட்டுக் கொண்டது. அதன் பேரில், விளக்கம் கேட்டபோது எதிர்காலத்தில் இதுபோன்று நடக்காது என உறுதியளித்தார்.

மறுபடியும் கட்சியின் 15-வது தேசிய கூட்டம் நடைபெறும்போது கட்சி மீது அவதூறு கூறினார்.

இதனால் நடவடிக்கை எடுக்குமாறு கட்சியின் மத்திய கமிட்டி, பொலிட்பீரோவை கேட்டுக் கொண்டது. கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு நிருபன் சக்ரவர்த்தி செய்த சேவை மற்றும் தியாகத்தைக் கருத்தில் கொண்டு, தேர்வு செய்யப்பட்ட பதவிகளில் இருந்து அவரை நீக்குவது

என்றும் அவர் தன்னை திருத்திக்கொள்ள ஒரு வாய்ப்பு தருவது எனவும் கட்சியின் மத்திய கமிட்டி முடிவு செய்தது.

ஆனால் நிருபன் சக்ரவர்த்தி தனது தவறுகளை திருத்திக் கொள்வதற்குப் பதிலாக கட்சியின் மீதும் கட்சித் தலைவர்கள் மீதும் விஷமத்தனமான ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை கூறியது வருத்தத்திற்குரியது.

எதிரிகள்கூட கூறாத புகார்களை நிருபன் சக்ரவர்த்தி கட்சியின் மீது கூறியுள்ளார். கட்சியின் ஒழுக்க விதிகளுக்கு இது முரணானது; எனவே, கட்சியை விட்டு நீக்கப்படுகிறார். கட்சியைவிட எந்த உறுப்பினரும் முக்கியமானவர் அல்ல; அவர் எவ்வளவு பெரியவராக இருந்தாலும் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த அறிக்கையின்படி நிருபன் சக்ரவர்த்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து நீக்கப்பட்டு விட்டார். இப்போது அவருடன் கூட்டணி சேருகின்ற கட்சியுடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கூட்டணி வைத்துக் கொள்ளுமா?

அது என்ன; மருமகள் உடைத்தால் பொன்சட்டி; மாமியார் உடைத்தால் மட்டும் மண்சட்டி?

அன்புள்ள,

மு. கருணாநிதி

26-04-1995

2259. நேரில் வாழ்த்திடக் காத்திருக்கிறேன் மே தினத்தில்!

உடன்பிறப்பே,

மேநாள்; மேலான நாள் என்றெல்லாம் சிறப்பித்துக் கூறப்படும் இந்த நாளிலே, தமிழகம் எத்தனையோ துறைகளில் சீரழிவை நோக்கிப் போய்க் கொண்டும் - அழிவுப் பள்ளத்தாக்கிலேயே தலைகுப்புற விழக் கூடிய அளவுக்கு அதன் எல்லைவரம்பைக் கடந்துவிட்ட நிலைக்குத் தன்னை உள்ளாக்கிக் கொண்டும் - சகதியில் மலராக மிதிபடும் இந்த வேளையில்; அந்தக் கவலையை மனத்தில் படரவிட்டவாறு இருந்திடாமல் - அக்கவலை போக்க எம்மிடம் ஆற்றலுண்டு, அறிவு உண்டு, உணர்வு உண்டு, உழைக்கும் வலிவு உண்டு, எம் வியர்வையின் சக்தியை, நெஞ்சுறுதியை நிலை நாட்டியே தீருவோம் - தமிழகத்தை விழிப்பு கொள்ளச் செய்திடுவோம் என்று சூளுரைத்துச்சுடர் முகம் தூக்கித் தமிழகத்துப் பாட்டாளி மக்கள் அணிவகுத்திட இருக்கிறார்கள்.

அந்தத் தொழிலாள வர்க்கத்து உடன்பிறப்புகள் அனைவருக்கும் மேதின வாழ்த்துக்களை இரண்டு நாள் முன்னதாகவே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை கொண்டாடும் மேதின விழா சென்னையில் மிக்க எழுச்சியுடன் ஏற்பாடாகி வருகிறது. தொ.மு.ச. பேரவையினர் நடத்தும் மேதின விழாவுடன் தொ.மு.ச. பேரவையின் வெள்ளிவிழாவும் இணைகிறது. பேரவைக்கான கட்டிட திறப்பு விழாவும் அவற்றுடன் சேர்ந்து கொள்கிறது.

இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு தி.மு.கழக அணிகளில் ஒன்றான தொழிலாளர் அணி புதிய உற்சாகத்துடன் முடுக்கிவிடப்பட்டு; கழகத்தை அரணாகக் கொண்ட தொழிலாளர் இயக்கத்தின் அமைப்புகளை உருவாக்கி; அந்த அமைப்புகளெனும் முத்துக்களை ஆரமாக்கிடும் நன்னோக்குடன் தொழிலாளர்

முன்னேற்ற சங்கப் பேரவையின் தோற்றம் இளங்கதிராக எழுந்து, இன்று உச்சிச்சூரியனாய் ஆதிக்க சக்திகளைச் சுட்டெரித்து, உழைப்பை உறிஞ்சுவோரின் உன்மத்தச் செயல்களைத் தகித்து, வீர உலா நடத்திக் கொண்டிருக்கிறது.

கழகத்திற்கு அண்ணா இட்ட கட்டளைகளான கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்றில்; மிக முக்கியமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டியது கட்டுப்பாடே ஆகும் - அந்தக் கட்டுப்பாட்டுக்கு ஒரு துளியளவு குறை ஏற்பட்டாலும்; அது கழகத்தையும், கழகத்தினால் விளையக் கூடிய பயன்களையும் வீணாக்கிவிடும், என்ற கருத்தை தந்தை பெரியார் அவர்கள்; அண்ணாவின் மறைவுக்குப் பிறகு எடுத்துச் சொன்னதை இதயத்தில் பதிய வைத்துக் கொண்டு எப்படிக் கழகம் செயல்படுகிறதோ; அதைப் போலவே கழகத்தை நிழலாகவும் நீள்அரணாகவும் பெற்று இயங்கும் தொ.மு.ச.வும் செயல்பட்டு வருகிறது.

இன்று தமிழகத்தில் பெருமளவு தொழிலாளர்களைக் கொண்ட ஒரு சில பேரியக்கங்களில் ஒன்றாக, தொ.மு.ச. பேரவை விளங்குகிறது. தொழிலாளர்களின் பல்வேறு கோரிக்கைகளுக்காக இந்தப் பேரவை, போர்க்கோலம் பூண்டு; வெற்றிக்கனிகளைப் பறித்துத் தந்து பாட்டாளி வர்க்கத்தினரைப் பரவசத்திலாழ்த்திய நிகழ்ச்சிகள் பலப்பலவாம்!

ஊதிய உயர்வு - ஊக்கத் தொகை - வேலைமாற்றம் - வேலை நீக்கம் போன்ற எத்தனையோ தொழிற் சங்கப் பிரச்சினைகளை, கொள்கை ரீதியாகவும் நியாயத்தின் அடிப்படையிலும் அணுகிக் கொடி உயர்த்திக் குறிக்கோளை எட்டி வருகிற இயக்கம்தான் தொ.மு.ச. பேரவையாகும்.

இருபத்தி ஐந்து ஆண்டுக்காலம்; தான் நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்திட நோக்குகின்ற அரிமா நோக்குத்தான் மே நாளன்று நடைபெற இருக்கிற வெள்ளி விழா.

பிறக்குமா? பேறு காலத்தில் ஊறு விளையுமா? இந்தச் சந்தேகங்களுக்கிடையே சுகப்பிரசவக் குழந்தையாகத் தோன்றி; தவழும் காலத்திலேயே வேதனை நெருப்புகளைக் கடந்து - தத்தி நடக்கும்போது சோதனைச் சூறாவளியிலும் நிலைகுலைந்து வீழாமல் - இன்று இருபத்தி ஐந்து அகவை வாலிப முறுக்குடன்

நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் தனக்குரிய இயல்பு என்பதை செயலால் உரைத்து; துரோகத்தைத் தகர்க்கும் தோள்களும் - துன்பங்களைத் தாங்கும் நெஞ்சுறுதியும் ஒருசேரத் துணையிருந்திட; நமது கழகத்தின் தொழிலாளர் சேனை பல்வேறு பகுதிகளில் பாசறைகளை அமைத்துக் கொண்டு முரசு கொட்டிக் கொண்டிருப்பது கண்டும் கேட்டும் இன்புறுகிற எனக்குக் களிப்பூட்டவும், தெம்பு தரவும் உழைக்கும் நல்லார், மேலும் ஒரு வங்கக் கடல் வந்தது பார் சென்னைக்கு எனச் சொல்வது போல மே தினப் பேரணியை நடத்திக் காட்ட இருக்கின்றனர்.

திராவிட இயக்கமென்றாலே; அது தொழிலாள வர்க்கத்தின் இயக்கம்தான் என்பதைப் பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் எத்தனையோ முறை எடுத்தியம்பியுள்ளனர்.

“சிற்றூரும் வரப்பெடுத்த வயலும்
ஆறு தேக்கிய நல்வாய்க்காலும்
நெற்சேர உழுதுழுது பயன்விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்கள் எலாம் எவரின் தோள்கள்?
பொற்றுகளைக் கடல் முத்தை
மணிக் குலத்தைப் போய் எடுக்க
அடக்கிய மூச்சு; எவரின் மூச்சு?”

புரட்சிக் கவிஞர் - பாவேந்தர் பாரதிதாசன் அன்று கவிதை வாயிலாக அடுக்கிய இந்தக் கேள்விகள், நமது பாட்டாளிப் பாசறையின் படைக்கலன்களன்றோ!

ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டோர்
புலிவேஷம் போடுகின்றார் -
பொது மக்களுக்குப் புல் அளவு
மதிப்பேனும் தருகின்றாரா?

- என்று கேட்டதும் அந்தப் புதுவைக் குரல்தானே! எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு புரட்சிக் கவிஞருக்கு ஏற்பட்ட அந்த ஆதங்கம்; இன்னும் தமிழகத்தில் தீர்ந்தபாடில்லையே!

தமிழர் ஏமாந்த காலத்தில்
ஏற்றங்கொண்டவர்தானே
இன்று தலைமீது ஏறி மிதிப்பேன்

என்கிறார்!
தமிழர் நெறி, நீதி, நியாயம்
எல்லாவற்றின் மீதும் தணலை
வாரிக் கொட்டுவேன் என்கிறார்!

தொழிலாள வர்க்கத்து உடன்பிறப்புகளுக்கு அவர்தம் சங்கத்து உரிமைகள், அந்தப் பாட்டாளி மக்களின் தேவைகள்; என்ற அளவுடன் இலட்சியம் சுருங்கிவிடக் கூடியதல்லவே! தமிழ்நாட்டின் தலையெழுத்தை மாற்றி எழுதக் கூடிய பேனாக்களாக அவர்தம் கரங்களில் உள்ள சம்மட்டிகள் மாறித் தீர வேண்டுமல்லவா?

தொழிலாளர் சமுதாயத்துடன் நேரடித் தொடர்பில் உள்ள பொருளாதாரக் கொள்கையில் மத்திய அரசு போட்டு வைத்துள்ள பொத்தல் - அந்தப் பொத்தலில் தலையை நுழைத்துக் கொண்டு, இதுதான் சமயமென்று மாநில அரசு ஏற்கனவே இருக்கும் அரசின் லாபகரமான தொழிற்சாலைகளையெல்லாம் தனியாருக்குத் தாரைவார்த்து, அதற்கெனப் பெட்டிகளைப் பெற்றுக் கொள்ளும் கொடுமை! ஊழல்! இதற்கும் முடிவு காணும் வலிமை தொழிலாளர் வர்க்கத்தின் கரங்களுக்கு உண்டல்லவா?

எனவேதான் முழுநேரமும் தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவையின் பணிக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற செயல்வீரச் சிங்கங்களுடன் அணிவகுத்து இந்தப் பேரவையை பெருமை சிறக்க நடத்தி வரும் ஆற்றல் மிகு அருமை நண்பர் குப்புசாமி அவர்கள்; துள்ளியோடிப் பணிபுரிகிறார்; வெள்ளி விழா எழுச்சியும்; தமிழகக் கழனியில் முளைத்துள்ள கள்ளிகளைக் களைந்தெறியப் பயன்படும் என்ற நம்பிக்கையுடன்! அந்த நம்பிக்கை நட்சத்திரமாகவே ஒளிவிடும் கழகத்தின் தொழிற்சங்க உடன்பிறப்பே; பீடு நடையும் பெருமித நோக்கும் கொண்ட உன் பேரணி கண்டிட சென்னை தயாராகிக் கொண்டிருக்கிறது! நானும் உனை நேரில் வாழ்த்திடக் காத்திருக்கிறேன் மே தினத்தில்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

28-04-1995

2260. அறைகூவலா? அறப்போருக்கு எதிராகவா?

உடன்பிறப்பே,

நீதிமன்றத் தீர்ப்புகளையும் தாக்கீதுகளையும் காலில் போட்டு மிதிப்பேன் எனும் ஆணவத்துடன் தமிழக முதலமைச்சர் செயல்படுவதை ஆசிரியர் பயிற்சிப்பள்ளி விவகாரத்திலும் கொடைக்கானல் நட்சத்திர ஓட்டல் விவகாரத்திலும் தெளிவாக உணர்ந்துள்ள மக்களுக்கு மேலும் ஓர் எடுத்துக்காட்டாக ஓரிரு நாட்களுக்கு முன்பு சென்னை உயர்நீதி மன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்புக்குப் பிறகு; ஆணவம் மட்டுமல்ல; அநாகரிகத்தின் உச்சிக்கே அந்த அம்மையார் சென்றுவிட்டது மிக மிக நன்றாகவே விளங்க ஆரம்பித்திருக்கிறது.

என்னிடம் தவறாக நடந்து கொண்டார். தகாத முறையில் பேசினார் எனும் ஒரு பெரும் அதிர்ச்சி தரக்கூடிய செய்தியை சட்டப்பேரவையில் சொன்னவர்; வேறு யாருமல்ல - தமிழகத்தின் முதலமைச்சர்! ஆம்; பெண் முதலமைச்சர்! அப்படி நடந்து கொண்டதும் பேசியதும் யாராம்? தமிழக ஆளுநர் சென்னாரெட்டி அவர்களாம்!

தவறான நடவடிக்கை - தகாத பேச்சு; ஒரு முதலமைச்சரிடம் ஒரு கவர்னர்! எப்போது? இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு; அதாவது 1993 ஆகஸ்டு மாதத்தில்!

இந்தத் தவறான நடவடிக்கையும் தகாத பேச்சும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான் அம்மையார் ஜெயலலிதாவுக்கே நினைவுக்கே வந்திருக்கிறது!

சில மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற வழக்கு ஒன்றில் உயர்நீதிமன்றத்தில் அளித்த ஒரு வாக்குமூலத்தில், எனக்கும் கவர்னர் சென்னாரெட்டி அவர்களுக்கும் எந்த மோதுதலும் இல்லை. சுமுக உறவே நிலவுகிறது என்று குறிப்பிட்ட ஜெயலலிதாவுக்கு;

அந்த 1993 ஆகஸ்டு மாதம் நினைவுக்கு வராமல் போனது ஏன் என்று தெரியவில்லை.

டாக்டர் சுப்பிரமணியம் சுவாமிக்குக் கவர்னர்; முதலமைச்சர் மீது வழக்குப் போட அனுமதி கொடுத்தது தவறு என்று ஜெயலலிதா, உயர்நீதிமன்றத்தில் இந்த ஏப்ரல் மாதம் தொடர்ந்த வழக்கில் தனக்கும் கவர்னருக்கும் மோதல் ஏற்பட்ட காலகட்டங்களையெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார். ஜெயலலிதா நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அந்த வாக்கு மூலத்தில், அவருக்கும் ஆளுநருக்கும் மோதல் ஏற்பட்டதாகக் குறிப்பிடப்படும் மாதங்களில் ஆகஸ்டு மாதம் இடம்பெறவே இல்லை. ஆம்; ஆகஸ்டில் நடைபெற்றதாக சட்டப்பேரவையில் ஜெயலலிதா கூறிய அந்த தவறான முறையும் தகாத பேச்சும் நீதிமன்றத்தில் அவர் அளித்த வாக்குமூலத்தில் இடம்பெறக் காணோம்.

உள்ளங்கை நெல்லிக்கனிபோல ஊழல்கள் ஒவ்வொன்றும் உலகிற்குத் தெரியத் தொடங்கவே; ஏதாவது திசைதிருப்பி, யார் மீதாவது பழி போட்டு, தன்னிடம் மாதாந்திர மாமூல் பெறுகிற கொத்தடிமைகள் சிலரை விட்டு கவர்னருக்கு எதிராகவும், தனது ஊழலுக்கு ஆதரவாகவும் அறிக்கை விடச் சொல்லி; பாமர மக்களை மேலும் மேலும் ஏமாற்ற இந்த அம்மையார் போடும் வேடத்தை எவரும் நம்பத் தயாராக இல்லை.

ஜனநாயகத்தின் தூண்கள் எனப்படுபவைகளில் நிர்வாகம், நிமிர்க்க முடியாத அளவுக்குச் சீர்குலைந்து போய்விட்டது.

ஆட்சிமன்றமோ; அம்மையாருக்கு ஆளுங்கட்சியினர் அனுதினமும் லட்சார்ச்சனை செய்யும் இடமாக; அல்ல! அல்ல! மடமாக மாறிவிட்டது! எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லா நாட்களுமே விரட்டப்படுகின்றனர்! மிரட்டப்படுகின்றனர்!

நீதிமன்றங்களோ ஆளுங்கட்சியினரின் ஆடவரும் பெண்டிருமான அலங்கோலமாக ஆடிப்பாடி ஆபாசச் சேட்டை புரியும் கொடுமைகளையும் கோணங்கித் தனங்களையும் பார்த்துப் பார்த்துச் சலித்துப் போய்; சகிக்க முடியாத நிலையில் நெற்றிக்கண்ணைத் திறக்க நேரம் பார்த்துக் கொண்டிருக்கின்றன.

ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்று கருதப்படும் பத்திரிகைத்துறையும் இந்த ஆட்சியில் பயங்கர அச்சுறுத்தலுக்கு

உள்ளாக்கப்பட்டு; அந்தத் துறையும் இனி எரிமலையெனக் குமுறி எழ வேண்டியதுதான் பாக்கி!

எதேச்சாதிகாரப் போக்கில் நடப்பது - ஏன் என்று கேட்டால், எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுவது - சட்டத்தைத் துச்சமென எண்ணித் தூக்கி எறிவது - சாடிஸ்ட் மனப்பான்மையில் ஒரு மனத்திருப்தி கொள்வது - சமூகநீதி காப்பதுபோல நடிப்பது - ஒடுக்கப்பட்ட மக்களுக்கெதிராகவே திரைமறைவில் சூழ்ச்சிகள் செய்வது - இவையனைத்துக்கும் மேலாக; மொத்தத் தமிழ்நாட்டையே தானும் தனது நெருங்கிய தோழிக் குடும்பத்தினரும் உறவினரும் தமக்கே சொந்தமாக்கிக் கொள்ளத் துணிந்து; அதிகாரிகள் துணையுடன் ஆங்காங்கு நிலபுலங்களைச் சுருட்டுவது - மாதத்திற்கு ஒரு ரூபாய் மட்டுமே சம்பளம் வாங்குவதாகக் கூறி ஊரார் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு; ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை உலகறிந்த ரகசியமாக கொள்ளையடித்துக் குவித்திடுவது;

உடன்பிறப்பே, இதற்கெல்லாம் பதில் சொல்ல முடியாமல் வக்கற்று, வழியற்று, தெம்பற்று, திறனற்றுக் கிடக்கிற முதலமைச்சர் ஜெயலலிதாவும் அவரது அமைச்சர் பரிவாரங்களும் இனியும் பதவியில் நீடிப்பது என்பது முறையல்ல; தகாது; நாடு கேடடையும் என்பதால் அதனைத் தடுத்திட அவர்கள் உடனடியாகப் பதவி துறந்திட வேண்டும் என்பதை வலியுறுத்திடத்தான் மே திங்கள் நாலாம் நாள் வியாழக்கிழமை காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையில் தமிழகம் முழுதும் முழு அடைப்பு மற்றும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட எல்லாக் கட்சிகளும் அறப்போர்க்களத்தில் இறங்கியுள்ளன.

இப்போதே அமைச்சர்கள் அந்த அறப்போருக்கு எதிராக - அமைதி வழியில் கருத்தறிவிக்கும் ஜனநாயக முறைக்கு எதிராக - ஆகா! முழு அடைப்பா? முடியுமா உங்களால் என்று முண்டாதட்டுகிறார்கள்! மேலும் ஐநூறு பேருந்துகளை ஓடவிடுகிறோம் பாரீர் என்று எதிர்க்கட்சிகளின் மூக்கிலே கைபோட்டு வம்புக்கு வாரீர் என்று அழைக்கிறார்கள்!

முழு அடைப்பு என்றால்; இன்றைய ஆளுங்கட்சிக்கு அர்த்தம் சொல்லத் தேவையில்லை! இந்த ஆளுங்கட்சியே சில முழு அடைப்புபந்த்களை நடத்தியிருக்கிறது; இந்த மூன்றாண்டுகளுக்குள்!

முழு அடைப்பு என்றால்; கடைகள் மூடிக் கிடக்கும்! அலுவலகங்கள் அடைபட்டிருக்கும்! திரையரங்குகள் இயங்க மாட்டா! புகைவண்டிகள், பேருந்துகள் ஓடாது! தொழிற்சாலைகள் நடக்காது! அத்யாவசியப் பணிகளுக்கும் பொருள்களுக்கும் மட்டுமே விதிவிலக்கு!

இதுதான் முழு அடைப்பு என்பது தெரிந்திருந்தும் - அதனை நடத்தி அனுபவம் பெற்றுள்ள இந்த ஆட்சியாளர்கள்; அறைகூவல்கள் மூலம் தமிழகத்தில் உள்ள பெரும்பான்மையான - முக்கியமான கட்சிகள் பங்கேற்கும் இந்த அறப்போராட்டத்தை நசுக்கிவிட முனைவது;

ஊழிப் பெருவெள்ளத்தை உள்ளங்கையால் தடுத்து விட முனையும் மூளை கெட்டோர் செயல் என்பதை உணர்ந்து திருந்திக் கொள்வதுதான் நல்லது!

வெறும் சவால்களும், சவடால்களும் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும்! விபரீதங்களுக்கு வித்திடும்! வேண்டாம்; அந்த வீண் வேலை என்று அன்புடன் எச்சரிப்பது கடமை என்பதால்; இக்கடிதம்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

01-05-1995

2261. பூனை விளையாட்டு பலிக்கவில்லை; பலிக்காது!

உடன்பிறப்பே,

புலியைக் கட்டிப் போடுங்கள்; அதன் முதுகில் மீது ஏறி சடுகுடு விளையாடுகிறோம் என்று பூனைகள் சொன்ன கதையை நம்பி; புலியைக் கூண்டிலும் அடைத்து - அடைபட்ட புலியின் கால்களை இரும்புச் சங்கிலிகளால் பிணைத்துவிட்டு; அதன்பிறகு பூனைகளை, புலியுடன் விளையாடவிட்ட ஒரு ஆணவம் பிடித்த அசட்டு மகாராணியின் கதையைக் கேள்விப்பட்டிருக்கிறாயா நீ? அப்படியொரு கற்பனைக் கதையை இதுவரை நீ கேட்டிராவிட்டால்; இதோ தமிழகத்தில் நம் கண்ணுக்கு நேராகவே அந்தக் கதை, உண்மை நிகழ்ச்சியாகவே நடந்திருப்பதைப் பார்க்கும் வாய்ப்பு நமக்கெல்லாம் கிட்டியுள்ளது.

புலியைக் கூண்டில் அடைத்தனர் - அதன் கால்களைச் சங்கிலியால் பிணைத்தனர் - பூனைகளையும் அந்தப் புலியின் முதுகிலேறி விளையாடுவதற்கென விட்டுப்பார்த்தனர். ஆனால் புலியின் உறுமலை மட்டுமே கேட்ட மாத்திரத்தில் பூனைகள் கூண்டுக் கம்பிகளின் இடைவெளிகள் வழியாகச் சிதறியோடிக் காணாமலே போய்விட்டன. ஆன மட்டும் பார்த்தார்கள் அந்தப் பூனைகளை பிடித்து வர! ஒன்றிரண்டைப் பிடித்தும் பார்த்தார்கள்; அவைகள், பிடித்தவர்களின் கைகளைப் பிராண்டியதில் இரத்தம் கொட்டியதுதான் மிச்சம்! கதையில் ஏன் கடிதம் தொடங்குகிறேன் என்று புரிகிறதா? ஒவ்வொரு எழுத்துக்கும் அர்த்தம் கண்டுபிடிக்கும் ஆற்றல் படைத்த உடன்பிறப்பாயிற்றே நீ!

28.4.95 வெள்ளிக்கிழமையன்று அண்ணா அறிவாலயத்தில் காலை 10 மணியளவில் தி.மு.க., இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி, ஜனதா தளம், பாட்டாளி மக்கள் கட்சி, எம்.ஜி.ஆர். அ.தி.மு.க., இந்திய தேசிய லீக், அகில இந்திய பார்வார்டு பிளாக் ஆகிய ஏழு கட்சிகளின் கூட்டம் நடைபெற்று; முதலமைச்சர் ஜெயலலிதா

பதவி விலக வேண்டுமென்பதற்கான காரணங்களை விவரித்து; அவர் உடனடியாகப் பதவி விலக வேண்டுமென வலியுறுத்தி மே 4ஆம் நாள் தமிழகத்தில் முழு அடைப்பு அறப்போருக்கான அறிவிப்பும்; இந்தக் கருத்தில் உடன்பாடு கொண்ட கட்சிகளுக்கு அழைப்பும் விடுக்கப்பட்டது. அந்த அறிவிப்பைத் தொடர்ந்து தமிழகத்தில் உள்ள மிகம்பெரும்பாலான கட்சிகள் முழு அடைப்புப் போராட்டத்தில் கலந்துகொள்ள முன்வந்தன. கட்சிச்சார்பற்ற பல்வேறு அமைப்புகளும் முழு அடைப்பை ஆதரித்து அறிக்கைகள் வெளியிட்டன.

ஏப்ரல் 30ந்தேதி காலை முதலே கைதுப் படலம் ஆரம்பமாயிற்று. எதிர்க்கட்சிகள் நடத்தும் அறப்போராட்ட நேரங்களில் பெரும்பாலும் சமூகவிரோதிகளையும் - கட்சித் தொண்டர்கள் என்ற முறையில் ஒரு சிலரையும் மட்டுமே முன்கூட்டியே கைது செய்வது என்பதற்கு முற்றிலும் மாறாக; இந்த ஆட்சியில் கட்சிகளின் தொண்டர்கள், முன்னணித் தலைவர்கள், நிர்வாகிகள் எனப்படுவோரை பல்லாயிரக்கணக்கில் முன்கூட்டியே கைது செய்வது என்று ஒரு நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமை, இந்த முழு அடைப்புப் போராட்டத்தையொட்டி மேலும் விரிவான மாற்றமடைந்து ஒரு லட்சத்துக்கு மேற்பட்டோரை - குறிப்பாக அனைத்துக்கட்சிகளையும் சேர்ந்தவர்களை மேதின விழாக்களில் கூட கலந்துகொள்ள முடியாமல் முன்கூட்டியே கைது செய்து சிறைகளில் அடைத்தனர். எல்லாச் சிறைகளும் நிரம்பி வழிந்தன. திருச்சி சிறையிலே மட்டும் பனிரெண்டாயிரத்து ஐநூறு பேரை அடைக்கிற கொடுமை நடைபெற்று; மேலும் அடைப்பதற்குச் சிறைக்குள் இடமில்லாத காரணத்தால் சிறைக்கு வெளியிலேயே ஆயிரக்கணக்கானவர்களை அமர வைத்திருக்கிறார்கள். அதே நிலைதான் எல்லாச் சிறைச்சாலைகளிலும்! - திருமண மண்டபங்கள் பலவற்றைத் தற்காலிகச் சிறைக் கோட்டங்களாக மாற்றி; அங்கேயும் ஆயிரக்கணக்கானவர்களை அடைத்து வைத்துள்ளார்கள். அடைக்கப்பட்ட லட்சத்துக்கு மேற்பட்டவர்களுக்கு உண்ணச் சோறு கொடுக்கவில்லை; குடிக்கத் தண்ணீர் தரமுடியவில்லை! பசி! பட்டினி! இன்னும் ஓரிருநாள் நீடித்தால் சிறைச்சாலைக்குள் விபரீதமானதும் விரும்பத்தகாததுமான விளைவுகள் ஏற்படும் என்ற பயங்கர நிலை!

ஆம்; உடன்பிறப்பே! புலியைக் கூண்டில் அடைத்து விட்டனர். கால்களையும் சங்கிலியால் பிணைத்துவிட்டனர். பூனைகளை விளையாட விட்டுப் பார்த்தனர். புலியின் உறுமல் கேட்டு; பூனைகள் போன இடம் தெரியவில்லை! ஒரு லட்சம் பேரை சிறையில் போட்டது மட்டுமா? தங்கள் கைக்கு அடக்கமான அமைப்புகள், நிறுவனங்களை விட்டு அறிக்கைகள்; முழு அடைப்புக்கு எதிராக! சில தாசானுதாசர்கள் பெயரால் ஆளுங்கட்சி செலவில் விளம்பரங்கள்! எல்லாத் துறையிலுமுள்ள அரசு அதிகாரிகளையும் போலீசாரையும் பயன்படுத்தி, வணிகப் பெருமக்களுக்கு பயமுறுத்தல்கள்!

ஆனால்; இந்தப் பூனை விளையாட்டு பலிக்கவில்லை! பலிக்காது என்பது; ஆரூடமல்ல! அழிக்க முடியாத வரலாறு! ஆகா! பூனை ஜெயித்துவிட்டது! புலி, தோற்று விட்டது என்று பொய்க்குளிகள் செய்யும் பிரச்சாரத்தைக் கண்டும் கேட்டும் பொதுமக்கள் விலாநோகச் சிரிக்கிறார்கள்.

எழுபது சதவிகிதம் கடைகள் திறந்திருந்தனவாம் - ஏ; அப்பா! எவ்வளவு பெரிய மலை முழுங்கிப் பொய் என்று வணிகப் பெருமக்கள் கேலி செய்வதை இந்த முதலமைச்சரின் கவனத்திற்கே யாரும் கொண்டு போகமாட்டார்கள் போலும்!

அரசு பஸ்கள் ஓடின; ஆனால் பயணிகள் இல்லாமல் பரிதாபமாக ஓடின! பாதிக்குப்பாதி கூட கட்டண வசூல் கிடைக்கவில்லையென்று பத்திரிகைகள் கணக்குப் போட்டு எழுதியிருக்கின்றன. தனியார் பேருந்துகள், லாரிகள், ஆட்டோக்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சென்றதைத் தவிர பெரும்பாலானவை ஓடவில்லை!

அரசுப் பேருந்துகளில் ஆளுங்கட்சி குண்டர்கள்தான் பயணிகள் பாதுகாப்புப் படை என்ற பெயரில் அங்குமிங்கும் பயணம் செய்து கொண்டிருந்தனர். அவர்களுக்கு அரசுப் போக்குவரத்துக்கழக செலவில் சிற்றுண்டி, மதிய உணவு இத்யாதி! இத்யாதி!

பந்த் தோல்வி என்று முதலமைச்சரின் அறிக்கையைக் கொட்டை எழுத்தில் முதல் பக்கத்தில் வெளியிட்ட ஏடுகள் ஒன்றிரண்டுகூட, முழு அடைப்பு வெற்றி என்பதற்கான படங்களை உள் பக்கங்களில் வெளியிடாமல் இருக்க முடியவில்லை!

மற்றபடி ஆங்கில ஏடுகள், தமிழ் நாளேடுகள் அனைத்திலுமே வெளிவந்துள்ள படங்களைப் பார்த்தாலே; வெறிச்சோடிக் கிடக்கும் சாலைகள் - மூடப்பட்டிருக்கும் கடை வீதிகள் - ஆள் இல்லாத அரசு பஸ்கள் - இவைகள் எல்லாம் முழு அடைப்பின் வெற்றிக்குச் சாட்சியம் கூறிக் கொண்டிருப்பதை உணர முடியும்!

பதவி, பணம், அதிகார துஷ்பிரயோகம், அச்சுறுத்தல், இவையனைத்தையும் எதிர்த்து உடன்பிறப்பே; நீயும் அனைத்துக்கட்சிகளின் செயல்வீரர்களும் பெற்றுத் தந்துள்ள இந்த வெற்றி, ஜெயலலிதா பதவியிலிருந்து விலக வேண்டும் என்று தமிழக மக்கள் அளித்துள்ள ஒட்டுமொத்தமான தீர்ப்பு ஆகும்!

புலியைக் கூண்டில் போட்டுவிட்ட காரணத்தினாலேயே; அதன்மீது பூனைகள் ஏறி விளையாட முடியாது என்பது; இந்த முழு அடைப்புப் போராட்ட வெற்றியின் மூலம் ஆளுங்கட்சிக்குக் கிடைத்துள்ள அரியதோர் பாடம்! அனுபவரீதியான பாடம்!

ஆளுங்கட்சிக்கு இந்தப் பாடத்தைக் கற்பித்துள்ள உன்போன்ற கழக உடன்பிறப்புகளுக்கும் அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த உடன்பிறப்புகளுக்கும் என் பாராட்டுகள்! வாழ்த்துகள்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

06-05-1995

2262. என்ன பொருத்தம்; எத்துணை பொருத்தம்!

உடன்பிறப்பே,

இன்று அதிகாலையில் வழக்கம்போல் எழுந்தவுடன் தமிழ்நாளேடு ஒன்றிலும் ஆங்கில நாளேடு ஒன்றிலும் ஒரு முக்கியமான செய்தியைப் பார்த்தேன். அதிர்ச்சியுறவில்லை எதிர்பார்க்கப்பட்ட செய்திதான்.

அன்னியச் செலவாணி மோசடி :
சென்னை முக்கிய பெண் பிரமுகரிடம்
விசாரணை

சென்னை, மே 6- பல கோடி ரூபாய் அன்னியச் செலவாணி மோசடி தொடர்பாகத் தேடப்பட்டு வரும் அமீரின் உறவினர்கள் மூவரை அமலாக்கப் பிரிவு அதிகாரிகள் சென்னையில் கைது செய்துள்ளனர்.

இந்த மோசடி ஹவாலா தொடர்பாகத் தில்லியைச் சேர்ந்த ஜெயின் சகோதரர்கள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து நாடு முழுவதும் பெரிய நகரங்களில் தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது.

இது தொடர்பாக சென்னையில் அரசியல் செல்வாக்கு மிக்க முக்கிய பெண் பிரமுகரிடம் விசாரணை நடந்துள்ளது.

இது தவிர, இரு பெரிய வியாபாரிகளின் வீடுகளிலும் சோதனை நடந்துள்ளது. அதில் ஒருவர் கீழக்கரை அமீர், மற்றொருவர் சென்னை நகை வியாபாரி.

இந்த வியாபாரி கொழும்புக்குச் சென்று விட்டதாகக் கூறப்படுகிறது.

நுங்கம்பாக்கம் காதர்நவாஸ்கான் தெருவில் அமீருக்குப் பல மாடிக் கட்டடமும் வீடும் உள்ளது.

அங்கேயும் சோதனை நடந்துள்ளது. இதே போல, தியாகராய நகரில் உள்ள ஒரு நகைக் கடையிலும் சோதனை நடந்துள்ளது.

இதற்கிடையே, அமீர் குறித்து தகவல் தந்தால் ரூ. 50 ஆயிரம் பரிசு தரப்படும் எனப் பத்திரிகைகளில் பெரிய அளவில் அமலாக்கப் பிரிவு விளம்பரம் செய்துள்ளது.

இந்தச் செய்தியை ஒட்டினாற்போல் மற்றொரு செய்தி; பேரவைக்கு ஜெயலலிதா வரவில்லை என்று தலைப்பிட்டு;

வெள்ளிக்கிழமையும், சட்டப் பேரவை கூட்டத் தொடரின் கடைசி தினமான சனிக்கிழமையும் ஆகிய இரு தினங்களிலும் தமிழக முதல்வர் ஜெயலலிதா பேரவைக்கு வரவில்லை. இறுதி நாளில் எம்.எல்.ஏ.க்களுக்கு வழக்கமாக முதல்வர் அளிக்கும் விருந்து உபசாரமும் நடைபெறவில்லை.

இச்செய்தியின் விபரங்களை உறுதிப்படுத்துவது போல; கல்கத்தா, ஐதராபாத்திலிருந்து வெளிவரும் டெய்லி டெலகிராப், டெக்கான் கிரானிகல் ஆகிய இரண்டு ஆங்கில நாளேடுகளுக்கும் செய்தி கிடைத்திருப்பதாக எனக்கு தொலைபேசி மூலம் ஒரு நண்பர் தந்த தகவல் கிடைத்தது.

பத்திரிகைகளை மூடிவைத்துவிட்டு என் எதிரே மேஜை மீதிருந்த கிறிஸ்துவ வேதாகமமான பைபிள் நூலினைப் புரட்டிக் கொண்டிருந்தேன். அதில் இசையாஸ் ஆகமம் 47ஆம் அதிகாரத்தின் மீது என் பார்வை மொய்த்தது. அந்த அருமையான வாசகங்களை அப்படியே தர வேண்டும் போலிருந்தது; அதனால் அவற்றை இக்கடிதத்தில் குறிப்பிடுகிறேன்.

“பபிலோன் என்னும் மகளே, கன்னிப் பெண்ணே,
அரியணை விட்டிறங்கிப் புழுதியில் உட்கார்;
தரைமீது அமர்ந்துகொள்;
கல்தேயர் மகளுக்கு அரியணை கிடையாது;
ஏனெனில், மெல்லியலாள், இளநங்கை என

இனி நீ அழைக்கப்படமாட்டாய்.
எந்திரக் கல்லைச் சுற்றி, மாவரைக்கக் கடவாய்,
முக்காட்டை அகற்றிவிடு
தோள்மீதுள்ள ஆடையை நீக்கிவிடு;
உன் உடையைத் தூக்கிக்கொண்டு ஆற்றைக் கடந்திடு!
இங்ஙனம் நாம் பழிவாங்குவோம்,
மனிதன் எவனும் நம்மை எதிர்க்க முடியாது.
நம்முடைய மீட்பர் - சேனைகளின் ஆண்டவர்
என்பது அவர் பெயர் - இஸ்ரேயலின் பரிசுத்தர் ஆவர்.
கல்தேயரின் மகளே, இருளில் நுழைந்து
மவுனமாய் உட்கார்ந்திரு;
ஏனெனில், அரசுகளின் தலைவி என
இனி நீ அழைக்கப்படமாட்டாய்.
நம் மக்கள்மீது கோபமுற்றோம்,
நம் உரிமைச் சொத்தைப் பங்கப்படுத்தினோம்;
அவர்களை நம் கையில் விட்டுவிட்டோம்,
அவர்களுக்கு நீ இரக்கம் காட்டவில்லை;
வயதில் முதிர்ந்தவர்மேல் கூட
உன் நுகத்தை வைத்து அழுத்தினாய்
என்றென்றும் நான் தலைவியாய்
விளங்குவேன் என்றாய்;
ஆதலால் நீ இவற்றை உன் உள்ளத்தில்
சிந்தித்துப் பார்க்கவில்லை;
உனக்கு வரவேண்டியதை எண்ணிப் பார்க்கவில்லை.
மென்மையானவளே, கலக்கமின்றி வாழ்பவளே,
நானே தனிப்பெரும் அரசி, என்னையன்றி வேறில்லை;
நான் கைம்பெண்ணாய் ஆகமாட்டேன்,
மலடியாகவும் இருக்கமாட்டேன் என்று
உன் உள்ளத்தில் எண்ணுபவளே,
நாம் சொல்வதை இப்போது கேள்:
மலட்டுத் தன்மை, கைம்மை இவ்விரண்டும்
நொடிப்பொழுதில் ஒரே நாளில் உனக்கு நேரும்;

நீ கணக்கற்ற பில்லி சூனியங்களைக் கையாண்டாலும்,
உன் மந்திரவாதங்களுக்கு மிதமிஞ்சிய ஆற்றலிருப்பினும்,
இந்தத் தீமைகளெல்லாம் உனக்கு வந்தே தீரும்.
என்னைப் பார்க்கிறவர் ஒருவருமில்லை என்று
சொல்லிக் கொண்டு,
அஞ்சாமல் கொடுமைகளைச் செய்துவந்தாய்;
உன் ஞானமும் உன் கல்வியறிவும்
உன்னை மோசஞ் செய்து விட்டன;
நீயோ, நானே தனிப்பெருந் தலைவி,
என்னையன்றி வேறில்லை என்று உன் உள்ளத்தில்
எண்ணினாய்.
தீமை உன்மேல் திண்ணமாய் வரும்,
எங்கிருந்து வருமென உனக்குத் தெரியாது;
வேதனை உன்மேல் பெருக்கெடுத்து வரும்,
அதற்குப் பரிகாரம் தேட உன்னால் இயலாது;
அழிவு உன்மேல் திடீரென விழும்,
அதைப்பற்றி ஒன்றும் அறியமாட்டாய்.
உன் மந்திரவாதிகளோடும், நீ இளமை முதல்
உன் தொழிலாய்க் கொண்டிருக்கும்
பில்லி சூனியங்களோடும் நின்றுகொள்;
அவை உனக்குப் பயன்படுமோ என்றும்,
அவற்றால் இன்னும் ஆற்றல் பெறுவாயோ
என்றும் பார்ப்போம்.
உன் ஆலோசனைகளில் எண்ணிக்கையால்
சோர்வடைந்தாய்,
கிரகங்களைக் கணிக்கும் சோதிட நூல் அறிஞரும்,
நாள் நட்சத்திரத்தை ஆராய்ந்து,
எதிர் காலத்தை உனக்குச் சொல்பவரும்,
இப்போது வரட்டும், வந்து உன்னை மீட்கட்டும்
பார்ப்போம்.
இதோ, அவர்கள் வைக்கோலைப்போல் இருக்கிறார்கள்,
நெருப்பு அவர்களைச் சுட்டெரிக்கும்;

தீயின் அழலினின்று அவர்கள்
தங்கள் உயிரை விடுவிக்க மாட்டார்கள்;
குளிர்காயப் பயன்படும் தீப்பொறியில்லை இவை,
எதிரே உட்கார்ந்த தக்க நெருப்புமில்லை இது.
யாரோடு உழைத்துழைத்துச் சோர்ந்தாயோ அவர்களும்,
இளமை முதல் உன்னோடு வணிகம் நடத்தியவர்களும்,
ஒவ்வொருவரும் ஒரு திசையில் ஓட்டமெடுப்பர்,
உன்னை மீட்க ஒருவனும் இருக்க மாட்டான்.

***

உடன்பிறப்பே, நான் எடுத்துக்காட்டியுள்ள இசையாஸ் ஆகமம் அதிகார எண் 47 - ஆம்; 47 என்பதை மறவாதே! பைபிளை எடுத்து அந்த அதிகாரத்தைப் படித்துப்பார்!

அடடா; என்ன பொருத்தம்! எத்துணை பொருத்தம்! என்று நான் நினைப்பது போலவே உனக்கும் நினைக்கத் தோன்றும்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

08-05-1995

2263. தொடங்கட்டும்; தொடங்கியது தொடரட்டும்!

உடன்பிறப்பே,

பரபரப்பான பல்வேறு சூழ்நிலைகள் - ஜெயலலிதா மீது கிரிமினல் வழக்கு தொடர ஆளுநர் அனுமதி கொடுத்ததையொட்டி ஆளுநர் மீது தாக்குதல் - அவையிலேயே அவரைப்பற்றி முதலமைச்சர் வாயினாலேயே அசிங்கமான அவதூறு - வழக்கு தொடர அனுமதி பெற்ற சுப்பிரமணியம் சுவாமியை எதிர்த்துப் பொதுக்கூட்டத்தில் பயங்கரக் கலவரம் - நீதிமன்றத்தில் நீதிபதியை நோக்கியே கல்வீச்சு - ஆளுங்கட்சியின் ஆடவர் பெண்டிர் ஆபாச நடனம் - ஓராயிரங்கோடி ஈராயிரம் கோடி என ஒவ்வொரு நாளும் பெருகிக் கொண்டிருக்கும் இந்த ஊழல் சாம்ராஜ்யத்தை எதிர்த்து தி.மு.கழகத் தோழமைக்கட்சிகள் அறிவித்த முழுஅடைப்புப் போராட்டம் - அதற்கு ஆதரவு தந்து அதே நாளில் களத்தில் குதித்திட பல்வேறு எதிர்க்கட்சிகளின் இணைந்த போராட்டம் - முன்கூட்டிக் கைதானவர்களே ஒரு லட்சம் பேர் - மே 4 ஆம் நாள் முழு அடைப்பு; ஜெயலலிதா பதவி விலகவேண்டுமென்பதற்கு வலிமையான ஆதரவு வழங்கிடும் - இதற்கிடையே புதுக்கோட்டை இடைத்தேர்தல் தொடர்பான பணிகள் - திடீரென அந்தத் தேர்தல் ரத்து என அறிவிப்பு - முழு அடைப்பு நாளன்று கைது செய்யப்பட்ட ஆயிரக்கணக்கானவர்கள் மீது பல்வேறு சட்டப் பிரிவுகளில் கடுமையான வழக்குகள் - அந்த வழக்குகளைச் சந்திப்பதில் காட்டப்படவேண்டிய அக்கறையும், ஆர்வமும் - இத்தனை பிரச்சினைகளுக்கிடையே ஓய்வும் உறக்கமுமின்றி ஓடியாடி உழைத்துக் கொண்டிருக்கும் உன் போன்ற உடன்பிறப்புகள் அடுத்த ஆண்டு சந்திக்க வேண்டிய பொதுத்தேர்தல் நிதிக்காக; அதனைத் திரட்டும் பணியில் தீவிரமுனைப்பு கொண்டு ஒரு சில மாவட்டங்களில் நிதியளிப்பு விழா நிகழ்ச்சிக்கான தேதிகளும் குறித்திருந்தார்கள்.

நீலகிரி மாவட்டச் செயலாளர் மற்றும் நிர்வாகிகள் நேரிலேயே வந்து நீலகிரி மாவட்ட நிகழ்ச்சிக்கு செப்டம்பர் ஆறாம் தேதிக்கு என்னிடம் ஒப்புதல் பெற்றுச் சென்றுள்ளார்கள். கணிசமான நிதி வழங்குவார்கள் என்ற எதிர்பார்ப்புடன் அந்த நிகழ்ச்சிக்குத் தவறாமல் செல்வதற்கு இருக்கிறேன். மே 3 ஆம் நாள் என்றிருந்த ராசபாளையம் நிதியளிப்பு விழா நிகழ்ச்சி, மே 16 ஆம் நாளுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. காமராசர் மாவட்டச் செயலாளர் நேரில் வந்து அந்தத் தேதியை குறித்து வாங்கிச் சென்றுள்ளார். நிகழ்ச்சிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ள மற்ற மாவட்டக் கழகச் செயலாளர்களும், பொறுப்பாளர்களும் மறு தேதிக்கான முயற்சியைத் தலைமைக்கழகத்துடன் தொடர்பு கொண்டு செய்து கொண்டிருக்கிறார்கள்.

தேர்தல் நிதிக்கான நன்கொடைச் சீட்டுகள் பல மாவட்டக் கழகங்கள் சார்பில், தலைமைக் கழக முத்திரையிடப்பட்டு அந்தந்த மாவட்டக் கழகங்களில் பெறப்பட்டுள்ளன. அந்த மாவட்டங்களில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர், சிற்றூர் மற்றும் கிளை அமைப்புகள், நிர்வாகிகள், பல்வேறு பொறுப்புகளில் உள்ளவர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் மாவட்டக் கழகத்துடன் ஒத்துழைத்து நன்கொடைச் சீட்டுகள் வாயிலாகத் தேர்தல் நிதியைத் திரட்டுவதில் ஆர்வமும் அக்கறையும் மிக அதிகமாகவும் விரைவாகவும் காட்டிடல் வேண்டும்.

இன்னமும் நன்கொடைச் சீட்டுகள் தயாரிக்காத ஒரு சில மாவட்டக் கழகங்களும்; உடனடியாக அந்த முயற்சியில் ஈடுபட்டு தலைமைக் கழகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றன.

ஓடியாடி உழைத்து தேனீக்களைப்போல நிதி திரட்டிக் குவிக்கும் ஒரு வழக்கத்தையே, கழகம், அன்று முதல் இன்றுவரை கடைப்பிடித்து வருகிறது.

பல பணிகள் குறுக்கிடுகின்றன - பல பிரச்சினைகள் அலை மோதுகின்றன - திடீரென போராட்டங்களைச் சந்திக்க நேரிடுகிறது - இடையிடையே தேர்தல் அறிவிப்புகள் - ரத்துக்கள் - இத்தனை தொல்லைகளும் உடன்பிறப்பே, உனக்கும் எனக்கும் இல்லையென்று சொல்லவில்லை! ஆனால் இவற்றுக்கிடையேதான் நமது கழகத்திற்கு வலிவும் பொலிவும்

ஊட்டுகின்ற பணிகளையும் சோர்வின்றி நாம் செய்து முடிக்க வேண்டியுள்ளது.

எனவே, நிதி வசூலிக்க நன்கொடைப் புத்தகங்கள் அச்சிட்டுத் தலைமைக் கழக முத்திரை பெற்றுள்ள மாவட்டங்கள் அப்பணியை விரைந்து முடித்திட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் நன்கொடைப் புத்தகங்கள் தயாரிக்கப்படாத மாவட்டங்கள்; தேர்தல் நிதியின் முக்கியத்துவம் உணர்ந்து, உடன் செயல்பட வேண்டுகிறேன்.

சிறுதுளி பெருவெள்ளமாக தேர்தல் நிதி பெருகட்டும்! இன்றே தொடங்கட்டும் அதற்கான பணி! தொடங்கப்பட்ட மாவட்டங்களில் தொய்வின்றித் தொடரட்டும் அந்தப் பணி!

அன்புள்ள,

மு. கருணாநிதி

09-05-1995

2264. முடியுமா அவரால்? முடியாது என்பதே உண்மை!

உடன்பிறப்பே,

முதலமைச்சர் ஜெயலலிதாவின் உடன்பிறவாச் சகோதரியார் அமலாக்கப்பிரிவு என்போர்ஸ்மெண்ட் விசாரணைக்கு ஆளாகிற அளவுக்குத் தடயங்கள் சிக்கியிருப்பது பற்றியும் கோடிக்கணக்கான ரூபாய்கள் பணப் புழக்க குற்றச்சாட்டுகள் பற்றியும் மாட மாளிகைகள் கூட கோபுரங்கள் அவரது உடைமையாகவும் அவரது உற்றார் உறவினர் உடைமையாகவும் இந்த மூன்று நான்கு ஆண்டுகளுக்குள் உருவாகியிருப்பது பற்றியும் வந்துள்ள செய்திகளைத் தொடர்ந்து முதலமைச்சர் ஜெயலலிதா நீண்டதோர் மறுப்பு அறிக்கை வெளியிட்டுள்ளார். குற்றச்சாட்டும், செய்தியும் திருமதி சசிகலா நடராஜனைக் குறித்து வந்துள்ளபோது; அதற்கு ஏன் ஜெயலலிதா பதில் சொல்ல வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் நண்பர் பாலசுப்பிரமணியம் வினாக்கணை விடுத்துள்ளார். அமலாக்கப்பிரிவு நடவடிக்கை விபரங்கள் மத்திய அரசின் இலாகா ஒளிவு மறைவின்றி வெளியிட வேண்டுமென்ற கருத்தை தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் இலக்கியச் செல்வர் குமரிஅனந்தன் தெரிவித்து; முதல்வரின் உடன்பிறவாச் சகோதரியார் மூலைக்கு மூலை தமிழ்நாட்டில் உடைமையாக்கிக் கொண்டுள்ள அசையும் அசையாச் சொத்துக்கள்பற்றிய பழைய பட்டியலையும் மேலும் புதிதாக அன்றாடம் சேர்ந்துள்ளவற்றையும் தொகுத்தளித்துள்ளார்.

இந்த விபரங்களுக்குள்ளே நுழைய விரும்பாமல்; நுழைந்தால் - தான் வெட்டியுள்ள குழிக்குள், தானே விழுந்துவிட நேரிடும் என்ற ஜாக்கிரதைத் தன்மையுடன் எதிர்க்கட்சித் தலைவர்களையும், என்னையும், ஏடுகள் சிலவற்றையும் முதல் நாள் முதலமைச்சரும்,

மறுநாள் அவரது தொண்டரடிப் பொடியாழ்வார் சோமசுந்தரனாரும் தாக்கோ தாக்கு என்று பொதுவாகவும் - தனிப்பட்ட முறையிலும் தாக்கி நீண்ட அறிக்கைகளை வெளியிட்டிருக்கிறார்கள்.

கடுமையான வாசகங்கள், நாராச நடைகள், அவதூறு நிறைந்த, ஆபாசம் மலிந்த, கேலிகள், கிண்டல்கள், ஏளனங்கள், ஏகடியங்கள்; எங்கிருந்துவரினும் அவற்றை இதழோரத்தில் வெளிப்படும் அலட்சியப் புன்னகையால் வென்று காட்டித் தன் பாதையில் சென்று கொண்டிருக்கும் பயிற்சியையும் - அடக்கமான அரசியல் பண்பாட்டையும்; ஆரோக்கியமான ஜனநாயகத்தை வளர்த்திட்ட அறிஞர் அண்ணா அவர்களிடத்திலே அருகிருந்தே கற்றவன் என்ற முறையில் பிரயோகிக்கப்பட்டுள்ள அந்தச் சுடுசொற்களைப்பற்றியும் கேலிகளைப்பற்றியும் நான் கவலைப்பட்டுக் கொள்ளவில்லை.

ஒருவர் பணவிடைத்தாளில் பத்து ரூபாய் நமக்கு அனுப்பி வைக்கிறார் என வைத்துக் கொள்வோம் - அதை நாம் பெற்றுக் கொள்ள மறுத்தால்; அந்தப் பணம் அனுப்பியவருக்கே போய்ச் சேர்ந்துவிடும். அது போலத்தான் என் மீதோ கழகத்தின் மீதோ; அல்லது தமிழகத்தில் நடைபெறும் ஊழல் சாம்ராஜ்யத்தைத் தட்டிக் கேட்போர் மீதோ பொழியப்படும் கடுஞ்சொற்களை, நாகரிகமற்ற விமர்சனங்களை; ஏற்றுக் கொள்ளாத இடத்து; அவைகள் திரும்பவும் அந்த வசவாளர்களிடமே போய்ச் சேரும்!

அமலாக்கப்பிரிவினர் விசாரணை நடத்தவில்லை - அப்படி விசாரணை நடத்த அழைத்துச் செல்லவில்லை என்று திட்டவட்டமாகச் சொல்கிற முதலமைச்சர்; சில பத்திரிகைகள் தலையங்கம் தீட்டிக் கேட்டிருப்பது போல, தனது உடன்பிறவாச் சகோதரியாரின் சொத்து விபரங்களையும் அவரது உறவினர்கள் பெயரால் உள்ள சொத்து விபரங்களையும் 1991க்கு முன்பும் 1991க்குப் பின்பும் என்று வருடங்களை வரிசைப்படுத்தி வெளியிடத் தயாராக இருக்கிறாரா? அப்படி வெளியிடப்படும் சொத்துக்களை வாங்க; எத்தகைய வருவாய் வாய்ப்புக் கூறுகள் Resources இருந்தன என்பதையும் விளக்கிடத் தயாராக இருக்கிறாரா?

என்னைவிட்டுவிட்டு, என் உடன்பிறவாச் சகோதரியை ஏன் வம்புக்கிழுத்துப் பேசுகிறீர்கள் என்ற தோரணையில்

கேள்வியெழுப்பும் முதலமைச்சருக்கு; நாடு கேட்கும் கேள்வி காதில் விழாத காரணம் என்ன?

முதலமைச்சர் ஜெயலலிதாவின் தலைமையில் உள்ள ஆட்சியினுடனோ; அல்லது அ.தி.மு.க. கட்சியுடனோ எவ்விதத் தொடர்பும் உடன்பிறவாச் சகோதரிக்கும் இல்லையென்றால்; டான்சி நிலமான அரசாங்க சொத்தினை சட்டத்திற்கு விரோதமாகவும், முறைகேடாகவும், முத்திரைத்தாள் மோசடி செய்தும் வாங்கியுள்ள ஜெயா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தில் உள்ள நிலத்தை வாங்கும்போது முதலமைச்சர் என்ற முறையில் ஜெயலலிதாவும், உடன்பிறவாச் சகோதரியும் பங்குதாரர்கள் என்பதை 1992 மதுரை அ.தி.மு.க. மாநாட்டிலேயே இதே ஜெயலலிதா அவர்கள் ஒத்துக்கொண்டு பேசி அது எல்லா ஏடுகளிலும் வந்திருக்கிறதே; அதற்கு என்ன அர்த்தம்?

எதிலுமே; அதாவது ஆட்சியில், கட்சியில் எந்தத் தொடர்பும் இல்லாத உடன்பிறவாச் சகோதரியை; சட்டப்பேரவையில் சரித்திரத்திலேயே இல்லாத புதிய மரபாக துணை சபாநாயகரை தூரப்போகச் சொல்லிவிட்டு அவரது ஆசனத்தில் அமரவைத்து அவையில் ஓர் நிகழ்ச்சியை நடத்தினாரே முதலமைச்சர் ஜெயலலிதா; அதற்கு என்னதான் காரணமோ? அறிவிப்பாரா?

உடன்பிறவாச் சகோதரிக்காக விடுத்துள்ள அறிக்கை முழுதும் உருக்கம் - உக்கிரம் - இரண்டையும் கலந்து வெளியிட்டுள்ள முதலமைச்சர்; அநியாயமான அவதூறு கூற முற்படுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளார்.

கூற முற்படுவது என்ன? கூறியாகிவிட்டது! ஆனால் அநியாயமானதுமல்ல! அவதூறுமல்ல!

அடுக்கடுக்காக, ஆதாரங்களுடன் - தி.மு.கழகம் உள்ளிட்ட பல கட்சியினரால்; டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியினால்; கவர்னரிடம் கொடுக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அவதூறானவை என்பது உண்மையானால் - அநியாயமானவை என்று நம்பினால் - அணுப்பொழுதும் தாமதிக்காமல் குற்றச்சாட்டு கொடுத்தோர் மீது; அவற்றை ஏடுகளுக்கு வழங்கியோர் மீது; அம்மையார் சட்டப்படி வழக்குத் தொடரலாமே!

டான்சி நிலம் அரசுக்குச் சொந்தமானதல்ல என்று வழக்குத் தொடரலாம் - அதனை நான் வாங்கவில்லை என்று வழக்குத்

தொடரலாம் - முத்திரைத்தாள் மோசடி நடைபெறவில்லை என்று வழக்குத் தொடரலாம் - கொடைக்கானல் நட்சத்திர ஓட்டல் விவகாரத்தில் உயர்நீதிமன்றத் தீர்ப்பை சுட்டிக்காட்டுவது சரியல்ல என வழக்குத் தொடரலாம் - ஆசிரியர் பயிற்சிப்பள்ளி விவகார ஊழலில் உச்சநீதிமன்ற தீர்ப்பைத் தங்களுக்குச் சாதகமாக எதிர்க் கட்சிகள் பயன்படுத்துவது தவறு என்று வழக்குத் தொடரலாம் - ஸ்பிக் பங்கு விற்பனையில் ஊழலே நடைபெறவில்லை என்று எதிர்க்கட்சிகள் மீது வழக்குத் தொடரலாம் - அதை விட்டுவிட்டு அம்மையார் வெறும் அச்சுறுத்தல் செய்து; மக்கள் மத்தியில் வீராங்கனை என்றோ, சுத்த சுயம்பிரகாசம் என்றோ, பெயர் எடுக்கலாம் என்று தன்னை ஏமாற்றிக் கொள்வதும் அறிவுடைமையல்ல!

தன் அடிமைகளாய் உழலும் அமைச்சர்களை பெயரால் அறிக்கைகள் வரச் செய்து; அவர்களையும் மக்கள் மத்தியில் அசடுகளாய் சித்தரிப்பதும் அழகல்ல! ஆளுநர் அனுமதி கொடுப்பதென்ன; இதோ நானே என்மீது அவதூறு கூறியோர் மீது வழக்குப் போடுகிறேன் என்று முதலமைச்சர் ஜெயலலிதா வீராங்கனையாக வெளிவருவதுதான் நியாயம்! முடியுமா அவரால்? முடியாது என்பதால்தான் இத்தனை ஆத்திரம்! புரிகிறதா உடன்பிறப்பே!

அன்புள்ள,

மு. கருணாநிதி

10-05-1995

2265. பரிணாம வளர்ச்சி பட்டியல் நீளுகிறது!

உடன்பிறப்பே,

தூங்குகிறவர் தொடையில் கயிறு திரிக்கிற கதையாகி விட்டது; தமிழ்நாட்டு நிலைமை! இதில் தூங்குகிறவர் யார்? கயிறு திரிப்பவர்கள் யார்? இந்தக் கேள்விக்குப் பதிலைத் தேடி ஆராய்ச்சிக் கடலில் ஆழமாகப் போக வேண்டிய தேவையே இல்லை. தூங்குபவர்கள் தமிழ்நாட்டு மக்கள்! கயிறு திரிப்பவர்கள் ஆளுங்கட்சிக்காரர்கள்; மற்றும் அவர்கள் ஆணைப்படி ஆடுகிற அதிகாரிகள்!

தமிழ்நாட்டில் எங்கே மாளிகையிருந்தாலும் - மனையிருந்தாலும் - ஓட்டல் இருந்தாலும் - ஓட்டைக் குடிசைப் பகுதிகள் இருந்தாலும் - கரம்பு நிலமானாலும் - கழனியானாலும் - கரும்புத் தோட்டமானாலும் - காடானாலும் - மேடானாலும் அனைத்தையும் அடிமாட்டு விலை போட்டு அம்மாக்களுக்கோ; அல்லது அம்மாக்களின் பினாமிகளுக்கோ விற்றே தீர வேண்டும் என்றோர் நிலை, கடந்த மூன்றாண்டுகளுக்கு மேலாக உருவாகி விட்டதையும்; இனி மொத்த தமிழ்நாடே ஒருநாள் அந்த கோஷ்டியின் ஏப்பப் பொருளாக ஆகிவிடும் என்ற அச்சம், பொதுவாக ஏற்பட்டிருப்பதையும்; ஏன்? எதற்காக? எனக் கேட்க வாயைத் திறக்க முயற்சித்தாலே அவர்களை நோக்கி ஆட்டோக்களில் ஆயுதமேந்தியோர் படையெடுத்துத் தாக்குவர் என்ற அராஜகக் கொடுமை பரவி விட்டதையும்; இனி எந்த முரட்டுத் துணியாலான திரை கொண்டும் மறைக்க முடியாது.

ஒன்று, இரண்டு என ஓங்கி வளர்ந்து கொண்டிருக்கிற வரலாற்றுப் புகழ்மிக்க ? இந்த வன்முறை ஆக்ரமிப்புகளில் ஒன்றாகத்தான் இப்போது சென்னை மயிலாப்பூரில் நாகேஸ்வரராவ் பந்துலுவின் மாளிகை போன்ற பெரும் இல்லம் பற்றிய செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இரண்டு அல்லது மூன்று கோடி ரூபாய்க்கு மேல் விலை மதிப்பீடு உள்ள அந்த வீட்டை

லட்சம் ரூபாய்க்கு வாங்கியதாகக் கூறப்படும் அந்த விவகாரத்தில் எந்தெந்தத் துறைகளில் அதிகாரிகள் தவறு செய்துள்ளார்கள் என்பதையெல்லாம் ஏடுகள் எழுதி வருகின்றன. அந்தத் துறைகளின் மேலமைப்பு அதிகாரிகள் உடனடியாகத் தலையிட்டு உண்மையை உலகுக்கு அறிவித்து, மோசடி நடத்தியோர் மீதும் மோசடிக்கு உடந்தையாக இருந்தோர் மீதும் நடவடிக்கை எடுத்திட வேண்டுமென்ற குரல் கிளம்பிக் கொண்டிருக்கும் போதே; அந்த மிகப்பெரும் வீடு அவசர அவசரமாக இடிக்கப்படவும் அய்யோ! அது காந்தியடிகள் வந்து தங்கிய இடமாயிற்றே; அதையா இடிப்பது? எனக் காங்கிரஸ் தலைவர்கள் மறியல் நடத்திடவுமான சம்பவங்கள் எல்லாம் இன்றைய செய்திகள்!

இதோ இன்னொரு செய்தி! அம்மாவோ; இந்த மாநிலத்தின் தலை எழுத்து எப்படி ஆகிவிட்டது என்று தலையில் அடித்துக் கொள்ள வேண்டிய அளவுக்குக் கிடைத்துள்ள செய்தி! அதிகார வர்க்கம்; நீதி, நியாயம், நெறிமுறை இவற்றையெல்லாம் மூட்டைகட்டிக் கடலில் தூக்கி எறிந்துவிட்டு; மூட்டைகட்டி நாட்டை ஒழிப்பவர்களுக்கு முதுகு கொடுக்கும் கேவலமல்லவா இன்றைக்குக் கொடிகட்டிப் பறக்கிறது!

உடன்பிறப்பே, கீழத்தஞ்சை நாகை மாவட்டத்தைச் சேர்ந்த மன்னார்குடியிலிருந்து கோ. துரை என்பவர் எனக்கு எழுதியுள்ள கடிதத்தையும் அவருக்கு அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர். பாஸ்கரன் அய்.ஏ.எஸ். அனுப்பியுள்ள நோட்டீசையும் படித்தபோது என்னால் அந்த அநியாயத்தை வெளிக்கொணராமல் இருக்க முடியவில்லை. இப்படி வெளியிடுவதால் மன்னார்குடியில் உள்ள கோ. துரைக்கு என்ன கதி ஏற்படுமோ; அச்சமாகத்தானிருக்கிறது எனக்கு - எனினும் அந்த வட்டாரத்தில் உள்ள உன் போன்ற கழக உடன்பிறப்புகள் அவருக்கு பாதுகாப்பாக இருந்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதோ கோ. துரை அவர்களின் கடிதம் வருமாறு :-

> மன்னார்குடி தாலுக்கா கண்டிதம்பேட்டையைச் சேர்ந்த தற்பொழுது மன்னையில் வசிக்கும் கோவிந்தசாமி தேவர் மகன் துரை வணக்கத்துடன் எழுதிக்கொள்ளும் மடல்.
>
> என் மாமனார் திருவாளர் வீ. தருமலிங்கம் என் ஊரைச் சார்ந்தவர். தற்பொழுது சிங்கப்பூர், குடியுரிமை பெற்று அங்கு வசித்து வருகிறார். அவருக்கு மன்னை

அருகில் இலக்கனாம்பேட்டை, சுந்தரக்கோட்டை ஆகிய இடங்களில் சாகுபடி நிலங்கள் உள்ளன. சுந்தரக்கோட்டையில் மெயின் ரோடு அருகில் மாந்தோட்டம், தென்னந்தோப்பு உள்ளன. இந்த நிலங்களுக்கு பின்புறம் சசிகலா நடராஜன் தம்பி திவாகரன் செங்கமலத் தாயார் கலைக்கல்லூரி ஆரம்பித்து கட்டிட வேலை நடைபெற்று வருகிறது. இந்த கல்லூரிக்காக என் மாமனாரின் நிலத்தை விலைக்கு கேட்டார். தற்பொழுது இந்த இடத்தில் நிலம் ஒரு சென்ட் ரூ. 4,500/-க்கு விற்று வருகிறது. ஆனால் திவாகரன் ஒரு சென்ட் ரூ. 300/-க்கு கேட்டார். நாங்கள் இந்த விலைக்கு கொடுக்க விரும்பவில்லை என கூறி விட்டோம். இதற்குமிடையில் நாகை மாவட்ட ஆட்சியர் மூலம் என்னை மிரட்டி தேவையே இல்லாமல் அரசாங்க புறம்போக்கு நிலம் சுமார் 7 ஏழு ஏக்கர் நிலம் என் நிலத்திற்கு அருகில் இருந்தும் மேற்கண்ட எங்கள் ஒன்றரை 1.5 ஏக்கர் நிலத்தை கட்டாய ஆர்ஜிதம் செய்ய மாவட்ட ஆட்சியர் மூலம் தாக்கீது வந்துள்ளது. அதையும் இத்துடன் தங்கள் மேலான கவனத்திற்கு அனுப்பியுள்ளேன். நான் ஆட்சியர்க்கு கொடுத்த வக்கீல் நோட்டீசையும் இணைத்துள்ளேன். வெளிநாட்டில் வாழும் இந்தியர்க்கு ஏற்பட்டுள்ள அவல நிலையை தங்கள் கவனத்திற்கு கொண்டு வந்து தாங்கள் இதற்கு தகுந்த பரிகாரம் செய்ய வேண்டுகிறேன்.

நன்றி!

அன்புத்தம்பி

கோ. துரை.

உடன்பிறப்பே; செங்கமலத்தாயார் அறக்கட்டளை கலைக்கல்லூரி என்பது மன்னை கோயில் ராஜகோபாலசுவாமியின் துணைவியாரான அம்பாள் செங்கமலத் தாயார் பெயரால் ஆக்கப் பூர்வமாக அமைக்கப்படும் தனியார் கல்லூரி! பாமரமக்களை ஏமாற்ற பக்தியும் ஒரு படைக்கலனல்லவா? எல்லாம் பரிணாம வளர்ச்சியின் ஒரு கூறுதானே! என்ன சிரிக்கிறாய்? சரி; விஷயத்திற்கு வருவோம். மேலும் படி!

செங்கமலத்தாயார் அறக்கட்டளைக் கலைக் கல்லூரிக்கு அருகில் உள்ள நிலத்தை அடிமாட்டு விலைக்கு வாங்கிட வருவாய்த்துறை அதிகாரிகள் மூலம் ஒரு கெடுபிடி முயற்சி நடைபெற்றது. ஒன்றரை ஏக்கர் பரப்பளவுள்ள அந்தத் தோப்பு, சிங்கப்பூரில் வாழும் தர்மலிங்கத் தேவருக்குச் சொந்தமானது. அதை இவர்கள் கேட்ட விலைக்கு விற்பதற்கு அவர் சம்மதிக்கவில்லை. வெறும் நிலம் மட்டுமல்ல; அங்கே ஒரு கட்டிடம் - கிணறு - ஒரு தேக்குமரம் - இரண்டு தென்னை மரங்கள் - 18 யூகலிப்டஸ் மரங்கள் - 27 வேப்ப மரங்கள் - 4 மாமரங்கள் - இப்படியுள்ள இடத்தைத்தான் வற்புறுத்தி விலை பேசினார்கள். அங்கு ஒரு சென்ட் நிலத்தின் விலை ரூபாய் 4500- என்றுள்ள நிலையில்; ஒரு சென்ட் நிலம் ரூபாய் 300க்கு தரவேண்டுமென மிரட்டியிருக்கிறார்கள் அதாவது சுமார் ஏழு லட்சம் மதிப்புள்ள நிலத்தை 45 ஆயிரத்துக்கு தரச்சொல்லி மிரட்டியிருக்கிறார்கள். அதற்கு இணங்காமல் நிலத்தைத் தருவதற்கு - மறுத்தவுடன்; அந்தத் தனியார் கல்லூரியினர் ஒரு அறைகூவலே விட்டுவிட்டுச் சென்றிருக்கின்றனர்.

அதன் பிறகுதான் 24.3.95 என்று தேதி குறிக்கப்பட்ட ஒரு நோட்டீஸ் 9.5.95 அன்று கோ. துரைக்கு நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் பாஸ்கரன் அய்.ஏ.எஸ். அவர்கள் பெயரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலத்தில் தட்டச்சு செய்து அனுப்பப்பட்டுள்ள அந்த நோட்டீசின் தமிழாக்கம் இதோ :-

சட்டப்படி அதிகாரம் உடையவர் என்பதன் அடிப்படையில், நாகை காயிதே மில்லத் மாவட்ட ஆட்சித் தலைவரான ஆர். பாஸ்கரன் ஐ.ஏ.எஸ். என்கிற நான், தேவையான நிலத்தை பொதுத் தேவைக்கு பெற்றுக் கொள்வதற்கான அசையாச்சொத்து சட்டம் 1956 சென்னை சட்டம் XLII 1956ன் கீழ் எனது கருத்தை கீழ்க்கண்டவாறு தெரிவிக்கிறேன்.

சமுதாயக்கூடம், 'ட்ரைசம்' பயிற்சி மையம், நியாய விலைக்கடை மாதிரி வளர்ச்சி கிராமம் ஆகியவைகளை கட்டுவதற்கான இடங்கள் தேவைப்படுவதால் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ள

சொத்துக்கள் இப்போது தேவைப்படுகிறது அல்லது விரைவில் தேவைப்படலாம்.

எனவே மேற்படி சட்டத்தின் 3-வது பிரிவு துணைப்பிரிவு 1ன் கீழ் எனக்குள்ள அதிகாரத்தின்படி அச்சொத்துக்களுக்கு உரியவரான திரு. கோ. துரை, ம/பெ. மலர்கொடி, 17, கமால் நகர், மன்னார்குடி நகரம், அவர்களுக்கு இந்த நோட்டீசை அனுப்புகிறேன்.

இந்த நோட்டீசு கண்ட 15 தினங்களுக்குள், நாங்கள் எங்கள் தேவைக்கு இந்நிலங்களை எடுத்துக் கொள்வதை மறுப்பது பற்றி அவர் தெரிவிக்க வேண்டும். அதுமட்டுமின்றி அந்த சொத்துக்களின் உரிமையாளரோ அல்லது வேறு யாரோ எனது அனுமதியின்றி இக்கடிதம் கண்ட இரண்டு மாதத்திற்கு விற்கவோ அல்லது வாடகைக்கு தரவோ கூடாது

பட்டியல்

நாகை காயிதே மில்லத் மாவட்ட மன்னார்குடி தாலுக்கா, 36/2 சுந்தரக் கோட்டை கிராமம், சர்வே எண் 379/2 அளவு 0.60.5 ஹெக்டர், வறண்ட நிலம். அதில் அடங்கியவைகளின் விபரம் வருமாறு :-

1. கூரைக்கட்டிடம் - 1
2. செங்கல் சுவர் - 1
3. பனை மரம் - 1
4. தென்னை மரம் - 1
5. யூகலிப்டஸ் மரங்கள் - 18
6. வேப்ப மரங்கள் - 27
7. மாமரங்கள் - 4
8. பலா மரங்கள் - 2
9. புளிய மரங்கள் - 2

எல்லைகள் :

வடக்கே ஆர்.எஸ். எண். 378

கிழக்கே ஆர்.எஸ். எண். 380

தெற்கே ஆர்.எஸ். எண். 379/3ஏ

மேற்கே ஆர்.எஸ். எண். 337

தேதி : 24.3.95

இடம் : நாகப்பட்டினம்

இந்த நோட்டீசுக்குப் பதில் அளித்து கோ. துரை, அனுப்பியுள்ள கடிதத்தின் விபரத்தையும் இத்துடன் இணைத்துள்ளேன்.

விடுநர்,

கோ. துரை
17, கமால் நகர்,
மன்னார்குடி.

பெறுநர்

மாவட்ட ஆட்சித்தலைவர்,
நாகப்பட்டினம்

ஐயா,
பொருள் : உங்கள் நோட்டீசு எண். ஆர்.சி. 10748/95
எஃப் 5/24.3.95

தங்களின் மேற்குறிப்பிட்ட எண்ணுள்ள நோட்டீசு 9.5.95 அன்று தான் எனக்கு கிடைத்தது. அதில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை கைப்பற்றுவதில் அவ்வளவு அவசரம் தேவையில்லை என்பது அக்கடிதம் மூலமே தெரிய வருகிறது.

இது தவிர உங்களுக்கு நான் தெளிவாகத் தெரிவிக்க விரும்புவது, அந்தச் சொத்துக்களுக்கு நான் உரிமையாளர் இல்லை என்பதுதான். எனவே நீங்கள் தவறான நபருக்கு நோட்டீசு அனுப்பியுள்ளீர்கள்.

நீங்கள் தேவை என்று கருதக்கூடிய திட்டங்களுக்கு மிகவும் உகந்ததான அரசுப் புறம்போக்கு நிலங்கள் சுந்தரக் கோட்டை கிராமத்தில் ஏராளமாகவே பரந்துள்ளது. அவைகளை இன்றைக்கே கூட நீங்கள் கையகப்படுத்திக் கொள்ளலாம். அந்தப் புறம்போக்கு நிலங்களை நானே நேரடியாக வந்து உங்களுக்கு காண்பிக்கவும் தயாராக உள்ளேன்.

அவைகள் மெயின்ரோடுக்கு அருகிலேயே இருக்கின்றன. உண்மையில் சொல்லப்போனால், ஏற்கனவே அங்கு இன்னொரு இடம் பிளாட் தோ்வு செய்யப்பட்டு, அங்கு கட்டிடங்கள் கட்டுவதற்காக செங்கற்கள் எல்லாம் கூட கொண்டு வந்து குவிக்கப்பட்டுள்ளது.

வருவாய்த்துறை அதிகாரிகளிடம் எனக்கு ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகளின் அடிப்படையில்தான் இந்த நோட்டீசு வேண்டுமென்றே எனக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று எண்ணத் தோன்றுகிறது.

உங்கள் நோட்டீசில் குறிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிலங்கள் யாவும் வீணாக கிடக்கும் நிலங்கள் கிடையாது. ஏராளமான மதிப்புமிக்க மரங்களும், பழம் தரும் மரங்களும் கொண்ட தோப்புகள் உள்ள இடமாகும்.

அப்படிப்பட்ட மரங்கள் நீங்கள் கையகப்படுத்திட வேண்டுமானால் அவைகளின் 50 ஆண்டுகால வருவாயை கணக்கிட்டு அதற்கு ஏற்ப நஷ்டஈடு வழங்க வேண்டும். அங்கே ஒரு கட்டிடம் உள்ளது. அதன் உரிமையாளர் தங்குவதற்கு அதை பயன்படுத்தி வருகிறார்கள். அப்படிப்பட்ட இடத்தை வாங்க சட்டம் அனுமதிப்பதில்லை.

அக்கிராமத்தின் முக்கிய சாலையின் இருபுறத்திலும் தனியார்களுக்குச் சொந்தமான காலி நிலங்கள் ஏராளமாக உள்ளன. நீங்கள் செயல்படுத்தப் போவதாக எண்ணியுள்ள திட்டங்களை நிறைவேற்ற அந்த நிலங்கள் சாதகமாக இருக்கலாம்.

இப்போது நீங்கள் தோ்வு செய்து செங்கற்களை குவித்து வைத்துள்ள இடமே, நீங்கள் கட்டிடம் கட்டுவதற்கு உகந்த இடமாக இருக்கும்.

அப்படிப்பட்ட நிலையில், ஏராளமான மரங்களுடன் வீடுகள் உள்ள இடத்தை அதிக நஷ்டஈடு கொடுத்து வாங்குவதைக் காட்டிலும் குறைந்த விலையில் சிரமமின்றி வாங்குவதற்கான இடங்களை நீங்கள் கையகப்படுத்திக் கொள்ளலாம்.

இப்போது நீங்கள் குறிப்பிட்ட இடத்தை கையகப்படுத்த எண்ணுவதற்கு நான் என் எதிர்ப்பை தெரிவித்துக் கொள்கிறேன். நானோ, என் மனைவியோ அந்த நிலங்களின் உரிமையாளர்கள் இல்லை என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள,

கோ. துரை

மன்னார்குடி

10.5.1995

உடன்பிறப்பே, இதிலிருந்து என்ன புரிகிறது? ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஒருவர் தனியார் கல்லூரி நடத்துகிறார். கட்சியைச் சேர்ந்தவர் மட்டுமல்ல; முதலமைச்சர் உடன்பிறவாச் சகோதரியாரின் சகோதரர் - அவர் அந்தக் கல்லூரிக்கு அருகில் உள்ள ஓர் இடத்தை அடி மாட்டு விலைக்கு வாங்க நினைக்கிறார். நினைப்பு நிறைவேறவில்லை. உடனே கலெக்டருக்கு கட்டளை பிறப்பிக்கப்படுகிறது. அரசுக்குத் தேவையான பொதுப்பணிகள் புரிந்திட பக்கத்தில் அரசுப் புறம்போக்கு நிலம் அபரிமிதமாக இருந்தும்கூட; மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்; தர முடியாதென மறுக்கப்பட்ட தர்மலிங்கத் தேவரின் நிலத்தைத்தான் ஆக்ரமிக்கவேண்டுமென்று தடந்தோள் தட்டிக்கொண்டு புறப்பட்டு; தேவரின் மருமகன் கோ. துரைக்கு ஆக்ரமிப்பு நோட்டீஸ் அனுப்புகிறார்.

இப்படியொரு இட்லர் தர்பார் - இடிஅமீன் ராஜ்யம் - இங்கே நடைபெறுகிறது! சம்பல் பள்ளத்தாக்குக் கொள்ளையர் கூட்டம்கூட திருந்திவிட்டது; ஆனால் இங்கே திருந்தவேமாட்டோம் என்று சூளுரைத்துக் கொண்டு ஒரு கூட்டம் தொடர்ந்து இவ்வாறு அதிகாரிகளை வைத்துக் கொண்டு மிரட்டிக் கொள்ளையடிக்கிறது - நிலம், வீடு, தோட்டம், துரவு என்று எல்லாவற்றையும் கபளீகரம் செய்து கொண்டிருக்கிறது!

இதற்குப் பரிந்துரை வழங்கிக் கொண்டுதான் பக்கத்து மாநில முதலமைச்சர்களும் - பாரதீய ஜனதா முதலமைச்சர்களும் - இங்கே பவனிவந்து; விருந்தருந்தி பராக் கூறிவிட்டுப் போகிறார்கள்!

பதவி, பணம் இரண்டுமிருந்தால் போதும்; மக்களை மாக்களாக மதிக்கும் மகோன்மத்தர்களாகிய தங்களை எதுவும் எந்தக்காலத்திலும் செய்ய முடியாது என்று எண்ணிக்கிடந்தவர்கள் - சரித்திரப் பள்ளத்தாக்குகளில் அடையாளம் தெரியாமல் சிதறிப் போய்விட்டார்கள் என்பதை ஆளுங்கணத்தினர் இன்று மறந்திருக்கலாம்! அவர்களுக்கு ஆலவட்டம் சுழற்றும் அதிகாரிகளுமா மறந்துவிட்டனர்; அவர்கள் படித்த வரலாற்றுப் பாடங்களை?

அன்புள்ள,

மு. கருணாநிதி

12-05-1995

2266. நேற்று பாபர் மசூதி; இன்று பச்சை மசூதி!

உடன்பிறப்பே,

மத்தியில் உள்ள நரசிம்மராவ் அரசின் மெத்தனப்போக்கு - அல்லது அலட்சியப் போக்கு - இவற்றில் ஏதோ ஒன்றின் காரணமாக இந்தியத் திருநாட்டில் உள்ள சிறுபான்மை மக்களின்; அதுவும் குறிப்பாக இஸ்லாமியப் பெருமக்களின் இதயங்களில் வேல்பாய்ச்சும் வேதனையான நிகழ்ச்சிகள்; இந்த ஆட்சிக் காலத்தில் பெருமளவில் இரண்டு நடந்துவிட்டன. ஒன்று நானூறு ஆண்டுக்கு மேற்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க பாபர் மசூதி தகர்ப்பு! அடுத்ததாக இப்போது அறுநூறு ஆண்டுக்கால வரலாற்றுப் புகழ் வாய்ந்த காஷ்மீர் ஷரார்-இ-ஷரீப் பச்சை மசூதி தீ வைத்து எரிப்பு!

பாபர் மசூதி, சாதுக்கள் எனப்பெயர் பூண்டோரால் இடித்து நொறுக்கப்பட்டு மண்மேடாக்கப்பட்டது. காஷ்மீரின் பச்சை மசூதியோ தீவிரவாதிகள் எனப் பெயர் பூண்டோரால் தீவைத்துக் கொளுத்தப்பட்டது. பிரதமர் நரசிம்மராவ், இரண்டு நிகழ்வுகளுக்காகவும் நெஞ்சு நெக்குருகிட அறிக்கை விட்டுள்ளார்.

ஆனால் இந்த இரண்டு கொடுமைகள் நடைபெறுவதையும்; அவை நடைபெறுவதற்கு முன்பு தடுத்து நிறுத்தி சிறுபான்மை மக்களான இஸ்லாமியர் நெஞ்சத்திற்கு ஆறுதல் வழங்கிட அவர் முன்வந்ததுமில்லை. அத்தகைய முயற்சியில் தீவிரமாக ஈடுபடவும் இல்லை. காஷ்மீரில் வழிபாட்டுத்தலமான ஷரார்-இ-ஷரீப் தீக்கிரையான பிறகு கவலையும் கண்டனமும் தெரிவிப்பது போலத்தான் பாபர்மசூதி இடித்துத் தரைமட்டமாக்கப்பட்ட பிறகும் பிரதமர் கவலையும் கண்டனமும் தெரிவித்தார்.

கரசேவை அனுமதிக்கப்பட்டால் பாபர் மசூதி மண்மேடாகும் என்பது தெரிந்தும்; கரசேவையை அனுமதிக்கச் சொல்லி டெல்லி மாநாட்டில் கருத்தறிவித்து, பாரதீய ஜனதாத் தலைவர்களின்

பாராட்டைப் பெற்ற ஜெயலலிதாவும் இப்போது காஷ்மீரின் பச்சை மசூதிக்காக கண்ணீர் வடிக்கிறார்.

அதேபோல; கரசேவையினால் ஏற்படக்கூடிய ஆபத்தை உணர்ந்திருந்தும் - எட்டு கிலோ மீட்டர் தூரத்திலே இராணுவத்தை நிறுத்திவைத்துக் கொண்டு; பாபர் மசூதி எப்படி இடிக்கப்படுகிறது என்பதை வேடிக்கை பார்க்குமாறு செய்த பிரதமர் நரசிம்மராவ்; பின்னர் சோகக் கண்ணீர் கொட்டினார்!

காஷ்மீர் மசூதிக்கு தீ வைக்கப்பட்டது பற்றிய விபரங்களை இந்திய நாட்டு இராணுவ அமைச்சகம் வெளியிட்டுள்ளது. அதாவது வியாழக்கிழமை அதிகாலை இரண்டரை மணியளவில் தீவிரவாதிகள் பச்சை மசூதிக்குத் தீவைத்தனர். அதனையொட்டி அருகில் உள்ள மற்றும் இரண்டு மசூதிகளுக்குத் தீ வைத்தனர். அவர்கள் தீப்பந்தங்களைக் கையில் ஏந்திக் கொண்டு மசூதிகளுக்குத் தீ வைப்பதை ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்திலிருந்து அதற்குரிய கருவிகள் வாயிலாக இராணுவத்தினரால் பார்க்க முடிந்தது. இப்படி இராணுவ அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தியை, மத்திய உள்துறை அமைச்சகச் செயலாளரும் உறுதி செய்துள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாபர் மசூதியை இடித்த நிகழ்ச்சியை எட்டு கிலோ மீட்டர் தூரத்திலிருந்து இராணுவத்தினர் கண்டார்கள். இப்போது காஷ்மீர் பச்சை மசூதி கொளுத்தப்படுவதை ஒன்றரை கிலோ மீட்டர் தொலைவிலிருந்து அதற்குரிய கருவி மூலம் கண்டார்கள்.

எனவே மத்தியில் உள்ள நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் அரசும், பல கோடிகள் பாதுகாப்புச் செலவு என்ற பெயரால் ஆண்டுக்கு ஆண்டு பட்ஜெட்டில் ஒதுக்கிக் கொள்கிற பாதுகாப்புத்துறையும், ஒவ்வொரு ஆண்டும் குடியரசு நாளில் பவனி நடத்திக் காட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படும் இராணுவ தளவாடங்கள், அவற்றை தளகர்த்தர்கள், வீரர்கள் கொண்ட பெருஞ்சேனை - எல்லாமே இத்தகைய காரியங்களுக்கு, கண்ணால் கண்ட சாட்சியங்களாக மட்டுமே உதவக்கூடும்; அந்த நாசகாரியங்களைத் தடுத்து நிறுத்திட உதவமாட்டா என்பதுதானே தெளிவாகப் புலப்படும் உண்மையாகிறது.

காங்கிரஸ் கட்சியில் உள்ள தலைவர்கள் சிலரும், எதிர்க்கட்சிகளைச் சார்ந்தவர்களும் நரசிம்மராவ் அரசைக் குறைகூறி அறிக்கைகள் விடுத்துள்ளனர்.

அவரது மெத்தனத்தினாலும் அலட்சியத்தினாலுமே இந்த விளைவு ஏற்பட்டுள்ளதாக அந்த அறிக்கைகள் கோடிட்டுக் காட்டுகின்றன.

பாரதீய ஜனதாத் தலைவர்களுக்கு; காஷ்மீரில் எரியுண்டது மட்டுமே புனிதஸ்தலம் என்று தெரிகிறது. கண்டனமும் கவலையும் தெரிவித்துள்ளனர். இடிக்கப்பட்ட பாபர் மசூதியும் - இன்னும் இடிக்கப்பட வேண்டியவை என மதவெறியர்களால் பட்டியல் போட்டுக் காட்டப்படும் இஸ்லாமியரின் வழிபாட்டுத் தலங்களும் புனிதஸ்தலங்களாகத் தெரியவில்லைபோலும்!

பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்கு ஒரு காரணம் - காஷ்மீரில் பச்சை மசூதி எரிக்கப்பட்டதற்கு ஒரு காரணம் என இரண்டு வெவ்வேறு காரணங்கள் இருப்பினும்; அல்லது கூறப்படினும்; இரண்டு நாச வேலைகளையுமே நடக்கவொட்டாமல் முன்கூட்டித் தடுப்பதற்கு முனையாத மத்திய அரசை; நடந்து முடிந்த பிறகு அது வடிக்கும் நீலிக்கண்ணீருக்காக எவரும் மன்னித்திட முடியாது.

இந்துக்களும் முஸ்லிம்களும் புனிதத்தலமாகக் கருதி வந்த அந்த மசூதிகளுக்குள் அந்நியக் கூலிப்படையினர் மற்றும் தீவிரவாதிகள் இருந்தனர். அவர்கள் அந்த மசூதி வட்டாரத்தைத் தங்கள் பாசறையாக ஆக்கிக்கொண்டு சில மாதங்களாகவே அங்கு தங்கியிருந்திருக்கின்றனர். அவர்கள் பாகிஸ்தான் தீவிரவாதிகள், ஆப்கனிஸ்தான் தீவிரவாதிகள் எனப்பட்டனர். அவர்களை அகற்றவோ அல்லது எதிர்த்திடவோ முயலும் போது மசூதிக்குச் எந்தச் சேதமும் ஏற்படாமல் காத்திட இந்திய ராணுவத்தினரால் முடியவில்லை என்று கூறப்படுகிறது.

இவர்களாவது இருநூறு பேர்தான் - ஆனால் பஞ்சாப் அமிர்தசரஸ் பொற்கோயிலுக்குள் எத்தனையோ நூற்றுக்கணக்கானவர்கள் பிந்தரன்வாலே தலைமையில் போர்க்கோலம் பூண்டு அணிவகுத்தனர். அந்தப் பொற்கோயிலையே பல மாத காலம் தங்களின் பாசறையாகப் பாவித்து வந்தனர். அவர்களின் வெறியும் ஆவேசமும் எதிர்த்தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியுமா என்ற நிலையில்தான்; பிரதமர் இந்திராகாந்தி காலத்தில் பொற்கோயில் சுற்றி வளைக்கப்பட்டு, இராணுவம் உள்ளே நுழைந்து, பொற்கோயிலுக்குப் பெருஞ்சேதம் எதுவும் ஏற்படாமல் அன்றைக்கு; மத்திய அரசு நினைத்ததை முடிக்க

முடிந்தது. பொற்கோயிலும் காப்பாற்றப்பட்டது. ஆனால்; காஷ்மீர் மசூதிக்குள்ளே ஒளிந்திருந்து கலகம் விளைக்கக் கருதியிருந்த தீவிரவாதிகளை; மசூதிக்கு சேதமின்றி அடக்கவோ அழிக்கவோ இன்றைய இராணுவத்திற்கு உபாயம் எதுவும் தோன்றாமற் போனதற்குக் காரணம் என்ன?

உரிய நேரத்தில் - உரிய காரியங்களை உரிய முறையில் சிந்தித்து உரிய முடிவுகளை எடுக்காவிட்டால் அதன் விளைவுகள் இப்படித்தான் இருக்கும்!

"இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து"

எனும் குறளின் பொருளை உணராதோர், பொறுப்பில் இருந்தால்; இவைதான் நிலைமைகள் என்பதற்கு, பாபர் மசூதி - பச்சை மசூதி - போல இன்னும் பலவற்றை உதாரணங்களாக எடுத்துரைக்க முடியும்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

13-05-1995

2267. தண்ணீராக ஓடுதே தமிழர்களின் வரிப்பணம்!

உடன்பிறப்பே,

தி.மு.கழகம் ஆட்சியிலே இருந்தபோது அரசாங்கத்திற்குச் சொந்தமான சொத்துக்களையும், அரசு பணத்தையும் மக்கள் பணமாகக் கருதி, ஒவ்வொரு செயல்முறையும் நடைபெற்றது. பொது நிகழ்ச்சிகளுக்காக முதலமைச்சரோ, மற்ற அமைச்சர்களோ மாவட்டங்களுக்குச் செல்லும்போது, அந்த நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வோர், முதலமைச்சரையோ மற்ற அமைச்சர்களையோ மகிழ்விக்க வேண்டும் என்பதற்காக கண்ணை மூடிக்கொண்டு அரசு நிதியை செலவு செய்திடக்கூடாது என்று கண்டிப்பாக சொல்லப்பட்டிருந்தது. ஒரு சில நிகழ்ச்சிகளுக்காக அழைப்பிதழ் தயாரித்தபோது, அது சற்று விலை அதிக மதிப்பில் அச்சிட்டதறிந்து, அதனை உடனடியாகக் கண்டித்ததோடு, அதற்குக் காரணமாக இருந்த அதிகாரிகளிடம் விளக்கம் கேட்குமாறும் ஆணையிட்டிருக்கின்றேன்.

மேலும் ஒரு மாவட்ட விழாவிற்கு முதலமைச்சர் செல்லும்போது அமைச்சரவையிலே உள்ள அனைத்து அமைச்சர்களும் செல்லக் கூடாது என்றும், எந்தத் துறை சார்பாக விழா நடக்கிறதோ, அந்தத் துறைக்குப் பொறுப்பான அமைச்சரும், எந்த மாவட்டத்தில் விழா நடக்கிறதோ அந்த மாவட்டதைச் சேர்ந்த அமைச்சரும்தான் அந்த விழாக்களிலே கலந்து கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

தற்போது என்ன நிலைமை என்பதை தமிழ்நாட்டு மக்களே நன்கறிவார்கள். அனைத்து அரசு நிகழ்ச்சிகளும் சட்டமன்றப் பேரவைத் தலைவர் தலைமை தாங்குவதையும், நாவலர் தவிர்த்து அமைச்சரவையிலே உள்ள அனைத்து அமைச்சர்களும் ஒட்டுமொத்தமாகச் செல்வதையும் காணும்போது அரசுக்கு எவ்வளவு பணம் விரயம் என்பதை நன்கறியலாம்.

அது மாத்திரமல்ல; இப்போது ஒரு மாவட்டத்திலே ஒரு நிகழ்ச்சி என்றால் முதலமைச்சருக்கு தனி விமானம், ஹெலிகாப்டர் ஏற்பாடு செய்ய வேண்டும். விமான தளத்திலிருந்து நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு அம்மையாரின் காருக்குப் பின்னால் ஆயிரம் கார்கள் பவனி வரவேண்டும்; மணிக்கணக்கிலே சாலைகளில் போக்குவரத்து தடுக்கப்பட்டு, அந்த வழியே பயணம் செய்வோர் பாதிக்கப்பட வேண்டும். விண்ணை முட்டும் கட்-அவுட்கள் நூற்றுக்கணக்கிலே வரிசையாக இடம் பெறவேண்டும். கண்ணைப் பறிக்கும் ஒளி விளக்கு அலங்காரங்கள்; சுவரொட்டிகள்; பக்கம் பக்கமாக ஏடுகளிலே விளம்பரங்கள்; சுற்றுப்புற கிராமங்களுக்கு பேருந்துகளை, லாரிகளை அனுப்பி மக்களை அழைத்து வரச் செய்து, அவர்களுக்கு படி, அன்னதானச் செலவுகள்; சாலையின் இரு புறங்களிலும் சவுக்குக்கட்டை தடுப்புகள், இதற்கெல்லாம் சேர்த்து ஒவ்வொரு விழாவிற்கும் கோடிக்கணக்கிலே அரசு பணம் விரயம்! விரயம்!

உடன்பிறப்பே, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. அரிபாஸ்கர், ஐ.ஏ.எஸ்., அவர்கள் 2.3.1995 அன்று பொதுத்துறை மூலமாக ஒரு அரசு ஆணை பிறப்பித்திருக்கின்றார். அந்த ஆணையின் எண். ஜீ.ஓ. 211. அந்த ஆணையைப் படித்துப் பார்த்தால், தி.மு.கழக ஆட்சியிலே இதுபோன்ற அரசு நிகழ்ச்சிகளுக்கு எந்த அளவில் செலவு செய்ய அனுமதிக்கப்பட்டது என்பதையும், தற்போது என்ன முறை கடைப்பிடிக்கப்படுகிறது என்பதையும் ஒப்பிட்டு உணர்ந்திட முடியும்.

1989, 1990 ஆம் ஆண்டுகளில் தி.மு.க. ஆட்சி இருந்தபோது, 16.8.1990 தேதியிட்டு அரசின் பொதுத்துறை வெளியிட்ட கடித எண். 3834/90-3இல், முதலமைச்சரோ அல்லது மற்ற அமைச்சர்களோ, அரசு துறைகளுக்கு சம்பந்தம் இல்லாத நிகழ்ச்சிகளிலே கலந்து கொள்வார்களானால், பாதுகாப்பு ஏற்பாடுகளை மட்டுமே அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். சவுக்குக்கட்டை தடுப்புகள் போன்றவை அரசு செலவிலே கூடாது என்றும்,

அரசுத் துறை சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளிலே முதலமைச்சர் மாவட்டங்களிலே கலந்து கொள்வாரானால், அந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யும் அதிகாரிகள் மேடை, அலங்காரம், பந்தல், ஒலி, ஒளி, நாற்காலி போன்றவைகளுக்காக அதிகபட்சமாக 75,000

ரூபாய் வரைதான் செலவு செய்ய வேண்டும். சவுக்குக்கட்டை தடுப்புகளும் கூடாது என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இது தி.மு.கழக ஆட்சியிலே பிறப்பிக்கப்பட்ட ஆணை. இந்த ஆணையை மறுபரிசீலனை செய்துதான் தலைமைச் செயலாளர் அரிபாஸ்கர், ஐ.ஏ.எஸ்., புது ஆணை பிறப்பித்திருக்கின்றார் இப்போது!

மாவட்டங்களுக்கு முதலமைச்சர் செல்லும்போது எந்த அளவிற்கு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய அரசு நிதியைச் செலவழிக்க வேண்டுமென்று இந்த அரசு ஆணையிலே தலைமைச் செயலாளர் குறிப்பிட்டுக் காட்டியிருக்கின்றார். தி.மு.க. ஆட்சியிலே ஒரு நிகழ்ச்சிக்கு மொத்த செலவு 75,000 ரூபாய்க்கு மேல் போகக்கூடாது என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. தற்போது, தலைமைச் செயலாளர் பிறப்பித்துள்ள ஆணைப்படி மேடை ஒன்றுக்காக மட்டும் சுமார் 93,000 ரூபாய் செலவழித்துக் கொள்ளலாம் என்று அனுமதிக்கப்பட்டுள்ளது. மேடை பாதுகாப்புச் சுவர் புல்லட் ப்ரூப் அமைக்க 2,00,000 இரண்டு லட்சம் ரூபாய் செலவழிக்கலாம்.

தி.மு. கழக ஆட்சியிலே சவுக்குக் கட்டை தடுப்புக்காக செலவழிக்கக் கூடாது என்று ஆணை. ஆனால் தற்போது தலைமைச் செயலாளர் விடுத்துள்ள ஆணையில், சவுக்குக்கட்டை தடுப்பு மேடையைச் சுற்றிக் கட்டுவதற்காக 1,00,000 ஒரு லட்சம் ரூபாயும், மேடைக்கு அப்பால் உள்ள பகுதிகளிலே சவுக்குக்கட்டை தடுப்புக்கட்ட 2,00,000 இரண்டு இலட்சம் ரூபாயும் செலவழித்துக் கொள்ளலாம்.

தலைமைச் செயலாளர் அரிபாஸ்கர் எவ்வளவு தாராளமாக அனுமதிக்கின்றார் என்பதைப் பாருங்கள்! இரண்டு முறை பதவி நீடிப்பு பெற்றிருப்பவர் அல்லவா? யார் வீட்டுப் பணம்? தமிழ்மக்கள், கண்ணீரோடு கொட்டியழும் வரிப்பணம்தான் இப்படிப் பாழாகின்றது.

மேடையில் எஸ்.டி.டி. வசதியோடு தொலைபேசி வசதி செய்வதற்காக உண்மையாக எவ்வளவு செலவாகின்றதோ அதனைச் செலவழித்துக் கொள்ளலாம் என்றும் அந்த ஆணையிலே அரிபாஸ்கர் தெரிவித்திருக்கின்றார். புதிதாக தொலைபேசி பொருத்தவும், அதிலே அதிகாரிகள் எந்த அளவிற்கு

வெளியூர்களுக்கெல்லாம் பேசுகின்றார்கள் என்பதைப் பொறுத்தும் அந்தச் செலவு ஆகக்கூடும். அது ஆயிரக்கணக்கிலும் வரலாம், இலட்சம் ரூபாயைத் தாண்டியும் வரக்கூடும்.

அடுத்து, தலைமைச் செயலாளர் தனது உத்தரவில் அந்த விழாவுக்கான பந்தல் செலவு பற்றி குறிப்பிடும் போது, எவ்வளவு தொகை என்று குறிப்பிடாமல், அந்தந்த இடங்களைப் பொறுத்து செலவழித்துக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டிருக்கின்றார். தேவைக்கேற்ப 600 அடி நீளமும் 300 அடி அகலமும் கொண்டதாக பந்தல் அமையலாம் என்று தலைமைச் செயலாளர் கூறியிருக்கிறார். சுமாராக இதற்கு நான்கு இலட்சத்திற்குக் குறையாமல் செலவு ஆகக்கூடும். ஆனால் தலைமைச் செயலாளர் அந்தத் தொகையைக் குறிப்பிடாமல் அந்தந்த இடத்திற்கு ஏற்ப அது முடிவு செய்யப்படக்கூடியது என்று ஆணையிலே தெரிவித்திருக்கிறார்.

அடுத்து, நிகழ்ச்சி நடைபெறும் இடத்தை சமப்படுத்துவதற்காக 30,000 ரூபாய் செலவு செய்து கொள்ளவும் அந்த ஆணையிலே அனுமதி தரப்படுகின்றது. நிகழ்ச்சி நடைபெறும் இடம் சமவெளியாக இருந்தால்கூட, இந்தத் தொகை கணக்கிலே எழுதப்பட்டு, யாரோ ஒரு அமைச்சருக்கு வேண்டிய ஆளுங்கட்சிக்காரர்களுக்கு இந்தப் பணி ஒப்பந்தம் தரப்பட்டு, அரசுப் பணம் அவருக்குச் சென்று சேர்ந்துவிடும்.

அடுத்து, நிகழ்ச்சி நடைபெறும் இடத்திலே மேடையை ஒட்டி கழிப்பிடம் கட்டுவதற்காக எவ்வளவு தொகை அனுமதிக்கப்பட்டிருக்கிறது தெரியுமா? ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் கழிப்பிடம் கட்டுவதற்காக அரசுப் பணம் செலவழிக்கப்படலாம் என்று தலைமைச் செயலாளர் ஆணையிலே குறிப்பிட்டிருக்கிறார்.

இது தவிர, ஒலி, ஒளி ஏற்பாடுகள், அலங்காரங்கள் போன்றவைகளுக்காக மூன்று இலட்ச ரூபாய் செலவழித்துக் கொள்ளலாம் என்றும் தலைமைச் செயலாளர் அந்த ஆணையிலே சொல்லியிருக்கிறார்.

உடன்பிறப்பே, இப்போது கணக்கிட்டுப் பார்! கழக ஆட்சியிலே 75,000 ரூபாய் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்த நிலைமை எங்கே? இப்போது இலட்சக் கணக்கிலே அரசு நிதி, மக்களின் வரிப்பணம் கொள்ளை போகும் நிலைமை எங்கே?

இவைகள் தவிர; அழைப்பிதழ்கள் அச்சிடுவது தனிச் செலவு. ஏடுகளிலே பக்கம், பக்கமாக விளம்பரம் செய்ய லட்சக்கணக்கிலே செலவிட வேண்டும். விழாவிற்கு வருகை தரும் முதலமைச்சரும், அமைச்சர்களும் தங்குவதற்கான செலவுகள் தனி; அவர்கள் பயன்படுத்தக் கூடிய வாகனங்களுக்கான செலவு தனி. விழாவிற்கு கூட்டம் சேர்க்க அரசுப் பேருந்துகள் ஏற்பாடு தனிச் செலவாகும். வருகின்ற மக்களுக்கு உணவளித்திட லட்சக்கணக்கிலே செலவு.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று சொல்வார்கள். அரசுப் பணம் ஒரு சில மணிநேர நிகழ்ச்சிக்காக, எந்த அளவிற்கு இந்த ஆட்சியிலே பல லட்சக்கணக்கில் விரயமாகிறது என்பதற்கு தலைமைச் செயலாளரே பிறப்பித்துள்ள இந்த ஆணை ஒன்றே போதுமானதல்லவா?

தி.மு.கழக ஆட்சியிலே வெறும் 75,000 ரூபாய் அனுமதிக்கப்பட்டது. இப்போது சுமார் இருபது இலட்சத்திற்கு குறையாமல் செலவு செய்து கொள்ளலாம் என்ற அளவிற்கு நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அவ்வளவு தொகையும் ஆளுங்கட்சிக்காரர்களுக்கே தரப்படும் ஒப்பந்தங்கள் மூலமாக, அரசுப் பணம் முதலமைச்சர் நிகழ்ச்சி என்ற பெயரால் ஆளுங்கட்சிக்காரர்களுக்கு சென்றடைகின்ற வழிதான் இது.

மேலும் இதுபோன்ற நிகழ்ச்சிகளுக்காக ஆயிரக் கணக்கிலே குவிக்கப்படும் காவல் துறையினருக்காக செலவு தனியானதொன்றாகும்.

மக்கள்நலனைப் பற்றிக் கருதிப் பார்க்காத சுயநலவாதிகளின் ஆட்சியிலே அரசு நிதி - மக்கள் வரிப்பணம் செலவழிக்கப்படுவதைப் பற்றி அவர்களுக்கே என்ன கவலை? ஒரு சில மணி நேரம் தங்கவும், எழுதித் தயாரித்து எடுத்துச் சென்ற பேச்சை அங்கே படித்துவிட்டு வரவும் ஆகின்ற செலவுதான் இவ்வளவும். இதற்கெல்லாம் முடிவு கட்டும் காலம் வெகு தூரத்தில் இல்லை. இந்த உண்மைகளை உலகிற்கும், ஊருக்கும் தெரியப்படுத்தும் வேலையை முறையாகச் செய். வெற்றி விரைவில் வந்தே தீரும்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

14-05-1995

2268. ஆம்; மலையின் ரகசியம் கோட்டையில்தான்!

உடன்பிறப்பே,

ஏன்; தி.மு.க.வே கூட இ.காங்கிரசின் அக்கிரமக் கொள்கைகள், நடைமுறைகள் குறித்து எத்தனையோ தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளதே, காட் ஒப்பந்தத்திலே கையெழுத்துப் போட்டதை எதிர்த்து, பொதுத்துறை நிறுவனங்களை சீரழித்ததை எதிர்த்து, பங்குச்சந்தை ஊழலில் பல்லாயிரம் கோடி ரூபாயை ஏப்பம் விட்டதை எதிர்த்து, அயோத்தியில் பாபர் மசூதியை இடிக்கவிட்டு வேடிக்கை பார்த்ததை எதிர்த்து, எத்தனை எத்தனையோ தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. அவையெல்லாம் நீர்மேல் எழுத்துத்தானா? ஏட்டில் எழுதிய தேன்தானா? ஊரை ஏமாற்றத்தான் தீர்மானங்களா? உள்நடப்புகள் வேறுதானா? இல்லையென்றால் பொது வேட்பாளர் என்ற பெயரில் இ. காங்கிரசுடன் தேர்தல் கூட்டு வைக்கத் துடிக்கும் இவர்களது போக்கை எப்படிப் புரிந்து கொள்வது?

என்று மார்க்சிஸ்ட் கட்சியின் பத்திரிகையில் முதல் பக்கத்தில் மலையின் ரகசியம் கோட்டையில் வெளிப்பட்டது எனத் தலைப்பிட்டு ஒது கட்டுரை எழுதப்பட்டுள்ளது. அதைப் படித்தவுடன் அப்பாடா! இதுவரையில் மார்க்சிஸ்ட்கள், மக்கள் மன்றத்திலும் அவர்களது கட்சிச் செயல்வீரர்களும் மத்தியிலும் மறைக்க முயன்ற ஒரு செய்தியை; தங்களை அறியாமலே ஒப்புக்கொண்டதற்காக நன்றி தெரிவிக்கத்தான் வேண்டும் என்று நினைத்துக்கொண்டேன்.

அதாவது; மத்திய காங்கிரஸ் அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையை, காட் ஒப்பந்தத்தை, ஊழல்களைப் பற்றியெல்லாம் தி.மு.கழகம் தனது கண்டனத்தைத் தெரிவிக்கவில்லை என்று தொடர்ந்து அவதூறு கூறிக்கொண்டிருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு தலைமையினர்; இப்போது அந்தப் பொய்யை

மக்கள் நம்பத்தயாராக இல்லை என்று உணர்ந்தவுடன்; தமது கட்சியில் உள்ளவர்களேகூட கட்சித் தலைமையின் கூற்று தவறானது என்று முணுமுணுக்கத் தொடங்கியவுடன்; தி.மு.கழகம் இ.காங்கிரசின் அக்ரமக் கொள்கைகள், காட் ஒப்பந்தத்தை, பொதுத்துறை நிறுவனங்களை சீரழித்ததை, பங்குச் சந்தை ஊழலை, அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதைக் கண்டித்து எத்தனையோ தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது என்பதாக அவர்கள் கட்சியின் அதிகாரபூர்வமான ஏடாகிய தீக்கதிரிலேயே கட்டுரை தீட்டியுள்ளார்கள். இதைப் பொறுத்தவரையில்; தி.மு.கழகம் மத்திய காங்கிரஸ் அரசையும், அதன் தவறான கொள்கைகளையும், செயல்பாடுகளையும், ஊழல்களையும் கண்டிக்கவே இல்லையென்று இதுவரையில் மார்க்சிஸ்டுகள் வேண்டுமென்றே திட்டமிட்ட பொய்தான் கூறிவந்திருக்கிறார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் அனைவருக்கும் விளங்கும்.

ஆனால்; புதுக்கோட்டை இடைத்தேர்தல் பொதுவேட்பாளர் பிரச்சினையுடன் முடிச்சுப் போட்டு, தி.மு.க. நிறைவேற்றிய இந்தத் தீர்மானங்கள் எல்லாம் ஊரை ஏமாற்றத்தானா? உள்நடப்புகள் வேறுதானா? என்று விஷமத்தனமான ஒரு கேள்வியையும் அந்த ஏடு எழுப்பியிருக்கிறது! அக்கேள்வி அந்த ஏட்டுக்கு எதன் காரணமாக எழுகிறதாம்!

பொதுவேட்பாளர் என்ற பெயரில் இ.காங்கிரசுடன் தேர்தல் கூட்டு வைக்கத் தி.மு.க. துடித்ததாம் புதுக்கோட்டையில்!

இப்படி ஒரு காரணத்தை வலிந்து கூறி; தி.மு.கழகம், மத்திய காங்கிரஸ் ஆட்சியின் கொள்கைகளை எதிர்த்தும் - செயல்பாடுகளைக் கண்டித்தும் - தடா சட்டத்தை ரத்து செய்யக்கோரி தனசேகரன் என்ற கழக வாலிபனையே பலி கொடுக்கிற அளவுக்கு பேரணி நடத்தி குரல் கொடுத்தும் - தனது உறுதியான நிலைப்பாட்டை உலகிற்கு உணர்த்தியுள்ளதைக் கொச்சைப்படுத்தும் முறையில்; எல்லாம் ஊரை ஏமாற்றத்தானா? உள்நடப்பு வேறா? என்று கேள்வி கேட்டுக் கேலி புரிகிறது மார்க்சிஸ்டு ஏடு!

ஊரை ஏமாற்றப் போர் முழக்கமும்; உள்நடப்பு வேறாகவும் - உள்ள கட்சித் தலைமைகளைப் பற்றியும்; அந்தத் தலைமையில்

அங்கம் வகித்தவர்களைப் பற்றியும், வகிப்பவர்களைப் பற்றியும் எனக்கு மிக நன்றாகவே தெரியும்!

எமர்ஜன்சி, நாட்டைக் குலுக்கிக் கொண்டிருந்த போதே; அந்த எமர்ஜன்சியை எதிர்த்து வெளியே பேசிக் கொண்டு, அதேசமயம் பிரதமர் இந்திராகாந்தியின் தூதராகச் செயல்பட்டு; பெருந்தலைவர் காமராசரை இந்திராகாந்தியுடன் சமாதானத்திற்கு இணங்க வைக்க முயன்று இந்திராகாந்தியின் கரத்தைப் பலப்படுத்த பெருமுயற்சி எடுத்துக்கொண்ட இடதுசாரித் தலைவர் ஒருவரின் இரட்டைவேடப் போக்கு பற்றி அன்றைக்கே அறிந்து சொன்னவன் என்ற முறையில் ஊராருக்கு முன் ஒன்று - உள் நடப்பு வேறு என்ற கலையைக் கற்றவர்கள் யார் என்பதையும் அவர்கள் எந்தக் கட்சியினர் என்பதையும் சொல்லத் தேவையில்லை - அப்போதே இது அந்தக் கட்சிக்குள் வெளிவந்த ரகசியம்தான்!

அப்போதென்ன; இப்போதுகூட; இந்தியாவுக்குப் புதிய பொருளாதாரக் கொள்கை கூடாது என்று முழக்கம்! போர் முரசு! போராட்டம்! ஆனால்; மேற்கு வங்கத்திற்கு மட்டும் விதிவிலக்கு! அங்கு மட்டும் அந்நிய நாட்டுத் தொழில் அதிபர்களுக்கு அன்பழைப்பு! அதற்கு நரசிம்மராவின் பாராட்டு! காங்கிரசுக்கு எதிர்ப்பு! அதே நேரம் குடியரசுத் தலைவர் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் சங்கர்தயாள் சர்மாவுக்கு ஆதரவு!

இவர்கள் போய் ஊருக்கு ஒன்று; உள்நடப்புக்கு ஒன்றா? என்று பேசலாமா?

புதுக்கோட்டையில், அ.தி.மு.க. வேட்பாளருக்கு எதிராக ஒரு பொது வேட்பாளர் நிறுத்தப்படவேண்டும் என்ற கருத்து பேசப்பட்டு; அதைக்குறித்து தி.மு.கழகத்தின் தோழமைக் கட்சிகள் கூட்டம் 26.4.95 அன்று நடைபெற்ற போது கழகத்தின் சார்பில் எடுத்துரைக்கப்பட்டது என்ன என்பதை, அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் நன்றாகவே அறிவார்கள். அந்தக் கூட்டத்திற்கு பிறகு; நானும் பொதுச் செயலாளர் பேராசிரியரும் தோழமைக் கட்சிகளின் தலைவர்களுடனும் - நண்பர் இராஜாராம் அவர்கள் தலைமையில் அமைந்த குழு உறுப்பினர்களுடனும் - கலந்துரையாடிய சமயங்களில்; புதுக்கோட்டையில் பொதுவேட்பாளர் என்ற பெயரில் காங்கிரசுடன் தேர்தல் கூட்டுவைக்க தி.மு.க. முயற்சித்தது என்று அவர்கள்

யாராவது சொல்வார்களா? பொது வேட்பாளர் என ஒருவர் எல்லாக் கட்சிகளின் ஒப்புதலுடன் அறிவிக்கப்பட்டால்கூட, அதற்கான தேர்தல் பிரச்சாரம் எப்படி எப்படி அமைய வேண்டும் என்பதைக்கூட நானும், இந்திய கம்யூனிஸ்டு மாநிலச் செயலாளர் நல்லகண்ணு அவர்களும், ஜனதாதள இந்திய தேசிய லீக் பொதுச் செயலாளர் அப்துல் லத்தீப் அவர்களும் விரிவாகவே பேசியிருக்கிறோம். இதற்கிடையே காங்கிரஸ் கட்சியின் சார்பில் பொது வேட்பாளர் பெயர் அறிவிக்கப்பட்டு, அந்த வேட்பாளர் காங்கிரஸ் தலைவர்கள் உடன் சென்று வேட்புமனு தாக்கல் செய்தவுடன்; தி.மு.க.வும் அதன் தோழமைக் கட்சிகளான இந்திய கம்யூனிஸ்டு கட்சி, ஜனதாதளம், பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய தேசிய லீக், அகில இந்திய பார்வார்டு பிளாக் ஆகிய ஆறு கட்சிகளும் காங்கிரஸ் அறிவித்த அந்த வேட்பாளரை பொது வேட்பாளர் என்று ஏற்றுக்கொள்ள மறுத்து; இடைத்தேர்தலில் போட்டியிடுவது தி.மு.க. வேட்பாளர்தான் என்ற நிலையில் உறுதியாக நின்றன என்பது நாடறிந்த செய்தியாக இருக்கும்போது; நாங்கள் மட்டும் நம்பமாட்டோம்; இது, தி.மு.க. காங்கிரஸ் தேர்தல் கூட்டுக்கு ஏற்பாடுதான் என்று மனச்சாட்சிக்குச் சிறிதும் வேலை தராமல் மார்க்சிஸ்டுகள் எழுதுவதும் பேசுவதும்தான் என்ன காரணம் என்று எனக்குப் புரியவில்லை.

மலையின் ரகசியம் கோட்டையில் வெளிப்பட்டது என்று மார்க்சிஸ்டு ஏடு, கட்டுரை தீட்டுகிறது!

அதாவது பழனி மலை சார்ந்த பழனி நாடாளுமன்றத் தொகுதியில்; தி.மு.க.வுக்கும் காங்கிரசுக்கும் ரகசிய உறவு ஏற்பட்டதாம்! அது இப்போது புதுக்கோட்டையில் வெளிப்பட்டுவிட்டதாம்!

பழனி தொகுதியில் தி.மு.க. - காங்கிரஸ் உடன்பாடு இருந்திருந்தால்; அந்தத் தேர்தலில் தி.மு.க. இரண்டாவது இடம்பெற்று, காங்கிரஸ் மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்படுவானேன்? அதற்கு முன்பு பழனி நாடாளுமன்றத் தொகுதியில் நடைபெற்ற தேர்தலில் பெற்ற வாக்குகளைவிட தி.மு.கழகம் அதிக வாக்குகளை இப்போது எப்படிப் பெற முடியும்?

1991ல் அ.தி.மு.க. ஆதரவு பெற்ற காங்கிரஸ் வாங்கிய வாக்குகள் 4,45,897 -

அந்த தேர்தலில் தி.மு.க. - வேட்பாளர் பழனி குமாரசாமி பெற்ற வாக்குகள் 1,85,755 1993 பழனி நாடாளுமன்ற இடைத்தேர்தலில் அ.தி.மு.க. வாக்குகள் 2,78,877 -

தி.மு.க. வேட்பாளர் சுப்புலட்சுமி ஜெகதீசன் பெற்ற வாக்குகள் 2,34,034

காங்கிரஸ் 1,30,699

இந்த வாக்கு வித்தியாசம் கூட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுகளின் மாய்மாலத் திரையைக் கிழிக்கக்கூடிய ஆதாரமல்லவா?

இதற்கெல்லாம் பதில் சொல்ல மார்க்சிஸ்டுகள் தயாராக இல்லை!

எதையோ நினைத்து அவர்கள் எழுதியுள்ள கட்டுரையின் தலைப்பு; வேறு மாதிரியாக பொருந்துகிறது என்று மட்டும் கூறலாம்!

மலையின் ரகசியம் கோட்டையில் வெளிப்பட்டது. ஆம்; மார்க்சிஸ்டுகள் தி.மு.க.வைப் பற்றி மலையில் தொடங்கிய பொய் பிரச்சாரத்திற்கான பயனை ? கோட்டையில் தொடர்ந்து அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்; அது மெல்ல மெல்ல கோட்டையில் வெளிப்பட்டுவிட்டது என்றும் நாம் சொல்லலாம் அல்லவா?

அன்புள்ள,

மு. கருணாநிதி

16-05-1995

2269. எரிமலைக்கு அருவியெனப் பெயரிட்டு, என்ன பயன்?

உடன்பிறப்பே,

கிரிக்கெட் டெஸ்ட் பந்தயம் நடைபெறும்போது ஒவ்வொரு குழுவினரும் ஒவ்வொரு நாளும் எடுத்த ஸ்கோர் என்ன என்று அறிவிப்பதுபோல; வானொலிப் பெட்டிகளை, தொலைக்காட்சிப் பெட்டிகளைத் திறந்தால்; இன்றைக்கு பஞ்சாபில் இத்தனை பேர் கொலை என்ற விபரம் ஒவ்வொரு நாளும் சொல்லப்பட்டு; இந்தியாவின் தலைநகர் டெல்லியிலேயே உள்ள அதிகாரிகளின் மத்தியிலேயே பஞ்சாப் கொலைகள் ஸ்கோர் கணக்கில் வேடிக்கையாகப் பேசப்பட்ட வேதனையான காலகட்டம் ஒன்று தொடர்ந்திருந்தபோது; மத்தியில் ராஜீவ்காந்தி ஆட்சியில் 1985ஆம் ஆண்டு தடா சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டத்தை எதிர்க் கட்சிகள் கண்டித்துக் குரல் எழுப்பியபோது, அச்சட்டம் இரண்டே ஆண்டுகள்தான் அமல்படுத்தப்படுமென்றும் - அரசியல் நோக்கங்களுக்காக துஷ்பிரயோகம் செய்யப்படமாட்டாதென்றும் உறுதியும் அளிக்கப்பட்டது. ஆனால் இரண்டு ஆண்டுகளில் அச்சட்டம், தனது ஆயுளை இழந்துவிடாமல் - 1985 முதல் 1995 வரையில் சுமார் பத்தாண்டுக் காலம் உயிர் வாழ்ந்து ஜனநாயகக் கோட்பாட்டின் உயிரையே வாங்கியிருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது!

அவ்வப்போது காலத்தை நீட்டித்துக்கொண்டது மட்டுமல்ல; அரசியலில் பழிவாங்கும் நோக்கத்துடன் பயன்படுத்தப்படமாட்டாது என்ற உறுதிமொழியையும் குப்பைக் கூடையிலே வீசி எறிந்துவிட்டு; அச்சட்டத்தை பகை தீர்த்துப் பழிவாங்கும் படைக்கலனாகவே பயன்படுத்தவும் ஆளும் பொறுப்புக்கு வந்தோர் தயங்கவில்லை.

அந்தச் சட்டத்திற்கு 1987ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட திருத்தத்தின்படி அரசுக்கு எதிராகப் பேசுவதுகூட Disruptive Activities

படுபாதகமான செயல் என்று விளக்கமளிக்கப்பட்டு, அதற்கு மிகக் கடுமையான தண்டனை என்றும் அச்சுறுத்தப்பட்டிருக்கிறது. இந்தியக் குற்றச்சட்டத்தின்படி கைது செய்யப்படுவோரை காவல் துறையினர் உடனடியாக இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள் நீதிபதி முன்பு நிறுத்தி, குற்றச்சாட்டுகள் தொடர்பாக மூன்று மாதத்திற்குள் வழக்கு தொடர வேண்டும் என்று இருப்பதற்கு மாறாக; தடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களை அறுபது நாட்கள் வரையில் காவல்துறையினர், தங்கள் பொறுப்பிலேயே வைத்துக் கொள்ளலாம் என்றும் அவர்கள்மீதும் ஆறுமாதம் வரை வழக்குத் தொடரலாம் என்றும் எவரும் முன் ஜாமீனில் விடுபட முடியாதென்றும்; ஜனநாயக உரிமைகள் மீது வீசப்படும் கொடுவாளாகத் தயாரிக்கப்பட்டுவிட்ட பயங்கரமான அந்த ஆயுதத்தை வைத்துக்கொண்டு ஆட்டம் போடக் கருதி, அவ்வாறே செயல்பட்ட மத்திய - மாநில அரசுகளின் நடவடிக்கைகளினால் பழிவாங்கப்பட்டோர் பல்லாயிரம் பேர்! எழுபத்தி ஐயாயிரம் பேருக்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றால் அவர்களில் பெரும்பாலோர் சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். முதலில் சீக்கியர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட தடா சட்டம், பின்னர் முஸ்லிம் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுகிறது.

பல்வேறு மாநிலங்களில் தடா சட்டத்தை தவறாகப் பயன்படுத்திச் சிறுபான்மை மக்கள் சித்ரவதைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். இந்தச் சட்டத்தை, அரசியல் கட்சிகளை மிரட்டவும் - அதிகாரிகளை பழிவாங்கவும் - தனக்குக் கிடைத்த வரப்பிரசாதம் எனக்கருதிக் கொண்டு திராவிட முன்னேற்றக் கழக முன்னாள் அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசனையும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் உள்துறை செயலாளராக இருந்த அய்.ஏ.எஸ். அதிகாரி நாகராஜனை தராசு அலுவலகக் கொலை வழக்கில் திட்டமிட்டுப் பொய்யாக ஈடுபடுத்தி அவரை எப்படியெல்லாம் பழி வாங்கவும், கழகத்திற்கு எதிராகப் பயன்படுத்த முடியுமா என்று பார்த்திடவும் முதலமைச்சர் ஜெயலலிதா முயற்சி செய்தார் என்பதையும்; இப்போது கூட தடா சட்டப்படி தேடப்பட்ட கைதி ஒருவரைப் பிடித்துத் தன்னுடைய எதிரியாகக் கருதுகிற சுப்பிரமணியம் சுவாமியைப் பழிவாங்க அவர் திட்டமிடுவதையும் தமிழ்நாட்டு மக்கள் தெளிவாகவே உணர்ந்திருக்கிறார்கள்.

கோர நிகழ்ச்சிகளும் - கொடுமையான காரியங்களும் - கொலைகளும் - அன்றாட வாடிக்கையாகிவிடக்கூடாது என்பதற்காக கொண்டு வரப்பட்ட சட்டம்தான் தடா என்று கூறப்பட்டாலும்கூட; அது அரசியல் உள்நோக்கத்துடனேதான் நடைமுறைப்படுத்தப்பட்டது. எனவே அச்சட்டம் ரத்து செய்யப்பட வேண்டுமென்று தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அனைத்தும் தொடர்ந்து குரல் கொடுத்தன. ஏற்கனவே உள்ள சட்டங்களே; குற்றங்களைக் கண்டுபிடிக்கவும், குற்றம் சாட்டப்பட்டவரை நீதிமன்றத்தில் விசாரிக்கவும், குற்றம் புரிந்தது உண்மையென நிரூபிக்கப்பட்டால் அன்னார் தண்டனை பெறவும், போதுமானவைகளாக இருக்கும்போது, வேண்டுமென்றே அரசியல் ரீதியான பழிவாங்கும் நடவடிக்கைக்கு உகந்த வகையில் கிடைத்துள்ள தடா சட்டத்தைக் கொண்டு, தனக்குப் பணியாதோரை கொடுமைப்படுத்தவும் - வளைந்து கொடுக்கக் கூடியவர் எனத் தெரிந்தால் அவர்களை மிரட்டவும் - மிரட்டிப் பணிய வைக்கவும் - முதலமைச்சர் ஜெயலலிதா தடாவைப் பயன்படுத்தியதை எதிர்த்தும் - மத்திய அரசு தடா சட்டத்தைக் கைவிட முன்வராத செயலை எதிர்த்தும் - தி.மு.கழகம் சென்னையில் நடத்திய மகத்தான பேரணியில்தான்; தனசேகரன் எனும் கழகத்தின் தன்மானச் சிங்கம், போலீசாரின் துப்பாக்கி குண்டுக்குப் பலியானான்.

அண்மைக்காலத்தில் தடா ரத்து செய்யப்பட வேண்டுமென்ற கருத்து, அழுத்தம் திருத்தமாக ஓங்கி ஒலித்திடத் தொடங்கியது.

மனித உரிமைக்குழுவின் தலைவர் நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா அவர்கள்; தடா சட்டத்தின் கடுமையான பிரிவுகள் அகற்றப்படவேண்டுமென வற்புறுத்திக் கூறினார். மத்தியில் உள்ள அமைச்சர்களேகூட சிலர், தடாவை ரத்து செய்ய வேண்டுமென்று கருத்தறிவித்தனர்.

தேசிய முன்னணி மற்றும் இடதுசாரி கட்சிகள், தடாவை அடியோடு ரத்து செய்யவேண்டுமென்று முழக்கமிட்டுக் கொண்டேயிருந்தன.

தடா குறித்து விவாதிக்க பிரதமர் நரசிம்மராவ் கூட்டிய கூட்டத்தில் தமிழக முதலமைச்சர் எழுதி அனுப்பிய பேச்சைப்படித்த தமிழக சட்ட அமைச்சர்; தடாவை ரத்து செய்யக்கூடாது என்று

திட்டவட்டமாகத் தெரிவித்தார். பாரதீய ஜனதா, சிவசேனா, அ.தி.மு.க. - ஆகிய கட்சிகள் தடா நீடிக்கவேண்டும் என்ற அணி வகுப்பில் இருக்கும் கட்சிகளாகும்.

நாடு முழுதும் தோன்றியுள்ள எதிர்ப்பு அலையினைக் கண்ட மத்திய காங்கிரஸ் அரசு, தடா சட்டத்தை இனி நீடிப்பதில்லை என்ற முடிவுக்கு வந்துள்ளது. எனவே வரும் 23 ஆம் தேதியுடன் தடா சட்டம் காலியாகிவிடும் என்று எதிர்பார்க்கலாம்.

தடாவை ரத்து செய்துவிட்டு, தீவிரவாத நடவடிக்கைகளையும் - தேச விரோத நடவடிக்கைகளையும் ஒடுக்குவதற்கு தனியாக ஒரு சட்டம் நிறைவேற்றிட மத்திய அரசு நினைத்திருப்பதாகவும் தெரிகிறது.

அது; பெருமாள், பெத்தபெருமாள் ஆன கதையாக ஆகிவிடக்கூடாது! அல்லது பெயரை மட்டும் மாற்றிவிட்டு; அந்தக் கொடிய செயல்பாடுகளைச் சட்டம் மூலம் நிறைவேற்ற வழிவகுத்துக் கொண்டு விடவும்கூடாது! எரிமலைக்கு அருவி என்று பெயர் மாற்றிவிட்டால்; எரிமலையின் ஆபத்து அகன்றுவிடுமா?

எனவே; சட்டங்கள் சமுதாயத்தைக் கட்டுப்பாடு காத்திடச்செய்யும் கருவிகளாக அமைந்திடவேண்டுமேயல்லாமல்; சமுதாயத்தின் குரல்வளையை கட்டி இறுக்கும் கயிறுகளாக அமைந்துவிடாமல் பார்த்துக் கொள்வதில் தனிக்கவனம் எல்லோருக்கும் தேவை!

அன்புள்ள,

மு. கருணாநிதி

18-05-1995

2270. மோதலைத் தொடங்கியவர்கள் யார்?

உடன்பிறப்பே,

பழனி நாடாளுமன்ற இடைத்தேர்தலில் இந்திரா காங்கிரசுக்கும் தி.மு.க.வுக்கும் ரகசிய உடன்பாடு என்று ஓர் இட்டுக்கட்டிய பொய்யைச் சொல்லி; அதை, கட்சியின் மாநிலக் குழுவின் அறிக்கையாகவும் வெளியிட்டு - தி.மு.க. மீது வேண்டுமென்றே திட்டமிட்டு மோதத் தொடங்கிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சித் தலைமையைப் பற்றி நாம் விளக்கங்களை வழங்கி; பழனி இடைத் தேர்தலில் அப்படியொரு உடன்பாடு இருந்தால் தி.மு.கழகம் இரண்டாவது இடத்தைப் பெற்று, காங்கிரஸ் மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டிருக்குமா என்று வாக்குகளின் எண்ணிக்கை விபரங்களைக் காட்டி விடுத்த கேள்விக்கு அன்று முதல் இன்று வரையில் விடை அளிக்க முடியாமல் வழுக்கிக்கொண்டே போகிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள்; தங்களின் போக்கு குறித்து தடுமாற்றம் அடைந்துள்ள மார்க்சிஸ்ட் கட்சியின் செயல்வீரர்களுக்கு, தி.மு.க. மீது கோபத்தையும் ஏற்படுத்த இப்போது ஒரு புதிய பொய்யை சென்னை சைதாப்பேட்டை கூட்டத்தில் அவிழ்த்து விட்டிருக்கிறார்கள்.

அந்தக் கூட்டத்தில் பேசிய தோழர் சங்கரய்யா அவர்களை நான் நீண்டகாலமாக அறிவேன். வடக்கே நிருபன் சக்கரவர்த்தி என்ற மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர் எவ்வளவு எளிமையானவர் என்று பெயரெடுத்தவரோ; அந்த அளவு எளிமையான தோழர்! பொதுக் கூட்டங்களில்கூட எத்தகைய பொறுப்புடன் மக்கள் பிரச்சினைகளை மட்டுமே பேச வேண்டும் என்பதில் கண்டிப்பாக இருப்பவர் என்பதை நானும் அவரும் கலந்து கொண்ட கூட்டணி இயக்க நிகழ்ச்சிகளில் அனுபவ ரீதியாக உணர்ந்திருக்கிறேன் நான்! ஆனால் அப்படிப் பேச வேண்டுமென்ற அவரது கண்டிப்பான கருத்தெல்லாம், கடந்த காலத்தில்தான் - இப்போது பொறுப்புணர்வும் கண்டிப்பும் காற்றோடு கலந்து விட்டதோ என

ஐயுறும் அளவுக்கு அவரது சென்னை சைதாப்பேட்டை பேச்சு அமைந்துள்ளது.

மேற்கு வங்கத்தில் ஆட்சி நடத்தி வரும் ஜோதிபாசுவை, வாய் கூசாமல் ஊழல் செய்தார் என்று கூறி உள்ளார்.

என்று அந்தக் கூட்டத்தில் என்னைப் பற்றி விமர்சிக்கும் தொடரில் தோழர் சங்கரய்யா இப்படியொரு கற்பனையான குற்றச்சாட்டை என்மீது கூறியுள்ளார்.

தோழர் ஜோதிபாசு அவர்களை நான் அறியாதவனல்ல; காங்கிரசு இரண்டாக பிளவுபட்ட 1969ஆம் ஆண்டு டெல்லி தமிழ்நாடு அரசு மாளிகையில் மேற்கு வங்க முதல்வர் அஜய் முகர்ஜியும், துணை முதல்வர் பொறுப்பில் இருந்த தோழர் ஜோதிபாசுவும் நானும் சந்தித்துப் பேசி ஜனாதிபதி வேட்பாளராக இந்திரா காந்தியின் ஆதரவு பெற்ற வி.வி. கிரியை ஆதரிப்பது என்று முடிவெடுத்த காலத்திலிருந்து அவருடன் நெருங்கிப் பழகி வருபவன் நான். எனவே அவருக்கும் எனக்கும் நல்ல நட்பு உண்டு - பல நிகழ்ச்சிகளில் இருவரும் ஒன்றாகக் கலந்துகொண்ட வரலாறும் உண்டு. அவரிடம் எனக்கு ஒரே ஒரு வருத்தம் - கடந்த நான்கு ஆண்டுகளில் இரண்டு முறை அவர் சென்னைக்கே வந்தபோது, முதலமைச்சர் ஜெயலலிதாவின் வீட்டுக்கே சென்று அவரைச் சந்தித்து விட்டுச் சென்றவர்; சென்னையிலிருந்த என்னிடம் ஒரு தொலைபேசியில் கூட தொடர்பு கொள்ளவில்லையே என்பதுதான் அந்த வருத்தம். இத்தனைக்கும் தி.மு.க.வுக்கும் மார்க்சிஸ்டு கட்சிக்கும் இடையில் நல்லுறவு இருந்த அந்தக் காலகட்டத்தில்தான்; அவர் சென்னைக்கு வந்து சென்ற நிகழ்ச்சிகள்.

அவருக்கோ, என் பழைய நண்பர் இ.எம்.எஸ்.நம்பூதிரிபாட் அவர்களுக்கோ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் சுர்ஜித் அவர்களுக்கோ; தெரிந்து செய்தார்களா அல்லது தெரியாமல் செய்தார்களா; அவர்கள் ஏற்றுக்கொண்டு அதன்பிறகு செய்தார்களா; தி.மு.க.வைப் பற்றிய அவதூறான பிரச்சாரத்தை - என்று எனக்குத் தெரியாது. ஏன் எனில் பழனி நாடாளுமன்ற இடைத்தேர்தலில் அ.தி.மு.க.வும் - அதற்கடுத்து தி.மு.க.வும் - கடைசி இடத்துக்கு காங்கிரசும் என்ற நிலையில் வாக்குகள்; ஆதாரங்களாக நிற்கும்போதுகூட ரகசிய உடன்பாடு

என்று மாநில மார்க்சிஸ்டு தலைமையின் கூற்றை நம்பி விடுகிற அளவுக்கு அவர்கள் சிந்தனையாற்றலில் சிறிதளவும் குறைந்தவர்கள் அல்லர்!

ஒருவேளை, மாநில மார்க்சிஸ்டுகளின் கருத்தை அவர்கள் மனதார ஒப்புக் கொண்டார்கள் என்றால்கூட; அது அவர்கள் கருத்து - நம்மிடமிருந்து பிரிந்து நிற்க எண்ணுகிறார்கள்போலும் என்று நினைத்து, நாம் நமது பணியைத் தொடர்ந்து கொண்டிருந்தோமே தவிர, இருப்போமே தவிர, அதற்காக ஜோதிபாசு போன்றவர்களை ஊழல் பேர்வழிகள் என்று குற்றம்சாட்டுகிற அளவுக்குத் தரம் தாழ்ந்த அரசியல் நடத்த வேண்டிய அவசியம் எனக்கு ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை. ம.தி.மு.க.வின் செய்திகளுக்கு முக்கியத்துவம் தந்து வெளியிடுகிற தினகரன் ஏட்டில் சங்கரய்யா அவர்களின் பேச்சைப் படித்துப் பார்த்தவுடன் - உண்மையிலேயே நான் அதிர்ச்சி அடைந்தேன்.

மேற்கு வங்க அரசின் மீதும் முதல்வர் ஜோதிபாசு மீதும் இதுபோன்ற புகார்களை, திரிபுராவின் முன்னாள் முதல்வரும் மார்க்சிஸ்ட் கட்சியிலிருந்து விலக்கப்பட்டவருமான தோழர் நிருபன் சக்கரவர்த்தியும் வேறு சிலரும்தான் கூறியிருக்கிறார்கள். அந்தச் செய்தி எல்லா ஏடுகளிலும் வெளிவந்ததுபோல; ஒருவேளை முரசொலியிலும் வந்திருக்கலாம். அது நிருபன் சக்கரவர்த்தியின் கூற்றாக வந்திருக்கலாமே தவிர; நான் எந்த இடத்திலும் அவ்வாறு பேசவோ எழுதவோ முன்வராத போது; தோழர் சங்கரய்யா இப்படியொரு திசை திருப்பும் வாசகத்தைத் தனது பேச்சில் தந்திரமாகக் கையாண்டிருப்பது ஏன் என்று எனக்குப் புரியாமல் இல்லை.

புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்த்து நாடு முழுதும் கிளர்ந்தெழுமாறு மக்களைத் தூண்டி விட்டுப் போர்க்கொடி உயர்த்தச் சொல்லிவிட்டு; மேற்கு வங்கத்தில் மட்டும் அந்நிய தொழில் அதிபர்களுக்கு அழைப்புவிடுவது சரியா? என்று கொள்கை ரீதியில் கேட்டிருக்கிறேன்.

சமத்துவம் - சமதர்மம் என்ற நிலைப்பாட்டை செயல்படுத்த; தி.மு.க. ஆட்சியில் 1970ஆம் ஆண்டில் மனிதனை வைத்து மனிதன் இழுக்கும் கை ரிக்ஷாக்களை, தமிழ்நாட்டில் ஒழித்துவிட்டு அவற்றுக்கு மாற்றாக இலவச சைக்கிள் ரிக்ஷா

கொடுக்கப்பட்டதை சுட்டிக்காட்டி, மார்க்சிஸ்ட் ஆட்சி நடக்கிற மேற்கு வங்கத் தலைநகர் கல்கத்தாவில் மட்டும் இருபதாயிரம் கை ரிக்ஷாக்களை இன்னமும் மனிதர்கள், மனிதர்களை உட்கார வைத்து மாடுகளைப்போல இழுக்கிறார்களே; அதை ஏன் நிறுத்தவில்லை என்று கொள்கை பூர்வமாக வினவியிருக்கிறேன்.

ஜனதா தளமும் தி.மு.க.வும் ஆதரித்த ஆதிவாசி இனத்தைச் சேர்ந்த ஸ்வெல் அவர்களை குடியரசுத் தலைவர் தேர்தலில் ஆதரிக்காமல் - அதற்கு மாறாக காங்கிரஸ் வேட்பாளர் சங்கர்தயாள் சர்மா அவர்களை ஆதரித்த மார்க்சிஸ்ட் கட்சி; எங்களைப் பார்த்து பழனி தேர்தலில் காங்கிரசுடன் ரகசிய உடன்பாடு என்று பொய் கூறுவது என்ன வேதனையான வேடிக்கை என்று கேட்டிருக்கிறேன். இன்னமும் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

தோழர் சங்கரய்யா இன்னொன்றும் பேசியதாக தினகரனில் வந்துள்ளது.

> சோவியத் நாட்டின் மிகப்பெரிய தலைவர் ஸ்டாலின் மீது மதிப்பு வைத்து, உங்கள் மகனுக்கு ஸ்டாலின் என்று பெயர் வைத்து மகிழ்ந்த நீங்கள் இன்று கம்யூனிஸ்டுகளை தாக்கிப் பேசிட வேண்டிய நிர்பந்தம் என்ன?

என்று என்னைப்பார்த்துக் கேட்டுள்ளார்.

ஆம்; என் மகனுக்கு அந்தப் பெயரை வைத்திருக்கிறேன். சோவியத்தில் அதிபர் ஸ்டாலினுக்குப் பிறகு வந்த குருஷேவும் குருஷேவை ஆதரித்தவர்களும் ஸ்டாலின் கல்லறையைத் தோண்டி, அவரது பதப்படுத்தப்பட்ட உடலை எரித்தபோதும் ஸ்டாலின் சிலைகளை ரஷ்யாவில் அகற்றிய போதும்கூட; நான் என் மகனுக்கு வைத்த பெயரை மாற்றவில்லை என்பதுதான் மிக முக்கியம்.

உடன்பிறப்பே; நீ மட்டுமல்ல - மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியில் உள்ள எல்லா முன்னணியினரும் செயல்வீரர்களுமே தயவுசெய்து நெஞ்சில் கை வைத்துக்கொண்டு, மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் சொல்ல வேண்டும்; முதலில் தி.மு.க.வுடன் மோதலைத் தொடங்கியது யார்?

பழனி இடைத்தேர்தலையொட்டி தி.மு.க. காங்கிரஸ் ரகசிய உறவு என்று பெரும் பழியை தி.மு.க. மீது சுமத்தியது யார்?

அது ஏதோ பேட்டியில் சொன்னது - அறிக்கையாக யாரோ சொன்ன கருத்து - என்று கூட இல்லாமல்; மாநில மார்க்சிஸ்ட் கட்சிக் குழுவின் தீர்மானமாக வடித்தெடுத்து ஏடுகளில் வெளியிட்டது யார்?

அது தவறான தகவல் என்று தி.மு.க. சார்பில் விளக்கமளிக்கப்பட்ட பிறகும் - மீண்டும் அந்தத் தீர்மானத்தையும் அத்துடன் ஒரு கடிதத்தையும் இணைத்து தி.மு.க. தலைமைக்கு அனுப்பி வைத்தது யார்?

அதன்பின்னர் மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர்கள் சிலர், அண்ணா அறிவாலயத்தில் என்னுடனும் பேராசிரியருடனும் மத்திய மாநில அரசுகளைக் கண்டித்துக் கூட்டுப் போராட்டம் பற்றிப் பேச வந்தனர். ஒப்புக்கொண்டோம். ஆனால் அந்தக் கூட்டுப் போராட்ட அணியில் ம.தி.மு.க.வும் இருக்கும் என்றனர். போலிப் பொதுக்குழுவைக் கூட்டி, என்னையும், பொதுச்செயலாளர் பேராசிரியரையும், பொருளாளர் சாதிக் பாட்சாவையும் விலக்கிவிட்டதாகத் தீர்மானம் போட்டவர்கள் - கட்சிக் கொடியைக் கைப்பற்றவும்; உதயசூரியன் சின்னத்தை யாருக்குமில்லாமல் முடக்கவும் வழக்காடியவர்கள் - அவர்களையும் இணைத்துக்கொண்டு கூட்டுப்போராட்ட அணியென்றால் தி.மு.க. அதில் இடம்பெற இயலாது; மத்திய மாநில அரசுகளின் மக்கள் விரோதப்போக்கை கடந்த பல ஆண்டுகளாக தி.மு.க., மார்க்சிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி, ஜனதா தளம், அகில இந்திய பார்வார்டு பிளாக், ஆகிய தேசிய முன்னணி இடதுசாரிக் கட்சிகள் ஓரணியில் நின்று எதிர்த்துப் போராடுவதைப் போல் போராட தி.மு.க. தயார் - ஆனால் ம.தி.மு.க.வையும் இந்த அணியில் சேர்ப்பது; ஏதோ, போகாத ஊருக்குப்பாதை கேட்பதுபோல இருக்கிறது - ஒப்புக்காக எங்களையும் அழைப்பதுபோல் தெரிகிறது என்று நானும் பொதுச்செயலாளரும் கூறினோம். மீண்டும் கலந்து பேசிவிட்டு வந்து சந்திப்பதாகச் சொன்னார்கள் வரவில்லை - பிறகு அவர்கள் போக்கில் அவர்கள் உறுதியாக இருந்து விட்டார்கள். நாமும் நமது போக்கில் உறுதியாக இருக்கிறோம்.

எனினும்; இடையிடையே நம்மை வம்புக்கிழுப்பதும் - கூட்டு மேடை போட்டுக் கொண்டு அதில் நம்மைச் சிலர் ஆபாசமாகவும் அவதூறாகவும் பேசுவதை ரசித்துக் கொண்டு தங்கள் பங்கிற்கும் நம்மீது புழுதிவாரித் தூற்றிக்கொண்டும் இருப்பவர்கள் மார்க்சிஸ்ட்

தலைவர்கள்தான்! மத்தியில் உள்ள நரசிம்மராவையும் மாநிலத்தில் உள்ள ஜெயலலிதாவையும் எதிர்ப்பதாகக் கூறிக்கொண்டு; தி.மு.க.வைத் தாக்கிப் பேசவே மேடைகளைப் பயன்படுத்தினால் அதற்காக நரசிம்மராவும் ஜெயலலிதாவும்தான் நமட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டு அவர்களுக்கு சபாஷ் போடுவார்கள்!

எனவே; மோதுதலைத் தொடங்கியவர்களும் அவர்களே; அதைத் தொடர்ந்து நடத்துபவர்களும் அவர்களே - நாமோ; விளக்கமளிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்! இதனை நீயும் புரிந்து கொண்டு; புரியாமல் இருப்பவர்களுக்கும் புரிய வைத்திடும் பணியினைப் புரிந்திட வேண்டுகிறேன்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

19-05-1995

2271. என் பிறந்தநாள் வேண்டுகோள்; ஏற்றிடுக!

உடன்பிறப்பே,

என் எழுபத்தி இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுவதற்கு; இப்போதே ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறாய். ஏடுகளில் செய்திகள் காணுகிறேன். சுவர்களில் விளம்பரங்கள் காணுகிறேன். உன் அன்பில் திளைக்கிறேன் - உன் பாச மழையில் நனைகிறேன் - உன் வாழ்த்துக்களில் மெய்மறந்து போகிறேன் - என்பனவற்றைத் தவிர; இந்த நாட்டைப் பற்றியும், தமிழ்ச் சமுதாயத்துக்கு இங்கும், எங்கும் வந்துள்ள இடர்கள் இன்னல்கள் இழப்புகள் பற்றியும் எண்ணிக் கலங்கிடும் என் நெஞ்சுக்கு முழுமையான ஆறுதல் அளிக்கும் ஆற்றல் பெற்ற நாளாக என் பிறந்த நாள் அமைந்திடவில்லை; அது என் பிறந்த நாளில் குற்றமல்ல; நாம் பிறந்த மண்ணில் நாள்தோறும் மலிந்து வரும் விரும்பத்தகாத பல நிகழ்வுகளின் குற்றம்!

இந்த எழுபத்தி இரண்டு ஆண்டில்; என் தனிப்பட்ட வாழ்வில்; வாழ்க்கை யென்பதற்கே இலக்கணமாக எத்தனை எத்தனையோ சோதனைகள் ஏற்பட்ட போதிலும்; எத்துணை கடுமையான நோய்களுக்கு இலக்காகிய போதிலும் - அவை அனைத்திலும் மீண்டு; பேரன் பேத்திகள் மட்டுமல்ல; கொள்ளுப் பேரன் - கொள்ளுப் பேத்திகளைக் கொஞ்சி மகிழ்கிற அளவுக்கு; பாலைவனப் பயணத்தில் பேரீச்சமரங்களின் நிழல் கிடைத்தது போன்ற மன ஆறுதலை ஓரளவு பெற்று மகிழ்கின்றேன் ஆயினும்; நான் ஏற்றுக் கொண்டு ஈடுபட்ட பொதுவாழ்க்கையில், பெரியாரைத் தந்தையாகவும், பேரறிஞர் அண்ணாவைத் தமையனாகவும், பேராசிரியரைத் தோழராகவும் பெற்ற வாய்ப்பின் காரணமாக 72 வயது முதிர்ச்சி, என்னை 27 வயது எழுச்சிமிக்க வாலிபனாக - என் பொது வாழ்வுக் காலமாகிய இந்த 57 ஆண்டுகளிலும் வீறுநடை போடச் செய்திருக்கிறது என்றால்; அந்தத் தலைமைகளும் தோழமையும் மட்டுமல்லாமல்;

உன்போன்ற உடன்பிறப்புகளின் உற்ற துணையும், ஒத்துழைப்பும், உள்ளத்திலிருந்து பெருக்கெடுக்கும் உழுவலன்புந்தான் காரணம் என்பதை நான் உணர்ந்திருக்கிறபடியால்தான்; எனும் உண்மையையும் எவர்தான் மறைத்திட இயலும்!

உடன்பிறப்பே, நீயும் நானும் கலந்துறவாடி - பெரியாரின் துணிவையும், பேரறிஞர் அண்ணாவின் கனிவையும் அறப்போர்க் கட்கமாக ஏந்தி; கட்டுப்பாடு எனும் கவசம் பூண்டு; கண்ணயமெனும் கேடயமணிந்து, கடமையாற்றிடக் களம் புகுந்ததும்; அக்கடமையினை இன்றளவும் ஆற்றிக் கொண்டிருப்பதும் எதற்காக?

இந்தத் தமிழ் சமுதாயம், கூன், குருடு, ஊமை, செவிடு எனும் ஊனமுற்ற நிலை நீங்கி உலகில் ஓங்கிய புகழுடன் தலைநிமிர்ந்து நிற்க வேண்டுமென்ற அடிப்படைக் குறிக்கோளை அடைந்தே தீருவோம் என்பதற்காக! உரிமைகள் பெற்றிடுவதற்காக!

ஆனால் நடப்பது என்ன? இங்கே தமிழகத்தில் மக்களாட்சியின் மாண்பு மாய்க்கப்படுகிறது! அருகில் உள்ள தமிழ் ஈழத்திலோ மக்கள் மடிகிறார்கள்! பிறந்தநாள் விழா மகிழ்ச்சி எப்படி பிறக்கும் எனக்கு? வாழ்த்த வருவோரை, சிரித்து வரவேற்கலாம்! ஆனால் மகிழ்ச்சி பொங்கும் உள்ளத்தின் புன்னகையாக அது இல்லாமல்; மரபு வழி மனித நாகரிகத்தின் அடையாளமாகத்தானே அமையும்! அமைய முடியும்!

எனவே, என் பிறந்தநாளாம் ஜூன் 3ஆம் தேதியை முன்னிட்டு நீயும் உன்போன்ற உடன்பிறப்புகளும், கழக அமைப்புகளும், ஆர்வலர்களும் விழாக்கள் எடுப்பதில் காட்டிடும் ஆர்வத்தையும் - அவற்றுக்கென ஈந்திடும் உழைப்பையும் - ஒன்றுதிரட்டி; மக்களுக்கான பொதுப் பணிகளை நிறைவேற்றுவதில் முனைந்து நிற்குமாறு வேண்டுகிறேன். சென்ற ஆண்டு பிறந்தநாளின்போது நான் விடுத்திருந்த வேண்டுகோளை மறந்திருக்கமாட்டாய்!

இந்த ஜூன் திங்கள் முழுவதும் என் வயதைக் குறிக்கும் வகையில் - என் பிறந்தநாளையொட்டி விழா நிகழ்ச்சிகள் நடத்துவதைவிட; நீ வாழும் ஊரில், பகுதியில் உனக்குச் சொந்தமான இடத்தில்; பொதுவான இடமெனில் அரசு அதிகாரிகளுக்கு அறிவித்துவிட்டு மரக்கன்றுகளை

நட்டு, அவற்றைப் பேணிக் காப்பாற்றி வளர்த்திட வேண்டுமென விரும்புகிறேன்.

மரம்தானே என்று அலட்சியமாக நினைக்காதே! மனிதர்கள் வாயினால் நன்றி சொல்வார்கள் - சிலர் வாயிருந்தும் நன்றி சொல்லமாட்டார்கள்; ஆனால் மரங்களோ; அவை நீண்ட காலம் வாழ்ந்து, அவ்வாறு வாழும் காலம்வரையில் தனது வாயினால் அல்ல; செயலினால் உடலினால் நன்றி காட்டக்கூடியவை!

கோடை வெயிலுக்கு மரமே நிழற்கொடை! மழையும் அந்த மரம் வழங்கும் கொடைதான்!

மழையில்லா நாடும், அந்த நாட்டு மக்களும் முறையே வறுமைக் காடாகவும் அந்தக்காட்டில் வாடிக்கிடக்கும் புழுக்களாகவும் மாறிடும் நிலையினை எண்ணிடவே இதயம் நடுங்குகிறது.

எனவே உடன்பிறப்பே, தொலைநோக்குடன் ஆற்றிடும் பணிகளுக்கு ஆதரவு கொஞ்சம்தான்! அலட்சியம் மிஞ்சும்தான்! நாலாவட்டத்தில்தான் அவற்றின் தேவையும் நலனும் புரியும்

என்றெழுதி, நான் கடந்த ஆண்டு விடுத்த வேண்டுகோள் வீணாகவில்லை! ஆங்காங்கு ஜூன் மாதம் தொடங்கி மரங்களை நடுகிற பணியினை உடன்பிறப்புகள் தொடங்கி நிறைவேற்றினர்!

அன்றைய தினமணி இதழ், நண்பர் மாலன் அவர்களின் ஆசிரியர் பொறுப்பில் இருந்தபோது; அதுபற்றி ஒரு தலையங்கமே எழுதியது! தினமணி 3.6.94 அன்று எழுதிய தலையங்கத்தின் ஒரு பகுதி வருமாறு :-

மேலை நாடுகளில் நச்சுப்புகை, மாசுபடுத்தப்பட்ட நீர், தொடர்ந்து ரசாயன உரங்களைப் பயன்படுத்தியதால் பாழ்பட்ட நிலம், தொழிற்சாலை கழிவு போன்ற பல சுற்றுச்சூழல் பிரச்சினைகள் உண்டு. ஆனால் மரங்களை வெட்டுவது, காடுகளை அழிப்பது போன்ற பிரச்சினை இந்தியா அளவிற்கு இல்லை. அருகே நெருக்கமாக மரங்கள் அடர்ந்த சிற்றூர்களை சாதாரணமாகப் பார்க்க முடியும். பெருநகரங்களில்கூட நகரங்களின் மத்தியில்

மரங்கள் நிறைந்த பூங்காக்கள் நிறைந்திருக்கும். சாலை ஓரங்கள், கல்விக் கூடங்கள், தனியார் வீடுகள் இவற்றின் பிரிக்க முடியாத ஒரு பகுதியாக மரங்கள் காணப்படும். இருந்தபோதிலும், மரங்கள் நடுவது, அவற்றை வளர்ப்பது, இருக்கும் மரங்களைப் பேணிப் பாதுகாப்பது போன்ற செயல்கள் நம் நாட்டைவிட பரந்துபட்ட அளவில் ஒருவித தீவிரமான முனைப்போடு அங்கு நடந்து வருகின்றன. துரதிர்ஷ்டவசமாக நமது நாட்டில் அரசியல் பிரச்சினைகளுக்கு அப்பால், அரசியல் கட்சிகள் அக்கறை செலுத்துவதில்லை.

மாசுடைய சுற்றுச்சூழல், கதிரியக்கம், நகர் மயமாதல், கலாச்சாரச் சீரழிவு, பெண்ணுரிமை போன்ற பல சமூகப் பிரச்சினைகள், இன்று காணப்படும் பல அரசியல் பிரச்சினைகளைவிட, எதிர்காலச் சந்ததிகளைப் பெரிய அளவில் பாதிப்பவை ஆகும்.

கருணாநிதி தன்னுடைய பிறந்தநாளையொட்டி மரக்கன்றுகள் நட வேண்டுகோள் விடுத்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். தி.மு.க. இன்று அது கண்ட பல சோதனைகளுக்குப் பிறகும் தமிழ்ச் சமூக வாழ்வில் தாக்கம் ஏற்படுத்தும் வலிமை கண்ட ஓர் இயக்கமாகவே இருந்து வருகிறது. அதன் தொண்டர்கள் கருணாநிதி ஆணையிட்டால் எத்தனை கடுமையான பணியினையும் கருத்தோடு செய்து முடிக்கும் இயல்பு கொண்டவர்கள். கட்சிக்கு கடந்து வெளியிலேயும் கருணாநிதிக்கு விசிறிகள் உண்டு.

அவரைப் போன்ற பெரும் தலைவர்கள் அரசியலோடு தனது பார்வையை நிறுத்திக் கொண்டுவிடாமல் சுற்றுச்சூழல் போன்ற ஆதாரமான பொதுப் பிரச்சினைகளிலும் அக்கறை காட்ட முன் வந்திருப்பது மகிழ்ச்சி கொள்ளத்தக்கதாகும்.

இன்று அவர் பிறந்தநாளில் தமிழகம் முழுவதிலும் ஆயிரக்கணக்கில் மரக்கன்றுகள் நடப்படுவதும், அவை தொடர்ந்து பேணி வளர்க்கப்படுவதும் நிகழுமானால் அது தமிழகத்திற்கு பெரும் நன்மை பயக்கவே செய்யும்.

கருணாநிதியின் உதாரணத்தைப் பின்பற்றி அவரது அரசியல் எதிரிகள்கூட இதுபோன்ற பொதுநலப் பிரச்சினைகளில் அக்கறை செலுத்த முன் வர வேண்டும்.

“மரம் வளர மழை பொழியும்
மழை பொழிய பயிர் வளரும்
பயிர் வளர்ந்தால் பசி தீரும்
பசி தீர மனம் குளிரும்“

என்பதனால் கருணாநிதியை அவரது இந்தப் பிறந்த நாளில் ஔவையார் பாணியில் மரம் வளர என வாழ்த்துகிறோம்.

உடன்பிறப்பே; கடந்த ஆண்டு தினமணி வாழ்த்தியது மட்டுமல்ல; நான் கேட்டுக் கொண்டால் நீ எப்படிச் செயல்படுவாய் என்பதையும் உறுதிபடக் கூறி என்னுள்ளத்தைக் குளிர்வித்தது - அதற்கேற்ப நீயும் செயல்பட்டிருக்கிறாய்! இந்த ஆண்டும் என் பிறந்தநாளுக்காக, ஏழை எளியோர் நல்வாழ்வு - குழந்தைகளைக் கல்வித் துறையில் ஊக்குவித்தல் - குருதிக்கொடை - கண்தானம் போன்ற நற்பணிகளில் ஈடுபடுவதுடன்; முக்கியமாக மரம் நடவேண்டுமென்ற என் வேண்டுகோளையும் நிறைவேற்றி - அவற்றை அக்கறையுடன் பேணிக்காத்து வளர்த்திட வேண்டுமென்றும்; அதற்கான முயற்சிகளை உடனே மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். ஜனநாயகம் வாழ; அடுத்த தேர்தலைப்பற்றியும் சிந்திப்போம்! ஜனங்கள் வாழ்ந்திட அடுத்த தலைமுறையைப் பற்றியும் சிந்திப்போம்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

24-05-1995

2272. செய்தியல்ல;
இதயத்தைச் சுடும் செந்தீ!

உடன்பிறப்பே,

தமிழக ஏடுகளில் வந்த செய்தி; ஒன்றுக்கு ஒன்று சற்று வித்தியாசமான கோணங்களில் வெளியிடப்பட்டிருந்தாலும்; தொகுத்துப் பார்க்கும்போது அது செய்தியாக இல்லை; இதயத்தைச் சுடும் செந்தீயாகவே இருக்கிறது!

கணவனை இழந்த கைம்பெண் ஒருத்தி – பெயர் சுமதி.

என் சொந்த ஊர் திருச்செந்தூர். என் கணவர் ராஜு இறந்துவிட்டார். வடபழனியில் விபசாரம் செய்து வயிறு பிழைத்து வந்தேன். என் மகனுடன் சிறுநாகலூர் சென்றேன் என்று சுமதியே காவல்துறையிடம் கொடுத்த புகார் மனுவில் குறித்திருப்பதாகச் சில ஏடுகள் வெளியிட்டுள்ளன. 30 வயதுடைய அந்தச் சுமதியுடன் அதே வயதுடைய கல்பனாவும் சென்றிருக்கிறார். ஏழு வயதுடைய சுமதியின் மகனும் அவர்களுடன் இருந்திருக்கிறான். அவன் பெயர் சுரேஷ்! அவன் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்திருக்கிறான்.

வீட்டில் அமர்ந்து சுமதியும் கல்பனாவும் பேசிக் கொண்டிருந்தார்கள்; அப்போது சிறுவன் சுரேஷ், கூடத்தில் பாயில் படுத்துக் கொண்டிருந்தான் என்று யாரும் நினைத்துவிடக் கூடாது.

அந்தப் பெண்மணிகள் நின்றுகொண்டிருந்த இடம்; ஒரு மரத்தடி! நேரமோ இரவு!

பத்திரிகைக் குறிப்புப்படி; அவர்களின் தொழிலுக்கு ஏற்ற வகையில் ஒரு வீடோ அல்லது சத்திரம் சாவடியோகூட இல்லைபோலும்! அதனால் மரத்தடி மகாராணிகளாக அவர்கள் இருவரும் அங்கே நின்றனராக்கும் என்றுதான் கருதவேண்டியிருந்தது செய்திகளைப் படிக்கும்போது!

இருளைக் கிழித்துக்கொண்டு ஓர் ஒளி பரவுகிறது; அவர்களின் வாழ்க்கையில் அல்ல! வாழ்வதற்கான தொழிலுக்கு அர்ப்பணித்திடும் அவர்களின் உடல்கள் மீது! அந்த ஒளி ஒரு ஜீப்பின் விளக்கொளி.

அந்த ஜீப்பை ஓட்டுகிறவன் உட்பட மூன்று போலீஸ்காரர்கள்! செல்வம், மன்னர் மன்னன், தங்கய்யா என்பன அவர்களின் பெயர்கள்! ஜீப்பையும் போலீசையும் கண்டதும் சுமதியும் கல்பனாவும் மிரண்டுதான் போயிருப்பார்கள். மரத்தடித் தொழிற்கூடத்திற்கும் ஆபத்தா? இங்கும் நம்மைப் பிடித்துக்கொண்டு போக வருகிறார்களா? இனி, கோர்ட்டுக்கும் ஜெயிலுக்கும் அலைய வேண்டுமா - இப்படிப் பல நினைவு மின்னல்கள் அவர்கள் நெஞ்சில் பட்டுத் தெறித்தன.

அதற்குள் மூவரில் ஒருவன் இறங்கினான். சுமதியை நெருங்கினான். கைது செய்ய வரவில்லை; கட்டித்தழுவ வந்திருக்கின்றனர் என்பதைப் புரிந்து கொண்டாள் போலும் சுமதி! - அதனால் அவள், அருகிலிருந்த கல்பனாவைக் காட்டி; இதோ அவளை வேண்டுமானால் அழைத்துப் போங்கள் - நான் கர்ப்பமாயிருக்கிறேன் என்று விலகிக் கொண்டாள் - எனினும் அவர்கள் விடுவதாக இல்லை. நீதான் வேண்டுமென வலியுறுத்தினர் - வற்புறுத்தினர் - அந்த வம்புக்கு முன் நின்றான் செல்வமென்ற அந்தப் போலீஸ்காரன் - ஆம்; ஜீப் டிரைவர்!

ஏம்மா; சமுதாயத்திலே தொத்தியிருக்கிற புற்று நோய்கள் போதாதா? விரகதாபத்திலே வீடு தேடி வந்து விஷத்தைக் குடித்து அல்ப ஆயுளிலே போகிற வாலிபர்கள் கூட்டம் ஏற்கனவே பெருகிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் நீங்கள் வேறு நடைபாதைக் கடையே போட்டுவிட்டீர்களே; இனியாவது இப்படிச் கெட்டுக்குட்டிச் சுவராகி, இளையதலைமுறையையும் கழுதை புரண்ட களமாக ஆக்காதீர்கள் என்று அறிவுரை கூறி அனுப்புவார்கள் என்று காவல்துறையினரிடம் எதிர்பார்க்கவேண்டியதுதான் நியாயம்! அப்படி நடந்துகொள்வதுதான் காவல்துறையினரின் கடமையும் கூட!

ஆனால்; அந்த மூவரும் மாதே வாடி மரத்தடியே போதுமடி! என உளறிக்கொண்டு சுமதியையும் கல்பனாவையும்; தங்கள் திடீர்ப்பசிக்குப் பயன்படுத்திக்கொள்ளக் களம் புகுந்தனர். முரட்டு மிருகங்களாக மாறிவிட்ட அவர்களின் பிடியில் சிக்கக் கூடாது

என்று வைராக்கியத்துடன் சுமதியும் கல்பனாவும் அங்கிருந்து மிக வேகமாக ஓடத் தொடங்கியிருக்கின்றனர்.

ஏன்; பத்திரிகையில் வந்த செய்திப்படி இருவரும் விபச்சாரிகள்தானே உடல் வணிகம் செய்வோர்தானே; காவல்துறையினர் மட்டும் அவர்களுக்கு கசந்தது எப்படி? என்ற கேள்வி எழும்! அது இயல்பு!

விலைமாதராயினும் விவஸ்தையில்லாமல் நடக்க முடியாது என உறுதி கொண்டவர்களாகயிருக்கலாம் - மரத்தடியில் இருவரையும் ஆசைதீரச் சுவை பார்த்துவிட்டு; அதற்குக் கூலி கொடுங்கள் என்று அந்தப் பெண்களிடமே ஐம்பதோ நூறோ அந்தக் காவலர் கேட்கவும் கூடும். இப்படி எத்தனையோ காரணங்கள் இருக்கலாம் அந்த மறுப்புக்கு!

ஓடத் தொடங்கியவர்களை மூன்று கடமை வீரர்களும் விரட்டத் தொடங்கினர்! அதற்கும் அந்த ஜீப்பையே பயன்படுத்தினர். அலறிக் கொண்டு புறப்பட்ட ஜீப்; தனது சக்கரத்திற்கு ஒரு பலியைக் கொடுத்துவிட்டுத்தான் பாய்ந்து பறக்கத் தொடங்கியது! ஜீப்பை வேகமாக எடுத்து ஓட்ட ஆரம்பித்தவுடன் ஒரு பயங்கர ஒலி! அந்த ஒலி உடனே அடங்கிப் போயிற்று!

அந்த ஒலிதான்; மரத்தடியில் தன் மாதாவின் தொழிலுக்கு துணையாக வந்து; தூங்கிக் கொண்டிருந்த ஏழு வயது மகன் சுரேஷ் எழுப்பிய கடைசி ஒலி! மரண ஒலி! இப்படித் தாய்; தனக்காகத் தேகத்தை வாடகைக்கு விட்டு, சேர்க்கும் பணத்தில் வயிற்றைக் கழுவுவதை விட இந்த வீர மரணமே மேல் என்று அந்த ஏழு வயதுச் சிறுவன் அந்த மரத்தின் கீழே போலீஸ் ஜீப் சக்கரத்தில் நசுங்கிச் செத்துவிட்டான் -

மகனை இழந்து சுமதி அருகில் உள்ள மேல் மருவத்தூர் காவல் நிலையத்தில் அந்தக் கொடுமை பற்றிப் புகார் செய்தாள். தகவலறிந்த டி.ஜி.பி. உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு டி.ஐ.ஜி.க்கு ஆணையிட்டார். மூன்று பேரும் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இந்த விரைவான நடவடிக்கை பாராட்டத்தக்கதுதான்! ஆனால் காவல்துறையைச் சேர்ந்த அந்த மூன்று பேரின் நடவடிக்கை?

நடுராத்தியில் ஒரு பெண், தனியாக நடந்து சென்று பத்திரமாக வீடு சேர்ந்தாள் என்ற நிலை எப்போது ஏற்படுகிறதோ; அப்போதுதான் இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்ததாகக் கருத முடியும் எனக் காந்தியடிகள் கூறினார். கள்வரும், கயவரும் அப்பெண்ணைத் தொந்திரவு செய்வர் என்ற எண்ணத்தில்தான் காந்தியடிகள் அப்படிச் சொல்லியிருப்பார்.

ஆனால்; அந்தக் கள்வர்களையும் கயவர்களையும் துரத்திவிட்டு; பெண்களைக் காப்பாற்றக் கடமைப்பட்ட காவல் துறையினரே; மிருகத்தின் மொத்த உருவமாகத் திகழ்கிறார்களே - அந்தப் பட்டியலில் இடம் பெற்றவர்கள்தானே இந்த மூவரும்!

இனியாவது காவல்துறை திருந்துமா? தமிழகக் காவல்துறைக்கென்று இருந்த பழம் பெருமையைத் திரும்பக் காப்பாற்றிக் கொள்ளுமா?

அன்புள்ள,

மு. கருணாநிதி

30-05-1995

2273. சமூகநீதி -
தொடர் போராட்டப் பிரகடனம்!

உடன்பிறப்பே,

ஜூன் மூன்றாம் நாள் என் பிறந்த நாளை முன்னிட்டு இத்திங்கள் முழுதும், கழக உறுப்பினர் சேர்த்தல், புதுப்பித்தல் ஆகிய இயக்கப் பணியினை நிறைவேற்றல் - தொலைநோக்குப் பணியாக நாட்டு மக்களின் நிலையான நலனுக்காக மரம் நடுதல் - ஏற்கனவே நட்ட மரங்களைத் தொடர்ந்து பேணிக்காத்தல் - கண்தானமளித்தல் - குருதிக் கொடை வழங்குதல் - ஏழை எளியோர்க்கு இயன்ற வரை உதவுதல் - பள்ளிச் சிறார்க்குப் புத்தகம் போன்ற பொருள்களைத் தந்து கல்வியின் ஆர்வம் ஊட்டுதல் - கழகக் கொடிகளை ஏற்றுதல் - கூட்டங்கள் நடத்துதல் - போன்ற மக்களுடன் தொடர்புடைய பணிகளில் ஈடுபட வேண்டுமென்று அண்மையில் கூடிய கழக நிர்வாகக்குழுவில் முடிவு எடுக்கப்பட்டு, பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும் அறிக்கை வாயிலாகத் தெரியப்படுத்தியிருக்கிறார்கள்.

அதற்கிடையே மற்றொரு முக்கியமான கடமையும், போராட்ட வடிவில் முகிழ்த்திருக்கிறது என்பது கண்டு நான் மேலும் இந்தப் பிறந்தநாளில் உறுதியும், உற்சாகமும் பெறுகிறேன். அதுதான்; இடஒதுக்கீடு சமூகநீதிக்கான அறப்போராட்டத்தை நாமும் நமது தோழமைக் கட்சியினரும் இந்தத் திங்கள் 12 ஆம் நாள் தொடங்க இருப்பதாகும். தமிழகத்தில் தனது தலைமையில் உள்ள காங்கிரஸ் கட்சியும் இந்தப் போராட்டத்தில் பங்கு கொள்ளுமென வாழப்பாடியார் அவர்களும் அறிவித்துள்ளார். வரவேற்றுப் பாராட்டத்தக்க ஓர் அறிவிப்பு.

என் பொது வாழ்வில் போர்க்களம் காண்பதே எனக்குப் பூரிப்புதரும் நிகழ்வு என்பதை நீ அறிவாய்! அந்தப் பெருமைமிகு நிகழ்வு, சமூகநீதிக்கான போராட்டமாக இந்த ஜூன் திங்கள் தொடங்குவது எனக்கு உற்சாக மூட்டுவதாயினும், இன்னும்

எத்தனை காலத்திற்கு ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களின் உரிமைகளுக்காகக் கொடி தூக்கிக்கொண்டு களத்தில் நிற்பது என்பதை எண்ணிடும்போது, என் உதிரச் சுழற்சியுடன் ஒட்டிச் சுழலும் சமூகநீதிக்கான உணர்வு, குமுறிக் கொந்தளித்துக் கொண்டு, பிறந்தநாள் விழா மகிழ்ச்சிக்குத் தாழிடத் தவறவில்லையே! என் செய்வேன் நான்!

எனவே உடன்பிறப்பே, என் பிறந்த நாள் விழா என்ற பெயரில் இத்திங்கள் நீ மேற்கொள்ளும் பணிகளுடன் ஒரு பணியாக - ஒடுக்கப்பட்ட மக்களுக்கானத் திருப்பணியாக - பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் வாழ்வில் விளக்கேற்றி வைக்கும் பெரும்பணியாக - இடஒதுக்கீடு சமூகநீதிக்கான போராட்டத்திற்கான ஆயத்தங்களில் ஈடுபடும் பணியாக அமைந்திடல் வேண்டும்.

இந்தக் குறிக்கோளையுணர்ந்து தொடங்கப்பட்ட இயக்கம்தான் பவளவிழா கொண்டாடியுள்ள நமது திராவிட இயக்கம்! ஆனால், அந்தக் குறிக்கோள் திராவிட இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியென்று மார்தட்டிக் கொள்வோரால் எப்படிக் குலைக்கப்பட்டிருக்கிறது - மேலும் குலைக்கப்பட இருக்கிறது - என்பதைப் பெரியாரின் உண்மைத் தொண்டர்களும், அண்ணாவின் உண்மைத் தம்பிகளும் உணர்ந்தேயிருக்கிறார்கள் என்பது உலகறிந்த ஒன்று!

தி.மு.கழகத்தைப் போலவே இடஒதுக்கீடு சமூக நீதிப் பிரச்சினையில் ஒரே மாதிரியான சிந்தனையுள்ள இயக்கங்களான ஜனதா தளம், இந்திய கம்யூனிஸ்டு கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய தேசிய லீக், அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சி - ஆகிய கட்சிகள் கடந்த 30.5.1995 அன்று சென்னை அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் கூடி நிறைவேற்றியுள்ள தீர்மானங்களை நீ அறிவாய்!

நீயும் ஏனைய உடன்பிறப்புகளும் அறிந்திருந்தபோதிலும், இந்த என் கடிதத்திலும் அந்தத் தீர்மானங்களைப் பதிவு செய்து, இந்தப் பிறந்தநாளின்போது உனக்கு அனுப்பி வைப்பது எனக்குப் புதியதோர் தெம்பினை வழங்குகிறது! என்னைப் பற்றிக் கொண்ட இதே தெம்புடன் நீயும் இந்தத்

தீர்மானங்களை நமது தோழமைக்கட்சி செயல்வீரர்களுடன் இணைந்து செயல்படுத்துவாய் என நம்புகிறேன். ஏன்! இதனை என் பிறந்தநாள் கோரிக்கையாகவே உன் முன் வைக்கிறேன். தோழமைக் கட்சிகள் கூட்டத்தின் தீர்மானங்கள் வருமாறு :-

தீர்மானம் - 1

கடந்த இரண்டு கல்வியாண்டுகளாகத் தமிழ்நாட்டில் இடஒதுக்கீடு சமூகநீதிக் கொள்கையில் ஜெயலலிதா போடும் இரட்டை வேடத்தினால், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஜெயலலிதா ஆட்சி அமைவதற்கு முன்பு பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 30 சதவிகிதம், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 20 சதவிகிதம், ஆதிதிராவிடர்க்கு 18 சதவிகிதம், பழங்குடியினர்க்கு 1 சதவிகிதம் என்று மொத்த 69 சதவிகிதமும் பொதுப் பட்டியலில் 31 சதவிகிதமும் என்றிருந்த இடஒதுக்கீடு, முதலமைச்சர் ஜெயலலிதா, திட்டமிட்டுக் கடைப்பிடித்த அணுகுமுறை காரணமாக பெரும் சீர்குலைவுக்கு உள்ளாகியிருக்கிறது.

எனவே வரும் கல்வியாண்டிலும், கடந்த இரண்டு கல்வியாண்டுகளைப் போலவே பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கிடைக்க வேண்டிய 69 சதவிகிதம் கிடைக்காமற்போகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

69 சதவிகித இடஒதுக்கீட்டை எதிர்த்துச் சிலர் உச்சநீதிமன்றம் சென்றபோதெல்லாம் ஒருமுறை ஜெயலலிதா அரசு, 50 சதவிகிதத்திற்கு ஒப்புக் கொண்டும், ஒருமுறை மன்னிப்புக் கேட்டுக் கொண்டும் 69 சதவிகித உரிமையை விட்டுக் கொடுத்துள்ளது ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்ட தீமையாகும்.

69 சதவிகிதம் என்பதற்குத் தமிழகச் சட்டப்பேரவையில் ஒரு சட்டம் நிறைவேற்றுவதற்கும், அச்சட்டத்திற்குக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் பெறுவதற்கும் அரசியல் சட்டம் 9வது அட்டவணையில்

சேர்ப்பதற்கும் எல்லா வகையிலும் எதிர்க்கட்சிகள் ஒத்துழைத்திருந்தபோதிலும், மீண்டும் 69 சதவிகிதத்தை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு வந்தபோது, 69 சதவிகிதமென தமிழக அரசு ஒரு சட்டம் நிறைவேற்றியிருப்பதையோ, அதற்குக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் கிடைத்து 9வது அட்டவணையில் சேர்க்கப்பட்டதையோ தமிழக அரசின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் எடுத்துச் சொல்லாதது திட்டமிட்டுச் செய்யப்பட்ட துரோகமாகவே கருதப்படுகிறது.

இந்த நிலையில், இந்த ஆண்டும் 50 சதவிகிதம்தான் இடஒதுக்கீடு என அமையும் என்றும் அதற்குத் தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளதென்றும் ஒருமாதகாலமாக முக்கியமான ஏடுகளில் வந்துள்ள செய்திகளை, இதுவரை அரசின் சார்பில் மறுத்துவிடவில்லை என்பதைப் பார்க்கும்போது, கடந்த இரண்டு கல்வியாண்டுகளைப் போலவே முதலமைச்சர் ஜெயலலிதா, இந்தக் கல்வியாண்டிலும் ஒடுக்கப்பட்ட மக்களை ஏமாற்ற முனைகிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது என்பதை இக்கூட்டம் சுட்டிக்காட்டுவதுடன், முதலமைச்சர் ஜெயலலிதாவின் இந்த இரட்டை வேடப் போக்கினை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

தீர்மானம் – 2

இடஒதுக்கீடுப் பிரச்சினையில், அந்தந்த மாநிலங்கள் ஆங்காங்குள்ள நிலைமைக்கேற்ப விகிதாச்சாரங்களை உச்சவரம்பு ஏதுமின்றி நிர்ணயித்துக் கொள்ளும் வகையில் உரிமையளித்து, அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென நீண்டகாலமாக நாம் எடுத்துக் கூறிவரும் கோரிக்கையை, மத்திய அரசு இன்னமும் புறக்கணித்து வருவதை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதுடன், உடனடியாக அத்தகைய திருத்தமொன்றைக் கொண்டுவர வேண்டுமென மத்திய அரசை இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

தீர்மானம் - 3

மண்டல் கமிஷன் பரிந்துரை குறித்து, உச்சநீதிமன்றத்தில் நடந்த வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பின் விளைவாக, ஏற்கனவே தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் இருந்து வந்த பதவி உயர்வில் முன்னுரிமை, நிறைவு செய்யப்படாமலிருக்கும் பதவிகளை முன் கொண்டு செல்லுதல் ஆகியனவற்றைக் கைவிட நேரிட்டிருப்பதை இந்தக் கூட்டம் கண்டிப்பதுடன், முன்னர் இருந்த அதே முறையை மேற்கொண்டு, தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்கள் உரிமையைப் பாதுகாக்க அரசியல் சட்டத்தில் உரிய திருத்தம் கொண்டுவர வேண்டுமென்றும் மத்திய அரசை இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

தீர்மானம் - 4

இந்தத் தீர்மானங்களை வலியுறுத்தி, ஜூன் 12ஆம் நாள் மாநிலம் முழுவதும் - முக்கிய நகரங்களில் விளக்கப் பொதுக் கூட்டங்களும், ஜூன் 13ஆம் நாள் மாநிலம் முழுவதுமுள்ள வட்டத் தலைநகரங்களிலுள்ள மத்திய - மாநில அரசு அலுவலகங்கள் முன்னால் அறப்போர் ஆர்ப்பாட்டம் நடத்துவதென்றும், ஜூலை 4ஆம் தேதி தமிழகமெங்கும் ரயில் நிறுத்தப் போராட்டம் நடத்துவதெனவும் இக்கூட்டம் முடிவு செய்கிறது.

உடன்பிறப்பே, இந்த முடிவுகள் ஏடுகளில் வெளிவந்தவுடன் ஓரிரு ஏடுகளில் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துகளில் ஒரு செய்தி. 69 சதவிகித இடஒதுக்கீடு - அரசு ஆணை என ஒளிவிட்டுப் பளபளத்ததைக் கண்டேன். ஆழமாகப் படித்த பிறகுதான் அது ஆளை ஏய்க்கும் வேலை - அப்பாவி மக்களைத் திசை திருப்பும் வேலை என்று தெரிந்தது! எப்போதும் கலைக்கல்லூரி, அறிவியல் கல்லூரிகளுக்கு இருந்து வருகிற இடஒதுக்கீடுதான் அது என்பதையும், மருத்துவம், பொறிஇயல் போன்ற தொழிற்கல்லூரிகளுக்கான இடஒதுக்கீடு எதற்கும் 69 சதவிகிதமென அரசு ஆணை பிறப்பிக்கவில்லை என்பதையும் சராசரி அறிவுள்ளவர்களே கூடப் புரிந்து கொள்ள முடியுமே என்ற நினைவுகூட இல்லாமல், அம்மையார் ஆதிபராசக்திக்கு முட்டுக்

கொடுத்துக் காத்திடக் கொட்டை எழுத்துச் செய்தி போடுகிற வெகுளித்தனத்தை என்னவென்று எண்ணி நொந்து கொள்வது!

இதனினும் பெரும் வேதனை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி விடுத்துள்ள அறிக்கைதான்! குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக இந்தப் பிரச்சினையைப் பயன்படுத்தாதீர் - எனவே, அறிவிக்கப்பட்டுள்ள போராட்டம் தேவையற்றது என்று அந்த அறிக்கை கூறுகிறது.

அது மட்டுமல்ல, 69 சதவிகிதத்தை மார்க்சிஸ்ட் கட்சி ஆதரிக்கிறது எனினும், இடஒதுக்கீடு எத்தனை சதவீதம் என்று தீர்மானிக்கிற உரிமையை, மாநில அரசுகளுக்கு விட வேண்டுமென்ற கோரிக்கையை மார்க்சிஸ்ட் கட்சி ஏற்கவில்லை என்று அந்த அறிக்கை, திட்டவட்டமாகத் தெரிவிக்கிறது.

தி.மு.கழகம் தோழமை கொண்டுள்ள கட்சிகளுக்கிடையே, எந்தக் கட்சியிலும் இப்படியொரு எதிர்ப்புக் கருத்து இல்லாத காரணத்தால், இடஒதுக்கீடுப் பிரச்சினையில் மாநில அரசுகளுக்கு எத்தனை சதவீதம் என்று உச்சவரம்பு எதுவுமின்றித் தீர்மானம் செய்யும் உரிமையிருக்கும் வகையில், அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென இரண்டாவது தீர்மானமாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்மானத்தின் அடிப்படை மத்திய அரசை வலியுறுத்தவே ஜூலை 4 ரயில் நிறுத்தப் போராட்டம்!

ஜூன் 13, மத்திய, மாநில அரசு அலுவலகங்களின் முன்னால் வட்டத் தலைநகர்களில் அறப்போர் ஆர்ப்பாட்டம் - ஜூலை 4 ரயில் நிறுத்தப் போராட்டம் - இவற்றை விளக்கிடவும், சமூக நீதியில் வெற்றி கிடைத்திட மக்களைத் திரட்டிடவும் - ஜூன் 12 ஆம் நாள் மாநில முழுதும் தி.மு.க. தோழமைக் கட்சியினர் கலந்து கொள்ளும் கூட்டங்கள் நடைபெற இருக்கின்றன.

ஜூன் 12 திருச்சியில் நல்லகண்ணு அவர்களும், டாக்டர் ராமதாஸ் அவர்களும், ஜி.ஏ. வடிவேலு அவர்களும், அப்துல் லத்தீப் அவர்களும், அய்யணன் அம்பலம் அவர்களும் கலந்து கொள்ளும் கூட்டத்தில் நானும் கலந்து கொள்கிறேன். வாழப்பாடியார் அவர்களும் கலந்து கொள்கிறார்.

மற்ற இடங்களில் மாவட்டக் கழகச் செயலாளர்களும், பொறுப்பாளர்களும் தோழமைக் கட்சிகளின் மாவட்ட


நிர்வாகிகளுடன் கலந்து பேசி ஆங்காங்கு திருச்சியைப் போன்றே கூட்டங்களை ஜூன் 12ல் ஏற்பாடு செய்திட வேண்டுகிறேன்.

இடஒதுக்கீடு சமூக நீதிக்கான நமது போராட்டம், ஒடுக்கப்பட்ட மக்கள் - கல்வி, வேலைவாய்ப்புகளில் மாநிலத்திலும், மத்தியிலும் உரிய உரிமைகளைப் பெறும் வரையில் நடைபெற வேண்டிய தொடர் போராட்டம்! நடந்தே தீருமென ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பாகப் பிரகடனப்படுத்தப்படும் போராட்டம்!

அன்புள்ள,

மு. க.

02-06-1995



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

செப்டம்பர் 2022